ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

திருமாலை

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த வ்யாக்யானம்

(மூலம், எளிய தமிழ்நடை)

(எவரேனும் நம்மிடம் வரமாட்டாரோ என்று நிற்கும் தென்னரங்கன்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in, Ph: 94453 19352)

திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்த தனியன்

மற்றொன்றும் வேண்டா மனமே மதிள் அரங்கர்

கற்றினம் மேய்த்த கழல் இணைக் கீழ் - உற்ற

திருமாலை பாடும் சீர்த் தொண்டரடிப்பொடி எம்

பெருமானை எப்பொழுதும் பேசு.

பொருள் - என்னுடைய மனமே! திருவரங்கத்தில் பொன் போன்ற மதிள்களால் சூழப்பட்ட பெரியகோயிலில் கண்வளர்பவனும், பசுக்களை மேய்த்தபடி இருந்தவனும் ஆகிய பெரியபெருமாளின் இரண்டு பொருந்திய திருவடிகள் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர், அந்த பக்தி மேம்பட திருமாலை என்னும் பிரபந்தம் அருளிச்செய்தவர், உயர்ந்த கல்யாண குணங்கள் நிறைந்தவர், தொண்டரடிப்பொடி என்று அழைக்கப்படுபவர் - இப்படிப்பட்ட எங்கள் ஸ்வாமியான ஆழ்வாரை மட்டுமே நீ எண்ணியபடி இருப்பாயாக, வேறு எந்த புருஷார்த்தமும் அவசியம் இல்லை.

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை - இதில் மநஸ்ஸைக் குறித்து, பகவத்விஷயத்தில் வாசிகமாக அடிமை செய்த ஆழ்வார் திருநாமத்தை நிரந்தரானுஸந்தாநம் பண்ணும்படி சொல்லுகிறது.

விளக்கம் - இந்தத் தனியனில், திருவரங்கன் விஷயமாக ப்ரபந்தம் அருளிச்செய்து, தன்னுடைய வாக்கு மூலமாகவே அவனுக்கு அடிமையாக நின்ற தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருநாமத்தை எப்போதும் சிந்தித்தபடி இருக்குமாறு தனது மனதிற்குக் கூறுகிறார்.

வ்யாக்யானம் - (மற்றொன்றும் வேண்டா மனமே) - என்று சிந்தை மற்றொன்றின் திறத்தல்லா என்கிறபடியே, இங்கு மற்றொன்றும் என்று பரதத்வாதிகளின் பேரைப் பற்றச் சொல்லுகிறதாதல், புருஷார்த்தாந்தரங்களைப் பற்றச் சொல்லுகிறதாதல். மற்றொன்றும் வேண்டா என்று ப்ரியஹிதங்களுக்கு உறுப்பாக வேரொன்றும் வேண்டா

என்கிறது. (மனமே) - பந்தமோக்ஷங்கள் இரண்டுக்கும் பொதுவான மனஸ்ஸே. அந்தப் பொதுவான ஆகாரத்தைக் குலைத்து, அதில் ஒன்றையே என்றும் அனுபவிக்கப்பார்.

விளக்கம் - (மற்றொன்றும் வேண்டா மனமே) - நம்மாழ்வார் திருவாய்மொழியில் (7-10-10) - சிந்தை மற்றொன்றின் திறத்தல்லா – என்றார். அதாவது அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்ட நம்மாழ்வார் பரவாஸுதேவனின் திருநாமத்தைக் கூறவும் விரும்பாமல், மற்றொன்று என்றார். அது போன்று இவரும், ஐந்து நிலைகளைக் கூறவும் விரும்பவில்லை (ஐந்து நிலைகள் - பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை); அதனால் மற்றொன்று என்றார். அடுத்து அனைத்து புருஷார்த்தமும் கழிக்கும்படிக் கூறுகிறார். இனிமையை ஏற்படுத்தவல்ல பகவத் கைங்கர்யம் மற்றும் பகவத் அனுபவத்தையும் கழித்தார். (மனமே) - ஸம்ஸாரபந்தம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான மனமே. இவ்விதம் இரண்டிற்கும் பொதுவாக உள்ள உனது நிலையை மாற்றிக்கொண்டு, மோக்ஷம் பெறுவதற்கான வழியை ஆராய்வாயாக என்றார்.

வ்யாக்யானம் - அதென்னென்னில் (மதிளரங்கர் கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் உற்ற திருமாலை பாடும் சீர்த் தொண்டரடிப்பொடி எம்பெருமானை எப்பொழுதும் பேசு) என்கிறது. (மதிளரங்கர்) - மதிள் திருவரங்கத்தானே என்று இவர் பேசும்படி திருமங்கையாழ்வார் கட்டின மதிளையிட்டு நிரூபிக்கும்படியான கோயிலையுடையவர். ஆயபொன்மாமதிள் சூழ்ந்தழகார் தென்னரங்கமே என்று அவர்தாமும் அருளிச்செய்தார். திண்கொடி மதிள்சூழ் திருவரங்கத்தாய் என்னும்படியான அரங்கர்.

விளக்கம் - அது என்ன வழி? திருவரங்கன் விஷயமாகத் திருமாலை என்னும் பிரபந்தம் அருளிச்செய்த தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் திருநாமத்தைக் கூறி, அதன் மூலமே மோக்ஷம் கிட்டும் காரணம் காண்பாயாக என்றார். (மதிளரங்கர்) - திருமாலையில் (42) - மதிள் திருவரங்கத்தானே - என்று கூறியபடி, திருமங்கையாழ்வரால் கட்டப்பட்ட மதிள் சுவர் கொண்டே நிரூபிக்கப்பட வேண்டிய திருவரங்கத்தைக் கொண்டவன். திருமங்கையாழ்வாரும் பெரியதிருமொழியில் (5-4-9) - ஆயபொன்மதிள் சூழ்ந்தழகார் தென்னரங்கமே என்றார். திருவாய்மொழியில் (7-2-3) - திண்கொடி மதிள்சூழ்

திருவரங்கத்தாய் - என்னும்படியாக உள்ள அழகியமணவாளன் ஸ்ரீரங்கநாதன்.

வ்யாக்யானம் - (கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் உற்ற திருமாலை பாடும்) - அதாவது, "கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை என்று உபக்ரமித்து, மழைக்கன்று வரைமுனேந்தும்" என்றும், "வளவெழுந்தவளமாட மதுரைமாநகரந்தன்னுள், கவளமால் யானை கொன்ற கண்ணனை அரங்கமாலை, துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல்" என்றும், அவதாரத்தோடே கூட அரங்கமாலை அனுஸந்தித்துத் தலைக்கட்டிற்று. அதிலே தேங்கின மடுவிறே அர்ச்சாவதாரம். விக்ரஹைகதேசமான திருவடிகளைச் சொன்னது விக்ரஹத்துக்கும் உபலக்ஷணம். அழகிய பைம்பொன் இத்யாதி. பெரியபெருமாள் திருவடிகளை ஸேவித்தவாறே, கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை என்னும் ஆகாரம் தோற்றியிருக்கும். அதாவது கன்றின்பின் போன சிறுக்குட்டச் செங்கமல அடியம் வெதும்பி உன்கண்கள் சிவந்தாயசைந்திட்டாய் நீ எம்பிரான் என்று வடிவிலே தொடை கொள்ளலாம்படியாயிருக்கும். காவிரித் தென்னரங்கம் மன்னியசீர் மதுசூதனா உன்னையிளங்கன்று மேய்க்கச் சிறுகாலேயூட்டி யொருப்படுத்தேன் என்றும், காவிரித் தென்னரங்கன் பண்டவன் செய்த கிரீடை என்றுமிறே பட்டர்பிரான் அருளிச்செய்தது. வண்டினங்கள் ஆலிக்குஞ்சோலை அரங்கத்தரவணையான் காலிப்பின் போன கழல் என்னக்கடவதிறே. திருக்கைகளைக் கண்டவாறே, மழைகன்று வரைமுனேந்தும் கொடியேறு செந்தாமரைக்கை என்னலாயிருக்கும். குன்றமேந்திக் கோநிரை காத்தவன் என்னும் ஆயனாய் அன்று குன்றமொன்றெடுத்தான், அரங்கமாநகரமர்ந்தானிறே. திருமுகமண்டலத்தைக் கண்டவாறே வெண்ணெயுண்டவாயன் என்று கவ்யஸேவை பண்ணின ஆகாரம் தோற்றியிருக்கும். பாவத்ரயமும் இப்படி ஸர்வசேதந ஸம்ரக்ஷண ஸமர்த்தங்களாயிருக்கும். கேயத்தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்ததும், நீடுலகுண்ட திறங்கிளர்வாய், வையமேழுங்கண்டாள் பிள்ளைவாயுள், முற்றுமுண்டகண்டமிறே. வாயிலும் வயிற்றிலும் வைத்திறே நோக்குவது.

விளக்கம் - (கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் உற்ற திருமாலை பாடும்) திருமாலையில்

(9) - கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை என்று தொடங்கினார். பாசுரம் 36ல் - மழைக்கன்று வரைமுனேந்தும் என்று கூறி, பாசுரம் 45ல் - வளவெழுந்தவளமாட மதுரைமாநகரந்தன்னுள், கவளமால் யானை கொன்ற கண்ணனை அரங்கமாலை, துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல் என்று இவ்விதம் திருவரங்கத்தில் கண்வளரும் அழகியமணவாளனை கண்ணனாகவே மனதிற்கொண்டு தன்னுடைய பிரபந்தத்தை பூர்த்தி செய்தார். ஸ்ரீவசனபூஷணத்தில் (39) கூறிய - அதிலே தேங்கின மடுவிறே அர்ச்சாவதாரம் - என்பதற்கு ஏற்ப அர்ச்சையில் உள்ள விக்ரஹங்களை விபவ அவதாரங்களுடன் கூறுவது வழக்கம் அல்லவா? அடுத்து திருமேனியின் ஒரு உறுப்பான திருவடிகளைக் கூறுதல் என்பது, அவனது முழு திருமேனியையும் கூறுவது போன்றே ஆகும். பெரியாழ்வார் (1-2-20) - அழகிய பைம்பொன் - என்னும் பாசுரத்தில் அவன் கற்றினம் மேய்ப்பதைக் கூறியது காண்க. பெரியபெருமாளின் திருவடிகளை பார்க்கும்போது - கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை - என்னும்படி மாடுகளின் பின்னே சுற்றிய திருவடி இதுவே என்று தோன்றும். பெரியாழ்வார் கூறியபடி (3-3-4) - கன்றின்பின் போன சிறுக்குட்டச் செங்கமல அடியம் வெதும்பி உன் கண்கள் சிவந்தாயசைந்திட்டாய் நீ எம்பிரான் - என்பதற்கு ஏற்ப கன்றுக்குட்டிகளின் பின்னே சென்ற களைப்பு காரணமாக சிவந்த திருவடிகளுடன் கண்ணும் சிவந்ததா - என்று கேட்கும்படியாக பெரியபெருமாள் சயனித்துள்ளான். பெரியாழ்வார் (3-3-2) - காவிரித் தென்னரங்கம் மன்னியசீர் மதுசூதனா உன்னை இளங்கன்று மேய்க்கச் சிறுகாலேயூட்டி ஒருப்படுத்தேன், (2-9-11) - காவிரித் தென்னரங்கன் பண்டவன் செய்த கிரீடை - என்று பெரியபெருமாளே கண்ணனாக ஆநிரை மேய்த்தான் என்று கூறினார் அல்லவா? பெரியபெருமாளின் நீண்ட திருக்கைகளைக் கண்டவுடன் திருமாலையில் (36) - மழைக்கு அன்று வரை முன் ஏந்தும் - என்றும், பெரியாழ்வார் திருமொழி (3-5-10) - கொடியேறு செந்தாமரைக்கை - என்றும் கூறியபடி கண்ணனின் திருக்கரமாகவே அல்லவோ தோன்றுகிறது? திருவாய்மொழியில் (7-2-8) - குன்று ஏந்திக் கோநிரை காத்தவன் - என்றும், பெரிய திருமொழியில் (5-7-9) - ஆயனாய் அன்று குன்றம் ஒன்று எடுத்தான் அரங்கமாநகர்

அமர்ந்தானே - என்றும் அருளிச்செய்யப்பட்டது காண்க. இவனுடைய திருமுகத்தைக் காணும்போது அமலனாதிபிரானில் (10) - வெண்ணெய் உண்ட வாயன் - என்று கூறப்பட்டது போன்று, அந்தக் கண்ணன் இவனே என்பது வெளிப்படும். இப்படியாக இவனது திருவடிகள், திருக்கரங்கள் மற்றும் திருமுகம் ஆகியவற்றைக் காணும்போது, அனைத்தையும் கரையேற்றவல்ல கண்ணன் இவனே என்பது புலப்படும். திருவாய்மொழி (6-4-2) - கேயத்தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்ததும், திருவாய்மொழி (6-6-3) - நீடுலகுண்ட திறங்கிளர்வாய், பெரியாழ்வார் திருமொழி (1-1-6) - வையம் ஏழும் கண்டாள் பிள்ளைவாயுள், அமலனாதிபிரான் (6) - முற்றுமுண்டகண்டம் - என்று அருளிச்செய்தபடி அனைத்தையும் இவன் தனது வாயிலும் வயிற்றிலும் வைத்து அல்லவோ காக்கிறான்?

வ்யாக்யானம் - (கற்றினம் மேய்த்த கழலிணைக் கீழுற்ற திருமாலை பாடும்) - ஆஸ்ரீதரக்ஷணத்துக்குறுப்பாய், அதிஸுலபமான திருவடிகளுக்கு ஒக்கும்படியான அதிலே ஊன்றி அடிபட்டு, அடிசூட்டலாகுமந்தாமம் என்னும்படி அரங்கமாலுக்கும் திருமாலையைப்பாடித் திருவடிகளிலே சூட்டும். செய்ய சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை என்னக்கடவதிறே. (பாடும் சீர்) - பாடுகைதானே இவர்க்கு ஸ்ரீயாய்த்து. (சீர்த்தொண்டரடிப்பொடி) - துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடியிறே. (தொண்டரடிப்பொடி எம்பெருமானை) - அவர்க்கு அரங்கநகர் எம்பிரான் என்னும்படி, இலங்கையர்கோன் வழிபாடுசெய் கோயிலெம் பெருமான் நம்பெருமாளாயிருப்பர், இங்கு தொண்டரடிப்பொடி எம்பெருமானாயிருக்கும். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு சேஷபூதரான ஆகாரத்தாலே நமக்கு நாதராயிருப்பர். இப்படி நமக்கு ஸ்வாமியானவரை எப்போதுமீதே சொல் என்கிறபடியே ஸர்வகாலத்திலும் அனுஸந்தித்துப்போரு. இத்தால் குரோர் நாம ஸதா ஜபேத் என்னும் அர்த்தம் சொல்லிற்று.

விளக்கம் - (கற்றினம் மேய்த்த கழலிணைக் கீழுற்ற திருமாலை பாடும்) - தன்னை அண்டியவர்களைக் காப்பதும், அனைத்திற்கும் அடைவதற்கு மிகவும் சுலபமாக

உள்ளதும் ஆகிய திருவடிகளில் ஈடுபாடு கொண்டு, அதிலேயே மனம் ஊன்றி அடிபட்டு நிற்கிறார், திருவாய்மொழி கூறியபடி (2-4-11) - அடிசூட்டலாகுமந்தாமம் - என்று திருவரங்கத்தில் சயனித்துள்ளவனின் திருவடிகளில் தன்னுடைய திருமாலையைச் சூட்டினார். சொற்களால் மாலை சூட்டுவார்களோ என்றால், முதல் திருவந்தாதியில் (1) - செய்ய சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல் மாலை - என்றார் அல்லவா? (பாடும் சீர்) - பாடுவது என்பதே இவர் பெற்ற செல்வம் ஆனது (சீர்த்தொண்டரடிப்பொடி) - துளபத்தொண்டாய தொல் சீர்த்தொண்டரடிப்பொடி என்று இவரே கூறியது காண்க. (தொண்டரடிப்பொடி எம்பெருமானை) - குலசேகராழ்வாருக்கு பெருமாள் திருமொழியில் (3-6) கூறியபடி - அரங்கநகர் எம்பிரான் - என்பது போன்று, தொண்டரடிப்பொடியாழ்வாருக்கு திருப்பள்ளியெழுச்சியில் (5) கூறியது போன்று - இலங்கையர்கோன் வழிபாடு செய் கோயில் எம்பெருமான் - என்று நம்பெருமாள் ஸ்வாமியாக இருப்பான், இவருக்கோ (திருவரங்கப்பெருமாளரையருக்கு) தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்வாமியாக இருப்பார். நாம் தொண்டர்களுக்குத் தொண்டராக உள்ளதால், நமக்கும் ஸ்வாமியாக ஆழ்வார் உள்ளார். இவ்விதம் உள்ள ஆழ்வாரை, பெரியதிருவந்தாதி கூறுவதுபோன்று (87) - எப்போதும் இதே சொல் - என்று எந்தக்காலத்திலும் ஆழ்வார் திருநாமத்தையே கூறும்படி தன் மனதிடம் சொல்கிறார். இதன் மூலம் - குரோர் நாம ஸதா ஜபேத் - ஆசார்யனின் திருநாமத்தை எப்போதும் கூறியபடி இருக்கவேண்டும் - என்பது உணர்த்தப்பட்டது.

பிள்ளைலோகம் ஜீயர் இயற்றிய தனியன் வ்யாக்யானம் ஸம்பூர்ணம்

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

பரமகாருணிகரான ஸ்வாமி பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த

வ்யாக்யான அவதாரிகை

அவதாரிகை - நித்யஸூரிகளோடொத்த ப்ராப்தி தமக்கு உண்டாயிருக்க அத்தை அறியாதே, அநாதிகாலம் தேஹமே ஆத்மா என்றும், சப்தாதி விஷயங்களே போக்யமென்றும் விரும்பி, ஸம்ஸாரத்தில் கைகழிந்த ஆழ்வாரை, பெரியபெருமாள் தம்முடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளுக்கு வாசகமான திருநாமப்ரபாவத்தை நிர்ஹேதுகமாகக் காட்டியருளக் கண்டு, தாமும் அனுபவித்து, அனுபுபூஷுக்களையும் அனுபவிப்பிக்கவும் வல்லராய்ப் பெரியபெருமாளையும் உகப்பித்துத் தலைக்கட்டுகிறார்.

விளக்கம் - நித்யசூரிகள் போன்று எப்போதும் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தபடி உள்ள உரிமை இந்த ஆழ்வாருக்கு இருந்தபோதிலும், அதனை உணராமல் - இந்த உடலே ஆத்மா என்றும், உலகவிஷயங்களே இன்பம் அளிப்பவை என்றும் இருந்தார். இதனால் எம்பெருமானை விட்டு விலகி, ஸம்ஸாரத்தில் தனது காலத்தைக் கழித்தபடி இருந்தார். இதனைக் கண்டு பொறுக்காத பெரியபெருமாள் அவருக்குத் தனது ஸ்வரூபம், ரூபம், திருக்கல்யாண குணங்கள், ஐச்வர்யங்கள் ஆகியவற்றைக் காட்டிக்கொடுக்கவல்ல திருநாமங்களின் மேன்மைகளை உணர்த்தினான். இதனை - ஆழ்வார் தன்னை அடைய எந்த உபாயமும் செய்யவேண்டிய அவசியம் இல்லாமல், அவரிடமிருந்து எதனையும் எதிர்பார்க்காமல் செய்தான். இதனைக் கண்டு ஆழ்வார் நன்றாக அவனை அனுபவித்தார். இதனை அனுபவிக்க விருப்பம் உள்ளவர்களையும் அனுபவிக்கும்படிச் செய்தார். இதன் மூலம் பெரியபெருமாளும் மகிழும்படிச் செய்தார். இப்படியாக தனது பிரபந்தத்தை நிறைவு செய்தார்.

அவதாரிகை - ஸம்ஸாரிகளாகிறார் - ஐஹிகத்தில் புண்யபாபரூபமான கர்மங்களை ஆர்ஜித்தும், ஆமுஷ்மிகத்தில் ஸ்வர்க்கநரகங்களிலே அதினுடைய பலானுபவத்தைப் பண்ணியும் இப்படி கதாகதம் பண்ணித் திரிவார் சிலராய்த்து. அது தன்னிலும் புண்யபாபரூபமான கர்மங்களை ஸ்வர்க்கநரகங்களிலே அனுபவித்து,

கர்மசேஷத்தோடே பூமியிலே கர்ப்பவாஸம் பண்ணுகைக்கு வரும் வழியிலே இவ்வாத்மா படும் எளிவரவை வேதாந்தத்திலே பஞ்சாக்நிவித்யையென்று ஒரு ப்ரதேசத்திலே ஓதிவைத்தது. அதாவது யாதநாசரீரத்தாலே நரகானுபவம் பண்ணி அச்சரீரத்தை அங்கே பொகட்டு, அநந்தரம் புண்யசரீரத்தைப் பரிக்ரஹித்து ஸ்வர்க்கானுபவம் பண்ணி, அங்கே அச்சரீரத்தைப் பொகட்டு, ஸூக்ஷ்ம சரீரத்தோடே நிராலம்பநமான ஆகாசத்திலே பதிக்கக்கடவன்.

விளக்கம் - ஸம்ஸாரிகள் என்ன செய்கிறார்கள்? இந்த உலகத்தில் உள்ளபோது புண்யபாவங்கள் நிறைந்த கர்மங்களை இயற்றியபடி உள்ளனர். இவற்றின் பலன்களை ஸ்வர்க்கத்திலும் நரகத்திலும் அனுபவிக்கின்றனர். பின்னர் மீண்டும் இங்கு வருகின்றனர். இப்படியே வருவதும் போவதுமாக உள்ளனர். இப்படியாக தங்கள் புண்யபாவ கர்மங்களை ஸ்வர்க்கத்திலும் நரகத்திலும் அனுபவித்த பின்னர், மீதம் உள்ள கர்மபலனுடன் பூமிக்கு வருகின்றனர். அவ்விதம் ஜீவன் மீண்டும் ஒரு கர்ப்பத்தில் புக தன்னுடைய பயணத்தைத் தொடங்கி, வரும் வழிகளில் அனுபவிக்கும் வேதனைகளை சாந்தோக்ய உபநிஷத்தில் உள்ள பஞ்சாக்னி வித்யை மிகவும் தெளிவாகக் கூறுகிறது. நரகத்தில் கர்மபயனை அனுபவிக்க ஜீவனுக்கு யாதநாசரீரம் என்ற உடல் கிட்டுகிறது. அந்தக் கர்மபலன் முடிவுக்கு வந்த பின்னர், அந்த சரீரத்தை அங்கே நீக்கிவிட்டு, புண்யபலன் அனுபவிக்க வரும் ஸ்வர்க்கத்தில் வேறு ஒரு சரீரம் எடுத்துக்கொள்கிறான். புண்யபலன்களும் கழிந்த பின்னர், அந்த சரீரமும் விடப்படுகிறது. பின்னர் சூக்ஷமமான சரீரத்துடன் அந்த ஜீவன் பிடிப்பு இல்லாத ஆகாயத்தில் விழுகிறான்.

அவதாரிகை - ஆதித்யன் தன் கிரணங்களாலே ஹிமவானின் ஹிமத்தை உபாதாநம் பண்ணி, அத்தாலே ஆகாசத்திலே மங்கிக் கிடக்கிற ஆத்மாவை க்ரஹித்து மேகத்திலே புகவிடக்கடவன். அங்கே அந்த ஹிமம் வர்ஷரூபேண வர்த்திக்குமளவும் கிடந்து, வர்ஷதாரைகளோடே பூமியிலே பதிக்கக்கடவன். அந்த ஜலம் ஸஸ்யத்துக்கு தாரகமாய்ப் புகுமளவிலே தத்வாரா ஸஸ்யத்திலே புகக்கடவன். அந்த ஸஸ்யம் பக்வமாய் அந்நரூபேண பரிணமிக்குமளவும் அங்கே கிடந்து, அந்நமானது புருஷசரீரத்திலே புகுந்து, சுக்லமாய்ப் பரிணமிக்குமளவும் செல்ல அங்கே கிடந்து, ஸ்திரீபுருஷ ஸம்யோகத்தாலே சுக்லத்வாரா ஸ்த்ரீசரீரத்திலே புகுந்து, பஞ்சம்யாமாஹுதாவாப புருஷவசஸோ பவந்தி என்கிறபடியே கர்ப்பமாய்ப் பரிணமிக்கக்கடவன். கர்ப்பவாஸம் பண்ணும்போது, அத்யம்லகடு

தீக்ஷ்ணோஷ்ணலவணைர் மாத்ருபோஜநை அதிதாபிபிரத்யர்த்தம் வர்த்தமாநாதி வேதந என்கிறபடியே மாத்ருபோஜனத்தில் அந்தர்பூதங்களான க்ரூரத்ரவ்யங்களாலே தொடரிலிட்ட ஈயம்போலே துடியாநிற்கும்.

விளக்கம் - சூரியன் தன்னுடைய வெப்பம் மிகுந்த கதிர்கள் மூலமாக, பனிபடர்ந்த மலைகளில் உள்ள பனியை எடுக்கிறான். பனி படர்ந்த தனது கதிர்கள் மூலமாக, ஆகாயத்தில் மயங்கிக் கிடக்கும் ஆத்மாவை எடுத்து, மழைநீர் மிகுந்த மேகத்தில் வைக்கிறான். அந்த ஜீவனை பனிக்கதிர்கள் உட்கொள்கின்றன. அவை மழைத்துளியாக மாறுகின்றவரை, ஜீவன் மேகக்கூட்டத்தில் கிடக்கிறான். பின்னர் மழை பெய்யும்போது, மழைத்துளிகளுடன் பூமியில் அந்த ஜீவன் வந்து விழுகிறான். அந்த மழைநீரானது பயிர்களுக்கு உதவும்விதமாக, அந்தப் பயிர்களின் உள்ளே செல்கின்றன. அப்போது, அந்த நீருடன் ஜீவனும் பயிர்களில் நுழைகிறான். அந்தப் பயிரானது நன்கு செழித்து, நெல்லாக மாறும்வரை, ஜீவன் அந்தப் பயிருக்குள்ளேயே உள்ளான். அந்த நெல்லை அரிசியாக்கிச் சோறாக மனிதன் உண்ணும்போது, ஜீவன் அந்த மனிதனின் உடலில் புகுந்துவிடுகிறான். அந்த மனிதனின் உடலில் சுக்லம் எனப்படும் விந்துவாக மாறி அங்கேயே உள்ளான். அந்த மனிதன் ஒரு பெண்ணுடன் சேரும்போது, வெளிப்படும் விந்துவுடன் அந்த ஜீவனும் பெண்ணின் உடலில் புகுந்துவிடுகிறான். பின்னர் சாந்தோக்ய உபனிஷத் (5-9-1) கூறுவதுபோன்று - பஞ்சம்யாமாஹுதாவாப புருஷவசஸோ பவந்தி - ஐந்தாவது ஆஹுதியாக இடப்படும் நீர் புருஷன் எனப்படும் - என்பதற்கேற்ப, பெண்ணின் உடலில் புகுந்த ஜீவன் கர்ப்பமாக மாறுகிறான். அந்தக் கர்ப்பத்தில் உள்ள ஜீவன் எவ்விதம் துடிக்கிறான் என்பதை விஷ்ணுபுராணம் (6-5-11) - அத்யம்லகடுதீக்ஷ்ணோஷ்ணலவணைர் மாத்ருபோஜநை அதிதாபிபிரத்யர்த்தம் வர்த்தமாநாதிவேதந - புளிப்பு, துவர்ப்பு, காரம், சூடு, உவர்ப்பு போன்றவற்றுடன் கூடிய தாயின் உணவு உள்ளே செல்வதால் ஜீவன் துன்பம் அடைகிறான் - என்றது. அதாவது, தாயின் உணவினால், காய்ச்சப்படும் ஈயம் போன்று ஜீவன் துடிக்கிறான்.

வ்யாக்யானம் - இந்த க்லேசத்தோடே கர்ப்பதும்பமாகிற பையிலே கட்டுண்டு, அவயவங்களை நீட்டமுடக்கமாட்டாதே, க்லேசாந்நிஷ்க்ராந்திம் ஆப்நோதி ஜடராந்மாதுராதுர என்கிறபடியே க்லேசேந ஜனித்து, பால்யதசையில் அசுசிப்ரஸ்ரவங்களிலே கிடந்து, கண்டுயநே அபி சாசக்த பரிவர்த்தே அப்யநீச்வர ஸ்நாநபாநாதி சாஹாரமவாப்நோதி பரேச்சயா என்கிறபடியே தின்றவிடத்தைச்

சொறிதல், கடித்தவற்றைத் துடைத்தல் செய்யமாட்டாதே, தாரகாதிகளும் பராதீநமாய், இப்படி க்லேசேந அதிசைசவகாலத்தைப் போக்கி, தானே ஒரு ப்ரவ்ருத்தி பண்ண க்ஷமனானவளவிலே, தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ச்ரேயஸே ஸதா என்கிறபடியே பகவதப்ரவணனாக ப்ராப்தமாயிருக்க, பால்யே க்ரீடநகாஸக்தா என்று லீலையோடே காலத்தைப் போக்கி, யௌவநாவஸ்தையிலே நரகஹேதுவான விஷயாந்தரங்களோடே போதுபோக்கி, ஜரையிலே வந்து அகப்பட்டு அசக்தியோடே காலக்ஷேபத்தைப் பண்ணி, நினைவின்றியே இருக்கச்செய்தே மரணம் ப்ராப்த்மாக, க்லேசாதுத்க்ராந்திமாப்நோதி யாம்யகிங்கர பீடித என்கிறபடியே உத்க்ரமண தசையிலே க்லேசத்தை அனுபவித்து அநந்தரம் ம்ருத்யுபரவசனாம்.

விளக்கம் - மேலே கூறப்பட்ட பலவிதமான துன்பங்களுடன், தன்னுடய தாயின் கர்ப்பப்பையில், தன்னுடைய கை கால்களை நீட்டவும் முடியாமல், சுருக்கவும் முடியாமல் தவித்தபடி உள்ளான். பின்னர் விஷ்ணு புராணம் கூறுவது போன்று - க்லேசாந்நிஷ்க்ராந்திம் ஆப்நோதி ஜடராந்மாதுராதுர - துன்பத்துடன் உள்ள ஜீவன், தனது தாயின் கர்ப்பத்திலிருந்து மிகவும் சிரமப்பட்டு வெளியில் வருகிறான் - என்பதற்கேற்ப துன்பத்துடனேயே பிறக்கிறான். தன்னுடைய குழந்தைப் பருவத்தில் மலமூத்ரங்களில் கிடக்கிறான். விஷ்ணு புராணம் கூறுவது போன்று - கண்டுயநே அபி சாசக்த பரிவர்த்தே அப்யநீச்வர ஸ்நாநபாநாதி சாஹாரமவாப்நோதி பரேச்சயா - சொறிந்து கொள்ள அறியாமல், புரண்டு படுக்கத் தெரியாமல், குளிப்பது உண்பது போன்ற செயல்களுக்கு மற்றவர்கள் ஆசைப்படி நடப்பது என்று உள்ளான் - என்பதற்கேற்ப பூச்சிகள் கடித்தால் சொறியவும் அறியாமல், தான் கடித்த பொருள்களைத் துடைக்கவும் தெரியாமல் உள்ளான். தன்னுடைய உணவுக்கு மற்றவர்களை அண்டியே உள்ளான். இப்படியாகத் தன்னுடைய குழந்தைப் பருவத்தைத் துன்பத்திலேயே போக்குகிறான். அதன் பின்னர், தன்னுடைய செயல்களைத் தானே கவனித்துக் கொள்ளும் பருவம் அடைகிறான். அந்தப் பருவத்தில் விஷ்ணு புராணம் கூறும்படி - தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ச்ரேயஸே ஸதா - பால்ய பருவத்தில் ஆத்மாவின் உயர்வுக்காக முயன்றபடி இருக்கவேண்டும் - என்பதற்கேற்ப பகவத் விஷயத்தில் எப்போதும் ஈடுபட்டபடி இருத்தல் வேண்டும். ஆனால், அதற்கு மாறாக விஷ்ணு புராணம் கூறும்படி - பால்யே க்ரீடநகாஸக்தா - சிறிய வயதை விளையாட்டில் கழிக்கின்றனர் - என்பது போன்று விளையாட்டிலேயே பால்யப் பருவத்தைக் கழிக்கின்றனர். பின்னர் வரும் யௌவன பருவத்தில் நரகம் செல்லக் காரணமான

காமத்தில் ஊறியபடி உள்ளனர். பின்னர் கிழத்தன்மை வந்துவிட, எதற்கும் சக்தி இல்லாமல் காலத்தைக் கடத்துகிறான். பின்னர் சிறிது காலம் நினைவுகள் தவறியபடி உள்ளபோது, மரணம் வந்துசேர்கிறது. மரண காலத்தில் விஷ்ணு புராணம் கூறியபடி - க்லேசாதுத்க்ராந்திமாப்நோதி யாம்யகிங்கர பீடித - யமதூதர்களால் பீடிக்கப்பட்டு, துன்பம் அடைந்து, மிகுந்த சிரமத்துடன் உடலை விட்டு வெளியேறுகிறான் - என்பதற்கேற்ப உயிர் பிரியும்போது மிகுந்த துன்பங்கள் அனுபவித்தபடி மரணம் அடைகிறான்.

வ்யாக்யானம் - இப்படி ஸம்ஸாரிகளுடைய அநர்த்த பரம்பரைகளைக் கண்டு ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் என்கிறபடியே பரமஸுஹ்ருத்தான ஸர்வேச்வரன் இவனுடைய உஜ்ஜீவநார்த்தமாக மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி என்கிறபடியே சாஸ்த்ரத்தைக் காட்டிக் கொடுத்தான். எங்ஙனே என்னில் வேதாந்தத்திலே க்ஷரம் ப்ரதாநம் இத்யாதி வாக்யங்களாலே சிதசிதீச்வர தத்வத்ரயங்களையும் பிரியக் காட்டிக்கொடுத்து, அந்தர்யாமி ப்ராஹ்மணத்தாலே, ஏஷ ஸர்வபூதாந்தராத்மா என்று ஜாத்யந்தனுக்குக் கண்ணைக் கொடுத்தாற்போலேயும், இருட்டறையிலே விளக்கேற்றிக் காட்டினாற்போலேயும், சேதநாசேதநங்கள் சரீரம் ஈச்வரன் சரீரி என்று, ஈச்வரனோடு சேதநாசேதநங்களுக்குள்ள ஸம்பந்தத்தைக் காட்டிக்கொடுத்து, த்வா ஸுபர்ணா இத்யாதி வாக்யங்களாலே சேதநனுக்கு அசித்ஸம்பந்தம் கர்மோபாதிகமென்று காட்டிக்கொடுத்து, ததா வித்வாந் புண்யபாபே விதூய இத்யாதி வாக்யங்களாலே ஔபாதிகமான அசித்ஸம்ஸர்க்கமற்று, ஒரு தேசவிசேஷத்திலே ஸுரிபோக்யமான போகத்தை அனுபவிக்குமது ஸ்வரூபானுரூபமான புருஷார்த்தமென்று காட்டிக்கொடுத்து.

விளக்கம் - இப்படியாக ஸம்ஸாரத்தில் தவிக்கும் ஜீவனின் துன்பம் கண்டு, ஸ்ரீமத் பகவத் கீதை (5-29) கூறுவது போன்று - ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் - அனைத்து உயிர்களுக்கும் நண்பன் - என்னும்படி, அனைத்திற்கும் உற்ற நண்பனாக உள்ள ஸர்வேச்வரன், இவர்கள் கரையேரும் மார்க்கமாக செய்வது என்ன? ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-1) கூறுவது போன்று - மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி - மிகுந்த கருணை உள்ள அவன், சாஸ்த்ரம் என்னும் விளக்கை அளிக்கிறான் - என்பது போன்று, சாஸ்த்ரங்களை அளிக்கிறான். இதனை எவ்விதமாகச் செய்கிறான்?

ச்வேதாஸ்வதர உபனிஷத் (1-10) - க்ஷரம் ப்ரதாநம் - ப்ரக்ருதியே க்ஷரம் எனப்படுகிறது - என்று கூறுவது போன்று, சேதனன்-அசேதனம்-ஈச்வரன் என்னும் மூன்று தத்வங்களைப் புரியவைக்கிறான். அந்தர்யாமி ப்ராஹ்மணத்தின் மூலம் ஸுபால உபனிஷத் கூறுவது போன்று - ஏஷ ஸர்வபூதாந்தராத்மா - அனைத்து பூதங்களின் அந்தர்யாமியாக உள்ளான் - போன்ற வரிகள் மூலம் பிறவியாகவே குருடனாக உள்ள ஒருவனுக்குக் கண்பார்வை அளித்தது போன்றும், இருள் சூழ்ந்த ஓர் அறையில் விளக்கு ஏற்றியது போலவும், சேதனமும் அசேதனமும் சரீரம்-இவற்றின் ஆத்மா ஈச்வரன் என்று ஈச்வரனுக்கும் சேதன-அசேதனங்களுக்கும் இடையே உள்ள தொடர்பை காட்டிக் கொடுத்தான். முண்டக உபனிஷத் - த்வா ஸுபர்ணா - அழகிய இறக்கை உடைய - என்ற உதாரணம் மூலம் சேதனனுக்கு கர்மம் காரணமாகவே அசேதனங்களுடன் தொடர்பு உள்ளதாகக் காட்டிக்கொடுத்தான் (இந்த உபனிஷத் வரியில் கூறப்படும் கருத்து - இந்த உடல் என்னும் மரத்தில் ஈச்வரன், ஜீவன் என்னும் இரு பறவைகள் அமர்ந்துள்ளன. அவற்றில் ஒன்று, இந்த உடலின் கர்மங்கள் என்னும் பழங்களை உண்கிறது. மற்றொன்று உண்ணாமல் பார்த்தபடி உள்ளது - என்பதாகும்). மேலும் முண்டக உபனிஷத் - ததா வித்வாந் புண்யபாபே விதூய - ப்ரஹ்மத்தை அறிந்த ஒருவன், அந்த நேரத்திலேயே தனது புண்யபாவங்களை கைவிட்டு, ப்ரஹ்மத்தை அடைகிறான் - என்பது போன்ற வரிகள் மூலமாக, எல்லையற்ற காலமாக உள்ள அசேதன தொடர்பு நீங்கப்பெற்று, பரமபதத்தில் உள்ள நித்யஸூரிகள் அனுபவிக்கும் இன்பங்களை அனுபவிப்பதே ஜீவனின் ஸ்வரூபத்திற்கு ஏற்ற புருஷார்த்தம் என்று காட்டிக் கொடுத்தான்.

வ்யாக்யானம் - இப்படி ஈச்வரன் உபகரித்தவிடத்திலும் பாபப்ராகர்யத்தாலே இத்தைக் கைவிட்டு வேதபாஹ்யராயும், இதுக்குள்ளே புகுந்து, தத்ரைவ கே அபி சபலா சலபீபவந்தி என்கிறபடியே விளக்கிலே விட்டில் என்று சில பதார்த்தங்கள் நசித்துப்போமாபோலே, வேத தாத்பர்யம் அறியாமையாலே குத்ருஷ்டிகளாயும் நசித்துப்போக, தாம் பண்ணின வேதப்ரதாநம் அகிஞ்சித்கரமாயறுகையாலே, ஓலைப்புறத்திலே செல்லாத தேசத்திலே எடுத்துவிடும் ராஜாக்களைப்போலே, ஸம்ஸாரி ஸஜாதீயனாய் வந்து அவதரித்தவிடத்திலும், வைது நின்னை வல்லவா பழித்து என்கிறபடியே உள்ள சக்தியடங்க பகவந்நிந்தைக்குடலாயும், ஹிரண்யராவணாதி ரூபத்தாலே எதிரம்புகோத்து நசித்தும் இப்படி அவதாரமும் கார்யகரமாகாதவிடத்திலும் உடையவன் உடைமையை விடமாட்டாத சாபலத்தாலே இவர்களுடைய

ஆபிமுக்யத்திலே அவஸரப்ரதீக்ஷனாய் வர்த்திக்க.

விளக்கம் - இப்படியாகப் பலவிதமாக ஈச்வரன் மிகுந்த உதவிகள் செய்தபோதிலும், அதனைத் தங்கள் பாவத்தின் காரணமாக உணராமல், வேதங்களை நம்பாமல் கைவிட்டு நிற்கின்றனர். விளக்கில் புகுந்து அழிந்து போகும் விட்டில் பூச்சிகள் போன்று, இவர்கள் வேதங்களுக்கு தவறான பொருள் கூறும் மதங்களில் புகுந்து, அழிந்து போகின்றனர். இப்படியாகத் தான் அளித்த வேதங்கள் பயனற்றுப் போவதை ஈச்வரன் காண்கிறான். கப்பம் கட்டாத சிற்றரசர்களிடம் தூதுவர்களி அனுப்பியும் பயனில்லை என்றால், ராஜா தானே படையெடுத்து வருவது போன்று, ஈச்வரன் ஸம்ஸாரிகளில் ஒருவனாக அவதரிக்கிறான். இப்படியாக அவன் அவதரித்தாலும் திருச்சந்தவிருத்தம் கூறுவது போன்று (111) - வைது நின்னை வல்லவா பழித்து - அவன் அளித்த சக்தி கொண்ட்ரு அவனையே பழிக்கின்றனர். மேலும் ஹிரண்யன், இராவணன் போன்றவர்கள் அவன் மீதே போரிட்டு அழிந்தும் போகின்றனர். இப்படியாக அவன் எடுக்கும் அவதாரங்களும் பயனில்லாமல் போகின்றன. ஆனாலும் பொருளின் சொந்தக்காரன், தனது பொருளை விடாமல் உள்ளது போன்று, இவன் இவர்கள் தன் மீது கொள்ளும் ஈடுபாட்டை எதிர்நோக்கியபடி உள்ளான்.

வ்யாக்யானம் - சேதநர் பக்கலிலே யாத்ருச்சிக ஸுக்ருதமென்று ஒன்று பிறக்க, அது வ்யாஜமாக விசேஷகடாக்ஷம் பண்ணி அத்தாலே அத்வேஷம் பிறந்து, அதடியாகப் பண்ணின விசேஷ கடாக்ஷத்தாலே ஆபிமுக்யம் பிறந்து, அநந்தரம் சாஸ்த்ரவாஸனையாலும் ஆசார்யோபதேசத்தாலும் ஈச்வரன் நிருபாதிக சேஷியென்றும், இவ்வாத்மா அவனுக்கு அநந்யார்ஹசேஷமென்றும் யதாஜ்ஞாநம் பிறந்து, அநந்தரம் ஸ்வரூபானுரூபமான புருஷார்த்தத்திலே ருசிபிறக்குமளவும் தன்னுடைய விசேஷகடாக்ஷத்தாலே புகுர நிறுத்தி, புருஷார்த்த லாபத்துக்கு உபாயமேதோ என்று புபுத்ஸை பிறந்தவளவிலே, சாஸ்த்ரஸித்தமான கர்மாத்யுபாயங்களைக் காட்டிக்கொடுத்து, இது துஷ்கரமென்றும், விளம்பித பலப்ரதமென்றும், ப்ரமாத ஸம்பாவனையுள்ளதென்றும் இவற்றில் இழிய இறாய்த்தவர்களுக்கு வேதாந்தசித்தமான தன்னுடைய உபாயபாவத்தைக் காட்டிக்கொடுக்க

விளக்கம் - ஒரு நேரத்தில் சேதனனுக்கு யாத்ருச்சிக ஸுக்ருதம் என்று கூறப்படும் ஒரு புண்ணியம் தானகவே வெளிப்படுகிறது. அதனையே தனக்கு ஏற்ற சந்தர்ப்பமாக பகவான் பயன்படுத்திக் கொள்கிறான். அந்தச் சேதனனை கடாக்ஷித்து விடுகிறான்.

இதனால் பகவானிடம் த்வேஷம் பாராட்டாத தன்மை அந்தச் சேதனனுக்கு உண்டாகிறது. இதன் மூலம், மீண்டும் பகவான் அவனைக் கடாக்ஷிக்கிறான். இதனால் சேதனனுக்கு பகவானிடம் அதிக ஈடுபாடு ஏற்பட்டுவிடுகிறது. அதன் பின்னர் சாஸ்த்ரங்கள் மூலமும், ஆசார்யனின் உபதேசங்கள் மூலமும் - ஈச்வரனே அனைவருக்கும் இயல்பான எஜமானன், இந்த ஆத்மா அவனது அடிமை - என்னும் ஞானம் உண்டாகிறது. அதன் பின்னர் அந்தச் சேதனனுக்கு, அவனுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்றதான கைங்கர்ய புருஷார்த்தத்தில் ஆழ்ந்த ஈடுபாடு உண்டாகும்படியாக, எம்பெருமான் கடாக்ஷித்து விடுகிறான். அப்போது அந்தச் சேதனன் - இந்தப் புருஷார்த்ததை அடைய என்ன உபாயம் - என்று ஆராய்கிறான். இப்படிப்பட்ட ஆவல் அந்தச் சேதனனுக்கு உண்டானவுடன், சாஸ்த்ரங்கள் மூலமாக கர்மம் முதலான யோகங்களை ஈச்வரன் அவனுக்குக் காட்டுகிறான். இப்படிப்பட்ட உபாயங்கள் அனைத்தும் மிகவும் கடினமானவை, பல பிறவிகள் எடுத்துக் கழித்த பின்னரே பலன் அளிப்பவை, பல இடையூறுகளுக்கு உட்பட்டவை என்று உணர்த்துகிறான். இந்தக் காரணங்களை அறிந்தவர்களுக்காக வேதாந்தங்கள் மூலமாக, தானே மோக்ஷத்திற்கான உபாயம் என்று காட்டித் தருகிறான்.

வ்யாக்யானம் - பக்தியினுடைய துஷ்கரதையோபாதி ப்ரபத்திநிஷ்டாஹேதுவான மஹாவிச்வாஸமும் சிலர்க்குக் கிட்டுகை அரிதாகையாலே இதில் இழியக் கூசினவர்களுக்கு, ஸர்வாதிகாரமான யாத்ருச்சிக பகவந்நாம ஸங்கீர்த்தனமே சேதநருடைய பாபத்தைப் போக்கி ஸுக்ருதானுகூலமாக, கர்மயோகாதிகளிலே மூட்டுதல், ப்ரபத்தியிலே மூட்டுதல், விரோதியைப்போக்கி ப்ராப்யத்தைக் கொடுக்கைக்குத் தானே நிர்வாஹகமாதலாம்படியான வைபவத்தையுடைத்தாயாய்த்து திருநாமத்தினுடைய வைபவமிருப்பது. அதற்கு ப்ரமாணம் ஏதென்னில் கிம் ஜபந் முச்யதே ஜந்துர் ஜந்மஸம்ஸாரபந்தநாத் என்றும், யாதி ப்ரஹ்ம ஸநாதநம் என்றும் உபோத்காத பலச்ருதிகளிலே சொல்லி, நடுவே திருநாமத்தைச் சொல்லுகையாலே, இவ்வாழ்வார் இப்படிப்பட்ட திருநாமத்திலே இழிந்தவராகையாலே அத்திருநாம வைபவத்தைப் பேசுகிறார் இப்ரபந்தத்தாலே.

விளக்கம் - பக்தியோகம் என்பது கடினமான ஒன்றான சிலருக்கு இருக்கும். எம்பெருமானே அனைத்தும் என்னும் ப்ரபத்தியின் அடிப்படையான மஹாவிச்வாஸம் என்பது சிலருக்கு மிகவும் கடினமானதாக இருக்கும். ஆக பக்தி, ப்ரபத்தி என்ற

இரண்டிலும் ஈடுபடத் தயங்குபவர்களுக்கு, எதனையும் எதிர்பாராமல் செய்யப்படும் நாமஸங்கீர்த்தனமே புகலிடமாகும். இது பாவங்களை நீக்கி, கர்மஞானபக்தி யோகங்களில் ஈடுபட வைத்து, ப்ரபத்தில் நிற்கச் செய்து விடும். நாம் அடைய நினைக்கும் எம்பெருமானை அடையத் தடையாக உள்ள பாவங்களை நீக்கி, அந்த எம்பெருமான் என்னும் இலக்கையும் நாமஸங்கீர்த்தனம் அளித்துவிடும். இப்படியாக இதன் பெருமை உள்ளது. இவ்வித கூறுவதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா? கீழே உள்ள வரிகளைக் காண்க:

- விஷ்ணு ஸஹஸ்ரநாமம் - கிம் ஜபந் முச்யதே ஜந்துர் ஜந்மஸம்ஸாரபந்தநாத் - எதனை ஜபிப்பதன் மூலம், ஜன்மம்-ஸம்ஸாரம் போன்ற பந்தங்களிலிருந்து விடுபடுகிறான்?

- விஷ்ணு ஸஹஸ்ரநாமம் - யாதி ப்ரஹ்ம ஸநாதநம் - பழமையான ப்ரஹ்மத்தை அடைகிறான்

என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் தொடக்கத்திலும், பலச்ருதிகளிலும் கூறப்பட்டு, இவற்றுக்கு இடையில் ஸஹஸ்ரநாமம் ஓதப்படுவதால், திருநாமத்தின் பெருமை புலப்படுகிறது. இந்த ஆழ்வார் இப்படிப்பட்ட திருநாமத்தில் ஆழ்ந்தவராகையால், அந்தத் திருநாமத்தின் பெருமைகளை இந்த ப்ரபந்தத்திலே கூறுகிறார்.

வ்யாக்யானம் - திருநாமத்தில் இவர் இழிகைக்கடி ஸ்ரீவிஷ்ணுதர்மம். அது தனக்கு வக்தா ஆர்? ச்ரோதா ஆர்? அது விளைந்தபடி எங்ஙனே? என்றால் பாண்டவர்களுக்கு இவ்வருகே நாலைந்து தலைமுறை சென்றவளவிலே சதாநீகன் என்பானொரு ராஜாவுளனாய், அவன் பகவத்விஷயீகாரமுள்ள ஸந்தாநத்திலே பிறந்தானொருவனாகையாலே பரமஸத்விகனாய், அபிஷிக்தனானவன்றே தொடங்கிச் சிறியதைப் பெரியது நலியாதபடி நாட்டை ரக்ஷித்து - அத்ருஷ்ட சேஷமாக இவர்களுக்கு நம்மால் செய்யலாவதென்? - என்று ஸ்ரீசௌநக பகவான் பக்கலிலே சென்று - தேஹபோஷணபரராய் மூலையடியே திரிகிற ஸம்ஸாரிகளுக்கு உஜ்ஜீவநோபாயமாயிருப்பதொன்று அருளிச் செய்யவேணும் - என்று கேட்க, காலம்

கலிகாலமாயிருந்தது, பாபப்ராசுர்யத்தாலே வேறொன்றுக்கு அதிகாரிகளில்லை, ஸர்வாதிகாரமான பகவந்நாம ஸங்கீர்த்தனமே ஆத்மாக்களுக்கு உஜ்ஜீவநோபாயமாயிருப்பது என்று அருளிச்செய்தான்.

விளக்கம் - இந்த ஆழ்வார் திருநாம ஸங்கீர்த்தனத்தில் ஈடுபடுவதற்கு விஷ்ணுதர்மமே காரணமாக இருந்தது. அந்தக் க்ரந்தம் யாரால் கூறப்பட்டது? அது யாரால் கேட்கப்பட்டது? எவ்விதம் அது தோன்றியது? பாண்டவர்களுக்குப் பின்னர், நாலைந்து தலைமுறைகள் கழிந்தன. அப்போது அந்த வம்சத்தில் சதாநீகன் என்னும் அரசன் தோன்றினான். கண்ணனின் தொடர்புடைய பாண்டவ குலத்தில் அவன் பிறந்ததால், மிகவும் ஸாத்வீகனாக இருந்தான். தனது சிற்றரசர்கள் தன்னை விட வலிமை குறைவானவர்களாக இருப்பின், அவர்களை வருத்தாமல் ஆண்டு வந்தான். தனது நாட்டு மக்களுக்கு என்ன செய்வது என்று யோசித்தான். அதற்கான விடையை அறிய ஸ்ரீசௌநக முனிவரிடம் சென்றான். அவரிடம் - தங்களின் உடலைப் பேணுவதிலேயே காலத்தைக் கடத்தும் ஸம்ஸாரிகளுக்கு உய்யும் வழியானது என்ன என்று கூறவேண்டும் - என்று கேட்டான். அதற்கு அந்த முனிவர் - இது கலிகாலமாகும், பாவங்கள் அதிகமாக உள்ளதால், ப்ரபத்தி முதலானவற்றை இயற்றும் தகுதி யாருக்கும் இல்லை, ஆகவே அனைவருக்கும் பொருத்தமாக உள்ளது பகவன் நாம ஸங்கீர்த்தனமே ஆகும், இது மட்டுமே ஜீவாத்மா உய்யும் வழியாகும் - என்றார்.

வ்யாக்யானம் - அங்கு ஸ்ரீசௌநகபகவான் வக்தா, சதாநீகன் ச்ரோதா. இங்கு ஆழ்வார் வக்தா, பெரியபெருமாள் ச்ரோதா. அங்கு அஜ்ஞாத ப்ரச்நம், இங்கு ஜ்ஞாத ப்ரச்நம். ஜ்ஞாதம் ப்ரச்ந விஷயமாவானென் என்னில் கிம் ம்ருஷ்டம் ஸுதவசநம் என்கிறபடியே, ஆழ்வார் வாயாலே திருநாம வைபவத்தை அருளிச்செய்யக் கேட்கையிலுண்டான ப்ரீதியாலே.

விளக்கம் - விஷ்ணுதர்மத்தைப் பொறுத்தவரையில் ஸ்ரீசௌநக முனிவர் அதனைக் கூறினார், சதாநீகன் கேட்டான். இங்கு திருமாலையைப் பொறுத்தவரை ஆழ்வார் அருளிச்செய்தார், பெரியபெருமாள் கேட்டான். அந்த அரசன் தனக்கு ஞானமில்லாத காரணத்தினால், அறியாமை நீங்கக் கேட்டான், இங்கு அனைத்தும் அறிந்துகொண்டே பெரியபெருமாள் கேட்டான். தெரிந்த விஷயத்தையே ஏன் கேட்க வேண்டும்? கிம் ம்ருஷ்டம் ஸுதவசனம் - எது இனிமையானது என்றால் குழந்தைகளின் பேச்சே ஆகும் - என்பதற்கு ஏற்ப, தன்னுடைய குழந்தையான ஆழ்வாரின் சொற்கள் மூலமாகவே,

தன்னுடைய திருநாம மேன்மைகளைக் கேட்க ஆவல் கொண்டான்.

வ்யாக்யானம் - இன்னமும் இவ்வாழ்வாருக்கு பகவத்விஷயத்தை ப்ரகாசிப்பிக்கிற ச்ருதிகளிலும் வேதோபப்ரும்ஹணம் பண்ணின ரிஷிகளிலும், அல்லாத ஆழ்வார்களிலும் நெடுவாசியுண்டு, எங்ஙனேயென்னில் யதோ வா இமாநி பூதாநி இத்யாதி வாக்யங்களாலே ஜகஜ்ஜந்மஸ்திதிலய ஹேதுவான ஜகத்காரணவஸ்துவைச் சொல்லி, காரணந்து த்யேய என்கிறபடியே அதுவே உபாஸ்யமென்று இவ்வளவாலே த்யேயவஸ்துவைச் சொல்லி, ஸத் ப்ரஹ்ம ஆத்மா இத்யாதி ஸாமாந்யவாசி சப்தங்களுக்கு விசேஷாகாங்ஷை உண்டாகையாலே, ஸ்ருஷ்டி வாக்யகதி ஸாமாந்ய ந்யாயத்தாலே, ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் என்று விசேஷித்தது, இவ்வளவாய்த்து ச்ருதி சொல்லிற்று, வேதோபப்ரும்ஹணம் பண்ணின ரிஷிகள், அஜாயமாநோ பஹுதா விஜாயதே என்கிற ச்ருத்யுபப்ரும்ஹணமான இதிஹாஸபுராணமுகத்தாலே திருவவதாரங்களை ப்ரகாசிப்பித்தார்கள், அதில் ஸ்ரீவால்மீகி பகவான் ராமாவதாரத்திலே மண்டினான், ஸ்ரீபராசர பகவான் க்ருஷ்ணாவதாரத்திலே மண்டினான், ஸ்ரீசௌநக பகவான் அர்ச்சாவதார வைபவத்தை, தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் பஜேத் தாம் விசிந்தயேத் இத்யாதிகளிலே ப்ரகாசிப்பித்தான். ஆழ்வார்களிலே முதலாழ்வார்கள் மேன்மைக்கு எல்லையான பரத்வத்திலும், நீர்மைக்கெல்லையான திருமலையிலும் மண்டினார்கள், நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் க்ருஷ்ணாவதாரத்திலே ஊன்றியிருப்பார்கள், திருமங்கையாழ்வார் உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் மண்டினார், அர்ச்சாவதார ஸாமாந்யமுமன்றிக்கே பெரியபெருமாளையல்லது வேறு அறியாதிருப்பாரொருவராய்த்து இவர்.

விளக்கம் - பகவத்விஷயங்களை ப்ரகாசமாக உலகினருக்கு வெளிப்படுத்தும் ச்ருதிகளை விளக்கிய ரிஷிகள் மற்றும் ஆழ்வார்கள் ஆகியோரைக் காட்டிலும், இந்த ஆழ்வாருக்கு அதிகச் சிறப்பு உண்டு. எப்படி? தைத்திரீயம் - யதோ வா இமாநி பூதாநி - எந்த ஒன்றிடமிருந்து அனைத்தும் தோன்றினவோ - என்று, அனைத்து பொருள்களின் இருப்பு (ஸ்திதி) மற்றும் லயம் ஆகியவற்றின் காரணமானதும், இந்த உலகின் காரணமானதும் ஆகிய ப்ரஹ்மத்தைப் பற்றிக் கூறத் தொடங்கியது, மேலும் - காரணந்து த்யேய - அந்தக் காரண வஸ்து மட்டுமே த்யானிக்க ஏற்றது - என்று, அதனையே உபாஸனைக்கு ஏற்ற பொருளாகக் கூறியது. ஸத், ப்ரஹ்மம், ஆத்மா என்னும் பதங்கள் இட்டு, இந்தப் பதங்கள் எதனைக் குறிக்கின்றன என்று சந்தேகம் எழும்படிச் செய்தது. இந்த ஐயத்தை நீக்கும்

விதமாக மஹோபனிஷத் - ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் - நாராயணன் மட்டுமே இருந்தான் - என்று தெளிவாகக் கூறியது. இப்படியாக ச்ருதிகள் முழங்கின. புருஷஸூக்தத்தில் - அஜாயமானோ பஹுதா விஜாயதே - பிறப்பற்றவனாக உள்ளபோதிலும் பலவாகப் பிறக்கிறான் - என்று கூறிய வேதவரிக்கு ஏற்றபடியுள்ள அவனது அவதாரங்களை, பல ரிஷிகளும் இதிகாசம் மற்றும் புராணங்களில் விளக்கினர். இப்படிப்பட்ட ரிஷிகளின் ஸ்ரீவால்மீகி இராமாவதாரத்திலும், ஸ்ரீபராசரர் க்ருஷ்ணாவதாரத்திலும் ஈடுபட்டனர். ஸ்ரீசௌநகர் விஷ்ணுதர்மத்தில் - தாம் அர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் பஜேத் தாம் விசிந்தயேத் - அதனை வணங்கவும், அர்ச்சிக்கவும், பஜனம் செய்யவும், சிந்திக்கவும் கடவன் - என்று கூறியபடி, அர்ச்சாவதாரத்தின் மேன்மையை வெளிப்படுத்தினார். மேன்மைக்கு எல்லையாக உள்ள பரத்வத்தை விளக்குவதும், நீர்மைக்கு எல்லையாக உள்ள நிலையை விளக்குவதும் ஆகிய திருமலையில் முதலாழ்வார்கள் நிலைநின்றனர். நம்மாழ்வரும், பெரியாழ்வாரும் க்ருஷ்ணாவதாரத்திலேயே ஈடுபட்டு நின்றனர். எம்பெருமான் அர்ச்சையாக எங்கெல்லாம் உள்ளானோ அங்கெல்லாம் திருமங்கையாழ்வார் மனம் பறிகொடுத்தார். ஆனால், அர்ச்சாவதாரத்திலே மிகவும் சிறப்புள்ள பெரியபெருமாளிடம் மட்டுமே மனம் பறிகொடுத்து, அவனை அல்லாது வேறு எதனையும் அறியாமல் இருக்கும் சிறப்பு இந்த ஆழ்வாருக்கு மட்டுமே உள்ளது.

வ்யாக்யானம் - அர்ச்சாவதார ஸாமாந்யத்திற்காட்டில் கோயிலுக்கு ஏற்றமென் என்னில், காவேரியானது ப்ரவாஹமும் ஏகரூபமாய், ஸ்தலமும் அதுவாயிருக்கச்செய்தே தீர்த்தவிசேஷங்களிலே ரஸவிசேஷங்களுண்டாகிறாப்போலே, போக்யதாதிசயத்தால் வந்த ஏற்றம் வேறொரு இடத்துக்கு இல்லை, அல்லாதாரில் இவர்க்கு உண்டான ஏற்றம்போலே ப்ரபந்தாந்தரங்களிற்காட்டில் இப்ரபந்தத்துக்கு நெடுவாசியுண்டு, எங்ஙனே என்னில் நீராய் நிலனாய் என்று தொடங்கி, சிவனாய் அயனானாய் என்று சேதநாசேதநவாசி சப்தங்களாலே ஈச்வரனைச் சொல்லுகிற இந்த ஸாமாநாதிகரண்யத்துக்கு, அனுப்ரவேசக்ருதம் ஸாமாநாதிகரண்யம் என்று நிர்வஹிக்கவேண்டும் அருமையாதல், முனியே நான்முகனே முக்கண்ணப்பா என்று தோற்றுகிற த்ரிமூர்த்தி ஸாம்யத்தை நிர்வஹிக்கவேண்டும் அருமையாதல், இன்னமும் சப்தத்தில் அருமையாலே ஸ்வார்த்தத்தை அறிகைக்கு அருமைப்பட வேண்டுதல் செய்யும் இக்குறைகள் ஒன்றுமின்றிகே இருக்கையும், இன்னமும் - கடல் பேராழமாயிருக்கச்செய்தேயும் நீர்த்தெளிவாலே தரைதோற்றுமாபோலே, சப்தத்தின்

செவ்வாயாலே ப்ரமேயம் கனத்திருக்கச் செய்தேயும் உள்ள தடங்கத் தோற்றும்படி இருக்கையும், இன்னமும் ப்ரணவம் போலே சப்தம் அத்யல்பமாய் அர்த்தக்ரஹணம் அரிதாயிருத்தல், இவ்விரண்டு குறையுமின்றிக்கே ஒரு சேதனனுக்கு ஜ்ஞாதவ்யங்களை பரந்த சடங்குகளை சுருங்க ப்ரயோகவ்ருத்தி செய்து கொடுத்தாற்போலே ஸகலார்த்தங்களும் இப்ரபந்தத்துக்குள்ளே உண்டாகையாலும் ப்ரபந்தாந்தரங்களிற்காட்டில் இப்ரபந்தத்துக்கு நெடுவாசி உண்டு.

விளக்கம் - பல அர்ச்சாவதார ஸ்தலங்கள் உள்ளபோது, பெரியகோயிலுக்கு மட்டும் உள்ள சிறப்பு என்ன? காவேரியானது ஒரே வேகத்துடன் ஒரு ஊருக்குள் செல்லும்போது, குறிப்பிட்ட படித்துறையில் செல்வதால் விசேஷம் பெறுகிறது அல்லவா? இது போன்ற பெரியகோயிலில் உள்ள இனிமை என்பது மற்ற திவ்யதேசங்களில் இல்லை. மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் இவருக்கு உள்ள சிறப்பு போன்று, மற்ற ப்ரபந்தங்களுக்கு இல்லாத சிறப்பு, இந்தப் ப்ரபந்தத்துக்கு உண்டு. அது என்ன? திருவாய்மொழியில் (6-9-1) - நீராய் நிலனாய் என்று தொடங்கி சிவனாய் அயனானாய் என்று கூறும்போது, சேதன அசேதனங்களைக் கூறும் சொற்களின் நடுவில், அதே போன்று ஈச்வரனையும் சொல்லும்படி உள்ளது, சேதன அசேதனங்களின் அந்தர்யாமியாக இவன் உள்ளான் என்று அவற்றை முன்னிட்டே கூறும்படி உள்ளது, திருவாய்மொழி (10-10-1) - முனியே நான்முகனே முக்கண்ணப்பா - என்று கூறும்போது சாதாரண மக்கள் இதனை மூன்று மூர்த்திகளும் ஒன்று என ஆழ்வாரே கூறுகிறார் என்ற கருத்து உண்டாகி விடுகிறது, இதனால் பல ப்ரமாணங்களைக் கொண்டு, அந்தப் பாசுரத்தில் மற்ற இரண்டு மூர்த்திகளுடன் கூறப்பட்ட விஷ்ணுவை நாராயணனின் அவதாரமே என்று நிரூபிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த விஷயங்களின் உட்பொருள்கள் பல பாமரர்களுக்கு விளங்குவதும் சிரமமாக உள்ளது. இவற்றைப் போன்ற குறைகள் இந்தப் ப்ரபந்தத்துக்கு ஏதும் இல்லை. கடலானது ஒரு சில இடங்களில் மிகவும் ஆழமாக உள்ளபோதிலும், அந்த இடங்களில் உள்ள நீரானது தெளிவாக இருந்தான் தரை தெரிவதைக் காணலாம். இது போன்று திருமாலையில் உள்ள சொற்கள் கம்பீரமாக உள்ளபோதிலும், அவற்றின் அர்த்தங்கள் மிகவும் எளிமையாக, அனைவரும் உணரும்படி உள்ளன. மேலும் ஓர் உதாரணம் - ப்ரணவம் என்பது கற்பதற்கு மிகவும் சுருக்கமாக உள்ளபோதிலும், அதன் பொருளை உனற்வது மிகவும் கடினமாக உள்ளது, இதே போன்று மஹாபாரதம் மிகவும் பெரியதாக உள்ளபோதிலும், அதன் தத்துவம் அறியக் கடினமாக உள்ளது. இவை போன்று

சுருக்கமாகவும், விரிவாகவும் உள்ளது என்னும் தோஷம் இல்லாமக் திருமாலை காணப்படுகிறது. ஒரு சேதனனுக்கு, அவன் அறிந்து கொள்ளவேண்டிய பல விஷயங்களை, சில சாஸ்த்ரங்கள் சுருக்கமாகக் கொடுப்பது போன்று, பல விசேஷ அர்த்தங்கள் இந்தப் ப்ரபந்தத்தில் உண்டு. மேற்கூறிய பல காரணங்களால் இந்தப் ப்ரபந்தத்துக்கு மற்ற ப்ரபந்தங்களைக் காட்டிலும் மேன்மை மிகவுண்டு.

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான அவதாரிகை ஸம்பூர்ணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான தொடக்கம்

1. காவல் இல் புலனை வைத்துக் கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து

நாவலிட்டு உழி தருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே

மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வ நின் நாமம் கற்ற

ஆவலிப்புடைமை கண்டாய் அரங்க மாநகர் உளானே

பொருள் - திருவரங்கம் என்னும் மிகப்பெரிய திருநகரில் கண்வளர்பவனே! அழகியமணவாளா! ப்ரளயத்தின்போது அனைத்து உலகங்களையும் திருவயிற்றிலே பத்திரமாக வைத்துக் காத்து, ஸ்ருஷ்டி காலத்தில் அவற்றை மீண்டும் வெளியில் வைத்தவனே. அனைத்திற்கும் காரணமாக உள்ளவனே. உன்னுடைய திருநாமத்தை நாங்கள் கற்றுள்ளோம் என்னும் கர்வத்தால் நிகழ்வது என்ன? எங்கள் புலன்கள் நாங்கள், எங்களது கட்டுப்பாட்டில் வைக்காமல், அவற்றின் போக்கில்

அலையவிட்டோம். அதனால் பாவங்கள் சூழ்ந்தபோதிலும், உன்னுடைய திருநாமத்தின் மேன்மையால் அவற்றை உதறினோம். இந்த வெற்றியைக் கொண்டாட, யமனின் தூதர்களின் தலைகளின் மீது நடனமாடியபடி உள்ளோம்.

அவதாரிகை - திருநாமம் யமவச்யத்தையைத் தவிர்த்துத் தரும் என்று இதினுடைய பாவநத்வத்தையும், திருநாமம் கற்றாருடைய ராஜகுலமஹாத்ம்யத்தையும் சொல்லுகிறது.

விளக்கம் - பெரியபெருமாளின் திருநாமம் என்பது யமனுக்கு வசப்படுவதைத் தவிர்க்கும் என்று கூறுவதன் மூலம் அதன் மேன்மையை விளக்குகிறார். மேலும் அந்தத் திருநாமத்தைக் கற்றவர்கள் அரசகுலத்தின் பெருமையை ஒத்த பெருமை அடைவார்கள் என்றும் கூறுகிறார்.

வ்யாக்யானம் - (காவலில் புலனை வைத்து) - காவலில்லாதபடி இந்த்ரியங்களை வைத்து. அதாகிறது, மேல்சொல்லுகிற லாபங்களுக்கு அனுகூலமாகச் செய்ததொன்றில்லை என்கையும், அவ்வளவேயன்றிக்கே, ந்ருபசு என்னும்படியே விஷயப்ராவண்யங்களில் நியதியின்றிக்கே போந்தபடியும், விஹிதங்களை அனுஷ்டித்தல், நிஷித்தங்களைக் கைவிடுதல் செய்யாதவன் என்கை. இதுக்கு அடியாகக் கொண்டு இழிந்த ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலும், ராகாதிபிரநிர்ஜிதை என்று அஜிதேந்த்ரியரானவர்களுக்கும் பகவத்ப்ராப்த்யுபாயமேது என்றிறே கேட்டது. ஆக இப்படிச் சேதனன் தான் மூலையடியே திரிந்தாலும் அவன் தோஷங்களைப் போக்கி, மேல் சொல்லுகிற நன்மைகளைக் கொடுக்கும்படியாய்த்துத் திருநாமத்தினுடைய ப்ரபாவமிருப்பது. ஒருவன் விஷதஷ்டனானால், விஷவித்யையில் குசலனாயிருப்பானொருவன் - நீ சுகமே எண்ணெய் வார்க்கவுமாம், குளிக்கவுமாம், உறங்கவுமாம், ஸ்வைரஸஞ்சாரம் பண்ணவும் அமையும், நான் அழகிதாகப் போக்கித் தருகிறேன் - என்னுமிறே. அப்படியேயாய்த்து ஸம்ஸார விஷதஷ்டனைக் குறித்து திருநாம ப்ரபாவமிருப்பது.

விளக்கம் - எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாதபடி புலன்களை வைத்து. இனி வரப்போகும் பாசுரங்களில், தான் இவன் மூலமாகப் பெற்ற பயன்களுக்கு உபாயமாக எதனையும் செய்யவில்லை என்று கூற உள்ளார், ஸ்தோத்ர ரத்னம் (58) - ந்ருபசு - மனித

வடிவம் கொண்ட பசு - என்பதற்கு ஏற்ப விலங்குகள் போன்று எந்தக் கட்டுப்பாடும் இன்றி விஷயங்களில் ஈடுபடும் நிலையில் உள்ளதாகக் கூறுகிறார், சாஸ்த்ரங்கள் விதிப்பதைச் செய்யாமலும், தடுப்பதைச் செய்தபடியும் தாம் இருப்பதாகக் கூறுகிறார். இந்தப் ப்ரபந்தத்தின் கருத்துகளுக்கு ஆதாரமாக உள்ள விஷ்ணுதர்மம் - ராகாதிபிரநிர்ஜிதை - வெல்லப்படாமல் உள்ள மனம் யோகங்களுக்கு தகுதி பெறாதது - என்று கூறியது. இதன் மூலம் - புலன்களி வெல்ல இயலாமல் உள்ளவர்கள் பகவானை அடையும் உபாயம் என்ன - என்று கேட்கப்பட்டது. இவ்விதம் சேதனன் உலக விஷயங்களில் சிக்குண்டு, அதிலேயே மூழ்கியபடி இருந்தாலும், அவனுடைய தோஷங்களை நீக்கி, இந்தப் ப்ரபந்தத்தில் கூற உள்ள பல நன்மைகளையும் அளிக்கவல்ல மேன்மைகள் உள்ளது பெரியபெருமாளின் திருநாமம் ஆகும். ஒருவன் விஷம் நிறைந்த பூச்சியால் கடிக்கப்பட்டான் என்று வைத்துக் கொள்வோம். அவன் விஷத்தைப் போக்கவல்ல ஒருவனை அணுகும்போது, அந்த வைத்தியன் - உனது விருப்பப்படி நீ எண்ணெய் தேய்த்து நீராடலாம், உறங்கலாம், எதனையும் அனுபவிக்கலாம், இந்த விஷத்தை நான் நீக்கிவிடுகிறேன் - என்பான் அல்லவா? ஸம்ஸாரம் என்னும் விஷத்தால் பீடிக்கப்பட்ட ஒருவனுக்கு இந்தத் திருநாமம் செய்யும் நன்மையும் இது போன்றே ஆகும்.

வ்யாக்யானம் - வைத்து என்கிற இது, புத்திபூர்வகமாக அநீதியிலே மூட்டிப்போந்தேன் என்கை. காவல் இல்லாதபடி என்றால் சப்தம் வசிக்குமோ என்னில், மீமாம்ஸகர் சப்தத்தை நியமித்தாகிலும் அர்த்தத்தை முக்யமாகக் கொள்ளுமாபோலே, இங்கும் அர்த்தகௌரவத்தாலே சப்தத்தை நியமித்துச் சொல்லுகிறோம். அங்ஙனன்றியே, காவலில் புலனை வைத்து என்னவுமாம். அந்தப் பக்ஷத்திலே இது ஸாதநகோடியிலே புகக்கடவது. அதாவது இதர விஷயங்களிலே மண்டித் திரிந்த இந்த்ரியங்களை, திருநாமத்தை அண்டைகொண்ட பலத்தாலே சிறையிலே வைத்தபடி, அராஜகமாய்க் கிடந்த காலம் குறும்பு செய்தாரை, ராஜகீயமானவாறே, ராஜாவை அண்டைகொண்டு சிறையிலே வைக்குமாபோலே. அதவா அப்ராப்த விஷயங்களிலே மண்டித் திரிந்த இந்த்ரியங்களை ப்ராப்த விஷயங்களிலே மூட்டினேன் என்னவுமாம். பும்ஸாம் த்ருஷ்டிசித்த அபஹாரிணம் என்னும்படியான விஷயமாகையாலே அப்ராப்த விஷயங்களில் போகாதபடி தன்பக்கலிலே ஆக்கிக் கொள்ளவல்ல வயிரவுருக்கான

விஷயமிறே.

விளக்கம் - பாசுரத்தில் உள்ள வைத்து என்னும் பதம், தவறு என்று அறிந்தபோதிலும் தவறான செயல்களில் ஈடுபட்டு வந்ததைக் கூறியது. காவலில் என்று உள்ள பதமானது - காவல் இல்லாதபடி - என்று பொருள் தருமா என்ற கேள்வி எழலாம். மீமாம்ஸகர்கள் சொல்லுக்கு ஏற்ற வடிவம் இல்லையென்றாலும், பொருளின் முக்கியம் கருதி ஏற்பது போன்று, திருநாமத்தின் வைபவம் கருதி இங்கு இப்படியே பொருள் கொள்வதில் தவறில்லை. இவ்விதம் கொள்ளாமல், புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்து - என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விதம் பொருள் கொண்டால் - இவர் தனது புலன்களை ஸாதனங்கள் செய்து கட்டுப்படுத்தவில்லை, திருநாமத்தின் பலனால் ஆகும் - என எடுத்துக் கொள்ளவேண்டும். இதன் மூலம் - உலக விஷயங்கள் பலவற்றிலும் சுற்றித் திரிந்த தனது புலன்களை, திருநாமத்தின் உதவியுடன் வெற்றி கொண்டு, சிறையில் அடைத்தார் - என்று கருத்து. ஒரு நாட்டில் அரசன் இல்லாதபோது தவறு செய்தவர்களை, அரசன் மீண்டும் வந்த பின்னர் சிறையில் அடைப்பான். இது போன்று, தவறான விஷயங்களில் திரிந்த தனது இந்த்ரியங்களை, பகவத் விஷயத்தில் ஈடுபடுத்தினேன் என்றார். இராமாயணம் அயோத்யா காண்டத்தில் - பும்ஸாம் த்ருஷ்டி சித்தா அபஹாரிணாம் - ஆண்களின் கண்கள், சிந்தனை ஆகியவற்றைக்கூட இராமன் அபகரித்தான் - என்று கூறப்பட்டது அல்லவா? இப்படியாக பகவத் விஷயம் உயர்வாக உள்ளதால், புலன்கள் மற்ற விஷயங்களில் அலைமோதாமல் தடுத்து, தன் பக்கம் இழுப்பதற்கு ஏற்றபடி பகவத் விஷயம் உள்ளது.

வ்யாக்யானம் - (கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து) - அஜிதேந்த்ரியத்வத்துக்கு அடியான பாபராசியை வாஸனையோடே போக்கி. தன்னை என்றது த்ருஷ்டத்தில் விஷயப்ராவண்யஹேது, அத்ருஷ்டத்தில் நரகஹேது, பகவத் வைமுக்யஹேது, தேஹாத்மாபிமாந ஹேது. இன்னமும் அநர்த்தங்களுக்கு அடியான கனத்தை நினைத்து என்னை நியமித்துப் போந்தது தன்னையே, நான் இப்போது நியமித்தேன் என்கை. கடக்க என்றது அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரிலே ஒருவன் என்னலாம்படியிருக்கை. அதாகிறது வந்து கழிந்தது என்று தோற்றாதபடியிருக்கை. கலி என்றது

காலபரமானபோது க்ருதயுக புருஷர்களிலே ஒருவன் என்று சொல்லலாம்படியிருக்கை. திருவடி ஸமுத்ரதரணம் பண்ணினாற்போலே இவர் பாபஸமுத்ரத்தைக் கடக்க வல்லவரானார்.

விளக்கம் - (கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து) - தன்னுடைய புலன்களை தன்வயப்படுத்தியபோதிலும், அவற்றை மீண்டும் பாவங்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய பாவங்களை நீக்கிவிட்டேன் என்றார். தன்னை என்ற பதம் மூலம் கூறப்படுவது - பாவங்களின் மூலம் உலக விஷயங்களில் நாட்டம் ஏற்படுகிறது, நரகத்தை உண்டாக்குகிறது, எம்பெருமானிடமிருந்து விலகச் செய்கிறது, உடலே ஆத்மா என்ற எண்ணம் உண்டாகச் செய்கிறது, மேலும் பல தீமைகளை ஏற்படுத்துகிறது - என்பதாகும். இதனையே தன்னை என்ற பதம் மூலம் கூறினார் எனலாம். அல்லது தன்னை என்ற பதம் மூலம் - என்னை இதுவரை கட்டுப்படுத்தி வந்த பாவங்களை நான் இப்போது கட்டுப்படுத்தினேன் - என்று கூறுவதாகவும் கொள்ளலாம். கடக்க என்ற பதம் மூலம் - இந்த ஆழ்வார் ஒரு காலத்தில் ஸம்ஸாரத்தில் ஒருவராக இருந்தார், இப்போது இல்லை - என்று பலரும் கூறும்படி உள்ள நிலை கூறப்பட்டது. கலி என்ற பதம் மூலம் கலி காலம் என்பதைக் கூறவில்லை எனக்கொண்டால், தான் பாவங்களே இல்லாத க்ருத யுகத்தைச் சேர்ந்தவன் என்ற பொருள் வருமாறு கூறியதாகவும் கொள்ளலாம். அனுமன் மிகவும் எளிதாக கடலைக் கடந்தது போன்று, இவர் பெரியபெருமாளின் திருநாமம் காரணமாகப் பாவம் என்னும் கடலை எளிதாகக் கடந்தேன் என்றார்.

வ்யாக்யானம் - நின்னாமங்கற்ற என்று திருநாம வைபவத்தாலே வந்த இத்தைத் தந்தலையாலே வந்ததாகச் சொல்லுவானென் என்னில், திருநாமத்துக்குள்ளதொரு ஸ்வபாவமாய்த்து இது. இராமடமூட்டுவாரைப்போலே முகம் தோற்றாமே நின்று உபகரிக்கையாலே, இவன் தானே செய்துகொண்டானாக அபிமாநிக்கலாம்படியிருக்கும். இனி, பலம் தன்னதாகையாலே பாய்ந்து என்னத் தட்டில்லை. தாம் தேஹ ஹம்ஸ்ருஷ்டராயிருக்கச் செய்தேயும், இத்தை கடந்து என்னலாம்படியிறே பெரியபெருமாள் இவரை விஷயீகரித்தது.

விளக்கம் - நின் நாமம் கற்ற என்று திருநாமத்தின் பெருமையால் பாவம் என்னும் பெருங்கடலைக் கடந்ததாகக் கூறிவிட்டு, தானே அதனைக் கடந்ததாக ஏன் கூறவேண்டும்? இது திருநாமத்தின் பெருமையாகும். வீட்டில் கோபித்துக் கொண்டு சத்திரம் ஒன்றில் தங்கும் பிள்ளைக்கு, அந்தச் சத்திர உரிமையாளர் மூலம், அவனது தாய் உணவு அளிக்கிறாள். இது தெரியாமல், அந்தப் பிள்ளை தன்னுடைய முயற்சி காரணமாக உணவு கிட்டியதாக எண்ணுகிறான். இது போன்றே திருநாமத்தின் மேன்மையால் ஒருவனின் பாவங்கள் நீங்கியிருக்க, அவன் தன்னுடைய முயற்சியால் நீங்கியதாக எண்ணுவது இயல்பே ஆகும். அதனால் தான் பாவங்களை பாய்ந்து கடந்ததாகக் கூறுவதில் தவறில்லை. இந்த உடலுடன் உள்ளபோதும், பாவங்களைக் கடந்து விட்டதாக இவர் கூறும் அளவிற்கு, பெரியபெருமாள் இவரை ஆட்கொண்டான்.

வ்யாக்யானம் - (நாவலிட்டுழிதருகின்றோம் நமன் தமர் தலைகள் மீதே) - பாப பலத்தை அனுபவிக்கும் யமனுடைய தலையிலும், அவன் மணாட்டி தலையிலும் அடியிட்டு ஸஞ்சரியா நின்றோம், நலிந்து போந்த யமபடரை ஒருபேரையிட்டுத் துகைக்கிறார் காணும். நாவலோ நாவல் என்றும், அறையோவறை என்றும் தோற்றவர்கள் முன்னே ஜயித்தவர்கள் சொல்லும் சொல்லு. முன்பே யமாதிகள் பேர் கேட்க அஞ்சிக் கிடந்தவர், திருநாமத்தை அண்டை கொண்ட பலத்தாலே யமன் வாசலிலே சென்று அறை கூவுகிறார் இப்போது. வாலி பேர் கேட்க அஞ்சி, சுரமடைந்து கிடந்த மஹாராஜர், பெருமாளை அண்டை கொண்ட பலத்தாலே கிஷ்கிந்தா த்வாரத்திலே சென்று அறை கூவினாற்போலே, அங்கு நாமிபலம், இங்கு நாம பலம்.

விளக்கம் - (நாவல் இட்டு உழி தருகின்றோம் நமர் தமர் தலைகள் மீதே) - பாவங்களின் பலனை அளிக்கவல்ல யமனின் தலை, அவன் மனைவியின் தலை போன்றவற்றில் பயம் இன்றி உலவுகிறோம். தன்னை துன்பத்தில் ஆழ்த்தவந்த யமதூதர்களை திருநாமத்தின் மூலம் துகைக்கிறார். நாவலோ நாவல், அறையோ அறை என்று வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்கள் முன்பாகக் கூறுவது வழக்கமாகும். முன்பு யமனின் பெயரைக் கேட்டாலே அச்சம் கொள்ளும் இவர், இப்போது அவன் பட்டணத்தின் வாசலில் நின்று முழங்குகிறார். வாலியின் பேரைக் கேட்டவுடன் அச்சம் கொண்டு, ஜுரம் கொள்ளும்

சுக்ரீவன், இராமனை அண்டி, அவன் பலத்தாலே கிஷ்கிந்தாவிற்குச் சென்று அறைகூவல் விடுத்தது போன்று இவர் செய்கையும் உள்ளது. அங்கு திருநாமத்தைக் கொண்ட நாமியாகிய இராமன் அருகில் இருந்த பலம், இங்கு நாமியாகிய இராமனைவிட உயர்ந்த அவன் திருநாமம் உள்ள பலம்.

வ்யாக்யானம் - உழிதருகின்றோம் என்றது, தம் மிடுக்குத்தோற்ற நின்று நிர்ப்யஸஞ்சாரம் பண்ணுகிறபடி. பாபத்துக்கு நீ எழுதிவைத்த பட்டோலையைக் கொண்டுவரவில்லையாகில் புறப்படாய் என்றாற்போலே இருக்கிறதாய்த்து. உழிதருகின்றோம் என்கிற பஹுவசநத்தாலே, திருநாமம் ரஸிக்க வாயிலே பட்டவாறே, இவர் சதசாதகமாகப் பனைத்தபடி. அதவா, இதின் இயலை அப்யஸித்து இதில் அத்வேஷமுடையாரையும் கூட்டிக்கொள்ளுகிறாய்த்து. ஸமுத்ரலங்கநம் முதலாக லங்கையிலுண்டான பராக்ரமமெல்லாம் திருவடிதான் ஒருவனுமே செய்தானாயிருக்க, பிராட்டியைக்கண்ட ப்ரீதிக்கு போக்குவீடாக மதுவநமழிக்கிற பலத்திலே எல்லா முதலிகளுக்கும் அந்வயமுண்டானாற்போலே, ஒருத்தனுக்கு ராஜகுலஸம்பந்தம் உண்டானால் அவன் பந்துக்களும், அவனை என்னென்றாரும் அடங்க வாழக்கடவதிறே. அவ்வளவும் இல்லையாகிறதன்றே பகவத்ஸம்பந்தத்துக்கு.

விளக்கம் - உழிதருகின்றோம் என்னும் பதமானது, தன்னுடைய வலிமை வெளிப்படும்படியாக, சிறிதும் பயம் இன்றி செல்வதைக் கூறியது. யமனிடம் - எங்களது பாவக்கணக்கு அனைத்தையும் நீ எழுதியிருப்பாய், அவற்றை உனக்கு சாமர்த்தியம் இருந்தால் எங்கள் முன்பு கொண்டுவா - என்று கூறுவதாக உள்ளது. உழிதருகின்றோம் என்று பன்மையில் கூறுவதன் மூலம், திருநாமத்தின் இனிமையை இவர் ஞாறு மடங்காக அனுபவித்ததைக் கூறுகிறார். அல்லது இதில் இவருடன் பலரும் ஈடுபட்டனர் என்று கூறுவதாகவும் கொள்ளலாம். அனுமன் மட்டுமே கடலைக் கடந்து சென்று, சீதையைக் கண்ட மகிழ்ச்சியில் மதுவனத்தை அழித்தான் என்றபோதிலும், வானரங்கள் அனைத்தும் செய்ததாகவே கொள்வார்கள், ஒருவனுக்கு அரசனுடன் நட்பு உண்டானால், அவனுடன் சேர்ந்து அவனது பந்துக்களும் நண்பர்களும் வாழ்வர் என்றே கொள்ளவேண்டும். இது போன்றே, இவர் திருநாமத்தின் மேன்மை கற்றதனால், மற்றவர்களுக்கும் மேன்மை

ஏற்படுகிறது என்று கூறும் அளவிற்கு பகவத் ஸம்பந்த மேன்மை உள்ளது.

வ்யாக்யானம் - உழிதருகின்றோம் என்று பலரையும் கூட்டிக் கொள்ளுமாகையாலே, இவர்களுக்கெல்லாம் ஸஞ்சாரஸ்தலம் வேணுமென்று அவன் பரிகரத்தையும் கூட்டிக்கொள்ளுகிறார். லோகத்திலே பாபம் பண்ணினார் தத்பலானுபவத்துக்கு அஞ்சி, யமன் பேரிடுவார். அவனுடைய லேககன் பேரிடுவாராய், யமம் தர்ப்பயாமி, சித்ரகுப்தம் தர்ப்பயாமி என்று ஆராதியா நிற்க, திருநாமத்தை அண்டை கொண்ட பலத்தாலே அவர்கள் தலையிலே அடியிடுகிறோம் என்கிறாரிறே இவர், தம்மைக் கீழ் நலிந்த யமாதிகளை இப்போது ஒரு பேரையிட்டுத் துகைக்கிறார் காணும், இவர் தமக்கு விஜயமாகச் சொல்லுகிறாரித்தனை போக்கி, அவன்தான் தன் தலைகண்டது திருநாமங்கற்றார் திருவடிகளிலே வணங்கவென்றாய்த்து இருப்பது. ப்ரணாமம் யே அபிகுர்வந்தி தேஷாம் அபி நமோ நம என்னக்கடவதிறே.

விளக்கம் - உழிதருகின்றோம் என்று பலரையும் சேர்த்துச் சொல்லுகிறார். ஆக அனைவரும் உலவ இடம் வேண்டும் என்பதால், நமன்தமர் என்று யமனின் தூதர்களையும் கூறினார். இந்த உலகில் பாவம் செய்தவர்கள் - பாவங்களின் பலனுக்கு அஞ்சி, தங்களது பிள்ளைகளுக்கு யமனின் பெயரைச் சூட்டுவது, அவனுடைய கணக்கை சரிபார்க்கும் சித்ரகுப்தனின் பெயரைச் சூட்டுவது, யமன் தர்ப்பயாமி-சித்ரகுப்தன் தர்ப்பயாமி என்று கூறுவது - போன்றவற்றை நாம் காணலாம். ஆனால் திருநாமத்தின் துணை காரணமாக இவர், அவர்களின் தலைகள் மீதே நடக்கிறோம் என்றார். இத்தனை காலம் தன்னை துன்பம் செய்த யமனையும் அவன் தூதர்களையும் எவ்விதம் வாட்டுகிறார் பாருங்கள். இங்கு ஆழ்வார் தன்னுடைய வெற்றியாக இதனைக் கூறியபோதிலும், யமன் தன்னுடைய தலையானது பெரியபெருமாளின் அடியார்களின் திருவடிகளின் கீழ் வணங்கியபடி உள்ளதைப் பெரிதாக எண்ணுவான் என்பது கருத்து. விஷ்ணுதர்மத்தில் - ப்ரணாமம் யே அபி குர்வந்தி தேஷாம் அபி நமோ நம - யார் ஒருவன் விஷ்ணுவை நமஸ்காரம் செய்கிறானோ, அவனுக்கு என் நமஸ்காரம் - என்று யமன் கூறினான் அல்லவோ?

வ்யாக்யானம் - ஸ்வபுருஷமிவீக்ஷ்ய பாசஹஸ்தம் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் என்றது கேவலம் தேஹபோஷணபரராய் இருப்பார்க்குக்காண் நான் நிர்வாஹகனாயிருப்பது, மற்றைப்படியே வைஷ்ணவர்கள் எனக்கு நிர்வாஹகராய்க்காண் இருப்பர் என்றபடி. திறம்பேன்மின் கண்டீர் இறைஞ்சியும் சாதுவராய்ப் போதுமின்களென்றான் இவர்களைக் கண்டால் அனுகூலவ்ருத்திகளைப் பண்ணி தாந்தராய்ப்போருங்கோள் என்கிறான். இப்படித் தானும் பயப்பட்டுத் தன் படரையும் நியமித்துக்கொண்டிறே யமனிருப்பது.

விளக்கம் - விஷ்ணு புராணம் - ஸ்வபுருஷமிவீக்ஷ்ய பாசஹஸ்தம் ... ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் - பாசக்கயிற்றுடன் நிற்கும் தன்னுடைய தூதர்களிடம் யமன் கூறுயது, நான் மற்றவர்களுக்கு மட்டுமே ப்ரபு ஆவேன், வைஷ்ணவர்களுக்கு அல்ல - என்றான். இப்படியாக, தன்னுடைய உடலை வளர்ப்பவர்களுக்கு மட்டுமே தான் எஜமானன் என்றும், வைஷ்ணவர்கள் தனக்கு எஜமானர்கள் என்றும் யமன் கூறியது காண்க. நான்முகன் திருவந்தாதியில் (68) - திறம்பேன்மின் கண்டீர் - என்பதில் - வைஷ்ணவர்களைக் கண்டவுடன் அவர்களுக்கு நமஸ்காரம் செய்து விலகுவீர்களாக - என்று யமன் கூறியதாக ஆழ்வார் அருளிச் செய்தது காண்க. இப்படியாக தானும் வைஷ்ணவர்களைக் கண்டு பயப்பட்டு, தன்னுடைய தூதர்களையும் அவ்விதமே இருக்கும்படி ஆணை பிறப்பிக்கும் நிலை திருநாமத்தின் மேன்மையால் வந்தது.

வ்யாக்யானம் - லோகமடங்க யமபடபீதராயிருக்க, "நமன்றமர் தலைகள் மீதே நாவலிட்டுழிதருகின்றோம்" என்கைக்கு வந்த தன்னேற்றமென் என்று பெரியபெருமாள் திருவுள்ளமாக, (மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ) என்கிறார். ப்ராதேசிகனைப் பற்றினேனாகிலன்றோ அவனுக்கு அஞ்சவேண்டுவது; ப்ரளயாபத்திலே ஸகலலோகங்களையும் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்து, அங்கிருந்து நெருக்குண்ணாதபடி வெளிநாடு காணப் புறப்பட்டுவிட்ட ஜகத்காரண பூதனானவனே; ப்ரளயாபத்திலும் ஸ்ருஷ்டி வேளையிலும் அந்த யமாதிகளோடு என்னோடு வாசியற ஸர்வ நிர்வாஹகனானவனல்லையோ?

விளக்கம் – தனக்கு யமனிடமும், யமனின் தூதர்களிடமும் எந்தப் பயமும் இல்லை என்று ஆழ்வார் கூறியதைக் கேட்ட பெரியபெருமாள் வியந்தான். அவன் ஆழ்வாரிடம், "இந்த உலகில் உள்ளவர்கள் அனைவரும் யமனின் தூதர்களைப் பற்றி நினைத்தவுடன் அச்சம் கொள்கின்றனர். இப்படி உள்ளபோது நீவிர் மட்டும் எவ்விதம் - நமன்றமர் தலைகள் மீதே நாவலிட்டுழி தருகின்றோம் – என்று முழங்கினீர்? இவ்விதம் கூறுவதற்கு உமக்கு ஏற்பட்ட மேன்மை என்ன?", என்றான். (மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வ) – இதற்கு ஆழ்வார் பெரியபெருமாளிடம், "எனக்கு ஆதரவாக ஒரு சாதாரணமானவனைப் பற்றியிருந்தால் யமனுக்கும், அவனுடைய தூதர்களுக்கும் அஞ்சவேண்டும். ஆனால் நான் பற்றியது அப்படிப்பட்டவன் அல்லவே! ப்ரளயத்தின்போது உண்டான மிகப் பெரிய ஆபத்து காலத்தில், அனைத்து உலகங்களையும் தனது திருவயிற்றில் வைத்துப் பாதுகாத்து, அவை நீண்டகாலம் அங்கு இருந்தால் நெருக்கத்தில் துன்பம் கொள்ளும் என்று பரிதாபப்பட்டு, ஸ்ருஷ்டி காலத்தில் மீண்டும் வெளிப்படுத்திய உன்னை அல்லவோ பற்றினேன்? இந்த உலகின் காரணமானவனே! ப்ரளய காலம், ஸ்ருஷ்டி காலம் போன்ற அனைத்திலும், என்னையும் யமனின் தூதர்களையும் எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல் காத்தவன் அல்லவோ? அனைத்தையும் நிர்வாகம் செய்பவன் நீ அல்லவோ?", என்றார்.

வ்யாக்யானம் - "நம்மைப்பற்றி உமக்கு இந்த நன்மையெல்லாம் உண்டாய்த்தென்கிறீரோ?" என்ன, உன் அருகு வந்திலேன். (நின்னாமங்கற்ற ஆவலிப்பு) – உன் திருநாமத்தைக் கற்ற பலமென்னுதல்; கர்வமென்னுதல். "நின்னாமம்" என்றது, ஓராயிரமாய் உலகேழளிக்கும் பேரன்றோ; தேவரீரைப் போலேயோ திருநாமம்? கட்டிப் பொன்னுக்கும் பணிப்பொன்னுக்கும் உள்ள வாசிபோராதோ தேவரீருக்கும் திருநாமத்துக்கும்; மறுவலிடும் ப்ரளயாபத்திலன்றோ தேவரீர் எடுத்தது, ஸம்ஸார ப்ரளயத்தில் நின்றும் எடுக்கும்போது தேவர் திருநாமம் வேண்டாவோ? நீளரவைச் சுற்றிக் கடைந்தான் பெயரன்றே தொல்நரகைப் பற்றிக் கடத்தும் படை, மந்த்ரம் என்னாதொழிந்தது – காலநியமமென்ன, அதிகாரி நியமமென்ன, இவை தொடக்கமானவை வாராமைக்காக. இடறினவன் அம்மே என்னும்போது ஒரு சடங்கு வேண்டாவிறே.

விளக்கம் – இதனைக் கேட்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "ஆக, இத்தகைய நன்மைகள் உமக்கு என்னால் விளைந்தது என்று கூறுகிறீர்கள் அல்லவோ?", என்றான். அதற்கு ஆழ்வார், "உன் அருகில் நான் வரவில்லையே. எனக்கு இந்த நன்மைகள் எப்படி வந்தது என்றால்", என்று கூறத் தொடங்குகிறார். (நின்நாமம் கற்ற ஆவலிப்பு) – உம்முடைய திருநாமத்தைக் கற்ற பலம் மூலமாகவே இந்த நன்மைகளை நான் பெற்றேன். அல்லது திருநாமம் கற்ற கர்வம் எனலாம். உனது திருநாமம் உன் போல் அல்ல. திருவாய்மொழி (9-3-1) கூறுவது போன்று - ஓராயிரமாய் உலகேழளிக்கும் பேர் – உன்னைப் போன்று ஆயிரம் மடங்கு காக்கும் திறன் பெற்றது அல்லவோ? ஆபரணமாக இல்லாமல், வெறுமனே உள்ள பொன் போன்று நீவிர் உள்ளீர்; ஆனால் உனது திருநாமம் அணிந்து மகிழக்கூடிய ஆபரணம் போன்று அல்லவா உள்ளது? ஒவ்வொரு காலகட்டத்திலும் உண்டாகும் ப்ரளய ஆபத்திலிருந்து நீவிர் காப்பாற்றுகிறீர். ஆனால் உமது திருநாமம் மீண்டும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பாத அளவிற்குக் காப்பாற்றுகிறதே! இதனையே பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் (81) - நீளரவைச் சுற்றிக் கடைந்தான் பெயரன்றே தொல்நரகைப் பற்றிக் கடத்தும் படை – என்றார் அல்லவோ? மந்த்ரம் என்று கூறாமல் நாமம் என்றது ஏன்? மந்த்ரம் என்றால் இந்தக் காலத்தில்தான் உச்சரிக்கவேண்டும், இன்னவர்தான் உச்சரிக்கவேண்டும் போன்ற வரம்புகள் உள்ளன. இவை நாம சங்கீர்த்தனத்திற்குக் கிடையாது. தடுக்கு விழும் ஒருவன் "அம்மா" என்று அலற, விதிமுறைகள் வைக்க இயலுமோ?

வ்யாக்யானம் - நஞ்ஜீயர், "அப்ரயதனாய்க் கொண்டு திருநாமம் சொல்லலாமோ, ஆகாதோ?" என்று பட்டரைக் கேட்க, "கங்கா ஸ்நாநம் பண்ணப் போமவனுக்கு உவர்க்குழியிலே தோய்ந்து போகவேணுமோ? மேலுண்டான நன்மைகளைப் பண்ணிக் கொடுக்கவற்றானது கீழுள்ள அசுக்தியைப் போக்கமாட்டாதோ?" என்று அருளிச்செய்தார். வாயாலே திருநாமம் சொல்லுகைக்கு ஆகாதாரில்லை; மாத்ருகாதுகனுக்கும் கைசலித்தால் அம்மே என்ன ப்ராப்தி உண்டாயிறேயிருப்பது. கற்ற என்றது, ஆசார்யோச்சாரணாநூச்சாரண க்ரமத்தாலே வந்ததாயிருக்கை. பெரியபெருமாள் சொல்லுவிக்க, அநந்தரம் சொன்னவராய்த்து இவர். (கற்ற) – என்றது ஸார்த்தமாகவன்றிக்கே சப்தமாத்ரத்தை அப்யஸிக்கை.

விளக்கம் – நஞ்ஜீயர் பட்டரிடம், "பெரியபெருமாளின் திருநாமத்தை நீராடாமல் இருந்துகொண்டு கூறலாமா அல்லது நீராடிய பின்னரே கூறவேண்டுமா?", என்று கேட்டார். இதற்குப் பட்டர், "கங்கையில் நீராடச் செல்லும் ஒருவன், அங்கு நீராடுவதற்கு முன்பாக, அருகில் உள்ள உப்புநீர் நிரம்பிய குளத்தில் முதலில் தன்னைச் சுத்தம் செய்து கொள்ளவேண்டுமா என்ன? பல நன்மைகளை அளிக்கவல்ல திருநாமம், உடலின் அசுத்தத்தை நீக்காதோ?", என்று அருளிச் செய்தார். ஆக வாயால் திருநாமம் கூறுவதற்குத் தகுதியில்லாதவன் என்று யாரும் கிடையாது என்பது புலப்படுகிறது. தன்னுடைய தாயையே அடிக்கும் ஒருவன், தனது கை வலிக்கும்போது, "அம்மா", என்று அழைக்கத் தடை இல்லையே! கற்ற என்னும் பதம் மூலம், தன்னுடைய ஆசார்யன் கூறியதைத் தான் மீண்டும் கூறியதைச் சொல்கிறார். ஆசார்யன் யார் என்றால், பெரியபெருமாள் கூறியதை, இவர் மீண்டும் கூறியதால், அவனே இவரது ஆசார்யனாகிறான். (கற்ற) – திருநாமத்தின் பொருளைக் கூட அறியவேண்டிய அவசியமில்லை, அதன் ஓசைக்கே பெருமை உண்டு என்றார்.

வ்யாக்யானம் - (ஆவலிப்புடமை) – வைச்ரவணன் என்னுமாபோலேயாய்த்துத் திருநாம ஸம்பந்தத்தால் வந்த ஐச்வர்யம். (கண்டாய்) – இவ்வர்த்தம் உபதேசிக்க வேண்டியிருந்த்தோ? என் வடிவிலே தெரியாதோ? ரஸாயந ஸேவை பண்ணினாரையும் மண் தின்றாரையும் வடிவிலே தெரியாதோ? நான் பண்டையவனென்று தோற்றா நின்றாதோ? மண் தின்ற உன் முகம் போல இருந்ததோ என் முகமும்? (அரங்கமாநகருளானே) – இங்கு வந்த் சாய்ந்தருளிற்று – திருநாமம் சொல்லவல்லானொருவனைக் கிடைக்கவற்றோ என்னும் நசையாலேயன்றோ; ஸத்யஸங்கல்பராகையாலே தேவரீருடைய நினைவு ஸபலமாகப் பெற்றதிறே. (மாநகர்) – ராஜா இன்ன மண்டபத்தே இருந்து நினைப்பிட்டானென்றால் பின்னை அவன் தன்னாலும் தவிர்க்க வொண்ணாதாயிருக்குமாபோலே, இங்கேயிருந்து விஷயீகரித்ததென்றால் இனி தேவராலும் தவிர்க்கப்போமோ? (மாநகர்) – ஸம்ஸாரிகமான துர்வ்யவஹாரம் அறும் இடம்.

விளக்கம் – (ஆவலிப்புடைமை) – திருநாமத்தின் தொடர்பு காரணமாக இவருக்கு உண்டான செல்வங்கள், இவர் குபேரனோ என்னும்படி ஆனது. (கண்டாய்) – பெரியபெருமாளிடம், "திருநாமத்தின் தொடர்பால் நான் உயர்ந்தேன் என்று கூறவும்

வேண்டுமோ? எனது தோற்றத்தைக் கண்டால் உனக்கே விளங்கவில்லையா? மருந்து உண்டவர்களையும், மண் தின்றவர்களையும் அவர்களது உடல் மூலமாகவே அறியலாம் அல்லவோ? மண்ணைத் தின்ற உன்னுடைய முகம் போன்றா என் முகம் உள்ளது?", என்றார். (அரங்கமாநகருளானே) – நீ இங்கு வந்து சயனித்தது, "நம்முடைய திருநாமத்தைக் கூறுவதற்கு யாரேனும் கிட்டுவானோ?", என்ற எண்ணத்தால் அல்லவோ? நீவிர் ஸத்யஸங்கல்பன் ஆதலால் உமது ஆசை நிறைவேறியது (ஆழ்வார் மூலமாக). (மாநகர்) – அரசன் தன்னுடைய அரச சபையில் அமர்ந்தபடி ஓர் ஆணையிட்டான் என்றால், அந்த ஆணையை அவனாலும் மீற இயலாது அல்லவோ? இது போன்று, இந்தத் திருவரங்கத்தில் இருந்தபடி நீவிர் என்னைப் பிடித்த பின்னர், என்னை உம்மாலும் கைவிட இயலுமோ? (மாநகர்) – "நான்" என்னும் தவறான எண்ணம் நீங்கும் இடம் அல்லவோ இது?

வ்யாக்யானம் - முன்பு அநீதியிலே கைவளர்ந்து, அஸதஸ்யனாய், நால்வரிருந்த இடத்திலே சென்றேறமாட்டாதே இருந்தவன் தனக்கே, ஒரு ராஜகுல ஸம்பந்தமுண்டானால், ஸதஸ்ஸை மதியாதே சென்றேறுகையும், அவர்கள் சிரஸாவஹிக்கையு மாயிறேயிருப்பது; அப்படியே முன்பு யமாதிகளுக்கு அஞ்சிக்கிடந்து, இடமறியாதே போந்தவர், இப்போது திருநாம ஸம்பந்தத்தாலே யமாதிகள் தலையிலே அடியிட்டுத் திரியும்படியான ராஜகுலத்தைச் சொல்லிற்றாய்த்து.

விளக்கம் – ஒருவன் தவறான செயல்களிலே ஈடுபட்டவனாக, கற்றவர் சபையிலே நிற்கத் தகுதி அற்றவனாக, நான்கு மனிதர்கள் நிற்கும் இடத்திற்குச் செல்லத் தயங்குபவனாக இருக்கக் கூடும். அப்படிப்பட்டவனுக்கு, ராஜகுலத்தின் தொடர்பு கிட்டியது என்றால், அவன் சபைக்காக அஞ்சாமல், அவர்களே இவனைக் கண்டு தங்கள் தலைவணங்கும் நிலை உண்டாகும் அல்லவா? இப்படியே ஆழ்வாரும் பல காலம் யமனுக்காக அஞ்சி, தனக்கு ஆதரவு அளிக்கவல்ல இடம் எது என்று என்று தெரியாமல் நின்றார். அப்படிப்பட்ட ஆழ்வார், திருநாமத்தின் தொடர்பால், யமனின் தலையிலே நடக்கும் நிலை அடைந்தார். இதன் மூலம் ஆழ்வாருக்குக் கிட்டிய ராஜகுலப் பெருமை கூறப்பட்டது.

2. பச்சை மா மலை போல் மேனிப் பவளவாய் கமலச் செங்கண்

அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்

இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்

அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

பொருள் – திருவரங்கம் என்னும் உயர்ந்த திவ்யதேசத்தில் நித்யமாக வாஸம் செய்யும் பெரியபெருமாளே! பசுமை நிறைந்த மிகப்பெரும் மலை போன்ற திருமேனி, பவளம் போன்று சிவந்த அழகான திருஅதரம், தாமரை மலர் போன்று சிவந்து அழகாக உள்ள திருக்கண்கள் கொண்டவனே! உனது அடியார்களை எப்போதும் நழுவவிடாதவனே! நித்யஸூரிகளின் தலைவனே! ஆயர்களின் கொழுந்தே! இப்படியாக உன்னுடைய திருநாமம் என்னும் மிகவும் இனிதான சுவையை நான் அனுபவித்தபடி இங்கு உள்ளேன். இந்த அனுபவத்தை விட்டு, நீண்ட தூரத்தில் உள்ள பரமபதத்தை ஆள்கின்ற பதவி கிட்டினாலும் நான் அதனை விரும்பமாட்டேன்.

அவதாரிகை – திருநாமத்தினுடைய பாவநத்வமும், அது கற்கையாலே தமக்குப் பிறந்த ராஜகுலமும் சொல்லிற்றுக்கீழ்; இதில், திருநாமத்தினுடைய போக்யதையைச் சொல்லுகிறது. ஆனால் பின்னை, போக்யதையைச் சொல்லி பாவநத்வத்தைச் சொன்னாலோ என்னில் – பயம் போனாலிறே ரஸ்யதையிலே இழிவது. ஜ்வரம் அநுவர்த்தியா நிற்க, பால் ரஸிக்குமோ? முன்பு பாபத்தைக் கூடு பூரித்து யமபீதனாயிருக்கிறவனுக்கு அந்த பயம் நிவ்ருத்தமானாலல்லது போக்யதையிலே நெஞ்சு செல்லாதிறே. யந்நாம ஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி ந ஸம்சயம் நர: என்று ருஷிகள் திருநாமம் பயநிவ்ருத்திக்கு ஹேதுவாகச் சொல்லுவார்கள். ஆழ்வார்கள், “பிழைப்பில் பெரும் பெயரே பேசி”, என்று போக்யதா ப்ரகர்ஷத்தைச் சொல்லுவார்கள். இத்திருநாமந்தான் ப்ரயோஜநாந்தரபரர்க்கு ப்ரயோஜநத்தைக் கொடுக்கும், உபாயாந்தர நிஷ்டருக்குப் பாவநமாயிருக்கும்; ப்ரபந்நர்க்கு தேஹயாத்ரா சேஷமாயிருக்கும். முத்துப்படும் துறையில் முழுகுவார் முத்தைக் கொடுத்துப் பழம் கொள்ளுவார்கள். செழுமுத்து வெண்ணெற்கெனச் சென்று மாறுவார்களிறே. விலையறியும் செட்டிகள் பக்கல் புகுந்தவாறே பெருவிலையனாம்; செருக்கரானார் இத்தைப் பூண்டு அனுபவிப்பார்கள்; அப்படியே ப்ரயோஜநாந்தரபரர்க்கும் உறுப்பாய்,

ஸாதநாந்தர நிஷ்டர்க்கும் உறுப்பாய், ப்ரபந்நர்க்கு ஸ்வயம் ப்ரயோஜநமுமாயாய்த்து இத்திருநாமம் இருப்பது.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், திருநாமத்தின் பாவங்களை நீக்கும் தன்மை, அதன் மூலம் தனக்கு உண்டான ராஜகுலத்திற்கு நிகரானம் மேன்மை ஆகியவற்றைக் கூறினார். இந்தப் பாசுரத்தில், அந்தத் திருநாமத்தில் உள்ள அனுபவிக்கத் தகுந்த தன்மையைக் கூறுகிறார். முதலில் திருநாமத்திற்கு உள்ள இனிமையைக் கூறி, அதன் பின்னர் அதன் பெருமையைக் கூறாமல், ஏன் வரிசை மாற்றிக் கூறினார் என்ற கேள்வி எழலாம். ஜ்வரம் உள்ளபோது, பாலின் சுவையை அறிய இயலாது; அது போன்று, பாவங்கள் பல செய்த காரணத்தினால் மனதில் யம பயம் உண்டாகி, அந்தப் பயம் நீங்காதபோது திருநாமத்தின் இனிமையை அனுபவிக்க இயலாது அல்லவா? விஷ்ணு தர்மம் (43-24) - யந்நாம ஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி ந ஸம்சயம் நர: - யாருடைய திருநாமத்தை ஸங்கீர்த்தனம் செய்தால் மிகவும் பெரிய பயமும் நீங்கப்பெற்று, விடுதலை கிட்டுகிறதோ – என்று கூறுவது போன்று, பல முனிவர்களும் பயத்தை நீக்கும் உபாயமாக திருநாமத்தையே கூறினர். இரண்டாம் திருவந்தாதி (50) - பிழைப்பில் பெரும் பெயரே பேசி – கூறுவது போன்று, ஆழ்வார்களும் திருநாமத்தின் இனிமையைக் கூறினார்கள். இவனது திருநாமம் என்பது மற்ற பயன்களை விரும்புபவர்களுக்கு, அந்தந்தப் பயன்களை அளிக்கும்; எம்பெருமானை விரும்புபவர்களுக்கு, அவனை அடையத் தடையாக உள்ள பாவங்களை நீக்கிவிடும்; அவனையே உபாயம் என்று கொண்டவர்களுக்கு, தங்கள் உடலைத் தாங்கி நிற்கும் உபாயமாக இதுவே இருக்கும். முத்துக் குளிப்பவர்கள் தாங்கள் எடுத்த முத்துக்களைக் கொடுத்து பழம் முதலானவற்றைப் பெறுவார்கள்; பெரியதிருமொழியில் (3-8-7) - செழுமுத்து வெண்ணெற்கெனச் சென்று – என்பது காண்க (இது போன்று திருநாமத்தின் மேன்மை அறியாதவர்கள், அதன் மூலம் அற்பப் பயனை அடையவே எண்ணுவார்கள்). முத்தின் விலையை அறிந்த வியாபாரிகள் அதனை நல்ல விலைக்கு விற்பார்கள் (இது போன்று திருநாமத்தின் மேன்மை அறிந்தவர்கள், அதனைக் கொண்டு மோக்ஷம் பெறுவார்கள்). அரசர்கள் முத்துக்களை மாலையாகக் கோர்த்து அணிவார்கள் (இது போன்று திருநாமத்தின் மூலம் தங்களுக்குப் பயன்படும் செயலைச் செய்தபடி சிலர் இருப்பர்). இது போன்றே திருநாமமும் வேறு பலன்களை எண்ணுபவர்களுக்கு அதனை

அளிப்பதாய், மோக்ஷம் விரும்புபவர்களுக்கு அதனை அளிப்பதாய், ப்ரபன்னர்களுக்கு ஸ்வயம் பலன் அளிப்பதாய் உள்ளது.

அவதாரிகை – கீழே நின்னாமம் கற்ற என்னா நின்றீர். நம் பேர் சொன்னார்க்கு நாம் கொடுக்கக் கடவதொரு நாடுண்டு. அத்தை அவர்களால் கொள்ளொமென்னவொண்ணாது. நம்மால் கொடோமென்னவொண்ணாது. அத்தைக் கொள்ளீர் என்று பெரியபெருமாள் அருளிச்செய்ய. திருநாமம் சொல்லும் போதை ரஸமொழிய அவ்வருகுபோய் அனுபவிக்கும் ரஸம் எனக்கு வேண்டா என்கிறார்.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "ஆழ்வாரே! கடந்த பாசுரத்தின் நீவிர் நின்நாமம்கற்ற என்று கூறினீர். என்னுடைய திருநாமத்தைக் கூறியவர்களுக்கு நான் பரமபதம் அளிப்பதே வழக்கமாகும். அவர்களாலும் அதனை வேண்டாம் என்று மறுக்க இயலாது. நானும் அவர்களுக்கு அதனை அளிக்கமாட்டேன் என்று கூற இயலாது. ஆகவே நீவிர் அந்தத் திருநாட்டை ஏற்றுக் கொள்வீராக", என்றான். உடனே ஆழ்வார் பெரியபெருமாளிடம், "திருநாமத்தைக் கூறும்போது உண்டாகும் மிகப்பெரிய சுவையே எனக்கு ஏற்பதாக உள்ளது. பரமபதம் சென்று அனுபவிக்கக் கூடிய சுவை எனக்கு வேண்டாம்", என்றார்.

வ்யாக்யானம் – (பச்சை மாமலை போல் மேனி பவள வாய்க் கமலச்செங்கண் அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும் இச்சுவை) – இந்த ரஸமிருந்தபடி கண்டீர்! உமக்குத்தான் புறம்பே போவென்ன வேண்டியிருந்ததோ? என்கிறார். (பச்சை மாமலை போல் மேனி) – பச்சை நிறத்தையுடைத்தாய், ச்லாக்யமாயிருப்பதொரு மலை போலேயாய்த்துத் திருமேனி இருப்பது. காணப்புக்கால், கண்ணும் குளிர்ந்து நெஞ்சம் குளிரும்படி ச்லாக்யமாயாய்த்திருப்பது. தாபத்ரயாதுரருடைய ஸகல தாபங்களும் கண்டபோதே ஆறும்படியாய்த்துத் திருமேனி இருப்பது. நெய் திணுங்கினாப்போலே அகவாயில் தண்ணளியினுடைய செறிவெல்லாம் வடிவிலே காணலாம்படி இருக்கை. மாமலை என்றது பூஜ்யமான மலை என்றபடி. ப்ரதமத்தில் சுபாச்ரயமாய், பின்பு நித்யாநுபாவ்யமாயிருக்கும் ச்லாக்யதையைச் சொல்லுகிறது. மலையானது

ஸ்தைர்யத்துக்கும் ஒப்பாய், வளர்த்திக்கும் ஒப்பாமித்தனையொழியத் திருமேனியி லுண்டான போக்யதாதிசயமெல்லாமில்லையே அதுக்கு.

விளக்கம் - (பச்சை மாமலை போல் மேனி பவள வாய்க் கமலச்செங்கண் அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும் இச்சுவை) – இப்படியாக பல சுவைகள் உள்ளதைக் கண்டீர்களா? ஏதேனும் சுவை விரும்பி வேறு எங்கும் செல்லவேண்டாம் என்னும்படி. (பச்சை மாமலை போல் மேனி) – பச்சை நிறம் கொண்டதாகவும், சிறந்த மலை போன்று உள்ளதாகவும் இருக்கும் திருமேனி. இதனைக் கண்டால், காண்பவர்கள் கண்களும், நெஞ்சமும் குளிரும்படிச் செய்வதாக உள்ளது. மூன்று விதமான துன்பங்களான ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் போன்ற மூன்றாலும் பாதிக்கப்பட்ட மனிதர்களின் துன்பங்கள் இந்தத் திருமேனியைக் கண்டவுடன் நீங்கும்படி உள்ளது. நெய்யானது உறைந்து நிற்பது போன்று, இவனுடைய உள்ளத்தில் இருக்கும் தயை குணம் என்பது திருமேனியாக உறைந்தது போன்றுள்ள வடிவம். மாமலை என்றால் வணங்கத்தக்க மலை என்பதாகும். முதலில் எளிதாக அண்டும்படியும், பின்னர் நித்யமாக அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணம் தோற்றுவிக்கும்படியும் உள்ளதாகும். மலை என்பது பெரியதாக உள்ளது போன்று திருமேனி பெரியது என்று திருமேனியின் அளவிற்கு மட்டுமே மலை ஒப்பாகும் அன்றி, இவனது திருமேனியின் இனிமைக்கு மலை ஒப்பாகாது அல்லவா? அதற்காக மேலும் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (மேனி) – ஆநந்தமய: என்கிற ஸ்வரூபமும் ஆநந்தாதி குணங்களுமல்ல இவரை உகப்பிப்பது; இவை இரண்டும் அகவாயிலே ஆம்படியான இவ்வடிவாய்த்து இவரை உகப்பிப்பது. இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:, குன்றாடு கொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல் நின்றாடு கணமயில்போல் நிறமுடைய நெடுமால் என்னக் கடவதிறே. கழுத்தே கட்டளையாக நீரை முகந்து போகமாட்டாதே மலையினுச்சியிலே சாய்ந்த மேகம் போலவும், கண்ணாலே முகந்து அனுபவிக்கக் குவளைகள் போலவும், அனுபவித்து முடிக்கவொண்ணாமைக்குக் கடல் போலவும், வைத்த கண் வாங்கவொண்ணாமைக்கு மயில்திரள் போலவுமாய்த்து இத்திருமேனி இருப்பது. ஸிஞ்சேதிமஞ்ச ஜநமிந்திரயா தடித்வாந் பூஷாமணித்யுதிபிரிந்த்ரதநுர்ததாந: ஸ்ரீரங்கதாமநி தயாரஸநிர்ப்பரத்வாதத்ரௌ சயாளுரிவ சீதள காளமேக:

விளக்கம் – தைத்திரீய ஆனந்தவல்லி – ஆனந்தமய – ஆனந்தத்தையே ஸ்வரூபமாக உடையவன் – என்று கூறுவது போன்று இவனது ஸ்வரூபமோ, அல்லது இவனது குணங்களோ ஆழ்வாருக்கு பெரும் மகிழ்ச்சி ஏற்படுத்துபவை அல்ல; இந்த இரண்டையும் (ஸ்வரூபம், குணங்கள்) உட்கொண்ட இவனது அழகான திருமேனியே இவருக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. விஷ்ணு புராணம் (6-5-84) - இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ: - தனது விருப்பம் காரணமாகவே பலவிதமான திருமேனிகளை எடுத்துக் கொள்பவன்; பெரியாழ்வார் திருமொழி (4-8-9) - குன்றாடு கொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல் நின்றாடு கணமயில்போல் நிறமுடைய நெடுமால் – போன்ற வரிகளில் இவனது திருமேனியில் பலரும் ஈடுபட்டது தெளிவாகிறது. இவனது திருமேனி எப்படி உள்ளது என்றால் – கழுத்து முட்டமுட்ட நீரை உண்ட மேகமானது நகர இயலாமல் மலை உச்சியில் இளைப்பாறுவது போன்றும், கண்ணால் கண்டு அனுபவிக்கக்கூடிய குவளைகள் போன்றும், எத்தனை இரசித்தாலும் இரசித்து முடிக்க இயலாத கடல் போன்றும், வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்து இரசிக்கக்கூடிய மயில் கூட்டம் போன்றும் – உள்ளது. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டர் (1-82) - ஸிஞ்சேதிமஞ்ச ஜநமிந்திரயா தடித்வாந் பூஷாமணித்யுதிபிரிந்த்ரதநுர்ததாந: ஸ்ரீரங்கதாமநி தயாரஸநிர்ப்பரத்வாதத்ரௌ சயாளுரிவ சீதள காளமேக: - ஸ்ரீரங்கநாச்சியார் என்னும் மின்னலைக் கொண்டுள்ளது, தன்னுடைய திருவாபரணங்களில் உள்ள இரத்தினக் கற்களின் மூலம் வெளிப்படும் ஒளிக்கதிர்களை இந்த்ரவில் போன்று உடையது, க்ருபை என்னும் நீர் நிரம்பியதாக உள்ளது, திருவரங்கம் என்னும் மலை மீது இளைப்பாறிக் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட மழைக்கால மேகமான பெரியபெருமாள் என் மீதும் தனது க்ருபை என்னும் நீரைப் பொழிவானாக – என்றது காண்க.

வ்யாக்யானம் – (பவளவாய்க் கமலச் செங்கண்) – திருமேனி ஒரு பெருங்கடல் போலேயாய், அதிலே கொண்டு முழுக்கும் சுழிகள்போலேயாய்த்து, திவ்யாவயவங்களிருப்பது. திருமேனிக்குப் பரபாகமான பவளம் படர்ந்தாற் போலேயாய்த்துத் திருவதரத்தில் அழகிருப்பது. மலையிலே பவளம் படர்ந்தாற் போலேயிருக்கை. சந்த்ரோதயத்தில் கடல் கொந்தளித்தாற்போலே ஆஸ்ரீதமுகசந்த்ர தர்சநத்தாலே வந்த அழகு ஓதமேறினபடி. வசஸா ஸாந்த்வயித்வா என்கிறபடியே ஆஸ்ரீதரை வினவுகிற திருவதரமிருக்கிறபடி.

விளக்கம் - (பவளவாய்க் கமலச் செங்கண்) – இவனது திருமேனி ஒரு பெரிய கடல் போல் உள்ளது. அந்தக் கடலில் அனைவரையும் மூழ்கடிக்கவல்ல சுழிகள் போன்று திருக்கண்கள் முதலான அவயவங்கள் (உறுப்புகள்) உள்ளன. மலையில் அழகாகப் பவளம் படிந்துள்ளது போன்று, இவன் திருமேனியில் அழகாக திருஅதரம் உள்ளது. சந்த்ரனைக் கண்டவுடன் கடலானது பெரிதாகப் பொங்கி நிற்கும். இது போன்று இவனது திருமுகமானது, ஆழ்வாரின் சந்த்ரன் போன்ற முகத்தைக் கண்டவுடன், அழகாகப் பரிவைப் பொங்கி நிற்கிறது. இராமாயணம் யுத்தகாண்டம் - வசஸா ஸாந்த்வயித்வா – நல்வார்த்தைகள் கொண்டு விபீஷணனைத் தேற்றினான் – என்பது போன்று தன்னை, "நலமா", என்று விசாரிப்பதாக இவன் திருஅதரம் உள்ளது.

வ்யாக்யானம் – (கமலச் செங்கண்) – ஜீவநாத்ருஷ்டத்தாலே இத்திருப்பவளத்துக்குத் தப்பினாரையும் அகப்படுத்திக் கொள்ளும் கண்கள். வாயால் சொல்லமாட்டாதே குறையும் கண்ணாலேயிறே தலைக்கட்டுவது. லோசநாப்யாம் பிபந்நிவ என்கிறபடியே. அகவாயில் வாத்ஸல்யாதி குணங்களுக்கு ப்ரகாசகமாயிருக்கிறபடி. மென்மை, குளிர்த்தி, நாற்றம் தொடக்கமானவற்றுக்கு ஒரு போலியாமத்தனையல்லது அகவாயில் தண்ணளியெல்லாம் இல்லையே அதுக்கு. "விக்ரஹமில்லை, குணமில்லை, விபூதியில்லை என்கிற ஸௌந்யவாதிகள் ஸஞ்சரிக்கிற ஸம்ஸாரத்திலே இப்படி விக்ரஹத்தை ஆதரித்த இவர்கள் உத்தேச்யராகப் பெற்றோமே", என்று ஜீயர் அருளிச்செய்வர்.

விளக்கம் – அவனது திருமேனி என்னும் பெரும் கடலில் விழுந்தவர்கள், அவனுடைய திருஅதரம் என்னும் சுழியில் அகப்படாமல் தப்பினாலும், அவனது திருக்கண்கள் அவர்களைப் பிடித்துக் கொள்ளும். வாயால் கூறி முடிக்க இயலாதவற்றைக் கண்களால் அல்லவோ கூறுவர்! இராமாயணம் யுத்தகாண்டம் - லோசநாப்யாம் பிபந்நிவ – கண்களால் பருகினான் – என்பது காண்க. மனதில் உள்ள வாத்ஸல்யம் முதலான குணங்களை திருக்கண்கள் அல்லவோ நமக்கு உணர்த்துகின்றன. மென்மை, குளிர்ச்சி, நறுமணம் முதலானவைகளுக்குத் தாமரை மலர் ஒப்பாக உள்ளது என்றாலும், இவனது திருக்கல்யாண குணங்களுக்குத் தாமரை ஒப்பாகாது அன்றோ? ஆகையால் கமலச் செங்கண் என்றார். "விக்ரஹமில்லை, குணமில்லை, விபூதியில்லை என்று கூறும்

ஸௌந்யவாதிகள் இந்தப் பூமியில் அதிகம் உள்ளனர். இப்படிப்பட்ட இந்த உலகத்தில் இவ்விதம் திருமேனியைப் பெரிதும் போற்றும் ஆழ்வார்களை நாம் நமது ஸம்ப்ரதாயத்தின் தலைவர்களாகப் பெற்றோமே!", என்று நஞ்சீயர் வியப்பாராம்.

வ்யாக்யானம் – (அச்சுதா) – த்ருஷ்டாந்தமாகச் சொன்ன மலை, பவளம், தாமரை போலே நாள் செல்ல நாள் செல்ல செவ்வி மாறுதல், தான் அழிதல் செய்யாதே ஏகரூபமாயிருக்கை. ஸதைகரூபரூபாய என்னக்கடவதிறே. அதவா, இச்செவ்வி மாறாதே செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுகிறாரென்றுமாம். "சேவடி செவ்வி திருக்காப்பு" என்னக்கடவதிறே. இவ்வழகிலே அகப்பட்டாரை ஒருநாளும் நழுவவிடாதவன் என்றுமாம்.

விளக்கம் – மேலே கூறப்பட்ட உதாரணங்களான மலை, பவளம், தாமரை முதலானவை நாட்கள் செல்லச்செல்ல அழிவது அவற்றின் இயல்பாகும். ஆனால் இவன் அது போன்று இல்லாமல், எப்போதும் இருப்பவன். விஷ்ணுபுராணம் (1-2-1) – ஸதைகரூபரூபாய – ஒரே போன்று மாறாமல் உள்ள திருமேனியைக் கொண்டவன் – என்பது காண்க. இப்படிப்பட்ட அழகு மாறாமல் எப்போதும் திகழவேண்டும் என்று இவர் வாழ்த்துவதாகவும் கொள்ளலாம். பெரியாழ்வார் - சேவடி செவ்வி திருக்காப்பு – என்றார் அல்லவோ! இப்படிப்பட்ட தன்னுடைய அழகில் ஈடுபட்டு நிற்பவர்களை எப்போதும் நழுவவிடாதவன் என்றும் கொள்ளவேண்டும்.

வ்யாக்யானம் – (அமரரேறே) – இவ்வழகை ஸதாதர்சநம் பண்ணும் போக்தாக்களைச் சொல்லுகிறது. காலமெல்லாம் இடைவிடாதே அனுபவியா நின்றாலும் எல்லை காணவொண்ணாதபடி அவ்வருகாயிருக்கை; "அயர்வறுமமரர்கள் அதிபதி" என்னக்கடவதிறே. அவ்வநுபவம் மாறினால் முடியுமவர்களென்று தோற்றுகைக்காக, அநுபவத்தினுடைய அவிச்சேதத்தாலே அமரர் என்கிறது. ஸதா பச்யந்தி ஸூரய: என்னக்கடவதிறே.

விளக்கம் – (அமரர் ஏறே) – இப்படிப்பட்ட இவனது திருமேனி அழகை எப்போதும் அனுபவிப்பவர்களைக் கூறுகிறார். நித்யஸூரிகள் இவனது அழகை எப்போதும்

அனுபவித்து வந்தாலும், இடைவிடாமல் அனுபவித்தாலும், இவனது அழகின் எல்லையைக் காண இயலாதபடி, அவர்களுக்கும் அப்பாற்பட்டு உள்ளவன் என்றார். திருவாய்மொழியில் (1-1-1) – அயர்வறும் அமரர்கள் அதிபதி – என்றார் அல்லவோ? நித்யஸூரிகளாகவே இருந்தாலும், இவனது அனுபவத்தில் ஏதேனும் இடையூறு உண்டானால், அவர்களும் தாழ்ந்துவிடுவர் என்பதைக் கூறுகிறார். வேதமானது - ஸதா பச்யந்தி ஸூரய: - நித்யஸூரிகள் அவனை எப்போதும் பார்த்தபடி உள்ளனர் – என்பது காண்க.

வ்யாக்யானம் – ஆனால் பிராட்டி, திருவடி, திருவநந்தாழ்வான் போல்வார் அனுபவிக்குமதாய், அதிக்ருதாதிகாரமாயிருக்கிறதோ? என்னில் (ஆயர்தம் கொழுந்தே) – மேன்மைக்கு எல்லையானவர்களுக்கு நியாமகனாயிருக்குமாபோலே, தாழ்வுக்கு எல்லையான இடையர்க்கும், பசுக்களுக்கும் ஸுலபனானபடி, வடிவழகும் மேன்மையும் நீர்மையும் ஒரு பசுங்கூட்டாயிறே பரதத்வமிருப்பது. (என்னும்) இஸ்ஸ்வபாவங்களை அனுபவித்தோ உமக்கு இவ்வினிமை பிறந்தது என்னில்; அங்ஙனன்று, திருநாமத்தினுடைய உக்திமாத்ரத்தாலே வந்த இனிமை.

விளக்கம் – இப்படியாக இவன் பெரியபிராட்டி, ஆதிசேஷன் போன்றவர்கள் அனுபவிக்கும்படி உள்ளானே, இவனை நம் போன்றவர்களால் அனுபவிக்க இயலுமோ என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். (ஆயர்தம் கொழுந்தே) – மேன்மைக்கு எல்லையான நித்யஸூரிகளை நியமிப்பவனாக இருப்பது போன்று, எளிமைக்கு எல்லையான ஆயர்களாலும் பசுக்களாலும் நியமிக்கப்படுபவனாக, மிகவும் சுலபனாக உள்ள தன்மை. அழகான திருமேனி, மேன்மை, எளிமை போன்ற பலவும் கலந்த கூட்டு போன்று பரம்பொருள் உள்ளான். (என்னும்) – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "இப்படிப்பட்ட எனது திருநாமங்களில் விளக்கப்பட்ட குணங்களை நீவிர் அனுபவித்த காரணத்தால் உமக்கு இன்பம் உண்டானதோ?", என்றான். அதற்கு ஆழ்வார், "அப்படி அல்ல. உனது திருநாமத்தைக் கூறியதாலேயே இன்பம் உண்டானது", என்றார்.

வ்யாக்யானம் – (இச்சுவை தவிர) – இந்த ரஸத்தை விட்டு. சுவை = ரஸம். கைப்பட்டத்தை விட்டு. இவ்வறு சுவைக்கு வேறொரு சுவை இருந்தவிடம் தேடிப்

போகச் சொல்லுகிறாயோ? இவருடைய அறுசுவை இருக்கிறபடி. திருநாமத்தை உம்முடைய நாக்கிலேயிட்டுப் பாராமையிறே நான் உபதேசிக்க வேண்டுகிறது. (யான்) – திருநாமம் சொல்லுகைக்குப் பாங்கான நாவையுடைய நான். (யான்) – ஒரு தேசவிசேஷத்தே போய் அனுபவிக்குமளவும், விளம்பத்தை ஸஹியாத த்வரையையுடைய நான். (போய்) – கோவிலுக்கு அணித்தாயிருக்கையுமன்றியே நெடுங்கை நீட்டான அத்தூரமெல்லாம் போய். (இந்திரலோகம்) – நிரவதிகைச்வர்ய யுக்தனுடைய லோகம். "ப்ரஹ்மேந்த்ராதி சப்தங்கள் பரமாத்மவாசகம்" என்கிற வேதாந்தவாஸனை தோற்ற அருளிச்செய்கிறார். (ஆளும்) – ஆண்மின்கள் வாகனம் என்னும்படியே இஷ்டவிநியோகார்ஹ மாம்படியிருக்கை. (அச்சுவை இச்சுவை) – அது ச்ருதி ஸித்தம், இது ப்ரத்யக்ஷஸித்தம்; அது கேட்டார் வாய் கேட்டுப்போமது, இது கைப்பட்டது.

விளக்கம் – கையில் கிட்டியுள்ள இந்த சுவை விடுத்து. இப்படிப்பட்ட அறுசுவையை விடுத்து, வேறு சுவையை தேடிப் போகும்படி கூறுகிறாயா? இப்படிப்பட்ட உனது திருநாமத்தின் சுவையை பெரியபெருமாளாகிய உனது நாக்கில் இட்டுச் சுவைக்காமல், நான் அனுபவித்து உனக்கு உபதேசம் செய்யும்படி நிலைமை உள்ளது. (யான்) – திருநாமம் கூறுவதற்குத் தகுதி பெற்ற நாக்கை உடைய நான். (யான்) – பரமபதம் சென்றால் இந்தச் சுவை கிட்டும், ஆனால் அதுவரை பொறுத்துக் கொள்ள இயலாத வேகத்தை உடைய நான். (போய்) – இந்தப் பெரியகோயில் போன்று அருகில் இல்லாமலும், நீண்ட தூரத்தில் உள்ளதும் ஆகிய பரமபதத்திற்கு உள்ள தூரம் எல்லாம் கடந்து சென்று. (இந்திரலோகம்) – எல்லையில்லாத ஐச்வர்யம் கொண்ட லோகம். இங்கு இந்திர என்பது பரம்பொருளைக் குறிக்கும். எப்படி? "ப்ரஹ்மேந்த்ராதி சப்தங்கள் பரமாத்மவாசகம்" – ப்ரம்மன், இந்திரன் முதலான பதங்கள் அவர்களின் அந்தர்யாமியாக உள்ள பரமாத்மாவையே குறிக்கும் என்னும் வேதாந்த கருத்தைக் கூறுகிறார். (ஆளும்) – திருவாய்மொழி (10-9-6) – ஆண்மின்கள் வாகனம் – என்னும்படி பரமபதமானது நித்யஸூரிகளாலும் முக்தி பெற்றவர்களாலும் ஆளப்படுகிறது. (அச்சுவை-இச்சுவை) – மேலே உள்ள பலவும் ச்ருதிகளால் அறியப்படுகிறது, கேள்வி ஞானம் மூலமே உணரப்படுவது; இதுவோ ப்ரத்யக்ஷமாக உள்ளது, கையில் அகப்படும்படி உள்ளது.

வ்யாக்யானம் – (பெறினும் வேண்டேன்) – ”கிட்டுமளவும் வேண்டாவென்கிறீர்; கிட்டினவாறே நீரே அதிலே தோள்மாறுகிறீர்”, என்ன. “பெற்றாலும் எனக்கு வேண்டா; அத்தைத் தந்து பார்க்கலாகாதோ நான் ஆதரிக்கும்படிக் காண”, என்கிறார். உறாது என்னாதொழிந்தது. தம்மிலும் அளவுடையார் நித்யாநுபவம் பண்ணுகிற விஷயத்துக்குக் குற்றம் சொன்னாராவர்; இன்னமும் அதுக்கு உத்கர்ஷம் சொல்லுகிற ப்ரமாணங்களையும் அநாதரித்தாராவர். பால் கைக்கும் புளிக்கும் என்னிலன்றோ பிணங்க வேண்டுவது; அதுதான் வேண்டாவென்பாரைச் செய்யலாவதில்லையே. பாவோ நாந்யத்ர கச்சதி என்றவனைச் செய்யலாவதுண்டோ?

விளக்கம் - (பெறினும் வேண்டேன்) – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், “பரமபதம் உமக்குக் கிடைக்கும்வரை மட்டுமே அதனை நீவிர் வேண்டாம் என்று கூறுவீர். அது கிடைத்துவிட்டால், மனம் மாறிவிடுவீர்”, என்றான். உடனே ஆழ்வார், “அது எனக்குக் கிடைத்தாலும் மறுத்துவிடுவேன். நீ வேண்டுமானால் அதனை எனக்கு அளித்துப் பார்ப்பாயாக, அப்போது நான் ஏற்கிறேனா என்று உணரலாம்”, என்றார். பரமபதம் தாழ்ந்தது என்று இவர் கூறவில்லை – காரணம், தன்னைக் காட்டிலும் ஞானம் அதிகம் உள்ள நித்யஸூரிகள் போற்றும் இடமாக பரமபதம் உள்ளது; மேலும், பரமபதம் தாழ்ந்தது என்று கூறினால், பரமபதத்தின் உயர்வைக் கூறும் பல ப்ரமாணங்களையும் இவர் தள்ளியவர் ஆகிவிடுவார். ஆகையால் “பரமபதம் பெறினும் வேண்டேன்”, என்றார். “பால் கசக்கும், புளிக்கும்”, என்று கூறுபவர்களிடம் வாதம் செய்யலாம்; ஆனால் அந்தப் பால் வேண்டாம் என்று மறுப்பவர்களிடம் அவ்விதம் வாதம் செய்ய இயலும்? இராமாயணம் உத்தரகாண்டம் (40-15) - பாவோ நாந்யத்ர கச்சதி – இராமா! உன்னிடம் உள்ள அன்பு காரணமாக எனது நினைவு ஸ்ரீவைகுண்டநாதனிடம் கூடச் செல்ல மறுக்கிறது – என்று கூறுபவனை என்ன செய்ய இயலும்?

வ்யாக்யானம் – பரமபதம் வேண்டாவென்ன இங்குத்தைக்கு நன்மையேது? என்ன. (அரங்கமா நகருளானே) – பரமபதத்தில் அநுபவத்தை விட்டு, இவ்வழகையும், சீலத்தையும் இங்குள்ளாரை அநுபவிப்பிக்கைக்கு வந்து கிடக்கிற இது போராதோ? தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கிற நீர்மையை அநுபவிக்கைக்கு அங்குள்ளாரும் இங்கே வாரா நிற்க, என்னை அங்கே போகவிடத் தேடுகிறதென்?

விளக்கம் – இதனைக் கேட்ட பெரியபெருமாள், "ஆழ்வாரே! பரமபதமே வேண்டாம் என்று நீவிர் மறுக்கும் அளவிற்கு இந்த இடத்தில் என்ன சிறப்பு உள்ளது?", என்றான். (அரங்கமா நகருளானே) – உடனே ஆழ்வார், "அழகியமணவாளா! பரமபதத்தின் இனிமையைக் கைவிட்டு, உன்னுடைய இந்த அழகு மற்றும் எளிமை ஆகியவற்றை, இந்த உலகில் உள்ளவர்கள் அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் நீ இங்கு உள்ளாயே, இந்தச் சிறப்பு போதாதோ? இவ்விதம் எங்களைப் போன்ற தாழ்ந்தவர்களுக்கு நீ இறங்கி வந்து, உனது திருமேனி அழகை வெளிப்படுத்துவதைக் காண, பரமபதத்தில் உள்ளவர்களே இங்கு வரும்போது, நீ என்னை அங்கு செல்லும்படிக் கூறுவது சரியா?", என்றார்.

வ்யாக்யானம் – இத்தால் சொல்லிற்றாய்த்து – இங்கே இருந்து திருநாமத்தை அனுபவிக்கும் இனிமைக்குப் பரமபதாநுபவமும் ஸத்ருசமன்று என்னும்படி தமக்குத் திருநாமம் ரஸித்தபடியைச் சொல்லிற்றாய்த்து.

விளக்கம் – இந்தப் பாசுரம் மூலம் கூறப்படுவது : இங்கேயே இருந்துகொண்டு இவனது திருநாமத்தை அனுபவிக்கும் இனிமைக்கு, பரமபதத்தின் அனுபவம் கூட ஈடாகாது என்றார். இதன் மூலம் தான் திருநாமத்தில் ஈடுபட்டதைக் கூறினார்.

3. வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும்
பாதியும் உறங்கிப் போகும் நின்ற இப்பதினையாண்டு
பேதை பாலகன் அது ஆகும் பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமாநகருளானே

பொருள் – திருவரங்கத்தில் சயனித்துள்ள பெரியபெருமாளே! வேதங்கள் கூறுவது போன்று மனிதர்களின் சராசர் ஆயுள் என்பது நூறு வருடங்கள் ஆகும். இப்படியாக நூறு வயதுவரை ஒருவன் வாழ்ந்தான் என்றாலும் – அதில் பாதியான ஐம்பது வருடங்கள் உறக்கத்திலேயே கழிந்துவிடும்; மீதம் உள்ள ஐம்பது வருடங்கள் – ஏதும் அறியாத குழந்தைப் பருவத்திலும், பாலகப் பருவத்திலும், உலக விஷயங்களுல் ஈடுபட்டுத் திரியும்

வாலிபப் பருவத்திலும், நோய்களால் பீடிக்கப்பட்டும், உலக விஷயங்கள் குறித்த வேதனையாலும், வயோதிகத் துன்பத்தாலும் கழிந்தபடியே இருக்கும். எனவே எனக்கு இனி ஒரு பிறவி வேண்டாம்.

அவதாரிகை – "உமக்குப் பரமபதம் வேண்டாவாகில், கோயிலோடே தோள்தீண்டியான ஸம்ஸாரத்திலே இருந்து திருநாமத்தை அநுபவியும்", என்று பெரியபெருமாள் அருளிச்செய்ய; அத்தையும் நிரூபித்தவாறே திருநாமம் சொல்லுகைக்கு அவகாசமில்லாதபடி துரித பரம்பரையேயாயிருந்தது; ஆகையாலே எனக்கு அது வேண்டாவென்ன; "திருநாமம் சொல்லுகைக்கு அவகாசமில்லாதபடி ஸம்ஸாரத்துக்கு நீர் சொல்லுகிற குறையென்?", என்று கேட்டருள; ஸம்ஸாரத்தினுடைய தோஷங்களை உபபாதித்துக் காட்டுகிறார். இத்தால் பழகிப்போருகிற ஸம்ஸார யாத்திரையிலும் ஜுகுப்ஸை பிறக்கும்படி திருநாமம் இனிதென்று அம்முகத்தாலே திருநாமத்தினுடைய போக்யதா ப்ரகர்ஷத்தைச் சொல்லுகிறது.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "உமக்குப் பரமபதம் வேண்டாம் என்று எண்ணினால், நமது திருவரங்கத்திலேயே எங்காவது இருந்து கொண்டு, எனது திருநாமத்தை அனுபவிக்கலாமே", என்றான். இதற்கு ஆழ்வார், "நீ கூறுவது போன்று இங்கேயே இருந்துகொண்டு திருநாமத்தை அனுபவித்தபடி இருக்கலாம் என்று முடிவு செய்தாலும், இங்கு திருநாமத்தைக் கூற இயலாதபடி பல தோஷங்கள் உள்ளனவே. எனவே எனக்கு இந்த ஸம்ஸாரம் வேண்டாம்", என்றார். உடனே பெரியபெருமாள் வியப்புடன், "திருநாமத்தைக் கூற இயலாதபடி தடுக்கும் தோஷங்கள் என்று நீவிர் எதனைக் கூறுகிறீர்?", என்று கேட்டான். இதற்கு விடையாக இந்தப் பாசுரம் மூலம் ஸம்ஸாரத்தில் உள்ள தோஷங்களை விவரித்துக் கூறுகிறார். பலகாலம் பழகியதாக இருந்தாலும், இந்த ஸம்ஸார வாழ்க்கை மீது வெறுப்பு ஏற்படும்படியாகத் திருநாமத்தின் இனிமை உள்ளது என்று திருநாமத்தின் இனிமையைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (வேதநூல் பிராயம் நூறு) – வேதசாஸ்த்ராவிரோதிநா என்கிறபடியே வேதமாகிற நூல். வேதாக்ய சாஸ்த்ரம் என்னக் கடவதிறே. நூல் – சாஸ்த்ரம்; அதவா வேதங்களும், நூல்களும் என்னவுமாம்; வேதங்களும், வேதார்த்த ஜ்ஞானமுடைய

புருஷர்களுடைய வசநங்களும். (பிராயம் நூறு) – சதாயுர்வை புருஷ: என்றிறே சொல்லுவது; இதிறே பரமாவதி; இதுதான் ஓலைப்புறத்திலே கேட்டுப்போமித்தனை. புகுகைக்கு ஸம்பாவனையில்லை. அந்த நூறுதான் அளவுகோல் வாசியால் வந்த ஏற்றத்தாலே சிலர் பக்கலிலே நெடுவாசிபட்டிருக்கும்; அத்தை வ்யாவர்த்திக்கிறது மனிசர் என்று. ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்நாயம் பூத்வா பவிதா வா ந பூய: என்கிறபடியே, கல்பாதியிலே தோற்றி கல்பாந்தத்திலே முடிவாயிருக்குமிறே சிலர்க்கு; அங்ஙனன்றியே இருக்கை. (தாம்) – கர்ப்பமே தொடங்கி மரணத்துக்கு யோக்யமாயிருக்க, தமக்கொரு ஜீவநமும் பரிக்ரஹமுங்காண்; என்று ஷேபிக்கிறார்.

விளக்கம் – (வேதநூல் பிராயம் நூறு) – மநு ஸ்ம்ருதி - வேதசாஸ்த்ராவிரோதிநா – வேத சாஸ்த்ரங்களுக்கு விரோதம் இல்லாதபடி – என்று கூறுவது போல் வேதம் என்னும் நூல். வேத சாஸ்த்ரம் என்று கொள்ளவேண்டும். நூல் என்பது இங்கு சாஸ்த்ரம் என்பதாகும். அல்லது வேதங்களும் மற்ற சாஸ்த்ரங்களும் என்றும் கொள்ளலாம். இவ்விதம் கொண்டால் நூல் என்பது வேதங்களின் ஆழ்பொருளை அறிந்தவர்களின் திருவாக்குகளாகிய இதிகாசம் புராணங்கள் என்பதாகும். (பிராயம் நூறு) – யஜுர் வேதம் - சதாயுர்வை புருஷ: - மனிதன் நூறு ஆண்டுகள் வாழ்வான் – என்று கூறியது. இவ்விதம் நூறு ஆண்டுகள் என்பது மனிதன் வாழக்கூடிய அதிகபக்ஷ ஆண்டுகள் என்று கொள்ளவேண்டும். சாஸ்த்ரங்கள் இவ்விதம் கூறியுள்ளன என்றாலும், பெரும்பாலான மனிதர்கள் நூறு ஆண்டுகள் வாழ்வதில்லை. நூறு என்பது தேவர்களுக்கு அதிகமாக உள்ளதாகவும் (காரணம் அவர்களின் வருடம் நீண்டு உள்ளதால்), மனிதர்களுக்கு குறைவாக உள்ளதாகவும் வேறுபட்டிருக்கும். இவ்விதம் ஆயுள் குறைவு என்று உணர்த்த ”மனிசர்” என்றார். ஸ்ரீமத் பகவத் கீதை (2-20) - ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்நாயம் பூத்வா பவிதா வா ந பூய: - ஆத்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை – என்பதற்கு ஏற்ப, ப்ரம்மன் உள்ளிட்ட தேவர்களின் ஆயுள் என்பது கல்பத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை மட்டுமே ஆகும். ஆயினும் இந்த அளவிற்கு நாம் இருப்பதில்லை என்று உணர்த்தவே “மனிசர்” என்றார். (தாம்) – கர்ப்பம் தொடங்கியது முதலாகவே மரணத்தால் அனுபவிக்கும்படி உள்ள மனிதர்கள், தங்களுக்கு என்று வாழ்வதைக் காணுங்கள், இது என்ன என்று கேட்கிறார்.

வ்யாக்யானம் – (புகுவரேலும்) – முதலிலே புகுவாரில்லை; கர்ப்பத்திலே முடிதல், ஜநியா நிற்க முடிதல், பிறந்து முடிதல், நாலுநாள் இருந்து முடிதல், பால்யத்திலே முடிதல், செருக்கித் திரியும் யௌவநத்திலே முடிதல், ஜரையிலே முடிதலாய் மரணத்தை நிர்ணயிக்க அரிதாம்படியிறே இருப்பது. கர்ப்பே விலீயதே பூயோ ஜாயமாந: அஸ்தமேதி ச ஜாதமாத்ரே ச ம்ரியதே பாலபாவே அதயௌவநே மத்யமம் வா வய: ப்ராப்தே வார்த்தகே வா த்ருவாம்ருதி: என்னக் கடவதிறே. ப்ராணிகள் தங்கள் ஆயுஸ்ஸுப் போகிறபடி ஒன்றையுமே அறியாதே, உதயாஸ்தமயங்களைக் குறித்து உகவா நிற்பர்கள். நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவை ஆத்மநோ நாவபுத்த்யந்தே மநுஷ்யா ஜீவிதக்ஷயம், ஜாயஸ்வ ம்ரியஸ்வ, மின்னின் நிலையில, வாள்களாகி நாள்கள் செல்ல. (புகுவரேலும்) – வருந்தி நூறு வயஸ்ஸுப் புக்காராகில்.

விளக்கம் – (புகுவரேலும்) – பலரும் நூறு வயதை எட்டுவதில்லை. கர்ப்பத்திலேயே சிலர் இறக்கிறார்கள், பிறக்கும்போது சிலர் இறக்கிறார்கள், பிறந்து முடித்தவுடன் சிலர் இறக்கிறார்கள், பிறந்து நான்கு நாட்கள் வரை வாழ்ந்து சிலர் இறக்கிறார்கள், பால்யப் பருவதிலேயே சிலர் இறக்கிறார்கள், கர்வத்துடன் திரியும் வாலிப வயதில் சிலர் இறக்கிறார்கள், முதுமை அடைந்த காலத்தில் சிலர் இறக்கிறார்கள். ஆக மரணம் எப்போது தீண்டும் என்று நிர்ணயம் செய்வது கடினமாகவே உள்ளது. விஷ்ணு புராணம் - கர்ப்பே விலீயதே பூயோ ஜாயமாந: அஸ்தமேதி ச ஜாதமாத்ரே ச ம்ரியதே பாலபாவே அதயௌவநே மத்யமம் வா வய: ப்ராப்தே வார்த்தகே வா த்ருவாம்ருதி: - கர்ப்பத்தில் இறக்கிறான், பிறக்கும்போது இறக்கிறான், பிறந்தவுடன் இறக்கிறான், பாலனாக உள்ளபோது இறக்கிறான், வாலிபப் பருவத்திலும் இறக்கிறான், நடுவயதிலோ அல்லது முதுமையிலோ எப்போதாவது மரணம் உறுதியே – என்றது காண்க. இப்படியாக இந்த உலகில் உள்ளவர்கள், தங்கள் ஆயுள் அன்றாடம் குறைந்து வருவதை உணராமல், காலைப்பொழுதிலும் மாலைப்பொழுதிலும் ஆனந்தத்துடனேயே உள்ளனர். இதனை இராமாயணம் - நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவை ஆத்மநோ நாவபுத்த்யந்தே மநுஷ்யா ஜீவிதக்ஷயம் – சூரியன் உதிக்கும் வேளையில் இன்பம் அடைகின்றனர், அஸ்தமனம் ஆகிற வேளையில் இன்பம் அடைகின்றனர், தங்களின் வாழ்வு குறைவதை எண்ணுவதில்லை – என்றும், சாந்தோக்ய உபனிஷத் - ஜாயஸ்வ ம்ரியஸ்வ – பிறப்பாய், இறப்பாய் – என்றும், திருவாய்மொழி (1-2-2) - மின்னின் நிலையில – நிலையாக உள்ளவை அல்ல – என்றும், திருச்சந்தவிருத்தம் - வாள்களாகி

நாள்கள் செல்ல – என்றும் கூறியது காண்க. (புகுவரேலும்) – இதனையும் மீறி ஒரு சிலர், மிகவும் கடுமையான விதிமுறைகளுடன் வாழ்ந்து நூறு வயது எட்டினாலும்.

வ்யாக்யானம் – (பாதியுமுறங்கிப் போகும்) – அதிலே செம்பாதி கடிக்கூறாகப் பாழாய் நித்ரையாலே கழியும். பாதியுமுறங்கிப் போகிற கணக்கிலே, "திருநாமம் சொல்லக்கடவ காலம் வ்யர்த்தமே போவதே", என்று வெறுக்கிறாராய்த்து இவர். ஜஹௌ நித்ராஞ்ச தந்த்ரீஞ்ச என்று இளையபெருமாளைப்போலே இருக்கவிறே அடுப்பது. ஸததம் கீர்த்தயந்த: என்று ஸர்வ காலமும் திருநாமம் சொல்லவிறே கண்டது.

விளக்கம் – (பாதியும் உறங்கிப் போகும்) – பாதி வயலில் உள்ள பயிர்கள் பூச்சிகளால் வீணாவது போன்று, உறக்கத்திலேயே நமது பாதி ஆயுள் காலம் கழிந்துவிடுகிறது. "இவனது திருநாமம் கூறவேண்டிய பிறவியில், இவ்விதமாக நமது ஆயுளில் பாதி கழிந்துவிடுகிறதே", என்று இந்தப் பிறவியை வெறுக்கிறார். இராமாயணம் - ஜஹௌ நித்ராஞ்ச தந்த்ரீஞ்ச – இராமனுக்காக உறக்கம், சோம்பல், களைப்பு ஆகியவற்றை இலட்சுமணன் கைவிட்டான் – என்பது போன்று இருந்தால் அல்லவோ சிறப்பானது? கீதையில் - ஸததம் கீர்த்தயந்த: - எனது திருநாமங்களை எப்போதும் கூறியபடி – என்று கூறியபடி அல்லவா இருக்கவேண்டும்?

வ்யாக்யானம் – (நின்றதில் பதினையாண்டு) – சேஷித்ததிலே பதினைந்து ஸம்வத்ஸரம் பாலனாயும், யுவாவாயும், விஷயப்ரவணானாயும் இங்ஙனே கழியும். "நின்ற இப்பதினையாண்டு" என்றபோது சேஷித்த நாள் பதிற்றஞ்சு ஐம்பது ஸம்வத்ஸரம் என்றாகிறது. இவன் போரப்பொலியப் பாரிக்கிற காலமெல்லாம் தமக்கு ஒன்றாயிராமையாலே, "இது" என்று க்ஷுத்ரமாகப் பேசுகிறார். (பேதை) – திருநாமம் சொல்லுகைக்கும் போக்யதையின்றிக்கே, தன்னுடைய ஹிதாஹிதங்கள் ஜநநியினுடைய புத்த்யதீநமாயிருக்கும் அத்யந்தசைசவம். (பாலகன் அதாகும்) – பாலனாகிற அந்த அவஸ்த்தையாம் என்றபடி. தீம்புகள் செய்தாலும் பொடியவொண்ணாத பருவம். இவனை "திருநாமம் சொல்லிற்றிலன்" என்று வெறுக்கவொண்ணாதே. (அதாகும்) – ததநந்தரமான அந்த அவஸ்த்தையாம் என்றபடி. ததநந்தரம் யௌவநம் வந்து ப்ரவேசித்து, விஷய ப்ரவணனாய்த் திரியும்.

ஜநநியினுடைய புத்த்யதீநமான பேதைத்தனமே நன்று என்னும்படியாய்த்து இதின் அறிவு கேடு இருப்பது.

விளக்கம் – (நின்று அதில் பதினையாண்டு) – மீதம் உள்ள ஐம்பது ஆண்டுகளிலே பதினைந்து ஆண்டுகள் ஏதும் அறியாமல் உள்ள பாலகப் பருவத்தில் கழிகின்றன. அடுத்த பதினைந்து ஆண்டுகள், உலக விஷயங்களில் திளைத்தபடித் திரிகின்ற வாலிபப் பருவத்தில் கழிகின்றன. "நின்ற இப்பதினையாண்டு" என்று படிக்கும்போது – மீதம் உள்ள பத்து ஐந்துகளான ஐம்பது ஆண்டுகள் – என்றாகிறது. இவ்விதம் மற்றவர்கள் பெரிதாக மதிக்கின்ற காலங்கள் அனைத்தும் இவருக்கு அற்பமானவையாக உள்ளதால், "இது" என்று அஃறிணையில் கூறுகிறார். (பேதை) – திருநாமங்களைக் கூறவல்ல வல்லமை இல்லாத குழந்தைப் பருவம். தனது நன்மை தீமைகளுக்குத் தனது தாயையே கொண்டிருக்கும் பருவம். (பாலகன் அதாகும்) – தாழ்வான பாலகப் பருவம். பல தீமைகள் செய்தாலும் கண்டித்துத் திருத்த இயலாத பருவம். இந்தக் குழந்தை எம்பெருமானின் திருநாமம் கூறவில்லை என்று கண்டிக்க இயலாது அல்லவா? (அதாகும்) – பாலகப் பருவத்தை அடுத்து உள்ள வாலிபப் பருவம். பாலகப் பருவத்தை அடுத்து வாலிபம் வந்து புகுந்து கொள்கிறது. அப்போது உலகவிஷயங்களில் திரிந்தபடி உள்ளான். தாயை அண்டியே இருந்த குழந்தைப் பருவமே நல்லதாக இருந்த்து என்று கூறும்படியாக, இந்த வாலிபப் பருவத்தில் அறிவுத் தடுமாற்றம் ஏற்படுகிறது.

வ்யாக்யானம் – உள்ள அறிவு அக்ருத்யகரணத்துக்கு உடலாகையாலே அந்த யௌவநம் அழிவதற்கு முன்னே வ்யாதி வந்து கைக்கொள்ளும். அத்தை வேரும் விரகும் தேடி ஒருபடி பரிஹரித்துக் கொள்ளக்கண்டு பசி தலையெடுக்கும். பசியாவது ஸர்வேந்த்ரியங்களும் ஸ்வஸ்வவிஷயங்களிலே ப்ரவணமாகை. ஆரோக்யம் பிறந்தவாறே இந்த்ரியங்கள் தலையெடுத்து, "விஷயங்களைக் காட்டு காட்டு" என்று நலியத் தொடங்கும். "ஐவர் திசைதிசை வலித்தெற்றுகின்றனர்" என்றும், "ஐவர் அறுத்துத் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன்" என்றும் சொல்லக்கடவதிறே. காலன் கொண்டும், பரஹிம்ஸை பண்ணியும், த்ரவ்யார்ஜநம் பண்ணுகிறது – இந்த்ரியங்களால் வரும் நலிவு தீருகைக்கிறே. இங்ஙனே செல்லா நிற்க, ஜரை வந்து கைக்கொள்ளும். ஜரையாகிறது சாலப் பொல்லாத்தொன்றிறே. போகபோக்யதையின்றிக்கேயிருக்கச் செய்தே சாபல்யம் அநுவர்த்திக்குமிறே. "பண்டு காமரானவாறும்" என்று வ்ருத்தகீர்த்தனம்

பண்ணியாகிலும் தரிப்போமென்று பார்க்கும். இவ்வளவிலே இடிவிழுந்தாற்போலே மரணம் வந்து உபஸ்த்திதமாம். (துன்பம்) – இதுவே துக்கமாய், நிரந்வய விநாசத்தோடே தலைக்கட்டும். பால்யே க்ரீடநகாஸக்தா: யௌவநே விஷயோந்முகா: அஜ்ஞா நயந்த்யசக்தாச்ச வார்த்தகம் ஸமுபஸ்திதம்.

விளக்கம் – வாலிபப் பருவத்தின் அறிவு என்பது தவறான செயல்களைச் செய்யத் தூண்டும் விதமாக உள்ளதால், அந்தப் பருவம் கழிவதற்கு முன்பாகவே பல பிணிகள் வந்து பீடிக்கின்றன. இவ்விதம் உண்டான பிணி என்பதை நீக்குவதற்கு வேர்கள், பத்தியமாக உண்ணுதல் முதலானவற்றைக் கைக்கொள்வதற்கு முன்பாக பசி உண்டாகி விடுகிறது. பசி என்பது அந்தந்த இந்த்ரியங்கள் அந்தந்த விஷயங்களில் ஈடுபாடு கொண்டு திரிவதாகும். பிணி நீங்கி உடல் ஆரோக்யம் பெற்ற பின்னர், இந்த்ரியங்கள் அனைத்தும், "விஷயங்களைக் காண்பிப்பாயாக", என்று நச்சரிக்கும். இதனை திருவாய்மொழி (7-1-10) - ஐவர் திசைதிசை வலித்தெற்றுகின்றனர் – என்றும், பெரியதிருமொழி (7-7-7) - ஐவர் அறுத்துத் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன் – என்றும் கூறின அன்றோ? காலன் கொள்வதன் மூலமும் (காலன் கொள்வது என்றால் – ஒருவர் மரணப்படுக்கையில் உள்ளபோது அவருக்கு உண்டாகும் மரணபயம் நீங்குவதற்காக, யமன் போன்று தங்கத்தால் ஆகிய உருவம் செய்து வேறு ஒருவருக்கு அளிப்பார்கள். அப்போது மரணபயம் அந்த உருவத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு சென்றுவிடும்), மற்றவர்களிடம் பொருள்களை அபஹரித்தும் தங்களது இந்த்ரிய பசியை நீக்கிக் கொள்கின்றனர் – இப்படியாக இந்த்ரியங்கள் மூலம் உண்டாகும் துன்பங்களை நீக்க முயல்கின்றனர். இப்படியே நாள்கள் கழிய ஒருநாள் வயோதிகம் வந்துவிடுகிறது. இந்த வயோதிகம் என்பது மிகவும் பொல்லாததாக உள்ளது – காரணம், இந்த்ரியங்கள் மூலம் அனுபவிக்க எந்தவிதமான தெம்பும் இல்லாதபோதும், அதில் ஈடுபடும்படித் தூண்டுகிறது. பெரியதிருமொழி (1-3-5) - பண்டு காமரானவாறும் – கூறுவது போன்று, முன்னர் அனுபவித்த இன்பங்களை வாயால் கூறியபடி இருந்தாவது உயிர் வாழ்வோம் என்று எண்ண வைக்கும். இப்படியாக உள்ளபோது, அந்த ஆசையில் இடி விழுந்தது போன்று, மரணம் உண்டாகும். (துன்பம்) – இது அனைத்தையும் காட்டிலும் பெரிய துன்பமாகும். இதுவரை இருந்து வந்த அனைத்து உறவுகள் போன்றவற்றுடனான தொடர்புகள் அழிந்துவிடும். விஷ்ணுபுராணம் - பால்யே க்ரீடநகாஸக்தா: யௌவநே விஷயோந்முகா: அஜ்ஞா நயந்த்யசக்தாச்ச வார்த்தகம் ஸமுபஸ்திதம் – சிறு வயதில்

விளையாட்டுப் பொருட்களிலும், வாலிப வயதில் உலக விஷயங்களிலும் ஈடுபடுகின்றனர்; வயோதிகத்தில் அறிவும் திறனும் குறைந்தவர்களாக உள்ளனர் – என்றது.

வ்யாக்யானம் – (ஆதலால் பிறவி வேண்டேன்) – நாடு பிடித்தார்க்கு ஒழுகைக் காட்டி குட்டமும் திடரும் மணலும் மடையுமாக எழுதி வெறும் பாழாக்கிக் காட்டுவாரைப் போலே, திருநாமம் சொல்லுகைக்கு அவஸரமில்லாதபடி உள்ள ஆயுஸ்ஸை புறம்பே செல்லுகிறபடியைப் பேசி, பெரியபெருமாளுக்கு விண்ணப்பம் செய்கிறார். நீர், "அச்சுவை பெறினும் வேண்டேன்", "ஆதலால் பிறவி வேண்டேன்" என்று விபூதி த்வயத்துக்கும் கண்ணழிவு சொல்லா நின்றீர். "நிற்பாயாகில் திருவாணை; கிடப்பாயாகில் திருவாணை" என்பாரைப் போலே நீர் படுத்துகிறதென்? நமக்கு விபூதி த்வயமேயன்றோ உள்ளது என்ன; (அரங்கமா நகருளானே) – விபூதி த்வயத்துக்கும் புறம்பாய் த்ருதீயா விபூதியான கோயிலிலே எனக்கு ஓரிருப்பிடம் அரிதோ? என்கிறார்.

விளக்கம் – ஓர் இடத்தை வாங்க விரும்பும் ஒருவன் அந்த இடத்தின் பல்வேறு இடங்களை, அதனை விற்பவரிடம் காண்பித்து, "இதோ பள்ளம் உள்ளது, இதோ குன்றாக உள்ளது, மணலும் சகதியுமாக உள்ளது", என்று குறை கண்டு பிடிப்பான். இதன் மூலம் நிலத்தின் விலையைக் குறைக்க முயல்வான். இது போன்றே ஆழ்வாரும், திருநாமம் கூறுவதற்குக் குறையாக தனது ஆயுள் அனைத்தும் உலக விஷயங்களில் ஈடுபடுவதைக் கூறுகிறார். இதனைக் கேட்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "ஆழ்வாரே! பரமபதம் அளிக்கிறேன் என்றால் – அச்சுவை பெறினும் வேண்டேன் – என்கிறீர்; சரி, இங்கேயே இருப்பீர் என்றால் - ஆதலால் பிறவி வேண்டேன் - என்கிறீர்; இப்படியாக நமது இரண்டு விபூதிகளுக்கும் ஏதோ காரணம் கூறுகிறீர்; நின்றாலும் கட்டளை இடுவேன், படுத்துக் கிடந்தாலும் கட்டளை இடுவேன் என்று கூறுபவர் போன்று நீவிர் நடந்து கொள்கிறீரே! நம்மிடம் இரண்டு விபூதிகள் மட்டுமே உள்ளன; உமக்கு அளிக்க வேறு இடம் இல்லையே", என்றான். (அரங்கமா நகருளானே) – இதனைக் கேட்ட ஆழ்வார் சட்டென்று, "உனது இந்த இரண்டு விபூதிகளுக்கும் வேறுபட்டதாக, மூன்றாவது இருப்பிடமான திருவரங்கத்திலேயே நான் இருக்க எனக்கு ஓர் இடம் அளிப்பது உனக்குக் கடினமான செயலோ?", என்றார்.

வ்யாக்யானம் – கோயிலில் வந்தால் – அதிபால்யத்தில் அந்நப்ராசநத்துக்கு என்றாகிலும் திருவடிகளிலே கொண்டு புகுருவர்கள்; க்ரீடாவஸ்தையிலும் பாலா அபி க்ரீடமாநா: என்கிறபடியே செல்வர் எழுந்தருளும்படியை அநுகரியா நிற்பர்கள். பக்வனானால் தான் விரும்பின விஷயங்களைப் பற்ற உள்ளே புகக் கடவனாயிருக்கும். பெருமாளுடைய வடிவழகும், அங்குத்தை பாவநத்வமும் விஷயாந்தரங்களில் துவக்கையும் அறுக்கும். வ்ருத்தனாய் உள்ளுப் புகமாட்டாதவற்றைக்கு, இவன் வாசலிலே வந்து நிற்பர். ஆக இப்படி வாஸிதமாகையாலே ஸ்வப்நத்திலும் காண்பது இவ்வடிவேயாயிருக்கும். இனி தேசோ அயம் ஸர்வகாமதுக் என்கிறபடியே தேசந்தானே எல்லா நன்மைகளையும் பண்ணிக் கொடுக்கவற்று; ஆகையாலே கோயில் வாஸம் அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லா நிற்குமிறே.

விளக்கம் – திருவரங்கம் பெரியகோயிலில், குழந்தையை அன்னப்ராசனம் (முதல் முறையாக சாதம் ஊட்டுதல்) செய்யும் பொருட்டு பெரியபெருமாளின் திருவடிகளில் கொண்டு வருவார்கள். பாலகனாக உள்ளபோது, இராமாயணம் - பாலா அபி க்ரீடமாநா: - விளையாடும் சிறுவர்களுடன் – என்னும்படி, நம்பெருமாள் எழுந்தருளும்படியான விளையாட்டைப் போலியாகச் செய்து விளையாடுவான். வாலிபப் பருவத்தின், தான் காண விரும்பும் பெண்ணைக் காண்பதற்காகப் பெரியகோயிலுக்குள் புகுவான். பின்னர் பெரியபெருமாளின் திருமேனி அழகு, திருவரங்கத்தின் வினை தீர்க்கும் மேன்மை ஆகியவை இவனுக்கு உலக விஷயங்களின் மீது உள்ள பற்றுதலை நீக்கிவிடும். இவன் நோய் காரணமாகவோ, வயோதிகம் காரணமாகவோ கோயிலுக்குள் சென்று நம்பெருமாளைக் காண இயலாமல் தவிக்கும்போதும், நம்பெருமாளே இவன் உள்ள வீட்டின் வாசலுக்கு முன்பாக வந்து நிற்பான். இப்படியாக எப்போதும் நம்பெருமாளின் சிந்தனையாகவே இவன் உள்ளதால், கனவில் காண்பதும் அரங்கனின் திருமேனியே என்றாகிவிடும். கருடபுராணம் - தேசோ அயம் ஸர்வகாமதுக் – இந்தத் தேசம் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுவதாக உள்ளது – என்று கூறுவதற்கு ஏற்ப, திருவரங்கம் அனைத்து நன்மைகளையும் அளிப்பதாகவே உள்ளது. ஆக பெரியகோயிலில் வசித்தல் என்பது இவர் விரும்பும் சிறப்புகள் கொண்டது என்றாகிறது.

4. மொய்த்த வல்வினையுள் நின்று மூன்று எழுத்து உடைய பேரால்

கத்திர பந்தும் அன்றே பராங்கதி கண்டு கொண்டான்

இத்தனை அடியர் ஆனார்க்கு இரங்கும் நம் அரங்கனாய

பித்தனைப் பெற்றும் அந்தோ! பிறவியுள் பிணங்குமாறே.

பொருள் – க்ஷத்ரபந்து என்பவன் மிகவும் அடர்ந்ததும், வலிமை கொண்டதும் ஆகிய பாவக்கடலில் நின்றபடி, "கோவிந்தா" என்னும் மூன்று எழுத்து திருநாமம் ஓதி, உயர்ந்த கதியான மோக்ஷம் பெற்றான். இப்படிப்பட்ட பாவம் செய்தவர்களுக்கும் இரங்கி நிற்பவன், தனது அடியார்களிடம் பித்துப் பிடித்தவன் போல் உள்ளவன் ஆகிய பெரியபெருமாளை நாம் நமக்கு ஸ்வாமியாகக் கொண்டுள்ளோம். அதன் பின்னரும் பல பிறவிகள் எடுத்து வருந்துவது ஏனோ?

அவதாரிகை – கீழ் மூன்று பாட்டாலும் ஸ்வலாபத்தைப் பேசி, அநந்தரம் பதினோரு பாட்டாலே பரோபதேசம் பண்ணுகிறார். ஸ்வாநுபவத்தை விட்டு, பரோபதேசம் பண்ணுகைக்கு ஹேதுவென் என்னில் – ப்ராப்தமுமாய் ஸுலபமுமான இவ்விஷயத்தை ஸம்ஸாரிகள் இழக்கிற இழவைப் பொறுக்கமாட்டாமையாலும் இவ்விஷயந்தான் ஸஹகாரியைப் பெற்றல்லது தனியநுபவிக்க அரிதாகையாலும் ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத என்கிறபடியே, அநுபூதாம்சம் பிறரை அநுபவிப்பித்தல்லது நிற்கமாட்டாத ப்ரக்ருதியாகையாலும் பரோபதேசத்திலே ப்ரவ்ருத்தராகிறார். இதில் முதற்பாட்டில், ஸம்ஸாரிகள் "பாபிகளான எங்களுக்குத் திருநாமம் சொல்லுகைக்கு யோக்யதையுண்டோ" என்ன; "ப்ராயச்சித்த ஸாத்யமல்லாதபடி பாபப்ரசுரனான க்ஷத்ரபந்துவும் திருநாம ப்ரபாவத்தாலே பரமபத ப்ராப்தியைப் பண்ணினபடியைக் கேட்டார்க்கு "அயோக்யன்" என்று அகல விரகுண்டோ?" என்றவிடத்திலும் விழுகராகக் கண்டவாறே "இத்தைக் கேட்டுவைத்தும் பாபபலமான ஜந்மாதி க்லேசத்தை அநுபவிப்பதே" என்று விஸ்மிதராகிறார்.

விளக்கம் – இதுவரை கண்ட மூன்று பாசுரங்கள் மூலமாக தான் அடைந்த பேற்றினைக் கூறினார். அடுத்து, இந்தப் பாசுரம் தொடங்கி அடுத்து வரும் பதினொரு பாசுரங்களால் மற்றவர்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்குகிறார். தான் எம்பெருமானைத் தொடர்ந்து அனுபவிப்பதை விட்டு, மற்றவர்களுக்கு உபதேசம் செய்யத்

தொடங்குவதற்கு என்ன காரணம்? தாங்கள் அடையவேண்டியதாகவும், மிகவும் சுலபமாக உள்ளதும் ஆகிய இந்த மார்க்கத்தை ஸம்ஸாரிகள் இழந்து நிற்கும் நிலையை இவரால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. இந்த மார்க்கத்தின் மேன்மையைக் காணும்போது, இதனை அனுபவிக்க பலரின் துணை தேவை என்றும், தனியே நின்று அனுபவிக்க இயலாது என்றும் உணர்ந்தார். மேலும், மஹாபாரதம் - ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத – நல்ல உணவைத் தனியாக உட்கொள்ளக் கூடாது – என்றது. இவர், தான் அனுபவிக்கும் உயர்ந்த வஸ்துவை மற்றவர்கள் அனுபவிக்காமல் இருப்பதைப் பொறுக்காதவர் ஆவார். ஆகவே மற்றவர்களுக்கு எம்பெருமானைக் குறித்து உபதேசம் செய்கிறார். இனிவரும் பதினோரு பாசுரங்களில் முதல் பாசுரத்தில் (திருமாலை – நான்காம் பாசுரம்) ஸம்ஸாரிகள் இவரிடம், "மிகுந்த பாவங்கள் செய்யும் எங்களுக்கு அவனது திருநாமத்தைக் கூறும் தகுதி உண்டோ?", என்றனர். அதற்கு இவர், "ப்ராயச்சித்தம் செய்தாலும் கழியாத பல பாவங்களை க்ஷத்ரபந்து என்பவன் செய்தான். அப்படிப்பட்ட அவன்கூட எம்பெருமானின் திருநாமத்தின் மேன்மை காரணமாகப் பரமபதம் பெற்றான் என்று தர்ம சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இவற்றை அறிந்த பின்னரும் – எங்களுக்குத் தகுதியில்லை – என்று நீங்கள் விலகி நிற்கலாமோ?", என்றார். அதன் பின்னரும் ஸம்ஸாரிகள் திருநாமத்தில் ஈடுபடாமல் நிற்பதைக் கண்டார். ஆகவே, "திருநாமத்தின் மேன்மைகளைக் கேட்ட பின்னரும், அதனைக் கூறாமல், பாவங்களின் பலனாகிய பிறப்பு-இறப்பு என்ற துன்பங்களை அனுபவித்தபடி உள்ளனரே", என்று வியந்து நிற்கிறார்.

வ்யாக்யானம் – (மொய்த்த வல்வினை) – பாபங்கள் மிகைத்து "நான் முற்பட நான் முற்பட" என்று மேல் விழுந்து மொய்த்துக் கொண்டு கிடக்கிறபடி. தேன்கூட்டை ஈ மொய்த்துக் கொள்ளுமாபோலே மொய்த்துக் கொள்ளுகை. "நெய்க்குடத்தைப் பற்றியேறுமெறும்புகள்" என்னக் கடவதிறே. முதலிகள் லங்கையை "எனக்கு எனக்கு" என்னுமாபோலே. மேருமந்தரமாத்ர: அபி, இஷீகதூலமக்நௌ ப்ரோதம். ஜகத் ஸ்ருஷ்டியில் ஈச்வரனுக்குண்டான சக்தி போரும் சேதநனுக்கு பாபஸ்ருஷ்டியிலுண்டான சக்தியும். (வல்வினை) – ஒரு பாபந்தானே காலதத்வமுள்ளதனையும் அநுபவிக்க வேண்டும்படியிறே இதின் பலமிருப்பது. யத் ப்ரஹ்ம கல்பநியுதாநுபவே அபி. ஒரு ஸர்வசக்தி போக்குதல் தவிருதல் செய்ய வேண்டும்படியிறே பாபத்தின் கனமிருப்பது.

விளக்கம் - (மொய்த்த வல்வினை) – பாவங்களின் கூட்டம் அதிகமாகி இவன் மீது (இவன் என்பது க்ஷுத்ரபந்து) விழுந்து, "நான் முந்தி, நீ முந்தி" என்று கூவும்படியாக உள்ள நிலை. தேன் நிறைந்த ஜாடியை ஈக்கள் மொய்ப்பது போன்று இவனைப் பாவங்கள் மொய்த்தபடி உள்ளன. பெரியாழ்வார் திருமொழியில் (5-2-1) - நெய்க்குடத்தைப் பற்றியேறு மெறும்புகள் – என்றார் அல்லவோ? வானரவீரர்கள் இலங்கையை அழிக்கும்போது, "நான் அழிப்பேன் நான் அழிப்பேன்" என்பது போன்று, பாவங்கள் இவனை "நான் அழிப்பேன் நான் அழிப்பேன்" என்றபடி இருந்தன. விஷ்ணுதர்மம் - மேருமந்தரமாத்ர: அபி – மேருமலை மந்த்ர மலை போன்ற பாவக்குவியல் – என்று கூறுவது போல் உள்ள பாவமலையானது, சாந்தோக்ய உபனிஷத் - இஷீகதூலமக்நௌ ப்ரோதம் – தீயில் இடப்பட்ட பஞ்சு எவ்விதம் எரிகிறதோ – கூறுவது போன்று திருநாமம் என்னும் தீயால் எரிக்கப்படுகின்றன. இந்த உலகைப் படைப்பதில் ஸர்வேச்வரனுக்கு எந்த அளவு சக்தி உள்ளதோ, அந்த அளவிற்கு ஜீவனுக்குப் பாவங்களைப் படைப்பதில் சக்தி உள்ளது என்று கூறலாம்படி ஜீவன் உள்ளான். (வல்வினை) – இவனது ஒரே ஒரு பாவம் மட்டுமே காலம் என்பது உள்ளவரை அதன் பலனை அனுபவித்துக் கழிக்கும்படி உள்ளது, ஆக ஒரு பாவத்திற்கு மட்டுமே இத்தனை பலம் உள்ளது. ஸ்ரீவைகுண்டஸ்தவம் - யத் ப்ரஹ்ம கல்பநியுதாநுபவே அபி – எந்தப் பாவம் பல்லாயிரம் ப்ரஹ்ம கல்பகாலங்கள் அனுபவித்தாலும் கழியாதோ – என்றது காண்க. எம்பெருமானே இரங்கி, "இந்தப் பாவங்களைப் போக்குகிறேன்", என்று கூறி இவனைத் தண்டிக்காமல் தவிர்த்தால் மட்டுமே பிழைக்க இயலும் என்னும்படியாக இந்தப் பாவங்களின் கனம் உள்ளது.

வ்யாக்யானம் - (உள்நின்று) – ஸமிதையிடாமணியைப் போலே தானே சூழ்த்துக் கொண்டு கிடக்கிறபடி. நடுக்கடலிலே ஒரு க்ஷுத்ர ஜந்து நின்று அலையுமாபோலே, அணுபரிமாணவஸ்து, பாப ஸமுத்திரத்திலே நின்று அலைகிறபடி. "சிறியனேலும் செய்வினையோ பெரிதால்", என்னக் கடவதிறே. (நின்று) – பாபங்களுக்கு இடையாதொழிகை. ஸர்வம் ஸஹேமே என்னக் கடவதிறே. நெருப்பிலே கால்பாவினாற்போலே, பாபங்களிலே வேர்விழுவதே.

விளக்கம் – மாணி என்னும் பூச்சி போன்று தன்னைத்தானே பாவங்கள் சூழும்படிச் செய்து – மாணி என்னும் பூச்சி தன்னைத்தானே சுற்றி ஒரு கூடு கட்டிக் கொள்ளும்.

மாணி என்பது ப்ரம்மச்சாரியையும் குறிக்கும் என்பதால், ஸமித்துக்களை இடாத மாணி என்றார்; ப்ரம்மச்சாரி என்பவன் ஸமித்துகளை அக்னியில் இடுபவன். நடுக்கடலில் ஒரு மிகச்சிறிய பூச்சியானது அலைகளில் சிக்குண்டு தவிப்பது போன்று, அணுவாகிய இந்த ஜீவன் பாவம் என்னும் ஸமுத்திரத்தில் சிக்குண்டு அலைகிறான். திருவாய்மொழி (4-7-1) - சிறியனேலும் செய்வினையோ பெரிதால் – என்று கூறியது அன்றோ? (நின்று) – பாவங்கள் மிகுதியாக உள்ளதைக் கண்டு, அச்சம் கொண்டு பின்வாங்காமல் உள்ளான். ஸ்தோத்ர ரத்னம் (25) - ஸர்வம் ஸஹேமே – அனைத்து துன்பங்களையும் நான் பொறுத்துக் கொள்வேன் – என்பது போல் உள்ளான்.

வ்யாக்யானம் - (மூன்றெழுத்து உடைய பேரால்) – மூன்றெழுத்தையுடைய திருநாமத்தாலே. "கெடுமிடராயவெல்லாம்" இத்யாதி. பாபங்களைப் பண்ணின காலப்பரப்பும், பாபத்தின் பரப்பும் போலேயிருக்கிறதோ பாபவிமோசநம் என்னில், "மூன்றெழுத்து" என்கிறது. ஓரோ திருவக்ஷரமே போரும் என்கைக்காக. ப்ரக்ருதி ப்ரத்ய்ய யோகத்தாலே பதமாயிருக்கையன்றியே மூன்று அக்ஷரமாயிருக்கை. "ஓர் அய்தாக்ஷரீ, ஸஹஸ்ராக்ஷரீ" என்னுமவைபோலே "முடிந்ததாய்விடவற்றே" என்றிருக்குமதன்றே இது. (பேரால்) – மந்த்ரமென்னாதொழிந்து, "ரிஷி சந்தோ தேவதை, சக்தி, பீஜம், வர்ணம், விநியோகம், த்யாநம்" என்னுமாபோலே, சில சடங்குகளுண்டாய், அதி க்ருதாதிகாரமா யிருக்கையன்றியே ஸர்வாதிகாரமாய், ஸ்த்ரீ பால ஸாத்யமாயிருக்கை. இடறினவன் "அம்மே" என்னுமாபோலே இடர் வந்தபோது ஸர்வருக்கும் சொல்ல ப்ராப்தியுண்டா யிருக்கை. இன்ன திருநாமம் என்னாதே "மூன்றெழுத்துடைய பேரால்" என்றது, ருசி பிறந்தவன்று உபதேசிக்கைக்காக ஆச்சாதிக்கிறார். "மூன்றெழுத்தனை" என்று பெரியாழ்வார் மறைத்தாற்போலே.

விளக்கம் - (மூன்றெழுத்து உடைய பேரால்) – மூன்று எழுத்துக்கள் கொண்ட கோவிந்த என்னும் திருநாமம் மூலமாக. திருவாய்மொழி (10-2-1) – கெடும் இடர் ஆயவெல்லாம் கேசவா என்ன – என்றது காண்க. "பாவங்களைச் செய்த காலத்தின் அளவு, பாவங்களின் எண்ணிக்கை அளவு ஆகியவற்றைக் காட்டிலும் பாவங்களை நீக்கும் இந்தத் திருநாமத்தின் அளவு பெரியதோ?" என்ற கேள்வி எழலாம். "மிகவும் பெரியது அல்ல, மூன்றேஎழுத்து", என்றார். மூன்று எனக்கூறியது ஏன் என்றால், ஒரே எழுத்தே பாவங்களை நீக்கிவிடும் என்று உணர்த்தவே ஆகும். தனித்தனியே அக்ஷரங்கள்

பொருள் இன்றி, மூன்று எழுத்துக்களும் சேர்ந்து ஒரு பொருள் தருவதாக உள்ளது. அய்தாக்ஷரீ என்று பத்தாயிரம் எழுத்துடனோ அல்லது ஸஹஸ்ராக்ஷரீ என்று ஆயிரம் எழுத்துடனோ அல்லாமல், கூறுவதற்கு "எப்போது கூறி முடிப்போம்" என்ற எண்ணம் உண்டாகாமல் மிகவும் எளிதாகக் கூறும்படி உள்ளது. (பேரால்) – மந்த்ரம் என்று ஏன் கூறவில்லை? மந்த்ரம் போன்று சில சடங்குகளில் மட்டும் கூறவேண்டும் என்ற கட்டுப்பாடு இன்றி, இதனைச் சிலர் மட்டுமே கூறலாம் என்னும் கட்டுப்பாடு இன்றி, அனைவருக்கும் இதனைக் கூறுவதற்குத் தகுதி உண்டு என்னும்படியாக, பெண்களுக்கும் சிறுவயதினருக்கும் ஏற்றபடி உள்ளது. "ரிஷி, சந்தஸ், தேவதை, சக்தி, பீஜம், வர்ணம், விநியோகம், த்யாநம்" என்பதான அங்கந்யாஸ, கரந்யாஸ விதிமுறைகள் இதற்கு இல்லை. தடுக்கி விழுந்தவன் "அம்மா" என்று அழைப்பதற்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லாதது போன்று, துன்பம் கொண்ட நேரத்தில் யாருக்கும் இந்தத் திருநாமத்தை உச்சரிக்க உரிமையுள்ளது. இந்தத் திருநாமம் இது என்று நேரடியாகக் கூறாமல், "மூன்றெழுத்து" என்று ஏன் மறைமுகமாகக் கூறவேண்டும்? மூன்றெழுத்து என்று கூறுவதன் மூலம், "இது யாரை குறிக்கிறது" என்ற ஆவல் மேலிட, இதன் மீது ஆசை ஏற்படும். அவர்களுக்கு மட்டும் உபதேசம் செய்யலாம் என்று எண்ணி இவ்விதம் அருளிச்செய்தார். பெரியாழ்வாரும் தனது திருமொழியில் (4-7-10) – மூன்றெழுத்து அதனை – என்று மறைமுகமாகவே அருளிச்செய்தார் அல்லவோ?

வ்யாக்யானம் – (கத்திரபந்தும்) – க்ஷத்ரியாணாமதம: இதி க்ஷத்ரபந்து: ப்ரஹ்மபந்து: என்னுமாபோலே. சகாரத்தாலே தண்மைக்கு எல்லை நிலமான இவனும். (அன்றே) – நம் முதலிகள் கோஷ்டியில் நாலூரான் என்றாற்போலே, ரிஷிகள் கோஷ்டியில் க்ஷத்ரபந்து என்றால் செவி புதைக்கும்படியாய்த்து இருப்பது. ஸந்த்யக்தே பந்துலோகேந தஸ்மிந் துர்வ்ருத்த சேதஸி சிந்தாம் சகார ஸ முநி: க்ஷத்ரபந்தெள தயாபர:. (பராங்கதி கண்டு கொண்டான்) – பாபவிமோசனமே பலம் போந்திருக்க, அவ்வளவன்றிக்கே ஸ்வர்க்காதி பலங்களின் அளவுமன்றிக்கே, ஐச்வர்ய கைவல்யங்களளவுமன்றிக்கே, உத்தம புருஷார்த்தத்தைக் கிடீர் லபித்தது. ஸம்ஸாரிகளில் கடையானவன் அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தருடைய அநுபவத்தையிறே பெற்றது. (கண்டு கொண்டான்) – என்றது இழந்தது பெற்றாற்போலேயிருக்கை. திருநாமம் சொன்னதுக்குப் பலன் பெற்றானாயிருக் கையன்றிக்கே, தன்னது தான் பெற்றானாகவாய்த்து இவன் நினைத்திருப்பது. அஜ்ஞாநத்தாலே மறைந்து கிடந்ததாய், பகவத் விஷயீகாரத்தாலே

அதில் நிவ்ருத்தி பிறந்தால், ஸ்வரூபமும் ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தி விசேஷமும் ப்ரகாசிக்குமித் தனையிறே. ப்ரகாச்யந்தே ந ஜந்யந்தே என்னக் கடவதிறே.

விளக்கம் - (கத்திரபந்தும்) – அந்தணர்களில் தாழ்ந்தவன் "ப்ரஹ்மபந்து" என்பது போன்று, க்ஷத்ரியர்களில் தாழ்ந்தவன் "க்ஷத்ரபந்து" என்பதாகும். கோவிந்த திருநாமம் கற்றதால் இவன் மேன்மைக்கு எல்லையை அடைந்தான். (அன்றே) – கூரத்தாழ்வான் தனது திருக்கண்களை இழக்கக் காரணமான நாலூரானின் பெயரைக் கேட்டாலே நமது ஆசார்யர்கள் கோஷ்டியில் உள்ள அனைவரும் அவனது பெயரைக் கேட்க விரும்பாமல் தங்கள் காதுகளை மூடிக் கொள்வார்கள். இது போன்றே க்ஷத்ரபந்துவின் பெயரைக் கேட்டாலே முனிவர்கள் கோஷ்டியில் உள்ள அனைவரும் அவனது பெயரைக் கேட்க விரும்பாமல் தங்கள் காதுகளை மூடிக் கொள்வார்கள். விஷ்ணுதர்மம் (97-38) - ஸந்த்யக்தே பந்துலோகேந தஸ்மிந் துர்வ்ருத்த சேதஸி சிந்தாம் சகார ஸ முநி: க்ஷத்ரபந்தெள தயாபர: - தனது உறவினர்களால் கைவிடப்பட்டவனும், தவறான நடத்தையில் மனதைச் செலுத்தியவனும் ஆகிய க்ஷத்ரபந்துவின் மீது கருணை கொண்டவரான முனிவர் – என்றது காண்க. (பராங்கதி கண்டு கொண்டான்) – திருநாமத்தின் மூலம் அனைத்துப் பாவங்களும் நீங்குவிடுகின்றன என்பதே போதுமான பலனாக உள்ளது. அதனையும் கடந்து அவனது திருநாமம் என்பது ஸ்வர்க்கம் போன்றவற்றின் அதிபதியாக இருக்கக்கூடிய ஐச்வர்யம், ஆத்மாவை அடையத்தக்க கைவல்யம் போன்றவற்றையும் அளிக்கவல்லது. இவற்றையும் கடந்து நிற்கும் மேன்மையான புருஷார்த்தமாகிய மோக்ஷத்தைப் பெற்றான். ஸம்ஸாரத்தில் உள்ளவர்களிலே மிகவும் தாழ்ந்தவனான க்ஷத்ரபந்து, ஸம்ஸாரத்தில் சிக்காமல் உள்ளவர்களான நித்யஸூரிகளுக்குக் கிட்டும் அனுபவத்தை அடைந்தான். (கண்டுகொண்டான்) – இதுநாள்வரை இழந்திருந்த அனுபவத்தை மீண்டும் பெற்றது போல் இருந்தது. திருநாமத்தின் மூலம் தான் எதனையும் புதிதாக அடையவில்லை என்றும், இத்தனை ஆண்டுகள் தான் பெற வேண்டியதைப் பெறாமல், இப்போது அவை பெறப்பட்டது என்றும் உணர்ந்தான். இவனது ஸ்வரூபம் அறியாமையால் மறைந்து கிடந்தது. பகவத் க்ருபை காரணமாக அந்த அறியாமை நீங்கியது. இதனால் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்ற சேஷத்வமும் (தான் எம்பெருமானுக்கு அடிமை), கைங்கர்யமும் வெளிப்பட்டது. விஷ்ணுதர்மம் - ப்ரகாச்யந்தே ந ஜந்யந்தே – ஆத்ம குணங்கள் வெளிப்படுகின்றனவே அல்லாமல் புதிதாகத் தோன்றுவதில்லை – என்றது காண்க.

வ்யாக்யானம் - (இத்தனையடியரானார்க்கு) – க்ஷத்ரபந்துவினளவு ஆநுகூல்ய முடையார்க்கு என்னுதல். "ஈச்வரன் சேஷி; நீ சேஷபூதன்" என்றால், அதில் அத்வேஷமுடையார்க்கு என்னுதல்; பதிம் விச்வஸ்ய, யஸ்யாஸ்மி என்று சிலர் சொன்னால், மநஸ்ஸு அதிர்ந்திராதிருக்கை. இவ்வளவைக் கொண்டு அடியரானார்க்கு என்னலாமோ என்னில் – பகவதபிப்ராயத்தாலே அருளிச் செய்கிறார். துராசாரோ அபி ஸர்வாசீ என்று தொடங்கி, நிர்த்தோஷம் வித்தி தம் ஐந்தும் ப்ரபாவாத் பரமாத்மந: என்னக்கடவதிறே. "இத்தனை" என்கிற இதுதான் மேருமந்த்ரம் சுமந்தாற்போலேயாய்த்து இருக்கிறது அத்தலைக்கு. பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம என்னக்கடவதிறே.

விளக்கம் – (இத்தனை அடியர் ஆனார்க்கு) – க்ஷத்ரபந்துவின் அளவிற்காவது எம்பெருமானிடம் பற்றுதல் கொண்டவர்களுக்கு. "ஈச்வரன் உனது எஜமானன், நீ அவனது அடிமை" என்று கூறினால் கோபம் கொள்ளாதவர்களுக்கு. தைத்திரீயம் - பதிம் விச்வஸ்ய – உலகிற்கே நாதன்; யஜுர் – யஸ்யாஸ்மி – யாருக்கு நான் தாசனோ – போன்ற வரிகளைக் கேட்டவுடன் மனமானது அதிராமல் உள்ளவர்களுக்கு. இத்தனைக் குறைந்த அளவிற்கு பகவத் அனுபவம் உள்ளவர்களையா "அடியார் ஆனார்க்கு" என்பது என்ற கேள்வி எழலாம். இவர்களையும் அவன் அடியார்களாகவே கொள்கிறான் என்பதால் அருளிச்செய்தார். துராசாரோ அபி ஸர்வாசீ – பல காலம் ஒருவன் தீயவனாக இருந்தபோதிலும் – என்று தொடங்கி, நிர்த்தோஷம் வித்தி தம் ஐந்தும் ப்ரபாவாத் பரமாத்மந: - அவன் எம்பெருமானைச் சரணம் அடைந்தால், அனைத்து தோஷங்களும் விலகிவிடும் – என்றது காண்க. "இத்தனை" என்பதன் மூலம், இப்படிப்பட்டவர்களின் பக்தி என்பதே எம்பெருமானுக்குத் தனது உள்ளத்தில் மேரு மலை, மந்த்ர மலை போன்றவற்றைச் சுமந்த சுமை போன்று கனமாக உள்ளது. பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம – நீ மிகவும் மதிக்கின்ற "நம" என்பதை நாங்கள் அடிக்கடிக் கூறுவோம்.

வ்யாக்யானம் – (இரங்கும்) – அத்வேஷயுக்தனுக்கு இது புருஷார்த்தமாம்போது, ஸ்வாபாவிக ஸம்பந்தத்தாலே இத்தலையில் ஆபிமுக்யத்திலே அவஸரப்ரதீக்ஷனா யிருக்கையிறே, பெறுகிறது தன்னை; இத்தலையிலுள்ளது விலக்காமை; பேற்றுக்கு இது எங்ஙனே போரும்? அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்குமாபோல,. தானே எல்லாம்

செய்தாலும் "ஒன்றும் செய்திலோம்" என்னும் இரக்கமேயாய்த்து உள்ளது என்றுமாம். "உன்னடியார்க்கு என் செய்வனென்றேயிருத்தி நீ" என்னக் கடவதிறே.

விளக்கம் – (இரங்கும்) –மேலே கூறப்பட்டபடி ஸர்வேச்வரன் விஷயத்தில் த்வேஷம் இல்லாதவர்களுக்கு கிட்டுவது "ஸர்வேச்வரனுக்கு அடிமை" என்னும் உயர்ந்த புருஷார்த்தமாகும். தன்னுடன் சேதனர்களுக்கு உள்ள இயற்கையான உறவு காரணமாக இவர்களிடம் இந்தத் த்வேஷம் இல்லாமையை எதிர்பார்த்தபடி ஸர்வேச்வரன் உள்ளான். இதன் காரணமாக சேதனர்கள் அடைவது ஸர்வேச்வரன் என்னும் புருஷார்த்தமே ஆகும். இதற்காக சேதனர்களிடம் உள்ள தன்மை த்வேஷம் இல்லாமை என்பதே ஆகும். ஸர்வேச்வரன் என்னும் இத்தனை பெரிய புருஷார்த்தத்தை அடைவதற்கு "த்வேஷம் இன்மை" என்னும் சிறிய உபாயம் மட்டும் போதுமோ? போதுமானது, காரணம் தான் ஈன்ற கன்றுக்குத் தாய்ப்பசு இரங்கி நிற்பது போன்று, அடியார்களுக்கு எத்தனை உதவிகள் தானாகவே வலிய வந்து செய்தாலும், "இவர்களுக்கு நான் ஏதும் செய்யவில்லையே", என்று வருந்தும் இயல்பு கொண்டவன் ஸர்வேச்வரன் ஆவான். இவனைப் பற்றி நம்மாழ்வார் பெரியதிருவந்தாதியில் (53) – உன் அடியார்க்கு என் செய்வன் என்றே இருத்தி நீ – என்று அருளிச்செய்தார் அன்றோ?

வ்யாக்யானம் – (நம் அரங்கனாய) – அகிஞ்சநரான நமக்காகவிறே கோயிலிலே வந்து கண் வளர்ந்தருளுகிறது. பரமபதம் நித்யருக்கும், முக்தருக்கும். திருப்பாற்கடல் முக்தப்ராயரான ஸநகாதிகளுக்கும், ப்ரஹ்மாதிகளுக்கும். அவதாரங்கள் தத்காலீநரான பாக்யாதிகளுக்கு. கோயிலில் நிலை தேசகாலங்களுக்குப் பிற்பாடரான நிர்ப்பாக்யருக்கு முகங் கொடுக்கவிறே. "நம்" என்றது க்ஷத்ரபந்துவோடு ஸகோத்ரிகளான நமக்கும் ஸுலபனான இடமென்கை. (பித்தனை) – பித்தராகிறார் – பூர்வாவஸ்தையில் ஜ்ஞாநமின்றியிலே யொழிந்தார். தன்னையும் அறியாதே, பிறரையும் அறியாதே இருக்குமவர் என்றுமாம். அதாகிறது – கொள்ளுமவன் சிறுமை பார்த்தல், கொடுக்கிறவன் பெருமை பார்த்தல், கொடையின் சீர்மை பார்த்தல் செய்ய அறியாதிருக்குமவன் என்கை. (பெற்றும்) – தான் குறைவாளனேயாகிலும் குறை தீர்க்கும் ரக்ஷகனிருந்தவிடத்தே செல்லவேணுமிறே. அது வேண்டாதபடி பூர்ணனான தான் "என்னைக் கொள்வாருண்டோ?" என்று கிடக்கிற இடம்.

விளக்கம் - (நம் அரங்கனாய) – எந்தவிதமான உபாயமும் சிறிதும் இல்லாத நமக்காக அல்லவோ இவன் திருவரங்கத்தில் கண்வளர்கிறான். பரமபதம் என்பது அவன் நித்யஸூரிகளுக்காகவும், முக்தி பெற்றவர்களுக்காகவும் இரக்கதுடன் காட்சி அளிக்கும் இடமாகும். திருபாற்கடல் என்பது முக்தி பெற்றவர்களுக்கு நிகரான ஸனகர் முதலானவர்களுக்கும், ப்ரம்மன் முதலானவர்களுக்கும் இரக்கம் கொள்ளும் இடமாகும். இவனது பல்வேறு திருஅவதாரங்கள், அந்த அவதாரங்களின் காலத்தில் இருந்தவர்களுக்கு இரக்கம் கொள்வதற்காக ஆகும். ஆனால் இந்தப் பெரியகோயில் என்பது பரமபதம், திருப்பாற்கடல் முதலான இடங்களுக்குச் செல்ல இயலாதவர்கள், விபவ அவதார காலத்திற்குப் பிற்பட்டவர்கள் ஆகியவர்களுக்குத் தனது இனிய திருமுகத்தைக் காண்பிக்கும் இடமாக உள்ளது. "நம்" என்ற பதம் இட்டதன் காரணம் – க்ஷத்ரபந்துவைப் போன்ற நமக்கும் மிகவும் எளியவனாக உள்ள நிலை. (பித்தனை) – தனது முந்தைய நிலை என்னவென்று அறியாதவர்கள் பித்தர்கள் ஆவர்; தன்னையும் சரிவர அறிந்து கொள்ளாமல், மற்றவர்களையும் அறிந்து கொள்ளாமல் இருப்பவர்கள் பித்தர்கள் ஆவர்; தனது அடியார்களின் சிறுமை, தன்னுடைய மேன்மை, தான் அவர்களுக்கு அளிக்கும் பொருளான சிறந்த புருஷார்த்தம் என்பதின் மேன்மை ஆகிய்யற்றைக் காணாமல் உள்ளான். (பெற்றும்) – உலகில் பொதுவாக குறையுள்ளவர்கள், தங்களைக் காப்பாற்றவல்ல குறையில்லாதவனிடம் சென்று நிற்பதே முறையாகும். ஆனால் இங்கு அப்படி அல்லாமல், குறையுள்ள நம்மைத் தேடி, அனைத்து விதத்திலும் நிறைவாக உள்ளவன், "என்னை யாரும் வந்தடைய மாட்டார்களா?", என்று ஏக்கத்துடன் சயனித்துள்ள இடம்.

வ்யாக்யானம் – (அந்தோ பிறவியுள் பிணங்குமாறே) – ஸுலபமான விஷயத்தை விட்டுப் போனாலுமிறே, போய்ப் பெறுகிற விஷயம் இத்தோடு துல்யமாயிருக்குமாகில்; ஜந்மாதிகளிலே தான் அகப்பட்டுக் கிடக்கச்செய்தே அந்யோந்யம் விவாதம் பண்ணி முடிந்து போவதே என்று வெறுக்கிறார். ஒரு விடக்கைப் பற்றி இரண்டு பதார்த்தம் விவாதம் பண்ணுமாபோலே, அத்யந்தஹீநமாய் இருவர்க்கும் பாத்தம் போராத விஷயங்களைப் பற்றி ஸ்பர்த்தை பண்ணித் திரிவதே. (அந்தோ) – ஸர்வேச்வரனுக்கு ஸ்ரீகௌஸ்துபத்தோபாதி ஸ்ப்ருஹாவிஷயமான ஆத்மவஸ்து இப்படி படுவதே என்று தர்மஹாநி கண்டால் "படுகுலை, படுகுலை" என்பாரோபாதி வெறுக்கிறார். ப்ராப்தமுமாய், ஸுலபமுமாய், ஸுசீலமுமான இவ்விஷயத்தை விட்டு, அப்ராப்தமுமாய்,

துர்லபமுமாய், துச்சீலமுமான விஷயங்களைப் பற்றி க்லேசிக்கக் கண்டால், தார்மிகரான இவர்களுக்குப் பொறுக்கப்போமோ?

விளக்கம் - (அந்தோ பிறவியுள் பிணங்குமாறே) – அடைவதற்கு மிகவும் எளியதாக உள்ள இந்த விஷயத்தைக் கைவிட்டு, வேறு ஒரு விஷயத்தின் பின்னே சென்றாலும், அந்த விஷயம் இதனைவிடத் தாழ்வாக அல்லவோ உள்ளது? பிறப்பு இறப்பு என்னும் சுழற்சியில் உழன்றபடி, ஒருவருடன் வீண் விவாதம் செய்தபடி, பிறப்பு முடிந்து விடுகிறதே என்று வெறுத்துப் பேசுகிறார். இந்த உலகில் இருவர் உலக விஷயங்களைக் குறித்து, எந்தப் பலனும் இன்றி விவாதம் செய்வது என்பது, பிணத்தைப் பற்றிய இரண்டு கழுகுகள் அடித்துக் கொள்வது போன்று மிகவும் அற்பமானது என்றார். (அந்தோ) – "ஸர்வேச்வரன் தனது கௌஸ்துப மணியைக் கண்டு எத்தனை ஆசை கொள்வானோ, அது போன்று அவனால் ஆசைப்படத்தக்கதாக இந்த ஆத்மா உள்ளது. ஆயினும் இது இவ்விதம் உலக விஷயங்களில் ஈடுபட்டு அழிகின்றதே", என்று வெறுக்கிறார். அதர்மம் நிகழ்வதைக் கண்டு பலரும் கூச்சல் இடுவதைப் போன்று இவரும் செய்கிறார். ஜீவாத்மாவால் அடையத்தகுந்தது, அடைவதற்கு சுலபமாக உள்ளது, சிறப்பாக உள்ளது – இப்படி உள்ள வஸ்துவை விடுத்து – அடைவதற்கு ஏற்றதாக இல்லாததும், அடைவதற்குக் கடினமாக உள்ளதும், தாழ்வானதும் ஆகிய உலக விஷயங்களைக் கைப்பிடித்து, அதனால் துன்பம் அடைகின்றனர். இதனைக் கண்டால், தர்மத்தின் வழி நிற்கும் ஆழ்வார்களால் பொறுத்துக் கொள்ள இயலுமோ?

5. பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான் பெரியதோர் இடும்பை பூண்டு

உண்டு இரா கிடக்கும்போது உடலுக்கே கரைந்து நைந்து

தண் துழாய் மாலை மார்பன் தமர்களாய்ப் பாடி ஆடித்

தொண்டு பூண்டு அமுதம் உண்ணாத் தொழும்பர் சோறு உகக்குமாறே

பொருள் – பெண்கள் மூலமாகச் சுகங்கள் பெறுவதாக எண்ணிக் கொண்டு, பலவிதமான கடினங்களையும் அனுபவித்தபடி உள்ளனர். இத்தனை துன்பங்களையும் ஏற்றுக் கொண்டு, இரவு நேரத்தில் உணவு உண்டு, படுக்கையில் கிடக்கும்போது, தங்களது உடலைக் காப்பதற்கு என்ன செய்வது என்று கவலைப்பட்டபடியே உள்ளனர். இதனால்

மனம் நொந்து கிடக்கின்றனர். மிகவும் குளிர்ந்த துளசிமாலையை அணிந்த திருவரங்கனின் அடியார்களாக நின்று கொண்டு, அவனது திருக்கல்யாண குணங்களை வாயாரப் பாடி, அந்த குணங்களை எண்ணி ஆடி, அவனுக்குக் கைங்கர்யம் செய்யும் தன்மையை அடைந்து, அந்த அனுபவம் என்னும் அமிர்தம் பெறாமல் இவர்கள் உள்ளனர். இந்த அமிர்தத்தை விடுத்து இவர்கள் சோற்றை ஏன் விரும்புகின்றனரோ?

அவதாரிகை – "பிறவியுள் பிணங்குமாறு" என்று விலக்ஷண விஷயத்தை விட்டு துர்விஷயங்களைப் பற்றி அநர்த்தப்படுவதே" என்று வெறுத்தார் கீழ். ஏன்றான்? ஷோடசவயஸ்கையான ஸ்த்ரீகள் ஸஞ்சரிக்கிற ஸம்ஸாரத்துக்குப் பொல்லாங்கு சொல்லுவானென்? என்று லோகாயதிகன் ப்ரத்யவஸ்த்தானம் பண்ணினான். அவனாகிறான் – தேஹாதிரிக்தமாயிருப்பானொரு ஆத்மாவுண்டென்றும், தர்மாதர்மங்களுண்டென்றும், பரலோகமுண்டென்றும் சொல்லுகிறவை அஸத்யம்; ப்ரத்யக்ஷிக்கிற உடம்பு கொண்டு அநுபவிக்கிற த்ருஷ்டாநுபவமொழிய வேறொன்றில்லை என்னுமவன். அவர்களைக் குறித்து விஷயங்கள் அல்பாஸ்திரத்வாத்யநேக தோஷதூஷிதங்கள். இவை எல்லாம் சொல்லவேண்டுவது லபித்தாலிறே, துராராதமாகையாலே லபிக்கை அரிது என்கிறார்.

விளக்கம் – மிகவும் உயர்ந்த எம்பெருமானைக் கைவிட்டு, அற்பமான விஷயங்களில் ஈடுபட்டபடி உள்ளனரே என்று "பிறவியுள் பிணங்குமாறு" என்னும் பாசுரம் மூலமாக நொந்துகொண்டார். இதனைக் கேட்ட லோகாயதன், "உலக விஷயங்களுக்கு என்ன குறை உள்ளது? இன்பம் அளிக்கவல்ல பதினாறு வயதுப் பெண்கள் நிறைந்த ஸம்ஸாரத்தை ஏன் தூற்றவேண்டும்?, என்று கேட்டான். இவனது தத்துவம் என்ன என்றால் – உடலைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மா உண்டு; தர்மம்-அதர்மம் என்பது உண்டு; பரமபதம் என்பது இல்லை; கண்களால் காணப்படும் இந்த உடலைக் கொண்டு, இந்த உலகில் உள்ளவற்றை அனுபவிப்பது அல்லாமல், இந்த உடலைக் கைவிட்டு அங்கு சென்று அனுபவிப்பது என்பது கிடையாது – என்பதாகும். இவனுக்கு ஆழ்வார், "இந்த உடலைக் கொண்டு பெறக்கூடிய பலன்கள் தாழ்ந்தவையே. அவை நிலையில்லாத பலன்கள் ஆகும். அப்படிப்பட்ட பலன்கள் கூட மிகவும் கடினப்பட்டே அடைவதாக உள்ளது", என்று பதில் அளிக்கிறார்.

வ்யாக்யானம் – (பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான்) – இவனுடைய ஸங்கல்ப வாக்யம்; அக்னியை அணைந்து விடாய் தீர நினைப்பாரைப் போலேயும், ஆடுகிற பாம்பின் நிழலிலே ஒதுங்கி க்லேசம் தீர நினைப்பாரைப் போலேயும், விஷ பக்ஷணத்தைப் பண்ணி தரிக்க நினைப்பாரைப் போலேயும், துக்க ஸாதநத்தையிறே ஸுகஸாதநமாக நீ ப்ரமிக்கிறது. "கொண்ட பெண்டிர்" என்கிறபடியே, தன்னுடைய அநந்யத்வம் தோற்ற, "அது வேணும் இது வேணும்" என்று துச்சகங்களை அபேக்ஷித்து அலைக்கும் விஷயமிறே. இவனுடைய த்ரவ்யத்தளவும் போகத்தளவுமிறே இவன்பக்கம் ஆதாரம். "பெண்டிரால்" என்றது ஜாத்யபிப்ராயமானபோது, த்ரவ்யத்தளவிலே காலத்தையும் பரிச்சேதித்துப் பரிக்ரஹிப்பார்கள்; த்ரவ்யப்ரதாநைகளாகையாலே, இவன் நினைத்த போகரஸம் அங்கில்லை; பிறர் காணில் எளிவரவு; அத்தைத் தப்பினானாகில் மேல் நரகம். இதுவாய்த்து விஷயஸ்வபாவமிருப்பது. ஆநந்தமய: என்கிற விஷயத்தை லபித்தாற் போலேயிறே இவனுக்கு ஒரு ஸ்த்ரீபதார்த்தம் லபித்தால் இருப்பது. "சுகங்கள்" என்கிற பஹுவசநத்தாலே ஸர்வ ரஸங்களும் இவளாலே என்றிருக்கை. "இவள் கால்நலத்தாலே தநமுண்டாம்; பக்வையானவளவிலே காமரஸம்; ததநந்தரத்திலே புத்ரஸம்பத்து" என்றாற்போலேயிறே இவன் அபிமானித்திருப்பது. "உய்ப்பான்" என்றது, இவன் இப்படி பாரித்துப் போமதொழிய அவ்விஷயத்தில் அநுபாவ்யமாயிருப்பதொரு ரஸமில்லை. நிஹீநவிஷயமாகையாலே, நெடுநாள் சென்றாலும் "இன்னது அனுபவித்தோம்" என்று ப்ரத்யபிஜ்ஞை பண்ணலாவதொன்றில்லை; இவனுடைய பாதி ஸம்வாதமேயுள்ளது. அவர்கள் த்ரவ்யபரைகளாய் அநாதரித்தாலும் அவ்வநாதாமே ஹேதுவாக ச்ரத்தை மிகும் இவனுக்கு.

விளக்கம் - (பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான்) – "பெண்கள் மூலம் இன்பம் அனுபவிக்க வேண்டும்" என்பது இவனது உறுதியான எண்ணமாக உள்ளது. இது எப்படி உள்ளது என்றால் – நெருப்பினைக் கட்டித் தழுவி தாகம் தீர்த்துக் கொள்ள எண்ணுவது போன்றும், ஆடுகிற பாம்பின் படத்தின் நிழலில் ஒதுங்கி களைப்பு நீக்க எண்ணுவது போன்றும், விஷம் கலந்த சோற்றை உண்டு உயிர்வாழ எண்ணுவது போன்றும் உள்ளது. இதன் கருத்து – துன்பம் விளைவிக்கவல்ல வஸ்துவை இன்பம் அளிக்கவல்லதாக எண்ணுகிறான் – என்பதாகும். திருவாய்மொழி (9-1-1) - கொண்ட பெண்டிர் – கூறுவது போன்று இவனிடம் "அது வேண்டும், இது வேண்டும்", என்று இவனால் எளிதில் ஈட்ட முடியாதவைகளைப் பெற்றுத் தரும்படி இவனை அங்குமிங்கும்

அலைக்கழித்தபடி உள்ள பெண்கள். இவனிடம் பொருள், போகம் ஆகியவை உள்ள காலம்வரை மட்டுமே இவனிடம் ப்ரியம் உள்ளது. "பெண்டிரால்" என்றது – இந்தப் பதம் வேசிகளையும் குறிக்கும் என்பதால், இவன் அளிக்கும் பொருளுக்குத் தகுந்த அளவு மட்டுமே அவர்கள் இன்பத்தை அளிப்பார்கள் – என்றாகிறது. எனவே இவன் விரும்பும் அளவு இன்பன் அவர்கள் அளிப்பதில்லை. இதனை மற்றவர்கள் காண நேரிட்டால் பெரும் அவமானமாக ஆகிறது. இந்த அவமானத்திலிருந்து தப்பித்து விட்டாலும், நரகத்திலிருந்து தப்ப இயலாது. இப்படியாகவே பெண்கள் மூலம் உண்டாகும் இன்பம் உள்ளது. தைத்திரீய உபநிஷத் - ஆநந்தமய: - என்று கூறுவது போன்று, இவன் பெண்கள் மூலம் உண்டாகும் சுகத்தை பரமாத்மாவையே பெற்ற ஆனந்தம் என்று எண்ணுகிறான். "சுகங்கள்" என்று பன்மையில் கூறியது மூலம் "அனைத்து சுகங்களும் இவள் மூலமே" என்று எண்ணுகிறான் என்றாகிறது. "இவள் நம் கால் எடுத்து வைத்த நேரம் நமக்கு செல்வம் உண்டானது; பெரியவளான பின்னர் காமரஸம் அளிப்பாள்; அதன் பின்னர் புத்திர செல்வம் அளிப்பாள்", என்று எண்ணியபடி உள்ளான். "உய்ப்பான்" என்று கூறியது மூலம், இவன் இப்படி எண்ணியபடி உள்ளான் என்றாலும், அந்தப் பெண்ணிடம் எந்த இன்பமும் இல்லை என்பதே உண்மை என்று உணர்த்தப்பட்டது. பல நாட்கள் காமத்தை அனுபவித்தாலும், "இது நாள் வரை இதனை அனுபவித்தோம்" என்று எண்ணுவதற்கு ஏதும் இல்லை. இவன் அவர்களிடம் அத்தனை ஈடுபாட்டுடன் உள்ளான் அன்றி, அவர்கள் அதுபோல் இருப்பதில்லை. இவனிடம் பொருள் இல்லை என்று உணர்ந்து இவனை அவமானம் செய்தாலும், அந்த அவமானமே இவனுக்கு அவர்கள் மீது மேலும் அதிக காமம் உண்டாகக் காரணமாகிவிடுகிறது.

வ்யாக்யானம் - (பெரியதோர் இடும்பை பூண்டு) – அத்தாலே, காலன் கொண்டும், பரஹிம்ஸை பண்ணியும், துச்சகமான மஹாதுக்கங்களை ஏறிட்டுக் கொள்ளும். "பூண்டு" என்றது கழுத்தில் புக்க வாயோடுபோலே தன்னால் கழற்றவொண்ணாதிருக்கை. அளவிறந்த ஸுகத்தை அனுபவிக்கவேணும் என்று கோலி, அளவிறந்த துக்கத்தையாய்த்து ஏறிட்டுக் கொள்வது. ஓர் அஞ்ஜலி உண்டறுக்கமாட்டாத விஷயத்தையன்றே பற்றிற்று. ஸுஸுகம் கர்த்தும் என்கிறபடியே ஸாதநவேளையே தொடங்கி ரஸிக்கும் விஷயமன்றே. "தூயவமுதைப் பருகிப்பருகி என் மாயப்பிறவி

மயர்வறுத்தேன்" என்னக் கடவதிறே. இங்கே ஸாத்ய ஸாதநங்கள் இரண்டும் துக்க ரூபமாயிருக்கும்.

விளக்கம் - (பெரியதோர் இடும்பை பூண்டு) – இத்தகைய அற்பமான சுகங்களை பெறுவதற்காக காலதனம் பெற்றும், மற்றவர்களை வதைத்தும், சகித்துக்கொள்ள இயலாத துன்பங்களையும் தாங்கிக்கொண்டும் இருப்பான். "பூண்டு" என்றால் – சோறு வைக்கப்படும் பானையின் கழுத்து தனது கழுத்தில் மாட்டிக் கொண்டால் கழற்ற இயலாமல் உள்ளதுபோன்று இவன் ஸம்ஸாரத்தில் சிக்குவது உள்ளது. எல்லையற்ற இன்பம் அனுபவிக்கவேண்டும் என்று எண்ணி, எல்லையற்ற துன்பத்தில் அல்லவா சிக்கிக் கொள்கிறான்? "உனக்கு ஓர் அஞ்ஜலி" என்று கூறிவிட்டால் போதுமானது, அதற்காக உருகிவிடும் எம்பெருமானை இவன் பற்றவில்லையே! ஸுஸுகம் கர்த்தும் – எம்பெருமானை அடைவதற்காகச் செய்யப்படும் ஸாதனங்கள் மிகவும் சுகமானவை என்று கூறுவதற்கு ஏற்ப, முயற்சிகளைச் செய்யத்தொடங்கியவுடனேயே மிகவும் இரசிக்கத் தகுந்தபடி உள்ள எம்பெருமான் குறித்த விஷயங்களை இவன் பற்றவில்லையே! திருவாய்மொழி (1-7-3) - தூயவமுதைப் பருகிப்பருகி என் மாயப்பிறவி மயர்வறுத்தேன் – என்றது காண்க. ஆனால் பெண்கள் விஷயத்தைப் பொறுத்தவரையில், ஸாதனநேரம், பலன் அளிக்கும் நேரம் ஆகிய இரண்டுமே துக்கத்தை அளிப்பவையே ஆகும்.

வ்யாக்யானம் - (உண்டிரா) – இரா உண்டு. ஜீவிக்கவும் அவஸரமில்லாதபடி பகலெல்லாம் தட்டித்திரித்து, அஸ்தம்ய வேளையிலேயாய்த்து ஜீவிப்பது. முதல் ஸ்வசரீர ரக்ஷணத்தைப் பண்ணிக் கொண்டு நின்று, பின்னையிறே விஷயாநுபவம் பண்ணப் பார்ப்பது. (கிடக்கும்போது) – அநந்தரம் ஓரிடத்திலே விழவிடுகை அபேக்ஷிதமாயிருக்கும். அப்போது சிதிலனாகையாலே விஷயங்களை அநுஸந்தித்தல் அநுபவித்தல் செய்ய க்ஷமனல்லன்.

விளக்கம் – (உண்டிரா) – உண்பதற்க்குக் கூட நேரம் இல்லாதபடி, நாள் முழுவதும் பணத்தைத் தேடி அலைந்து, இரவுப் பொழுதில் மட்டுமே உணவு உண்டு வாழ்வது. முதலில் தனது உடலைக் காப்பதற்காக உணவை உட்கொண்டு, பின்னர் பெண்களுடன்

இன்பமாக இருப்பதற்கு நினைக்கிறான். (கிடக்கும்போது) – நாள் முழுவதும் பணம் சேர்ப்பதிலே அலைந்து திரிந்துவிட்டு, அதன் பின்னர் உடல் களைப்புற, படுக்கையில் விழுந்தால் போதும் என்ற நிலை இருக்கும். ஆனால் இவன் அதனை விடுத்து, இன்பம் நாட எண்ணுகிறான். அந்த நேரத்தில் இவன் உடல் தளர்ந்திருக்க, இன்பங்களை அனுபவிக்கவோ, அல்லது அந்த இன்பங்களை எண்ணிப் பார்க்கவோ கூட வலிமை இல்லாமல் உள்ளான்.

வ்யாக்யானம் – (உடலுக்கே கரைந்து நைந்து) – "நாளை இவற்றை ரக்ஷித்து நாமும் ஜீவித்தோமாய் விடவல்லோம்" என்று சிந்தியா நிற்கும். அவதாரணத்தாலே தேஹாதிரிக்த மாயிருப்பதொரு ஆத்மவஸ்து உண்டென்றிருக்கிலிறே அதுக்கும் ஒருகால் கரைய வேண்டுவது. சரீரஸமநந்தரத்தில் வகுத்த புருஷார்த்தத்தை லபிக்கும் விரகேதோ? நரகத்தையும் கர்ப்பவாஸத்தையும் தப்பும் விரகேதோ? என்று கரையவிறே அடுப்பது. அதுக்கு யோக்யதை இல்லாமையாலே தேஹதாரணத்துக்காகவே கரையா நிற்கும். "கரைந்து நைந்து" என்றது பகவத்குணவித்தராயிருப்பார் "நினைதொறும் சொல்லுந் தொறும் நெஞ்சிடிந்துகும்" என்று படுமதடங்க இத்தேஹத்திலே படுமாய்த்து இவன்.

விளக்கம் - (உடலுக்கே கரைந்து நைந்து) – படுக்கையில் கிடந்த பின்னரும், "நாளை நமது பிள்ளைகளைக் காப்பாற்றி எப்படி ஜீவிக்கப் போகிறோம்", என்று கவலைப்பட்டபடியே இருப்பான். உடல் அல்லாமல், உடலைவிட்டு வேறுபட்ட ஆத்மா என ஒன்று உள்ளது என்று அறிந்தானாகில், அதற்காகவும் கவலைப்படுவான். ஆத்மாவைப் பற்றி இவன் அறிந்தால் மட்டுமே, "சரீரம் விட்டபின் அடையக்கூடிய புருஷார்த்தம் எது, நரகம் புகாமல் இருக்கக்கூடிய வழி என்ன, மீண்டும் கர்ப்பத்தில் விழாமல் இருக்கக்கூடிய வழி என்ன", என்று ஆராயக்கூடும். ஆத்மாவைப் பற்றிய இத்தகைய ஞானம் கிட்டுவதற்குத் தகுதி இல்லாமையால், உடலைக் குறித்து எண்ணியபடி இருக்கிறான். "கரைந்து நைந்து" என்று கூறுவதன் மூலம் - எம்பெருமானின் திருக்கல்யாணகுணங்களை எண்ணியபடி உள்ள ஆழ்வார்கள், திருவாய்மொழி (9-6-2) - நினைதொறும் சொல்லுந் தொறும் நெஞ்சிடிந்துகும் – என்று கூறுவதற்கு ஏற்ப, அவனது திருக்கல்யாண குணங்களை எண்ணியே உருகுவார்கள்;

அது போன்று இவன் தனது உடலைக் குறித்து எண்ணியபடி உள்ளான் – என்று கூறப்பட்டது.

வ்யாக்யானம் – (தண்டுழாய் மாலை மார்பன் தமர்களாய்ப் பாடியாடி) – ஸர்வேச்வரனை அநுபவித்து அஹமந்நமஹமந்நம் என்று களித்து, செருக்குக்குப் போக்குவிட்டுத் திரியக்கடவ சேதநர் படும் அநர்த்தமே என்கிறார். (தண்டுழாய் மாலை மார்பன்) – ஸர்வேச்வரத்வ ஸூசகமான திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதனானவன். இவர்கள் பற்றின துராராத விஷயங்களைப் போலன்றியே "தன் வெறுமையை முன்னிட்டு என்னைப் பற்றுமவனை ரக்ஷிக்கக் கடவன்" என்று தனிமாலையிட்டுக் கொண்டிறே அவனிருப்பது. அவன் ரக்ஷகனாகாதவன்றும் கிட்டுவார்க்கு அவ்வடிவும் ஒப்பனையுமே ப்ரயோஜநம் போருங்கிடீர். (தமர்களாய்) – இவ்விஷயத்தில் இவனுக்கு ஸாத்யம் ஒன்றில்லை. ஸ்வாபாவிக ஸம்பந்தத்துக்கு அநுமதி பண்ணுமித்தனையே வேண்டுவது. இவ்வாத்மாவும் நிலைநின்ற ஸ்வரூபம் இதிறே. அவனை பதிம் விச்வஸ்ய என்றும், இவனை யஸ்யாஸ்மி என்றும், தாஸோஹம் என்றுமிறே நிர்த்தோஷ ப்ரமாணங்கள் சொல்லுகிறது. (தமர்) – அடியார். கீழ்ச்சொன்னவையடங்க இவன்தானே ஏறிட்டுக் கொண்டவையிறே.

விளக்கம் - (தண்டுழாய் மாலை மார்பன் தமர்களாய்ப் பாடியாடி) – ஸர்வேச்வரனை அனுபவித்து, தைத்திரீயம் – அஹமந்நமஹமந்நம் – நான் பரம்பொருளுக்கு அன்னம், நான் பரம்பொருளுக்கு அன்னம் – என்று கூறுவது போன்று மகிழ்ந்து ஆடி, இப்படிப்பட்ட இன்பத்தில் திளைக்கக்கூடிய இடமான பரமபதத்தில் நித்யஸூரிகள் போன்று இருக்க வேண்டியவர்கள், இப்படி இந்தப் பூமியில் துன்பத்தில் உள்ளனரே என்று வருத்தம் கொள்கிறார். (தண்டுழாய் மாலை மார்பன்) – இவனே ஸர்வேச்வரன் என்று பறை சாற்றும் திருத்துழாய் மாலையால் அலங்கரிக்கப்பட்டவன். எத்தனை முயற்சி செய்தாலும் மனநிறைவு பெறாத பெண்களை அல்லவோ மனிதர்கள் பற்றுகின்றனர். இந்தப் பெண்கள் போல் அல்லாமல், "தங்களால் ஏதும் செய்ய இயலவில்லை, தங்களிடம் எந்த உபாயமும் இல்லை என்று என்னைப் பற்றுகின்றவர்களை நான் ரக்ஷிப்பேன்", என்று காண்பிக்க அல்லவோ அவன் துளசி மாலையுடன் உள்ளான்? ஏதோ சில காரணங்களால் அவன் காக்கவில்லை என்றாலும், அவனை அடைந்தார்களுக்கு அவனது இந்த அழகான திருமேனியும், ஒப்பனையும்

பேறாக அமையும் அல்லவா? (தமர்களாய்) – இவனை அடைவதற்கு மிகவும் பெரிய ஸாதனங்கள் அவசியம் இல்லை. அவனுக்கும் நமக்கு உள்ள இயற்கையான உறவு முறையான எஜமானன் – அடிமை என்பதை உணர்ந்தாலே போதுமானது. இந்த ஆத்மாவுக்கு நிலையான ஸ்வரூபம் என்பது அவனுக்கு அடிமையாக உள்ளதே அல்லவோ? எம்பெருமானை – பதிம் விச்வஸ்ய – இந்த உலகின் நாயகன் – என்றும்; நம்மை – யஸ்யாஸ்மி – யாருக்கு நான் தாஸனோ – என்றும், தாஸோஹம் – நான் தாஸன் – என்றும் அல்லவோ குற்றம் இல்லாத ப்ரமாணங்கள் கூறுகின்றன? (தமர்) – அடியார்கள். இப்படி இன்பமாக இருக்கவேண்டிய ஜீவன், பெண்களால் சுகம் வரும் என்று எண்ணி, துன்பத்தைத் தானாகவே அல்லவோ ஏற்படுத்திக் கொள்கிறான்?

வ்யாக்யானம் - (பாடியாடி) – பகவதநுபவ ஜநித ப்ரீதிக்குப் போக்கு வீடாகப் பாடி, அதுதான் இருந்தவிடத்திலிருக்கவொட்டாமையாலே ஆடி. காயந்தி கேசித் ப்ரணமந்தி கேசித் ந்ருத்யந்தி கேசித் என்று மதுவநத்தில் புக்க முதலிகள்படியாய்த் திரியக் கடவனிறே இவன். ஒரு தேசவிசேஷத்திலே சென்றாலும், ஹா வுஹா வுஹா வு என்று ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே பாடி ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணியிறே திரிந்திருப்பது.

விளக்கம் – (பாடியாடி) – எம்பெருமானைக் குறித்த அனுபவம் ஏற்பட்டு, அதனால் உண்டான ஆனந்தம் கழியும்விதமாகப் பாடி, அவ்விதம் பாடும்போது ஓரிடத்தில் நிற்க இயலாமல் ஆடியபடி. இராமாயணம் ஸுந்தரகாண்டம் - காயந்தி கேசித் ப்ரணமந்தி கேசித் ந்ருத்யந்தி கேசித் – சிலர் பாடுகின்றனர், சிலர் வணங்குகின்றனர், சிலர் சிரிக்கின்றனர் – என்றபடி, மதுவனத்தில் புகுந்த வானரங்கள் நிலையானது இவன் நிலையும். பரமபதத்தில் - ஹா வுஹா வுஹா வு – என்று மகிழ்ச்சி அதிகமான நிலையில் ஸாமகானம் அல்லவோ பரமபதத்தில் ஓதப்படுகிறது?

வ்யாக்யானம் - (தொண்டு பூண்டு) – அடிமை பூண்டு. தனக்கு வகுத்த சேஷவ்ருத்தியை ஏறிட்டுக் கொண்டு. “உறும்” என்று ஏறிட்டுக் கொள்ளுகையன்றிக்கே உகந்து ஏறிட்டுக் கொண்டு. (பூண்டு) – இவ்வாத்மாவுக்கு தாஸ்யமேயிறே ஆபரணம். த்ருமசீரைரலங்க்ருத: என்றது ஆபரணமானாற்போலே. நம்பெருமாளுக்குச் சேரசுந்தரபாண்டியன் தம்பிரான் பதக்கம்போலே இவனுக்கு தாஸ்யமாகிற ஆபரணம். அவனுக்கும் அது நெஞ்சிலே

கிடப்பதொன்று; இவனுக்கும் இது நெஞ்சிலே கிடப்பதொன்றிறே. "இடும்பை பூண்டு" என்கிறது போலன்றிறே இது. அஹம் ஸர்வம் கரிஷ்யாமி வழுவிலாவடிமை செய்ய வேண்டும் நாம் என்கிறதிறே இது. "பூண்டு" என்கிற சப்தம் இரண்டிடத்திலும் ஒத்திருக்க, நெடுவாசிபட அர்த்தம் சொல்லுவானென் என்னில், அர்த்தபலத்தாலே; அப்ராப்த விஷயத்தில் ஸேவையை ஸேவா ச்வவ்ருத்தி என்றும், ப்ராப்த விஷயத்தில் பாரதந்த்ர்யத்தை பாரதந்த்ர்யம் பரே பும்ஸி என்றும், ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே என்றும் விஷயம் பேதித்தாற்போலே இங்கும் அர்த்த பலத்தாலே பேதித்துச் சொல்லுகிறது.

விளக்கம் - (தொண்டு பூண்டு) – எம்பெருமானுக்கு அடிமையாகி. தன்னுடைய அடிமைத்தனத்துக்கு ஏற்ற கைங்கர்யத்தைக் கைக்கொண்டு. "இப்படியாக எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்வது நமது கடமை" என்னும் எண்ணத்துடன் கைங்கர்யத்தில் ஈடுபடாமல், மனம் மகிழ்ந்து ஈடுபட வேண்டும். (பூண்டு) – எம்பெருமானுக்கு அடிமையாக இருப்பது அல்லவோ ஆத்மாவுக்கு ஆபரணம்? இராமாயணம் ஸுந்தகாண்டம் - த்ருமசீரைரலங்க்ருத: - இலட்சுமணன் தன்னை மரவுரியால் இராமனுக்கு முன்பாகவே அலங்காரம் செய்து கொண்டான் – என்றது காண்க. இலட்சுமணனுக்கு மரவுரி ஆபரணமாக இருந்தது போன்று ஆத்மாவுக்கு அடிமைத்தொழிலே ஆபரணமாகும். நம்பெருமாளுக்கு சேரசுந்தரபாண்டியன் தம்பிரான் அணிவித்த பதக்கம் எப்படி ஏற்ற ஆபரணமாக உள்ளதோ, அது போன்று ஆத்மாவுக்கு அடிமைத்தொழிலே ஆபரணமாகும். நம்பெருமாள் நெஞ்சிலே அந்தப் பதக்கம் எப்போதும் உள்ளதுபோல், ஆத்மாவுக்கும் இந்த நிலை எப்போதும் உள்ளது. "இடும்பை பூண்டு" என்ற இடத்தில், சோற்றுப்பானை வளையம் சிக்கியது என்று பொருள் கண்டோம்; அது போன்று இந்த கைங்கர்ய நிலை அல்ல. இராமாயணம் அயோத்யா காண்டம் - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – உனக்கு நான் எப்போதும் அனைத்துக் கைங்கர்யமும் செய்வேன் – என்னும்படி இருத்தல் வேண்டும். திருவாய்மொழி (3-3-1) - வழுவிலாவடிமை செய்ய வேண்டும் – என்பது போல் இருக்கவேண்டும். "பூண்டு" என்ற சொல்லின் பொருள் ஒன்றாகவே இருக்க "இடும்பை பூண்டு", "தொண்டு பூண்டு" என்ற இரு இடங்களில், "பூண்டு" என்ற சொல்லிற்கு வெவ்வேறு பொருள் உரைத்தது ஏன்? உணர்த்தப்படும் பொருளின் பலம் காரணமாக இவ்விதம் கூறலாம். மற்றவர்களுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பதை மநுஸ்ம்ருதி - ஸேவா ச்வவ்ருத்தி – அடிமைத்தனம்

என்பது நாய்த்தொழில் என்று கூறியது; எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தலை விஷ்ணுதத்வம் - பாரதந்த்ர்யம் பரே பும்ஸி – ஒப்பற்ற பரமபுருஷனிடம் தோண்டு செய்ய அடைந்தவனாக என்றும், கருடபுராணம் - ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே – அதனை அடையாமல் இருக்க என்ன காரணம் – என்றும் கூறின. ஆக எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பதை பெரும் பேறாகவும், மற்றவர்களுக்கு அடிமைத்தனம் செய்தலை இழிவாகவும் கூறின. இது போன்றே இங்கும் வெவ்வேறு பொருளில் "பூண்டு" என்ற பதம் உள்ளது.

வ்யாக்யானம் – (அமுதமுண்ணா) – ஸ்வரூப ப்ராப்தமுமாய், நித்யாநுபாவ்யமுமாய் இருக்கும் அம்ருதமாய்த்து இது. தவ தாஸ்ய ஸுக ஏக ஸங்கிநாம் என்றும், தவ தாஸ்ய மஹாரஸஜ்ஞ: என்றும் சொல்லக் கடவதிறே. (தொழும்பர்) – இதினுடைய யோக்யதையை அறியாதே, அபோக்யமாய் அப்ராப்தமாயிருந்துள்ள க்ஷுத்ர விஷயங்களை விரும்பும் நீசர். (தொழும்பர்) – தண்ணியர். ப்ராப்தி இல்லாமே இத்தை இழக்கிறாரல்லர்; க்ஷுத்ர விஷயங்களுக்கும் இதுக்கும் உள்ள வாசி அறியும் சேதநருமாயிருக்க, துராராதமாய், அபோக்யமாயிருக்கிற விஷயத்திலே மண்டப் பண்ணிற்றிறே சாபலம் (பாபபலம்).

விளக்கம் – நமது ஆத்மாவின் இயல்பான கைங்கர்யத்தன்மைக்கு ஏற்றதாகவும், எப்போதும் சுவைக்கத் தக்கதாகவும் உள்ள அமிர்தமாக பகவத் கைங்கர்யம் உள்ளது. ஸ்தோத்ர ரத்னம் (55) - தவ தாஸ்ய ஸுக ஏக ஸங்கிநாம் – உனக்கு அடிமைப்பட்டிருத்தல் என்னும் சுகம் ஒன்றில் மட்டுமே ஈடுபட்டு உள்ளவர்களின் – என்றும்; வரதராஜ ஸ்தவம் (81) - தவ தாஸ்ய மஹாரஸஜ்ஞ: - உனது கைங்கர்யம் என்னும் இனிய அமிர்தத்தை – என்றும் கூறியது காண்க. (தொழும்பர்) – இந்த கைங்கர்ய அமிர்தத்தின் இனிமையை அறியாதவர்கள், இனிமை இன்றி உள்ளதும் ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்புடையதாக இல்லாததும் ஆகிய தாழ்ந்த விஷயங்களை விரும்புபவர்கள். (தொழும்பர்) – தாழ்ந்தவர்கள். "இது கிட்டுவதற்கு அரிது" என்பதால் இதனை இவர்கள் தவிர்க்கவில்லை; உலக விஷயங்களுக்கும் கைங்கர்யத்திற்கும் உள்ள வேறுபாட்டினை அறியக்கூடிய ஞானத்தை இவர்கள் கொண்டுள்ளபோதும், இனிமையில்லாததும் கிட்டுவதற்குக் கடினமாக உள்ளதும் ஆகிய உலகவிஷயங்களில்

இவர்கள் நிலை நிற்கின்றனர். இதற்குக் காரணம், எல்லையற்ற காலமாகத் தொடரும் வினைப்பயன்கள் ஆகும்.

வ்யாக்யானம் - (சோறுகக்குமாறே) – மண்ணிற்காட்டில் சோற்றுக்கு வாசி அறிந்து ஜீவிக்கிறபடி எங்ஙனே? நித்யமான ஆத்மவஸ்துவுக்கு பகவச்சேஷத்வமே தாரகம் என்றறியாதவன், அநித்யமான தேஹத்துக்குச் சோறு தாரகம் என்று அறிந்து ஜீவிக்கிறானோ? பித்ராதிகள் ஜீவிக்கக் காண்கிற வாஸனை கொண்டு செய்கிறானித்தனையிறே; வாசி அறியுமவனாகில் ஆத்மாவுக்கும் நன்மை எண்ணானோ? ஒன்றிலே விசேஷ ஜ்ஞாநமுண்டாகில் மற்றையதிலும் அறிவு உண்டாகாதோ?

விளக்கம் - (சோறுகக்குமாறே) – இவ்விதமாக உள்ள இவர்கள், மண்ணிற்கும் சோற்றுக்கும் உள்ள வேறுபாட்டை மட்டும் எப்படிச் சரியாக அறிந்து கொண்டு, தாங்கள் வாழ்வதற்கு ஏற்றது சோறு என அறிந்து, அதனை உண்கின்றனர்? எப்போதும் உள்ள ஆத்மாவுக்கு பகவத்கைங்கர்யம் மட்டுமே ஆதரவு என்று அறியாமல் உள்ளவன், அழியக்கூடிய உடலுக்கு சோறு ஆதாரமாக உள்ளது என்று எப்படி அறிந்தான்? இதனை இவன் தனது அறிவால் செய்யவில்லை, தனது முன்னோர்கள் இப்படிச் செய்ததைக் கண்டு தானும் இவ்விதம் செய்கிறான் என்றே கொள்ளவேண்டும். இந்த அறிவு இவனுக்கும் உள்ளது என்றால், தனது ஆத்மாவுக்கு எது நன்மை என அறிந்திருப்பான் அல்லவோ? ஒரு விஷயத்தில் சரியான ஞானம் உண்டாகும் என்றால், அனைத்து விஷயங்களிலும் அது போன்றே சரியானம் ஞானம் உண்டாகும் அல்லவோ?

6. மறம் சுவர் மதிள் எடுத்து மறுமைக்கே வெறுமை பூண்டு

புறம் சுவர் ஓட்டை மாடம் புரளும்போது அறியமாட்டீர்

அறம் சுவராகி நின்ற அரங்கனார்க்கு ஆட்செய்யாதே

புறம் சுவர் கோலம் செய்து புள் கவ்வக் கிடக்கின்றீரே.

பொருள் – கொடூரமான ஸ்வபாவம் என்னும் சுவரைத் தன்னைச் சுற்றி அமைத்துக் கொண்டு, அந்த உலகின் இன்பம் பெறுவதற்கு இயலாமல் இங்கேயே ஏழ்மையைக் கைக்கொண்டு நிற்பவர்களே! ஆத்மாவின் சுவர் போன்ற இந்த உடலானது தரை எப்போது விழும் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். தர்மம் என்பதே தனது இயல்பாக உடைய பெரியபெருமாளுக்குக் கைங்கர்யம் செய்யாமல், இந்த வெளி உடலை நன்றாக அலங்கரித்துக் கொள்கிறீர்களே! இப்படியாக இந்த உடலைப் பறவைகள் கொத்தும்படியான நிலையை நீங்களே தேடிக் கொள்கிறீர்கள்.

அவதாரிகை – விஷயங்களுக்கு அல்பாஸ்திரவாதி தோஷங்கள் அநேகமுண்டானாலும், எங்களுடைய த்யாகத்துக்கு ஹேதுவாகமாட்டாது. ஏகவிஷயத்தில் பூர்ணாநுபவம் பெற்றிலோமேயாகிலும் விஷயங்கள் அநேகமுண்டான பின்பு ஒன்றில்லாத நன்மை மற்றையதிலே கூட்டிக் கொண்டு அநுபவிக்கிறோம் என்ன; அப்படியேயானாலும் அந்த போக்தாதான் ஸ்திரனாகவேணுமே? அவ்விஷயங்களோபாதி போக்தாவும் அஸ்திரன் என்று போக்தாவினுடைய நிலையில்லாமையைச் சொல்லுகிறார்.

விளக்கம் – "உலக விஷயங்களுக்கு அற்பமானவை முதலான பலவித தோஷங்கள் உள்ளன. ஆனாலும் அவற்றை எங்களால் கைவிட இயலவில்லை. அந்த விஷயங்களில் ஏதேனும் ஒன்றில் மட்டுமாவது முழுமையான இன்பம் காண இயலுமா என்றால், அதுவும் இல்லை. ஆயினும் பல விஷயங்கள் உண்டு என்பதால், ஒன்றில் கிட்டப்பெறாத இன்பம், மற்றொன்றின் மூலம் கிட்டப்பெறுகிறோம்", என்று நாம் கூறுவதைக் கேட்ட ஆழ்வார் பதில் தருகிறார் – "நீங்கள் கூறுவது சரி! ஆனால் அப்படிப்பட்ட இன்பங்களை அனுபவிக்கும் நீங்கள் நிலையாக இருக்கவேண்டும் அல்லவோ? நீங்கள் அனுபவிக்கும் விஷயங்கள் எப்படி நிலையற்றவை ஆகுமோ, அது போன்று, நீங்களும் நிலையற்றவர்களே ஆவீர்கள்", என்று நமது நிலையற்ற தன்மையைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (மறம் சுவர் மதிள் எடுத்து) – மறமாகிற சுவரை அரணாக எடுத்து, க்ரௌர்ய ஸமுதாயத்தையாய்த்துத் தனக்கு அரணாக நினைத்திருப்பது. அமாநித்

வாத்யாத்ம குணங்களெல்லாவற்றுக்குமாக இவன் பக்கலுள்ளது க்ரௌர்யமேயாய்த்து. (மறம்) – அருளின்மையும், கோபமும், தறுகண்மையுமாம். அதாவது – இவன் அதிக்ருத்தனாய் வர்த்தியா நின்றான், தனக்கு அனர்த்தத்தைத் தானே சூழ்த்துக் கொள்ளா நின்றான் என்று ஸத்துக்கள், "ஐயோ" என்று தனக்கு ஹிதம் நினைத்தாலும், தன்பக்கல் அணுகவொண்ணாதபடி க்ருத்தனாயிருக்கும். ஒரு ஸாத்விகன் தன்பக்கல் கிட்டாமைக்கு இடும் அரண் இதுவிறே. ராவணனுக்கு மாரீசன், மால்யவான், கும்பகர்ணன், ஸ்ரீவிபீஷணாழ்வான் இவர்களெல்லோரும் ஹிதம் சொன்னவிடத்தில் சொன்ன ஹிதம் கேளாமையாலே தன்னோடு சேர்ந்த கும்பகர்ணனும் மாரீசனும் முடிந்து போனார்கள்; அல்லாதார் திக்க்ருதரானார்கள். இதுவிறே துஷ்ப்ரக்ருதிக்கு ஹிதம் சொன்னார்படும் எளிவரவு. "மதிள் எடுத்து" என்றது – இந்த க்ரௌர்யம் ஸ்வரூப ப்ராப்தமாய் வந்ததொன்றன்று. ஒருநாள் வரையிலே பகவத் விஷயீகாரமடியாக அழிவதொன்று என்று தோற்றுகைக்காக. வீரஸுந்தர ப்ரஹ்மராயன் சோழக்குடியிலிட்ட மதிள்போலேயிறே, இவன் தான் பண்ணிக் கொள்ளும் அரண் விநாச பர்யந்தமாய் முடியும்படி.

விளக்கம் – அறச்செயலுக்கு எதிராக உள்ள மறம் என்னும் சுவரைத் தன்னைச் சுற்றி எழுப்பிக்கொண்டு. தீயசெயல்களில் கூட்டத்தை அல்லவா இவன் தனக்குக் காவல் என்று எண்ணியுள்ளான்? அஹங்காரம் இல்லாத தன்மை முதலான தன்மைகள் சூழாமல், தீயகுணங்களே இவன் பக்கம் உள்ளன. (மறம்) – அருள் இல்லாமை, கோபம், கர்வம். இவனைக் காணும் நல்லவர்கள், "ஐயோ பாவம்! இவன் இத்தனை கோபம் கொண்டவனாக உள்ளானே! தனக்குத்தானே தீமைகளை உண்டாக்கிக் கொள்கிறானே!", என்று இரக்கம் கொண்டு இவனுக்கு நன்மை அளிக்கவல்ல உபதேசம் செய்ய எண்ணுகின்றனர். இப்படி எண்ணி அவர்கள் இவன் பக்கம் சென்றாலும், இவனது கோபமானது அவர்களை அணுகவிடாமல் தடுத்து நிற்கும். நல்லவனை நம் பக்கம் அணுகவிடாமல் தடுப்பது கோபமே ஆகும். இராவணனுக்கு மாரீசன், மால்யவான், கும்பகர்ணன், ஸ்ரீவிபீஷணாழ்வான் என்று பலரும் நன்மை அளிக்கும்படி பல உபதேசங்கள் செய்தனர். ஆனாலும் அவற்றை அவன் கேட்கவில்லை. இதனால் கும்பகர்ணனும், மாரீசனும் இறந்தார்கள்; மற்றவர்கள் இராவணனால் துரத்தப்பட்டனர். அரக்கர்களுக்கு நன்மை அளிக்கவல்ல உபதேசம் செய்ய முற்படுபவர்களின் கதி இப்படிப்பட்ட அவமானமே ஆகும். "மதிள் எடுத்து" என்று ஏன் கூறவேண்டும்? காரணம்

– இந்தக் கோபம் முதலான தன்மைகள் இவனுக்கு இயற்கையாகவே உள்ளது அல்ல, இவன் எப்போது அரங்கனின் கருணைக்கு ஆளாகிறானோ அப்போது அழியக்கூடியது ஆகும். இதனை உணர்த்தவே "மதிள் எடுத்து" என்று கூறினார். வீரஸுந்தர ப்ரஹ்மராயன் என்பவன் மற்றவர்களைப் பகைத்துக் கொண்டு, தனது ஊரான சோழக்குடியில் கட்டிய மதிள் அவனையே அழித்தது போன்று, இவன் கட்டிக்கொள்ளும் இத்தகைய சுவர்கள் இவனை அழித்துவிடுகின்றன.

வ்யாக்யானம் - இவன் இத்தால் பெற்ற ப்ரயோஜநம் சொல்லுகிறது. (மறுமைக்கே வெறுமை பூண்டு) – இவனிருந்த காலத்தில் செய்த கார்யம் அத்ருஷ்டத்துக்கு தாரித்ர்யத்தைக் கூடுபூரித்தவித்தனை. சரீரதாரணத்தோபாதி ஆத்மதாரணமாயிருப்பதொரு நன்மையும் வேணுமென்று இருந்தானாகில், ஈச்வரன் அத்தையே நினைத்து ரக்ஷிக்குமிறே. தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா என்கிறபடியே ஆத்மோஜ்ஜீவநார்த்தமாக ஒருகால் நினைத்தானாகில், அஹம் ஸ்மராமி என்று அது தன்னையொன்றையுமே கொண்டு முடிய நடத்துமிறே ஈச்வரன். சரீரவிச்லேஷ ஸமநந்தரத்திலே அவ்வருகே ஒரு குளிர்ந்த விழியில்லாதபடி பண்ணிக் கொண்டானாய்த்து. இம்மையிலே வெறுமையாகில் ஆகமாபாயிகளுமாய் சரீரத்தளவுமாயிறே இருப்பது. மறுமையிலே வெறுமையாகிறது – நித்யமான ஆத்மாவுக்குப் பிறந்ததாகையாலே வந்த தாரித்ர்யமும் நித்யமிறே. இதுக்கு முன்பு ஒன்றின்றிக்கேயொழிந்தாலும் தானில்லையே என்கிறார்.

விளக்கம் – இவ்விதமாக தீயவற்றைத் தனக்கு அரணாக அமைத்துக் கொள்வதால் என்ன நேரிடுகிறது என்று விளக்குகிறார். (மறுமைக்கே வெறுமை பூண்டு) – இவன் இந்த உலகில் வாழும்போது செய்த இந்தச் செயல்கள், மறுமையில் இவனுக்குப் பெறும் தரித்திரத்தை உண்டாக்கிவிடும். உடலைப் பேணி வளர்ப்பது போன்று, ஆத்மாவும் வளரவேண்டும் என்று ஆத்மநன்மையை ஒருவன் நினைத்தான் என்றால், அந்த நினைவு ஒன்றையே காரணமாக வைத்துக் கொண்டு அவனை ஈச்வரன் காப்பான். வராஹ சரமச்லோகம் - தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா – நான் அவனை நினைக்கிறேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, தனது ஆத்மா பிழைப்பதற்காக ஈச்வரனை ஒருவன் நினைத்தான் என்றால், அவன் பொருட்டு - அஹம் ஸ்மராமி – தன்னை அவன் நினைத்தான் – என்ற காரணம் ஒன்றையே பெரிதாகக் கொண்டு, அனைத்தையும் இந்த

உலகிலும் அந்த உலகிலும் அவனது கார்யங்கள் அனைத்தையும் தன்னுடையது என்று எண்ணி செய்து கொடுப்பான். ஆனால் தீயவற்றை அரணாக அமைத்துக் கொள்ளும் ஒருவன், தனது உடல் விட்டவுடன் தன்னைக் குளிர்ந்த பார்வையுடன் பார்க்க யாரும் இல்லாமல் தவிப்பான். இந்த உலகில் வாழும்போது உண்டாகும் வறுமை என்பது உடல் நீங்கியவுடன் தொலைந்துவிடும். ஆனால், மறுமைக்கு வரவழைத்துக் கொண்ட ஏழ்மை என்பது எப்போதும் உள்ள ஆத்மாவிற்கு உண்டானதால், எப்போதும் நிலைத்து நின்றுவிடும். அதன் பின்னர் அந்த நிலையை மாற்றி, ஆத்மாவிற்கு நன்மை உண்டாக்கவல்ல சந்தர்ப்பமே அமையாதபடி அவன் ஆகிவிடுவான்.

வ்யாக்யானம் – (புறஞ்சுவர் ஓட்டை மாடம் புரளும் போதறியமாட்டீர்) – புறஞ்சுவரென்கிறது தேஹத்தை. புருஷார்த்தோபயோகியாக ஈச்வரன் தந்த சரீரத்தைக் கொண்டு விஷயாந்தர ப்ரவணமாக்குகையாலே புறஞ்சுவர் என்கிறது. இத்தைக் கொண்டு ஆத்மாவுக்கு ஒரு நன்மை தேடினானாகில் அதுதானே உத்தேச்யமாமிறே. (ஓட்டை மாடம்) – அப்போது விழுந்தது, இப்போது விழுந்தது என்னும்படி அஸ்திரமாயிருக்கையாலே சொல்லுகிறார். (ஓட்டை மாடம்) – ஓடும் பூட்டும் கொண்டு ஸமாதாநம் பண்ணி நிற்கவேண்டும்படியிருக்கை. மாடம் என்கிறது ஸம்ஸாரிகள் அபிப்ராயத்தாலே.

விளக்கம் - (புறஞ்சுவர் ஓட்டை மாடம் புரளும் போது அறியமாட்டீர்) – புறஞ்சுவர் என்னும் பதம் சரீரத்தைக் குறிக்கும். மிகவும் உயர்ந்த புருஷார்த்தங்களை இவன் அடையவேண்டும் என்ற காரணத்தால் ஈச்வரன் இந்த சரீரம் அளித்தான். ஆனால் அதனை உலகவிஷயங்களில் ஈடுபடுத்துவதால், புறஞ்சுவர் என்றார். இந்த உடல் கொண்டு ஆத்மாவிற்கு நன்மை தேட முயற்சி செய்தான் என்றால், இந்த உடல் போற்றத்தக்கதாகிவிடும். (ஓட்டை மாடம்) – "இப்போது விழலாம், அப்போது விழலாம்" என்னும்படியாக, ஸ்திரத்தன்மை அற்றதாக உடல் உள்ளதால் ஓட்டைவீடு என்றார். (ஓட்டை மாடம்) – ஓடு, கதவு கொண்டிருந்த குடிசை என்றாலும் அதனை வீடு என்று கூறுவார்கள். அது போன்று இந்த உடலை எண்ணுகின்றனர். இந்த உடலானது ஓட்டைவீடாக உள்ளபோதும், இதனை மாடமாளிகை என்று ஸம்ஸாரிகள் எண்ணுகின்றனர், ஆகவே மாடம் என்றார்.

வ்யாக்யானம் - நீர் ஹிதம் சொல்லுகிறது இப்போதன்றோ, க்ரமத்திலே செய்கிறோம் என்ன. (புரளும்போதறியமாட்டீர்) – ஜீவிக்கும் காலம் இன்னதென்று அறியமாட்டிகோள். கெடுவிகாள். மரணமன்றோ தோள்தீண்டியாக வந்து நிற்கிறது, க்ரமத்திலே செய்கிறோமென்று ஆறியிருக்கலாமோ? இருக்கும் நாள் அந்யபரராய்க் கொண்டு உங்களுக்கு நன்மையைப் பார்த்திலிகோள். இனி மரணவேளையில்தானே சக்தரல்லிகோள். நீங்கள் என்ன நன்மை தேட இருகிறிகோள்? இனி முடிந்துபோமித்தனை யாகாதே என்கிறார்.

விளக்கம் – ஆழ்வார் கூறியதைக் கேட்ட ஸம்ஸாரிகள் அவரிடம், "எங்களுக்கு எது நன்மை என்பதை இப்போதுதானே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் காலப்போக்கில் அவற்றைக் கைக்கொள்கிறோம்", என்றனர். இதனைக் கேட்ட ஆழ்வார் கூறுவது: (புரளும்போது அறிய மாட்டீர்) – நீங்கள் இந்த உலகில் எத்தனை நாள்கள் வாழப்போகிறீர்கள் என்பதை அறியமாட்டீர்கள். மரணம் உங்கள் கழுத்தைப் எப்போதும் பிடித்தபடி உள்ளது. இப்படி உள்ளபோது நன்மையான செயல்களைக் காலம் பார்த்துச் செய்கிறோம் என்று காத்திருக்கலாமா? இத்தனை நாள்கள் உலக விஷயங்களில் ஈடுபடாமல், உங்கள் நன்மைக்கான செயல் ஏதும் நீங்கள் செய்யவில்லை. மரணம் உங்களைப் பற்றும் காலத்தில், அந்தச் செயல்களைச் செய்யும் சக்தியை நீங்கள் இழந்து நிற்பீர்கள். நன்மையான செயல்களைச் செய்யவேண்டும் என்று எண்ணியபடி இருந்தால் மட்டும், அவற்றைச் செய்ய இயலுமா? அவற்றைச் செய்யாமலேயே நீங்கள் அழியப் போகிறீர்கள்.

வ்யாக்யானம் – (அறஞ்சுவராகிநின்ற) – தர்மமே ப்ரக்ருதியாக நிற்கிறவர். லோகாநாம் த்வம் பரோ தர்ம:, ராமோ விக்ரஹவாந் தர்ம:, க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் என்கிறபடியே ஸித்த தர்மமாயிருக்கிற இருப்பு ப்ரக்ருதியிறே. உபாயோபேயத்வேதத் இஹ தவ தத்த்வம் ந து குணௌ என்னக்கடவதிறே. (ஆகிநின்ற) – உபயாந்தரங்கள் போலே ஸாத்யமன்றிக்கே ஸித்தமாய்க் கொண்டு சமைந்து நின்றவர். ஸாத்ய தர்மங்களுக்குப் பல வேளையில் வந்தால் அவன் கைபார்த்திருக்க வேணும். அவன் தன்னைப் பற்றினார்க்கு வேறொன்றை அபேக்ஷிக்க வேண்டாவே. இனி இவனுக்கு வேண்டுவது இவ்வரணில் ஒதுங்கோமென்னாமையாய்த்து. ப்ராகாரஸ் ஸர்வ வ்ருஷ்ணீநாம் என்று இதிலே ஒதுங்குவோமென்னும் குறைவாளர்க்கு அரணாகச்

சொல்லக் கடவதிறே. (நின்ற) – ஆசயா யதிவா ராம: என்கிறபடியே அவஸப்ரதீக்ஷனாய் நிற்கிறபடி.

விளக்கம் – (அறம் சுவர் ஆகி நின்ற) – தர்மம் என்பதே தனது இயல்பாகக் கொண்டு நிற்பவன். கீழே உள்ள பல வரிகள் மூலமாக தர்மம் என்பதைத் தனது இயல்பாகக் கொண்டவன் என்பதை அறியலாம்:

- இராமாயணம் யுத்தகாண்டம் - லோகாநாம் த்வம் பரோ தர்ம: - அனைத்து உலகங்களுக்கும் மேலான தர்மமாக நீயே உள்ளாய்.

- இராமாயணம் ஆரண்யகாண்டம் - ராமோ விக்ரஹவாந் தர்ம: - தர்மமே வடிவெடுத்தது போன்றவன் இராமன்.

- மஹாபாரதம் - க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் – கண்ணனையே பழைய தர்மம் என்று அறிகின்றனர்.

ஸ்வாமி பராசரபட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் - உபாயோபேயத்வேதத் இஹ தவ தத்த்வம் ந து குணௌ – உபாயமும் உபேயமும் ஆக நீ நிற்பது உனது ஸ்வரூபத்தால் அன்றி, செயற்கையாக அல்ல – என்று அருளிச்செய்தது காண்க. (ஆகிநின்ற) – மற்ற தேவதைகள் போன்று ஒரு காலத்தில் தோன்றி, மற்றொரு காலத்தில் மறையும் தன்மை கொண்டவன் அல்லன். எப்போதும் இருக்கின்ற உபாயமாக உள்ளவன். மற்ற உபாயங்கள் எதுவும் தாங்களாகவே பலன் அளிப்பவை அல்ல. அவை அனைத்தும் அவனது திருக்கரங்களையே எதிர்பார்த்தபடி உள்ளன. ஆனால் இவனையே உபாயமாகப் பற்றுபவர்கள் வேறு எதனையும் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இவனுக்கு வேண்டியது, "நான் இவனுடைய அடைக்கலத்தில் ஒதுங்கமாட்டேன்", என்று இவனிடம் த்வேஷம் பாராட்டாமல் இருந்தாலே போதுமானது. மஹாபாரதம் - ப்ராகாரஸ் ஸர்வ வ்ருஷ்ணீநாம் – வ்ருஷ்ணி குலத்தில் உள்ள அனைவருக்கும் அரணாகக் கண்ணன் உள்ளான் – என்பது போன்று, தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இயலாமல் இவனிடம் புகுந்தவர்களுக்கு இவன் அரணாக

உள்ளான். (நின்ற) – இராமாயணம் அயோத்யாகாண்டம் - ஆசயா யதிவா ராம: - இராமன் அழைப்பானோ – என்று எண்ணி குகன் கங்கையின் கரையிலேயே இருந்தது போன்று, அடியார்கள் அழைப்பார்களோ என்று எண்ணி இவன் காவேரியின் கரையில் அமர்ந்தான்.

வ்யாக்யானம் – (அரங்கனார்க்கு) – விஷயம் தூரமென்னும் குறையுமில்லை கிடீர். நம்மைக் கொள்ளுவாரார் என்று கிடக்கிறவராய்த்து. (ஆள்செய்யாதே) – இவன் தலையில் அநுஷ்டாநமில்லாத பின்பு பலத்திலே அந்வயிக்குமித்தனையிறே. இவனுக்கு ஸ்வரூப ப்ராப்தமான பலமாகச் சொல்லுகிறது அடிமையையிறே. இத்தையிறே இழந்து போந்தது. இவனுக்கு ஓரிடத்திலும் பாரதந்த்ர்யம் தவிராது. கர்மபாதந்த்ர்யமாதல், ஈச்வர பாரதந்த்ர்யமாதல். அதில் கர்மபாரதந்த்ர்யத்துக்கு இசைந்தான் வாஸநையாலே, ஈச்வர பாரதந்த்ர்யத்துக்கு இசைந்திலன் பாபத்தாலே. (ஆட்செய்யாதே) – உண்ணாதே என்றாற் போலேயிருக்கிறதாய்த்து இவர்க்கு.

விளக்கம் – (அரங்கனார்க்கு) – நாம் தேடுகின்ற பொருளானது மிகவும் தூரத்தில் உள்ளது என்னும் நிலையும் இல்லை. காரணம், இந்த அரங்கன், "நம்மை யாரேனும் வந்து அண்டுவார்களா?", என்று எண்ணியபடி அல்லவா உள்ளான்? (ஆள்செய்யாதே) – சேதனன் எந்தவிதமான அனுஷ்டானங்களையும் கடைபிடிக்காதபோது, தனக்குப் பலமாக உள்ள கைங்கர்யத்திலே ஈடுபடுவது மட்டுமே போதுமானது. எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யம் என்பதே ஸ்வரூப பலன் என்று சாஸ்த்ரங்கள் உரைத்தன. இவன் பல காலமாக இந்தக் கைங்கர்யத்தை அல்லவோ இழந்துள்ளான்? இவன் ஸம்ஸாரத்தில் ஈடுபட்டுள்ளவரையில் அடிமையாக உள்ளதை மாற்ற இயலாது. பலகாலமாக கர்மத்திற்கு அடிமையாக உள்ளான். எம்பெருமானின் கருணைக்கு பாத்திரமன பின்னர், அவனுக்கு அடிமையாக உள்ளான். பலகாலம் இவன் கர்மங்களுக்கு ஏன் அடிமையாக இருந்தான் என்றால், வாஸனை காரணமாக ஆகும். எம்பெருமானுக்கு ஏன் அடிமைப்படாமல் இருந்தான் என்றால், இவனிடம் குவிந்துள்ள பாவங்கள் காரணமாக ஆகும். (ஆட்செய்யாதே) – ஆழ்வாருக்கு அரங்கனின் கைங்கர்யம் என்பது உணவு உட்கொள்வது போல ஆகும். ஆக, கைங்கர்யம் செய்யாமல் மனிதர்கள் இருத்தல் என்பது அவர்கள் உண்ணாமல் இருப்பது போல் இவருக்குத் தோன்றுகிறது.

வ்யாக்யானம் – (புறஞ்சுவர் கோலஞ்செய்து) – அஸந்நேவ ஸ பவதி – என்கிறபடியே ஆத்மஸ்வரூபம் அஸத் ஸமமாய்க் கிடக்க, வந்தேறியதான உடம்பை ஒப்பித்திருக்கிறதிறே. ஆத்மாவை அலங்கரிக்கையாவது அடிமை செய்கையிறே. புத்தகங்களை அகவாய் பெருச்சாளி அறுத்துக் கிடக்கத் தெருவுபாட்டை நூலும் துரும்பும் வைத்து அலங்கரிக்குமாபோலேயாய்த்து உடம்பைப் பேணுகை. (புள்கவ்வ) – மாம்ஸ பக்ஷணம் பண்ணித் திரியக் கடவ பக்ஷிகளும் முந்துறக் கவ்வி பின்னை க்ருதக் ந மாம்ஸம் என்று பொகட்டுப்போம். (கிடக்கின்றீரே) – வகுத்த விஷயம் ஸந்நிஹிதமாயிருக்க அங்ஙனே அந்தரப்படுகிறிகோள் என்று வெறுக்கிறார். பராநர்த்தம் பொறுக்கமாட்டாமையாலே சொல்லுகிறார். கோவை வாயாளிற்படியே அவன் சாத்தும்படியான உடம்பு படும்பாடே என்று வெறுக்கிறார். இவர்கள் செத்துக் கிடக்கச் செய்தேயோ இவ்வார்த்தை சொல்லிற்று என்னில் : அங்ஙனன்று, இவர்கள் உண்டு உடுத்துத் திரியா நிற்கச் செய்தே கிடக்கின்றீரே என்கிறார். நேயமஸ்தி புரீ லங்கா என்று திருவடி சொல்லிற்று – ராவணன் ஸிம்ஹாஸநஸ்தனாயிருக்கச் செய்தேயிறே. துர்யோதநாதிகள் பூசற்களத்திலே பட்டுக்கிடக்க அவர்களை ஸ்ரீவேதவ்யாஸபகவான் கண்டு, "நான் சொல்லிற்றுச் செய்யாதே பட்டுக் கிடக்கிறிகோளே", என்று வெறுத்தாற்போலே வெறுக்கிறார் என்றுமாம்.

விளக்கம் - (புறஞ்சுவர் கோலஞ்செய்து) – தைத்திரீய உபநிஷத் - அஸந்நேவ ஸ பவதி – ப்ரஹ்மத்தை அறியவில்லை என்றால் அவன் ஏதும் இல்லாதவன் – என்று கூறியது. இதன்படி, ப்ரஹ்மத்தைப் பற்றி அறியவில்லை என்றால், ஆத்மாவானது அஸத் பொருளாகவே உள்ளது, தனது ஸ்வரூபம் கிட்டப் பெறவில்லை எனலாம். இப்படி உள்ளபோது, கர்மம் காரணமாக உண்டான உடலை அழகுபடுத்திக் கொள்கிறான். ஆத்மாவுக்கு அலங்காரம் செய்வது என்றால் ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பதே ஆகும். ஓலைச்சுவடிகளின் உள்ளே புகுந்து அவற்றைப் பெருச்சாளிகள் கடித்துக் குதறிய பின்னரும், அந்த ஓலைச்சுவடிகளைக் கவனிக்காமல், அவற்றைச் சுற்றி ஒரு பலகையை வைத்து, அதனைப் பட்டு நூல் கொண்டு கட்டி, அலங்காரமாக வைத்திருப்பார்கள். இது போன்று அல்லவா உடலைப் பாதுகாக்கின்றனர்? (புள் கவ்வ) – இராமாயணம் கூறுவது போன்று – க்ருதக் ந மாம்ஸம் – மாமிஸம் உண்ணும் பறவைகளும் உண்பதில்லை – என்பதற்கு ஏற்ப, இவர்களைப் போன்றவர்கள் இறந்த

பின்னர், அவர்களது உடலைப் பறவைகள் கூட உண்பதில்லை. பறவைகள் கூடக் கைவிடுகின்றன. (கிடக்கின்றீரே) – நமக்காக உள்ள அழகியமணவாளன் கைக்கெட்டிய தூரத்தில் உள்ளபோது, அவனைக் கைவிட்டு, இப்படி கழுகுகளும் வெறுக்கும்படியாக உள்ளீர்களே என்று ஆழ்வார் வெறுக்கிறார். இவர்கள் திண்டாடுவது கண்டு பொறுத்துக் கொள்ள இயலாமல், இவ்வாறு இகழ்கிறார். திருவாய்மொழி – கோவை வாயாள் – என்று கூறுவதற்கு ஏற்ப, திருவரங்கன் சாற்றிக் களைந்த மாலைகளை விரும்பி நிற்பதை விடுத்து, இப்படியாகப் பறவைகளும் ஒதுக்கும்படி உள்ளனரே என்றார். இவர்களைப் போன்றவர்கள் இறந்த பின்னரா இப்படிக் கூறுகிறார் என்றால் – இல்லை, உயிருடன் உள்ளபோதே கூறுகிறார்; உணவு உட்கொண்டு, உடைகள் உடுத்தியபடி இவர்கள் நடமாடிக் கொண்டுள்ளபோதே, இப்படியாக ஒரு நிலை உண்டாகப் போகிறது என்பதை அறிந்தவராகக் கூறுகிறார். இராமாயணம் - நேயமஸ்தி புரீ லங்கா – இராமனைப் பகைத்துக் கொண்டதால், இலங்கை அஸத் பொருளாகிவிட்டது – என்று அனுமன் கூறினான் அல்லவா? இப்படி அனுமன் கூறியது, இராவணன் ஸிம்ஹாஸனத்தில் இருந்தபோதே ஆகும். துரியோதனன் முதலானவர்கள் யுத்தபூமியில் இறந்து கிடந்தனர். அவர்களது உயிரற்ற உடல்களைக் கண்ட வ்யாஸபகவான், "நான் கூறியது கேட்காமல் இப்படிக் கிடக்கிறீர்களே", என்றார். இது போன்று இவரும் இறந்து கிடக்கும் ஸம்ஸாரிகளைக் கூறுவதாகவும் கொள்ளலாம்.

7. புலை அறம் ஆகி நின்ற புத்தொடு சமணம் எல்லாம்
கலை அற கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோ தாம்
தலை அறுப்புண்டும் சாவேன் சத்தியம் காண்மின் ஐயா
சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவன் ஆவான்

பொருள் – பலவகையான உயர்ந்த சாஸ்த்ரங்களைக் கற்று, அவற்றின் உண்மைகளைத் தெளிவாக அறிந்து கொண்டவர்கள், தவறான உபதேசங்கள் நிறைந்தவையாக இருக்கும் பௌத்தம் மற்றும் சமணம் போன்ற மதங்களைக் குறித்து, தங்கள் ஈடுபாட்டுடன் ஆராய முனைவார்களோ? அவற்றில் கூறப்பட்டதைத் தங்கள் காதுகளால் கேட்பார்களோ? எனது தலை அறுக்கப்பட்டாலும், நான் இறக்கமாட்டேன். இது உண்மை என்பதை நீங்களே காணலாம். தனது அம்புகளால் இலங்கை

முழுவதையும் வீழ்த்தியதால் உண்டான மேன்மையை உடைய பெரியபெருமாளே அனைவருக்கும் தேவனாக உள்ளான்.

அவதாரிகை – "தொண்டு பூண்டு அமுதமுண்ணாத் தொழும்பர்" என்றும், "புள் கவ்வக் கிடக்கின்றீரே" என்றும் எங்களை நிந்திக்கிறதென்? ஸம்ஸார ஸ்வபாவம் இங்ஙனே இருந்தது; "தண்டுழாய் மாலை மார்பன்" என்று ஆச்ரயணீயனாகச் சொன்ன அவன் தூரஸ்தனாகையாலே எங்களுக்குக் கிட்டவரிது; இன்னமும் ஆச்ரயிப்பார்க்கு விலக்கடிகள் பலவுமுண்டாயிருந்தது; அந்தத் தடையையும் அறுத்து ஆச்ரயணீயனையும் காட்டித் தாரும் என்ன, "இங்கே வந்து அவதரித்து, விரோதி நிரஸநசீலனான தசரதாத்மஜனையே ஆச்ரயிங்கோள்", என்கிறார்.

விளக்கம் – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "தொண்டு பூண்டு அமுதமுண்ணாத் தொழும்பர், புள் கவ்வக் கிடக்கின்றீரே – என்றெல்லாம் எங்களை நீவிர் தூற்றுவது ஏன்? இந்த உலகின் இயற்கை இப்படியாகவே அல்லவா உள்ளது? தண்டுழாய் மாலை மார்பன் என்று போற்றப்படும் அவன், எங்களால் எளிதில் அண்ட இயலாத பரமபதத்தில் உள்ளான். ஆகவே அவனை அடைய இயலவில்லை. அப்படியும் அவனை அடைய முற்பட்டால், எங்களுக்குப் பல தடைகள் உள்ளன. இந்தத் தடைகளை விலக்கி, அண்ட வேண்டிய அவனை நாங்கள் அடைய வழியைக் காட்டித் தர வேண்டும்", என்று கேட்டனர். இதற்கு ஆழ்வார், "இந்த உலகில் அவதரித்து, திருவரங்கத்தில் சயனித்தவனும், அடியார்களின் தடைகளை நீக்குபவனும் ஆகிய சக்ரவர்த்தித் திருமகனான பெரியபெருமாளையே நீங்கள் அடைந்தபடி இருங்கள்", என்றார்.

வ்யாக்யானம் – (புலையறமாகி நின்ற புத்தொடு சமணமெல்லாம்) – சதுர்விதமான பௌத்தமும் க்ஷபணமும் முதலானவையெல்லாம். புலையறம் – நீசதர்மம். அதாகிறது – "ஜ்ஞான விஷயமான பதார்த்தங்களும் ஜ்ஞானமுமேயுள்ளது, இதில் ப்ரமாணம் ப்ரத்யக்ஷமும் அனுமானமுமேயுள்ளது" என்பாரும்; "பதார்த்தங்கள் அனுமேயங்கள், ஜ்ஞானமேயுள்ளது" என்பாரும்; "அனுமேயமாயும் பதார்த்தங்களில்லை, கேவல ஜ்ஞானமேயுள்ளது" என்பாரும்; "அந்த ஜ்ஞானமுமில்லை, ஸர்வம் ஸூந்யம்" என்பாரும், "ஸர்வத்தையும் ஸூந்யமென்னலாமோ, ஜகத்து கார்ய காரண ரூபத்தாலே நித்யமாயும்

அநித்யமாயும் பிந்நமாயும் அபிந்நமாயும் ஸத்யமாயும் அஸத்யமாயும் இப்படி அநேகாதிகம்" என்பாரும், ஆக இப்படிச் சொல்லுகிற நீசதர்மம்.

விளக்கம் – (புலை அறம் ஆகி நின்ற புத்தொடு சமணம் எல்லாம்) – நான்கு வகையாக உள்ள பௌத்தம், சமணம் போன்ற மதங்கள். புலை அறம் என்றால் தாழ்வான தர்மங்கள். பௌத்த மதத்தில் ஒரு பிரிவான வைபாஷிகன், "ஞானம், அந்த ஞானத்தால் அறியப்படும் பொருள்கள் ஆகியவை மட்டுமே உலகில் உள்ளன. இங்கு ப்ரமாணம் என்பது நாம் கண்களால் காண்பதும், அனுமானமாக எடுத்துக் கொள்வதும் மட்டுமே ஆகும்", என்றான். அடுத்த பௌத்த பிரிவான ஸௌத்ராந்திகன், "ஞானம் மட்டுமே உள்ளது. ஞானத்தால் அறியக்கூடிய பொருள்களை நாம் அனுமானத்தால் அறிகிறோம்", என்றான். அடுத்த பிரிவான யோகசாரன், "ஞானம் என்பது மட்டுமே உள்ளது. அனுமானம் மூலம் அறியக்கூடிய பொருள்கள் கூட இல்லை", என்றான். அடுத்த பிரிவான மாத்யமிகன், "ஞானம் என்று ஏதும் இல்லை. அனைத்தும் ஸூந்யமே ஆகும்", என்றான். சமணர்கள் கூறுவதாவது, "அனைத்தையும் ஸூந்யம் என்று எப்படிக் கூறலாம்? காரயம் காரணம் என்று உள்ள இந்த உலகம் நித்யமாகவும்-அநித்யமாகவும் உள்ளது, வேறுபாடுகள் உள்ளதாகவும் வேறுபாடுகள் அற்றதாவும் உள்ளது, உண்மையானதாகவும் உள்ளது பொய்யானதாகவும் உள்ளது, இப்படியாக இந்த உலகம் பலவாறாக உள்ளது", என்பதாகும். இப்படியாகப் பல தாழ்வுகளை உடைய மதங்கள்.

வ்யாக்யானம் – (ஆகி நின்ற) – நெல்லுக்குக் களைபோலே வைதிக தர்மத்துக்கு விருத்தமாய்ப் பழையதாய்ப் போருமென்கை. எல்லாம் என்றது ஸாங்க்யம், வைசேஷிகம், பாசுபதம் முதலானவை. இவை நீசதர்மமானபடி எங்ஙனேயென்னில் – ஈச்வரவிபூதியிலே ஒருவனை ஹிம்ஸித்தார்க்குச் சொல்லுகிற பாபங்களுக்கு அவதியில்லை; ஈச்வரனையும், ஈச்வர விபூதியையும் அஜ்ஞான அஸியாலே அழிக்கப்பார்க்கிறவர்களிறே; அகண்ட்ய கண்டந ப்ரவ்ருத்தரிறே அடங்க.

விளக்கம் - (ஆகி நின்ற) – நெற்பயிர்களுக்கு களை உண்டாவது போன்று, வைதிக தர்மங்களுக்கு இந்த மதங்கள், பல காலமாகக் களை போன்று உள்ளன. "எல்லாம்" என்ற

பதம் மூலம் ஸாங்க்யம், வைசேஷிகம், பாசுபதம் போன்ற பலவும் கூறப்பட்டன. இவை நீசதர்மம் ஆனது எப்படி? ஸர்வேச்வரவரனுக்கு உடைமையாக உள்ள இந்த உலகில், ஒரு மனிதனை ஹிம்ஸை செய்தாலே பல பாவங்கள் வந்து சேர்கின்றன. இப்படி உள்ளபோது, இந்த மதங்கள் ஈச்வரனையும் அவனது உடைமையான உலகங்களையும் அறியாமை என்னும் வாள் கொண்டு அழிக்க முயல்கின்றன. இதனைக் காட்டிலும் பெரிய பாவம் எது? அழிக்க இயலாதவற்றை அல்லவா இவர்கள் அழிக்க முயல்கின்றனர்?

வ்யாக்யானம் – (கலையறக்கற்ற மாந்தர்) – ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸபுராணாதிகளில் நிலை நின்றவர்களாய், வேததாத்பர்யம் கைப்பட்டவர்கள்; அவர்களாகிறார் – கூரத்தாழ்வான் போல்வாரிறே. (காண்பரோ கேட்பரோதான்) – இவற்றை நெஞ்சாலே ஆராய்தல், செவியாலே கேட்குதல் செய்வர்களோ? ஆழ்வான் இஷ்டஸித்தி வாசிக்கிறவர்களோடே இருந்து தாழ்த்துவர, ஆழ்வார் ஆழ்வானுக்குச் சொன்ன வார்த்தையை அநுஸந்திப்பது. பாஹ்யகுத்ருஷ்டிகள் ஸத்தயா அஸஹ்யமாகையும் பகவத்விஷயம் ஸத்தயா தாரகமாயிருக்கையுமிறே தர்சந நிஷ்டையாவது.

விளக்கம் - (கலையறக்கற்ற மாந்தர்) – ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணம் போன்றவற்றை நன்றாகக் கற்று, அவற்றின் வழி நடப்பவர்கள்; வேதங்களில் உள்ள கருத்துக்களை நன்கு அறிந்தவர்கள். இவர்கள் கூரத்தாழ்வான் போன்றோர் ஆவர். (காண்பரோ கேட்பரோதான்) – இவர்கள் மேலே கூறப்பட்ட மற்ற மதங்களைப் பற்றிய நூல்களையோ அல்லது அவற்றின் கருத்துக்களையோ தங்கள் மனதால் ஆராய்ந்தோ, மற்றவர்கள் கூறுவதைக் கேட்டோ நிற்பார்களா? ஒரு சமயம் கூரத்தாழ்வான் இஷ்டஸித்தி என்னும் வேறு சமய நூலைப் படித்துவிட்டு இல்லம் திரும்பினார். அப்போது அவரது தந்தை ஆழ்வானிடம், “இதனைச் செய்யலாமா?”, என்று கூறி அவர் மீது ஸ்ரீபாத தீர்த்தத்தைச் சேர்த்தார். இது போன்று வேதங்களுக்கு விரோதமாக உள்ளவர்கள் நமக்குத் தீமை செய்தால்தான் நம்மால் பொறுத்துக் கொள்ள இயலாது என்பதில்லை; அவர்கள் இருந்துவருவதே விரும்பத்தகாதது ஆகும். இது போன்று எம்பெருமானின் அடியார்கள் நமக்கு நன்மை செய்யவேண்டும் என்பதில்லை; அவர்கள் இருப்பதே நமக்கு நன்மையாகும், நமது தர்சனத்துக்கு நன்மையாகும்.

வ்யாக்யானம் - (தலையறுப்புண்டும் சாவேன் சத்தியம் காண்மின்) – நிர்த்தோஷ ச்ருதியை ப்ரமாணமென்றிருக்கும் அளவில்லாதார்க்கும் "இதுவே ஆச்ரயணீயவஸ்து" என்னுமிடம் ப்ரத்யக்ஷத்தாலே ஸாதிக்கிறேன்; அத்தைக் காணுங்கோள்; மழுவைக் காய்ச்சி, கையிலேயிட்டால் அக்நி தன் கார்யம் செய்யமாட்டாதொழிகிறது அர்த்தத்தினுடைய ஸத்யதையாலேயிறே. அப்படியே என்னுடைய சரீரத்தை சிரச்சேதம் பண்ணினால், அதின் கார்யமான மரணமின்றிக்கே இருந்ததாகில் தசரதாத்மஜனே ஆச்ரயணீயன் என்றிருங்கோள்; தர்மாத்மா ஸத்யஸந்தச்ச என்கிற ப்ரதிஜ்ஞையாலே, வரபலத்தாலே அறுக்கக்கடவதல்லாத தலை அறுக்கக் கண்டோமிறே; அப்படியே, அற்ற தலை அதின் கார்யமான மரணம் பிறவாதபடியிறே இவர் ப்ரதிஜ்ஞை. தலையறுக்கச் செய்தேயும் மரணமின்றிக்கே ஒழியக்கூடுமோ என்னில், (சத்தியம் காண்மின்) – ப்ரத்யக்ஷிக்கப் புகுகிறவற்றிலே ஸம்சயிக்கிறதென்? நான் பண்ணுகிற த்ருஷ்ட ப்ரத்யக்ஷத்தைக் காணுங்கோள். (ஐயா) – அவர்கள் இறாயாதே காண்கைக்காக இரக்கிறார்.

விளக்கம் - (தலையறுப்புண்டும் சாவேன் சத்தியம் காண்மின்) – தோஷங்கள் ஏதும் இல்லாத வேதங்களை ப்ரமாணம் என்று ஏற்றுக் கொண்டும், அந்த நம்பிக்கையில் உறுதியுடன் இல்லாதவர்களுக்கு, "பெரியபெருமாளே அண்டிநிற்க வேண்டிய பரமாத்மா", என்று நான் ப்ரத்யக்ஷமாக உணர்த்துகிறேன். அதனைக் கண்ட பிறகாவது உறுதியுடன் இருங்கள். ஒருவன் தான் கூறுவது உண்மை என்று நிரூபிப்பதற்காக, மழு என்னும் இரும்பு ஆயுதத்தை தீயில் காண்பித்து, நன்றாக பழுக்கச் சூடேறிய அதனைத் தனது கையில் பிடித்து, "நான் கூறுவது உண்மை", என்று நிரூபிப்பது வழக்கமாகும். இது போன்றே எனது (ஆழ்வார்) தலையை உடலில் இருந்து வெட்டிவிடுங்கள், அதன் பின்னரும் நான் மரணம் அடையாமல் இருப்பேன், அதனைக் கண்ட பிறகாவது தசரதனின் திருமகனான இராமனே ஸர்வேச்வரன் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். இராமாயணம் - தர்மாத்மா ஸத்யஸந்தச்ச – இராமன் தர்மவான் என்றால், ஸத்யத்தின் வழி நிற்பவன் என்றால் இந்த்ரஜித்தின் தலையை அறுப்பாயாக – என்று தனது அம்பிடம் இலட்சுமணன் கூறியது காண்க. இப்படிப்பட்ட சபதம் மூலமாக, வரம் காரணமாக யாராலும் அறுக்க இயலாத தலையை இளையபெருமாள் அறுத்தது கண்டோம் அல்லவா? இது போன்று ஆழ்வாரின் சபதம் என்னவென்றால், தனது தலை அறுக்கப்பட்ட பின்னரும் உயிர் போகாது என்பதாகும். தலையை அறுத்த பின்னரும்

உயிர் எப்படிப் போகாமல் இருக்கும் என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். (சத்தியம் காண்மின்) – நான் நேரே உங்களுக்கு உணர்த்தப் போகும் நிகழ்வின் மீது சந்தேகம் எதற்கு? நான் செய்யப்போகும் காரியத்தை உங்கள் கண்களால் கண்டு நீங்களே தெளிந்து கொள்ளுங்கள். (ஐயா) – இதனைக் காணாமல் அங்கிருந்து நகர முற்படுபவர்களை யாசிக்கிறார்.

வ்யாக்யானம் – நீர், இப்படி ப்ரத்யயம் பண்ணவேண்டா, பண்ணின ப்ரதிஜ்ஞையே அமையும், ஆச்ரயணீயன் இன்னானென்று சொல்லலாகாதோ என்ன. (சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான்) – வரம் கொடுத்த தேவதைகள் தரம் குலையாமே சக்ரவர்த்தித் திருமகனாய் வந்து அவதரித்து, கையில் வில்லாலே லங்கையை அழியச் செய்தவனே ஆச்ரயணீயன். தேவதைகள் தங்கள் அளவறியாதே ராவணனுக்கு வரங்கொடுத்து, பின்னை தங்கள் குடியிருப்பு இழக்கும்படி அவனாலே நெருக்குண்டு போக்கற்றவளவிலே திருவடிகளிலே வந்து விழுவார்கள்; அதுக்குப் போக்கடி செய்கை ஈச்வரனுக்கே பரமிறே. ப்ரஹ்மாதிகள் வரபலத்தாலே பூண் கட்டின லங்கையை ஸங்கல்பத்தாலன்றியே கையில் வில்லாலே அழியச் செய்தவனே, உங்கள் விரோதியையும் போக்கி ரக்ஷிக்கும் என்கை. (தேவனே) – ராவணவத ஸமநந்தரத்தில் கையும் வில்லுமாய் நின்றபோதை வீரஶ்ரீயால் வந்த புகரையுடையவனே ஆச்ரயணீயனாவான்.

விளக்கம் – இதனைக் கேட்டவர்கள் ஆழ்வாரிடம், "நீங்கள் இத்தனை கடுமையான ஸத்தியம் செய்யவேண்டாம். உங்களது சபதத்தைக் கொண்டே உங்களை நாங்கள் நம்புகிறோம். இப்படியாக நாங்கள் அண்டி நிற்கத் தகுந்தவன் யார் என்பதைக் கூறவேண்டும்", என்றனர். இதற்கு அருளிச் செய்கிறார். (சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான்) – இராவணனுக்குத் தகாத வரங்கள் கொடுத்து நிலைகுலைந்து நிற்கும் தேவதைகள் அவனால் மேலும் வருந்தாமல் இருப்பதற்காக, பரமபதத்தில் இருந்து இங்கு வந்து, சக்ரவர்த்தித் திருமகனாய் அவதாரம் செய்தான்; தனது கையில் உள்ள வில் மூலமாக இலங்கையை அழித்தான்; இப்படிப்பட்ட இராமனே அண்டத் தகுந்தவன் ஆவான். தங்களுக்கு நேரக்கூடிய பாதிப்பு என்னவென்று அறியாமல், தேவர்கள் இராவணனுக்குப் பல வரங்களை அளித்தனர். இதனால் தங்கள் இருப்பிடங்களையும் அவனால் இழந்து, வேறு கதியில்லாமல் எம்பெருமானின்

திருவடிகளின் விழுந்தனர். இவர்களைக் காப்பாற்றும் கடமை எம்பெருமானுக்கு உள்ளது அல்லவா? ப்ரம்மன் முதலான தேவர்கள் தங்களது வரபலம் என்பதன் மூலமாகவே இலங்கையைச் சுற்றி அரண் அமைத்துவிட்டனர். இப்படிப்பட்ட இலங்கையை எம்பெருமான் தனது ஸங்கல்பம் மூலமாகவே அழித்திருக்கலாம். அப்படிச் செய்தால், இதனைச் செய்தது யார் என்று உலகம் அறிந்து கொள்ளாது என்பதற்காகத் தனது கையில் உள்ள வில் கொண்டு, அனைவரும் காணும்படியாக இலங்கையை அழித்தான். இப்படிப்பட்ட அவன், நீங்கள் அவனை அடையத் தடையாக உள்ளவற்றை நீக்கி, உங்களைக் காப்பான். (தேவனே) – இராவணவதை நேரத்தில், கையில் வில்லும் அம்புமாக நின்று, ஒப்பற்ற வீரனுக்கே உள்ள அழகுடன் நின்ற ஒளியை உடைய இராமனே, உங்களால் அண்டத் தகுந்தவன் ஆவான்.

8. வெறுப்பொடு சமணர் முண்டர் விதி இல் சாக்கியர்கள் நின்பால்

பொறுப்பு அரியனகள் பேசில் போவதே நோயதாகிக்

குறிப்பு எனக்கு அடையும் ஆகில் கூடுமேல் தலையை ஆங்கே

அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமா நகர் உளானே!

பொருள் – திருவரங்கத்தில் சயனித்துள்ள அழகிய மணவாளா! உன்னைப் பற்றியும் உனது பெருமைகளைப் பற்றியும் கேட்டு, அதனால் மனம் எரிந்து வெறுப்பு கொள்கின்ற சமணர்கள், சைவர்கள், உன்னைப் பற்றிக் கேட்பதற்கு பாக்யம் உண்டாகாத பௌத்தர்கள் முதலானவர்கள் உள்ளனர். இவர்கள் உன்னைப் பற்றி எங்களைப் போன்றவர்களால் பொறுத்துக் கொள்ள இயலாதபடி பேசுவார்கள் என்றால், அந்த தீய சொற்களாலேயே அவர்கள் நோய்வாய்ப்பட்டவர்கள் போன்று மடிந்து விட்டால் நலம். அதனையும் மீறி அவர்கள் உயிருடன் இருந்தால் என்ன நடக்கும் என்றால் – இப்படிப்பட்ட தவறான சொற்களைக் கேட்ட இயலாத எனக்குச் சரியான வாய்ப்பு கிட்டினால், இவ்விதமாக உன்னை நிந்தனை செய்த அவர்களின் தலைகளை அறுத்து எரிவதே எனக்குச் சரியான செயலாகும்.

அவதாரிகை – இப்படி வைதிக மர்யாதைகளில் நின்று, "தசரதாத்மஜனே ஆச்ரயணீயன்" என்று சொன்னவிடத்தில், அங்குத்தை குணாதிக்யத்தை புத்தி பண்ணி ஆச்ரயியாதே,

ஸம்ஸாரிகள் அவிக்ருதராயிருந்தபடியைக் கண்டு, "இதுக்கடி பாஹ்ய தர்சந ருசிகளாகையிறே; ஆன பின்பு இவர்கள் வத்யர்" என்று பெரியபெருமாளைக் குறித்து அருளிச் செய்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரம் மூலமாக, சரியான தர்ம வழியின்படி நின்று, தசரதனின் புத்திரனான இராமனே அண்டத்தக்கவன் என்று கூறினார். இப்படியாக ஆழ்வார் கூறிய பின்னரும் இந்த உலகில் உள்ள ஸம்ஸாரிகளில் பலரும் அவனை அண்டி, அவனது குணங்களை எண்ணியபடி இருப்பதில்லை. மாறாக, தங்களது இயல்பான வாழ்க்கையை அவர்கள் தொடர்ந்தபடி உள்ளதை ஆழ்வார் கண்டார். தனது மனதில், "இவர்கள் இப்படி திருந்தாமல் இருப்பதற்குக் காரணம், இவர்களுக்கு மற்ற மதங்களின் மீது உண்டாகியுள்ள பற்றுதலே ஆகும். இப்படிப்பட்டவர்கள் கொல்லப்படுவதற்கு ஏற்றவர்கள்", என்று பெரியபெருமாளிடம் அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – (வெறுப்பொடு சமணர் முண்டர்) – அர்த்த காம நிபந்தநமாகவன்றிக்கே நிர்நிபந்தநமாக பகவதுத்கர்ஷம் கேட்டவாறே சிவீலென்றிருப்பர்கள். வேத ப்ரதிபாத்யதயா வரும் பகவதுத்கர்ஷமும், தத்ஸமாராதநாந்தர்க்கதமான ஜ்யோதிஷ்டோமாதி ஹிம்ஸையும், அமணர்க்கும் சைவர்க்கும் அஸஹ்யம் திருநாளில் எழுந்தருளா நின்றால் நான்று கொள்வாரும், "கொம்பூதிற்று" என்று முட்டிக் கொள்வாருமாயிறே முண்டரிருப்பது. (முண்டர்) என்கிறது சைவரை. "முண்டன் நீறன்" என்கிறபடியே அவனுடைய வடிவையிறே இவர்களும் தரித்திருப்பது. சமணராகிற முண்டர் என்னவுமாம். (விதியில் சாக்கியர்கள்) – பகவதுத்கர்ஷத்தை அறிந்து, தத்ஸமாச்ரயணத்தைப் பண்ணி அநுபவிக்கைக்கீடான பாக்யமில்லாத பௌத்தர்.

விளக்கம் - (வெறுப்பொடு சமணர் முண்டர்) – பொருள் காரணம், பெண் காரணம் போன்ற எந்தவிதமான காரணமும் இல்லாமல், எம்பெருமானின் மேன்மைகளைக் கேள்விப்பட்டவுடனேயே மிகுந்த வெறுப்பு கொண்டு, முகம் சிவக்க இருப்பவர்கள். வேதங்களில் எம்பெருமானின் மேன்மைகளை ஓதுவதைக் கண்டு பொறுக்காமல் இருப்பார்கள். அவனது ஆராதனமாக இயற்றப்படும் ஜ்யோதிஷ்டோமம் முதாலன யாகங்களில் செய்யப்படும் பசு வதையைக் கண்டு பொறுக்க இயலாமல் சமணரும்

சைவரும் இருப்பார்கள். நம்பெருமாள் திருவிழா நாட்களில் திருவீதி வலம் வருவதைக் கண்டு சைவர்கள் பொறுத்துக் கொள்ள இயலாமல், அந்த வீதி வலத்தைத் தடை செய்யும் பொருட்டு, தூக்கு மாட்டிக் கொண்டு மடிவார்கள். அப்படியும் நம்பெருமாள் எழுந்தருளினால், அப்போது ஊதப்படும் திருச்சின்ன வாத்யத்தின் ஒலியைக் கேட்டு, பொறுக்க இயலாமல், சுவற்றில் முட்டிக் கொள்வார்கள். முண்டர் என்று சைவர்கள் கூறப்பட்டனர். திருச்சந்தவிருத்தம் (71) - முண்டன் நீறன் – என்று கூறுவதற்கு ஏற்ப, அவனைப் போன்றே இவர்களும் மொட்டையடித்து நிற்கின்றனர். முண்டர் என்பதை சமணர் என்றும் கொள்ளலாம். (விதியில் சாக்கியர்கள்) – பெரியபெருமாளின் மேன்மைகளை அறிந்து கொண்டு, அவனிடம் சென்று, அவனை அனுபவிக்கும் பாக்கியத்தைப் பெறாத பௌத்தர்கள்.

வ்யாக்யானம் – (நின்பால் பொறுப்பரியனகள் பேசில்) – ஸர்வஸ்மாத்பரனாய், குணாதிகனான உன் பக்கலிலே பொறுக்க அரியனவாயிருப்பன சிலவற்றைச் சொல்லுவார்களாகில். ஈச்வர ஸத்பாவத்தையும் தத்விபூதி ஸத்பாவத்தையும் இல்லை செய்வாரும், ஒரு க்ஷேத்ரஜ்ஞனைப் பரதேவதையென்பாருமானால், வைதிகருக்குப் பொறுக்கப் போகாதிறே. அவர்கள் சொல்லும் பாசுரம் தம் வாயால் சொல்லமாட்டாமையாலே "பொறுப்பரியனகள்" என்கிறார். "தான் தீங்கு நினைந்த" என்றும், "அன்றின்னாதனசெய் சிசுபாலன்" என்றுமிறே இவர்கள் வார்த்தை இருப்பது. "பேசில்" என்றது செவிகேட்கச் சொல்லுவார்களாகில் என்றபடி.

விளக்கம் - (நின்பால் பொறுப்பரியனகள் பேசில்) – அனைவரிலும் உயர்ந்தவனாகவும், சிறந்த குணங்கள் பொருந்தியவர்களில் சிறந்தவனாகவும் உள்ள உன்னைக் குறித்து, உனது அடியார்களான எங்களால் பொறுத்துக் கொள்ள இயலாதபடி கூறுவார்கள் என்றால்; உன்னை ஸர்வேச்வரன் என்று ஒப்புக் கொள்ளாத சைவர்கள், உன்னுடைய விபூதிகள் அனைத்தும் பொருந்தாத வாதம் என்று கூறும் சமணர்கள் – இது போன்ற செயல்களை வைதிகர்களால் பொறுத்துக் கொள்ள இயலாது அல்லவா? இப்படிப்பட்டவர்கள் பெரியபெருமாளைக் குறித்துக் கூறும் தகாத சொற்களைத் தனது வாயால் கூற இயலாமையால், "பொறுப்பரியனகள் – பொறுத்துக் கொள்ள இயலாதவை" என்று கூறியது காண்க. திருப்பாவை (25) - தான் தீங்கு நினைந்த – என்றும், நாச்சியார் திருமொழி - அன்றின்னாதனசெய் சிசுபாலன் – என்று கூறுவதற்கு

ஏற்ப அல்லவோ இவர்களின் சுடுசொற்கள் உள்ளன? பேசில் என்ற பதம், "இப்படிப்பட்ட சொற்களை நமது காதுகளில் விழும்படிக் கூறுவார்கள் என்றால்", என்னும் பொருளில் வந்துள்ளது.

வ்யாக்யானம் – மஹாபலி ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே சென்று "எனக்கு ராஜ்யஸ்ரீ குறைந்துவாரா நின்றது; இதுக்கு அடியென்?", என்று கேட்க, "அஸுரர்களுக்காக தேவர்களை நெருக்கினாய்; அவர்கள் க்ஷீராப்தியிலே சென்று ஆச்ரயிக்க, அவர்கள் விஜயார்த்தமாக அதிதி வயிற்றிலே புகுந்தருளினான். உன் ஐச்வர்யம் முடிந்தது காண்", என்ன, அவன் பகவந்நிந்தையைப் பண்ண செவிபுதைத்துக்குக் கொண்டு, "கெடுவாய்! என் முன்னே பகவந்நிந்தையைப் பண்ணினாய். என் தலையை அறுத்தாயாகில் எனக்கு உபகரித்ததாயாயிற்று. நீ இப்படி சொன்னதுக்காக ராஜ்யப்ரஷ்டனாவாய்" என்று சபித்தான். "விரக்தனானவன் ராஜ்யத்தை ஒன்றாக நினைத்து இப்படி சபிப்பானென்?", என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, "நாயை தண்டிக்கையாகிறது, அது தின்கிற அமேத்யத்தை விலக்குகையன்றோ", என்று அருளிச்செய்தார். ராஜகுமாரனை தண்டிக்கையாவது, சந்தனத்தையும் வெற்றிலையையும் விலக்குகையிறே.

விளக்கம் – மஹாபலி தன்னுடைய முன்னோரான ஸ்ரீப்ரஹ்லாதனிடம் சென்று, "என்னுடைய அரசாங்கச் செல்வம் தேய்ந்து கொண்டே செல்கிறது. இதற்கான காரணம் என்ன?", என்று கேட்டான். அதற்கு ஸ்ரீப்ரஹ்லாதன் அவனிடம், "அசுரர்களுக்காக நீ தேவர்களை மிகவும் துன்பம் செய்தாய். அவர்களும் திருப்பாற்கடலில் சென்று ஸர்வேச்வரனிடம் முறையிட்டனர். அவர்கள் வெல்லும் பொருட்டு, அந்த ஸர்வேச்வரன் அதிதியின் திருவயிற்றில் வாமனனாக புகுந்துவிட்டான். இனி உன் செல்வம் அழிந்துவிடும் என்றே கொள்க", எனக் கூறினார். இதனைக் கேட்ட மஹாபலி, ஸர்வேச்வரனைத் திட்டித் தீர்த்தான். உடனே ஸ்ரீப்ரஹ்லாதன் தனது செவிகளை மூடிக் கொண்டு, "இத்துடன் நீ முடிந்தாய்! எனக்கு முன்பாகவே நீ எம்பெருமானை நிந்திக்கிறாயே! இதனை நான் கேட்பதை விட, எனது தலையை நீ அறுத்திருந்தால் எனக்குப் பெரும் உதவியாக இருந்திருக்கும். இப்படியாக நீ அவனை நிந்தனை செய்ததால், உனது ராஜ்யம் இழப்பாயாக", என்றார். இதனைக் கேட்ட நஞ்சீயர் பட்டரிடம், "ஸ்ரீப்ரஹ்லாதனோ எதிலும் பற்றுதல் வைக்காதவர். இப்படிப்பட்ட ஒருவர், ராஜ்யத்தை ஒரு பலன் என்று எண்ணி சபிப்பது முறையா?", என்று கேட்டார். இதற்கு

பட்டர், "நாயைத் தண்டிக்க வேண்டும் என்றால், அது உண்கின்ற மலத்தைத் தள்ளி விடுவதுதானே வழி", என்றார். சந்தனம் மற்றும் வெற்றிலை ஆகியவற்றை விலக்கிவிடுவதே அரசகுமாரனைத் தண்டிக்கும் வழியாகும்.

வ்யாக்யானம் – (போவதே நோயதாகி) – பிள்ளை திருநறையூரரையரைப் போலே ஸத்வப்ரசுரனாயிருந்தானாகில், அவன் நிந்தையே நோயாக முடிந்துபோவது. அதவா கேட்டால் பொறுக்கமாட்டாதபடி அசக்தனாயிருந்தானாகில் அவர்கள் முகத்திலே விழியாதே போவது என்றுமாம். குரோர்யத்ர பரீவாதோ நிந்தா வா அபி ப்ரவர்த்ததே கர்ணௌ தத்ர பிதாதவ்யௌ கந்தவ்யம் வா தத: அந்யத:

விளக்கம் - (போவதே நோயதாகி) – ஒருவனுக்கு ஸத்வகுணம் மட்டுமே நிறைந்துள்ளது என்றால், எம்பெருமானைக் குறித்து யாராவது நிந்தனை செய்வதைக் கேட்க நேர்ந்தால், பிள்ளை திருநறையூர் அரையரைப் போன்று, எம்பெருமானுக்காகத் தனது உயிரை விட்டுவிட வேண்டும். அப்படித் தனது உயிரை விட சக்தி இல்லை என்றால், அவ்விதம் நிந்தனை செய்பவர்களின் முகத்தைக் காணாமல், அங்கிருந்து அகன்று செல்லவேண்டும். மநுச்ம்ருதி - குரோர்யத்ர பரீவாதோ நிந்தா வா அபி ப்ரவர்த்ததே கர்ணௌ தத்ர பிதாதவ்யௌ கந்தவ்யம் வா தத: அந்யத: - எங்கு ஆசார்யனைப் பற்றித் தவறாகக் கூறப்படுகிறதோ, அங்கு உள்ளபோது காதுகளை மூடிக் கொள்ளவேண்டும்; அந்த இடத்தை விட்டு விரைவாக அகல வேண்டும் – என்று கூறியது காண்க.

வ்யாக்யானம் – (குறிப்பெனக்கடையுமாகில்) – அங்ஙனன்றிக்கே எதிரி நசிக்கும்படி இலக்கு வாய்க்குமாகில், குறித்தல் – நினைத்திலும், கருத்தில் காட்டலும். (கூடுமேல்) – தான் அவன் கையிலே அகப்படாதபடி எதிரியை நிரஸித்துத் தப்பவல்ல சக்தியோகமுண்டாகில். (தலையை ஆங்கே அறுப்பதே கருமம்) – பகவந்நிந்தை பண்ணின இடந்தன்னிலே தலையை அறுக்கையிறே கர்த்தவ்யம். கருமம் என்றது அவன் கார்யமென்னவுமாம், ஸ்வகார்யமென்னவுமாம். பின்னை, அவன் நிந்தை பண்ணக் கேளாதொழியலாம். பகவந்நிந்தை பண்ணி அவன் தனக்கு அநர்த்தத்தை விளைத்துக் கொள்ளாதொழியலாம். அக்நீஷோமீய ஹிம்ஸையில் யஜமானனுக்கும் பசுவுக்கும் ஸ்வர்க்க ஸித்தியுண்டாகச் சொல்லா நின்றதிறே. (கண்டாய்) –

ஸ்ரீதண்டகாரண்யத்தில் ரிஷிகளுக்கு விரோதிகளான ராவணாதிகளை அழியச்செய்த தேவரீர்க்கிறே இது சொன்னால் ஏறுவது. (அரங்கமாநகருளானே) – கோயிலில் வந்து கண்வளர்ந்தருளுகிறது அவதாரத்தில் பிற்பாடரானாருடைய விரோதிகளைப் போக்குகைக்காகவன்றோ? என்கிறார்.

விளக்கம் – (குறிப்பு எனக்கு அடையும் ஆகில்) – மேலே கூறியபடி பகவானைப் பற்றித் தவறாகக் கூறுவதைக் கேட்டு அந்த இடத்தை விட்டு அகன்று செல்லவோ, அல்லது வாழ்வை முடித்துக் கொள்ளவோ செய்யாமல், அவ்விதம் பேசுகின்ற விரோதிகளை அழிக்கும் வாய்ப்பு உண்டாகலாம். குறித்தல் = ஒரு செயலைச் செய்ய நினைத்தல், அவ்விதம் செய்து முடிக்கச் சரியான வாய்ப்பு அமைதல். (கூடுமேல்) – தான் எதிரியின் கையில் அகப்படாதபடி, அவனை அழித்துத் தப்பிச் செல்ல சக்தி இருந்தால். (தலையை ஆங்கே அறுப்பதே கருமம்) – அப்படித் தப்பிச் செல்லும் திறன் இருந்தால், எம்பெருமானை நிந்தனை செய்தவனின் தலையை, அவன் எந்த இடத்தில் நின்று அப்படிச் செய்தானோ, அங்கேயே அறுப்பதுதான் கருமம் ஆகும். கருமம் என்றால் செய்வதற்கு ஏற்ற காரியம் ஆகும். இந்தச் செயல் மூலம், அவன் மேலும் எம்பெருமானைக் குறித்து நிந்தனை செய்வதை கேட்காமல் இருக்க முடியும். எம்பெருமானை மேலும் நிந்தனை செய்து, மேலும் பாவங்களை சம்பாதிக்காமல் அவனும் தப்ப இயலும். அக்நீஷோமீய யாகத்தில் பசுவதை இருந்தபோதிலும், அந்தப் பசுவிற்கும் அதனைக் கொன்ற யஜமானனுக்கும் ஸ்வர்க்கம் கிட்டுவது போன்றே ஆகும். (கண்டாய்) – ஸ்ரீதண்டகாரண்யத்தில் முனிவர்களுக்குத் துன்பம் உண்டாக்கிய இராவணனை அழித்த உன்னால் மட்டுமே இவ்விதம் நடக்க இயலும். ஆகையால் உன்னிடம் கூறுகிறேன். (அரங்கமாநகருளானே) – இராமாவதார காலத்தின் பின்னால் வந்தவர்களின் விரோதிகளைப் போக்குவதற்காக அல்லவா நீ இந்தத் திருவரங்கப் பெரியகோயிலில் கண்வளர்கிறாய்?

வ்யாக்யானம் – ஆந்ருசம்ஸ்ய ப்ரதாநராய் பரமதார்மிகரான இவ்வாழ்வார் “வதம் ஆம்” என்று விதிப்பானென்? என்னில், ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி என்னா நின்றதிறே. அக்நீஷோமீய ஹிம்ஸைபோலே இருப்பதொன்றிறே இது. பகவந்நிந்தை பண்ணுவார்க்கும் பகவத ஸாதாரணராயிருப்பார்க்கும் பாத்யபாதக ஸம்பந்தமேயுள்ளது. “எண்ணாத மானிடத்தை எண்ணாத போதெல்லாம் இனியவாறே” என்னக்கடவதிறே.

விளக்கம் – மிகுந்த கருணை உள்ளவராகவும், தர்ம வழியில் நடப்பவராகவும் உள்ள தொண்டரடிப்பொடியாழ்வார் இப்படியாக "வதம் செய்யவேண்டும்" என்று கூறுவது சரியா என்று கேட்கலாம். வேதம் - ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி – எந்த உயிரையும் துன்புறுத்தக் கூடாது – என்று கூறுகிறது அல்லவா? ஆனால் அதே வேதம் அக்நீஷோமீய யாகம் போன்றவற்றில் பசு முதலான பலவற்றின் நன்மையைக் கருத்தில் கொண்டு, விதிவிலக்கு அளித்தது அன்றோ? அது போலவே இவரும் கூறுகிறார். எம்பெருமானை எப்போதும் நிந்தனை செய்தபடி உள்ளவர்கள், எம்பெருமானை எப்போதும் சிந்தனை செய்தபடி இருப்பவர்கள் ஆகிய இருவருக்கும் எந்தவிதமான உறவும் இருக்க இயலாது. விரோதிமுறை மட்டுமே இருக்கும். பெரிய திருமொழி (11-6-7) - எண்ணாத மானிடத்தை எண்ணாத போதெல்லாம் இனியவாறே – அவனைப் பற்றி எண்ணாதவர்களை நான் எண்ணவில்லை என்றால் எனக்கு இன்பமாக உள்ளது – என்றது காண்க.

9. மற்றும் ஓர் தெய்வம் உண்டே மதி இலா மானிடங்காள்
உற்றபோது அன்றி நீங்கள் ஒருவன் என்று உணரமாட்டீர்
அற்றம் மேல் ஒன்று அறியீர் அவன் அல்லால் தெய்வம் இல்லை
கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமின் நீரே.

பொருள் – வேதவேதாந்தங்கள் கூறும் உண்மையை அறியாத மனிதர்களே! நான் கூறுகின்ற பெரியபெருமாளைத் தவிர வேறு ஒரு தெய்வம் உள்ளாதோ? நீங்கள் மற்ற தெய்வம் என்று எந்தத் தெய்வங்களிடம் சென்று சரணம் புகுகின்றீர்களோ, அந்தத் தெய்வங்களுக்கு ஆபத்து காலம் வரும்போது அல்லாமல், மற்ற காலங்களில் இவன் ஒருவனே ஸர்வேச்வரன் என்று நீங்கள் அறியமாட்டீர்கள். மிகவும் உயர்ந்து விளங்கும் இவனை நீங்கள் உணரமாட்டீர்கள். சரணம் புகுவதற்கு அரங்கனைத் தவிர வேறு தெய்வம் ஏதும் இல்லை. ஆகவே, பசுக்கூட்டங்களை மேய்த்து நின்றவனும், எனக்குத் தந்தை போன்றவனும் ஆகிய அரங்கனின் திருவடிகளைப் பற்றுவீர்களாக.

அவதாரிகை – அவர்கள் சிஷ்டகர்ஹைக்கு அஞ்சி, "இதர தர்சந ருசியால் ஆச்ரயியாதிருந்தோமல்லோம். தசரதாத்மஜனையிறே ஆச்ரயிக்கச் சொல்லிற்று. அவனாகிறான். வாசலும் தடையுமாய் எங்களுக்குக் கிட்டவொண்ணாதாயிருப் பானொருத்தன். கட்டினாலும் வசிஷ்டாதிகள் அருகேயிருந்து அயோக்யரோ யோக்யரோ என்னா நிற்பார்கள். ஆகையாலே பராவஸ்த்தையோடு ராமாவதாரத்தோடு வாசியில்லை. எங்கள் அயோக்யதை பாராதானொருவன் ஆச்ரயணீயனாகவேணும். அவனைக் காட்டித் தாரீர்", என்ன. "ஆகில் யோக்யாயோக்யதை பாராதே தானே மேல் விழுந்து விஷயீகரிக்கும் க்ருஷ்ணனை ஆச்ரயிங்கோள்", என்கிறார்.

விளக்கம் – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "மற்ற மதங்களின் மீது உள்ள பற்றுதல் காரணமாக நாங்கள் எம்பெருமானை அண்டவில்லை என எண்ணவேண்டாம். அது போன்ற காரணங்களால் நாங்கள் அவனை அண்டாமல் இருக்கவில்லை. நீங்கள் சக்ரவர்த்தித் திருமகனான இராமனைப் பணியும்படிக் கூறினீர்கள். ஆனால் அரண்மனையின் வாசல் கதவுகள், அங்குள்ள காவல்வீரர்கள் என்று காணப்படும் தடைகளால், அவனை எங்களால் அணுக இயலாது. அப்படியே அருகில் சென்றுவிட்டாலும் அங்குள்ள வசிஷ்டர் முதலானவர்கள் எங்களை யோக்யர்களா, அயோக்யர்களா என்று ஆராய்ந்து பார்த்து தடுப்பார்கள். ஆகவே பரவாசுதேவனைப் போன்று இராமனை அணுகுவதும் வேறுபாடு இல்லாத கடினமான செயலே ஆகும். எங்களைப் பற்றி ஆராயாமல் இருக்கும் ஒருவனே நாங்கள் சரணம் அடையத் தகுந்தவன் ஆவான். அப்படிப்பட்ட ஒருவனை எங்களுக்கு நீரே காண்பிக்க வேண்டும்", என்றனர். உடனே ஆழ்வார், "அப்படியென்றால், எந்தவிதமான தகுதியையும் காணாமல், தானாகவே ஓடிவந்து பிடித்துக் கொள்ளும் தன்மையுடைய கண்ணனைப் பற்றுவீர்களாக", என்றார்.

வ்யாக்யானம் – (மற்றுமோர் தெய்வமுண்டே) – நான் சொல்லுகிற இவனையொழிய வேறேயொரு ஆச்ரயணீய தத்த்வமுண்டோ? ஈச்வரோஹம் என்றிருப்பார் உண்டானாலும், ஆச்ரயணீயனுமாய், ப்ராப்தனுமாயிருப்பான் வேறொருவன் இல்லை. யே த்வந்யதேவதாபக்தா: என்று அந்யராகவிறே இவன் சொல்லும்போதும் சொல்லுவது. (ஓர் தெய்வம்) – கட்டக்குடியனாய்ச் சிறிது போதைக்குப் போலியாய் நின்று பின்னை விவேகித்தால் கழிக்கலாவதொன்றுமில்லை. (உண்டே) – இவனோடு

ஸமாநராயிருப்பார் உண்டோ என்று கேட்கிறாரல்லர். கிம் க்ஷேபமாதல். ஏழுலகும் ஈபாவஞ்செய்து அருளாலளிப்பார் ஆர் என்றால் "அவன்" என்று எதிரிகளுக்கு உத்தரமாம்படி ஸுப்ரஸித்தமான அர்த்தம் என்கிறாராதல். ஸம்ப்ரதிபந்நமான அர்த்தத்தை ஒருவராலும் இசையாதொழியவொண்ணாதிறே.

விளக்கம் - (மற்றுமோர் தெய்வமுண்டே) – நான் கூறுகிற இவனைத் தவிர்த்து, சரணம் என்று புகத்தகுந்த தத்துவம் வேறு ஏதேனும் உள்ளதா? "நானே இறைவன்" என்று பல தெய்வங்களும் தங்களைத் தாங்களே கூறியபடி உள்ளன. இருந்தாலும், சரணம் புகத்தகுந்தவனும், நமக்கு இயற்கையாகவே உறவினனாக உள்ளவனும் இவனைத் தவிர வேறு யாரும் இல்லை. கீதையில் (9-23) - யே த்வந்யதேவதாபக்தா: - மற்ற தேவதைகளை – என்று கண்ணன் தன்னையும் மற்ற தேவதைகளையும் வேறுபடுத்திக் கூறுவது போன்று, இங்கு இவரும் கூறுகிறார். (ஓர் தெய்வம்) – மிகுந்த கடினத்துடன் வாழ்க்கையை நடத்தும் ஏழைகளைக் கூட நாட்டின் குடிமக்கள் என்று கூறுவது போன்று, மற்ற தெய்வங்கள் ஏதோ சில காலகட்டத்தில் போற்றப்பட்டாலும், மற்ற காலங்களில் ஏதும் இல்லை என்றே கழிக்கத்தக்கவர்கள் ஆவர். (உண்டே) – "இவனுக்கு நிகரான தெய்வம் உண்டா?", என்று ஆழ்வார் கேட்கவில்லை. "இவனைத் தவிர மற்ற யாருக்கும் தெய்வம் என்று அழைக்கப்படும் தகுதி கூட இல்லை", என்று கூறுகிறார். திருவாய்மொழி (2-2-2) - ஏழுலகும் ஈபாவஞ்செய்து அருளாலளிப்பார் ஆர் – என்று கேட்பது போன்று இவனது விரோதிகளைக் கேட்டால், அவர்களும் "அவனே" என்று பதில் தரும்படி, எதிரிகளும் ஏற்றுக் கொள்ளும் தன்மை கொண்ட விஷயம் அல்லவா இது? அவனே அனைத்தையும் காப்பவன் என்ற உண்மையை ஏற்க இயலாது என்று யாரும் கூற முடியாது.

வ்யாக்யானம் – (மதியிலா மானிடங்காள்) – த்ரீணி சதா த்ரீ ஸஹஸ்ராண்யக்நிம் த்ரிம்சச்ச தேவா நவ சாஸபர்யந் என்கிறபடியே ஆராத்யர் அநேகர் என்னுமிடம் ச்ருதி ஸித்தமன்றோ என்ன. (மதியிலா மானிடங்காள்) – வேதாந்த ஜ்ஞாநமில்லாதார் பாக்யஹீநரிறே. சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை, அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா, யே யஜந்தி பித்ரூந் தேவாந் என்கிற ச்ருதி ஸ்ம்ருதிகளில் ஜ்ஞாநமில்லாதாரிறே. அறிவுக்கு யோக்யதையுள்ள ஜந்மத்திலே ஜநித்து அறிவின்றிக்கே இருக்கிற பாக்யஹீநர்காள்.

ஆன்விடையேழன்றடர்த்தாற்காளானாரல்லாதார் மானிடவரல்லரென்று என் மனத்தே வைத்தேனே என்றும், செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமா வையேன் என்றும், அஸந்நேவ ஸ பவதி என்றும் சொல்லக் கடவதிறே. தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோ அந்யதுக்தம் என்றும், ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு என்றும் வகுத்த விஷயத்தில் ஜ்ஞாநமே ஜ்ஞாநமாவது; அல்லாதவை அஜ்ஞாநஸமாநம். வித்யாந்யா சில்பநைபுணம் செருப்புக் குத்தக் கற்ற ஜ்ஞாநத்தோபாதியிறே இதர ஜ்ஞாநங்கள்.

விளக்கம் - (மதியிலா மானிடங்காள்) – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "ருக்வேதம் - த்ரீணி சதா த்ரீ ஸஹஸ்ராண்யக்நிம் த்ரிம்சச்ச தேவா நவ சாஸபர்யந் – மூவாயிரத்து முந்நூற்று முப்பதொன்பது தேவர்கள் சேர்ந்து அக்னிதேவனான எனக்குத் தொண்டு செய்தனர் – என்று கூறியதே. இது போன்று ஆராதிக்கப்பட வேண்டிய தேவர்கள் பலர் உள்ளனர் என்பது வேதங்களால் உணரப்படுகிறது அல்லவா?", என்று கேட்டனர். அதற்கு ஆழ்வார் பதில் கூறத் தொடங்குகிறார். (மதியிலா மானிடங்காள்) – வேதாந்த ஞானம் என்னும் செல்வம் இல்லாதவர்களே! கீழே உள்ள பல வரிகளைப் பற்றிய ஞானம் அற்றவர்களே!

- யஜுர்வேதம் - சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை – அனைத்து தேவதைகளும் பரமாத்மாவின் சரீரமாகவே உள்ளதால், அவற்றுக்குச் செய்யப்படும் கர்மங்கள் பெருமை அடைகின்றன.
- ஸ்ரீமத் பகவத் கீதை (9-24) - அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா – அனைத்து யஜ்ஞங்களையும் அனுபவிப்பவனாக நானே உள்ளேன்.
- மஹாபாரதம் சாந்தி பர்வம் (355-4) - யே யஜந்தி பித்ரூந் தேவாந் – யார் பித்ருக்களையும் தேவர்களையும் ஆராதிக்கின்றனரோ.....அவர்கள் விஷ்ணுவையே ஆராதிக்கின்றனர்.

சிறந்த அறிவு பெறுவதற்கு ஏற்ற மனிதப்பிறவியை அடைந்தும், அத்தகைய அறிவைப் பெறாமல் உள்ள மனிதர்களே! இப்படியாக எம்பெருமானைப் பற்றிய அறிவு

இல்லாதவர்களை, இல்லாத பொருள்கள் என்றே கீழே உள்ள வரிகள் கூறுகின்றன அல்லவா?

- பெரிய திருமொழி (11-7-9) – ஆன்விடை ஏழு அன்று அடர்த்தாற்கு ஆளானார் அல்லாதார் மானிடவர் அல்லர் என்று என் மனத்தே வைத்தேனே – ஏழு காளைகளை அடக்கிய கண்ணனுக்கு வசப்படாதவர்களை மனிதர்களே அல்லர் என்று முடிவு செய்தேன்.
- இரண்டாம் திருவந்தாதி (44) - செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமா வையேன் – தாமரை போன்ற அழகான கண்கள் கொண்ட எம்பெருமானை மறந்தவர்களை மனிதர்களாகவே கொள்ளவில்லை.
- தைத்திரீய ஆரண்யகம் - அஸந்நேவ ஸ பவதி – ப்ரஹ்மத்தை அறியவில்லை என்றால் இல்லாதவன் ஆகிறான்.
- மேலும் நமது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி பகவத் விஷயத்தைக் குறித்த ஞானம் மட்டுமே ஞானம் எனப்படும். மற்ற அனைத்து ஞானங்களும் அஞ்ஞானம் என்றே கொள்ளப்படும். இதனைக் கீழே உள்ள பல வரிகளும் கூறுகின்றன:
- விஷ்ணுபுராணம் - தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோ அந்யதுக்தம் – தோஷம் அற்ற உயர்ந்த பொருள் எதனால் அடையப்படுகிறதோ அதுவே ஞானம் ஆகும்.
- முதல் திருவந்தாதி (67) - ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு.
- விஷ்ணு புராணம் - வித்யாந்யா சில்பநைபுணம் – மற்ற வித்யைகள் செருப்புக்குச் சமம் – என்று கூறுவதற்கு ஏற்ப, எம்பெருமானைத் தவிர உள்ள மற்ற விஷயங்கள் குறித்த ஞானம் என்பது செருப்புக்குச் சமமே ஆகும்.

வ்யாக்யானம் – எங்களுக்கு அறிவில்லையாகில் அறிந்த நீர் அருளிச் செய்யமாட்டீரோ என்ன. (உற்றபோதன்றி நீங்கள் ஒருவனென்றுணரமாட்டீர்) – நான் சொன்னாலும், ப்ரளயம் வந்து கிட்டினபோது ஆச்ரயணீயரான தேவதைகளும் நீங்களும் ஒரு புகுவாசல் தேடித் திரியுமன்றல்லது ஸர்வாதிகன் ஒருவனுளன் என்று உங்கள் நெஞ்சில் படமாட்டாது. உங்களுக்கு ஆச்ரயணீயரான தேவதைகள், ராவணாதி கண்டகர்

கையிலே நெருக்குண்டு கூப்பிடுமன்றிறே ரக்ஷகன் ஒருவனுண்டென்று உங்கள் நெஞ்சிலே படுவது என்றுமாம்.

விளக்கம் – ஆழ்வார் கூறியதைக் கேட்ட ஸம்ஸாரிகள், "எங்களுக்கு நீங்கள் கூறுவது போன்று அறிவில்லை. அதனால், பகவத் விஷயத்தைக் குறித்து நன்கு அறிந்த நீங்கள் எங்களுக்கு எடுத்து உரைக்கலாமே", என்றனர். இதற்கு ஆழ்வார் பதில் அளிக்கிறார். (உற்றபோது அன்றி நீங்கள் ஒருவன் என்று உணரமாட்டீர்) – நான் எத்தனை கூறினாலும் நீங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள். ப்ரளயம் காலத்தில் நீங்களும், உங்களால் ஆராதிக்கப்பட்ட தேவதைகளும் ஒன்றாகச் சேர்ந்து எம்பெருமானின் திருவாயில் புகும் காலம்வரை, "அனைத்தையும் ஆள்பவன் ஈடில்லாத அவன் ஒருவனே", என்று உணரமாட்டீர்கள். இதற்கு வேறு விதமாகவும் பொருள் கூறலாம். உங்களால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள் இராவணன் போன்ற அசுரர்களின் பிடியில் சிக்குண்டு, அவனைத் தங்கள் உதவிக்கு அழைக்கும்போதுதான், உங்கள் மனதில், "ரக்ஷகன் அவன் ஒருவனே", என்று தோன்றும்.

வ்யாக்யானம் – (ஒருவனென்றுணரமாட்டீர்) – தேவதாந்தரங்களை ஆராதிக்கிற நீங்கள் ஆபத்தசைகளை ஒழிந்தபோது அவர்களோபாதி இவனும் ஒருவன் என்று புத்தி பண்ணமாட்டிகோள். அபுநராவ்ருத்தி லக்ஷணமோக்ஷத்தைத் தரும் இவன் பக்கல், க்ஷுத்ர பலப்ரதரான தேவதைகள் பக்கல் பண்ணின ஆதரமன்றிக்கே இருக்கிறதிறே ஸம்ஸாரிகள் மதிகேடு.

விளக்கம் – (ஒருவன் என்று உணரமாட்டீர்) – இவனைத் தவிர மற்ற தேவதைகளை ஆராதிக்கும் நீங்கள், உங்களுக்கும் அந்தத் தேவதைகளுக்கும் ஆபத்து உண்டாகும் காலம் வரும்வரை, அவர்களைப் போன்றே இவனும் தெய்வம் என்று அறியமாட்டீர்கள். இந்த உலகிற்கு மீண்டும் திரும்புதல் அல்லாத உயர்ந்த மோக்ஷம் அளிக்கும் இவனிடம், அற்பமான பலன்களை அளிக்கின்ற தாழ்ந்த தேவதைகளிடம் காட்டும் அன்பை வைக்காமல் உள்ளனரே! என்னே ஒரு மூடத்தனம்.

வ்யாக்யானம் – (அற்றமேலொன்றறியீர்) – அற்றம் = மறைபொருள். அறியாமைக்கு அடி அபிதாநவ்ருத்திக்கு மேற்பட தாத்பர்யவ்ருத்தி அறிகிலிகோள். வசஸாம் வாச்யமுத்தமம், வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:, நாராயணபரதேவதா: என்னக் கடவதிறே. (அவனையல்லால் தெய்வமில்லை) – அவனையொழிந்த தேவதைகளுடைய ஸத்பாவத்தை இல்லையென்கிறாரல்லர். ஈச்வரனுக்கு ப்ரகாரமாய்க் கொண்டு அத்தேவதைகளுமுளர். ஆச்ரயணீயரல்லரென்கிறார். "அவனை" என்று என்று மேற்சொல்லுகிற க்ருஷ்ணனை நினைக்கிறார்.

விளக்கம் – (அற்றம் மேல் ஒன்று அறியீர்) – அற்றம் என்றால் சாஸ்த்ரங்களில் மறைமுகமாகக் கூறப்பட்ட பொருள். நமது அறியாமைக்கு முக்கியமான காரணம் எது என்றால் – சாஸ்த்ரங்கள் மறைவாகக் கூறியுள்ள பொருளை அறியாமல், மேலோட்டமாக அறிவதே ஆகும். கீழே உள்ள பல வரிகளும் காண்க:

- ஜிதந்தே ஸ்தோத்ரம் - வசஸாம் வாச்யமுத்தமம் – அனைத்து சொற்களால் கூறப்பட்ட பொருளைக் காட்டிலும் மேலான பொருளாக உள்ள உன்னை.

- ஸ்ரீமத் பகவத் கீதை (15-15) - வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய: - அனைத்து வேதங்களாலும் நானே அறியப்படுகிறேன்.

- ஸ்ரீமத் பாகவதம் - நாராயணபரதேவதா: - வேதங்களை நாராயணனைக் கூறுகின்றன.

(அவனையல்லால் தெய்வமில்லை) – இவனுடைய தெய்வத்தன்மை போன்று மற்ற தேவதைகளுக்கு தெய்வத்தன்மை இல்லை; மற்ற தேவதைகள் இல்லை என்று இவர் கூறவில்லை. இவனுடைய சரீரங்களாக அவர்கள் உள்ளனர். அவர்கள் அண்டத் தகுந்தவர்கள் அல்லர். அடுத்து "அவனை" என்று மேலே கூறவுள்ள க்ருஷ்ணனை எண்ணுகிறார்.

வ்யாக்யானம் – "அவனை" என்று நீர் அருளிச்செய்கிறவனை இன்னானென்று விசேஷியீர், நாங்களாச்ரயிக்க என்ன (கற்றினம் மேய்த்த எந்தை கழலிணைப் பணிமின் நீரே) – என்கிறார். "க்ருஷ்ணன்" என்னாதே "கற்றினம் மேய்த்த" என்றது தேவதாந்தரங்களைப் போலே துராராதன்றிக்கே ஸர்வஸுலபன் என்கைக்காக. பசு மேய்க்கை அயர்வறுமமரர்களதிபதியாயிருந்தத்தோடொக்கும். கன்று மேய்க்கையிலே யாய்த்துத் திருவுள்ளம் உகந்திருப்பது. ஸ்வரக்ஷணத்தில் குறைய நின்றார் பக்கலிலேயிறே திருவுள்ளம் மண்டியிருப்பது. "திவத்திலும் பசு நிரை மேய்ப்புவத்தி" என்கிறபடியே பசு மேய்க்கையில் உகப்பு. கன்றுகளை மேய்க்குமிடத்தில் இனிதுகந்திருக்கும். கற்று – கன்று. (எந்தை) – நான் அகப்பட்ட துறையிலே நீங்களும் அகப்படப் பாருங்கோள். (கழலிணை பணிமினீரே) – அச்செயலுக்குத் தோற்று குணைர்தாஸ்யமுபாகத: என்கிறபடியே நான் அவன் திருவடிகளிலே விழுந்தேன், நீங்களும் அப்படியே ஆச்ரயியுங்கோள். தான் சிறியனாய் நின்ற நிலையில் தன்னை ஆச்ரயித்தாரைப் பொறுப்பிக்குமவனை ஆச்ரயியுங்கோள். யயாதி இந்த்ரனோடே ஏகாஸநத்திலிருந்தவளவிலே, "கர்ம பூமியிலே புண்யக்ருத்துக்களாய்ப் போருவார் ஆரோ?", என்ன; அஸத்யம் சொல்லலாகாதென்னும் நினைவாலே, "நான் வர்த்திக்கிற நாளிலே என்னைச் சொல்லுவார்கள்", என்ன; ஏகாஸநத்திலிருந்தது பொறாமையாலே, "ஆத்மப்ரசம்ஸை பண்ணினாய்", என்று த்வம்ஸ என்று தலைகீழ்ப்படத் தள்ளினான் என்று உண்டாயிருந்தது. "வேதோப ப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான மஹாபாரதத்தில், இது என்ன வேதார்த்தம் சொல்லுகிறது என்று குறைப்பட்டிருக்கும்", என்ன; "அவனே ஆச்ரயணீயனென்னும் இவ்வர்த்தம் சொல்லுகிறது", என்று அருளிச் செய்தார்.

விளக்கம் – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "நீங்கள் அவனை என்று கூறுகிறீர்கள். அவனை யார் என்று தெளிவாகக் கூறினால் நாங்கள் அண்டலாம் அல்லவா?", என்றனர். இதற்கு ஆழ்வார் பதில் அளிக்கிறார். (கற்றினம் மேய்த்த எந்தை கழலிணைப் பணிமின் நீரே) – என்று கூறினார். "க்ருஷ்ணன்" என்று நேரடியாகச் சொல்லாமல், "கற்றினம் மேய்த்த" என்று ஏன் கூறினார்? காரணம் – மற்ற தேவதைகள் போன்று இவன் ஆராதனை செய்வதற்குக் கடுமையானவன் அல்லன், மிகவும் சுலபமாக இவனை ஆராதிக்கலாம் – என்று உணர்த்தவே ஆகும். நித்யஸூரிகளின் அதிபதியாக இவன் உள்ளபோதும், அவர்கள் தங்களைக் காத்துக் கொள்ளும் திறன் படைத்தவர்கள் என்பதால், அவர்கள்

மீது அதிகம் ஈடுபடுவதில்லை. இது போன்று பசுக்கள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளும் திறன் உள்ளதால், அவற்றைப் பற்றி இவன் கவலைப்படுவதில்லை. ஆனால், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் திறன் இல்லாத கன்றுக்குட்டிகளிடமே இவன் மிகுந்த பரிவுடன் உள்ளான். ஆக தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் திறன் இல்லாதவர்களிடமே இவனுக்குப் பரிவு உள்ளது. திருவாய்மொழியில் (10-3-10) – திவத்திலும் பசு நிரை மேய்ப்புவத்தி – என்று பரமபதத்தில் உள்ளதைக் காட்டிலும் பசு மேய்ப்பதில் இவனுக்கு மகிழ்ச்சி அதிகம் – என்றது காண்க. கன்றுகளை மேய்ப்பதில் இவன் மிகவும் இன்பமாக இருப்பான். கற்று என்றால் கன்று எனப் பொருள். (எந்தை) – நான் சென்று அகப்பட்டுக் கொண்ட இந்த க்ருஷ்ணாவதாரத்தில் நீங்களும் அகப்பட முயற்சி செய்யுங்கள். (கழலிணை பணிமின் நீரே) – இராமாயணம் – குணைர்தாஸ்யம் உபாகத: - இராமனின் குணங்களுக்கு அடிமைப்பட்டேன் – என்று கூறுவது போன்று, நான் க்ருஷ்ணனின் செயல்களில் சிக்குண்டு, அவன் திருவடிகளில் விழுந்தேன். நீங்களும் இது போன்றே செய்யுங்கள். தனது அவதாரத்திற்கு ஏற்ப, எத்தனை தாழ்வாக நின்றாலும், தன்னை அண்டியவர்களுக்கு தன்னை ஒத்த மேன்மைகளை அளிக்கும் கண்ணனைப் பற்றுங்கள்.

மஹாபாரதத்தில் ஒரு நிகழ்ச்சி உள்ளது – தனது தவபலம் காரணமாக யயாதி என்னும் சக்ரவர்த்தி தேவலோகம் சென்று, இந்த்ரனுக்குச் சமமான ஆசனத்தில் அமர்ந்தான். இது இந்த்ரனுக்குப் பொறுக்கவில்லை. இவனைத் தள்ள முடிவு செய்தான். இந்த்ரன் அவனிடம், “பூமியில் அதிகமான புண்ணியம் செய்தவர் யார்?”, என்றான். உண்மையைத் தவிர வேறு எதனையும் கூறக்கூடாது என்று எண்ணிய யயாதி இந்த்ரனிடம், “நான் அங்குள்ள காலத்தில் என்னை அப்படிக் கூறினார்கள்”, என்றான். இதனைக் கேட்ட இந்த்ரன், “உனது சுயபெருமையைப் போற்றியதால் கீழே விழுவாய்”, என்று கூறியபடி அவனைத் தலைகீழாகப் பூமியில் தள்ளினான். பட்டரிடம் நஞ்சீயர், “வேதங்களின் ஆழ்பொருளை விளக்கவல்ல மஹாபாரதத்தில் உள்ள இந்த நிகழ்வு, எத்தகைய பொருளை விளக்குவதாக உள்ளது. இதன் பொருளை அறியவேண்டும் என்ற குறை எனக்கு நீண்ட நாட்களாக உள்ளது”, என்றார். உடனே பட்டர், “இந்த்ரன் போன்ற தேவதைகள் தனக்கு மேல் யாரும் செல்வதை விரும்புவதில்லை என்பதை இது காட்டுகிறது. இப்படிப்பட்ட தன்மையற்றவனும், தனக்கு நிகராக மேன்மை அளிக்கும்

பண்பு கொண்டவனும் ஆகிய எம்பெருமானே அண்டத் தகுந்தவன் என்பதையும் இது காட்டுகிறது", என்று அருளிச் செய்தார்.

வ்யாக்யானம் – (மதியிலா மானிடங்காள்) – த்ரீணி சதா த்ரீ ஸஹஸ்ராண்யக்நிம் த்ரிம்சச்ச தேவா நவ சாஸபர்யந் என்கிறபடியே ஆராத்யர் அநேகர் என்னுமிடம் ச்ருதி ஸித்தமன்றோ என்ன. (மதியிலா மானிடங்காள்) – வேதாந்த ஜ்ஞாநமில்லாதார் பாக்யஹீநரிறே. சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை, அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா, யே யஜந்தி பித்ரூந் தேவாந் என்கிற ச்ருதி ஸ்ம்ருதிகளில் ஜ்ஞாநமில்லாதாரிறே. அறிவுக்கு யோக்யதையுள்ள ஜந்மத்திலே ஜநித்து அறிவின்றிக்கே இருக்கிற பாக்யஹீநர்காள். ஆன்விடையேழன்றடர்த்தாற்காளானாரல்லாதார் மானிடவரல்லரென்று என் மனத்தே வைத்தேனே என்றும், செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமா வையேன் என்றும், அஸந்நேவ ஸ பவதி என்றும் சொல்லக் கடவதிறே. தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோ அந்யதுக்தம் என்றும், ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு என்றும் வகுத்த விஷயத்தில் ஜ்ஞாநமே ஜ்ஞாநமாவது; அல்லாதவை அஜ்ஞாநஸமாநம். வித்யாந்யா சில்பநைபுணம் செருப்புக் குத்தக் கற்ற ஜ்ஞாநத்தோபாதியிறே இதர ஜ்ஞாநங்கள்.

விளக்கம் - (மதியிலா மானிடங்காள்) – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "ருக்வேதம் - த்ரீணி சதா த்ரீ ஸஹஸ்ராண்யக்நிம் த்ரிம்சச்ச தேவா நவ சாஸபர்யந் – மூவாயிரத்து முந்நூற்று முப்பதொன்பது தேவர்கள் சேர்ந்து அக்னிதேவனான எனக்குத் தொண்டு செய்தனர் – என்று கூறியதே. இது போன்று ஆராதிக்கப்பட வேண்டிய தேவர்கள் பலர் உள்ளனர் என்பது வேதங்களால் உணரப்படுகிறது அல்லவா?", என்று கேட்டனர். அதற்கு ஆழ்வார் பதில் கூறத் தொடங்குகிறார். (மதியிலா மானிடங்காள்) – வேதாந்த ஞானம் என்னும் செல்வம் இல்லாதவர்களே! கீழே உள்ள பல வரிகளைப் பற்றிய ஞானம் அற்றவர்களே!

- யஜுர்வேதம் - சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை – அனைத்து தேவதைகளும் பரமாத்மாவின் சரீரமாகவே உள்ளதால், அவற்றுக்குச் செய்யப்படும் கர்மங்கள் பெருமை அடைகின்றன.

- ஸ்ரீமத் பகவத் கீதை (9-24) - அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா – அனைத்து யஜ்ஞங்களையும் அனுபவிப்பவனாக நானே உள்ளேன்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (355-4) - யே யஜந்தி பித்ரூந் தேவாந் – யார் பித்ருக்களையும் தேவர்களையும் ஆராதிக்கின்றனரோ.....அவர்கள் விஷ்ணுவையே ஆராதிக்கின்றனர்.

சிறந்த அறிவு பெறுவதற்கு ஏற்ற மனிதப்பிறவியை அடைந்தும், அத்தகைய அறிவைப் பெறாமல் உள்ள மனிதர்களே! இப்படியாக எம்பெருமானைப் பற்றிய அறிவு இல்லாதவர்களை, இல்லாத பொருள்கள் என்றே கீழே உள்ள வரிகள் கூறுகின்றன அல்லவா?

- பெரிய திருமொழி (11-7-9) – ஆன்விடை ஏழு அன்று அடர்த்தாற்கு ஆளானார் அல்லாதார் மானிடவர் அல்லர் என்று என் மனத்தே வைத்தேனே – ஏழு காளைகளை அடக்கிய கண்ணனுக்கு வசப்படாதவர்களை மனிதர்களே அல்லர் என்று முடிவு செய்தேன்.

- இரண்டாம் திருவந்தாதி (44) - செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமா வையேன் – தாமரை போன்ற அழகான கண்கள் கொண்ட எம்பெருமானை மறந்தவர்களை மனிதர்களாகவே கொள்ளவில்லை.

- தைத்திரீய ஆரண்யகம் - அஸந்நேவ ஸ பவதி – ப்ரஹ்மத்தை அறியவில்லை என்றால் இல்லாதவன் ஆகிறான்.

மேலும் நமது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி பகவத் விஷயத்தைக் குறித்த ஞானம் மட்டுமே ஞானம் எனப்படும். மற்ற அனைத்து ஞானங்களும் அஞ்ஞானம் என்றே கொள்ளப்படும். இதனைக் கீழே உள்ள பல வரிகளும் கூறுகின்றன:

- விஷ்ணுபுராணம் - தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோ அந்யதுக்தம் – தோஷம் அற்ற உயர்ந்த பொருள் எதனால் அடையப்படுகிறதோ அதுவே ஞானம் ஆகும்.

- முதல் திருவந்தாதி (67) - ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு.

- விஷ்ணு புராணம் - வித்யாந்யா சில்பநைபுணம் – மற்ற வித்யைகள் செருப்புக்குச் சமம் – என்று கூறுவதற்கு ஏற்ப, எம்பெருமானைத் தவிர உள்ள மற்ற விஷயங்கள் குறித்த ஞானம் என்பது செருப்புக்குச் சமமே ஆகும்.

வ்யாக்யானம் – எங்களுக்கு அறிவில்லையாகில் அறிந்த நீர் அருளிச் செய்யமாட்டீரோ என்ன. (உற்றபோதன்றி நீங்கள் ஒருவனென்றுணரமாட்டீர்) – நான் சொன்னாலும், ப்ரளயம் வந்து கிட்டினபோது ஆச்ரயணீயரான தேவதைகளும் நீங்களும் ஒரு புகுவாசல் தேடித் திரியுமன்றல்லது ஸர்வாதிகன் ஒருவனுளன் என்று உங்கள் நெஞ்சில் படமாட்டாது. உங்களுக்கு ஆச்ரயணீயரான தேவதைகள், ராவணாதி கண்டகர் கையிலே நெருக்குண்டு கூப்பிடுமன்றிறே ரக்ஷகன் ஒருவனுண்டென்று உங்கள் நெஞ்சிலே படுவது என்றுமாம்.

விளக்கம் – ஆழ்வார் கூறியதைக் கேட்ட ஸம்ஸாரிகள், “எங்களுக்கு நீங்கள் கூறுவது போன்று அறிவில்லை. அதனால், பகவத் விஷயத்தைக் குறித்து நன்கு அறிந்த நீங்கள் எங்களுக்கு எடுத்து உரைக்கலாமே”, என்றனர். இதற்கு ஆழ்வார் பதில் அளிக்கிறார். (உற்றபோது அன்றி நீங்கள் ஒருவன் என்று உணரமாட்டீர்) – நான் எத்தனை கூறினாலும் நீங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள். ப்ரளயம் காலத்தில் நீங்களும், உங்களால் ஆராதிக்கப்பட்ட தேவதைகளும் ஒன்றாகச் சேர்ந்து எம்பெருமானின் திருவாயில் புகும் காலம்வரை, ”அனைத்தையும் ஆள்பவன் ஈடில்லாத அவன் ஒருவனே”,

என்று உணரமாட்டீர்கள். இதற்கு வேறு விதமாகவும் பொருள் கூறலாம். உங்களால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள் இராவணன் போன்ற அசுரர்களின் பிடியில் சிக்குண்டு, அவனைத் தங்கள் உதவிக்கு அழைக்கும்போதுதான், உங்கள் மனதில், "ரக்ஷகன் அவன் ஒருவனே", என்று தோன்றும்.

வ்யாக்யானம் – (ஒருவனென்றுணரமாட்டீர்) – தேவதாந்தரங்களை ஆராதிக்கிற நீங்கள் ஆபத்தசைகளை ஒழிந்தபோது அவர்களோபாதி இவனும் ஒருவன் என்று புத்தி பண்ணமாட்டிகோள். அபுநராவ்ருத்தி லக்ஷணமோக்ஷத்தைத் தரும் இவன் பக்கல், க்ஷுத்ர பலப்ரதரான தேவதைகள் பக்கல் பண்ணின ஆதரமன்றிக்கே இருக்கிறதிறே ஸம்ஸாரிகள் மதிகேடு.

விளக்கம் – (ஒருவன் என்று உணரமாட்டீர்) – இவனைத் தவிர மற்ற தேவதைகளை ஆராதிக்கும் நீங்கள், உங்களுக்கும் அந்தத் தேவதைகளுக்கும் ஆபத்து உண்டாகும் காலம் வரும்வரை, அவர்களைப் போன்றே இவனும் தெய்வம் என்று அறியமாட்டீர்கள். இந்த உலகிற்கு மீண்டும் திரும்புதல் அல்லாத உயர்ந்த மோக்ஷம் அளிக்கும் இவனிடம், அற்பமான பலன்களை அளிக்கின்ற தாழ்ந்த தேவதைகளிடம் காட்டும் அன்பை வைக்காமல் உள்ளனரே! என்னே ஒரு மூடத்தனம்.

வ்யாக்யானம் – (அற்றமேலொன்றறியீர்) – அற்றம் = மறைபொருள். அறியாமைக்கு அடி அபிதாநவ்ருத்திக்கு மேற்பட தாத்பர்யவ்ருத்தி அறிகிலிகோள். வசஸாம் வாச்யமுத்தமம், வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:, நாராயணபரதேவதா: என்னக் கடவதிறே. (அவனையல்லால் தெய்வமில்லை) – அவனையொழிந்த தேவதைகளுடைய ஸத்பாவத்தை இல்லையென்கிறாரல்லர். ஈச்வரனுக்கு ப்ரகாரமாய்க் கொண்டு அத்தேவதைகளுமுளர். ஆச்ரயணீயரல்லரென்கிறார். "அவனை" என்று என்று மேற்சொல்லுகிற க்ருஷ்ணனை நினைக்கிறார்.

விளக்கம் – (அற்றம் மேல் ஒன்று அறியீர்) – அற்றம் என்றால் சாஸ்த்ரங்களில் மறைமுகமாகக் கூறப்பட்ட பொருள். நமது அறியாமைக்கு முக்கியமான காரணம் எது

என்றால் – சாஸ்த்ரங்கள் மறைவாகக் கூறியுள்ள பொருளை அறியாமல், மேலோட்டமாக அறிவதே ஆகும். கீழே உள்ள பல வரிகளும் காண்க:

- ஜிதந்தே ஸ்தோத்ரம் - வசஸாம் வாச்யமுத்தமம் – அனைத்து சொற்களால் கூறப்பட்ட பொருளைக் காட்டிலும் மேலான பொருளாக உள்ள உன்னை.

- ஸ்ரீமத் பகவத் கீதை (15-15) - வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய: - அனைத்து வேதங்களாலும் நானே அறியப்படுகிறேன்.

- ஸ்ரீமத் பாகவதம் - நாராயணபரதேவதா: - வேதங்களை நாராயணனைக் கூறுகின்றன.

(அவனையல்லால் தெய்வமில்லை) – இவனுடைய தெய்வத்தன்மை போன்று மற்ற தேவதைகளுக்கு தெய்வத்தன்மை இல்லை; மற்ற தேவதைகள் இல்லை என்று இவர் கூறவில்லை. இவனுடைய சரீரங்களாக அவர்கள் உள்ளனர். அவர்கள் அண்டத் தகுந்தவர்கள் அல்லர். அடுத்து "அவனை" என்று மேலே கூறவுள்ள க்ருஷ்ணனை எண்ணுகிறார்.

வ்யாக்யானம் – "அவனை" என்று நீர் அருளிச்செய்கிறவனை இன்னானென்று விசேஷியீர், நாங்களாச்ரயிக்க என்ன (கற்றினம் மேய்த்த எந்தை கழலிணைப் பணிமின் நீரே) – என்கிறார். "க்ருஷ்ணன்" என்னாதே "கற்றினம் மேய்த்த" என்றது தேவதாந்தரங்களைப் போலே துராராதன்றிக்கே ஸர்வஸுலபன் என்கைக்காக. பசு மேய்க்கை அயர்வறுமமரர்களதிபதியாயிருந்தத்தோடொக்கும். கன்று மேய்க்கையிலே யாய்த்துத் திருவுள்ளம் உகந்திருப்பது. ஸ்வரக்ஷணத்தில் குறைய நின்றார் பக்கலிலேயிறே திருவுள்ளம் மண்டியிருப்பது. "திவத்திலும் பசு நிரை மேய்ப்புவத்தி" என்கிறபடியே பசு மேய்க்கையில் உகப்பு. கன்றுகளை மேய்க்குமிடத்தில் இனிதுகந்திருக்கும். கற்று – கன்று. (எந்தை) – நான் அகப்பட்ட துறையிலே நீங்களும் அகப்படப் பாருங்கோள். (கழலிணை பணிமினீரே) – அச்செயலுக்குத் தோற்று குணைர்தாஸ்யமுபாகத: என்கிறபடியே நான் அவன் திருவடிகளிலே விழுந்தேன்,

நீங்களும் அப்படியே ஆச்ரயியுங்கோள். தான் சிறியனாய் நின்ற நிலையில் தன்னை ஆச்ரயித்தாரைப் பொறுப்பிக்குமவனை ஆச்ரயியுங்கோள். யயாதி இந்த்ரனோடே ஏகாஸநத்திலிருந்தவளவிலே, "கர்ம பூமியிலே புண்யக்ருத்துக்களாய்ப் போருவார் ஆரோ?", என்ன; அஸத்யம் சொல்லலாகாதென்னும் நினைவாலே, "நான் வர்த்திக்கிற நாளிலே என்னைச் சொல்லுவார்கள்", என்ன; ஏகாஸநத்திலிருந்தது பொறாமையாலே, "ஆத்மப்ரசம்ஸை பண்ணினாய்", என்று த்வம்ஸ என்று தலைகீழ்ப்படத் தள்ளினான் என்று உண்டாயிருந்தது. "வேதோப ப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான மஹாபாரதத்தில், இது என்ன வேதார்த்தம் சொல்லுகிறது என்று குறைப்பட்டிருக்கும்", என்ன; "அவனே ஆச்ரயணீயனென்னும் இவ்வர்த்தம் சொல்லுகிறது", என்று அருளிச் செய்தார்.

விளக்கம் – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "நீங்கள் அவனை என்று கூறுகிறீர்கள். அவனை யார் என்று தெளிவாகக் கூறினால் நாங்கள் அண்டலாம் அல்லவா?", என்றனர். இதற்கு ஆழ்வார் பதில் அளிக்கிறார். (கற்றினம் மேய்த்த எந்தை கழலிணைப் பணிமின் நீரே) – என்று கூறினார். "க்ருஷ்ணன்" என்று நேரடியாகச் சொல்லாமல், "கற்றினம் மேய்த்த" என்று ஏன் கூறினார்? காரணம் – மற்ற தேவதைகள் போன்று இவன் ஆராதனை செய்வதற்குக் கடுமையானவன் அல்லன், மிகவும் சுலபமாக இவனை ஆராதிக்கலாம் – என்று உணர்த்தவே ஆகும். நித்யஸூரிகளின் அதிபதியாக இவன் உள்ளபோதும், அவர்கள் தங்களைக் காத்துக் கொள்ளும் திறன் படைத்தவர்கள் என்பதால், அவர்கள் மீது அதிகம் ஈடுபடுவதில்லை. இது போன்று பசுக்கள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளும் திறன் உள்ளதால், அவற்றைப் பற்றி இவன் கவலைப்படுவதில்லை. ஆனால், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் திறன் இல்லாத கன்றுக்குட்டிகளிடமே இவன் மிகுந்த பரிவுடன் உள்ளான். ஆக தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் திறன் இல்லாதவர்களிடமே இவனுக்குப் பரிவு உள்ளது. திருவாய்மொழியில் (10-3-10) – திவத்திலும் பசு நிரை மேய்ப்புவத்தி – என்று பரமபதத்தில் உள்ளதைக் காட்டிலும் பசு மேய்ப்பதில் இவனுக்கு மகிழ்ச்சி அதிகம் – என்றது காண்க. கன்றுகளை மேய்ப்பதில் இவன் மிகவும் இன்பமாக இருப்பான். கற்று என்றால் கன்று எனப் பொருள். (எந்தை) – நான் சென்று அகப்பட்டுக் கொண்ட இந்த க்ருஷ்ணாவதாரத்தில் நீங்களும் அகப்பட முயற்சி செய்யுங்கள். (கழலிணை பணிமின் நீரே) – இராமாயணம் – குணைர்தாஸ்யம் உபாகத: - இராமனின் குணங்களுக்கு அடிமைப்பட்டேன் – என்று கூறுவது போன்று,

நான் க்ருஷ்ணனின் செயல்களில் சிக்குண்டு, அவன் திருவடிகளில் விழுந்தேன். நீங்களும் இது போன்றே செய்யுங்கள். தனது அவதாரத்திற்கு ஏற்ப, எத்தனை தாழ்வாக நின்றாலும், தன்னை அண்டியவர்களுக்கு தன்னை ஒத்த மேன்மைகளை அளிக்கும் கண்ணனைப் பற்றுங்கள்.

மஹாபாரதத்தில் ஒரு நிகழ்ச்சி உள்ளது – தனது தவபலம் காரணமாக யயாதி என்னும் சக்ரவர்த்தி தேவலோகம் சென்று, இந்த்ரனுக்குச் சமமான ஆசனத்தில் அமர்ந்தான். இது இந்த்ரனுக்குப் பொறுக்கவில்லை. இவனைத் தள்ள முடிவு செய்தான். இந்த்ரன் அவனிடம், "பூமியில் அதிகமான புண்ணியம் செய்தவர் யார்?", என்றான். உண்மையைத் தவிர வேறு எதனையும் கூறக்கூடாது என்று எண்ணிய யயாதி இந்த்ரனிடம், "நான் அங்குள்ள காலத்தில் என்னை அப்படிக் கூறினார்கள்", என்றான். இதனைக் கேட்ட இந்த்ரன், "உனது சுயபெருமையைப் போற்றியதால் கீழே விழுவாய்", என்று கூறியபடி அவனைத் தலைகீழாகப் பூமியில் தள்ளினான். பட்டரிடம் நஞ்சீயர், "வேதங்களின் ஆழ்பொருளை விளக்கவல்ல மஹாபாரதத்தில் உள்ள இந்த நிகழ்வு, எத்தகைய பொருளை விளக்குவதாக உள்ளது. இதன் பொருளை அறியவேண்டும் என்ற குறை எனக்கு நீண்ட நாட்களாக உள்ளது", என்றார். உடனே பட்டர், "இந்த்ரன் போன்ற தேவதைகள் தனக்கு மேல் யாரும் செல்வதை விரும்புவதில்லை என்பதை இது காட்டுகிறது. இப்படிப்பட்ட தன்மையற்றவனும், தனக்கு நிகராக மேன்மை அளிக்கும் பண்பு கொண்டவனும் ஆகிய எம்பெருமானே அண்டத் தகுந்தவன் என்பதையும் இது காட்டுகிறது", என்று அருளிச் செய்தார்.

வ்யாக்யானம் – (அருள் தன்னாலே காட்டினான் திருவரங்கம்) – சிலர் எங்களுக்குக் காட்டவேணுமென்னக் காட்டுகையன்றிக்கே, முலைக்கடுப்புத் தீரத் தரையிலே பீச்சுவாரைப்போலே தன் செல்லாமையாலே காட்டினானாய்த்து. இருந்த கிழிச்சீரையோடே ரத்நத்தைக் கொடுப்பாரைப்போலே கோயிலேடே கூடவாய்த்து தன்னைக் காட்டிக் கொடுத்தது. இவர்களோடு, இவர்கள் ஆச்ரயிக்கிற தேவதைகளோடு வாசியறத் தந்தாம் நிலையையுணர்ந்து, ரக்ஷகாபேக்ஷையுண்டானவன்று நாமறியோமாக வொண்ணாதென்று ரக்ஷகனான தான் தன்னை ஸந்நிஹிதனாக்கி வைத்தான்.

விளக்கம் – ஒரு சிலர் பெரியபெருமாளிடம், "உன்னை எங்களுக்குக் காண்பிப்பாயாக", என்று விண்ணப்பம் கூடச் செய்யவில்லை. தாயானவள் தனது ஸ்தனபாரம் நீங்கப் பாலைத் தரையில் பீய்ச்சுவதைப் போன்று, இவன் தன்னை மற்றவர்களுக்குக் காண்பித்துக் கொடுக்கவில்லை என்றால் தாங்காதவன் போல தன்னைக் காட்டினான். உயர்ந்த இரத்தினக்கற்களை, அவை உள்ள மூட்டையுடன் காண்பித்துக் கொடுப்பது போன்று, பெரியகோயிலுடன் சேர்த்துத் தன்னைக் காண்பித்துக் கொடுத்தான். ஜீவன்களும், ஜீவன்களால் ஆராதிக்கப்படும் தேவதைகளும் தங்களது நிலையை உணர்ந்து, தங்களைக் காப்பாற்றும் ஒரே ரக்ஷகன் யார் என்று அறிய முனைந்தனர். அப்போது, தானே ரக்ஷகன் என்று இவர்கள் அறியாமல் தடுமாறக் கூடாது என்று எண்ணியதால், தன்னைக் காண்பித்துக் கொடுக்கும் வகையில் திருவரங்கத்தில் சயனித்தான்.

வ்யாக்யானம் – இதுதான் ஆர்க்கென்னில் (உய்பவர்க்கு) உஜ்ஜீவிப்போமென்பாரெல்லார்க்கும் ஒக்கும் இது; இவன் நிழலில் ஒதுங்கோமென்னாமையே வேண்டுவது; இது உஜ்ஜீவநமானவோபாதி தேவதாந்தரபஜநமும் பந்தகமாகையாலே ஸம்ஸாரஹேது என்கை. (உய்யும் வண்ணம்) – தேவதாந்தரமுகமாக தச்சரீரியை ஆராதிக்கையும் உஜ்ஜீவந ப்ரகாரமானாலும் அது அதிக்ருதாதிகாரம்; கோயிலை வந்து ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கை ஸர்வாதிகாரம்.

விளக்கம் – இப்படியாக இவன் தன்னை யாருக்குக் காண்பித்தபடி உள்ளான்? (உய்பவர்க்கு) – "கரையேற வேண்டும்", என்று எண்ணுபவர்கள் அனைவருக்காகவும் தன்னைக் காண்பித்துக் கொடுத்தான். "இவனது நிழலில் கூட நாங்கள் ஒதுங்க மாட்டோம்", என்று விலகிச் செல்லாமல் இருந்தாலே போதுமானது. இவனே பிழைக்கும் வழி என்பதால், மற்ற தேவதைகளை ஆராதிப்பது என்பது பந்தப்படுத்திவிடும் என்பதும், அவை ஸம்ஸாரத்தில் சிக்கவைக்கும் காரணம் என்பதும் விளங்கும். (உய்யும் வண்ணம்) – மற்ற தேவதைகளின் அந்தர்யாமியாக உள்ள எம்பெருமானை ஆராதித்தல் என்ற எண்ணம் கொண்டு அந்தத் தேவதைகளை ஆராதித்தல் என்பது சரியான உபாயம் என்றாலும், இந்த வழியானது மூன்று வர்ணத்தினர்களுக்கு மட்டுமே பொருந்தும். ஆகா அனைவரும் வந்து கரையேறும் இடம் எது என்றால் திருவரங்கமே ஆகும்.

வ்யாக்யானம் – (கேட்டிரே நம்பிமீர்காள்) – பகவத் வ்யதிரிக்த விஷய லாபத்தாலே பூர்ணராயிருந்துள்ள நீங்கள் இவ்வர்த்தத்தைக் கேட்டிகோளே என்கிறார். ஸர்வேச்வரன் ஸந்நிஹிதனாயிருக்க தேவதாந்தரங்களை ஆச்ரயித்து, அத்தாலே பூர்ணராயிருந்துள்ள நீங்கள் கேட்டிகோளே என்றுமாம். ஸம்ஸாரிகள் ஆனைக்குப்பு ஆடுவாரைப்போலே இருக்கையாலே உணர்த்தி கேட்டிரே என்கிறார்.

விளக்கம் – (கேட்டிரே நம்பிமீர்காள்) – "எம்பெருமானைத் தவிர மற்ற விஷயங்களைப் பற்றிக் கிடந்து, அவை மூலமே உங்களுக்கு அனைத்தும் கிட்டியது என்ற எண்ணம் கொண்டவர்களே! நான் கூறும் ஆழ்பொருளை இப்போதாவது கேட்கிறீர்களா?", என்கிறார். அல்லது, "ஸர்வேச்வரனாகிய ஸ்ரீரங்கநாதன் அருகில் உள்ளபோது, மற்ற தேவதைகளை ஆராதனை செய்து, அவற்றால் அனைத்தும் கிட்டியதாக எண்ணுபவர்களே, கேளுங்கள்", என்றும் கொள்ளலாம். சதுரங்கம் விளையாடுபவர்கள் போன்று, ஸம்ஸாரிகள் மற்ற தேவதைகளை விடுத்து வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் உள்ளதால் "கேட்டிரே", என்று அழைக்கிறார்.

வ்யாக்யானம் – (கெருடவாகனனும் நிற்க) – கருடவாஹனனிறே ஆச்ரயணீயன். பெரியதிருவடி கழுத்திலே நற்றரிக்கவிருத்தல், திருவாழியைச் சலியாதே பிடித்தல், ஸாக்ஷால்லக்ஷ்மியை எனக்கென்னுதல் செய்யும் இவற்றிலே ஒன்றே அமையுமிறே ஸர்வேச்வரனாகைக்கு. தன் பக்கல் ஆசாலேசமுடையார் இருந்தவிடத்தே கொடுவந்து காட்டும் பரிகரத்தையுடையவன் நிற்க. "நிற்க" என்கிறது, ஆசயா யதிவா ராம: என்கிறபடியே அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கை. தேவதாந்தரங்கள் பக்கல் போமிடத்தில் இவனை அதிக்ரமித்துப் போகவேண்டும்படி இவனுடைய ப்ரத்யாஸத்தியைச் சொல்லிற்றாகவுமாம்.

விளக்கம் – (கெருடவாகனனும் நிற்க) – அண்டத்தகுந்த பரம்பொருள் கருடனைத் தனது வாகனமாகக் கொண்டவன் ஆவான். கருடனின் கழுத்திலே வீரத்துடன் அமர்ந்திருத்தல், சக்கராயுதத்தை சலிப்படையாமல் ஏந்தியபடி இருத்தல், அனைத்து ஐச்வர்யங்களுக்கும் தேவதையான மஹாலக்ஷ்மிக்கு நாயகனாக இருத்தல் ஆகிய மூன்றும், "இவனே ஸர்வேச்வரன்", என்று உணர்த்துவதாகும். தன்னிடம் மிகவும் சிறிய அன்பு

கொண்டிருந்தாலே போதுமானது, அவர்களிடம் தன்னைக் கொண்டு வந்து நிறுத்துகின்ற வாகனமான கருடனைக் கொண்டவன். இப்படிப்பட்டவன் உங்கள் முன்பு நிற்கும்போது. "நிற்க" என்றால் இராமாயணம் – ஆசயா யதிவா ராம: - இராமன் எப்போது அழைப்பானோ – என்று கூறும்படி, "தன்னை யாரும் அழைப்பார்களோ", என்று பெரியபெருமாள் காத்துக் கிடக்கிறான் என்று கருத்து. மற்ற தேவதைகளை நாடிச் செல்பவர்கள் இவனைக் கடந்தே செல்லவேண்டும்படியாக, இவன் மிகவும் அருகில் உள்ளான் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் – (சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே) – அஸ்ரீ கிழிச்சீரையிலே தநம் வாங்க இருக்கிறிகோள். அலக்ஷ்மீ பக்கலிலே ஐச்வர்யத்தை ஆகாங்க்ஷித்திருக்கிறிகோள். இதர தேவதைகளை ஆச்ரயித்து மோக்ஷம் பெறவிருக்கையாகிற இது அஸ்ரீ பக்கலிலே ஐச்வர்யம் வேண்டியிருக்கையிறே. பந்தகமாய் க்ஷுத்ரமான பலங்களைத் தரும் தேவதைகளை ஆச்ரயித்து, அபுநராவ்ருத்தி லக்ஷண மோக்ஷத்தை லபிக்கப்போமோ? அமணனைக் கூறைவேண்டுகிறது கொலையைக் கருதியிறே. அப்படியே இவர்கள் மதிப்பை அறுக்கையிறே. ரஜஸ்தம:ப்ரசுரரை ஆச்ரயித்து நித்யஸத்வஸ்தர் பெறும் பேற்றை எங்ஙனே பெறும்படி? பகவத்ப்ரவணரானவர்கள் தேவதாந்தரங்களை த்ருணீகரித்திறே இருப்பது. ருத்ரனும் தேவியும் போகாநிற்க, பகவத் ப்ரவணராயிருப்பாரொருவர் அவர்களை அநாதரித்துத் தன் வஸ்த்ரத்தைக் குத்தி நின்றத்தை நினைப்பது.

விளக்கம் – (சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே) – மூதேவியிடமிருந்து பணமூட்டை பெறலாம் என்று எண்ணுகிறீர்களே! அலக்ஷ்மியிடம் ஐச்வர்யத்தை விரும்பி நிற்கிறீர்களே! மூதேவியிடம் செல்வம் பெறலாம் என்று எண்ணுதல், மற்ற தேவதைகளை மூலமாக மோக்ஷம் பெற்றுவிடலாம் என்று எண்ணுவது போன்றதாகும். ஸம்ஸாரத்தில் பந்தப்படுத்தவல்ல மற்ற தேவதைகளை ஆராதனை செய்து, மீண்டும் திரும்புதல் என்பதே இல்லாத மோக்ஷத்தைப் பெற இயலுமோ? வஸ்த்ரமே இல்லாமல் அம்மணமாகத் திரிகின்ற ஒருவனிடம், "வஸ்த்ரம் கொடு", என்று யாசிப்பது, அவனைக் கொல்வது போன்றதாகும். இது போன்று மற்ற தேவதைகளைடம் மோக்ஷத்தை வேண்டுதல் என்பது அவர்களின் மதிப்பை அழிப்பது போன்றதாகும். ஸத்வகுணத்தில் மட்டுமே நிலைநிற்பவர்கள் அடையும் மோக்ஷத்தை,

ரஜ-தமஸ் குணங்கள் கொண்ட தேவதைகளை ஆராதனை செய்து எவ்விதம் பெற முடியும்? எம்பெருமானிடம் மட்டுமே ஈடுபாடு கொண்டவர்கள் மற்ற தேவதைகளை மதிக்கமாட்டார்கள். ருத்ரனும், பார்வதியும் ஆகாய மார்க்கமாகச் சென்றபோது, அவர்களைக் கண்டுகொள்ளாமல், தனது கிழிந்த வஸ்த்ரத்தைத் திருமழிசையாழ்வார் தைத்துக் கொண்டிருந்த ஸம்பவம் இங்கே சிந்திக்கத்தக்கது.

11. ஒரு வில்லால் ஓங்கு முந்நீர் அடைத்து உலகங்கள் உய்ய
செருவிலே அரக்கர் கோனைச் செற்ற நம் சேவகனார்
மருவிய பெரிய கோயில் மதிள் திருவரங்கம் என்னா
கருவிலே திருவிலாதீர் காலத்தைக் கழிக்கின்றீரே.

பொருள் – முன்பு ஒரு காலத்தில், கைக்குக் கிடைத்த ஒரு வில் மூலமாக, அலைகள் ஓங்கி வீசுகின்ற கடலில் பாலம் ஒன்றைக் கட்டினான்; அனைத்து உலகங்களும் பிழைக்கும்படியான ஒரு யுத்தத்தில், அரக்கர்களின் தலைவனாகிய இராவணனை அழித்தான். இப்படியாக நமக்கு உதவிகள் செய்த பெரியபெருமாள் நித்யவாஸம் செய்கின்ற இடம் பெரியகோயில் எனப்படும் திருவரங்கம் ஆகும். மதிள்கள் சூழ்ந்த திருவரங்கம் என்று கூறினாலே போதுமானது, அதனைக் கூடச் செய்யாமல் கர்ப்பத்திலேயே அவனது கடாக்ஷம் கிட்டப்பெறாதவர்களே! ஸ்ரீரங்கநாதனை அண்டி, அவனுக்கே தொண்டு செய்து இருக்கும்படியான காலங்களை வீணாகக் கழிக்கின்றீர்களே!

அவதாரிகை – இப்படி ஸௌலப்ய காஷ்டையை உபதேசியா நிற்கச் செய்தேயும் அவிக்ருதராயிருக்கிற ஸம்ஸாரிகளைக் குறித்து, நான் ஆச்ரயணீயனாகச் சொன்ன சக்ரவர்த்தித் திருமகன் பிற்பாடர்க்கும் உதவுகைக்காக இங்கே வந்து கண்வளர்ந்தருளா நிற்க, பாக்யஹாநியாலே திருநாமத்தைச் சொல்லிப் பிழைக்கமாட்டாதே, காலத்தை வ்யர்த்தமே போக்குகிறிகோளே என்று இன்னாதாகிறார்.

விளக்கம் – இவ்விதம் எம்பெருமான் தனது ஸௌலப்யத்தில் எல்லையைக் காண்பித்தபடி திருவரங்கத்தில் உள்ளான். ஆனால் இப்படிப்பட்ட திருவரங்கன் மீது சிறிதும் ஈடுபாடு இல்லாமல் உள்ள ஸம்ஸாரிகளிடம், "உங்களை நான் சக்ரவர்த்தித் திருமகனான இராமனை அண்டும்படிக் கூறினேன். அவனும், தான் அவதாரம் செய்த காலத்திற்குப் பின்னால் வந்துள்ள உங்களைப் போன்றோர்களுக்கு உதவ வேண்டும் என்று எண்ணி, திருவரங்கத்திற்கு வந்து கண்வளர்கிறான். இப்படியாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் திருநாமத்தைக் கூறினாலே போதுமே! பிழைத்துக் கொள்ளலாமே! இந்த பெரும் பாக்கியத்தை விடுத்து உங்கள் காலத்தை வீணாகப் போக்குகிறீர்களே!", என்று வருத்தமாகக் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (ஒரு வில்லால்) – கைக்கெட்டிற்றொரு வில்லாலேயாய்த்துக் கடலை அடைத்தது; அதுக்கு அடியென்னென்னில் ஸமுத்ரத்தை அர்த்தித்து வழி வேண்டிக் கிடந்தவிடத்திலே வந்து முகம்காட்டிற்றில்லை; இது குணத்துக்கு முகங்காட்டு மதாயிருந்ததில்லை; சாபமாநய ஸௌமித்ரே என்கிறபடியே "கொண்டு வா தக்கனை" என்று கையிலே வில்லை வாங்கி, அவ்வில்லு எதிரிகள் பக்கல் தண்ணளி பண்ணினாலும் பண்ணாத ஆசீவிஷோபமமான அம்புகளை விட்டார்.

விளக்கம் – (ஒரு வில்லால்) – தனது கைக்குக் கிட்டிய ஒரு வில்லை எடுத்து கடலை அடைத்தான். வில் கொண்டு கடலை அடைத்தது எப்படி? அணை கட்டும் பொருட்டு கடல் அரசனை அழைத்தபோது அவன் வரவில்லை. இப்படியாக இராமனின் உயர்ந்த குணத்திற்கு முன்பாக கடல் அரசன் வந்து நிற்கவில்லை. உடனே இராமாயணம் – சாபமாநய ஸௌமித்ரே – லக்ஷ்மணா! வில்லைக் கொண்டுவா – என்று கூறும்படி, "பாம்பின் விஷம் போன்ற அம்புகளைக் கொண்டு வா", என்று கூறி, வில்லைக் கையில் வாங்கினான். அந்த வில் எதிரிகளைக் கண்டு மனம் இரங்கி குளிர்ந்தாலும் குளிர்ந்துவிடும் என்று எண்ணி, விஷம் கலந்த அம்புகளைத் தொடுத்தான்.

வ்யாக்யானம் – (ஓங்கு முந்நீர்) – கடலினுடைய ஸ்வாபாவிகமான வேஷத்தைச் சொல்லுகிறதன்று; கையும் வில்லுமாய் நின்ற வீரவுறைப்பைக் கண்டு, கீழ் மண்கொண்டு மேல் மண்ணெறிந்து கொந்தளித்தபடியைச் சொல்லுகிறது. இதுதான்

ஆர்த்திக்கிரங் குமதன்றே; அம்புக்கிரங்குமதிறே. உபாத்யாயன் கையில் கசை கண்டு சிறு ப்ரஜைகள் காலிலே விழுமாபோலே, திருவடிகளளவும் வந்து வெள்ளங்கோத்ததாய்த்து. ஸமுத்ரஸ்ய தத: க்ருத்தோ ராமோ ரக்தாந்தலோசந: என்னக்கடவதிறே. (அடைத்து) – நாலிரண்டு அம்பு விட்டவாறே வந்து முகங்காட்டி முதுகெடுத்துக் கொடுத்தவாறே, அதின் மேலேயாய்த்து அணை கட்டிற்று. ஆகையாலே கல்லாலன்று அடைத்தது, வில்லால் என்கை. இங்ஙனன்றாகில் இட்ட இட்ட மலைகளெல்லாம் ஆழ்ந்து போய் அடைத்ததாய்த் தலைக்கட்டாது.

விளக்கம் – (ஓங்கு முந்நீர்) – இதன் மூலம் கடலின் இயல்பான தன்மையான அலைகள் வீசுவதைக் கூறவில்லை. கையும் வில்லுமாக இராமன் வீராவேசமாக நின்றதைக் கண்ட கடல், தனது அடி மண் மேலே வரும்படியாகக் கலங்கிக் கொந்தளித்த தன்மையைக் கூறுகிறது. இராமன் ஏக்கத்துடன் கடல் அரசனை வேண்டியபோது, அவன் இரக்கம் கொள்ளவில்லை. இராமனின் அம்பைக் கண்டவுடனே அல்லவா வந்து நின்றான்? பள்ளியில் ஆசிரியர் கையில் பிரம்பை எடுத்தவுடன், மாணவர்கள் அச்சம் கொண்டு ஆசிரியர் கால்களில் விழுவது போல், அம்பைக் கண்டு இராமனின் திருவடிகளில் கடல் அரசன் விழுந்தான். இராமாயணம் - ஸமுத்ரஸ்ய தத: க்ருத்தோ ராமோ ரக்தாந்தலோசந: - ஸமுத்ரத்தின் மீது கோபம் கொண்டதால் சிவந்த கண்களை உடைய இராமன் – என்றது காண்க. (அடைத்து) – நாலிரண்டு அம்புகளை இராமன் விட்டவுடன் அல்லவோ கடல் அரசன் வந்து நின்றான்? அப்படியாக நின்ற அவன் மீது அல்லவா பாலம் அமைத்தான்? ஆக கல்லால் கடலை அடைக்கவில்லை, வில்லால் அடைத்தான் என்று கருத்து. இப்படியாக வில்லின் வலிமையைக் காண்பிக்கவில்லை என்றால், கடலில் இட்ட கற்கள் அனைத்து மூழ்கியிருக்குமே அல்லாமல் கடலை அடைத்திருக்காது.

வ்யாக்யானம் – (உலகங்களுய்ய) – பாதாளம், பூம்யந்தரிக்ஷ ஸ்வர்க்கம் இவ்வுலகங்கள் உய்ய. ராவணனுடைய வர பலத்தாலே இவ்வுலகங்களெல்லாம் அழிந்திறே கிடந்தது. ந யஷ்டவ்யம் ந தாதவ்யம் ந போக்தவ்யம் கதஞ்சந என்று யஜ்ஞாதிகளை விலக்கியும், அம்பாலே இந்த்ராதிகளை ஜயித்தும் பஹுமுகமாக நலிந்தான். இவனை அழித்த பின்பாய்த்து லோகங்கள் ஜீவித்தது. அங்ஙனன்றியே, ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய என்கிறபடியே அசுத்தரானவர்களும் அத்தை தர்சித்து சுத்தராம்படி "ஒரு வில்லாலே அடைத்து" என்று கீழே யோஜிக்கவுமாம்.

விளக்கம் – பாதாள லோகம், பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் ஆகிய பலவும் பிழைக்கும்படியாக. இவை அனைத்தும் இராவணனின் தவ வலிமை காரணமாகவும், அவன் பெற்ற வரங்களின் வலிமை காரணமாகவும் நிலை இல்லாமல் இருந்தன. விஷ்ணு புராணம் - ந யஷ்டவ்யம் ந தாதவ்யம் ந போக்தவ்யம் கதஞ்சந – யாகம் செய்யக்கூடாது, தானம் செய்யக்கூடாது, என்னை விட யாகங்களின் போக்தா வேறு யாரும் இல்லை – என்றபடி இராவணன், மற்றவர்களின் யாகங்களை அழித்தபடி இருந்தான். இந்த்ரன் முதலானவர்களை வென்று அடிமைப்படுத்தினான். இப்படியாகப் பலவிதமாக உலகங்களை வாட்டினான். இவனை அழித்த பின்னரே உலகங்கள் பிழைத்தது என்று கருத்து. வேறுவிதமாகவும் பொருள் கொள்ளலாம். இராமாயணம் - ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய – ஸேதுவைக் கண்டவுடன் பாவம் நீங்கும் – என்பதற்கு ஏற்ப, அசுத்தம் உள்ளவர்கள் ஸேதுவைக் கண்டவுடனேயே சுத்தம் அடைவார்கள் என்னும் எண்ணம் காரணமாக அணைகட்டினான் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் - (செருவிலே) – மாயாம்ருகத்தைக் காட்டி ராஜபுத்ரர்களை அகற்றி, திறந்து கிடந்த வாசலிலே நாய் புகுருமாபோலே, தனியிருப்பிலே வந்து பிரித்த கோழைப் பையலைப் போலன்றியே, பத்தும் பத்தாக யுத்தத்திலே; (அரக்கர்கோனை) – நான் ராக்ஷஸராஜன் என்று தன் பரிகரத்தைப் பார்த்து அபிமானித்திருந்தவனை, தானே அதிக்ரமம் பண்ணுமளவன்றியே துர்வர்க்கத்துக்கடைய ஒதுங்க நிழலாயிருந்தவனை. (செற்ற) – அவன் கண்முகப்பே பரிகரபூதரை அழித்து, ப்ரஜைகளை அழித்து, தன் தலை தரையிலே புரளக் கண்ணாலே காண்பாரில்லையாம்படியாயிருக்க, தான் காணும்படி ஓரோ தலையாக அறுத்திறே அவனை அழியச் செய்தது. கச்சாநுஜாநாமி. (நம் சேவகனார்) – ஈச்வரத்வத்தாலே சேவகனார் என்கிறாரல்லர்; ஸேவகவாசியாலே; அதாகிறது – கையிலக்கைக்கு ஸேவிக்குமவனென்கை. அதாகிறது – ஓரஞ்ஜலிக்குத் தானுள்ளதனையும் இவனை ஸேவிக்கை. தாய் தலையற்றது வீழத் தொடுத்த தலைவனிறே. அநந்யகதியான நம் விரோதிவர்க்கத்தை பிராட்டியோட்டை ஸம்ச்லேஷ விரோதியைப் போக்கினாற்போலே போக்கும் ஆண்பிள்ளையென்னுதல். எல்லார்க்கும் தஞ்சமான பிராட்டிக்கு உதவுகையாலே நமக்குதவினான் என்று எல்லார்க்கும் சொல்லலாம்படி இருக்கையாலே “நம் சேவகனார்” என்னுதல். நஞ்சீயர் இப்பாட்டைக் கேட்டவன்று தம்மிலே அநுஸந்தித்துப் போராநிற்க, ஒரு சேவகனும் ஒரு ஸ்த்ரீயும்

விவாதம் பண்ணிளவளவிலே அவனுக்கு அவள் சொன்ன வார்த்தையைக் கேட்டு வித்தரான வார்த்தையை அநுஸந்திப்பது. அதாகிறது – பிணங்கினவளவிலே "உன்னால் என்னை என் செய்யலாம்? ஏழைக்கும் பேதைக்குமன்றோ சாமந்தனார் பத்திரம் கட்டிற்று", என்றாள். பட்டரை ஆச்ரயித்த சோழசிகாமணிப் பல்லவராயர்க்கு ராம லக்ஷ்மணகுப்தா ஸா என்கிற ச்லோகத்தை அருளிச்செய்து "கடற்கரையில் வெளியை நினைத்திரும்" என்றத்தை அநுஸந்திப்பது. அத்தைக் கூடக் கேட்டிருந்த நஞ்ஜீயரும், பிள்ளை விழுப்பரையரும், நம்பி ஸ்ரீகோவர்த்தநதாஸருமாக இதுக்குச் சேர்ந்திருந்ததென்று, "இலைதுணை மற்றென்னெஞ்சே" என்கிற பாட்டை அநுஸந்தித்தார்கள். ஆக, அநந்யகதிகளான நமக்குத் தஞ்சம் சக்ரவர்த்தித் திருமகனென்கை.

விளக்கம் – (செருவிலே) – மாயை மூலம் உருவாக்கப்பட்ட மான் ஒன்றைக் காண்பித்து, இராமனையும் இலக்குவனையும் பர்ணசாலையில் இருந்து அகற்றினான்; திறந்த வீட்டில் நாய் புகுவது போன்று, சீதாப்பிராட்டி தனியாக உள்ளபோது வந்து, அவளை இராமனிடமிருந்து பிரித்தான். இப்படிப்பட்ட கோழைச் செயல் கொண்ட இராவணன் போன்று அல்லாமல், நேருக்கு நேராக நின்று யுத்தம் செய்து அவனை அழித்தான். (அரக்கர் கோனை) – "நான் அரக்கர்களின் அரசன்" என்று கூறியபடியும், தனக்குத் துணையாக உள்ள அரக்கர்களின் பலத்தைக் கண்டு கர்வம் கொண்டிருந்தவனை. தானே ஒரு பெரும் கொடியவனாக இருப்பதுடன் மட்டும் அல்லாமல், இது போன்று தீய செயல்கள் செய்பவர்கள் அனைவருக்கும் அவர்கள் ஒதுங்க இடமாக இருப்பவனை. (செற்ற) – அப்படிப்பட்ட இராவணனின் கண் முன்பாகவே, அவனது படைகளை அழித்து, அவனது பிள்ளைகளை அழித்து, அவனது தலைகள் ஒவ்வொன்றாகத் தலையில் உருள்வதைத் அவனே பார்க்கும்படியாகச் செய்து அல்லவோ அவனை முடித்தான்? இராமாயணம் – கச்சாநுஜாநாமி – திரும்பிச்செல், நான் அனுமதி அளிக்கிறேன் – என்றது காண்க. (நம் சேவகனார்) – ஈச்வரனாக உள்ளதால் "சேவகனார்" என்று கூறவில்லை. நமக்கு சேவகனாக உள்ள தன்மையால் ஆகும். அதாவது, நாம் நமது கைகள் குவித்து ஓர் அஞ்ஜலி செய்தால் போதுமானது, இவன் அதற்காக காலம் முழுவதும் நமக்காகவே இருப்பான். நாச்சியார் திருமொழி (5-3) – தாய் தலையற்றற்று வீழ்த்தொடுத்த தலைவன் – என்றது காண்க. இராவணனை அழித்து, தான் சீதையுடன் சேர்வதற்கான விரோதியை எவ்விதம் அழித்தானோ, அதே போன்று,

வேறு புகலிடம் இல்லாத நமது விரோதிகளையும் போக்குவான். அனைவருக்கும் புகலிடமாக உள்ள பிராட்டியைக் காப்பாற்றியதன் மூலம், நமக்கு உதவி செய்தான் என்பதையே "நம் சேவகனார்" என்றார் எனவும் கூறலாம். நஞ்ஜீயர் பட்டரிடம் இந்தப் பாசுரத்தின் விளக்கத்தை அறிந்து கொண்ட ஒரு நாளில், செல்லும் வழியில் ஓர் அரசாங்க வீரனும் ஒரு பெண்ணும் விவாதம் செய்து கொண்டுள்ளதைக் கண்டார். அந்த வீரன் பெண்ணை அச்சுறுத்த, அந்தப் பெண், "உன்னால் என்னை என்ன செய்ய இயலும்? ஏழைக்காகவும், பேதைக்காகவும் அல்லவோ நம் அரசர் ஆட்சி செய்து கொண்டுள்ளார்", என்றாள். இதனைக் கேட்ட நஞ்ஜீயர் பெரும் வியப்பு கொண்டாராம். சோழ சிகாமணிப் பல்லவராயன் பட்டரை அண்டி நின்றபோது, பட்டர் அவனிடம் இராமாயணம் – ராம லக்ஷ்மண குப்தா ஸா – இராம இலக்குவர்களால் காவல் செய்யப்பட்டது – என்னும் ச்லோகத்தை கூறியபடி, "கடற்கரையின் மணல்வெளியை எண்ணியபடி இருப்பாயாக", என்று அருளிச்செய்தார். இதன் உட்கருத்து – இராமன் காப்பான் – என்பதாகும். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த நஞ்ஜீயர், பிள்ளை விழுப்பரையர் மற்றும் நம்பி ஸ்ரீகோவர்த்தந தாஸர் ஆகியோர், இதே கருத்தை வெளிப்படுத்தும் நான்முகன் திருவந்தாதி (8) – இலை துணை மற்றென்னெஞ்சே – பாசுரத்தை அருளிச்செய்தனர். ஆகவே, வேறு புகலிடம் இல்லாத நமக்கு, சக்ரவர்த்தித் திருமகனாம் இராமனே தஞ்சம் ஆவான் என்று கருத்து.

வ்யாக்யானம் – (சேவகனார் மருவிய பெரியகோயில்) – ராவண வதம் பண்ணி வினையற்ற பின்பும் அவதாரத்தில் பிற்பாடர்க்கும் உதவுகைக்காகவாய்த்துக் கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. ரேபாந்தமாகச் சொல்லிற்று பூஜ்யவாசியன்று, சேவகத்திலுறைப்பைச் சொல்லிற்று. (மருவிய) – திருவுள்ளம் பொருந்தி நித்யவாஸம் பண்ணுகிற தேசம். பர வ்யூஹ விபவங்களில் கோயிலில் பொருத்தம் சொல்லுகிறது. (பெரிய கோயில்) – கோயில் பரப்பை நினைத்தன்று. ராஜா இன்னவிடத்திலே இருந்து நினைப்பிட்டானென்றால், பின்னை அவன்றன்னாலும் மாற்ற நினைப்பிடவொண்ணா திருக்கும் தேச கௌரவத்தைப் பற்றச் சொல்லுகிறது. அதாகிறது, ஸம்ஸாரிகள் கார்யம் ஈடறுக்கையிறே. தேசோயம் ஸர்வகாமதுக், விஷ்ணோராயதநம் மஹத்.

விளக்கம் – (சேவகனார் மருவிய பெரியகோயில்) – இராவண வதம் முடிந்து, இந்த உலகத்தை வினைகள் இல்லாத ஒன்றாகச் செய்த பின்னர், இராமாவதாரக் காலத்தின் பின்னே தோன்றியவர்களுக்கும் உதவும் பொருட்டு அல்லவோ இவன் இந்தப் பெரியகோயிலில் வந்து சயனித்துள்ளான்? "ஆர்" என்று மரியாதையுடன் கூறுவது, இவனது மேன்மையை உணர்த்துவதற்காக அல்ல, இவன் நமக்காகச் சேவை செய்வதற்குக் கொள்ளும் ஆர்வத்தை உணர்த்தவே ஆகும். (மருவிய) – தன்னுடைய திருமேனி மட்டும் அல்லாமல், தனது திருவுள்ளம் முழுவதுமாகப் பொருந்தி, நிலையாக வசிக்கின்ற திருவரங்கம். பர வ்யூஹ விபவம் ஆகிய அனைத்திலும் உயர்ந்தபடி உள்ள நிலையைக் கூறுகிறது. (பெரியகோயில்) – "பெரிய" என்ற பதம் கோயில் அளவை மனதில் கொண்டு கூறப்பட்டது அல்ல. ஓர் அரசன் தனது அரண்மனையில் இருந்தபடி ஓர் ஆணை பிறப்பித்தான் என்றால், அதன் பின்னர் அவனாலும் அந்த ஆணை மாற்ற இயலாதது ஆகும். இது போன்று இங்குள்ள பெரியபெருமாள் ஸங்கல்பம் செய்தான் என்றால் (இதனை "ரங்க ஸங்கல்பம்" என்றே கூறலாம்), அவன் உட்பட யாராலும் மாற்ற இயலாது என்று கருத்து. ஸம்ஸாரிகளின் விருப்பங்களை நிறைவேற்றுதலே ஆகும். இதனை காருட புராணம் – தேசோயம் ஸர்வகாமதுக் – இந்த தேசம் அனைத்து துக்கங்களையும் நீக்கும் – என்றும், லைங்க புராணம் – விஷ்ணோராயதநம் மஹத் – விஷ்ணுவின் பெரியகோயில் – என்றும் கூறின.

வ்யாக்யானம் – (மதிள் திருவரங்கம்) – கண்வளர்ந்தருளுகிறவருடைய ஸௌகுமார்யத்தைக் கண்டு அஞ்சவேண்டாதபடி மதிளையுடைத்தாயிருக்கை. இவ்வஸ்துவின் சீர்மையை அறிந்திருக்கும் திருமங்கையாழ்வார்போல்வார் இட்ட மதிளிறே. (என்னா) – உடம்பு நோவ வேண்டா, ஒருக்தி மாத்ரமே அமையும், அவருடைய குணசேஷ்டிதங்களைப் பற்றின திருநாமம் வேண்டா, தேசஸ்பர்சியான திருநாமமே அமையும். (கருவிலே திருவிலாதீர்) – ஸுககரமாயிருக்க நீங்கள் அநாதரிக்கிறது கர்ப்பத்திலும் பகவத் கடாக்ஷமில்லாமையிறே. ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந: என்கிறபடியே கர்ப்பவாஸ ஸமயத்தில் தயநீயதையைக் கண்டு குளிர நோக்குவதொரு நோக்குண்டு. அது இவனுக்கு பகவத் ப்ராவண்யமாகிற ஸம்பத்துக்கு அடி, அதுவும் பெறாதவர்களாகாதே நீங்கள் என்கிறார். "கருவரங்கத்துட் கிடந்து கை தொழுதேன் கண்டேன்" என்றும், "கருக்கோட்டியுட்கிடந்து கை தொழுதேன் கண்டேன்" என்றும் சொல்லக் கடவதிறே.

விளக்கம் – (மதிள் திருவரங்கம்) – இங்கு சயனித்துள்ள பெரியபெருமாளின் திருமேனி மிகவும் மென்மையானது. இதனைக் கண்டு, இவனுக்கு விரோதிகளால் ஆபத்து உண்டாகுமோ என்று அச்சம் கொள்ள அவசியம் இல்லாதபடி, சுற்றிலும் மதிள்களைக் கொண்டிருக்கிறது. இவனது மேன்மையை அறிந்த திருமங்கையாழ்வார் போன்றவர்களால் அமைக்கப்பட்ட மதிள் அல்லவா? (என்னா) – அவனது கருணையைப் பெற உடல் வருத்தி ஏதும் செய்யவேண்டாம்; ஓர் உபாயம் மட்டுமே போதுமானது; அவனுடைய திருக்கல்யாண குணங்கள், லீலைகள் ஆகியவற்றைக் கூறும் அவனது திருநாமங்களைக் கூட உரைக்க வேண்டாம்; அவனது திருமேனியை எப்போதும் தொட்டபடி உள்ள "ஸ்ரீரங்கம்" என்ற சொல்லைக் கூறினாலே போதுமானது. (கருவிலே திருவிலாதீர்) – இப்படியாக பெரியபெருமாளின் கருணையைப் பெறும் வழி மிகவும் எளியதாக உள்ளபோதும், இதனைச் செய்யாதது ஏன்? காரணம், கர்ப்பத்தில் உள்ளபோது பகவத் கடாக்ஷம் கிட்டவில்லை போலும். மஹாபாரதம் - ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந: - பிறக்கின்ற ஒருவனை எந்த மதுஸூதனன் பார்த்துக் கொண்டுள்ளானோ – என்னும்படி, கர்ப்பத்தின்போதே சில ஜீவன்களை, அவர்களுடைய வருத்தமான நிலையைக் கண்டு, எம்பெருமான் குளிர்ந்த பார்வை வீசுவதுண்டு. இப்படிப்பட்ட கர்ப்ப காலத்தில் உண்டாகும் பகவத் கடாக்ஷம் என்பதே, அந்த ஜீவன் தொடர்ந்து நிலை நிற்கின்ற "பகவானிடம் ஈடுபாடு" என்னும் ஐச்வர்யத்தின் அடிப்படை ஆகும். "அந்தக் கடாக்ஷத்தைப் பெற இயலாமல் போய்விட்டீர்களே", என்று வருந்துகிறார். இந்தக் கடாக்ஷம் குறித்து முதல் திருவந்தாதி (6) - கருவரங்கத்துட் கிடந்து கை தொழுதேன் கண்டேன் - என்றும், இரண்டாம் திருவந்தாதி (87) – கருக்கோட்டியுட் கிடந்து கை தொழுதேன் கண்டேன் – என்றும் கூறியது காண்க.

வ்யாக்யானம் – (காலத்தைக் கழிக்கின்றீரே) – விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும் என்று பகவத் ஸமாச்ரயணாதிகளுக்குக் கண்ட காலத்தை வ்யர்த்தமே போக்குகிறிகோளே! காலக்ருத பரிணாமமில்லாத தேசத்தில் நின்றும் இங்கே வந்து கிடக்க, நீங்கள் காலத்தை வ்யர்த்தமே போக்குவதே! நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணா நிற்க, அத்தை விட்டு உங்கள் அவஸரம் பார்த்துக் கிடக்க, நீங்கள் காலத்தை வ்யர்த்தமே போக்குவதே! நித்யஸூரிகளநுபவம் உங்களுக்கும் வேணுமென்று அது

ஸாத்மிக்கைக்காக இங்கே சிரமம் செய்விக்கைக்கு வந்து கிடக்க, நீங்கள் அந்யபரராய்த் திரிகிறிகோளே என்கிறார்.

விளக்கம் – (காலத்தைக் கழிக்கின்றீரே) – விஷ்ணுதத்வம் - விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும் – விசித்ரமான இந்த உடல் அமைப்பு ஸர்வேச்வரனுக்காகவே – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸ்ரீரங்கநாதனை அடைந்து, அவனுக்காகவே கைங்கர்யம் செய்து கழிக்க வேண்டிய காலத்தை வீணாகக் கழித்தபடி உள்ளீர்களே! காலத்தால் எந்தவிதமான மாற்றமும் ஏற்படுத்த இயலாத பரமபதத்திலிருந்து வந்து, இந்தத் திருவரங்கத்தில் வந்து கிடக்கும் இவனை விடுத்து காலத்தை வீணாக்குகிறீர்களே! நித்யஸூரிகள் எப்போது அங்கு இவனை துதித்தபடி இருக்க, அவர்களைப் பொருட்படுத்தாமல், நீங்கள் எப்போது அண்டுவீர்களோ என்று உங்களை எதிர்பார்த்தபடி சயனித்துள்ள இவனை நாடாமல், காலத்தை வீணாக்குகிறீர்களே! நித்யஸூரிகளின் அனுபவத்தை நீங்களும் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன், அதனை உங்களுக்கு அளிக்கவேண்டும் என்ற சிந்தனையுடன் அவன் இங்கு வந்து சயனித்துள்ளான். ஆனால் நீங்களோ, அவனை விடுத்து மற்ற அனைத்து விஷயங்களையும் பெறுவதில் குறியாக இருந்தபடி, அவற்றின் பின்னே திரிகிறீர்களே என்று வேதனையுடன் கூறுகிறார்.

12. நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க
நரகமே சுவர்க்கம் ஆகும் நாமங்கள் உடைய நம்பி
அவனது ஊர் அரங்கம் என்னாது அயர்த்து வீழ்ந்து அளிய மாந்தர்
கவலையுள் படுகின்றார் என்று அதனுக்கே கவர்கின்றேனே.

பொருள் – யமனும் முத்கலன் என்பவனும் நரகத்தில் நின்றபடி எம்பெருமானின் திருநாமம் குறித்துப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது நரகத்தில் உழன்று கொண்டிருந்தவர்கள் அதனைக் கேட்டனர். இதனால் அந்த நரகமே ஸ்வர்க்கம் போன்று ஆகிவிட்டது. "இப்படிப்பட்ட உயர்ந்த திருநாமங்களைக் கொண்ட எம்பெருமானின் இருப்பிடமானது திருவரங்கம்", என்று முழங்காதபடி மக்கள் உள்ளனரே! இதனைக் கூறாமல், அவனை மறந்து, உலக விஷயங்கள் என்னும் குழியில் விழுந்து, துயரத்தால்

சூழப்பட்டு உள்ளனரே! இப்படி இவர்கள் உள்ளனரே என்று எண்ணியே நான் கவலை அடைகிறேன்.

அவதாரிகை – "வாயாலே திருநாமத்தைச் சொல்லச் சொன்னீர். எங்கள் பாபத்தாலே பஹுஜல்பம் பண்ண க்ஷமராகா நின்றோம். திருநாமம் சொல்ல சக்தராகிறிலோம்" என்ன; ஆகில் ச்ரவணமாத்ரத்தாலே திருநாமம் உத்தாரகமென்று முத்கலோபாக்யாந முகத்தாலே சொல்லி, "இப்படிப்பட்ட ப்ரபாவத்தையுடையவன் ஊர் கோயிலென்று உஜ்ஜீவிக்கலாயிருக்க, துக்கபாகிகளாவதே!" என்று இவர்களநர்த்தத்தைப் பொறுக்க மாட்டுகிறிலேன்" என்கிறார்.

விளக்கம் – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "எங்கள் வாயால் பெரியபெருமாளின் திருநாமத்தைக் கூறும்படி உரைத்தீர்கள். ஆனால், எங்களது பாவங்கள் காரணமாக எங்களால் உலக விஷயங்கள் குறித்து மட்டுமே பேச முடிகிறது, அவனது திருநாமத்தைக் கூறும் திறன் இல்லாமல் உள்ளோம்", என்றனர். இதனைக் கேட்ட ஆழ்வார், "கவலை வேண்டாம், அவனது திருநாமத்தை மற்றவர்கள் கூற நீங்கள் அதனைக் கேட்டாலே போதுமானது, உங்களைக் கரையேற்றும்", என்றார். தொடர்ந்து விஷ்ணுபுராணத்தில் உள்ள முத்கலன் என்பவன் குறித்த சரிதம் கூறி, "இப்படிப்பட்ட மேன்மையான திருநாமத்தைக் கொண்டவன் உறைகின்ற ஊராகிய திருவரங்கத்தின் பெயரை மட்டுமே கூறிப் பிழைத்துவிடலாமே! அதனையும் செய்யாமல் ஸம்ஸாரத்தின் துயரத்தில் ஆழ்கின்றனரே!", என்று ஸம்ஸாரிகள் படுகின்ற துன்பங்களைக் கண்டு, "என்னால் பொறுக்க இயலவில்லையே", என்று புலம்புகிறார்.

வ்யாக்யானம் – (நமனும் முத்கலனும் பேச) – பண்டு முத்கலனென்பானொருவன் பாபப்ரசுரனாய் வர்த்திக்கிற நாளிலே திலதேநுவை தாநம் பண்ணுகிற ஸமயத்திலே, "க்ருஷ்ணாய" என்று கொடுத்தான். பின்பு அவனுடைய மரணதசையிலே யமபடர் வந்து நெருக்கி, யமன் பக்கலிலே கொண்டு செல்ல, யமன்தான் இவனை எதிர்கொண்டு ஸம்பாவிக்க, "உன்னுடைய படர் என்னை நெருக்கிக் கொண்டுவர, நீ ஸம்பவியா நின்றாய்; இதுக்கு ஹேதுவென்?", என்ன; "உன்னுடைய ப்ரபாவம் அவர்களும் அறிந்திலர், நீயும் அறிந்திலை, ஒரு கால் திருநாமத்தைச் சொன்னாய் காண்", என்று

அத்தை ப்ரஸமஸிக்க, இங்ஙனே ப்ரஸக்தாநுப்ரஸக்தமான இத்தை நரகாநுபவம் பண்ணுகிறவர்கள் கேட்டவநந்தரம் அவ்விடந்தானே ப்ராப்ய பூமியாய்த்தென்று சொல்லிப் போவதொரு கதையுண்டு; அத்தை இங்கே சொல்லுகிறது.

விளக்கம் – (நமனும் முத்கலனும் பேச) – முன்பு ஒரு காலத்தில் முத்கலன் என்று ஒருவன் வாழ்ந்து வந்தான். இவன் மிகுந்த பாவங்கள் செய்தபடி வாழ்ந்தான். ஒருமுறை அவன் தனது பாவங்களுக்குப் பரிகாரம் தேடும் வகையில், எள்ளினால் ஆன ஒரு பசுவைத் தானமாக அளித்தான். அவ்விதம் தானம் அளிக்கும் நேரத்தில், "க்ருஷ்ணார்ப்பணம்" என்று கூறியபடி அளித்தான். பின்னர், அவன் மரணம் அடைந்தபோது அங்கு வந்த யமதூதர்கள், அவனிக் கட்டி இழுத்துக்கொண்டு யமனிடம் நிறுத்தினர். இப்படி வந்த அவனை யமன் ஓடி வந்து வரவேற்றான். இதனைக் கண்ட முத்கலன் யமனிடம், "உன்னுடைய தூதர்கள் என்னைத் துன்புறுத்தி அழைத்து வந்தனர். ஆனால் நீயோ இப்படி வரவேற்கிறாய். உனது செயலின் காரணம் என்ன?", என்று வினவினான். இதற்கு யமன் முத்கலனிடம், "உன்னுடைய மேன்மை எனது தூதர்களுக்குத் தெரியாது. நீயே உனது பெருமையை அறிந்தவன் அல்லன். முன்பு ஒரு காலத்தில் கண்ணனின் திருநாமத்தை நீ கூறியதால், உனக்கு இந்த மேன்மை உண்டானது", என்றான். இப்படியாக யமன் எம்பெருமானின் திருநாமத்தைப் பற்றிக் கூறினான். இப்படியாக இவர்கள் இருவரும் திருநாமத்தின் மேன்மையைப் பேசியபடி நின்றதை, நரகத்தின் உழன்று கொண்டிருப்பவர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். உடனே அந்த இடமே ஸ்வர்க்கம் போன்றதாகி, அவர்களுக்கு இன்பம் ஏற்பட்டது. இந்த நிகழ்வை இங்கு அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (நமனும் முத்கலனும் பேச) – முத்கலபகவான் "ஸத்காரத்துக்கு ஹேதுவென்?", என்று சொல்ல, யமன், "முன்பே திருநாமம் சொன்னாய்காண்", என்று சொன்ன இவ்வளவேயாய்த்துப் பிறந்தது. யமன் பாவநமாகத் திருநாமத்தைச் சொன்னானுமல்லன். முத்கலபகவான் கேட்க அவனுக்கு உபதேசித்தானுமல்லன். நாரகிகளைத் தன் கை சலிக்க நலிந்து, இவற்றுக்கு இனி போக்கடி ஈதென்று சொன்னானுமல்லன். கிம் த்வயா நார்ச்சிதோ தேவ: கேசவ: க்லேசநாசத: என்று அவர்களை கர்ஹித்துச் சொன்னானுமல்லன். திருநாமம் சொன்னானொருவன் நரகம் புக்கானென்று தன் பதத்துக்கு ஹாநி வருகிறதோவென்று சொன்னானத்தனை.

விளக்கம் - (நமனும் முத்கலனும் பேச) – முதகலன் யமனிடம், "நீ என்னை வரவேற்கக் காரணம் என்ன?", என்றான்; இதற்கு யமன், "நீ முன்பு க்ருஷ்ணனின் திருநாமத்தை உச்சரித்தாய்", என்றான். இவ்வளவுதான் அங்கு நடந்த உரையாடல் ஆகும். யமன் தனக்கு ஓர் உபாயம் என்று எண்ணி எம்பெருமானின் திருநாமத்தைக் கூறவில்லை; முத்கலன் கேட்டு அவனுக்கு எம்பெருமானின் திருநாமத்தை உபதேசம் செய்யவில்லை; நரகத்தில் உழல்பவர்களைத் தனது கை வலிக்க அடித்து, இவர்கள் இங்கிருந்து புறப்பட திருநாமமே வழி என்று எண்ணி திருநாமத்தைக் கூறவில்லை; கிம் த்வயா நார்ச்சிதோ தேவ: கேசவ: க்லேசநாசத: - பாவியிடம் யமன், "அழகான குழல்களை உடைய கேசவன் உன்னால் அர்ச்சிக்கப்படவில்லையோ?", என்று கேட்பானாம், இது போன்று அவர்களைக் கேட்கும் நேரத்தில் திருநாமத்தைக் கூறவில்லை; "எம்பெருமானின் திருநாமத்தை உச்சரித்தவன் இங்கு வருகிறான். அவனை நாம் உபசாரம் செய்யவில்லை என்றால் நமது யமபதவிக்கு ஆபத்து", என்று எண்ணியதே அங்கு நிகழ்ந்தது.

வ்யாக்யானம் – (நரகில் நின்றார்கள் கேட்க) – பாபம் பண்ணுகிற ஸமயத்திலே அநுதபித்து மீண்டு, ப்ராயச்சித்தம் பண்ணும் ஸமயத்தில் கேட்டாருமல்லர். பாபத்தினுடைய பலாநுபவம் பண்ணுகிற ஸமயத்திலேயாய்த்துக் கேட்டது. அப்போது தானும் ஸமித்பாணிகளாய்க் கேட்டாருமல்லர்; ப்ராஸங்கிகமாகத் திருநாமம் செவிப்பட்டவித்தனை. "பாபம் பண்ணுகிற வேளையில் ப்ராஸங்கிகமாகவும் ஒருத்தர் திருநாமம் சொல்லுவாரில்லையோ, அப்போது கேளாதொழிவானென்", என்னில் அப்போது விஷய ப்ராவண்யத்தால் வந்த செருக்காலே செவிப்படாது; இப்போது துக்காநுபவம் பண்ணுகிறவளவாய் "ஆரொரு நல்வார்த்தை சொல்வார்?" என்னும் தசையாகையாலே செவிப்படுமே.

விளக்கம் – (நரகில் நின்றார்கள் கேட்க) – பாவம் செய்யும்போது வருந்தி, "இனி பாவம் செய்வதில்லை", என்று உறுதி பூண்டு, தனது பாவத்திற்கான பரிகாரம் தேடும்போது எம்பெருமானின் திருநாமத்தை இவர்கள் கேட்கவில்லை. மாறாக, அந்தப் பாவத்திற்கான பலனை நரகத்தில் அனுபவிக்கும்போது அல்லவோ கேட்டனர்? அப்போதும் இவர்கள் உபதேசம் பெறும் வேளையில் கையில் ஸமித்துடன் நின்று கேட்கவேண்டும் என்னும் முறையுடன் கேட்கவில்லை; யாரோ இருவர் பேசிக்

கொள்வதை மட்டுமே கேட்டனர். “பாவம் செய்யும்போது எம்பெருமானின் திருநாமம் பற்றி இவர்கள் பேசவில்லை என்றாலும், இதே போன்று வேறு யாரோ பேசுவதை அப்போது இவர்கள் கேட்கவில்லையோ?”, என்ற சந்தேகம் எழலாம். அந்த நேரத்தில் இவர்களுக்கு விஷயங்களின் மீது உள்ள ஈடுபாடு காரணமாக, அவ்விதம் யாராவது பேசிக் கொண்டிருந்தாலும் காதில் விழுந்திருக்காது. ஆனால் அந்தப் பாவத்திற்கான பலனை அனுபவிக்கும்போது, துயரத்தில் ஆழ்ந்து, “யாராவது இந்தத் துன்பத்தில் இருந்து தப்பிக்க உபாயம் கூறமாட்டார்களா”, என்று வருந்தும்போதே காதில் விழும்.

வ்யாக்யானம் – (நரகமே சுவர்க்கமாகும்) – அந்த நரகந்தான் போக பூமியோடொத்தது மாறி நினைப்பிடுமித்தனையிறே வேண்டுவது. விபீஷண விதேயம் ஹி லங்கைச் வர்யமிதம் க்ருதம் என்கிறபடியே ராவண ஸம்பந்தத்தாலே துஷ்ப்ரக்ருதிகளுக்கு ஸ்தாநமான லங்கையை ஸாத்விகர்க்கு ஸ்தாநமாக்கிக் கொடுத்தாற்போலே. இப்படி நரகந்தானே ஸ்வர்க்கமாம்படி பண்ணுகிறான் நாமியோவென்னில்; (நாமங்கள்) – திருநாம ப்ரபாவத்தாலே வந்ததாய்த்து. (நாமங்களுடைய நம்பி) – இத்திருநாமங்களை உடையவனாகையாலே புஷ்கலனாயிருக்குமவன். எல்லா நன்மைகளும் தன்னைப் பற்றிப் பெறவேண்டியிருக்கும் அவனுக்கும் எற்றத்தைப் பண்ணிக் கொடுக்கவற்றாயாய்த்து திருநாமமிருப்பது. தேவோ நாமஸஹஸ்ரவாந் என்றும், பேராயிரம் கொண்டதோர் பீடுடையன் என்றும் சொல்லக்கடவதிறே. நாரணன் தம்மன்னை நரகம்புகாள் நாராயண சப்த மாத்ரம். (அவனதூராரங்கமென்னாது) – இப்படிப் பூர்ணனானவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசம் கோயிலென்னும் இவ்வளவுகிடீர் இவனுக்கு நேர்த்தி. நேர்த்தி அல்பமாய், பலம் கனத்திருக்கச்செய்தேயும் இத்தைச் சொல்லவொட்டாத பாபத்தின் கனமிருந்தபடியென். இப்படித் திருநாமம் சொல்லுவார் அருகிருக்கலாகாதென்பாரும், அவர்களை நாட்டில் நின்றும் போகத் துரத்துவாரும், திருநாமம் சொன்னதுவே ஹேதுவாக ஹிம்ஸிப்பாருமாயிறே ஸம்ஸாரந்தானிருப்பது. ஒருவனுடைய அந்திம ஸமயத்திலே திருமந்த்ரத்தை உபதேஸித்து, இத்தைச் சொல்லாயென்ன; அவனும் ஆமாகில் சொல்லிப் பார்க்கிறேன் என்று இத்தை அநேகருஞ்சொல்லி, அது தன்னைச் சொல்லாதே செத்துப்போனான். இரண்டும் அக்ஷரம் ஒத்திருக்கச் செய்தே சொல்லவொட்டிற்றில்லையிறே பாப பலம்.

விளக்கம் – (நரகமே சுவர்க்கமாகும்) – அந்த நரகமே இன்பத்தை அளிக்கின்ற இடம் போன்று மாறியது. எப்படி என்றால், எம்பெருமானின் ஸங்கல்பத்தாலே ஆகும். இராமாயணம் யுத்தகாண்டம் - விபீஷண விதேயம் ஹி லங்கைச் வர்யமிதம் க்ருதம் – இலங்கை என்னும் செல்வம் விபீஷணனுக்கு உரியதாக ஆக்கப்பட்டது – என்று கூறுவது போன்று, இராவணன் ஆண்டபோது அனைத்து தீமைகளுக்கும் இருப்பிடமாக இலங்கை இருந்தது; ஆனால் விபீஷணன் தனது ஆட்சியில் இலங்கையை ஸாதுக்களின் இருப்பிடமாக மாற்றிக் கொடுத்தான் அல்லவோ? இது போன்றே, நரகமும் ஆனது. இப்படியாக நரகம் ஸ்வர்க்கமாக மாற்றும்படியாக எம்பெருமான் உள்ளானா என்றால் (நாமங்கள்) – அவனால் அல்ல, அவனுடைய திருநாமங்களின் மேன்மையால் மட்டுமே இப்படி மாறியது. (நாமங்களுடைய நம்பி) – இப்படிப்பட்ட திருநாமங்களைக் கொண்டவன் என்பதால் பூர்ணமாக உள்ளவன். அனைவரும், அனைத்து நன்மைகளையும் எம்பெருமானை அடைந்து பெறவேண்டியதாக உள்ளது; இப்படிப்பட்ட எம்பெருமானுக்கும் ஏற்றத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாக, அவனது திருநாமம் அல்லவோ உள்ளது? மஹாபாரதம் – தேவோ நாம ஸஹஸ்ரவாந் – ஆயிரம் திருநாமங்களைக் கொண்ட தேவதேவன் – என்றும், திருவாய்மொழி (9-3-1) – பேராயிரம் கொண்டதோர் பீடுடையன் – என்றும் கூறுவது காண்க. பெரியாழ்வார் திருமொழி (4-6-1) - நாரணன் தம்மன்னை நரகம்புகாள் – என்றும், ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் - நாராயண சப்த மாத்ரம் – நாராயணன் என்ற சொல் கொண்டு மட்டுமே வேதனைகளில் இருந்து தப்புகின்றனர் – என்றும் கூறியது காண்க. (அவனது ஊர் அரங்கம் என்னாது) – "இப்படியாக பரிபூர்ணமான எம்பெருமான் எப்போதும் வசிக்கின்ற தேசம் திருவரங்கம் பெரியகோயில்", என்று இவ்வளவு மட்டுமே இவர்களால் சொல்லப்பட வேண்டும். இப்படியாக செய்யவேண்டியது மிகவும் எளிதாக, ஆனால் இதனைக் கூடக் கூற இயலாமல் இவர்களின் பாவங்களின் பலம் உள்ளதே! இப்படி இவனது திருநாமங்களைக் கூறுபவர்களின் அருகில் இருக்கக்கூடாது என்று ஒதுங்குபவர்களும், இவனது திருநாமங்களைக் கூறுபவர்களை நாட்டைவிட்டே விரட்டவேண்டும் என்று எண்ணுபவர்களும், இவனது திருநாமங்களைக் கூறியதையே காரணமாகக் காட்டித் துன்புறுத்துபவர்களும் இந்த உலகில் உள்ளனரே! ஒருவன் மரணம் அடையும் நேரத்தில் அவன் அருகில் இருந்தவர்கள், அவனிடம் திருமந்த்ரத்தை உபதேஸித்து, அதனைக் கூறும்படி வேண்டினர். அவனும், "ஆகட்டும் பார்க்கலாம். முடிந்தால் சொல்கிறேன்", என்றான். இதனையே பலமுறை கூறினான் அல்லாமல்,

திருமந்த்ரத்தைக் கூறாமலேயே இறந்தான். அவன் கூறிய சொற்களும், திருமந்த்ரமும் ஒரே அளவாக உள்ளபோதிலும், அவனது பாவங்களின் பலம் அவனைத் திருமந்த்ரம் கூறவிடவில்லை.

வ்யாக்யானம் – (அயர்த்து வீழ்ந்து) – வகுத்தவன் திருநாமத்தை விஸ்மரித்து, விஷய ப்ரவணராய்க்கொண்டு தலைகீழாக விழுந்து, "மறந்தேன் உன்னை முன்னம்" என்றும், யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி என்றும் சொல்லக்கடவதிறே. (அளியமாந்தர்) - திருநாமம் சொல்லுகைக்கு யோக்யமான நாக்குப் படைத்த அருமந்த மநுஷ்யர். "தாமுளரே" என்கிற பாட்டையும், "நாவாயிலுண்டே" என்கிற பாட்டையும் சொல்லிக்கொள்வது. (கவலையுள் படுகின்றார் என்று) – துக்கத்தே அகப்படுவதே என்று. (அதனுக்கே கவர்கின்றேனே) – அதனுக்கே க்லேசப்படாநின்றேன் என்கிறார். "ஸுகரூபமான திருநாம ஸ்பர்சத்தாலே ஆநந்த நிர்ப்பரராயிருக்கைக்கு யோக்யரானவர்கள் துக்க பாகிகளாவதே!", என்றிறே இவர் க்லேசப்படுகிறது. அவதாரணத்தாலே எனக்குக் கரைதல், எனக்கும் பிறர்க்கும் கரைதல் செய்யவொண்ணாதபடி ஸம்ஸாரிகள் துக்கம் எனக்கு ஆற்றப் போகிறதில்லை என்கிறார். கவலை – துன்பம்.

விளக்கம் - (அயர்த்து வீழ்ந்து) – நமக்கு இயற்கையாகவே உறவினனாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் திருநாமத்தை மறந்தனர்; உலகவிஷயங்களில் ஈடுபாடு கொண்டு, அவற்றில் தலைகீழாக மூழ்கியுள்ளனர். இது மிகப்பெரிய துன்பம் என்பதை, பெரியதிருமொழி (6-2-2) - மறந்தேன் உன்னை முன்னம் - என்றும், காருடம் - யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி – அவனை ஒரு முஹூர்த்தம் எண்ணவில்லை என்றாலும் – என்று கூறியது காண்க. (அளிய மாந்தர்) – ஸ்ரீரங்கநாதனின் திருநாமம் கூறுவதற்காகத் தகுதியான நாக்கைப் பெற்றுள்ள மனிதர்கள். இங்கு இரண்டாம் திருவந்தாதி (21) – தாமுளரே – என்பதும், முதல் திருவந்தாதி (95) – நாவாயிலுண்டே – என்பதும் படிக்கத்தக்கன. (கவலையுள்படுகின்றார் என்று) – இப்படி இவர்கள் துக்கத்தின் பிடியில் அகப்படுகிறார்களே என்று. (அதனுக்கே கவர்கின்றேனே) – இதனைக் கண்டே நான் கவலைப்படுகிறேன். "சுகமே வடிவாக அவனது திருநாமம் உள்ளது. இதன் மூலமாக இவர்கள் தீண்டப்பட்டு, ஆநந்தம் என்னும் கடலில் மூழ்கி இன்பத்துடன் இருக்கலாம். இப்படி இருக்கும் தகுதி பெற்ற இவர்கள் துன்பத்தில்

மூழ்கினரே!", என்று இவர் கவலை கொள்கிறார். "அதனுக்கே" என்ற பதம் மூலம் - தனக்காகக் கவலைப்படுதல், தனக்கும் மற்றவர்களுக்கும் சேர்த்துக் கவலைப்படுதல் என்ற இரண்டும் செய்யாமல், ஸம்ஸாரிகள் படுகின்ற துயரம் என்னால் தாங்க இயலவில்லை – என்று உணர்த்துகிறார்.

13. எறியும் நீர் வெறிகொள் வேலை மாநிலத்து உயிர்கள் எல்லாம்
வெறிகொள் பூந்துளப மாலை விண்ணவர்கோனை ஏத்த
அறிவிலா மனிசர் எல்லாம் அரங்கம் என்று அழைப்பர் ஆகில்
பொறியில் வாழ் நரகம் எல்லாம் புல் எழுந்து ஒழியும் அன்றே.

பொருள் – இந்த உலகமானது அலைகள் வீசும் நீர், மாமிஸத்தின் நாற்றம் ஆகியவற்றுடன் கூடிய கடலால் சூழப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பெரிய உலகில் உள்ள மனிதர்கள் அனைவரும் – மிகுந்த நறுமணம், அழகு ஆகியவற்றை உடைய துளசிமாலையைச் சூடியுள்ளவனும், நித்யஸூரிகளின் நாதனும் ஆகிய பெரியபெருமாளைத் துதிப்பதற்காகவே உண்டாக்கப்பட்டனர். இதனைச் செய்யாத அறிவற்ற இவர்கள், "திருவரங்கம்", என்று மட்டுமே கூறினால் போதும். இதன் மூலமாக, புலன்களின் பிடியின் காரணமாக நரகம் போன்றுள்ள உலகங்கள் அனைத்தும், புல் முளைத்து அழிந்துவிடும் அன்றோ?

அவதாரிகை – ஸம்ஸாரிகளை நோக்கி ஹிதம் சொல்லுகைதான் அவர்களுக்கு அஸஹ்யமாமளவானவாறே, இவர்கள் துஷ்ப்ரக்ருதிகளென்று பாராதே, துர்க்கதியைப் பார்த்து, ஸ்வகதமாக "இவர்கள் ஸ்வரூபம் பகவதர்த்தமாயிருக்கிறபடியை அறிந்திலர்களேயாகிலும், ஒருபாதியாலன்றியே வாயாலே திருவரங்கம் என்பார்களாகில் ஸம்ஸாரம் கரம்பெழுந்து போமாகாதே!" என்கிறார்.

விளக்கம் – இப்படியாக ஆழ்வார் ஸம்ஸாரிகளை நோக்கிப் பலவிதமான நன்மை பயக்கும் சொற்களைக் கூறினார். ஆனால், அவை அனைத்தும் பலனற்றுப் போனது. ஆயினும் ஆழ்வார், இவர்கள் இத்தனை தாழ்வானவர்களாக உள்ளனரே என்று ஒதுக்காமல், அவர்களின் இழிந்த நிலையைக் கண்டார். தனக்குள்ளாக, "இவர்களின் ஸ்வரூபம் என்பது ஸ்ரீரங்கநாதனுக்காகவே உள்ளது என்பதை அறியாமல் உள்ளனர். அந்த ஞானம் அவசியம் இல்லை என்றாலும், வேறு எந்தவிதமான விதியும் இல்லாமல், மிகவும் சுலபமாக தங்கள் வாயால் "திருவரங்கம்" என்று கூறினாலே போதுமானதாகும். ஸம்ஸாரத்தில் இதனால் புல் முளைத்துப் போய்விடுமே", என்று வியக்கிறார்.

வ்யாக்யானம் – (எறியும் நீர்) – எறியா நின்றிருந்துள்ள நீரையுடைத்தாய், அஸாதாரணமான கந்தத்தையுமுடைத்தான கடலால் சூழப்பட்ட மஹாப்ருதிவியிலுள்ள சேதநவர்க்கமடங்கலும். "எறியுநீர்" என்றது த்ரிபாத் விபூதியிலே அஸங்குசிதமாக இருக்கைக்கு யோக்யரான சேதநர். "வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போல்" என்கிறபடியே க்ஷுபிதமான நீர் வெள்ளத்துக்குள்ளே இருக்கிற ஸங்கோசம் தோற்றுகைக்காக. "வெறிகொள்வேலை" என்றது சாத்தின திருத்துழாயின் பரிமளத்தை அநுபவிக்கைக்கு யோக்யரான சேதநர் ஸமுத்திரத்தினுடைய துர்க்கந்தத்துக்கு இலக்காயிருக்கிற அநர்த்தம் தோற்றுகைக்காக. (மாநிலம்) – பஞ்சாசத்கோடி விஸ்தீர்ணையான ப்ருதிவி. (உயிர்கள்) – தேஹஸம்பந்தமான வஸ்து கிடீர் என்கை. (எல்லாம்) – ஸ்வாதந்த்ர்யத்தையே முடிய நடத்தக்கடவதான தேவவர்க்கத்தோடு, அவர்களுக்குக் குடிமக்களான மநுஷ்ய வர்க்கத்தோடு வாசியற ஸகல சேதநரும்.

விளக்கம் – (எறியும் நீர்) – அலைகளை வீசி எறிகின்ற நீரைக் கொண்டதும், மீன்களின் நாற்றம் கொண்டதும் ஆகிய கடலால சூழப்பட்ட பரந்த உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும். "எறியும் நீர்" என்பதன் மூலம் பரமபதத்தில் ஸம்ஸார நெருக்கம் இல்லாமல் வாழ்கின்ற தகுதி பெற்ற சேதனர்கள் என்றார். பெரிய திருமொழி (11-8-5) - வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போல் – என்று கூறுவது போல், அலைகளால் நெருக்குண்டு நீர் வெள்ளத்தின் தவிக்கின்ற நரிகள் போல, ஸம்ஸாரத்தில் தவிப்பதாகக் கூறுகிறார். "வெறிகொள் மாலை" என்பதன் மூலம், ஸ்ரீரங்கநாதனின் இனிமையான நறுமணம் கமழும் துளசிமாலையின் நறுமணத்தை அனுபவிக்கும் தகுதி படைத்த இவர்கள், கடலின் மீன் நாற்றம் போன்ற ஸம்ஸாரத்தின் துர்நாற்றத்தை அனுபவித்தபடி

உள்ளனரே என்கிறார். (மாநிலம்) – ஐம்பதுகோடி யோஜனை பரப்பளவு கொண்ட இந்தப் பூமி. ஒரு யோஜனை என்பது 9 முதல் 13 கிலோமீட்டர்கள் ஆகும். (உயிர்கள்) – இந்த சரீர தொடர்பு நீங்கினால், ஸ்ரீரங்கநாதனின் ஸ்ரீகௌஸ்துபம் போன்று அவனுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கவல்ல தகுதி பெற்றவை அல்லவோ இந்த ஜீவன்கள். இவை இப்படி சிக்கிக் கொண்டனவே. (எல்லாம்) – இப்படி உள்ளவர்கள் யார் என்றால், தாங்கள் சுதந்திரமானவர்கள் என்று எண்ணும் தேவர்கள், அந்த தேவர்களுக்கு அடங்கி நடக்கும் மனிதர்கள்.

வ்யாக்யானம் – (வெறிகொள் பூந்துளப மாலை விண்ணவர் கோனை ஏத்த) – பரிமளத்தையும் செவ்வியையுமுடைத்தான திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதனாயிருக்கும் இருப்புக்குத்தோற்று நித்யஸூரிகள் ஏத்துமாபோலே இவர்களையும் ஏத்தவாய்த்துக் கண்டது. ஸ்ருஷ்டஸ்தவம் வநவாஸாய என்று இளையபெருமாளைப்போலே, ஸம்ஸாரிகளையும் முதலிலே ஸ்ருஷ்டித்தது தன்னை அநுபவிக்கைக்காகவாய்த்து.

விளக்கம் - (வெறிகொள் பூந்துளப மாலை விண்ணவர் கோனை ஏத்த) – சிறந்த நறுமணம் மற்றும் அழகு ஆகியவற்றை உடைய துளசிமாலையால் மேலும் அழகுடன் காணப்படும் ஸ்ரீரங்கநாதனின் அழகில் நித்யஸூரிகள் தோற்றுப்போய், அவனை வணங்கியபடி உள்ளனர். இவர்களைப் போன்று, அவனைத் துதித்தபடி இருப்பதற்கு அல்லவா ஸம்ஸாரிகள் படைக்கப்பட்டனர்? இராமாயணம் அயோத்யாகாண்டம் - ஸ்ருஷ்டஸ்தவம் வநவாஸாய – சுமித்ரை இலக்குவனிடம், “நீ வனவாஸம் செய்வதற்காகவே பிறந்தவன்” – என்றாள்; ஆக இராமனுடம் வனவாஸம் செய்வதற்காகவே இலக்குவன் அவதரித்தான். இது போன்று தன்னுடைய அழகை அனுபவித்து துதிப்பதற்காக அல்லவோ ஸ்ரீரங்கநாதன் அனைத்து உயிர்களையும் படைத்தான்?

வ்யாக்யானம் – ”இது ஜ்ஞாநப்ரதாநர் பெறும் பேறாயிருந்தது; அத்தனை அறிவில்லாத க்ஷுத்ர ஸம்ஸாரிகளுக்குக் கிட்டுமோ?”, என்னும் சங்கையிலே மேல் சொல்லுகிறது. (அறிவிலா மனிசரெல்லாம் அரங்கமென்றழைப்பராகில்) – மநுஷ்ய ஜந்மத்திலே பிறந்து

வைத்து, அறிவின்றிக்கே இருந்தார்களாகிலும்; திருவரங்க ப்ராவண்யம் வேண்டா, உக்திமாத்ரமே அமையும். "ஆகி" என்றது பாபப்ரசுரர்க்கு இதுதானும் ஸித்தியாது என்கை. (பொறியில் வாழ் நரகம்) – இந்த்ரியங்களுக்குக் குடிமக்களாய் வர்த்திக்கிற லீலாவிபூதி. எல்லா அவஸ்த்தையிலும் தப்பாதபடி தன் பக்கலிலே அகப்படுத்திக் கொள்ளவற்றாகையாலே, "பொறி" என்று இந்த்ரியங்களைச் சொல்லுகிறது. (நரகம்) – அவிவேகிகளுக்கு நரகம் யமனுடைய தண்டல்; அறிவுடையார்க்கு நரகம் ஸம்ஸாரம். "நன்றுமஞ்சுவன் நரகம் நானடைதல்" என்னக் கடவதிறே. (எல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே) – லீலாவிபூதி கட்டடங்கத் தரிசாய்ப்போமிறே.

விளக்கம் – "இவை அனைத்தும் ஞானம் நிறைந்தவர்களுக்கு மட்டுமே கிட்டும் பேறாக உள்ளது. இவை அறிவில்லாத, தாழ்வான ஸம்ஸாரிகளுக்குக் கிட்டுமா?", என்ற ஐயம் எழலாம். இதற்கான விடையை அருளிச் செய்கிறார். (அறிவிலா மனிசரெல்லாம் அரங்கமென்றழைப்பராகில்) – அறிவு பெறக்கூடிய மனிதப் பிறவி எடுத்த பின்னரும் அறிவற்றே இருந்தனர் என்றாலும், திருவரங்கத்தின் மீது அத்தனை ஈடுபாடு இல்லாமல் இருந்தாலும், "திருவரங்கம்" என்று கூறினாலே போதுமானது. "ஆகில்" என்று ஏன் கூறினார் என்றால், பாவங்களால் சூழ்ந்தவர்கள் இவ்விதம் "திருவரங்கம்" என்று கூடக் கூற இயலாது என்று கருத்து. (பொறியில் வாழ் நரகம்) – இந்த்ரியங்களின் பிடியில் சிக்கியுள்ள இந்த உலகத்து மக்கள். அனைத்து விதங்களாலும் தங்களிடம் தப்பிச் செல்ல இயலாதபடி புலன்கள் மக்களைச் சிக்க வைப்பதால், அவற்றை "பொறி" என்றார். (நரகம்) – அறிவற்றவர்களுக்கு யமலோகம் மட்டுமே நரகம் என்று தோன்றும். ஆனால், அறிவுள்ளவர்களுக்கு இந்த ஸம்ஸாரமே நரகமாகத் தோன்றும். திருவாய்மொழி (8-1-9) - நன்றுமஞ்சுவன் நரகம் நானடைதல் - என்றது காண்க. (எல்லாம் புல்லெழுந்தொழி யுமன்றே) – "திருவரங்கம்" என்று கூறினால் அனைவரும் பரமபதம் சென்றுவிடுவதால், இந்த உலகில் உயிர்கள் இல்லாமல் புல் முளைத்துவிடும் அல்லவா?

14. வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை

கொண்டல் மீது அணவும் சோலை குயிலினம் கூவும் சோலை

அண்டர்கோன் அமரும் சோலை அணிதிருவரங்கம் என்னா

மிண்டர் பாய்ந்து உண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கு இடுமின் நீரே.

பொருள் – வண்டுகளின் கூட்டங்கள் இனிமையாக ரீங்காரம் செய்தபடி உள்ள சோலைகள், மயில்கள் அழகாக ஆடியபடி உள்ள சோலைகள், மேல்பக்கமாக மேகங்கள் வந்து அணைத்துக் கொள்ளும்படியாக உள்ள சோலைகள், குயில்கள் "ஸ்ரீரங்கா" என்று கூவும்படியாக உள்ள சோலைகள், தேவர்களின் அதிபதியான ஸ்ரீரங்கநாதன் வாஸம் செய்யும்படியான சோலைகள் கொண்டதும், இந்த உலகிற்கே ஆபரணம் போன்று உள்ளதும் ஆகிய "திருவரங்கம்" என்ற திவ்யதேசத்தின் பெயரைக் கூட உச்சரிக்காத மூடர்கள் மேலே விழுந்து, அவர்கள் உண்கின்ற சோற்றை விலக்கி நாய்க்கு இடுவீர்களாக.

அவதாரிகை – பிறர் முகம் பார்த்துச் சொல்லியும், தம்மிலே சொல்லியும் இப்படி ஹிதம் சொன்னவிடத்திலும் அவர்கள் விமுகராகையாலே அவர்களை வெறுத்து, அவர்களோட்டை ஸஹவாஸத்தால் வந்த க்லேசம் தீர, கர்ப்பூர நிகரத்தை வாயிலே இடுவாரைப் போலே கோயிலை அனுபவித்து, "இப்படி தங்களுக்குச் சொல்ல ப்ராப்தமாயிருக்க இத்தை அநாதரிப்பதே!", என்று அவர்களை உபேக்ஷாவசனத்தைப் பண்ணி, இவர் பரோபதேசாத் நிவ்ருத்தராகிறார். இதுதான் ஸ்வாநுபவமாயிருக்க பரோபதேசமாத் தலைக்கட்டுகிறது; ஸத்துக்கள் அநுபவ ஜ்ஞாநம் பிறர்க்குக் கர்த்தவ்யமாகக் கடவதிறே.

விளக்கம் – ஸம்ஸாரிகளுக்கு நன்மை உண்டாக்கவல்ல விஷயம் குறித்து நேரடியாகக் கூறினார்; தனக்குத்தானே கூறிக்கொள்வது போன்றும் கூறினார். ஆனாலும் அவர்கள் இவர் கூறியதை செவிமடுக்கவில்லை. அவர்கள் எம்பெருமானிடம் ஈடுபடாமல் இருப்பதைக் கண்டு வெறுப்பு கொண்டார். வாயில் உண்டான கசப்பு நீங்க கர்ப்பூரக்கட்டியைச் சேர்த்துக் கொள்வது போன்று, இவர்களுக்கு செய்யப்பட்ட வீணான உபதேசம் காரணமாக உண்டான துன்பம் நீங்க, திருவரங்கம் பெரியகோயிலை அனுபவித்து நின்றார். மேலும், "இப்படிப்பட்ட உயர்ந்த கோயில் இவர்கள் அனுபவிப்பதற்கு ஏற்றபடி இருக்கும்போது, இதனில் ஈடுபடாமல் உள்ளனரே", என்று அவர்களை இகழ்ந்து கூறினார். நான்காம் பாசுரம் தொடங்கி மற்றவர்களுக்காக இதுவரை செய்து வந்த உபதேசங்களை நிறுத்துகிறார். இந்தப் பாசுரம் தனக்குத்தானே கூறிக்கொள்வதாக உள்ளபோதிலும், மற்றவர்களுக்காகச்

செய்யப்படும் உபதேசமாகவே எடுக்கவேண்டும். நல்லவர்களின் அனுபவச் சொற்கள் அனைவராலும் பின்பற்ற ஏற்றதாகவே இருக்கும் அல்லவோ?

வ்யாக்யானம் – (வண்டினம் முரலும் சோலை) – கிண்ணகத்தில் இழிவார் திரள்திரளாக இழியுமாபோலே, மது வெள்ளத்தாலே வண்டுகள் திரள்திரளாகவாய்த்து இழிவது. கழுத்தே கட்டளையாக மதுபாநத்தைப் பண்ணி, புக்க த்ரவ்யம் இருந்தவிடத்திலிருக்க வொட்டாமையாலும், தான் வாய்விடமாட்டாமையாலும் ஆளத்திவையா நிற்குமாய்த்து. முக்தர் திரள்திரளாக பகவதநுபவம் பண்ணி, போக்குவீடாக ஸாமகாநம் பண்ணிக் களிக்குமாபோலே, இவ்வூரில் திர்யங்களுங்கூடக் களித்து வர்த்திக்குமென்கை. (மயிலினம் ஆலும் சோலை) – வண்டுகளுடைய த்வநியைக் கேட்டும், சோலையின் பசுமையைக் கண்டும், வர்ஷாவில் மேகங்களாக நினைத்து, இனமினமாக மயில்களானவை ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணாநிற்கும். ஆலுதல் – ஆடுதலும் களித்தலும். (கொண்டல் மீது அணவும் சோலை) – இவற்றினுடைய ஆலிப்பையும், சோலைப் பரப்பையும் பசுமையையும் கண்டு, மேகங்களானவை ஸமுத்ரமாகக் கொண்டுபடியா நிற்கும். அன்றிக்கே, மேகபதத்தளவும் செல்லத் திருச்சோலைதான் ஓங்கியிருந்தபடியைச் சொல்லிற்றாகவுமாம். இவ்வூரில் பொழிலும் மயல்மிகு பொழிலாயிருக்கிறபடி. திருமலையில் பொழிலின் இருட்சியாலே, புக்கவிடமும் புறப்பட்ட இடமும் தெரியாது; இவ்வூரில் பொழில் வஸ்துவை வஸ்த்வந்தரமாக ப்ரமிப்பிக்கும். (குயில் இனம் கூவும் சோலை) – கீழ்ச் சொன்னவற்றின் வ்யாபாரமின்றிக்கே, குயிலினங்களானவை இருந்தவிடத்திலேயிருந்து, தாந்தாமிருந்த ப்ரதேசத்தில் குளிர்த்தியாலே அந்யோந்யம் அழையா நின்றன.

விளக்கம் - (வண்டினம் முரலும் சோலை) – நதியில் நீராட வருபவர்கள் கூட்டம் கூட்டமாக நீராடி நிற்பது போன்று, திருவரங்கத்தின் சோலைகளில் உள்ள தேன் வெள்ளத்தில் வண்டுகள் கூட்டம் கூட்டமாக சுற்றியபடி உள்ளன. கழுத்துமுட்ட அவை தேனைப் பருகி, அதன் காரணமாக இருக்கும் இடத்தில் நிற்க முடியாமலும், விருப்பப்படி ஓசை எழுப்ப இயலாமலும், ரீங்காரம் செய்தபடி உள்ளன. முக்தி பெற்றவர்கள் பரமபதம் சென்று ஸர்வேச்வரனைக் கண்டுகளித்த பின்னர், அதன் விளைவாக ஸாமகானம் பண்ணி நிற்பார்கள். அது போன்று, இங்குள்ள வண்டுகள், அரங்கனைக் கண்டதன் விளைவாக ரீங்காரம் செய்தபடி உள்ளன. (மயிலினம் ஆலும் சோலை) – இங்குள்ள

மயில்கள் வண்டுகளின் ரீங்காரத்தைக் கேட்கின்றன, சோலைகளின் பசுமையைக் காண்கின்றன. இவற்றைக் கண்டவுடன், மழைக்கால மேகங்கள் வந்துவிட்டன என்று எண்ணி, மிகவும் மகிழ்வுடன் கூட்டமாக ஆடி நிற்கின்றன. ஆலுதல் என்றால் ஆடுதல் மற்றும் களித்தல். (கொண்டல் மீது அணவும் சோலை) – வண்டுகளின் ரீங்காரம், மயில்களின் ஆட்டம், சோலைகளின் பசுமை ஆகியவற்றை ஒருசேரக் கண்ட மேகங்கள், திருவரங்கத்தை பெரிய ஸமுத்ரமாக எண்ணி, நீர் பருகும்விதமாக சோலைகளை அணைத்து நிற்கின்றன. அல்லது மேகக் கூட்டம் வரை ஓங்கி நிற்கும் சோலைகள் என்றும் கொள்ளலாம். திருவாய்மொழி (2-10-3) – மயல்மிகு பொழில் – என்று திருமாலிருஞ் சோலையைக் கூறியது போன்று இங்கும் உள்ளது. திருமாலிருஞ்சோலையில் உள்ள பொழில்களின் அடர்த்தி காரணமாக புறப்பட்ட இடமும், சென்று சேர்ந்த இடமும் தெரியாது; இங்குள்ள பொழில்கள், மயில்களுக்கும் மேகங்களுக்கும் ஒன்றை மற்றொன்றாக நினைக்கும்படி உள்ளன என்றார். (குயில் இனம் கூவும் சோலை) – கீழே கூறப்பட்ட வண்டுகள் முதலானவை போன்று, குயில்களும் தாங்கள் இருக்கின்ற இடத்தைவிட்டு அகலாமல் உள்ளன. தாங்கள் உள்ள இடத்தின் குளிர்ச்சி காரணமாக, ஒன்றை மற்றொன்று அழைத்தபடி உள்ளன.

வ்யாக்யானம் – (அண்டர்கோன் அமரும் சோலை) – வண்டு, மயில், கொண்டல், குயில் இவற்றோபாதி இவனும் சோலைப்பரப்பையும் போக்யதையும் கண்டு, விடமாட்டாதே கிடக்கிறானாய்த்து. ரக்ஷ்யபூதரான ஸம்ஸாரிகளுக்கு ப்ராப்யமானவோபாதி ரக்ஷகனான ஈச்வரனுக்கும் ப்ராப்யமாய்க்காணும் இத்தேசமிருப்பது. (அண்டர்கோன்) – அண்டாந்தர் வர்த்திகளை நிர்வஹிக்கைக்காக என்னுதல்; பர வ்யூஹ விபவ ஸ்தாநங்களை விஸ்மரித்து நித்யவாஸம் பண்ணுகிற தேசம் என்னுதல். (சோலை அணி திருவரங்கம்) – சோலையை ஆபரணமாகவுடைத்தான கோயில் என்னுதல். ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான கோயில் என்னுதல். (திருவரங்கம் என்னா மிண்டர்) – அவன் தங்களுக்காக வந்து கண்வளராநிற்க, அவன் இருந்த தேசத்தை வாயாலே சொல்லவுங்கூட மாட்டாத மூர்க்கர்; மூர்க்கராகிறார் – விழுக்காடறியாதவர்கள். அதாகிறது – நரகவாஸம், கர்ப்பவாஸம் முதலானவை பிடரியைப் பிடித்துக்கொண்டு நிற்க, கேவலம் தேஹபோஷணபரராய் இருக்குமவர்கள்.

விளக்கம் - (அண்டர்கோன் அமரும் சோலை) – திருவரங்கத்தில் உள்ள சோலையின் பரப்பு மற்றும் இனிமை ஆகியவற்றைக் கண்டு வண்டுகள், மயில்கள், மேகங்கள் மற்றும் குயில்கள் ஆகியவை அகலாமல் திருவரங்கத்திலேயே வசிக்கின்றன. இது போன்றே அரங்கனும் இங்கேயே அகலாமல் உள்ளான். ஸ்ரீரங்கநாதனால் காப்பாற்றப்படும் ஸம்ஸாரிகளுக்குப் புகலிடமாக இந்த இடம் உள்ளது போன்றே, அவர்களைக் காக்கின்ற ஸ்ரீரங்கநாதனுக்கும் இந்த இடம் புகலிடமாக உள்ளது. (அண்டர்கோன்) – அண்டத்தில் வசிக்கின்ற ஸம்ஸாரிகளை நியமிப்பதற்காக இங்கு உள்ளான். பர வ்யூஹ விபவ இருப்பிடங்களை மறந்துவிட்டு, நித்யவாசம் செய்யும் இடம் இதுவாகும். (சோலை அணி திருவரங்கம்) – சோலைகளையே தனது ஆபரணமாகக் கொண்டது திருவரங்கம் ஆகும். ஸம்ஸார மண்டலத்துக்கே ஆபரணம் என்றும் கொள்ளலாம். (திருவரங்கம் என்னா மிண்டர்) – இவன் தங்களுக்காக இறங்கிவந்து இங்கு கிடக்கும்போது, இவன் உள்ள திருவரங்கத்தின் பெயரைத் தங்கள் வாயால் சொல்லவும் மாட்டாத மூடர்கள். மூர்க்கர் என்றால் தங்களது தற்கால நிலை, எதிர்கால நிலை அறியாதவர்கள். அதாவது, நரகவாஸம், கர்ப்பவாஸம் போன்ற துன்பங்கள் கழுத்தைப் பிடித்தபடி உள்ளபோதும் தங்களது உடலைப் பேணுவதிலேயே குறிக்கோள் கொண்டவர்கள்.

வ்யாக்யானம் – (பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கிடுமின் நீரே) – திருவரங்கமென்னமாட்டாத மூர்க்கராயிருப்பார் ஜீவிக்கிறது வழியல்லாவழியே அபஹரித்து ஜீவிக்கிறார்களித்தனை; அத்தை விலக்கி நாய்க்கு இடுங்கோள். தங்களை உத்தேசித்து வந்து கண்வளர்ந்தருளுகிற அந்த உபகாரத்தை அறியாத க்ருதக்நர் ஜீவிக்கிற ஜீவனத்தை விலக்கி, ஒரு நாள் ஒரு பிடி சோறிட்டவன் வாசலைப் பற்றிக் கிடக்கும் அத்தனை க்ருதஜ்ஞமான நாய்க்கு இடுங்கோள். இதுதான் யோ ஸாதுப்யோ அர்த்தமாதாய ஸாதுப்ய: ஸம்ப்ரயச்சதி என்னும் நிர்வாஹகரைக் குறித்திறே சொல்லுகிறது.

விளக்கம் - (பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கிடுமின் நீரே) – திருவரங்கம் என்று கூறாத நன்றி கெட்டவர்கள், ஸ்ரீரங்கநாதனின் செல்வங்களைத் திருடியே வாழ்பவர்கள் ஆவர். அப்படியாக உள்ள அவர்களின் சோற்றைப் பிடுங்கி நாய்க்கு இடுங்கள் என்று கூறுகிறார். தங்களைக் கரையேற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் பெரியகோயிலில் சயனித்துள்ள ஸ்ரீரங்கநாதனின் கருணையை அறியாத நன்றி

கெட்டவர்களின் உணவைப் பறித்து, ஒருவேளை ஒரு பிடி உணவு இட்டாலும் அவன் வீட்டு வாசலில் நிற்கும் நன்றியுள்ள நாய்க்கு இடுங்கள் என்றார். யாரிடம் இப்படிக் கூறுகிறார் என்றால், யோ ஸாதுப்யோ அர்த்தமாதாய ஸாதுப்ய: ஸம்ப்ரயச்சதி – யார் ஒருவர் தீயவர்களிடமிருந்து பொருளை எடுத்து நல்லவர்களிடம் கொடுக்கிறாரோ – என்னும்படி உள்ள திருமங்கையாழ்வாரைப் போன்றவர்களிடம் கூறுகிறார்.

15. மெய்யர்க்கே மெய்யனாகும் விதியிலா என்னைப்போல
பொய்யர்க்கே பொய்யனாகும் புட்கொடி உடைய கோமான்
உய்யப்போம் உணர்வினார்கட்கு ஒருவன் என்று உணர்ந்த பின்னை
ஐயப்பாடு அறுத்துத் தோன்றும் அழகனூர் அரங்கம் அன்றே.

பொருள் - கருடனைக் கொடியாகக் கொண்ட எம்பெருமான், என்னைப் போன்று பல காலம் பகவத்விஷய ஈடுபாடு கிடைக்காமல் ஏங்குபவர்களுக்கு தனது ஸ்வரூபத்தை உள்ளபடி காட்டிக்கொடுப்பான். அவனத் தவிர்ந்த உலக விஷயங்களில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு தனது ஸ்வரூபத்தை மறைத்துக்கொள்வான். பிழைக்கும் வழி அறியவேண்டும் என்ற அறிவு உண்டாகி, "ஈச்வரன் ஒருவன் உள்ளான்", என்று அறிந்தவர்களின் ஐயங்களை நீக்கிக் காட்சி அளிப்பான். இப்படியாக தனது அழகு மூலம் அனைத்து உலகங்களையும் அடிமைப்படுத்தும் அழகியமணவாளன் உறையும் ஊரானது திருவரங்கம் ஆகும்.

அவதாரிகை – முதல் மூன்று பாட்டாலே ஸ்வலாபத்தைப் பேசி, அநந்தரம் பதினொரு பாட்டாலே பரோபதேசம் பண்ணி, அதுதன்னை ஸம்ஸாரிகள் ஸ்வீகரிக்காமையாலே அவர்கள்பக்கல் நின்றும் கால்வாங்கினாராய் நின்றார் கீழ்; "இவர்களில் அந்யதமனாயிருந்துள்ள என்னைப் பரோபதேசம் பண்ண வல்லேனாம்படி ஸ்வவிஷயத்தில் ஸம்சய நிவ்ருத்தி முதலாகப் பரமபக்தி பர்யந்தமாகப் பிறப்பிப்பதே", என்று பெரியபெருமாள் தமக்கு நிர்ஹேதுகமாகப் பண்ணின மஹோபகாரத்தை மேல் பத்து பாட்டாலே அருளிச் செய்கிறார். இதிறே க்ருதஜ்ஞருடைய ஸ்வபாவமிருக்கும்படி. "என்னைத் தீமனங் கெடுத்தாய் உனக்கென் செய்கேன்", என்னா நிற்பார்களிறே. இப்பாட்டில் அத்வேஷம் பிறந்தவளவிலே தன் படிகளையெல்லாம் காட்டிக் கொடுக்குமென்று, தானும் ஒருவன்

உளன் என்றறிந்தவளவிலே ஸம்சயநிவ்ருத்தியைப் பண்ணிவைக்குமென்று, இவ்வர்த்தத்தை எனக்கு அத்வேஷம் பிறந்தவளவிலே காட்டித்தர அநுபவிக்கப்பெற்றேன் என்கிறார்.

விளக்கம் – முதல் மூன்று பாசுரங்கள் மூலம் தான் பெற்ற பலன் என்ன என்பதைக் கூறினார். அதன் பின் உள்ள பதினொரு பாசுரங்கள் மூலம், மற்றவர்களுக்கு உபதேசம் செய்தார். அந்த உபதேசங்களை ஸம்ஸாரிகள் ஏற்றுக் கொள்ளாமல் உள்ளதைக் கண்டார். இதனால் கடந்த பாசுரத்தில் அவர்களிடமிருந்து தனது சிந்தையை எடுத்துக்கொண்டார். இனிவரும் பத்து பாசுரங்கள் மூலம், "ஸம்ஸாரிகளில் ஒருவனாக நான் உள்ளபோதும், அவர்களுக்கு உபதேசம் செய்யும்படியாக என்னை மாற்றினான்; தனது (பெரியபெருமாள்) விஷயத்தில் எனக்கு இருந்த சந்தேகங்களை நீக்கினான்; பரமபக்தி உண்டாவதுவரையிலான பல உதவிகளைச் செய்தான்", என்று பெரியபெருமாள் எந்தவிதமான காரணமும் இன்றித் தனக்கு உதவி செய்ததை வியந்து அருளுகிறார். செய்ந்நன்றி மறக்காமல் உள்ளவர்களின் தன்மை இப்படியாக அல்லவா இருக்கும்? நம்மாழ்வார் (2-7-8) - என்னைத் தீமனங் கெடுத்தாய் உனக்கென் செய்கேன் – என்றார் அல்லவோ? அத்வேஷம் பிறந்தவுடனேயே (அத்வேஷம் என்பது எம்பெருமான் நமக்கு உதவ முற்படும்போது, அதனைத் தடுக்காமல் ஏற்றுக் கொள்வதாகும். ஒரு சிலர் - அத்வேஷம் என்பது தனக்காக வாழும் வாழ்க்கையைத் தவிர்த்து, எம்பெருமானுக்காகவே வாழ்தல் – என்றும் கூறுவர்) அவன் தனது பெருமைகளை விளங்கச் செய்வான் என்றும்; அவன் உள்ளான் என்று அறிந்தவுடனேயே சந்தேகங்களை நீக்கிவிடுவான் என்றும்; எனக்கு அத்வேஷம் பிறந்தவுடன் தனது பெருமைகளை உணர்த்த, நான் அவற்றை அனுபவித்தேன் என்றும் இந்தப் பாசுரத்தில் அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (மெய்யர்க்கே மெய்யனாகும்) – இங்கு மெய் என்று சொல்லுகிறது பொய் தவிர்ந்த மாத்ரமான அத்வேஷத்தையாய்த்து. இவன்பக்கலுள்ளது அத்வேஷமானாலும் அவன் இவன்பக்கல் இருக்கும்படியென்? என்னில் – (மெய்யனாகும்) – மெய்யான பரிமாற்றமுடையார் திறத்திலிருக்கக்கடவ படிகளைக் கொண்டு இவன்பக்கலிலே இருக்கும். அதாகிறது – தன்படிகளை அடங்க இவனுக்குக் காட்டிக்கொடுக்கும். இரண்டிடத்திலும் சப்தம் ஒத்திருக்க, இது அர்த்தமாகிறபடி

எங்ஙனே என்னில் – குண ப்ரகரணமாகையாலும், ஸமஸ்த கல்யாணகுணாத்மகனுக்கு இது ஓரேற்றமாகச் சொல்லவொண்ணாமையாலும், இம்மாத்ரமே பற்றாசாக ரக்ஷிக்கைக்கு அடியான ஸ்வாபாவிக ஸம்பந்தமுண்டாகையாலும், அவாப்த ஸமஸ்தகாமனாகையாலே இதுக்கு மேல் வேண்டாதபடி நிரபேக்ஷனாயிருக்கையாலும், இதுதான் ஸம்ஸாரிகளிலே சிலர்க்கு ஸம்பாவிதமாகையாலும், ஈச்வரனுக்குக் குற்றமில்லாமையாலும், சப்தத்தை நெருக்கி அர்த்தம் சொல்லுகிறோம். இன்னமும் கண்ணழிவற்ற மெய்யராய்ப் பரிமாருவார் நித்ய ஸூரிகளே ஆகையாலும், அந்த மெய் ஸம்ஸாரிகள்பக்கல் ஸம்பவியாமையாலும், இனித்தான் ஸம்ஸாரிகள் பக்கலுள்ளதொன்றாலே பேறாகவேண்டியிருக்கையாலும், மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் என்கிற தர்மிக்ராஹக ப்ரமாணத்தோடு சேருகையாலும், இதுவே அர்த்தமாக வேணும். இந்த அத்வேஷத்தை ஸாதநமாக்கவொண்ணாதிறே; சேதநனாகையாலே இந்த ருசி ஸ்வரூபாந்தர்பூதமாகையாலும், அநுபவ வேளையிலே உள்ளதொன்றாகையாலும் ஸாதனமாகமாட்டாது.

விளக்கம் – (மெய்யர்க்கே மெய்யனாகும்) – இங்கு மெய் என்று கூறுவது, பொய் தவிர்ந்த அத்வேஷமாகும். சேதனனிடம் உள்ளது அத்வேஷமேயானாலும், எம்பெருமான் இவனிடம் எப்படி உள்ளான் என்றால்.. (மெய்யனாகும்) – உண்மையான அடியார்களிடம் எப்படி இருப்பானோ அது போன்று அத்வேஷமுடைய இவனிடமும் இருப்பான். தனது ஸ்வரூப, ரூப, குண, விபூதிகளை இவனுக்கும் உணர்த்தியபடி இருப்பான். மெய் என்னும் சொல் இரண்டு இடங்களிலும் பொதுவாக இருக்க, இருவேறு பொருளை எப்படி உரைக்கலாம்? இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந்த ப்ரகரணம் (context) எம்பெருமானின் கல்யாணகுணங்களைக் கூறுவதால் இப்படி இரண்டு பொருள் கொள்ளலாம்; அனைத்துவிதமான கல்யாண குணங்களும் கொண்ட எம்பெருமானுக்கு அத்வேஷம் மட்டுமே ஒரு பெருமை என்று கூற இயலாது; அத்வேஷத்தை மட்டுமே கொண்டு சேதனனை காப்பாற்றியாகவேண்டும் என்னும்படியாக எம்பெருமானுக்கும் இவனுக்கும் இயற்கையாகவே ஸம்பந்தம் உண்டு; எம்பெருமான் அனைத்து விருப்பங்களும் இயல்பாகவே நிறையப் பெற்றவன் என்பதால், சேதனனிடம் அத்வேஷத்திற்கு மேல் எதனையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை; ஸம்ஸாரத்தில் உள்ள பல ஜீவன்களுக்கு இப்படிப்பட்ட அத்வேஷம் கூட பிறக்காது, சிலருக்கு மட்டுமே உண்டாகும்; அத்வேஷத்தை மட்டுமே

கைக்கொண்டு சேதனனைக் காப்பாற்றுதல் என்பது எம்பெருமானுக்குப் பெருமையே அல்லாமல் தோஷம் அல்ல. இப்படியாக பலவிதமான காரணங்களால் “மெய்” என்ற பதத்திற்கு இரண்டு பொருள்கள் கூறப்பட்டன. மேலும் தோஷம் இல்லாத மெய்யர்களாக எம்பெருமானுக்குத் தொண்டு செய்பவர்கள் நித்யஸூரிகள் மட்டுமே ஆவர்; இப்படிபட்ட மெய்யான தன்மை ஸம்ஸாரிகளிடம் உண்டாக இயலாது; ஸம்ஸாரிகளிடம் உண்டாகக்கூடிய ஏதோ ஒன்றால் மட்டுமே மோக்ஷம் கிடைக்கும்படியாக இருக்கவேண்டும்; மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் – நண்பன் என்னும் வேஷத்தில் வந்தாலும் கைவிடமாட்டேன் – என்று எம்பெருமானே அருளிச்செய்தான். ஆகவே இந்தக் காரணங்களால் அத்வேஷம் என்னும் மெய் மட்டுமே கொண்டவர்களுக்கு எம்பெருமான் மெய்யை உடையவனாக உள்ளான் என்று பொருள் கொள்ளவேண்டும். ஆனால் அத்வேஷத்தை மோக்ஷ ஸாதனமாகக் கொள்ள இயலாது. தனக்காக வாழ்வதை நீக்கி அவனுக்காக வாழவேண்டும் என்னும் ஆசை, அறிவுள்ள ஒருவனின் ஸ்வரூபத்திலேயே அடங்கிவிடுகிறது. பரமபதத்தில் எம்பெருமானை அனுபவிக்கும்போதும் இந்த எண்ணம் இருக்கும். ஆகவே இது மோக்ஷ ஸாதனமாகாது.

வ்யாக்யானம் – (பொய்யர்க்கே பொய்யனாகும்) – மெய்யென்று பேரிடலாவதொரு பொய் இவ்வாச்ரயத்தில் இனி உண்டாகமாட்டாதென்று தோற்றினால், பின்னை கண்ணநீரோ டேயாய்த்து கால் வாங்குவது. ஸர்ப்பதஷ்டனை நெற்றியில் கொத்திப்பார்த்தால் பசையில்லையாகில் ம்ருதனென்று மீளுமோபாதி, இவன்பக்கல் உஜ்ஜீவன ஹேதுவில்லையென்று ஈடுபாட்டோடேயாய்த்து மீளுவது. “மெய்யர்க்கே” என்கிற அவதாரணத்தாலே அத்வேஷ மாத்ரத்தையே சொல்லுகிறது. “பொய்யர்க்கே” என்கிற அவதாரணம் மெய்க்கு ப்ரஸங்கமில்லாத பொய்யரைச் சொல்லுகிறது. மெய்யென்று சொல்லுகிறது ஸத்யத்தை. ஸத்மென்கிறது – பகவத்விஷயத்தைப் பற்றின அறிவை. “பொய்” என்று சொல்லுகிறது – பகவத்வ்யத்ரிக்தமான பதார்த்தங்களை விஷயீகரித்த ஜ்ஞாநத்தை.

விளக்கம் – (பொய்யர்க்கே பொய்யனாகும்) – மெய் என்று கூறும்படியாக இருப்பதாகவும், உண்மையில் பொய் என்று கூறும்படியாக இருக்கின்ற அத்வேஷம் ஒருவனிடம் இனிமேல் உண்டாகாது என்று எம்பெருமான் அறிகின்ற நேரத்தில், மிகுந்த வருத்தத்துடன் அவனை விட்டு அகன்று செல்கிறான். பாம்பால் கொத்தப்பட்ட ஒருவனின் நெற்றியில் கொத்திப் பார்த்து, அங்கு நீரில்லை என்றால், “இவன் மரணம்

அடைந்துவிட்டான்", என்று கூறுவது வழக்கம். இது போன்று மேலே கூறப்பட்டவனின் விஷயத்தில் எம்பெருமான், "இனி இவனைக் கரையேற்ற வழியில்லை", என்று எண்ணியபடி, உண்மையான வருத்தத்துடன் செல்கிறான். "மெய்யர்க்கே" என்பதில் உள்ள "ஏ" என்னும் ஓசை, அத்வேஷத்தைக் கூறுகிறது. "பொய்யர்க்கே" என்பதில் உள்ள "ஏ" என்னும் ஓசை, உண்மை என்று கூறவல்ல பொய் இல்லாத பொய்யர்களைக் குறிக்கிறது.மெய் என்பது ஸத்யத்தைக் குறிக்கும். ஸத்யம் என்றால் எம்பெருமானைப் பற்றிய ஞானத்தைக் குறிக்கும். "பொய்" என்றால் எம்பெருமானைத் தவிர்த்த உலக விஷயங்கள் குறித்த ஞானம் ஆகும்.

வ்யாக்யானம் – மெய்யர்க்கே மெய்யனாய்ப் பொய்யர்க்குப் பொய்யனாய்ப் போந்தமை எங்கே கண்டோமென்னில் – (என்னைப் போல) – நான் நெடுநாள் தன்பக்கல் வைமுக்யம் பண்ணிப் போந்தவிடத்தில் என்னைக் கிட்டமாட்டாதே நின்றான்; எனக்கு அத்வேஷம் பிறந்தவளவிலே மேல்விழுந்து விஷயீகரித்தான். இவை இரண்டும் என்பக்கலிலே கண்டேன். (விதியிலாவென்னை) – அவனுடைய சீலம் இதுவாயிருக்க, அநாதிகாலம் விஷயாந்தர ப்ரவணனாய் பகவத்விஷய விமுகனாய்ப் போந்த பாஹ்யஹீநனென்று முன்பு இழந்த இழவுக்கு வெறுக்கிறார். "பழுதே பல பகலும் போயின" என்று பெற்ற பேற்றிற் காட்டில் இழந்த இழவே மேற்படும்படியிறே இவ்விஷயத்தில் கைவைத்தார்படி இருப்பது. நிந்தித: ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே என்னக்கடவதிறே. இப்படி மெய்யென்று பேரிடலாவதொரு பொய்யைக் கொண்டு விஷயீகரிக்கிறவனை தான் ஆளில்லாதானொருவனோவென்னில், (புட்கொடியிடைய கோமான்) – மெய்யான பரிமாற்றத்தையுடையார் அநேகருடைய படிகளை ஒருவன் செய்யவல்லனாம்படி சமைந்தார் அநேகரையுடையானொருவனாய்த்து. "கொடி" என்று தாஸஸ்ஸகா வாஹநம் இத்யாதிகளுக்கு உபலக்ஷணம். நிவாஸ சய்யா இத்யாதி. (கோமான்) – அயர்வறுமமரர் களதிபதியாகையாலே மேனாணிப்பையுடையனாயிருக்குமவன். ஸம்பந்நராயிருக்கு மவர்களேயாகிலும் தநலோபத்தாலே ஒரு காசு விழுந்தவிடத்தே போய்த் தேடாநிற்பர்க ளாய்த்து, தந்தாம் வஸ்துவை விடமாட்டாமையாலே.

விளக்கம் – மெய்யர்க்கு மெய்யனாகவும், பொய்யர்க்கு பொய்யனாகவும் எம்பெருமான் நின்றதை எங்கு காணலாம் என்றால் – (என்னைப்போல) – என்னிடமே காணலாம்

என்றார். எல்லையற்ற காலம் உலகவிஷயங்களில் ஈடுபட்டு, தன்னிடம் ஈடுபடாமல் பொய்யனாக நின்றேன்; அவனும் பொய்யனாக என் அருகில் வராமலேயே நின்றான்; எனக்கு அத்வேஷம் பிறந்தவுடன், ஓடி வந்து, என்னை ஆட்கொண்டான். ஆக இரண்டையும் என்னிடமே காணலாம். (விதியிலா என்னை) – "இவனுடைய எளிமை இப்படிப்பட்டதாக இருந்தபோது, எல்லையற்ற காலங்கள் உலகவிஷயங்களில் மட்டுமே ஈடுபட்டு, பகவத்விஷயத்தில் ஈடுபடாமல் நின்ற துர்பாக்யசாலி", என்று தான் இதுவரை இழந்த பேற்றை எண்ணி வருந்துகிறார். முதல் திருவந்தாதியில் (16) – பழுதே பல பகலும் போயின – என்று பெற்ற பேற்றின் மூலம் கிட்டிய மகிழ்வைக் காட்டிலும் எல்லையற்ற காலம் இந்தப் பேற்றை இழந்த காரணத்தால் உண்டாகும் வருத்தமே அதிகமாக உள்ளது என்றார். இராமாயணம் - நிந்தித: ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே – யார் இராமனைக் காண்பதில்லையோ, யாரை இராமன் காண்பதில்லையோ, அவன் உலகத்தாரால் நிந்திக்கப்பட்டபடி வாழ்கிறான் – என்று கூறியது காண்க. இப்படியாக மெய் என்று கூறும்படியாக உள்ள பொய்யைக் கொண்டு சேதனர்களை ஆள்பவன், தனக்கு வேறு ஆள் கிட்டாமையாலே இப்படிச் செய்கிறானோ என்றால் – (புட்கொடி உடைய கோமான்) – மெய்யாகவே கைங்கர்யம் செய்பவர்கள் பலர் சேர்ந்து செய்கின்றவற்றை ஒருவரே செய்யலாம்படியுள்ள நித்யஸூரிகள் எண்ணற்று உள்ளபோதும், அத்வேஷம் மட்டுமே தன்மையாகக் கொண்ட என்னை எடுத்துக் கொண்டானே என்று வியக்கிறார். "கொடி" என்றால் ஸ்தோத்ர ரத்னம் (41) – தாஸஸ்ஸகா வாஹநம் – நண்பனும், வாகனமும் – என்பதற்கேற்ப பலவிதமாக கருடன் செய்கின்ற கைங்கர்யங்கள் அனைத்தும் கூறப்பட்டன. ஸ்தோத்ர ரத்னம் (40) – நிவாஸ சய்யா – படுக்கையாகவும் – என்பதற்கேற்ப ஆதிசேஷன் முதலான பல நித்யஸூரிகள் சேர்ந்து செய்கின்ற செயல்களை ஒருவரே செய்யும்படியாக அல்லவோ நித்யஸூரிகள் உள்ளனர். (கோமான்) – அயர்வறும் அமரர்கள் அதிபதியாக உள்ளதால் இப்படி இருக்கிறான். இத்தனை உயர்ந்தவன், ஒரு ஸம்ஸாரி சிக்கமாட்டானா என்று ஏன் தேடவேண்டும்? பலவிதமான செல்வம் உள்ளவர்கள், தங்கள் கையில் இருக்கும் ஒரு காசு விழுந்தால் கூட, அந்தக் காசு தங்களது என்று தேடுவார்கள். அது போன்று, ஆத்மாக்கள் இவனது உடைமையாக இருப்பதால், இவன் தேடுகிறான்.

வ்யாக்யானம் – (உய்யப்போமுணர்வினார்கட்கு) – கீழ் பொய்யிலே வ்யவஸிதராய் நின்ற நிலையில் நின்று கால்வாங்கிய நாம் உஜ்ஜீவிக்கும் ப்ரகாரமேதோ என்னும்

வெளிச்செறிப்பை உடையவர்களுக்கு. ஈதொழிய முடியப்போம் உணர்வும் உண்டுபோலே காணும்! புத்தி நாசாத் ப்ரணச்யதி என்னக்கடவதிறே. உய்யப்போமுணர்வாகிறது – யாத்ருச்சிகமாக விளைந்ததொரு ஸுக்ருதமடியாக, "நாமார்? நாம் நின்றநிலையென்?", என்றும், "மேல் நமக்குப் போக்கடியேது", என்றும் பிறக்கும் உணர்வு. (ஒருவனென்றுணர்ந்த பின்னை) – "ஈச்வரனுமொருவனுளன்" என்னும் அறிவு பிறந்த பின்பு. "கேவலம் தேஹமேயன்று உள்ளது; தேஹாதிரிக்தமாயிருப்பதொரு ஆத்மாவுமுண்டு; அவனுக்கு ஸ்வாமியாயிருப்பானொரு ஈச்வரனுமுண்டு", என்னும் அறிவுடையார்க்கு. "பஞ்சவிம்சகன் ஆத்மா" என்றால் இசைவாருண்டு; "ஷட்விம்சகன் ஈச்வரன்", என்றால் இசைவாரில்லையிறே.

விளக்கம் – (உய்யப்போம் உணர்வினார்கட்கு) – "எல்லையற்ற காலமாகப் பொய்யான வாழ்க்கையில் ஈடுபட்ட நிலையில் இருந்து மீண்ட நாம் பிழைக்கும் வழி ஏதும் உள்ளதோ?", என்னும் எண்ணம் மேலோங்கி நிற்பவர்களுக்கு. இந்த உணர்வு உண்டாகாமல் இருப்பவர்கள் அனைவரும் தாங்கள் முடியப்போம் என்ற எண்ணம் கொண்டவர்களே ஆவர். கீதை – புத்தி நாசாத் ப்ரணச்யதி – புத்தி நாசமாகும்போது ஸம்ஸாரத்தில் அழிகிறான் – என்றது காண்க. பிழைத்துக் கொள்பவர்களின் சிந்தனை எப்படிப்பட்டது என்றால் – தற்செயலாக பிறந்த புண்ணியம் காரணமாக, "நாம் யார்? நமக்கு ஏற்ற நிலையை விடுத்து இப்போது மாறுபட்ட நிலையில் உள்ள தன்மை என்ன? இந்த நிலை நீங்கி நமது ஸ்வரூபத்திற்கு ஏற்ற தன்மையை பெறும் வழி என்ன?", என்று எண்ணுவதால் உண்டாகும் அறிவே ஆகும். (ஒருவன் என்று உணர்ந்த பின்னை) – "ஸர்வேச்வரன் என்று ஒருவன் உள்ளான்", என்ற ஞானம் பிறந்த பின்னர். "உடல் மட்டுமே இருக்கவில்லை; இந்த உடலைக் காட்டிலும் நித்யமான ஆத்மா என ஒன்று உள்ளது; அந்த ஆத்மாவின் ஸ்வாமியாக இருக்கும் ஸர்வேச்வரன் ஒருவன் உண்டு", என்னும் ஞானம் உள்ளவர்களுக்கு. இருபத்துநாலு அசேதனங்களைக் காட்டிலும் மாறுபட்ட ஆத்மா உள்ளான் என்று ஏற்கின்றனர்; ஆனால் அவர்களில் பலர், ஆத்மாவைக் காட்டிலும் உயர்ந்த இருபத்துஆறாவது தத்துவமாக எம்பெருமான் உள்ளான் என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கின்றனரே!

வ்யாக்யானம் – (ஐயப்பாடறுத்துத் தோன்றும்) – ஈச்வர ஸத்பாவத்தை இசையாத நாளிறே இவனுக்கு ஸம்சயமுள்ளது. தானே ப்ராப்யனென்னுமிடத்திலும், தானே

விரோதியைப் போக்குமென்னுமிடத்திலும் உண்டான ஸம்சயங்களை அறுத்துக் கொண்டு வந்து தோன்றும். இவனுக்கு ஸம்சயநிவ்ருத்தி பண்ணுவது எத்தாலே என்னில் – (அழகன்) – சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் என்ற அர்ஜுனனுக்கு உபதேசத்தாலே ஸம்சயத்தை அறுத்தான்; அத்தனை அளவில்லாதார்க்கு அழகாலே ஸம்சயத்தை அறுத்துக் கொண்டு வந்து தோன்றும். "திருமேனியடிகளுக்கு", என்றும், "கண்டவாற்றால் தனதேயுலகென நின்றான்", என்றும் சொல்லுகிறபடியே கண்டபோதே ஸர்வாதிகவஸ்து வென்று நிர்ணயிக்கலாம்படியிறே திருவடிவுதானிருப்பது. (ஊரரங்கமன்றே) – இவ்வழகு ஒரு தேசவிசேஷத்திலே போனாலன்றோ அநுபவிக்கலாவது என்ன; அது வேண்டா; ஸம்ஸாரத்துக்குள்ளே கோயிலிலே அநுபவிக்கலாமென்கிறார். "பரமபதம் கலவிருக்கை நத்தம் கோயில்" என்னும்படியாய்த்து கோயிலில் நித்யஸந்நிதி இருப்பது.

விளக்கம் – (ஐயப்பாடு அறுத்துத் தோன்றும்) – ஸர்வேச்வரன் என்று ஒருவன் உள்ளான் என்பதை ஏற்காதபோதே, இவனுக்கு ஐயம் உண்டாகிறது. ஆனால் அந்த ஐயம் நீங்கிய பின்னர், "ஈச்வரனே அடையத்தக்கவன், ஈச்வரனே விரோதிகளை நீக்குபவன்", என்ற ஐயங்களை எம்பெருமான் எதனைக் கொண்டு விலக்குகிறான்? (அழகன்) – கீதையில் - சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் – உன்னைச் சரணம் அடைந்த என்னை சிஷ்யனாக ஏற்று நியமிப்பாயாக – என்று நின்ற அர்ஜுனனுக்கு தனது உபதேசம் மூலமாக இந்த ஐயங்களை நீக்கினான். அர்ஜுனன் அளவிற்கு ஞானம் இல்லாதவர்களுக்கு, தனது அழகைக் காட்டி, அவர்களின் ஐயங்களை நீக்கும்படியாகத் தோன்றுவான். திருவாய்மொழி (9-7-3) – திருமேனியடிகளுக்கு – என்றும், திருவாய்மொழி (4-5-10) – கண்டவாற்றால் தனதேயுலகென நின்றான் – என்றும் கூறுவது போல, இவனைப் பார்த்தவுடனேயே "இவனே ஸர்வேச்வரன்", என்று உறுதியாகக் கூறும்படியாக எம்பெருமானின் அழகு உள்ளது. (ஊரரங்கமன்றே) – "இப்படிப்பட்ட அழகுடன் கூடிய எம்பெருமானை பரமபதம் சென்றால் அல்லவோ அனுபவிக்கலாம்", என்று சிலர் ஐயம் கொண்டு ஆழ்வாரிடம் கேட்டனர். அதற்கு ஆழ்வார், "அவசியம் இல்லை. ஸம்ஸார மண்டலத்தில் உள்ள இந்தத் திருவரங்கம் பெரியகோயிலிலேயே அனுபவிக்கலாம்", என்றார். பரமபதம் இவன் அரசசபை என்றால், திருவரங்கம் இவன் சபை முடிந்து தங்கும் அரண்மனையாகும்.

16. சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோடு இசைந்த காலம்

மாதரார் கயல்கண் என்னும் வலையுள்பட்டு அழுந்துவேனை

போது அரே என்று சொல்லிப் புந்தியில் புகுந்து தன்பால்

ஆதரம் பெருக வைத்த அழகனூர் அரங்கம் அன்றே.

பொருள் – ஈச்வரன் என்று யாரும் இல்லை எனவும், ஈச்வரனுக்கு உடைமையான ஆத்மாவை என்னுடையது எனவும் கூறியபடி, உலகவிஷயங்களில் மட்டுமே ஈடுபட்டவர்களுடன் கூடியபடி இருந்தேன். பெண்களின் மீன் போன்ற கண்கள் என்னும் வலையில் சீக்குண்டு நான் நின்றேன். அப்படியாக நான் மூழ்கியபோது, "இங்கே வா", என்று தன் பக்கம் திருவரங்கன் அழைத்தான். அவ்விதம் அழைத்து, எனது நெஞ்சத்தில் புகுந்தான். தனது மீது எனது அன்பானது வெள்ளம் போன்று பெருகவைத்தான். இப்படிப்பட்ட அழகான திருமேனி உடையவனின் இருப்பிடமானது திருவரங்கம் அல்லவோ?

அவதாரிகை – ப்ராப்யமும் ப்ராபகமும் தானே என்னுமிடத்தில் ஸம்சயத்தை அறுத்துத் தந்தாற்போலே ததநந்தரபாவியான ஆதரத்தைத் தன் பக்கலிலே விஷயாநுகுணமாகப் பெருகும்படி பண்ணினான் என்கிறார்.

விளக்கம் – "உபாயமும், அந்த உபாயத்தால் அடையப்படும் இலக்கும் நானே" என்னும் விஷயத்தில் உள்ள சந்தேகத்தை இவன் தீர்த்ததை கடந்த பாசுரத்தில் அருளிச்செய்தார். இப்படியாகச் செய்தது போன்று, இவன் மேலும் செய்தது என்னவென்றால் – ஆதரம் என்று கூறப்படும் அன்பைத் தன் மீது திருப்பிக்கொண்டு, அதற்கு ஏற்றாப்போல் அந்த அன்பு பெருகும்படியாகச் செய்தான் என்கிறார்.

வ்யாக்யானம் – (சூதனாய் கள்வனாகி) – தம்முடைய பூர்வவ்ருத்தம் அருளிச்செய்கிறார். சூதாவது பச்யதோஹரத்வம். களவாவது பரத்ரவ்யத்தை என்னதென்றிருக்கை; ப்ரமாண விஷயமான அர்த்தத்தை இல்லையென்கை. இனி காஷ்டாபஹாரம் பண்ணினவனுக்கும் ரத்நாபஹாரம் பண்ணினவனுக்கும் அபஹாரமொத்திருக்க, த்ரவ்ய வைஷம்யத்தாலே

தோஷமும் நெடுவாசிபட்டிருக்கும். சண்டாள த்ரவ்யத்தை அபஹரித்தார்க்கும் வஸிஷ்ட த்ரவ்யத்தை அபஹரித்தார்க்கும் த்ரவ்யம் ஒன்றானாலும் ஸ்வவான்களுடைய வைஷம்யத்தாலே தோஷம் நெடுவாசிபட்டிருக்கும். இத்த்ரவ்யம் ஸ்ரீகௌஸ்துபம் போலே ஈச்வரனுக்கு ஸ்ப்ருஹணீயமான ஆத்மத்ரவ்யம். உடையவனும் ஸர்வேச்வரனாகையாலே தோஷத்துக்கு அவதியில்லை என்கை. ஆக, களவாகிறது – ஈச்வர சேஷமான ஆத்ம வஸ்துவை என்னது என்றிருக்கை. சூதாவது பச்யதோஹரத்வம், அதாவது ஸத்வ்ருத்த னாயிருப்பானொருவன் "பரசேஷமாய்க்கொண்டு ஆத்மஸ்வரூபமுண்டு; சேஷியான ஈச்வரனுமுண்டு; தர்மாதர்மங்களுமுண்டு", என்று இருந்தால், "இவையெல்லாம் பொய் காண்", என்று அவனை விப்ரலம்பித்து தன்படியாக்கிக் கொள்ளுகை.

விளக்கம் – (சூதனாய் கள்வனாகி) – தான் முன்பு எவ்விதம் வாழ்ந்தேன் என்று கூறுகிறார். சூது என்றால் ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவரது பொருளை அபகரிப்பதாகும். களவு என்றால் மற்றவர்களின் பொருளைத் தன்னுடையது என்று எண்ணுதல் ஆகும். ப்ரமாணங்கள் மூலம் வெளிப்படும் விஷயங்களை மறுப்பது சூது என்றும், களவு என்று இங்கு கொள்ளப்படுகிறது. ஒரு சுள்ளியைத் திருடியவனுக்கும், இரத்தினமாலையைத் திருடியவனுக்கும், திருட்டு என்பது பொதுவாக இருக்கும்; ஆனால், இரத்தினத்தின் மேன்மை காரணமாக, குற்றம் அவனுக்கு அதிகமாக இருக்கும். சண்டாளன் ஒருவனிடம் திருடப்பட்ட பொருளுக்கும், அந்தணன் ஒருவனிடம் திருடப்பட்ட பொருளுக்கும், "திருடப்பட்ட பொருள்" ஒன்றாகவே இருந்தாலும், திருட்டு கொடுத்தவனின் மேன்மை காரணமாகக் குற்றமும் வேறுபடும். களவு என்பது இங்கு எம்பெருமானின் உடைமையான ஆத்மாவை, தன்னுடைய என்று எண்ணுதல் ஆகும். ஆத்மாவானது எம்பெருமானின் ஸ்ரீகௌஸ்துபமணி போன்று அவனால் விரும்பப் படுவதாகும். இப்படிப்பட்ட ஆத்மாவிற்கு உடைமையானவன் ஸர்வேச்வரன் என்பதால், இந்தக் களவினால் விளையும் பாவத்திற்கு எல்லையில்லை. ஆகவே களவு என்பது –ஈச்வரனின் அடிமையாக உள்ள ஆத்மாவைத் தன்னுடையது என்று எண்ணுவதாகும். சூது என்றால் – ஒருவன், "எம்பெருமானை எஜமானனாகக் கொண்டதே ஆத்மா; இதன் எஜமானனாக ஸர்வேச்வரனே உள்ளான்; தர்மம், அதர்மம் போன்ற பேதங்கள் உண்டு", என்று எண்ணியபடி உள்ளான் என்று வைத்துக் கொள்வோம்; இப்படிப்பட்டவனிடம் சென்று, "இது போன்ற எண்ணங்கள் அனைத்தும்

பொய்", என்று கூறி, அவன் மனதை மாற்றி, தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்வதே சூது எனப்படும்.

வ்யாக்யானம் – அகவாயில் நினைவு இதுவானால் பின்னை இதுக்கு வர்த்தகராயிருப் பாரோடேயிறே ஸஹவாஸம் பண்ணுவது. (தூர்த்தரோடிசைந்த காலம்) – ப்ராப்தனான ஸர்வேச்வரனை விட்டு அப்ராப்தவிஷயங்களிலே அதிப்ரவணரோடே பொருந்திப் போந்த காலம். இப்படி பொருந்திப்போந்த காலத்தை ஸ்மரிக்கையுங்கூட அஸஹ்ய மாயிருக்கிறதாய்த்து இவர்க்கு. இப்படி அநர்த்தப்பட்டுப் போந்த காலத்துக்குத் தொகையில்லைகிடீர். ஆத்மாவுக்கு நிலைநின்ற ஸ்வரூபம் வைஷ்ணவ ஸஹவாஸமே யாயிருக்க, அநர்த்தஹேதுவான ஸ்வபாவத்தை உடையவர்களோடே காலத்தைப் போக்குவதே! பாகவத ஸஹவாஸம் பகவத்விஷயத்தோடே மூட்டிவிடுமோபாதி விபரீதருடைய ஸஹவாஸமும் விஷயப்ராவண்யத்தோடே மூட்டிவிடுமிறே.

விளக்கம் – இப்படி ஒருவன் தனது மனமார மேலே கூறிய சூதையும் கள்ளத்தனத்தையும் செய்கிறான் என்றால், அவன் அதனை வளர்ப்பவர்களுடன் மட்டுமே அல்லவா சேர்வான் என்பதைக் கூறுகிறார். (தூர்த்தரோடிசைந்த காலம்) – நமக்கு அடையப்படும் இலக்காக உள்ள ஸர்வேச்வரனை விட்டு, நமது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்காத உலக விஷயங்களில் நிலையாக நிற்பவர்களுடன் நட்புடன் வாழ்கின்ற காலம். இப்படியாக தகாதவர்களுடன் சேர்ந்து வாழ்கின்ற காலத்தைக் கண்டாலும் இவருக்கு பொறுக்க இயலாததாக உள்ளது. இப்படியாகத் தகாதவர்களுடன் கழிந்த காலத்திற்கு அளவே இல்லை என்கிறார். ஆத்மாவின் ஸ்வரூபம் என்பது வைஷ்ணவர்களுடன் சேர்வதே என்று இருக்க, அதற்கு தகாததை உண்டாக்கக் காரணமான ஸ்வபாவத்தைக் கொண்டவர்களுடன் சேர்ந்தேனே என்கிறார். பாகவத நட்பு என்பது பகவத்விஷயத்தில் ஈடுபடச் செய்வது போன்று, விபரீதமானவர்களின் நட்பு உலக விஷயங்களில் ஈடுபடுத்தி விடும்.

வ்யாக்யானம் – (மாதரார்கயற்கணென்னும் வலையுள்பட்டழுந்துவேனை) – ஸ்திரீகளுடைய கயல்போல முக்தமாயிருந்துள்ள கண்ணாகிற வலையிலே அகப்பட்டுக் கால்வாங்கமாட்டாத என்னை. ஜாதிமாத்ரமே பற்றாசாக மேல்விழுமதொழிய

ஐந்மவ்ருத்தங்கள் ஆராயா அறியான். கண்ணினுடைய ஆகர்ஷத்வமே அறியுமித்தனை. அகவாய் மயிர்க்கத்தியாயிருக்க, இவனையொழியத் தங்களுக்குச் செல்லாமை தோற்றும்படியாய்த்துப் பார்ப்பது. "கண்" என்று பேராய், வலையின் கார்யமாய்த்துப் பலிப்பது. இதுதானும் மணிவலையிறே. கண்ணுக்குள்ளே மணியுமுண்டிறே, அத்தைப் பற்ற "வலை" என்கிறது. புறம்பு கால்வாங்கவொண்ணாதபடி கண்ணைக்காட்டி, தான் கிட்டாதே அகலநிற்கும்; அதுக்கடி, கிட்டினவன்று அபிநிவேசத்தோடே போகோபக ரணங்களைக் கொண்டிழிந்த இவன், தனக்கு ஸ்நாநீயங்கொண்டு புறப்பட வேண்டும்படியாயிறே அதின் தண்மை இருப்பது. இவன்தான் அவிவேகியாகையாலே அகவாய் ஆராயமாட்டாதே வாய்க்கரையிலே அழுந்தி நோவுபடாநிற்கும். (வலையுள் பட்டு அழுந்துவேனை) – மீண்டு கால்வாங்கவொண்ணாது; அதுதன்னில் அநுபாவ்ய மொன்றில்லை; கிடந்து உழைக்குமித்தனை. விஷயப்ராவண்யத்தால் ஸித்தித்தது க்லேசமேயாய்விட்டது.

விளக்கம் – (மாதரார் கயல்கண் என்னும் வலையுள் பட்டு அழுந்துவேனை) – பெண்களின் கயல்மீன் போன்ற அழகான கண்கள் என்னும் வலையில் சிக்கிக் கொண்டு, அதிலிருந்து மீள இயலாமல் தவிக்கும் என்னை. பெண்விஷயத்தில் சிக்கும் ஒருவன், அவள் பெண் என்பதை மட்டுமே காண்பான், அல்லாமல் அவளது பிறப்பு, குலஒழுக்கம் போன்றவற்றைக் காணமாட்டான். அவர்களது கண்களின் வலிமை எப்படிப்பட்டது என்று அறிந்து கொள்ளுங்கள் – தங்கள் மனதில் கூர்மையான கத்தி போன்று கொடியவர்களாக உள்ளபோதிலும், இவனைப் பிரிந்து தங்களால் உயிர் வாழ இயலாது என்பது போன்று மயக்கும் கண்பார்வை உள்ளவர்கள். அதற்குப் பெயர்தான் "கண்", ஆனால் உண்மையில் அது ஒரு வலையின் செயலைச் செய்கிறது. கண்ணுக்குள்ளே மணி உள்ளதால், இதனைக் மணிவலை எனலாம். இவனைத் தப்பிக்கவிடாமல் தங்கள் கண்ணைக் காண்பித்து, தாங்கள் இவனிடம் சிக்காமல் தள்ளி நின்றுவிடுவார்கள். ஏன் இப்படி ஒதுங்கி நிற்கிறார்கள் என்றால் – இவர்கள் கிடைக்கும்போது சந்தனம் முதலான இன்பம் அளிக்கும் பொருள்களின் உதவியால் இவர்களுடன் இன்பமாக இருந்துவிட்டு, அந்த இன்பம் நிறைவேறியவுடன் தண்ணீரைத் தேடிச்சென்று சுத்தம் செய்து கொள்ள எண்ணும் அளவே அல்லவோ சிற்றின்பம் உள்ளது? இதனை அவர்கள் தாழ்வு என்று அறிந்த காரணத்தினால், தள்ளியே நிற்கிறார்கள். இவனுக்கு அந்த விவேகம் இல்லை என்பதால், அவர்களின் மனம் அறியாமல், புறத்தோற்றமாகிய கண் அழகில் மயங்கி,

அதிலே அழுந்திவிடுகிறான். (வலையுள் பட்டு அழுந்துவேனை) – மீண்டும் அதிலிருந்து மீள இயலாது. அதில் அநுபவித்து மகிழும்படியான சுகம் ஏதும் இல்லை; இறுதியில் வருத்தமே மிஞ்சும்.

மூலம் – இவ்வோ விஷயங்களில் அகப்பட்டுக் கால்வாங்கமாட்டாதே நோவுபடுகிறபடியைக் கண்டு பெரியபெருமாள், "ஆழ்வீர்! நீர் நினைத்திருப்பதென்? ஆசைப்பட்டிருப்பதென்?", என்ன; "இப்படி என்னை நோவுபடுத்தின கண்ணை ஒரு தார்மிகன் வந்து காட்டுமாகில், ஆமிறே என்று கண்ணழகியாரை உகப்பேன்", என்ன. "கண்ணின் வாசியறிந்தீர்", என்று திருத்திரையை எடுத்துவிட்டு நின்று திருமுகத்தைக் காட்டினார். உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்களைக் காட்டியருளி, "ஆழ்வீர்! நீர் ஆசைப்பட்ட கண்ணுடையார் இங்கே காணும். இங்கே பாரீர்", என்ன; "இவை சில கண்களிருந்தபடியென்?", என்று தாம் முன்பு அனுபவித்த கண்களிற்காட்டில் விலக்ஷணமுமாய், ப்ராப்தமுமாயிருக்கையாலே இவருடைய நெஞ்சு விஷயாந்தரங்களில் நின்றும் மீண்டது. ராம: கமலபத்ராக்ஷ: ஸர்வஸத்த்வமநோஹர: ரூபதாக்ஷிண்ய ஸம்பந்த: ப்ரஸூதோ ஜநகாத்மஜே.

விளக்கம் – இப்படியாக உலகவிஷயங்களில் சிக்குண்டு, அதிலிருந்து மீள இயலாமல் நின்று, துன்பத்தில் தவிக்கும் ஆழ்வாரிடம் பெரியபெருமாள், "ஆழ்வாரே! நீவிர் எதனை எண்ணி இப்படி ஆசையுடன் உள்ளீர்கள்?", என்றான். இதற்கு ஆழ்வார், "எனது ஸ்வபாவத்திற்கு ஏற்ப என்னை ஈடுபடுத்துகின்ற கண்ணழகில் நான் மயங்கிக் கிடக்கிறேன். எனக்கு நன்மை செய்ய விரும்பும் ஒருவன், எனது ஸ்வரூபத்திற்கு ஏற்ற கண்களைக் காட்டினால், அதிலே ஈடுபட்டு இவற்றை விடுவேன்", என்றார். உடனே பெரியபெருமாள், "கண்ணின் வேறுபாட்டினை நீவிர் அறிந்துள்ளீர்", என்று கூறியபடி, தன் முன்பாக உள்ள திரையை விலக்கி, தனது திருமுகத்தைக் காண்பித்தான். பெரியாழ்வார் திருமொழி (7-1-9) - உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக் கண் – என்னும்படியாக உள்ள தனது திருக்கண்களைக் காண்பித்து, "ஆழ்வாரே! நீவிர் காண ஆசைப்பட்ட கண்களை உடையவனை இங்கு காணும். இங்கே எனது கண்களைப் பார்ப்பீராக", என்றான். உடனே ஆழ்வார், "ஆகா! இந்தக் கண்ணழகு என்னே", என்று வியந்து, தான் முன்பு அனுபவித்தவற்றைக் காட்டிலும் வேறுபட்டுள்ளதும், சிறந்தும் உள்ள பெரியபெருமாளின் கண்களைக் கண்டு, மற்ற

விஷயங்களில் இருந்தும் விடுபட்டார். இராமாயணம் - ராம: கமலபத்ராக்ஷ: ஸர்வஸத்த்வமநோஹர: ரூபதாக்ஷிண்ய ஸம்பந்த: ப்ரஸூதோ ஜநகாத்மஜே – தாயே சீதே! இராமன் தாமரை இதழ்கள் போன்ற கண்களைக் கொண்டவன்; குரங்கு போன்ற என்னையும் சேர்த்து அனைத்து விலங்குகளின் மனதை அந்தக் கண்களின் அழகாலே ஈர்ப்பவன்; அழகான தோற்றம் போன்ற தேஹகுணங்களும், தாக்ஷிண்யம் முதலான ஆத்மகுணங்களும் நிரம்பியவன் – என்றது காண்க.

மூலம் – (புந்தியில் புகுந்து) – இவ்வளவிலே விலக்குகைக்குப் பரிகரமில்லாதபடி நினைவுக்கு வாய்த்தலையைப் பற்றினான். நாம் புகுமிடத்தில் இவர்க்கு விலக்காமையுண்டாயிருந்ததென்று இதுவே பற்றாசாக இவர் திருவுள்ளத்திலே வந்து புகுந்தான் என்றுமாம். புகுந்து செய்ததென்னென்னில் (தன்பால் ஆதரம் பெருகவைத்த) – அப்ராப்த விஷயத்தில் பண்ணிப்போந்த ஆதரம் தன்பக்கலிலே ஆம்படியாகப் பண்ணினான். பாழிலே பாய்கிற நீரைப் பயிரிலே வெட்டிவிட்டாற்போலே ஆதரத்தை ஸப்ரயோஜநம் ஆக்கினான். (பெருக) – "அதனில் பெரிய" என்னுமாபோலே அநுபாவ்யனான தன்னளவன்றிக்கே பெருகும்படியாக. (வைத்த) – இதுக்கு அடியாகத் தந்தலையில் ஒன்றும் காணாமையாலே "ஈதொரு தண்ணீர்ப்பந்தல் வைத்தானத்தனை கிடீர்", என்கிறார்.

விளக்கம் – (புந்தியில் புகுந்து) – தான் ஆழ்வார் மேல் விழும் நேரத்தில், ஆழ்வாரின் நெஞ்சு விலகிவிடாதபடி இருப்பதற்காக, அந்த நெஞ்சத்தைப் பற்றினான். அல்லது, தான் வந்து புகுந்தபோது, இவர் அதனை விலக்காமல் இருந்தது கண்டு, அதனையே சாக்காக வைத்து, ஆழ்வாரின் திருவுள்ளத்தில் புகுந்தான் என்றும் கூறலாம். இவ்விதமாகப் புகுந்து என்ன செய்தான்? (தன்பால் ஆதரம் பெருகவைத்த) – எல்லையற்ற காலமாக உலக விஷயங்களில் செலுத்தப்பட்ட அன்பு, தன் மீது திரும்பும்படியாகச் செய்தான். தரிசு நிலத்தில் பாய்கின்ற நீரைத் திருப்பி, பயிர்நிலத்திலே பாயச் செய்வது போன்று, தன் மீது அன்பைச் செலுத்தும்படிச் செய்து, அந்த நீர் பயன்படுவது போன்று, அன்பையும் பயனுள்ளது ஆக்கினான். (பெருக) – திருவாய்மொழி (10-10-10) – அதனில் பெரிய – என்னும்படி, அனுபவிக்கத்தகுந்த ஈச்வரனான தன்னையும்விட அந்த அன்பு பெரிதாகப் பெருகும்படிச் செய்தான். (வைத்த) – இவ்விதம் இவன் வந்து அருள் செய்தான்; ஆனால் இதற்குக் காரணமாகத் தன்னிடம்

எந்த உபாயமும் இல்லாத காரணத்தால், “தண்ணீர்ப்பந்தல் வைப்பவர்கள் எதனையும் எதிர்பாராமல் உள்ளது போன்று, இவன் என் மீது அன்பு செய்தான்”, என்றார்.

மூலம் – இப்படி ஆதரத்தைக் கரைபுரளப் பண்ணின பரிகரம் ஏதென்னில், (அழகன்) – “பேரமர்காதல் கடல்புரைய விளைவித்த காரமர்மேனி நங்கண்ணன்” என்னக்கடவதிறே. பக்திவர்த்தகமான கர்மஜ்ஞாந ஸ்தாநத்திலே நிற்கிறதாய்த்து இவர்க்கு வடிவழகு; இவர்க்கு ஸம்சயத்தை அறுக்கைக்கும், ஆதரத்தைப் பெருக்குகைக்கும் ஸாமக்ரி ஒன்றெயென்றதாய்த்து. (அழகன்) – அழகையே நிரூபகமாகவுடையவன். (ஊரரங்கமன்றே) – இவர் திருவுள்ளத்தில் புகுருகைக்கு அவஸரப்ரதீக்ஷனாயிருந்தவனூர் கோயில் என்கிறார். பரமபதம் கலவிருக்கை என்னும்படி நித்யவாஸம் பண்ணுகிற தேசம். ருசி பிறந்தபோது புக்கு அநுபவிக்கலாம் தேசமிறே இது.

விளக்கம் – எதனைக் காண்பித்து இவ்விதம் அன்பைப் பெருகவைத்தான்? (அழகன்) – திருவாய்மொழி (5-3-4) - பேரமர்காதல் கடல்புரைய விளைவித்த காரமர்மேனி நங்கண்ணன் – என்னும்படி தனது அழகைக் காண்பித்துப் பெருகவைத்தான். பெரியபெருமாளின் அழகானது ஆழ்வாருக்கு கர்மயோகம் மற்றும் ஜ்ஞாநயோகம் போன்று நின்று, பக்தியை வளர்த்தது. இவருடைய சந்தேகங்களை தீர்ப்பதற்கும், அன்பைப் பெருக்குவதற்கும் ஸாதனமாக பெரியபெருமாளின் அழகு ஒன்றே இருந்தது. (அழகன்) – தன்னுடைய அழகையே தனக்கு லக்ஷணமாக உடையவன். (ஊரரங்கமன்றே) – இவரது திருவுள்ளத்தில் புகுந்துகொள்ள சரியான நேரம் பார்த்தபடி உள்ளவன் வாழ்கின்ற பெரியபெருமாளின் இடம் திருவரங்கம் பெரியகோயில் என்றார். பரமபதம் அரச சபை போன்றதே; இவனைக் காணவேண்டும் என்ற ஆசை தோன்றியவுடன் சென்று காணக்கூடிய இடம் இது மட்டுமே.

17. விரும்பி நின்று ஏத்த மாட்டேன் விதி இலேன் மதி ஒன்று இல்லை
இரும்புபோல் வலிய நெஞ்சம் இறை இறை உருகும் வண்ணம்
சுரும்பு அமர் சோலை சூழ்ந்த அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டு என் கண்ணினை களிக்குமாறே.

பொருள் – அவன் மீது மிகுதியான அன்பு ஏற்பட்டு, அதனால் அவனைத் துதிக்கும்படியாக நான் இல்லை. கையைக் குவித்து வணங்குதல் போன்ற செயல்களையும் நான் செய்வதில்லை. அவனைப் பற்றிய ஞானமும் எனக்கு இல்லை. இப்படியாக எனது மனம் இரும்பு போன்று இருந்தது. இதனை சிறிதுசிறிதாக உருகும்படிச் செய்தான். யார் என்றால் – வண்டுகள் மொய்க்கின்ற சோலைகளால் சூழப்பட்ட திருவரங்கம் பெரியகோயிலில் சயனித்துள்ள பெரியபெருமாள் ஆவான். கண்ணாலேயே சுவைக்கவல்ல இனிய கரும்பு போன்ற அவனைக் கண்டு, எனது இரண்டு கண்களும் மகிழும் மகிழ்வுதான் என்னே!

அவதாரிகை – கீழ் ஆதரம் பெருகினபடி சொல்லிற்று; இதில், "அகவாயில் ஆதரம் விளைந்து புறவாய் கட்டழியாமலிருக்கையன்றிக்கே, சக்ஷுராதி கரணங்களும் தன்னைக் கண்டு சேதநஸமாதியாலே களிக்கும்படி பண்ணினான்", என்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் தனது உள்ளத்தில் அன்பு பெருகும்படிச் செய்தான் என்றார். இந்தப் பாசுரத்தில் – உள்ளத்தில் அன்பு இருந்தாலும் அந்த அன்பானது வெளிப்படாமல், உடல் எந்தவிதமான மாறுபாடும் அடையாமல் இருக்கின்ற மற்ற ஸம்ஸாரிகளைப் போன்று தன்னை விடவில்லை; எனது அசேதனமான கண் முதலான இந்த்ரியங்களும் அவனைக் கண்டவுடன் களிக்கும்படிச் செய்தான் – என்கிறார்.

வ்யாக்யானம் – (விரும்பி நின்று ஏத்தமாட்டேன்) – மநோவாக்காயங்கள் மூன்றினுடைய பூர்வவ்ருத்தத்தை அருளிச்செய்கிறார். விஷயம் விலக்ஷணமானால் அத்யாதரத்தோடே வ்யவஸிதனாய் நின்று ஸ்தோத்ரம் பண்ணவேணுமிறே; அது செய்யமாட்டிலேன். ஸோஹம் ஸ்துதெள ந ச ஸாமர்த்யவாந் என்னுமாபோலே, பகவத்விஷயத்தைப் பேசவென்றால் வாகிந்த்ரியத்துக்கு சக்தியில்லை; வ்யத்ரிக்த விஷயங்களைப் பேசவென்றால் ஆதரமுமுண்டாய் சக்தியுமுண்டாயிருக்கும். வாக்வ்யாபாரம் புறம்பேயானாலும் காயிகவ்யாபாரங்களில் நம்பக்கல் பண்ணிற்றேதேனுமுண்டோ என்ன; (விதியிலேன்) – விநிர்விதாநே என்கிறபடியே காயிகவ்யாபாரத்தைச் சொல்லுகிறது. உன்னை உத்தேசித்து உன்பக்கல் அநுகூலமாக இதுக்கு முன்பு கையால் ஒன்றும் செய்திலேன். ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தெளதி என்கிறவிதுவும், யௌ

தத்பூஜாகரௌகரௌ என்கிறவிதுவும் புறம்பே தப்பிற்றாகிலும் நெஞ்சாலேதான் நம்மை நினைத்தல் செய்தீரோ என்ன. (மதியொன்றில்லை) – உன் வாசி அறியாதொழிந்தால் நீ ஒருவன் உண்டென்றிருக்கும் அறிவுங்கூட இல்லை. உன்னையொழிந்த ஸகல பதார்த்தங்களினுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை உள்ளபடி அறிய க்ஷமனாயிருப்பன். உன்னளவில் வந்தால் உன்னுடைய ஸத்பாவத்திலும் ஜ்ஞாநமில்லை. அஸத்ப்ரஹ்மேதி வேத சேத் அஸந்நேவ ஸ பவதி என்னக்கடவதிறே. வித்யாந்யா சில்பநைபுணம்.

விளக்கம் – (விரும்பி நின்று ஏத்தமாட்டேன்) – தனது வாக்கு, சொல், செயல் முன்பு எவ்வாறு இருந்தது என்று அருளிச்செய்கிறார். மிகவும் மேன்மையான ஒன்றைக் கண்டால், அதனை மிகுந்த ஆர்வத்துடனும் உறுதியுடனும் புகழ்ந்து பேசி துதிக்க வேண்டும் அல்லவோ? ஆனால் எம்பெருமானைக் குறித்து, அது போன்று செய்யாமல் இருந்தேன். விஷ்ணுபுராணம் - ஸோஹம் ஸ்துதௌ ந ச ஸாமர்த்யவாந் – தேவனே! உன்னைத் துதிக்கும் திறன் எனக்கு இல்லை – என்று கூறுவது போன்று, அவனைப் பற்றிப் பேசுவதற்கு ஏற்ற சக்தி இல்லாமல் வாக்கு இந்த்ரியம் இருந்தது. ஆனால் அவனைத் தவிர்ந்த மற்ற உலகவிஷயங்கள் குறித்துப் பேசுவதற்கு, வாக்கு இந்த்ரியத்திற்கு சக்தியும் ஆர்வமும் இருந்தன. பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "வாக்கு போனால் போகிறது. அது மற்றவற்றைப் பற்றியே பேசியபடி இருந்தாலும், உமது உடல் ரீதியாகச் செய்யக்கூடிய நமஸ்கரித்தல் போன்றவற்றையாவது நம்மைக் குறித்துச் செய்தீரோ?", என்று ஏதும் அறியாதவன் போன்று வினவினான். (விதியிலேன்) – விதிர் விதாநே – விதி என்னும் சொல் உடலால் செய்யப்படும் செயல்களைக் குறிக்கும் – என்னும்படி, விதி என்ற பதம் வணங்குதல் போன்றவற்றைக் குறிக்கிறது. ஆழ்வார் பெரியபெருமாளிடம், "உன்னைக் குறித்து, உன்னை மனதில் வைத்து கைகூப்புதல் போன்ற எதனையும் நான் செய்யவில்லை", என்றார். இதனைக் கேட்ட பெரியபெருமாள், "விஷ்ணுதர்மம் - ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி – எது ஸ்ரீஹரியைத் துதிக்கிறதோ அதுவே நாக்கு எனப்படும் - என்றும், யௌ தத்பூஜாகரௌகரௌ – எது அவனுக்குப் பூஜை செய்கிறதோ, அந்தக் கைகளே சிறந்தவை – என்றும் கூறுவதற்கு ஏற்ப வாக்கு மற்றும் உடல் ஆகியவற்றைக் கொண்டு நம்மைத் தவிர மற்றவற்றைப் புகழ்ந்தீர் என்றாலும், உமது நெஞ்சத்திலாவது எம்மை நினைத்தீரோ?", என்றான். (மதியொன்றில்லை) – உனது மேன்மையை மட்டும் அல்ல, நீ உள்ளாய் என்னும் ஞானம் எனக்கு இல்லை. உன்னைத் தவிர்ந்த மற்ற பொருள்களின்

ஸ்வரூபங்களையும், ஸ்வபாவங்களையும் மிகுந்த முயற்சியுடன் அறியக்கூடியவனான நான், உன்னைக் குறித்த விஷயத்தில், நீ உள்ளாய், என்ற ஞானம் இல்லாமலே இருந்தேன். தைத்திரீய ஆநந்தவல்லீ - அஸத்ப்ரஹ்மேதி வேத சேத் அஸந்நேவ ஸ பவதி – ப்ரஹ்மத்தை அறிகிறான் என்று ஒருவன் கூறப்படவில்லை என்றால், அவன் இருந்தும் இல்லாதவே ஆவான் – என்றும், விஷ்ணுபுராணம் - வித்யாந்யா சில்பநைபுணம் – ப்ரஹ்மவித்யைத் தவிர மற்ற அனைத்தும் செருப்புக்குத்துவதில் உள்ள பாண்டித்யம் போன்றதே – என்றும் கூறியது காண்க.

வ்யாக்யானம் – இப்படி மநோவாக்காயங்களை அந்யதாவாக்கிக் கார்யங்கொண்டீராகில், ப்ரதாநமான மநஸ்ஸை மேலே திருத்திக் கொள்ளுகிறோமென்ன (இரும்புபோல் வலிய நெஞ்சம்) – தேவரீருக்குத் திருத்திக்கொள்ளுகைக்கு யோக்யதையில்லை. இரும்பாகில் அக்நியாலே நியமித்துக் கொள்ளலாம்; இது ஒருபடியாலும் திருத்தவொண்ணாது என்கை.

விளக்கம் – இதனைக் கேட்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "இப்படியாக நீவிர் உமது மனம், வாக்கு, சரீரம் ஆகிய மூன்றையும் உலகவிஷயங்களில் திருப்பினீர். இவற்றில் முக்கியமானதாக உள்ள உமது மனதை நம் விஷயமாக மாற்றிக் கொள்கிறோம்", என்றான். (இரும்புபோல் வலிய நெஞ்சம்) – இதனைக் கேட்ட ஆழ்வார், "நீ திருத்தி உன் பணி கொள்வதற்கு ஏற்ற தகுதி இந்த மனதிற்கு இல்லை. இந்த மனம் இரும்பு போன்றது என்றாலும், அதனை உருக்கி, வேண்டியபடி மாற்றிக் கொள்ளலாம். ஆனால், இது எப்படியும் திருந்தாது", என்றார்.

வ்யாக்யானம் – இதுக்கு முன்பு பூர்வாவஸ்தையில் தாம் நின்ற நிலையை அருளிச் செய்கிறார். இதுக்குமேல் அத்தலையில் ப்ரபாவம் சொல்லுகிறார். (இறையிறையுருகும் வண்ணம்) – இவ்வன்மையோடே இது முடிந்துபோகாதபடி இப்போது என் மநஸ்ஸை சிதிலமாம்படி பண்ணினான். கடிநஸ்தலத்திலே வர்ஷித்தால் காடிந்யமடங்க நெகிழ்ச்சிக்கு உறுப்பாமாபோலே, விஷயாந்தரத்தாலே மநஸ்ஸு அதிகடிநமானாலும் சிதிலமாம்படி வயிரவுருக்காயிறே பகவத்ப்ரபாவமிருப்பது.

விளக்கம் – மேலே உள்ளதுவரை, தான் இதற்கு முன்பு இருந்த நிலையை அருளிச் செய்தார். இனி, அந்த நிலையை மாற்றிய ஸ்ரீரங்கநாதனின் மேன்மையைக் கூறுகிறார். (இறை இறை உருகும்வண்ணம்) – இப்படியாக இரும்பு போன்று இருந்த எனது மனம், அப்படியே அழிந்து விடாதபடி, இப்போது எனது மனதைச் சிறிதுசிறிதாக உருக்கினான். கடினமான தரையில் மழை பெய்தால், எந்த அளவு இறுகி நின்றதோ அந்த அளவிற்கு அந்த மண் இளகிக் கொடுக்கும். அது போன்று, உலகவிஷயங்களில் எனது மனம் மிகவும் ஈடுபட்டபடி இருந்தாலும், அந்த மனம் உருகும்படியாக, வைரம் கொண்டு வைரத்தை அறுப்பது போன்று பெரியபெருமாளின் மேன்மை உள்ளது என்றார்.

வ்யாக்யானம் – (சுரும்பமரித்யாதி) – உருக்கின விஷயந்தான் இருக்கிறபடி. வண்டுகள் பொருந்தி விடமாட்டாத சோலை. பரிமளம் படிந்தாற்போலே தன்னிலே பிறந்ததென்னும்படியாய்த்து வண்டுகள் படிந்துகிடக்கும்படி. மது மாறிலிறே அது கால் வாங்குவது. மது மாறுவது செவ்வி மாறிலிறே. ஆக, நித்ய வஸந்தமான சோலையென்கை. சோலையின் போக்யதை புரணியென்னும்படியாய்த்து ஊரில் போக்யதை இருப்பது. பரமபதத்தோபாதி ச்லாக்யமான கோயிலாகக் கொண்டான். (கரும்பினை) – கரும்பு என்றது கைதொட்டால் பிசுகு நாறாதே இருக்கும் போக்யமான வஸ்துவை. ப்ராப்தமுமாய் ஸுசகமுமாய் இருக்கச்செய்தேயும் போக்யதையாய்த்து மிக்கிருப்பது. கன்னல் என்னாதொழிந்தது – பாகவிசேஷத்தாலே ஆக்கனாய் வந்த ஸாரஸ்யமல்ல, ஸ்த்தா ப்ரயுக்தமான ஸாரஸ்யமென்கைக்காக. ரஸோ வை ஸ: என்னக்கடவதிறே.

விளக்கம் – (சுரும்பமர் சோலை) – இப்படி மனதை உருக்கின விஷயம் எப்படிப்பட்டது என்கிறார். வண்டுகள் பொருந்தி நின்று, விடாமல் இருக்கின்ற சோலைகள். சோலைகளின் நறுமணம் எப்படி சோலைகளை விடாமல் உள்ளதோ, அது போன்று, இந்தச் சோலையில் பிறந்த வண்டுகள் இதனை விடாமல் படிந்துகிடக்கின்றன. சோலைகளில் உள்ள தேன் குறைந்தால் அல்லவோ வண்டுகள் அதிலிருந்து புறப்படும்? சோலையின் புதுமை மாறாமல் உள்ளதால், தேனும் குறையாது. ஆகவே, எப்போதும் வஸந்தகாலம் போன்றே உள்ள சோலை. சோலையின் இனிமையைக் கீழே தள்ளும்படியாக அல்லவோ திருவரங்கத்தின் இனிமை உள்ளது? பரமபதத்தைப் போன்றே சிறந்த கோயிலாக அல்லவோ பெரியபெருமாள் கொண்டுள்ளான்?

(கரும்பினை) – கருப்பஞ்சாறு என்று கூறாமல் கரும்பு என்று ஏன் கூறினார்? சாறு போன்று கையால் தொட்டால், பிசுக்கு ஏறாமல், இனிமையாக உள்ளது என்றார். கரும்பு போன்று இயற்கையாகவும், எளிமையாயும் உள்ளபோதிலும், கரும்பைக் காட்டிலும் இனிய வஸ்து. கன்னல் என்று கூறாமல் கரும்பு என்று ஏன் கூறினார்? கற்கண்டு போன்று பல செயல்பாடுகளுக்குப் பின்னர் செயற்கையாக உண்டான இனிமை அல்ல, கரும்பு போன்ற இயற்கையான இனிமை என்றார். தைத்திரீய ஆநந்தவல்லீ – ரஸோ வை ஸ: - ரஸ ஸ்வரூபம் – என்பது போன்று ரஸமாக உள்ளவன் அல்லவோ?

வ்யாக்யானம் – (கண்டுகொண்டு) – "நிதியெடுத்துக் கொண்டு" என்னுமாபோலே, கண்ணாலே பருகும் கரும்பாய்த்து இது. லோசநாப்யாம் பிபந்நிவ. (என் கண்ணினை களிக்குமாறே) – நரகாவஹமான விஷயங்களைக் கண்டு களித்துப்போந்த என் கண்கள் கிடீர் இவ்விஷயத்தைக் கண்டு களிக்கின்றன. (இணை) – களிப்புக்கு ஒன்றுக்கொன்று ஒப்பாமித்தனை போக்கி வேறு உபமானமில்லை. முக்தர் ஸதாதர்சனம் பண்ணிக் களிக்கும் களிப்பும் இக்கண்ணாலே இப்படி களிக்கிற களிப்புக்கு ஸத்ருசமன்றிறே. கரணாபதியான என்னையொழியத் தானே களியா நின்றன. இந்த்ரியங்கள் ஜ்ஞாத ப்ரஸர த்வாரமென்கிற அந்நிலை குலைந்து சேதந ஸமாதியாலேதானே களியா நின்றன. ராமம் மே அநுகதா த்ருஷ்டி: கர்த்தாவையொழியவே கரணங்களுக்கே அந்வய வ்யதிரேகங்களிலே சோகஹர்ஷங்களுண்டாம்படியிறே விஷய ஸ்வபாவமிருப்பது.

விளக்கம் – (கண்டுகொண்டு) – "நிதி எடுத்துக் கொண்டு" என்பது போன்று, கண்களால் பருகும்படியான கரும்பாக அல்லவோ பெரியபெருமாள் உள்ளான்? இராமாயணம் யுத்தகாண்டம் - லோசநாப்யாம் பிபந்நிவ – கண்களால் பருகும்படி – என்றது காண்க. (என் கண்ணினை களிக்குமாறே) – இதுவரை நரகத்தை அளிக்கவல்ல விஷயங்களைக் கண்டு மட்டுமே எனது கண்கள் மகிழ்வு கொண்டன. ஆனால், இன்று இந்த வஸ்துவைக் கண்டு இன்பம் அடைகின்றன. (இணை) – இந்தக் கண்கள் இப்போது அடைகின்ற மகிழ்ச்சிக்கு ஒப்பானது, ஒரு கண் மற்றொரு கண்ணுக்கு ஒப்பு என்று கூறுவது தவிர வேறு ஏதும் இல்லை. முக்தர்கள் அவனை எப்போது கண்டு களிப்பதை ஒப்பாகச் சொல்லலாமே என்றால், அந்த மகிழ்வானது இந்தக் கண்கள் கொண்டு பூமியில் ஏற்படுகின்ற களிப்புக்கு ஒப்பானது அல்ல. எனது கண்களுக்கு எஜமானனாகிய என்னைக் கேட்காமலே எனது கண்கள் களித்தபடி உள்ளன. சேதனனின் ஞானமானது

வெளிப்படும் வழிகளாக இத்த்ரியங்கள் உள்ளன என்ற நிலை மாறி, கண்களானவை தாங்களே சேதனர்கள் போன்று அனுபவிக்கின்றன. இராமாயணம் அயோத்யாகாண்டம் - ராமம் மே அநுகதா த்ருஷ்டி: - இராமனைப் பின் தொடர்ந்து என் பார்வை சென்றுவிட்டது – என்று தசரதன் கூறியது காண்க. ஸ்ரீரங்கநாதனைக் கண்டவுடன், கண்களுக்கு எஜமானனாகிய சேதனனின் அனுமதி இன்றி, கண்கள் தாங்களாகவே களிப்பதும், அவனைக் காணாதபோது சோகத்தில் மூழ்குவதும் நடைபெறும்படியாக அல்லவோ பெரியபெருமாளின் இனிமை உள்ளது?

18. இனிது திரைத் திவலை மோத எறியும் தண் பரவை மீதே

தனிகிடந்து அரசு செய்யும் தாமரைக்கண்ணன் எம்மான்

கனி இருந்தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள்

பனி அரும்பு உதிருமாலோ என்செய்கேன் பாவியேனே.

பொருள் – இனிமையாக எழுகின்ற அலைகளால் நீர்த்துளிகள் மேலே அடிக்கும்படியாக, மேலே ஓங்கி வீசுகின்ற குளிர்ந்த கடல் போன்ற திருக்காவேரியின் கரையில், தனியனாகப் பெரியபெருமாள் கண்வளர்கிறான். அனைவரது அஹங்காரங்களும் நீங்கும்படியாக செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்பவனும், தாமரை போன்ற சிவந்த அழகான கண்கள் கொண்டவனும், என்னுடைய ஸ்வாமியும், கொவ்வைக்கனி போன்று சிவந்த வாயை உடையவனும், பெரியபெருமாளும் ஆகிய என் கண்ணனை காணப்பெற்ற எனது கண்கள் குளிர்ந்த ஆனந்தக்கண்ணீர் பெருகியபடி உள்ளன. இந்தக் கண்ணீர் மறைப்பதால், அவனை நன்றாக பார்த்து வணங்கும் நிலையை அடையாத பாவியாகிய நான் என்ன செய்வது?

அவதாரிகை – கண்களினுடைய களிப்புக்குப் போக்குவீடான ஆநந்தாச்ருக்கள் ப்ரவஹிக்கையாலே அது குட்யாதி வ்யவதாநம் போலே அநுபாவ்ய விஷயத்தை மறையா நின்றதென்று வெறுக்கிறார்.

விளக்கம் – தனது கண்கள் அடைந்த மகிழ்ச்சியால் ஆனந்தக்கண்ணீர் பெருகுகிறது. அது சுவர் போன்று கண்கள் முன்பாக நின்று, பார்வையை மறைப்பதால், அனுபவிக்கக்கூடிய விஷயமான பெரியபெருமாளை மறைக்கிறது என்று வருந்துகிறார்.

வ்யாக்யானம் – (இனிதிரைத் திவலை மோத) – ”ஒண்சங்கதைவாளாழியான்” என்றவிடம்போலே இவ்விடமொரு கடைக்குறைத்தலாய் இருக்கிறதாய்த்து. இனிதாகத் திரைகளிலுண்டான திவலையானது ஸ்பர்சிக்க, மலைபோலே சில பெருந்திவலைகள் வந்து முறிந்து சிறு திவலையாய், துடை குத்த உறங்குவாரைப்போலே திருமேனியை ஸ்பர்சியா நிற்கும். அவை அங்குத்தைக்கு அநுகூலமாக ஸ்மர்சியா நிற்கச் செய்தேயும், அதுவும் பொறாத திருமேனியின் ஸௌகுமார்யத்தை அநுஸந்திக்கையாலே, “மோத” என்கிறாராய்த்து இவர். “அரக்கர்கோனைச் செற்ற நம்சேவகனார்” என்று ஆச்ரயண வேளையிலே சக்தியை அருளிச்செய்தார். இப்போது போகவேளையாகையாலே ஸௌகுமார்யத்தை அநுஸந்திக்கிறாரிறே. (எறியும் தண் பரவை மீதே) – திரைக்கிளர்த்தியையுடைத்தாய் ச்ரமஹரமாயிருந்துள்ள ஸமுத்ரத்தின் மேலே சாய்ந்தருளுமாபோலே வந்து கண்வளர்ந்தருளுகிறவனென்னுதல்; அன்றிக்கே, பரப்பாலும் ஜலஸம்ருத்தியாலும் இதனையே ஸமுத்ரமாகச் சொல்லிற்றாகவுமாம்.

விளக்கம் – (இனிது திரை திவலை மோத) – திருவாய்மொழி (8-8-1) – ஒண்சங்கதைவாளாழியான் – என்னும் பாசுரத்தில் “சங்கு கதை” என்று இருப்பதற்குப் பதிலாக “சங்கதை” என்று உள்ளது போன்று, இங்கு “இனிய திரை” என்று இருக்கவேண்டிய பதமானது, கடைசி எழுத்து குறைந்து “இனிதிரை” என்று உள்ளது. இனியதாகவும், அலைகளில் இருந்து கிளம்பியதும் ஆகிய நீர்த்துளிகள் தொடும்படியாக. மலை போன்று ஒரு சில நீர்த்துளிகல் மிகவும் பெரிதாக வருகின்றன; அவை உடைந்து சிறு துளிகளாக தெரிக்கின்றன; அவற்றால் திருக்கால்கள் பிடிக்கப்பட்டவனாக பெரியபெருமாள் உறங்குவதைக் கூறுகிறார். அந்த நீர்த்துளிகள், கால்களைப் பிடித்துவிடுவது போன்று மென்மையாகவே இவனைத் தொட்டாலும், அந்த மென்மையைக் கூடப் பொறுக்க இயலாத திருமேனியைக் கொண்டவனாக பெரியபெருமாள் உள்ளான். இதனால் “மோத” என்று கூறினார். திருமாலை (11) - அரக்கர்கோனைச் செற்ற நம்சேவகனார் – என்று இவனை அண்டும் நேரமாக இருந்தால், இவனது சக்தியைப் பற்றிப் பேசுகிறார். இங்கு அவனை இன்பமாக

அனுபவிக்கும் நேரமாக இருப்பதால், மென்மையைக் குறித்துக் கூறுகிறார். (எறியும் தண் பரவை மீதே) – அலைகள் வீசுவதாக, களைப்பை நீக்கிக்கொள்ள திருப்பாற்கடலின்மீது சயனித்துள்ளது போன்று, இங்கு காவேரியில் சயனித்துள்ளான். அல்லது, காவேரியின் பரப்பளவையும், நீரின் அளவையும் கருத்தில் கொண்டு, இதனையே கடல் என்று கொள்வதாகவும் கூறலாம்.

வ்யாக்யானம் – (தனிகிடந்து) – நினைவறிந்து பரிமாறுவார் ஒருநாடாகவுடையவன் கிடீர், இங்கே வந்து தனியே கண்வளர்ந்தருளுகிறான். இப்படிக் கண்வளர்ந்தருளாநிற்க ஒரு கார்யமற்று அந்யபரராய்த் திரியா நின்றார்களிறே ஸுகமே ஸம்ஸாரிகள். "தனியேன் வாழ்முதலே" என்பானொரு தனியனைக் கிட்டுமோ என்னும் நசையாலேயிறே தனியே வந்து கண்வளர்ந்தருளுகிறது. அதுக்குடலாகச் செய்கிற கார்யந்தான் ஏதென்னில் (அரசு செய்யும்) – அரசு செய்கையாவது, வன்னிலும் அறுக்கை. வன்னியமாகிறது அஹம் என்றிருக்கை. அத்தை அறுக்கையாவது, நம: என்னப் பண்ணிக்கொள்ளுகை. நம இத்யேவ வாதிந: என்கிறபடியே நித்யஸூரிகளுடைய யாத்ரையே இங்குள்ளார்க்கும் யாத்ரையாம்படி பண்ணிக்கொள்ளுகை. இவ்வன்னியம் அறுக்கைக்குப் பரிகரமேதென்னில் (தாமரைக்கண்ணன்) – கையிலே ப்ரஹ்மாஸ்த்ரமிருக்க வெல்லவொண்ணாத இடமில்லையிறே; அங்குள்ளாரை வென்ற பரிகரத்தைக் கொண்டாய்த்து இங்குள்ளாரையும் வென்றது. "தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவும் தலைமகனை" என்னக்கடவதிறே. அவர்களுக்கு போகோபகரணமான இத்தைக் கொண்டு கிடீர் இங்குள்ளாருடைய விரோதியைப் போக்குவது. இப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு அகப்பட்டார் ஆரென்னில் (எம்மான்) – நான் தோற்று என்னை எழுதிக் கொடுத்தேன். ஸம்ஸாரிகளுக்கும் இவ்வருகான என்னைத் தோற்பித்த கண்களுக்கு இனி வெல்லவொண்ணாத நிலமுண்டோ?

விளக்கம் – (தனி கிடந்து) – தன்னுடைய எண்ணத்தை அறிந்து செயல்படுபவர்கள் பலரும் நிறைந்த பரமபதத்தை உடையவன் அல்லவோ இங்கு திருவரங்கத்தில் தனியாக சயனித்தபடி உள்ளான்? இப்படியாக இவன் இங்கு சயனித்துள்ளபோது, ஜீவர்கள் தங்களது ஆத்மாவானது பிழைப்பதற்கான செயல்கள் எதனையும் செய்யாமல், ஆத்மாவிற்கு நாசம் ஏற்படுத்தவல்ல செயல்களைச் செய்தபடி, அதிலேயே சுகம்

கண்டவர்களாக திரிகின்றனரே! திருவாய்மொழி (10-10-1) – தனியேன் வாழ்முதலே – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள ஒருவனைக் கிட்டப்பெறுவோமோ என்ற ஆசையால் அல்லவோ பெரியபெருமாள் தனியாக வந்து சயனித்துள்ளான்? இப்படியாக ஒருவனைப் பெறுவதற்காக இவன் செய்கின்ற செயல் என்னவென்றால் (அரசு செய்யும்) – அரசு செய்தல் என்றால், வன்னியம் நீக்கல் ஆகும். வன்னியம் என்றால் – "நான் எனக்கே உருயவன்" என்ற எண்ணம் ஆகும். இதனை நீக்குதல் என்றால் – "நான் எனக்கு உரியவன் அல்லன்" என்று எண்ண வைப்பதாகும். மஹாபாரதம் சாந்தி பர்வம் – நம இதி ஏவ வாதிந: - வாயால் நம: என்று கூறியபடி இருப்பர் – என்னும்படி நித்யஸூரிகள் எவ்விதம் அஹங்காரம் போன்றவை அற்று உள்ளார்களோ அது போன்று இங்கு உள்ளவர்களும் இருக்கும்படி மாற்றுவதற்காக இங்கு சயனித்துள்ளான். இப்படியாக அஹங்காரம் போன்றவற்றை நீக்குவதற்கு பெரியபெருமாளிடம் என்ன சாதனம் உள்ளது என்றால் (தாமரைக்கண்ணன்) – கையில் ப்ரஹ்மாஸ்த்ரம் கொண்டு வெல்லக்கூடிய எதிரிகள் இல்லை, நித்யஸூரிகளை எவ்விதம் தனது தாமரை போன்ற கண்களின் அழகால் வென்றானோ அது போன்றே இங்கு உள்ளவர்களையும் வென்றான். திருவாய்மொழி (2-6-3) – தாமரைக்கண்ணனை விண்ணோர் பரவும் தலைமகனை – என்றது காண்க. அவர்கள் இவனை அனுபவிப்பதற்கு ஏற்றபடி உள்ள தனது கண்களைக் கொண்டு அல்லவோ இங்கு உள்ளவர்களின் விரோதியாக உள்ள அஹங்காரம் போன்றவற்றை வெல்கிறான்? இப்படிப்பட்ட ப்ரஹ்மாஸ்த்ரம் போன்ற கண்களில் வீழ்ந்தவர்கள் யாரேனும் உண்டா என்றால் (எம்மான்) – இந்தக் கண்களுக்குத் தோற்றுப் போய், என்னை நானே அவனுக்கு எழுதிக்கொடுத்தேன். ஸம்ஸாரிகள் அனைவரிலும் இறுதியாக உள்ள என்னையே தோற்கச் செய்த இந்தக் கண்களாக் வெற்றி கொள்ள இயலாதவர்கள் வேறு யார் இருக்க முடியும்?

வ்யாக்யானம் – (கனியிருந்தனைய செவ்வாய்) – அக்கண்ணாலே நிர்மமரானார்க்கு அநுபாவ்யமான விஷயமிருக்கிறபடி. கண்டபோதே நுகரலாம் கனிபோலேயாய்த்து திருவதரத்தில் போக்யதை இருப்பது. "இருந்து" என்றது அச்செவ்வி என்றுமொக்க ஏகரூபமாயிருக்கிறபடி. ஸதைகரூபரூபாய என்னக்கடவதிறே. (கண்ணனை) – பெரியபெருமாளைத் திருவடி தொழுதால், "அவதாரத்தில் பிற்பாடர்க்கும் உதவுகைக்காக க்ருஷ்ணன் வந்து கண்வளர்ந்தருளுகிறான்" என்று ஸ்மரிக்கலாம்படியாய்த்து இருப்பது. "யசோதைப்பிராட்டி பிள்ளை மனம் கன்றாமல் தீம்பிலே கைவளரும்படி வளர்த்த

மொசுமொசுப்பெல்லாம் தோற்றியிருக்கும் பெரியபெருமாளைக் கண்டால்” என்றும், “வசிஷ்டாதிகளாலே ஸுசிக்ஷிதராய் வளர்ந்து படிந்த விநயமெல்லாம் தோற்றும்படியான சக்ரவர்த்தித்திருமகனை ஸ்மரிக்கலாம்படியாயிருக்கும் நம்பெருமாளைக் கண்டால்” என்றும் பட்டர் அருளிச்செய்வர்.

விளக்கம் – (கனியிருந்தனைய செவ்வாய்) – அத்தகைய கண்களால் மமகாரம் நீங்கப்பெற்றவர்கள் அநுபவிக்கத்தகுந்த விஷயம் இதுவே ஆகும். பார்த்தவுடன் சுவைக்க வேண்டும் என்னும் எண்ணம் தோன்றும்படியான பழம் போன்று பெரியபெருமாளின் திருப்பவளம் இனிமையுடன் உள்ளது. “கனி அனைய” என்று கூறாமல் “கனி இருந்து அனைய” என்று கூறுவதால், உலகில் உள்ள மற்ற கனிகளைப் போன்று அழிந்துவிடாமல் எப்போதும் இருப்பது என்று கூறுகிறார். ஸதைகரூபரூபாய – எப்போது மாறாத ரூபம் கொண்டவன் – என்றது காண்க. (கண்ணனை) – பெரியபெருமாளை வணங்கும்போது, “தான் அவதரித்த காலத்திற்கு பின்னர் இந்த உலகில் தோன்றியவர்கள் தன்னைக் காணும்படியாக கண்ணன் சயனித்துள்ளான்”, என்று தோன்றுவது இயல்பாகும். “பல குறும்புகள் செய்தாலும் கண்ணனைக் கண்டிக்காமல் யசோதை விட்டதால் ஏறியுள்ள செருக்கு அனைத்தும் வெளிப்படும்படியாகக் கிடக்கும் பெரியபெருமாள்” என்றும்; ”வசிஷ்டர் உள்ளிட்ட பலராலும் நல்வழிபடுத்தப்பட்டவனாக, அந்த பழக்கம் காரணமாக அடக்க ஒடுக்கத்துடன் உள்ள இராமனை வெளிப்படுத்தும்படியாக நிற்கும் நம்பெருமாள்”, என்றும் ஸ்வாமி பராசரபட்டர் கூறுவது காண்க.

வ்யாக்யானம் – (கண்ட கண்கள்) – அநாதிகாலம் இழந்த இழவு தீரக் காணப்பெற்ற கண்கள். (பனியரும்புதிருமாலோ) – கண்டு அநுபவிக்கப்பெற்ற ப்ரீதியாலே ஆநந்தாச்ரு ப்ரவஹியா நின்றது. அநுபவஜநித ஹர்ஷமடியாக வந்ததாகையாலே அதிசீதளமாய், வறுத்த பயறு முளைக்கும்படி இருக்கும் என்கை. விரஹமடியாக வந்ததாகிலிறே உஷ்ணமாயிருப்பது. ஆஹ்லாதசீதநேத்ராம்பு: என்னக்கடவதிறே. (என்செய்கேன் பாவியேனே) – கண்ணநீர் அருவிகள்போலே மறைக்கையாலே, “என் செய்கேன்” என்கிறார். “பெறுதற்கரிய விஷயத்தைக் கண்டு அநுபவிக்கப் பெற்றிருக்க, இதுக்கு இடைச்சுவருண்டாவதே! என் செய்கேன் பாவியேன்?”, என்கிறார். “ஆலோ” என்றது விஷாதாதிசய ஸூசகம். “அத்தலையில் வைலக்ஷண்யத்தை அளவுபடுத்தவொண்ணாது.

அநுபவஜநித ஹர்ஷத்தை அளவுபடுத்தப் போகிறதில்லை; என் செய்கேன் பாவியேன்", என்கிறார். "கண்ணநீர் ஊற்று மாறாதபடி வெள்ளமாய்ச் செல்லுகையாலே இத்தை மாற்றி ஒருகால் கண்டதாய் விடப்போகிறதில்லை; இவ்விஷயத்தை அநாதிகாலம் பாபத்தாலே அநுபவிக்கப்பெற்றிலேன்; இன்று கண்ணநீர் மறைக்க அநுபவிக்கப்பெற்றிலேன்; என் கார்யம் வெள்ளக்கேடும் வறட்கேடுமாய்த்து", என்கிறார். அங்ஙனன்றியே, இப்போது இழவுண்டாய் "பாவியேன்" என்கிறாரல்லர்; பாட்டுக்கேட்டு ஈடுபட்டுப் பாவியே னென்பாரைப் போலே பாவியேனென்கிறார் என்றும் சொல்லுவர்கள்.

விளக்கம் – (கண்ட கண்கள்) – எல்லையற்ற காலம் இழந்திருந்த ஒன்றை மீண்டும் காணப்பெற்ற கண்கள்.(பனி அரும்பு உதிருமாலோ) – அப்படிப்பட்ட வஸ்துவான பெரியபெருமாளைக் கண்டு அனுபவித்த மகிழ்ச்சி காரணமாகக் கண்களில் ஆனந்தக் கண்ணீரானது வெள்ளம் போன்று பெருகியது. அவனைக் கண்ட ஆனந்தம் காரணமாக வெளிப்பட்டதால், அந்தக் கண்ணீர் மிகவும் குளிர்ச்சியாக இருந்தது. இதன் குளிர்ச்சி காரணமாக, வறுத்த பயறு கூட இந்த நீரில் ப்யிர் செய்தால் முளைக்கக்கூடும் என்பதாக உள்ளது. விரக தாபம் காரணமாக வரும் கண்ணீர் அல்லவோ சூடாக இருக்கும்? ஸ்ரீவிஷ்ணுதத்வம் – ஆஹ்லாதசீதநேத்ராம்பு: - மகிழ்வு காரணமாக உண்டான குளிர்ந்த ஆனந்தக்கண்ணீர் – என்றது காண்க. (என்செய்கேன் பாவியேனே) – ஆனந்தக் கண்ணீரானது அருவி போன்று பெருகி பார்வையை மறைத்தது. இதனால், "என்ன செய்வது?", என்றார். "காண்பதற்கு அரிதாக உள்ள இந்தப் பெரியபெருமாளைக் கண்ட பின்னரும், இவனை அனுபவிக்க இயலாமல், அவனுக்கும் எனது கண்களுக்கும் இடையே கட்டப்பட்ட சுவர் போன்று இந்தக் கண்ணீர் உள்ளதே! பாவியான நான் என்ன செய்வேன்?", என்கிறார். "ஆலோ" என்பதன் மூலம் அதிக வருத்தம் கூறப்படுகிறது. "பெரியபெருமாளின் ப்ரபாவம் எல்லையற்றதாகும். ஆகவே அவனைக் கண்டவுடன் உண்டாகும் மகிழ்ச்சியையும் அளவுபடுத்த இயலாது. என்ன செய்வது என்று தெரியாத பாவியாகிவிட்டேனே?", என்கிறார். "எனது ஆனந்தக்கண்ணீர் சற்றே நின்றாலும் அவனைக் காணலாம் என்றால், அதற்கும் வழியின்றி, அவனைக் காணவிடாமல் இடைவிடாது வருகிறதே. எல்லையற்ற காலமாக எனது பாவங்கள் காரணமாக இவனைக் கண்டு அனுபவிக்க இயலவில்லை; இப்போது ஆனந்தக்கண்ணீர் காரணமாக இவனைக் கண்டு அனுபவிக்க இயலவில்லை. இப்படி இப்போது வெள்ளம்

காரணமாகவும், அப்போது பக்தி வறட்சி காரணமாகவும் அவனை அனுபவிக்க இயலாமல் போனதே!", என்கிறார். மேலே உள்ளபடி பொருள் கூறாமல், வேறு விதமாகவும் உரைக்கலாம். இனிமையான சங்கீதக் கச்சேரி ஒன்றைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள், தங்களையும் மறந்து, "ஆகா! பாவியேன்", என்பது போல இவரும் கூறுகிறார் எனலாம்.

20. குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கிக்
கடல் நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலும் ஆகண்டு
உடல் எனக்கு உருகும் ஆலோ என் செய்கேன் உலகத்தீரே

பொருள் – இந்த உலகத்தில் உள்ளவர்களே! கடல் போன்ற நிறம் கொண்டவனும், எனது ஸ்வாமியும், ஸர்வேச்வரனும் ஆகிய ஸ்ரீரங்கநாதன் - மேற்குத் திசையில் தனது திருமுடியை வைத்தபடியும், கிழக்குத் திசையில் தனது திருவடிகளை நீட்டியபடியும், வடக்குத் திசைக்குத் தனது பின்னழகைக் காண்பித்தபடியும், தெற்குத் திசையில் உள்ள இலங்கையை அன்புடன் நோக்கியபடியும் ஆதிசேஷன் மீது சயனித்துள்ளான். இப்படியாக அவன் கிடக்கும் அழகைக் கண்டு எனது சரீரம் உருகுகிறதே! நான் என்ன செய்வேன்?

அவதாரிகை – சக்ஷுராத்யவயவங்களுக்குப் பிறக்கிற விக்ருதிகளேயன்றிக்கே, ததாச்ரயியாய் அவயவியான சரீரந்தான் கட்டழியாநின்றது என்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் கண் என்னும் உறுப்பிற்கு உண்டான வேறுபாட்டைக் கூறினார். இனி இந்தப் பாசுரத்தில், தனது கண் மட்டும் அல்லாமல், உடல் முழுவது உருகுவதைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (குடதிசை இத்யாதி) – இவரை உருக்கின பரிகரந்தானிருக்கிறபடி. பூமியை ஸ்ருஷ்டித்தது புண்யபாப மிச்ரங்களையும் பாபப்ரசுரங்களாயும் மநுஷ்ய திர்யக்

ஸ்தாவரங்களாயும் இருந்துள்ள பதார்த்தங்கள் வர்த்திக்கைக்காகவென்றும், ஆகாசத்தை ஸ்ருஷ்டித்தது புண்ய யோநிகளான தேவதைகள் வர்த்திக்கைக்காகவென்றும் நினைத்திருப்பர். நடுவில் திக்குகளுக்கு ஒரு விநியோகமில்லை, இது வ்யர்த்த ஸ்ருஷ்டியோ என்றிருப்பர்; இப்போது அங்ஙனன்று, இதுவும் ஸப்ரயோஜந மென்னுமிடமும் கண்டார். சேதநஸ்ருஷ்டி முமுக்ஷுஸிஸ்ருக்ஷயா ஆனாற்போலேயும், திக்குகளை ஸ்ருஷ்டித்ததும் சேதநர்க்கு ருசிஜநகமான ஸ்வவ்யாபாரார்த்தமாகக் கண்டதாகாதே என்றிருக்கிறார்.

விளக்கம் – (குடதிசை) – இவரை உருக்கிய விஷயம் எது என்பதைக் கூறுகிறார். புண்ணியம் மற்றும் பாவம் ஆகியவை கலந்த மனிதர்கள், பாவங்கள் மட்டுமே மிகுந்த விலங்குகள், ஸ்தாவரம் என்று கூறப்படும் அசையாத மரங்கள் ஆகியவை வாழ்வதற்காக பூமியைப் படைத்தான். புண்ணியம் நிறைந்தவர்களாக தேவர்கள் வாழ்வதற்காக ஆகாயத்தைப் படைத்தான். இவை தவிர திசைகளையும் படைத்தான். மேலே உள்ளவை போன்று திசைகளால் எந்தவிதமான பயனும் இல்லை என்றே ஆழ்வார் எண்ணியிருந்தார். ஆனால், பெரியபெருமாளைக் கண்டவுடன் திசைகளுக்கும் பயன் உள்ளது என்று உணர்ந்தார். சேதனர்களைப் படைத்தது மோக்ஷ ஆசை மிக்கவர்களை உண்டாக்கவே என்பது போன்று, சேதனர்களுக்கு தனது செயல்கள் மீது ருசி உண்டாவதற்காகவே திசைகளைப் படைத்தான் என்று அறிந்தார்.

வ்யாக்யானம் – (குடதிசை முடியை வைத்து) – மேலைத்திக்கு ஸப்ரயோஜநமாம்படி உபயவிபூதிக்குமாகச் சூடின திருவபிஷேகத்தையுடைத்தான திருமுடியை வைத்து, "முடியானே" என்கிறபடியே சேஷித்வத்தை அநுஸந்தித்து, அத்திக்காக வாழும்படியிறே திருமுடியை வைத்தது. (குணதிசை பாதம் நீட்டி) – "மூவுலகும் தொழுதேத்துஞ் சீரடியான்" என்கிறபடியே ஸகலலோகங்களும் வாழுகைக்கு இழியும் துறையான திருவடிகளை, கீழைத்திக்கு வாழும்படியாக நீட்டி. "நீட்டி" என்றது என்னளவும் வர நீட்டின திருவடிகள் என்கிறார். துர்யோதந ஸ்தாநம் இங்ஙனே வாழ்ந்துபோனால் அர்ஜுநன் இருப்பு வாழச்சொல்லவேண்டாவிறே. "ஆளவந்தார் திருவடி தொழ எழுந்தருளினால் 'துர்யோதந ஸ்தாநம்' என்று திருமுடிப்பக்கத்தில் ஒரு ப்ரதேசத்தில் ஒருநாளும் எழுந்தருளி இருந்தறியார்; திருவடிக்குக் கிழக்கு எழுந்தருளியிராத ப்ரதேசமில்லை" என்று பட்டர் அருளிச்செய்வர்.

விளக்கம் - (குடதிசை முடியை வைத்து) – மேற்குத் திசையானது பயன் அடையும்விதமாக, தானே லீலாவிபூதி மற்றும் நித்யவிபூதி ஆகிய இரண்டிற்கும் தலைவன் என்று உணர்த்தும் விதமாகச் சூடிய திருமுடியை வைத்துள்ளான். திருவாய்மொழி (3-1-8) – முடியானே – என்று கூறுவது போன்று, தனது எஜமானத்தன்மையை முன்னிட்டு, மேற்குத் திசையில் உள்ளவர்கள் வாழும்படி அல்லவோ அங்கு தனது திருமுடியை வைத்தான். (குணதிசை பாதம் நீட்டி) – திருவாய்மொழி (3-1-8) - மூவுலகும் தொழுதேத்துஞ் சீரடியான் – என்னும்படியே அனைத்து உலகங்களும் தங்களது வாழ்வைப் பெறுவதற்காக வந்தடையும் திருவடிகளை, கிழக்கில் உள்ளவர்கள் வாழும்படியாக நீட்டியுள்ளான். "நீட்டி" என்பதன் மூலம், திருவரங்கத்தின் கிழக்கில் உள்ள தனது ஊரான திருமண்டங்குடிவரை தனது திருவடிகளை நீட்டி, தன்னைப் பிடித்தான் என்கிறார். துரியோதனன் நின்ற இடமான திருமுடி திசையே வாழும்போது, அர்ஜுனன் நின்ற திருவடி திசையைக் குறித்துக் கூறவும் வேண்டுமோ? "ஆளவந்தார் பெரியபெருமாளை ஸேவிக்க எழுந்தருளினால், 'துரியோதனின் இடம்' என்று கூறி, திருமுடிப் பக்கம் நிற்கவே மாட்டார். திருவடிகளுக்குக் கிழக்குப் பக்கம் அவர் எழுந்தருளாத இடமே இல்லை", என்று ஸ்வாமி பராசரபட்டர் அருளிச் செய்வார்.

வ்யாக்யானம் – (வடதிசை பின்பு காட்டி) – வடக்கு திக்கு ஆர்யபூமியாகையாலே ஸம்ஸ்க்ருதமுரணராய், ஆழ்வார்கள் ஈரச்சொல்லும் நடையாடாதே தேசமாகையாலே அத்திக்கைத் திருத்தும்போது பின்னழகெல்லாம் வேணுமென்றிருந்தார். பூர்வாங்காததி காபராங்ககலஹம் என்னக்கடவதிறே. (தென்திசை இலங்கை நோக்கி) – இதுக்கு முன்புத்தை திக்குகளைக் கடாக்ஷித்தது அவ்வோ தேசங்களின் வெறுமை தீருகைக்காக; இது தம் குறை தீருகைக்காக. அவை க்ருபாகார்யம்; இது தன் செல்லாமையாலேயாய்த்து. "அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும்" என்னக்கடவதிறே. ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு வன்னியமறுத்து ராஜ்யத்தைக் கொடுத்து அவன் ஸம்ருத்தியைப் பார்த்துக் கொண்டு கண்வளர்ந்தருளுகிறபடியாய்த்து. மாதா ப்ரஜைகளுக்கு முலை கொடுத்து அவற்றின் முகமலர்த்தி காண்கைக்குப் பாங்காகச் சாயுமாபோலே. "செல்வ விபீடணற்கு வேறாக நல்லானை" என்னக்கடவதிறே. "விபீஷணன் புகுருமாகில் நானும் என் பரிகரமும் விடைகொள்ளுமித்தனை", என்று

மஹாராஜர் சொல்ல; அன்றீன்ற கன்றின்பக்கல் வாத்ஸல்யத்தாலே முன்னணைக் கன்றைக் கொம்பிலும் குளம்பிலும் கொள்ளும் ஸுரபியைப்போலே, "ஸபரிகரரான உம்மை விடவேண்டுமளவிலும் விபீஷணனை விடோம்" என்றாரிறே; அந்த மஹாராஜர் தமக்கு ஒரு நலிவு வரப்புக்கவளவிலே, கிம் கார்யம் ஸீதயா மம என்றாரிறே.

விளக்கம் – (வடதிசை பின்பு காட்டி) – வடக்குத் திசையானது ஸம்ஸ்க்ருதம் அறிந்தவர்கள் வாழும் இடம் என்பதால், கடினமான ஸம்ஸ்க்ருதம் நடமாடும் இடமாக உள்ளது. அங்கு ஆழ்வார்களின் ஈரச்சொல் நடமாடாத இடமாக உள்ளது. இதனால், அந்தத் திசையில் உள்ளவர்களைத் திருத்த எண்ணினான். ஆகவே தனது பின்னழகை அவர்களுக்குக் காண்பிக்கிறான். பூர்வாங்காததிகாபராங்ககலஹம் – விக்ரஹத்தின் முன்னழகைக் காட்டிலும் பின்னழகு அதிகமாக உள்ள – என்று கூறப்படுவது காண்க. (தென்திசை இலங்கை நோக்கி) – இதுவரை கூறப்பட்ட மேற்கு, கிழக்கு மற்றும் வடக்கு ஆகிய திசைகளில் தனது அவயவங்களை வைத்தது ஏனென்றால், அந்தத் திசைகளின் பயனற்ற தன்மை என்னும் குறைபாடு நீங்குவதற்காக ஆகும்; ஆனால் தெற்குத் திசையை நோக்கித் தனது திருமுகத்தை வைத்தது ஏனென்றால் தனது குறை நீங்கவே ஆகும். அந்தத் திசைகளுக்குச் செய்தவை தனது கருணையால் செய்தவை ஆகும்; ஆனால் தென்திசைக்குச் செய்தது, தான் செல்லாமையால் (இலங்கைக்குச் செல்லாமையால்) ஆகும். பெருமாள் திருமொழி (1-10) - அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும் – என்று, தனக்குப் பிரியமான விபீஷணன் உள்ள திசையை நோக்கியபடியே உள்ளான். விபீஷணனின் விரோதிகளைப் போக்கி, அவனுக்கு அரசாட்சியை அளித்து, அவன் சிறப்பாக அரசாட்சி செய்வதைப் பார்த்துக் கொண்டு, மகிழ்வுடன் சயனித்துள்ளான். தாய் ஒருவள் தனது ஸ்தனத்திலிருந்து கைக்குழந்தைக்குப் பால் கொடுத்த பின்னர், அந்தக் குழந்தையின் மலர்ந்த முகத்தை நோக்குவதற்கு வசதியாகச் சாய்ந்து படுத்திருப்பது போன்று, இவன் தனக்குப் பிரியமானவனைப் பார்த்தபடி சயனித்துள்ளான். பெரியதிருமொழி (6-8-5) - செல்வ விபீடணற்கு வேறாக நல்லானை – என்றது காண்க. சுக்ரீவன் இராமனிடம், "நீ விபீஷணனைச் சேர்த்துக் கொண்டால், நானும் எனது படைகளும் உன்னிடமிருந்து சென்றுவிடுவோம்", என்றான். இதனைக் கேட்ட இராமன் செய்தது என்ன? அன்றைக்கு ஈன்ற கன்றிடம் உள்ள வாத்ஸல்யம் காரணமாக, இதற்கு முன்பு ஈன்ற கன்றைத் தனது கொம்பாலும் குளம்பாலும் தள்ளும் பசு போன்று, இராமன் சுக்ரீவனிடம், "படையுடன் உன்னை

விடவேண்டும் என்ற நிலை வந்தாலும், நான் விபீஷணனைக் கைவிடமாட்டேன்", என்றான். ஆனால் முன்பு சுக்ரீவனுக்கு ஒரு தாழ்வு உண்டானால் - கிம் கார்யம் ஸீதயா மம – சீதையால் எனக்கு என்ன பலன் – என்றான் அல்லவோ? இதன் கருத்து – சுக்ரீவனைக் காட்டிலும் விபீஷணனிடம் அன்பு அதிகம் என்பதாகும்.

வ்யாக்யானம் – (கடல்நிறக்கடவுள்) – நித்யஸூரிகளுக்கு நித்யாகாங்க்ஷிதமான வடிவைடைய பரதேவதை கிடீர், ஒரு ஸம்ஸாரியைக் குறித்து ஸாபேக்ஷனாய்க் கிடக்கிறது. கடல்போலே கண்டார்க்கு ச்ரமஹரமாயாய்த்து வடிவிருப்பது. கடல் வர்ணத்துக்குப் போலியாமித்தனைபோக்கி, அப்ராக்ருத வஸ்துவுக்கு ஒப்பாக மாட்டாதிறே என்கை. (எந்தை) – அவ்வடிவைக்காட்டி என்னை எழுதிக்கொண்டாவன். பழங்கிணறு கண்வாருகிறதென்? ப்ரக்ருதிவச்யனாய் தாழ்வுக்கு எல்லைநிலமான என்னளவும் வரவன்றோ வெள்ளங்கோத்தது. "நீசனேன் நிறைவொன்றுமிலேன் என் கண் பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே" என்னக்கடவதிறே. (அரவணைத் துயிலுமா கண்டு) – விலக்ஷணமான ரத்னத்தை விலக்ஷணமான தகட்டிலே அழுத்தினாற்போலே, திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்தபின்பாய்த்து இவ்வஸ்து மஹார்க்கமாய்த்து.

விளக்கம் – (கடல் நிறக் கடவுள்) – நித்யஸூரிகள் எப்போதும் காண்பதற்கு ஆசைப்படுகின்ற அழகைக் கொண்ட ஸர்வேச்வரனாகிய பெரியபெருமாள், திருவரங்கத்திலே வந்து, "நம்மை அனுபவிக்க (அல்லது நாம் அனுபவிக்க) ஒரு ஸம்ஸாரி கிடைக்கமாட்டானோ?", என்று எண்ணியபடி சயனித்துள்ளான். கடல்போன்ற இவனது திருமேனியானது, காண்பவர்களின் களைப்பை ஆற்றும்படியாக உள்ளது. கடல் போன்ற நிறத்துடன் இவன் திருமேனி உள்ளது என்றாலும், இவனது திருமேனி அப்ராக்ருத வஸ்துவாக உள்ளது. (எந்தை) – இப்படிப்பட்ட தனது திருமேனியைக் காண்பித்து என்னைத் தனக்கென எழுதிக்கொண்டான். புதிய கிணறு ஒன்று தயாராக உள்ளபோது, பழைய கிணற்றைத் தூறு எடுப்பார்களோ? இது போன்று, தாழ்வுக்கு எல்லையான என்னை வசப்படுத்தியபோது, பழமையான நித்யஸூரிகளை வசப்படுத்தியுள்ளான் என்று கூறவும் வேண்டுமோ? திருவாய்மொழி (3-3-4) - நீசனேன் நிறைவொன்றுமிலேன் என் கண் பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே – என்றது காண்க. (அரவணை துயிலுமா கண்டு) – உயர்ந்த இரத்தினம் ஒன்று தங்கத்திலே வைத்துப் பதிக்கப்பட்ட பின்னர், மேலும் விலை மதிப்பற்றதாக ஆவது போன்று,

உயர்ந்த ஆதிசேஷன் மீது சயனித்த பின்னரே பெரியபெருமாளின் அழகு மேலும் அதிகமாகிறது.

வ்யாக்யானம் – (உடலெனக்குருகுமாலோ) – திருவநந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளுகிறபடியைக் கண்டு சேதநன் உருகுகையன்றிக்கே, ஜடமான சரீரம் உருகாநின்றது. பகவத் ஸ்வரூபதிரோதாநகரீம் என்கிறபடியே திரோதாயகமான சரீரம் கட்டழியாநின்றது. தேஹயோகாத்வா ஸோ அபி என்கிறபடியே ஜ்ஞாநஸங்கோசரமான சரீரம் அநுபவ ஜநித ஹர்ஷத்தாலே அழிகிறதிறே. கூடப்புக்க ஸம்ஸாரிகள் "எங்களுக்கு உடலுருகக் காண்கிறிலோம்" என்ன; (எனக்குருகுமாலே) – "ஆலோ" என்றது ஆற்றுப்பெருக்கிலே அருகு கரைகளுடைந்தால் நோக்குகிறவர்கள் கைவிட்டுக் கடக்கநின்று கூப்பிடுமா போலே கூப்பிடுகிறார்.

விளக்கம் - (உடலெனக்குருகுமாலோ) –ஆதிசேஷன் மீது சயனித்துள்ள ஸ்ரீரங்கநாதனைக் கண்டு ஜீவன் உருகுவதில் ஆச்சர்யம் ஏதும் இல்லை, ஆனால் ஜடப்பொருளான உடல் உருகுவது வியப்பே ஆகும். சரணாகதிகத்யத்தில் - பகவத் ஸ்வரூபதிரோதாநகரீம் – பகவானின் ஸ்வரூபத்தை நம்மிடமிருந்து மறைக்கும் ப்ரக்ருதி – என்பது போன்று, அவனது திருமேனியை நம்மிடம் இருந்து மறைக்கும் உடலே, இன்று அவனைக் கண்டு உருகி நின்றது. ப்ரஹ்மஸூத்ரம் (3-2-5) - தேஹயோகாத்வா ஸோ அபி – ஸ்வரூபம் மறைவது உடல் தொடர்பால் ஆகும் – என்னும்படி, நமக்கு உண்டாகும் ஞானத்தை மறைக்கவல்ல உடலானது, இன்று பெரியபெருமாளைக் கண்டவுடன் உண்டான ஆனந்தம் காரணமாக உருகி அழிகிறதே! ஆழ்வாருடன் பெரியபெருமாளிடம் வந்த ஸம்ஸாரிகள், "எங்களுக்கு உடல் இதுபோன்று உருகவில்லையே", என்றனர். அவர்களிடம் ஆழ்வார் கூறுகிறார். (எனக்கு உருகுமாலோ) – எனக்கு உருகுகிறதே! இங்கு "ஆலோ" என்றால் என்ன பொருள்? ஆற்று வெள்ளைத்தைக் கடந்து அக்கரைக்குச் சென்றவர்கள், இக்கரையில் உள்ளவர்களைக் கைநீட்டி அழைப்பது போன்று, பெரியபெருமாள் என்னும் கரைக்கு வரும்படி அழைக்கிறார்.

வ்யாக்யானம் – (என்செய்கேன் உலகத்தீரே) – பெரியபெருமாளழகைக் கண்டுவைத்துக் குறியழியாதே புறப்படுகிற ஸம்ஸாரிகளைப் பார்த்து, "உங்களைப்போலே தரித்திருக்கைக்கு ஒரு விரகு சொல்லவல்லிகோளே" என்கிறார். தம்மோடு ஸஜாதீயராயிருக்கிற ஆழ்வார்களைக் கேட்கில் ஓட்டையோடத்தோடே ஒழுகலோடமாமித்தனையிறே. "என்செய்கேன் பெருமாளே" என்று அவர் தன்னைக் கேட்கில் தம்மெளிமையை அறிவித்ததாய், அத்தாலே "எதிர்த்தலை அழிந்ததாகாதே" என்று அவர் மேனாணித்திருக்கக்காணுமதாய்த்து பலம். இவ்விஷயத்தைக் கண்டுவைத்துக் குறியழியாதே இருக்கிற ஸம்ஸாரிகளைப் பார்த்து "உங்கள் இறுக்குவாத பரிஹாரத்திலே எனக்கும் ஒரு சிறாங்கை இடவல்லிகோளே", என்கிறார்.

விளக்கம் – (என்செய்கேன் உலகத்தீரே) – பெரியபெருமாளின் அழகைக் கண்டும், அதில் மயங்காமல் செல்கிற ஸம்ஸாரிகளிடம், "நானும் உங்களைப் போன்று இவன் அழகில் மயங்கி விழாமல், உறுதியாக நிற்பதற்கு ஒரு உபாயம் கூறமாட்டிர்களா?", என்றார். ஸம்ஸாரிகளை ஏன் கேட்கவேண்டும்? தன்னைப் போன்றே உள்ள மற்ற ஆழ்வார்களைக் கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம்; அப்படி என்றால், ஓட்டை ஓடத்துடன் சேர்ந்த ஒழுகல் ஓடம் கரை சேராதது போன்று, அந்த ஆழ்வார்கள் இவர் உருகாமல் இருக்க வழி சொல்லமாட்டார்கள். இதனைப் பெரியபெருமாளிடமே, "நான் என்ன செய்வேன் ஸ்ரீரங்கநாதா!", என்று கேட்கலாம் என்றால், தனது தோல்வியை அவனிடம் ஒப்புக் கொண்டதாகிவிடும். இதனால், "எதிரில் நிற்பவனை அழித்த பெருமை நம்மிடம் உள்ளது", என்ற கர்வம் பெரியபெருமாளிடம் உண்டாகிவிடும்! இதனால்தான், பெரியபெருமாளின் அழகைக் கண்டு எந்தவிதமான மாற்றமும் அடையாத ஸம்ஸாரிகளிடம் இவர், "உங்கள் உடலை இறுக்குவாதம் உண்டானது போன்று, எந்தவிதமான மாறுபாடும் இல்லாமல் வைப்பதற்கு உதவும் மருந்தை எனக்கும் ஒரு கை அளிக்கக்கூடாதா?", என்கிறார்.

20. பாயும் நீர் அரங்கம் தன்னுள் பாம்பணைப் பள்ளி கொண்ட
மாயனார் திரு நல் மார்வும் மரதக உருவும் தோளும்
தூய தாமரைக் கண்களும் துவர் இதழ்ப் பவளவாயும்
ஆயசீர் முடியும் தேசும் அடியோர்க்கு அகலலாமே

பொருள் – துள்ளிப் பாய்கின்ற வெள்ளநீர் நிறைந்த காவேரியால் சூழப்பட்டுள்ள திருவரங்கத்தில், ஆதிசேஷன் என்னும் படுக்கை மீது, வியக்கவைக்கும் செயல்கள் நிறைந்தவனாகிய ஸ்ரீரங்கநாதன் சயனித்துள்ளான். ஸ்ரீரங்கநாச்சியார் என்றும் பொருந்தியுள்ள அவனது அழகான திருமார்பு, மரகதமணி போன்ற அழகிய திருமேனி, அகன்ற திருத்தோள்கள், தூய்மையான தாமரை மலர் போன்ற அழகான நீண்ட கண்கள், சிவந்த உதடுகள், பவளம் போன்ற அழகான திருவாய், நீண்டகாலமாக மேன்மையுடன் கூடிய திருமுடி – இவை அனைத்தும் கொண்ட அவனது ஸ்வரூபமானது, இதனை அறிந்த அடியார்களால் இழக்கத்தகுமோ?

அவதாரிகை – "இவ்விஷயத்தில் ப்ராவண்யத்தைத் தவிர்த்து எங்களைப்போலே தேஹயாத்ராபரராய் வர்த்திக்கவே தரிக்கலாம்", என்ன; கண்வளர்ந்தருளுகிற அழகைக் கண்டுவைத்து "இஸ்ஸம்ருத்தியடங்க எங்களது" என்னும்படியான ஸ்வரூபஜ்ஞாநமுடைய எங்களுக்கு, "அஹம் மம" என்றிருக்கிற உங்களைப்போலே அகல விரகுண்டோ என்கிறார்.

விளக்கம் – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "பெரியபெருமாள் விஷயத்தில் நீங்கள் இத்தனை ஈடுபாடு கொள்ளாமல் தவிர்த்தால், நீரும் உங்கள் உடல் உருகாமல், எங்களைப் போன்று திடமாக இருக்கலாம்", என்றனர். உடனே ஆழ்வார் அவர்களிடம், "இப்படி இவன் அழகாக கண்வளரும் அழகைக் கண்ட பின்னரும், இவன் இது போன்று நமக்காகவே கண் வளர்கிறான் என்று எங்கள் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்ற ஞானம் அடைந்த பின்னரும், உங்களைப் போன்று அஹங்காரம் மற்றும் மமகாரம் கொண்டு, பெரியபெருமாளைக் கண்டுகொள்ளாமல் விலக இயலுமோ?", என்கிறார்.

வ்யாக்யானம் – (பாயுநீர் அரங்கம்) – அடைத்து ஏற்றவேண்டாத நீருக்குப் பள்ளநாலியான கோயில். இது உபலக்ஷணம். பாவநமாயும் ப்ரஸந்நமாயுமுள்ள பதார்த்தங்களுக்குப் பள்ளமடையாயிறே கோயிலிருப்பது. ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா: நீருக்கு ஸாத்விகர் நிதர்சநமாயிறே இருப்பது. (தன்னுள் பாம்பணை) – அந்நீர் உறுத்தாமைக்குப் படுத்த படுக்கையாய்த்துத் திருவநந்தாழ்வான். "வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாக விரித்து" என்னக் கடவதிறே.

(பள்ளி கொண்ட மாயனார்) – கண்வளர்ந்தருளும்போதை அழகு ஆச்சர்யமாயாய்த்து இருப்பது. ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப: என்னக்கடவதிறே. நிற்றல் இருந்தல் செய்தாராகிலும் அகல்லாங்கிடீர்! "ஏரார்கோலந்திகழக் கிடந்தாய்" என்றும், "ஆனையில் கிடந்த கிடக்கை கண்டிடப் பெற்றிலேன்" என்றும் சொல்லக்கடவதிறே. ஆனையில் கிடக்கை – ஆனைபோலே கிடக்கை.

விளக்கம் – (பாயுநீர் அரங்கம்) – பெரிய அணை கட்டி, அதில் நீரைத் தேக்கி வைத்து, அந்த வேகத்தில் மேட்டிற்கு நீரை ஏற்றவேண்டிய அவசியம் இல்லாமல், பள்ளமாக இருந்து எளிதாக நீரைக் கொள்ளும் திருவரங்கம். நீர் என்று கூறியது நீர் போன்று தெளிவாகவும், தூய்மையாகவும் உள்ள அனைத்துப் பொருள்களுக்கும் கொள்ள வேண்டும். அனைத்தும் வந்து விழும் இடமாக உள்ளது திருவரங்கம் பெரியகோயிலே ஆகும். இராமாயணம் - ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா: - நல்ல மனிதர்களின் மனம் போன்று தெளிந்த நீர் – என்று, நல்லவர்கள் நீரின் தெளிவிற்கு உவமையாக இருப்பர் அல்லவா? (தன்னுள் பாம்பணை) – அப்படிப்பட்ட நீர் இவனது திருமேனியை உறுத்தாமல் இருப்பதற்காக, அந்த நீரின் மீது ஆதிசேஷனைப் படுக்கையாக விரித்துச் சயனித்துள்ளான். பெரியாழ்வார் திருமொழி (5-1-7) - வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாக விரித்து – என்றது காண்க. (பள்ளி கொண்ட மாயனார்) – சயனித்துள்ளபோதிலும், இவனுடைய அழகு வியக்க வைக்கிறது. இராமாயணம் - ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப: - சுகமாக உறங்கியபடி இருந்தவரும், அப்போதும் அழகாக உள்ளவரும், எதிரிகளை வாட்டுபவரும் ஆகிய இராமன் என்னல் எழுப்பப்பட்டார் – என்று சீதை கூறியது காண்க. நிற்கும்போது உள்ள அழகு, அமர்ந்துள்ளபோது உள்ள அழகு ஆகியவற்றைக் கண்டால்கூட விலக இயலும், ஆனால் சயனித்துள்ள அழகைக் கண்டு விலக இயலாது. திருவாய்மொழி (5-8-1) - ஏரார்கோலந்திகழக் கிடந்தாய் - என்றும், பெருமாள் திருமொழி (7-2) - ஆனையில் கிடந்த கிடக்கை கண்டிடப் பெற்றிலேன் – என்றும் கூறியது காண்க. யானையில் கிடக்கை என்றால் யானை போன்று கிடக்கை.

வ்யாக்யானம் – (திருநன்மார்வும்) – பிராட்டியாலே விலக்ஷணமான மார்பும். பிராட்டியுடைய செம்பஞ்சின் சுவடுகளும், கழித்த மாலைகளுமாய்க் கிடக்குமாய்த்து. பிராட்டி "அகலகில்லேனிறையும்" என்று பிரியமாட்டாத வைலக்ஷண்யத்தையுடைய

மார்வம் என்னவுமாம். (மரகதவுருவும்) – கண்டார் கண்குளிரும்படி நீர்வெள்ளத்தைத் திறந்துவிட்டாற்போலேயாய்த்து வடிவு இருப்பது. (தோளும்) – கீழிலிவைபோலே இடுசிவப்பில்லாத தோளும். அவ்வெள்ளத்திலே அழுந்துகிறார்க்குத் தெப்பம் போலேயிருக்கிற தோளும்.

விளக்கம் – (திருநன்மார்வும்) – ஸ்ரீரங்கநாச்சியார் வசிப்பதால் மேன்மை பெற்ற திருமார்பு. அவளது திருவடிகளில் பூசப்பட்டுள்ள செம்பஞ்சுக் குழம்பு இவனது திருமார்பில் சுவடுகளாகவும், அவள் சூடிக்களைந்த மாலைகள் இவன் திருமார்பில் உள்ளதும் இவனுக்குச் சிறப்பை அளிக்கிறது. திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேனிறையும் – என்று பிராட்டி இவனது திருமார்பை விட்டு எப்போதும் பிரியாத சிறப்பையும் கொண்ட மார்பு. (மரகத உருவும்) – காண்பவர்களின் கண்கள் குளிர்ந்து நிற்கும்படியாக, நீர் வெள்ளத்தைத் திறந்துவிட்டது போன்ற மரகத நிறம் கொண்டவன். (தோளும்) – மார்பு, நிறம் ஆகியவற்றைப் போன்று சிறப்பித்துக் கூற அவசியம் இல்லாதபடி, தானாகவே சிறப்புடைய தோள்கள். மேலே கூறப்பட்ட நிறம் என்ற நீர் வெள்ளத்தில் சிக்கித் தவிப்பவர்கள் கரையேறும் ஓடம் போன்று உள்ள தோள்கள்.

வ்யாக்யானம் – (தூய தாமரைக் கண்களும்) – பிராட்டியோடு ஹிரண்யாதிகளோடு வாசியறக் குளிர நோக்குகிற திருக்கண்களும். நோக்குக்குத் தூய்மையாவது – நிர்ஹேதுகமாகக் கடாக்ஷிக்கை. ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் என்கிறபடியே அநுகூல ப்ரதிகூல விபாக ரஹிதமாயாய்த்து ஸௌஹார்த்தமிருப்பது. தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம் என்கிறபடியே ஸம்பந்தமொத்தாய்த்து இருப்பது. இப்படியிருக்க, சில பதார்த்தங்களுக்குக் கடாக்ஷம் அநர்த்தஹேதுவாகிறது ப்ரக்ருதி தோஷத்தாலே, ஸர்வாநுகூலமான தென்றலானது ஒரு பதார்த்தத்திலே வந்தால் சோஷகமாகாநின்றதிறே. மென்மை, குளிர்த்தி, நாற்றம் இவற்றுக்குத் தாமரை ஒரு போலியாமித்தனைபோக்கி அகவாயில் தண்ணளிக்கு த்ருஷ்டாந்தமாகமாட்டாதே. (துவரிதழ்ப் பவள வாயும்) – சிவந்த திருவதரத்தையும், பவளம்போலே இருந்துள்ள தநதபங்க்தியையுமுடைய வாயும். அவாக்யநாதர: என்கிற காம்பீர்யம் குலைந்து, கிட்டினாரை ஸாந்த்வவாதநம் பண்ணுகிற திருப்பவளமும்; முருக்கிதழ்போலவும் ப்ரவாளம்போலவுமுள்ள திருப்பவளமும்; ஸ்வாபராதத்தை அநுஸந்தித்துக் கிட்ட

அஞ்சினவர்களுடைய அபராதத்துக்கு நேர்த்தரவு கொடுக்க ஸ்மிதம் பண்ணும் திருப்பவளமும் என்கை.

விளக்கம் – (தூய தாமரைக் கண்களும்) – ஸ்ரீரங்கநாச்சியார், ஹிரண்யகசிபு ஆகிய இருவரையும் காணும்போது, எந்தவிதமான வேறுபாடும் காணாமல், இருவரையும் ஒரே போன்று குளிரும்படி கடாக்ஷிக்கும் திருக்கண்கள். பார்வையின் தூய்மை என்பது எந்தவிதமான பயனையும் எதிர்பாராமல் கடாக்ஷித்தல் ஆகும். கீதையில் - ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் – அனைத்து உயிர்களின் நண்பன் – என்று கூறுவதற்கு ஏற்றபடி, தன்னை விரும்புபவர்கள், வெறுப்பவர்கள் என்ற வேறுபாடு காணாமல், அனைவருக்கும் இவன் நண்பனாக உள்ளான். ஜிதந்தே ஸ்தோத்ரம் - தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம் – பக்தி உள்ளவர்களும், பக்தி அற்றவர்களுக்கும் ஒரே போன்று பற்றலாம்படி – என்று கூறுவதற்கு ஏற்ப, தேவர்கள் மற்றும் அசுரர்கள் ஆகிய இருவருக்கும் ஒத்தபடி இவன் நட்பு உள்ளது.இப்படி உள்ளபோது, ஒரு சிலருக்கு மட்டும் இவனது கடாக்ஷம் விபரீதமாகப் போவதற்குக் காரணம், அவர்களுடம் உள்ள தோஷத்தால் ஆகும். அனைத்திற்கும் நன்மையை அளிக்கின்ற தென்றல் காற்றானது, தாமரை மலரை மட்டும் உலர்த்தி, அதற்குக் கேடு உண்டாக்குகிறது அல்லவோ? இவனது திருக்கண்களின் மென்மை, குளிர்ச்சி, நறுமணம் ஆகியவற்றுக்கு மட்டுமே தாமரை ஒப்பாகும், இவனது கண்களில் உள்ள கருணை வெள்ளத்திற்குத் தாமரை ஒப்பாகாது. (துவரிதழப் பவளவாய்) – சிவந்த உதடுகள், பவளம் போன்று நேர்த்தியான பற்கள் கொண்ட வாய். சாந்தோக்ய உபநிஷத் – அவாக்யநாதர: - யாரிடமும் பேசாத பரம்பொருள் – என்று கூறுவதற்கு விரோதமாகத் தன்னை அடைந்தவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்படியான சொற்களைக் கூறும் ஸ்ரீரங்கநாதன். முருங்கைப் பூவின் இதழ்கள் போன்றும், பவளம் போன்றும் உள்ள உதடுகள். தங்களது குற்றங்களுக்கு அஞ்சி, தன்னிடம் வருவதற்குத் தயங்குபவர்களை நோக்கி, அவர்களிடம், "அச்சம் கொள்ளவேண்டாம்" என்று புன்னகையுடன் கூடிய உதடுகள்.

வ்யாக்யானம் – (ஆயசீர்முடியும்) – பண்டேயாய்ச் சீர்மையையுடைத்தான முடியும். ஸித்தமாய் ஐச்வர்யஸூசகமான திருவபிஷேகமும். இத்தனையாலுமாக அவயவசோபை சொல்லிற்று. (தேசும்) – இத்தால் ஸமுதாயசோபை சொல்லுகிறது. (அடியரோர்க்க கலலாமே) – இஸ்ஸம்ருத்தியைக் கண்டால், ஸ்வரூபஜ்ஞாநமுடையார்க்கு

அகலப்போமோ? இதுக்குப் புறம்பாய் "நான், என்னது" என்றிருப்பார்க்கன்றோ அகலலாவது. "ஆமே?" என்றது எதிரிகளுக்குமொக்க அகலப்போகாதென்ன வேண்டும்படியாயிறே அர்த்தத்தின் மெய்ப்பாடிருப்பது. ஆயம் பொன்னாய், பொன்னாலே சீரியமுடி என்னவுமாம். ஆயம் – பொன்; ஆயமென்றத்தை ஆயவென்று கடைக்குறைத்தலாய்க் கிடக்கிறது.

விளக்கம் – (ஆயசீர் முடியும்) – என்றும் சீர்மையுடன் கூடிய முடியும். ஐச்வர்யத்தின் மேன்மையை இவனது திருமுடி காட்டுகிறது. இப்படியாக உள்ள பலவற்றின் மூலம் பெரியபெருமாளின் அவயவங்களின் அழகு கூறப்பட்டது. (தேசும்) – இதன் மூலம் திருமேனி முழுவதின் அழகு கூறப்படுகிறது. (அடியரோர்க்கு அகலலாமே) – தங்களது ஆத்மாவின் ஸ்வரூப ஞானம் பெற்றவர்கள், பெரியபெருமாளின் அழகைக் கண்ட பின்னரும், அவனை விட்டு அகல முயல்வார்களோ? இதற்கு விரோதமான, "நான், என்னுடையது" என்னும் அஹங்காரம் மற்றும் மமகாரம் கொண்டவர்கள் அல்லவோ இவனை விட்டு அகல முயல்வார்கள்? "ஆமே" என்பதன் மூலம், இவனது விரோதிகளும் கூட இவனை விட்டு எளிதில் அகல இயலாதபடி இவன் அழகு உள்ளது என்றார். ஆயம் என்பது தங்கம் எனப் பொருள் கொண்டு, தங்கத்தால் செய்யப்பட்ட சீரிய முடி எனலாம். ஆயம் என்பதே ஆய எனக் குறைந்தது.

21. பணிவினால் மனம் அது ஒன்றிப் பவளவாய் அரங்கனார்க்குத்
துணிவினால் வாழ மாட்டாத் தொல்லை நெஞ்சே நீ சொல்லாய்
அணியினார் செம்பொனாய அருவரை அனைய கோயில்
மணியனார் கிடந்தவாற்றை மனத்தினால் நினைக்கலாமே.

பொருள் – பவளம் போன்று அழகாகச் சிவந்த உதடுகளைக் கொண்ட பெரியபெருமாள் குறித்துப் பணிவுடன் இருந்து, அவனில் மட்டுமே மனத்தைப் பொருந்தவைத்து, வேறு எதனையும் கருத்தில் கொள்ளாமல், அவன் உள்ளபோது அச்சம் ஏது என்னும் துணிவுடன் வாழாத, நீண்ட காலமாக அவனை இழந்திருந்த எனது நெஞ்சமே! பூர்ணமான அழகுடன் கூடியதான சிவந்த பொன் கொண்டு இழைக்கப்பட்டதும், இதனால் மேருமலை போன்றதும் ஆகிய திருவரங்கம் பெரியகோயிலில், நீலநிற

இரத்தினம் ஒன்று சயனித்துள்ளதோ என்று எண்ணும்படியாகச் சயனித்துள்ள ஸ்ரீரங்கநாதனின் அழகை நெஞ்சம் கொண்டு அளவிட்டுக் கூற இயலுமோ? எனது நெஞ்சமே! நீ கூறுவாயாக.

அவதாரிகை – "அகலப் போகாதாகில், பரிச்சேதித்து அநுபவிக்கப் பார்த்தாலோ?", என்கிற திருவுள்ளத்தைக் குறித்து, "இவ்விஷயத்தில் துணிவில்லாமையாலே அநாதிகாலம் இழந்த அறிவுகேடுபோலே இருப்பதின்று காண் இப்போது பரிச்சேதித்து அநுபவிக்கலாமென்று கணிசிக்கிற இதுவும்", என்கிறார்.

விளக்கம் – ஆழ்வாரின் நெஞ்சம் ஆழ்வாரிடம், "ஸ்ரீரங்கநாதனை விட்டு அகல இயலவில்லை. அவனுடைய அழகை நாம் அளவுபடுத்தி அனுபவிக்கலாமே", என்றது. இதற்கு ஆழ்வார் அதனிடம், "நெஞ்சமே! இந்த அழகை அளவுபடுத்தலாம் என்று நீ கூறுவது - எல்லையற்ற காலம் இந்த அழகை அனுபவிக்கும் திறன் இல்லாத காரணத்தினால், உனது அறிவை இழந்து பேசுவது போன்று உள்ளது", என்கிறார்.

வ்யாக்யானம் – (பணிவினால் மனமதொன்றி) – பணிவதாக வந்து ஒருப்பட்டு; இதர விஷயங்களில் நின்றும் இவ்விஷயத்தில் மனஸ்ஸைப் பணிவதாகவொன்றி. ஒன்றுகை – ஒருப்படுகை. இதர விஷயங்களில் போருகிற நெஞ்சை அவற்றினின்றும் மீட்டு ப்ராப்த விஷயத்திலே ப்ரவணமாக்குவோமென்னும் உத்யோகமாத்ரமேயாய்த்து இவ் விஷயத்துக்கு வேண்டுவது. இங்கு மநஸ்ஸென்கிறது மநோவ்ருத்தியை. பகவத்வ்யதிரிக்த விஷயங்களில் பணிவுதான் உண்டானாலும் இரங்குகை பாஷிகம்; இரக்கமுண்டானாலும் பலிப்பதில்லை; பகவத் விஷயத்தில் ந நமேயம் என்கிற ப்ரதிஜ்ஞை குலையும் மாத்ரமே அமையும். சேதநனுடைய ஆபிமுக்யத்துக்காக ஸ்ருஷ்ட்யவதாரங்களைப் பண்ணிப் போந்த ஈச்வரனுக்கு விஷயீகார ஸௌசகமாத்ரமே அமையும். ப்ரணாமந்தன்னைப் பண்ணினாலும் அதுவன்றே பலப்ரதம். ஈச்வரனுடைய இரக்கமிறே. இவன் பண்ணுகிற வ்யாபாரங்கள் அங்கு பலிப்பதொன்றின்றியே இருக்க, அவனுடைய இரக்கத்துக்கு ஹேதுவானபடியென் என்னில், ஒருத்தனை ஒருவன் கையோங்க, அதில் எதிரியை ஸ்பர்சிப்பதொன்றின்றியே இருக்க, உள்ளதனையும் என்னைப் பரிபவித்தான் என்றிருக்கைக்கு ஹேதுவாக நின்றதிறே; அவ்வோபாதி

அஞ்ஜலியும் எல்லாவற்றையும் கொடுத்து, பின்னையும் ந ஜாது ஹீயதே என்னும்படி ப்ரியவிஷயமாயிறே இருப்பது. ஏகோபி க்ருஷ்ண ஸுக்ருத: ப்ரணாம:, அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ.

விளக்கம் – (பணிவினால் மனம் அது ஒன்றி) – ஸ்ரீரங்கநாதனைப் பணிந்து நிற்போம் என்னும் உறுதி கொண்டு. மற்ற உலக விஷயங்களில் திரிகின்ற மனதை, அவற்றிலிருந்து திருப்பி இந்த விஷயத்தில் ஈடுபடுத்தி. ஒன்றுகை என்றால் ஒருப்படுகை என்பதாகும். மற்ற உலக விஷயங்களில் திரிகின்ற மனதை, அவற்றிலிருந்து திருப்பி, நமது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதான எம்பெருமானிடம் நிலைநிறுத்துவோம் என்னும் உறுதியே இங்கு நமக்கு வேண்டும். மனம் என்பது மனத்தின் நினைக்கின்ற செயலைக் குறிப்பதாகும். அவனைத் தவிர மற்றவர்களிடம் நாம் பணிவாக நின்றாலும், அவர்கள் நம் மீது இரக்கம் கொள்வார்கள் என்று கூற இயலாது; அப்படியே இரக்கம் பிறந்தாலும், அந்த இரக்கத்தின் மூலம் பெரிய பலன் ஏதும் உண்டாகப்போவதில்லை. ஆனால் ஸ்ரீரங்கநாதன் விஷயத்தில் இராமாயணம் யுத்தகாண்டம் – ந நமேயம் – இராமனைப் பணியமாட்டேன் – என்று இராவணன் கூறுவது போன்று கூறாமல், பணியாமல் இருந்தாலும், “பணியமாட்டேன்” என்ற உறுதியை சற்று மாற்றிக் கொண்டாலே போதுமானதாகும். நமது நன்மைக்காகவே பல அவதாரங்களை எல்லையற்ற காலமாகச் செய்துவரும் ஈச்வரனுக்கு, நமது ஈடுபாட்டை உணர்த்தினாலே போதுமானது. அவனைப் பூர்ணமாகப் பணிந்து நின்றாலும், அந்தப் பணிவா நமக்குப் பலன் அளிக்கும்? அல்ல, ஈச்வரனின் இரக்கமே பலன் அளிக்கும். “நமது பணிவு முதலான செயல்கள் பலன் அளிக்கவில்லை என்றால், அந்தச் செயல்கள் அவனுக்கு நம் மீது இரக்கம் கொள்வதற்கு மட்டும் எப்படிக் காரணமாக இயலும்?”, என்ற கேள்வி எழலாம். ஒருவன் ஒருவனை அடிப்பதற்குக் கையை ஓங்குகிறான், ஆனால் அடிக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். தான் அடிக்கப்படவில்லை என்றாலும், தன்னைக் குறித்துக் கை ஓங்கப்பட்ட காரணத்தினால், தான் அவமானம் அடைந்தோம் என்று எண்ண வாய்ப்பு உள்ளது அல்லவோ? இது போன்றே ஸர்வேச்வரனைக் குறித்து ஒருமுறை அஞ்ஜலி செய்தாலே போதுமானது, அதன் பின்னர் ஸ்தோத்ர ரத்னம் (28) – ந ஜாது ஹீயதே – அவனுக்கான நன்மை குறைவதில்லை – என்னும் நிலை உண்டாகிறது. மஹாபாரதம் சாந்தி பர்வம் - ஏகோபி க்ருஷ்ண ஸுக்ருத: ப்ரணாம: - க்ருஷ்ணனை வணங்கியவனுக்குப் பிறப்பு இல்லை, காருடபுராணம் - அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம்

தேவப்ரஸாதிநீ – அவனை விரைவாக மகிழவைக்கும் சாதனமாக அஞ்ஜலி உள்ளது – என்று கூறுவதற்கு ஏற்ப எம்பெருமான் இவனைக் குறித்து ப்ரியம் கொள்வதற்கு இதுவே காரணமாகிறது.

வ்யாக்யானம் – (பவளவாயரங்கனார்க்கு) – இவ்வளவு ஆநுகூல்யமுடையாரை முன்புத்தை இழவுக்கு ஸாந்த்வநம் பண்ணும் திருவதரத்தை உடையவர்க்கு. (அரங்கனார்க்கு) – "எப்போது நம்மைக் கிட்டுவது?", என்று நித்யஸந்நிஹிதராயிருக்கிறவர்க்கு. (துணிவினால் வாழமாட்டா) – வடிவழகுதான் பணிவையும் உண்டாக்கித் துணிவையும் உண்டாக்கிப் பின்னை அநுபவத்திலே மூட்டிவிடுமாய்த்து. (பவளவாயரங்கனார்க்கு பணிவினால் மனமதொன்றி துணிவினால் வாழமாட்டா) – இவ்விஷயத்தை அநுபவிக்கைக்கு வ்யவஸாயமேயாய்த்து வேண்டுவது. வ்யவஸாயாத்ருதே ப்ரஹ்மந் நாஸாதயதி தத்பரம் என்று ப்ரஹ்ம ப்ராப்த்திக்குக் கண்ணழிவற்ற ஸாதநம் வ்யவஸாயங்காண் என்று உபதேசித்தானாய்த்து, தன் ஆசார்யனான வேதவ்யாஸனிற் காட்டில் அப்புருஷார்த்த ஸாதநத்திலே தெளிவுடைய ஜநகன். (தொல்லை நெஞ்சே) – ஓர் அத்யவஸாயமாத்ரத்தாலே இவ்விஷயத்தை அநுபவிக்கமாட்டாத இவ்விழவு, நெஞ்சே! உனக்கு அநாதியிறே. (நீ சொல்லாய்) – இவ்விஷயத்தைப் பரிச்சேதித்து அநுபவிக்கலாமென்று நீதான் சொல்லிக்காணாய்.

விளக்கம் – (பவளவாய் அரங்கனார்க்கு) – இப்படியாகத் தன்னிடம் ஈடுபாட்டுடன் உள்ள ஒருவன் கிட்டினால், அவன் இத்தனை நாட்கள் தன்னை இழந்ததற்காக, அவனுக்கு ஆறுதல் கூறுகின்ற பவளம் போன்ற சிவந்த வாயை உடைய அரங்கனுக்கு. (அரங்கனார்க்கு) – "இவனுக்கு நம்மீது ஈடுபாடு வந்தது, இனி நாம் இவனை விட்டுத் தள்ளி இருத்தல் கூடாது", என்று எப்போதும் அவன் நினைவுடனேயே திருவரங்கத்தில் சயனிக்கும் அரங்கனுக்கு. (துணிவினால் வாழமாட்டா) – இவனது திருமேனி அழகானது ஒருவனுக்கு இவன் மீது பணிவையும், துணிவையும் உண்டாக்கிவிடும். அதன் பின்னர் தன்னையே எண்ணி வாழும்படிச் செய்துவிடும். (பவளவாயரங்கனார்க்கு பணிவினால் மனமதொன்றி துணிவினால் வாழமாட்டா) – எல்லையற்ற காலம் அரங்கனை அனுபவிக்கத் துணிவு இல்லாத காரணத்தினால்தான், அவனை இழக்கின்றனர். மஹாபாரதத்தில் - வ்யவஸா யாத்ருதே ப்ரஹ்மந் நாஸாதயதி தத்பரம் – அந்தணரே! மன உறுதி இல்லாவிட்டால் பரம்பொருளை அடையமாட்டான் – என்று, தனது

ஆசார்யனான வேதவ்யாஸரைக் காட்டிலும் பரம்பொருளைக் குறித்த உறுதியுடைய ஜனகன், பரம்பொருளை அடைவதற்கு துணிவு மட்டுமே ஸாதனம் என்று காண்பித்தான். (தொல்லை நெஞ்சே) – இவனைக் குறித்த ஓர் உறுதி, துணிவு மட்டும் இல்லாத காரணத்தினால் அல்லவோ எனது நெஞ்சமே! நீ இவனை இத்தனை காலமாக இழந்திருந்தாய். (நீ சொல்லாய்) – இப்படிப்பட்ட உயர்ந்த வஸ்துவை இத்தனை காலமாக இழந்துவிட்டு, இப்போது இவனை எளிதாக அளவிட்டுக் கூறிவிடலாம் என்று எந்தத் துணிச்சலில் கூறுகிறாய்.

வ்யாக்யானம் – (அணியித்யாதி) – அழகு மிக்கிருப்பதாய், செம்பொன்னான அருவரையுண்டு – மஹாமேரு; அத்தோடு ஒத்திருந்துள்ள கோயில். ஸம்ஸாரத்துக்கு ஆபரணமாய், தர்சநீயமாய், ஸ்திரமாய், ஸர்வாதாரமாயிருக்கை. (மணியனார் கிடந்தவாற்றை) – அம்மேருவைப் புடைபடத் துளைத்து அது விம்மும்படி ஒரு நீலரத்னத்தை அழுத்தினாற்போலேயாய்த்து கோயிலாழ்வார்க்குள்ளே பெரியபெருமாள் கண்வளர்ந்தருளுகிறபடி. (கிடந்தவாற்றை மனத்தினால் நினைக்கலாமே) – கண்வளர்ந்தருளுகிற அழகைக் கண்டால் நெஞ்சாலே பரிச்சேதிக்கலாம்படி இருந்ததோ? ஸ்வரூபத்தைப் பரிச்சேதிக்கிலும், ததாச்ரயமான கல்யாண குணங்களைப் பரிச்சேதிக்கிலும், வடிவழகைப் பரிச்சேதிக்கவொண்ணாதென்கை. நினைவுக்குப் பரிகரமானத்தையொழிய வேறே ஒரு கரணத்தாலே நினைக்கில் நினைக்குமித்தனை காணும்.

விளக்கம் – (அணி இத்யாதி) – மிகுதியான அழகுடன் கூடியதாக. செம்பொன்னால் ஆகிய அருவரை என்பது மஹாமேரு மலையைக் குறிக்கும். அந்த மேருமலையைப் போன்றுள்ள திருவரங்கம் பெரியகோயில். ஸம்ஸார உலகிற்கு ஆபரணம் போன்றும், காண்பதற்கு இனிமையை அளிப்பதாகவும், உறுதியானதாகவும், அனைத்து விஷயங்களுக்கும் ஆதாரமாக உள்ளதாகவும் பெரியகோயில் இருக்கிறது. (மணியனார் கிடந்தவாற்றை) – அப்படிப்பட்ட மேருமலையைத் துளைத்து, அப்படித் துளைக்கப்பட்டதால் சுற்றிலும் தடித்துக் காணப்பட்ட துளைக்குள், நீல இரத்தினக் கல்லைப் பதித்தது போன்று, ஸ்ரீரங்கவிமானத்திற்குள் ஸ்ரீரங்கநாதன் சயனித்துள்ளான். (கிடந்தவாற்றை மனத்தினால் நினைக்கலாமே) – இப்படியாக அவன் சயனித்துள்ள அழகானது நெஞ்சத்தினால் அளவிட முடியும்படியாகவோ உள்ளது? இல்லை. அவனது

ஸ்வரூபத்தில் உள்ள திருக்கல்யாண குணங்களை அளவிட முடிந்தாலும் முடியும், ஆனால் அவனது வடிவழகை அளவிட்டுக் கூற இயலாது. நினைப்பது என்ற செயலுக்கு ஆதாரமாக உள்ள மனம் என்னும் கருவி மூலம் அல்லாமல், வேறு ஏதேனும் உயர்ந்த கருவி கொண்டு அந்த வடிவழகை ஆராய முடியலாம், ஆனால் இது எப்படிச் சாத்தியம் இல்லையோ அது போன்றே அவன் வடிவழகை அளவிட முயல்வது!

22. பேசிற்றே பேசல் அல்லால் பெருமை ஒன்று உணரல் ஆகாது

ஆசு அற்றார் தங்கட்கு அல்லால் அறியல் ஆவானும் அல்லன்

மாசு அற்றார் மனத்து உளானை வணங்கி நாம் இருப்பது அல்லால்

பேசத்தான் ஆவது உண்டோ பேதை நெஞ்சே நீ சொல்லாய்.

பொருள் – அறிவற்ற எனது மனமே! ஸ்ரீரங்கநாதனைப் பற்றி வேதங்கள் போன்றவை என்ன உரைத்தனவோ, அவை அல்லாமல் வேறு புதியதாக அவனைப் பற்றி நாம் ஏதும் கூற இயலாது. அவனைத் தவிர மற்ற உபாயங்களை நாடுதல் என்னும் குற்றம் இல்லாதவர்கள் தவிர மற்றவர்களுக்கு அவன் அறிய இயலாதவனாகவே உள்ளான். ஆகவே, குற்றங்கள் ஏதும் இல்லாதவர்களின் மனதி எப்போதும் வாஸம் செய்யும் அவனை நாம் அனுபவித்தபடி இருக்கலாமே தவிர, அவனது பெருமைகளைக் கூறவும் இயலுமோ? நீயே சொல்லுவாயாக.

அவதாரிகை - நினைக்கவொண்ணாதாகில் வாய்விட்டுப் பேசினாலோ என்ன, மந: பூர்வோ வாகுத்தர: அன்றோ? மநஸ்ஸாலே பரிச்சேதிக்கவொண்ணாத விஷயத்தைப் பாசுரமிட்டு முடிக்கப்போமோ, போசலாமென்கிற அறிவுகெட்ட நெஞ்சே! சொல்லாய் என்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் ஸ்ரீரங்கநாதனை நெஞ்சத்தால் அளவிட்டுக் கூற இயலாது என்றார். இதனைக் கேட்ட ஆழ்வாரின் மனம் அவரிடம், “எண்ண இயலாவிட்டால் என்ன? நீவிர் உமது வாயால் அவனைப் புகழ்ந்து கூறலாமே”, என்றது. இதற்கு

ஆழ்வார், “தைத்திரீய ஸம்ஹிதை (7-5-3) – மந: பூர்வோ வாகுத்தர: - முதலில் மனம், பின்னர் வாக்கு – என்று கூறுவதற்கு ஏற்ப, மனதால் எண்ணுவதே வாக்காக மாறுகிறது. இப்படி உள்ளபோது, மனதால் ஆராய இயலாத ஒன்றை எவ்விதம் வாக்கால் கூற இயலும்? அப்படிப் பேச இயலும் என்று எண்ணும் எனது அறிவுகெட்ட மனமே! நீயே கூறுவாயாக”, என்றார்.

வ்யாக்யானம் – உக்தி ப்ராக்ருத விஷயங்களைப் பேசுகிறதில்லையோ என்ன; அவை பரிச்சிந்நமாகையாலே; இது அபரிச்சிந்நமாகையாலே பேசவொண்ணாது. ஆனால் ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி என்கிற விஷயத்தைக் கைவாங்கியிருக்குமத்தனையோ என்னில். (பேசிற்றே பேசலல்லால்) – முன்பு வேதங்களும் வைதிக புருஷர்களும் பேசிப்போந்தவை தன்னையே சொன்னோமாமித்தனைபோக்கி இவ்விஷயத்துக்கு ஸத்ருசமாக ஒரு பாசுரமிட்டுப் பேசித் தலைக்கட்டவொண்ணாது. பேசிப்போந்தவைதான் எங்ஙனே என்னில், நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ, “நீலமுண்டமின்னன்னமேனி”, அதஸீபுஷ்பஸங்காசம், ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே, ருக்மாபம், “கட்டுரைத்த நன்பொன் உன் திருமேனியொளியொவ்வாது” இத்யாதி. இந்த ப்ராக்ருத பதார்த்தங்கள் அப்ராக்ருத வஸ்துவுக்கு விஸத்ருசமிறே. இதுதன்னைக் கொண்டிழிவானென் என்னில், அதீந்த்ரிய விஷயத்தில் இழியும்போது ஒரு நிதர்சநத்தைக் கொண்டு இழிய வேண்டுகையாலே சொன்னவித்தனையொழிய உள்ளபடி சொல்லிற்றாய்த் தலைகட்ட வொண்ணாது. வேதங்கள் பேசினபடியே பேசுமத்தனையல்லது நம்மால் பாசுரமிட்டுப் பேசிமுடியாது. அவை பேசினபடியென்னென்னில், அப்ராப்ய என்று பேசுனவித்தனை. அப்படியே “பேசவொண்ணாது” என்று பேசுமத்தனை என்றாகவுமாம். அதுக்கு அடியென்னென்னில் – (பெருமை ஒன்று உணரலாகாது) – இன்னது போலேயென்று ஸத்ருசத்ருஷ்டாந்தமுண்டாதல், ஏவம்பூதமென்று பரிச்சேதித்தல் செய்யவொண்ணாது, இதரவிஷயங்களில் வந்தால் உபமாநத்தளவும் உபமேயம் வரமாட்டாது; இவ்விஷயத்திலே உபமேயத்தளவும் உபமாநம் வரமாட்டாது. ஸ்வரூபமென்ன, குணங்களென்ன, விக்ரஹமென்ன, விபூதியென்ன, இவற்றில் ஒன்றையும் பரிச்சேதிக்க வொண்ணாது என்கை.

விளக்கம் – ஆழ்வாரிடம், "வாய் மூலம் இந்த உலக விஷயங்களைப் பற்றிப் பேசுவதில்லையா, அது போன்று இந்த வஸ்துவைப் பற்றியும் பேசலாமே", என்று வினவ, ஆழ்வார், "உலகவிஷயங்களை எல்லையுடன் கூடியவை என்பதால் அவற்றைப் பற்றிப் பேசலாம், ஆனால் இது அப்படி அல்ல, ஆகவே இதனைப் பற்றிப் பேச இயலாது", என்றார். "ஆனால் விஷ்ணுதர்மம் - ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி – ஸ்ரீஹரியை எந்த நாக்கு துதிக்கிறதோ அதுவே நாக்கு – என்றது, நீங்கள் கூறுவதைப் பார்த்தால் இந்த வஸ்துவைப் பற்றிப் பேசாமலேயே இருப்பது முறையோ", என்றனர். (பேசிற்றே பேசலல்லால்) – முன்னர் வேதங்களும், அந்த வேதங்களை மட்டுமே ப்ரமாணமாக ஒப்புக் கொள்கிறவர்களும் இந்த வஸ்துவைப் பற்றி என்ன கூறினார்களோ அவற்றை நாம் மீண்டும் உரைப்பது மட்டுமே நாம் செய்யக்கூடியது, அதனை விடுத்து இந்த வஸ்துவைப் பற்றி நாம் புதிதாக ஏதும் கூற இயலாது. வேதங்களைப் ப்ரமாணமாகக் கொண்ட வைதிகர்கள் எவ்விதம் பேசினர்? தைத்திரீய நாராயணவல்லீ - நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ – நீலமேகத்தின் நடுவில் உள்ள மின்னல் போன்று உள்ளது, திருவிருத்தம் (29) - நீலமுண்டமின்னன்னமேனி, மஹாபாரதம் சாந்திபர்வம் – அதஸீபுஷ்பஸங்காசம் – காயாம்பூ போன்ற நிறம் கொண்டவன், சாந்தோக்ய உபநிஷத் (1-6-6) - ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே – பொன்நிறமான அந்தப் புருஷன் சூரியன் நடுவில் காணப்படுகிறான், மநுஸ்ம்ருதி – ருக்மாபம் – உருக்கிய தங்கம் போன்ற நிறம், திருவாய்மொழி (3-1-2) - கட்டுரைத்த நன்பொன் உன் திருமேனியொளியொவ்வாது – என்று பலவாறு கூறினர். ஆனால் இவர்கள் கூறும் வஸ்து இந்த உலகில் காணப்படாத பொருளாயிற்றே, இவர்கள் கூறும் உபமானங்கள் அனைத்தும் உலகில் உள்ள பொருள்களாக உள்ளனவே, இத்தனை உயர்ந்த வஸ்துவைத் தாழ்ந்த பொருள்களுடன் ஒப்பிடலாமோ என்ற கேள்வி எழலாம். கண் போன்ற புலன்களுக்குப் புலப்படாத விஷயங்களைப் பற்றிக் கூறும்போது, அந்த விஷயங்களை உணர்த்த கண்களால் காண இயன்றவற்றைக் கூறி மட்டுமே விளக்க இயலும் என்பதாக் இப்படிக் கூறினார்கள் அல்லாமல், இதன் மூலம் அந்த வஸ்துவைக் கூறி முடித்துவிடலாம் என்ற கருத்தில் அல்ல. வேதங்கள் இந்த வஸ்துவைப் பற்றி என்ன கூறினவோ அவற்றை நாம் மீண்டும் உரைப்பது மட்டுமே நாம் செய்யக்கூடியது, அதனை விடுத்து இந்த வஸ்துவைப் பற்றி நாம் புதிதாக ஏதும் கூற இயலாது. அப்படி வேதங்கள் என்ன கூறின? தைத்திரீய ஆநந்தவல்லீ – அப்ராப்ய – அவனை அறிய இயலாமல் வாக்கும் மனமும் திரும்பின – என்றன. ஆக நாமும், "இந்த வஸ்துவைப் பற்றி

ஏதும் பேச முடியாது" என்று மட்டும் அதனைப் பற்றிப் பேசலாமே தவிர, வேறு எதனையும் கூற இயலாது. இதற்குக் காரணம் என்ன? (பெருமை ஒன்று உணரலாகாது) – "இந்த வஸ்து இப்படிப்பட்ட பொருள் போன்று உள்ளதாகும்", என்று உதாரணம் மூலம் காண்பிக்க இயலாது; "இந்த வஸ்து இப்படிப்பட்டது" என்று கூற இயலாது; மற்ற விஷயங்களில் உபமானம் அளவிற்கு உபமேயம் வராது, இந்த விஷயத்தில் உபமேயம் அளவிற்கு உபமானம் வராது (இதன் பொருள் – ஒருவனை "சிங்கம் போன்ற வீரன்" என்று கூறும்போது, உண்மையில் சிங்கத்தின் வீரத்திற்கு ஒப்பான வீரம் நூறு சதவீதம் இருக்காது; இவன் விஷயத்தில் "மேகம் போன்ற நிறம்" என்றால், மேகத்தின் நிறம் இவன் அளவிற்கு இல்லை என்று கொள்ளவேண்டும்). இவனுடைய ஸ்வரூபம், குணங்கள், திருமேனி, செல்வம் போன்ற எதனையும் அளவிட்டுக் கூற இயலாது என்றார்.

வ்யாக்யானம் – ஆனால் இவ்வஸ்து ஒருவர்க்கும் அறியவொண்ணாதோ என்னில் (ஆசற்றார் தங்கட்கல்லாலறியலாவானுமல்லன்) – ஆசு குற்றம், மாசு குற்றம். இனி அத்தை விஷய விபாகம் பண்ணிக்கொள்ளுமித்தனை. அதாகிறது – உபாய விஷயமாக வரும் குற்றம்; அதாகிறது – பாரதந்த்ர்யத்துக்குச் சேராதவை. அஹங்கார கர்ப்பமான அசேதந க்ரியா லாபங்களை ஸாதநமாக நினைத்திருக்கை. இதரோபாயங்கள் பலப்ரதமாமிடத்தில் அவனுடைய அநுக்ரஹம் பார்த்திருக்கவேணும்; தான் உபாயமாமிடத்தில் ஸஹாயாந்தராபேக்ஷை இல்லை; இதரோபாயங்களைவிட்டுத் தன்னையே உபாயமாகப் பற்றினார்க்கல்லது தன்னை உள்ளபடி அறியலாயிருப்பா னொருவனல்லன்.

விளக்கம் – இப்படிக் கூறினால், இவனைப் பற்றி யாரும் அறிய இயலாதோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார். (ஆசு அற்றார் தங்கட்கு அல்லால் அறியல்ல் ஆவானும் அல்லன்) – ஆசு என்றாலும், அடுத்த வரியில் உள்ள மாசு என்றாலும் "குற்றம்" என்று பொருள். ஆனால் இரண்டு வரிகளில் உள்ள இவற்றை இருவேறு பொருள் உள்ளதாகக் கொள்ளவேண்டும், அதாவது இருவேறு குற்றங்கள் எனக் கொள்ள வேண்டும். ஆசு என்றால், உபாய விஷயமான குற்றம். இதன் கருத்து – சேதனன் எம்பெருமானுக்கு மட்டுமே வசப்பட்டவன்; இப்படி இருக்கும்போது, தான் எம்பெருமானுக்கு அடிமை என்பதை மறந்து, அசேதனமான தனது செயல்களே தனக்கு

உபாயமாக உள்ளன என்று எண்ணுதல் ஆகும். மற்ற உபாயங்கள் ஒரு பலனை அளிப்பதற்காக எம்பெருமானின் தயவை எதிர்பார்க்கவேண்டும், ஆனால் எம்பெருமான் தானே உபாயமாக உள்ளபோது எதனையும் எதிர்பார்ப்பதில்லை. மற்ற உபாயங்கள் அனைத்தையும் தள்ளி, இவன் மட்டுமே உபாயம் என்று இருப்பவர்கள் அல்லாமல், மற்ற யாராலும் இவனை உள்ளது உள்ளபடி அறிய இயலாதபடி இருப்பவன்.

வ்யாக்யானம் – (மாசற்றார்) – இதுவுமொரு மாநஸதோஷமாயிற்று; அதாகிறது – ப்ராப்யாபாஸங்களிலே ப்ராப்யபுத்தியைப் பண்ணியிருக்கை. அவன் தன்னையே பற்றி ஐச்வர்யாதிகளை லபித்துப் போகாநிற்பர்கள். அங்ஙனன்றியே அவன் தன்னையே பெற வேணுமென்றிருக்கை – மாசறுகையாவது. (மனத்துளானை) – இப்படி எல்லாவற்றையும் விட்டு, ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வகமாக ஒரு தேசவிசேஷத்திலே நித்யானுபவம் பண்ண வேணுமென்று தன்பக்கலிலே ஸர்வபரந்யாஸம் பண்ணியிருக்குமவர்களுடைய நெஞ்சிலே நித்யவாஸம் பண்ணுமவனை; இவர்கள் நெஞ்சுக்குப் புறம்பு, காட்டுதீயோபாதியாகவாய்த்து நினைத்திருப்பது. ஜலசரபதார்த்தங்கள் ஜலத்தையொழிய தரிக்கமாட்டாதாப்போலே இவர்கள் நெஞ்சொழிந்தவிடத்தில் தரிக்கமாட்டானாய்த்து. திருப்பதிகளிலே நித்யவாஸம் பண்ணுகிறதும் ஒரு சுத்த ஸ்வபாவனானவனுடைய ஹ்ருதயத்தைக் கணிசித்திறே. "என்னிலாத முன்னெலாம்" என்னக்கடவதிறே. (வணங்கி நாம் இருப்பதல்லால்) – ஆச்ரிதர் நெஞ்சை விட்டுப் போகாதவனானபின்பு, அவன் பக்கலிலே ஸர்வபரந்யாஸம் பண்ணின நாம், அவனை அனுபவித்து தரிக்குமதொழிய வேறொரு க்ருத்யமுண்டோ என்கிறார். வணக்கமென்று ஸர்வப்ராகாராநுபவத்துக்கும் உபலக்ஷணம்.

விளக்கம் – (மாசு அற்றார்) – மாசு என்பதும் மனதில் உள்ள தோஷம் ஆயிற்று. அதாவது, அடையத்தகாதவற்றை பாவங்களின் காரணமாக அடையத்தக்கவை என்று எண்ணுதல். இதுவே இங்கு குற்றம் எனப்பட்டது. அவனை உபாயமாகப் பற்றி அவன் மூலம் பெறும் செல்வம் ஆகியவற்றைப் பெரிதும் எண்ணாமல், அவன் மூலமாக அவனையே பெற வேண்டும் என்று எண்ணுபவர்கள். இந்த எண்ணமே மாசறுகை என்றார். (மனத்துளானை) – இவ்விதம் மற்ற விஷயங்கள் அனைத்தையும் கைவிட்டு, ஸம்ஸார மண்டலத்தைக் கடந்து சென்று, பரமபதத்தில் உள்ள ஸர்வேச்வரனை எப்போதும் அனுபவித்தபடி இருக்கவேண்டும் என்று ஒரு சிலர் எண்ணக்கூடும்;

இப்படிப்பட்டவர்கள் தங்களது எண்ணம் ஈடேற, தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தங்களிடம் எதுவும் இல்லை என்று கைவிரித்து, அவனிடமே அனைத்துப் பொறுப்புகளையும் ஒப்படைத்து இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களின் உள்ளத்தில் எப்போதும் வாழ்பவன். இவர்களது உள்ளத்தை விட்டு மற்ற இடங்களில் வாழ்வது என்பது, ஸர்வேச்வரனுக்குக் காட்டுத்தீ போன்று பொறுக்க இயலாத துன்பமாகவே உள்ளது. நீரில் வாழும் உயிர்கள் நீரை விட்டுப் பிரிந்தால் எப்படி வாழ இயலாமல் உள்ளனவோ அது போன்று, இவர்களது உள்ளத்தை விட்டுப் பிரிய நேர்ந்தால், தாங்க இயலாதவன். இப்படிப்பட்ட தூய்மையானவன் ஒருவனது உள்ளத்தில் வாழவேண்டும் என்ற ஆசை காரணமாக அல்லவோ இவன் பல திவ்யதேசங்களில் உள்ளான்? திருச்சந்தவிருத்தம் (65) – என்னிலாத முன்னெலாம் – என்றது காண்க. (வணங்கி நாம் இருப்பது அல்லால்) – தனது அடியார்களின் உள்ளத்தை விட்டுச் சிறிதும் அகலாமல் அவன் உள்ள பின்னர், அவனிடம் நமது பொறுப்புகள் அனைத்தையும் வைத்த நாம், அவனை அனுபவித்து வாழ்வதைக் காட்டிலும் செய்யவேண்டியது வேறு என்ன என்கிறார். வணக்கம் என்பது மனம், சொல், செயல் ஆகிய மூன்றாலும் எக்காலத்தில், எந்த இடத்திலும் செய்யப்படும் அனுபவங்களைக் குறிக்கும்.

வ்யாக்யானம் – (பேசத்தானாவதுண்டோ) – அவன் பெருமையை அனுஸந்தித்தால் பாசுரமிட்டுப் பேசலாயிருந்ததோ? (பேதை நெஞ்சே) – க்ஷுத்ரவிஷயங்களைப் பேசிப் போந்த வாஸனையாலே இவ்விஷயத்தையும் உன் மதிகேட்டாலே பேசலாமென்றி ருக்கிறாயிறே. (நீ சொல்லாய்) – என் வார்த்தையொழிய இவ்விஷய ஸ்வபாவமிருந்தபடியாலே பரிச்சேதித்துப் பேசலாயிருந்ததோ சாபலம் பண்ணுகிற நீதான் சொல்லிக்காண் என்கிறார்.

விளக்கம் – (பேசத்தான் ஆவதுண்டோ) – அவனுடைய பெருமைகளை எண்ணிப் பார்த்தால், அதற்கு ஒரு பாசுரம் இடும்படியாகவோ உள்ளது? (பேதை நெஞ்சே) – மற்ற விஷயங்களை இத்தனை காலமாக நீ பேசிப் பழகியதால், இவனைப் பற்றியும் எளிதாகப் பேசிவிடமால் என்று அறிவு தடுமாறினாய் போலும். (நீ சொல்லாய்) – எனது சொற்கள் ஒருபுறம் இருக்கட்டும்; இவனது பெருமைகளைக் காணும்போது, அளவிட்டுக் கூறலாம்படி உள்ளதோ என்ற ஆசை கொண்ட நீயே, “கூற இயலாது”, என்று கூறுவாயாக.

23. கங்கையில் புனிதமாய காவிரி நடுவு பாட்டு

பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம் தன்னுள்

எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்

எங்ஙனம் மறந்து வாழ்கேன் ஏழையேன் ஏழையேனே

பொருள் – கங்கையைக் காட்டிலும் தூய்மையான காவேரியின் நடுவில், காவேரியின் வெள்ளநீரானது சீராகப் பாயும்படியாகவும் அழகான சோலைகளால் சூழ்ந்தபடியும் உள்ள ஸ்ரீரங்கத்தின் பெரியகோயிலில் பெரியபெருமாள் சயனித்துள்ளான். எங்களைப் போன்ற அடியார்களிடம் மிகவும் அன்பு கொண்டவனாகவும், அனைவருக்கும் ஸ்வாமியாகவும் உள்ள பெரியபெருமாளின் ஈடில்லாத சயனத் திருக்கோலத்தை, இதுநாள்வரை இந்தக் காட்சியை இழந்த ஏழையான நான் கண்டேன். இப்படியாக அவனை அனுபவிக்கப் பெற்ற பின்னரும், அவனை மறந்து, மற்ற விஷயங்களில் ஈடுபட்டு நான் எவ்விதம் வாழ்வேன்? ஏதும் செய்வது அறியாது நிற்கிறேன்.

அவதாரிகை – நினைக்கவும் பேசவுமொண்ணாதாகில், இவ்விஷயத்தை விஸ்மரித்து தரித்தாலோவென்னில், பெரியபெருமாளுடைய கிடையழகிலே அதிகபலனான நான் விஸ்மரித்து எங்ஙனே தரிப்பேன் என்கிறார்.

விளக்கம் – ஆழ்வாரிடம், "அவனை முழுவதுமாக நினைக்கவும் இயலவில்லை, அவனைப் பற்றி முழுவதுமாகப் பேசவும் இயலவில்லை என்கிறீர்கள். அப்படியெனில், அவனை மறந்து இருப்பதுதானே!", என்று சிலர் கூறினர். இதற்கு ஆழ்வார், "பெரியபெருமாளின் சயன அழகில் மிகுந்த ஈடுபாடு அடைந்த நான், அதனை மறந்து எப்படி வாழ இயலும்?", என்கிறார்.

வ்யாக்யானம் – (கங்கையில் புனிதமாய காவிரி) – கங்கையிற் காட்டிலும் பாவநமான காவேரி. தர்சநீயதையாலும், போக்யதையாலும் உண்டான ஏற்றமொழிய, வேறு பாவநத்வத்தாலும் ஏற்றத்தையுடைத்தாய்த்து காவேரி இருப்பது, கங்காஸாம்யம் புரா

ப்ராப்தா தேவதேவ ப்ரஸாதநாத் ரங்காவதரணாதூர்த்வமாதிக்யஞ்சாப்யவாபஸா என்கிறபடியே ஏற்றமுண்டிறே காவேரிக்கு. கங்கைக்கு ஒரு நாளிலே திருவடிகளோட்டை ஸ்பர்சத்தால் வந்த சுத்தியோகமிறே உள்ளது. பாவநார்த்தம் ஜடாமத்யே ததார சிரஸா ஹர: என்கிறபடியே அசுத்தியைப் போக்குகைக்காக ருத்ரன் சிரஸா தரிக்கையாலே ரௌத்ரமென்று சொல்லுவதொரு குற்றமுண்டு; அவனோட்டை ஸ்பர்சமுள்ளதொரு பதார்த்தங்கள் நிர்மால்யமென்று ததீயரான சைவர்க்கும் அஸ்ப்ருச்யமாயிறே இருப்பது. ஆறுபொதிசடையோனிறே; ஆகையாலே ஒரு சிக்கு நாற்றமும் மயிர்ப்பாடும் உண்டே; அதில்லாதபடியாலும், பெரியபெருமாள் நடுவே பள்ளி கொண்டருளுகையாலும் புனிதமிறே. ஆயிருக்கச்செய்தேயும் திருவடிகளோட்டை ஸ்பர்சத்தாலே எங்கேனும் புகிலும் பாவநத்வம் மேற்பட்டிருக்குமாய்த்து, "உன்றனடி சேர்த்து அருள் பெற்றாளன்றே" என்னக்கடவதிறே. அப்படிப்பட்ட திருவடிகளையுடையவன் தானே வந்து படுகாடு கிடக்கிற ஏற்றமுண்டிறே காவேரிக்கு. (நடுவுபாட்டு) – நடுவிடத்து. யசோதைப் பிராட்டி மடியிலே சாய்ந்தாற்போலேயாய்த்து காவேரியின் நடுவே கண்வளர்ந்தருளுகிறபடி.

விளக்கம் – (கங்கையில் புனிதமாய காவிரி) – கங்கையைக் காட்டிலும் தூய்மைப்படுத்துவதில் மேன்மை கொண்ட காவேரி. காண்பவர்களில் களைப்பை நீக்கக்கூடிய தன்மை, இனிமை போன்ற பலவற்றால் மட்டுமே காவேரி கங்கையை விட உயர்ந்தவள் அல்ல, கங்கையைக் காட்டிலும் தூய்மையை உண்டாக்குவதாலும் மேன்மை உடையவள் ஆவாள். ஸ்ரீரங்கமாஹாத்ம்யம் - கங்காஸாம்யம் புரா ப்ராப்தா தேவதேவ ப்ரஸாதநாத் ரங்காவதரணாதூர்த்வமாதிக்யஞ்சாப்யவாபஸா – ஸர்வேச்வரனின் கடாக்ஷம் காரணமாகக் காவேரியானவள் கங்கையை ஒத்த தன்மையை அடைந்தாள்; ஆனால், ஸ்ரீரங்கவிமானம் அங்கு வந்த காரணத்தினால், கங்கையைக் காட்டிலும் மேன்மை பெற்றாள் – என்றது காண்க. ஸர்வேச்வரன் த்ரிவிக்ரமனாக நின்ற ஒரு நாள் மட்டுமே அவனுடைய தொடர்பு கங்கைக்கு உள்ளது. ஈச்வர ஸம்ஹிதை - பாவநார்த்தம் ஜடாமத்யே ததார சிரஸா ஹர: - தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக கங்கையை சிவன் தனது சடையில் தாங்கினான் – என்று கூறுவதற்கு ஏற்ப, சிவன் தனது பாவங்களை நீக்கிக் கொள்ள தனது தலையில் கங்கையை வைத்தான். ஆகவே ருத்ரதொடர்பு என்னும் தோஷமும் கங்கைக்கு உள்ளது. ருத்ரனின் தொடர்பு கொண்ட அவனது மாலை முதலானவற்றை "நிர்மால்யம்" என்று

அவனது அடியார்களான சைவர்கள் கூட தொடுவதற்குத் தகாதது என்று ஒதுக்குகிறார்கள். திருவெழுகூற்றிருக்கை – ஆறுபொதிசடையோன் – என்று கூறுவதால், அவனது சடையில் தங்கிய கங்கைக்கு ஒருவிதமான சிக்கு நாற்றமும் மயிர்த்தொடர்பும் உள்ளது. இதனைப் போன்ற தோஷங்கள் இல்லாமையாலும், பெரியபெருமாள் இவள் நடுவே பள்ளி கொண்டுள்ளதாலும், கங்கையைக் காட்டிலும் காவேரிக்குப் புனிதம் உள்ளது. ருத்ரதொடர்பு இருந்தாலும், எம்பெருமானின் திருவடித் தொடர்பு உள்ளதால், கங்கைக்குத் தூய்மை அதிகம் அல்லவோ என்ற சந்தேகம் எழலாம். முதல் திருவந்தாதி (97) - உன்றனடி சேர்த்து அருள் பெற்றாளன்றே – என்று புகழ்ந்தது காண்க. ஆனால், இப்படிப்பட்ட உயர்ந்த திருவடிகளை உடையவன் தானாகவே வந்து சயனித்துள்ள சிறப்பு காவேரிக்கு மட்டுமே உண்டு அல்லவோ? (நடுவுபாட்டு) – யசோதையின் மடியில் எவ்விதம் இவன் சயனித்துக் கிடந்தானோ, அதே இன்பத்தில் இங்கு காவேரியின் நடுவில் கண்வளர்கிறான்.

வ்யாக்யானம் – (பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழிலரங்கந்தன்னுள்) – ஜல ஸம்ருத்தியாலேயும், கோயிலைக்கிட்டுகிறோமென்கிற ப்ரீதி ப்ரகர்ஷத்தாலேயும், பெரிய கிளர்த்தியோடே வாராநிற்கும். (பரந்து பாயும்) – ஒரு மடையாலன்றியே தன் அபிநிவேசமெல்லாம் தோற்ற எங்குமொக்கப் பாயாநிற்கும். (பூம்பொழில் அரங்கந் தன்னுள்) - ஜல ஸம்ருத்தியாலே பொழில்களும் பூமாறாதே செல்லுமாய்த்து. பெரியபெருமாளுடைய ஸௌகுமார்யத்துக்கு அநுகூலமான ஜல ஸம்ருத்தியையும் நித்ய வஸந்தமான பொழிலையுமுடைய ச்ரமஹரமான தேசம். இத்தால் கோயிலினுடைய பாவநத்வமும், போக்யதையும் சொல்லிற்றாய்த்து.

விளக்கம் – (பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழிலரங்கந்தன்னுள்) – தன்னுடைய நீரின் வெள்ளம் காரணமாகவும், பெரியகோயிலை அடையப் போகிறோம் என்னும் மகிழ்வின் காரணமாகவும் அனைத்தையும் அடித்துக் கொண்டு, பெரிய அலைகள் எழும்படி வருகிறாள். (பரந்து பாயும்) – மடையில் தேக்கி வைக்கப்பட்டதன் காரணமாகத் தன்னில் வெள்ளம் பாயாமல், தனது ஆர்வம் காரணமாகவே எங்கும் பாய்ந்தபடி உள்ளாள். (பூம்பொழில் அரங்கந் தன்னுள்) – காவேரியின் பெருக்கு காரணமாக ஸ்ரீரங்கத்தின் தோட்டங்கள் அனைத்தும் எப்போதும் செழிப்பாகவே உள்ளன. பெரியபெருமாளின் மென்மைக்கு ஏற்றபடி இவளது நீர்ப்பெருக்கு உள்ளது; என்றும் வஸந்தகாலமோ என்று

எண்ணும்படியான சோலைகள் உள்ளன; ஆக அனைவரது களைப்பையும் போற்றும்படியாக ஸ்ரீரங்கம் உள்ளது. இதன் மூலம் பெரியகோயிலின் தூய்மை உண்டாக்கும் தன்மை மற்றும் இனிமை ஆகியவை கூறப்பட்டன.

வ்யாக்யானம் – (எங்கள் மால்) – ஆச்ரிதர் பக்கல் வ்யாமோஹம் ஒரு வடிவு கொண்டாற்போலே இருக்கை. "எங்கள்" என்று தம்மைப்போலே பெரியபெருமாள் பக்கலிலே ந்யஸ்தபரராயிருப்பாரையும் கூட்டிக்கொள்ளுகிறார். கோயிலின் பாவநத்வ போக்யத்வங்களைக் கண்டு சாய்ந்தருளினானென்று பேராய், நிரூபித்தால் ஆச்ரித வ்யாமோஹமே ஹேது. வ்யாமோஹமேயாய் ஸம்பந்தமின்றிக்கே இருக்கையன்றியே, (இறைவன்) – இவற்றை உடையவனாயிருக்கை. (ஈசன்) – உடையவனானாலும் நியமிக்க சக்தனன்றிக்கே இருக்கையன்றியே நல்வழி போக்குகைக்கும் க்ஷமனாயிருக்கை. ஸ்நிக்தனாய், ப்ராப்தனாய், சக்தனாயிருக்குமவனென்கை. குணத்ரயவஸ்தையைத் தவிர்த்து, நித்யாநுபவம் பண்ணும் தேசத்தேறக் கொண்டுபோக நினைத்து, வாத்ஸல்ய ப்ரேரிதனாய் வந்து தன்னுடைமையைத் தன் கருத்திலே நடத்துகைக்காகக் கிடக்கிறபடி.

விளக்கம் – (எங்கள் மால்) – அடியார்களிடம் இவன் கொண்டுள்ள அன்பு என்பதே ஒரு பெரிய வடிவம் கொண்ட்தோ என்று எண்ணும்படி இருப்பவன். "எங்கள்" என்பதன் மூலம், தன்னைப் போன்றே, தங்களைக் காப்பாற்றும் பொறுப்பை பெரியபெருமாளிடம் ஒப்படைத்த அனைவரையும் சேர்த்துக் கொள்கிறார். மேலோட்டமாகப் பார்த்தால் பெரியகோயிலின் தூய்மை மற்றும் இனிமை ஆகியவற்றால் இங்கு வந்து இவன் சயனித்தானோ என்று தோன்றும்; ஆனால் சற்று ஆழமாகச் சிந்தித்தால், அடியார்கள் மீது கொண்ட அன்பு காரணமாகவே இங்கு வந்தான் என்பதை உணரலாம். அன்பு மட்டும் காரணம் அல்ல, அடியார்களுடன் இவனுக்கு இயற்கையாகவே உறவும் உள்ளது அல்லவோ? (இறைவன்) – அடியார்கள் அனைவரையும் கொண்டுள்ளவனாக இருத்தல். (ஈசன்) – இவர்களைத் தனது உடைமையாகக் கொண்டபோதிலும், இவர்களை அதட்டி நியமிக்க மனதில் சக்தி இல்லாமல், அன்புடன் நல்வழியில் நடத்தும்படி பொறுமை கொண்டவனாக உள்ளான். அடியார்களிடம் அன்பு பூண்டவனாக, அவர்களுக்கு ஸ்வாமியாக, அவர்களை வழிநடத்துபவனாக உள்ளான். தனது அடியார்கள் மூன்று குணங்களால் ஆன உலகவிஷயங்களில் ஈடுபாட்டுடன் உள்ளதை நீக்கி, எப்போதும்

அனுபவிக்கலாம்படி உள்ள பரமபதத்திற்கு அவர்களைக் கொண்டு செல்ல எண்ணி, தனது வாத்ஸல்யம் குணத்தால் தூண்டப்பட்டவனாக ஸ்ரீரங்கம் வந்து, தனது உடைமைகளான இவர்களைத் தனது விருப்பப்படி, தனக்கே ஆக்கிக் கொள்ளும் பொருட்டு சயனித்துள்ளான்.

வ்யாக்யானம் – (கிடந்தது ஓர் கிடக்கை) – கீழ்ச்சொன்ன ஆத்மகுணங்களை விஸ்மரித்துக் கிடையழகிலே அகப்பட்டபடி. நிற்றல், இருத்தல் செய்தாராகில் மறக்கலாய்த்திறே. நாட்டில் அழகியராயிருப்பார்க்கு நிற்றல் இருத்தல் செய்தபோது அழகு தோற்றி, சாய்ந்தால் தோற்றுவது வைரூப்யமேயாயிருக்கும்; இவ்விஷயத்தில் சாய்ந்தபோதாய்த்து அழகு மினுங்கியிருப்பது. ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப: என்னக்கடவதிறே. (ஓர் கிடக்கை) – ஒருக்கணித்தோ மல்லாந்தோ கண்வளர்ந்தருளுகிறதென்று தெரியாதிருக்கும். இவர்கள்தான் நின்றானாகில் "நிலையாநின்றான்" என்பார்கள்; இருக்கக்கண்டால் "பிரானிருந்தமை காட்டினீர்" என்பர்கள்; சாயக்கண்டால் "கிடந்ததோர் கிடக்கை" என்பர்கள்.

விளக்கம் – (கிடந்தது ஓர் கிடக்கை) – இப்போது கூறப்பட்ட ஆத்மகுணங்களை மறந்து, அவன் சயனித்துள்ள அழகைக் கண்டு, அதில் மயங்கிய நிலையைக் கூறுகிறார். நின்ற திருக்கோலமாகவோ அல்லது அமர்ந்த திருக்கோலமாகவோ இருந்தால் மறந்துவிட வாய்ப்புண்டு. பொதுவாக அழகாக உள்ளவர்கள் நின்றாலோ, அமர்ந்தாலோ மட்டுமே அவர்கள் அழகு வெளிப்படும்; அவர்கள் படுக்கும்போது அழகாக இருக்கமாட்டனர். ஆனால் பெரியபெருமாளைப் பொறுத்தவரையில் சயனித்துள்ளபோது அழகு மேலோங்கி வெளிப்படுகிறது. இராமாயணம் யுத்தகாண்டம் - ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப: - அழகாக உறங்கிக் கொண்டுள்ளவனும், எதிரிகளை வேதனையில் ஆழ்த்துபவனும் ஆகிய இராமன் – என்றது காண்க. (ஓர் கிடக்கை) – இவன் ஒரு பக்கமாகச் சயனித்துள்ளானா அல்லது நேராகச் சயனித்துள்ளானா என்று தீர்மானிக்க இயலாதபடி சயனித்துள்ளான். ஆழ்வார்கள் இவனது எந்த நிலையில் ஈடுபட்டே உள்ளனர். இவன் நிற்பது கண்டால் பெரியதிருமொழி (6-5-9) – நிலையா நின்றான் – என்றும், அமர்ந்தது கண்டால் திருவாய்மொழி (6-5-5) – பிரான் இருந்தமை காட்டினீர் – என்றும், சயனித்துள்ளது கண்டால் திருமாலை (23) – கிடந்ததோர் கிடக்கை – என்றும் கூறுவர்.

வ்யாக்யானம் – (கண்டுமெங்ஙனம் மறந்து வாழ்கேன்) – இவ்விஷயத்தைக் கண்டு அநுபவிப்பதற்கு முன்பாகில் மறக்கவுமாம். கண்டு அநுபவித்த பின்பு இனித்தான் எந்த ப்ரகாரத்தாலே மறப்பது? (வாழ்கேன்) – இவ்விஷயத்தை விட்டுப்போய் மணலை முக்கவோ? அநுபவித்தால் மறக்கவொண்ணாது; மறந்தால் புறம்பு தரிக்கவொண்ணாது. (ஏழையேனேழையேனே) – நானோ அத்யந்தசபலனாய், கிட்டினால் அநுபவிக்க மாட்டேன்; பிரிந்தால் தரிக்கமாட்டேன். (ஏழையேன் ஏழையேனே) – முன்பு இதர விஷயங்களிலே அகப்பட்டு சிதிலனாயிருப்பன்; இப்போது பகவத்விஷயத்திலே அகப்பட்டு, புறம்பு கால்வாங்க மாட்டாதே இருப்பன். அது கர்மத்தாலே வந்த சைதில்யம்; இது விஷயவைலக்ஷண்யத்தாலே வந்த சைதில்யம்.

விளக்கம் – (கண்டும் எங்ஙனம் மறந்து வாழ்கேன்) – இவனைக் கண்டு மனதால் அனுபவிக்காமல் இருந்தால், இவனது சயனத் திருக்கோலத்தை மறக்கக்கூடும். ஆனால், நன்றாக அனுபவித்த பின்னர் எப்படி மறக்க இயலும்? (வாழ்கேன்) – நல்ல உணவு போன்ற இவனை விட்டுச் சென்று, மணலை உண்பேனோ? அனுபவித்த பின்னர் மறக்க இயலாது என்றும், மறந்துவிட்டால் வேறு விஷயங்களைக் கொண்டு வாழ இயலாது என்றும் கூறுகிறார். (ஏழையேன் ஏழையேனே) – இவனை அனுபவிக்கவேண்டும் என்னும் பேராசை கொண்டு இவன் முன்பாக வந்தாலும், இவனை முழுவதுமாக அனுபவிக்க இயலாது; இவனை விட்டுப் பிரிந்தால் தரிக்க மாட்டாதவனாக உள்ளேன். (ஏழையேன் ஏழையேனே) – எல்லையற்ற காலமாக மற்ற விஷயங்களில் சிக்கியதால் தளர்வுடன் இருந்தேன். இப்போதோ பெரியபெருமாள் என்னும் விஷயத்தில் அகப்பட்டுக் கொண்டு, இங்கிருந்து மீண்டு மற்ற விஷயங்களை அனுபவிக்க இயலாமல் தளர்வாக உள்ளேன். முன்பு இருந்த தளர்ச்சி எல்லையற்ற கர்மத்தால் வந்தது, இப்போது உள்ள தளர்ச்சி பெரியபெருமாளின் மேன்மையால் உண்டானது.

24. வெள்ளநீர் பரந்து பாயும் விரி பொழில் அரங்கம் தன்னுள்
கள்வனார் கிடந்த ஆறும் கமலநன் முகமும் கண்டும்
உள்ளமே வலியை போலும் ஒருவன் என்று உணரமாட்டாய்
கள்ளமே காதல் செய்து உன் கள்ளத்தே கழிக்கின்றாயே.

பொருள் – அதிகமான வெள்ளத்தைக் கொண்ட காவேரி நதியானது அனைத்து இடங்களிலும் பாயும்படியாக உள்ளதும், அதிகமான பரப்பளவு கொண்ட சோலைகள் எங்கும் உள்ளதும் ஆகிய திருவரங்கத்தில் உள்ள பெரியகோயிலில், காண்பவர்கள் உள்ளத்தை அபகரிக்கும் கள்வனான ஸ்ரீரங்கநாதன் சயனித்துள்ளான். எனது நெஞ்சமே! இப்படியாக அவன் கண்வளர்கின்ற அழகையும், தாமரை மலர் போன்ற அழகான திருமுகத்தையும் கண்ட பின்னரும் நீ இத்தனை கடினமாக உள்ளாயே! இந்த அழகிய மணவாளன், தனக்கு ஒப்புமையாக யாரும் கூறமுடியாதபடி உள்ளவன் என்பதை நீ அறியவில்லை போலும். இதனால்தான், இவனிடம் பொய்யான அன்பு கொண்டபடி நடித்து, உனது தாழ்ந்த செயல்களில் ஈடுபடுகிறாய் போலும்.

அவதாரிகை – "மனத்தினால் நினைக்கலாமே" என்றும், "பேசத்தானாவதுண்டோ" என்றும், "எங்ஙனம் மறந்து வாழ்கேன்" என்றும், இவர் மறக்கப் புக்கவாறே இவரை நினைப்பிக்கைக்காக இவர்பக்கல் தமக்குண்டான ப்ரேமத்தைக் காட்டக் கண்டு, "இவ்விஷயத்தில் நமக்குண்டான ப்ரேமம் அஸத்ஸமமாயிருந்ததீ" என்றும், இன்னமும் இவ்விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்துத் தமக்குப் பிறந்த பக்தி விஷயாநுரூபமாகப் போராமையாலும், அசித்ஸம்ஸ்ருஷ்டனுக்குப் பிறந்த ப்ரேமம் பித்தோபஹதனுக்குப் பிறந்த தெளிவுபோலே விச்வஸிக்கவொண்ணாமையாலும் அநுதபித்து, திருவுள்ளத்தைக் குறித்து, "உனக்கு இதரவிஷயத்தோபாதி இவ்விஷயத்திலும் க்ருத்ரிம ஸ்நேஹமாய் விட்டதாகாதோ", என்று திருவுள்ளத்தை நிந்திக்கிறார்.

விளக்கம் – திருமாலை (21) - மனத்தினால் நினைக்கலாமே - என்றும், (22) – பேசத்தானாவதுண்டோ - என்றும், (23) - எங்ஙனம் மறந்து வாழ்கேன் – என்றும் கூறியபடி ஆழ்வார் பெரியபெருமாளை மறப்பதற்கான வழியைத் தேடியபடி நின்றார். இதனைக் கண்ட பெரியபெருமாள், ஆழ்வாரிடம் தான் கொண்டுள்ள அளவு கடந்த காதலை வெளிப்படுத்தினான். இதனைப் பார்த்த ஆழ்வார், "இவன் நம் மீது கொண்ட அன்பைக் காணும்போது, நான் இவன் மீது கொண்டதாகக் கூறிக் கொள்ளும் அன்பானது மிகவும் சிறியதே, அது இல்லாதது போன்று அல்லவோ உள்ளது", என்று எண்ணினார். மேலும் இவனது மேன்மையைக் கண்ணுற்ற ஆழ்வார், தனக்குப் பிறந்த

அன்பானது அவனது மேன்மைக்குச் சற்றும் எட்டாதது என்று அறிந்தார். மேலும் அசேதனமான இந்த உடலுடன் கூடிய தனக்கு அவன் மீது உண்டான ப்ரேமை என்பது, பைத்தியம் பிடித்தவனுக்கு ஏதோ ஒரு காலத்தில் பிறக்கின்ற தெளிந்த நிலை போன்று, நம்ப இயலாதது என்றும் உணர்ந்தார். ஆகவே அனுதாபம் காரணமாகத் தனது உள்ளத்திடம், "உள்ளமே! மற்ற விஷயங்களில் நீ எவ்விதம் உள்ளாயோ அது போன்று இவனைக் குறித்தும் நீ கள்ளத்தனமான ப்ரேமையே கொண்டாய் போலும்", என்கிறார்.

வ்யாக்யானம் – (வெள்ளநீர் பரந்து பாயும்) – காவேரி ஸஹ்யமே தொடங்கிக் கோயிலை நோக்கி வருகிறதாகையாலே, தன் அபிநிவேசமெல்லாம் தோற்றும்படி பெருவெள்ளமாக நீரைக் கொண்டு வந்து சிலர்க்குக் குலை செய்து தகையவொண்ணாதபடி ஸர்வதோதிக்கமாகப் பாயாநிற்கும். அபிநிவேசம் முடியாமையாலே பாய்ந்து தலைக்கட்டாது. (விரிபொழிலரங்கம்) – நீர் பாய்ந்த பரப்படங்கலும் சோலையும் விரிந்து வாராநிற்கும்.

விளக்கம் – (வெள்ளநீர் பரந்து பாயும்) – காவேரியானது குடகு மலையில் உற்பத்தியாகும்போதே, திருவரங்கம் பெரியகோயிலை நோக்கி வருவதால், பெரியபெருமாளைத் தொடவேண்டும் என்னும் ஆர்வம் மேலிட ஓடி வருகிறாள். தனது ஆர்வம் அனைத்தையும் வெள்ளமாகக் கொண்டு, யாராலும் தடுத்து நிறுத்த இயலாதபடி, அனைத்து திசைகளும் பரந்து பாய்ந்து ஓடி வருகிறாள். இவள் பெரியபெருமாளின் மீது கொண்டுள்ள ஆசை முடிவில்லாமல் உள்ளதால், இவள் பாய்வது நிற்காது என்பதால் "பாயும்" என்றார். (விரிபொழில் அரங்கம்) – காவேரி பாய்ந்தபடி உள்ள அனைத்து இடங்களிலும் சோலைகள் விரிந்து காணப்படுகின்றன.

வ்யாக்யானம் – (அரங்கந்தன்னுள் கள்வனார்) – பரமபதத்தில் அக்ருத்ரிமரான நித்யஸூரிகளோட்டைப் பரிமாற்றத்துக்குச் செவ்வை பரிகரமானாற்போலே, க்ருத்ரிம ஸம்ஸாரிகளை வசீகரிக்கைக்குச் சௌர்யம் பரிகரமாகவாய்த்துக் கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. நீர் வாய்ப்பும் சோலை வாய்ப்பும் கண்டு சாய்ந்தான் என்கிற இது வ்யாஜ்யமாய், ஸம்ஸாரிகளுடைய வசீகரணத்திலே நினைவாய்த்து இருப்பது. நிலவரும் சென்று புக்கால் முற்பட சௌர்யகந்தியாயாய்த்து திருமுகமிருப்பது. அதாவது:

ஒரு உபாதியாலே தம்மை வந்து கிட்டினாருடைய ஆத்மவஸ்துவை அபஹரித்துச் சட்டைப் புரைக்குள்ளே இட்டுக் கொள்வரென்று தோற்றியிருக்கும். அதாகிறது: தமக்கு அந்தரங்கமாக்கிக் கொள்ளுகை. "இன்னமும் தான் ஆத்ம வஸ்துவைத் தன்னதாக அபிமாநித்துப் போந்தான், நாம் இவன் அபிமானித்த அத்தை மீட்போம்" என்று பார்த்துத் தம் அழகைக் காட்டி, ஜிதந்தே என்னப் பண்ணுமவனாய்த்து. அவனதான வஸ்துவை இவன் நெடுநாள்பட அபஹரித்துப்போந்தபடி. தன்னத்தைத் தானே கொள்ளுகை அபஹாரமாம்படியிறே சேதநனுடைய ஆத்மாபஹாரம் காழ்ப்பேறினபடி ஆத்ம ஸமர்ப்பணமும் ஆத்மாபஹாரமிறே என்னும்படியான இவ்வஸ்துவிறே இப்படி எளிவரவு பட்டது. ஆத்மஸமர்ப்பணமாகிறதுதான் மஹாபலி தாநம்போலே இருப்பதொன்றிறே.

விளக்கம் – (அரங்கம் தன்னுள்) – பரமபதத்தில் கள்ளத்தனம் இல்லாத நித்யஸூரிகளுடன் உள்ளபோது அவர்களுக்கு நேர்மையாகவே தன்னைக் காட்டிக் கொடுக்கிறான். ஆனால் கள்ளத்தனம் நிறைந்த இந்த உலகில் உள்ள ஸம்ஸாரிகளை ஈர்ப்பதற்குத் தான் கள்ளத்தனம் கொண்டால் மட்டுமே இயலும் என்று எண்ணியவனாக, கள்வனாகக் கண்வளர்கிறான். "இங்குள்ள நீர் வளத்தையும், சோலை அழகையும் கண்டு இங்கு பள்ளி கொண்டான்", என்று காண்பவர்கள் நினைக்கும்படியாகச் செய்துவிட்டு, இவர்களை வசப்படுத்தவே பள்ளி கொண்டான். பெரியபெருமாளின் அருகில் சென்று நோக்கினால், கள்ளத்தனம் உள்ளதைக் காணலாம்படி அவன் திருமுகம் இருக்கும். ஏதோ ஒரு காரணத்தால் தன்னிடம் வருபவர்களின் ஆத்மாவைத் திருடி, தனது சட்டைப்பைக்குள் வைத்துக் கொள்பவன் போன்றே இருப்பான். அதாவது, அவர்களைத் தனக்கு அந்தரங்கமாக ஆக்கிக்கொள்வான். "இத்தனை காலம் இவன் என்னுடைய ஆத்மாவைத் தனது என்றே எண்ணியுள்ளான். இதனை இவன் அறியாதபடி நாம் அபகரித்துக் கொள்வோம்", என்று சூழ்ச்சி செய்து தனது அழகைக் காட்டுகிறான். அப்போது – ஜிதந்தே – இந்த ஆத்மாவை வென்றவனே – என்று நாம் கூறும்போது, ஆத்மாவை அபகரிக்கிறான். பெரியபெருமாளுக்குச் சொந்தமான ஆத்மாவை அல்லவோ இந்தச் சேதனன் தன்னுடையது என்று அபகரித்து வைத்துள்ளான்? இப்படியாக சேதனன் எல்லையற்ற காலமாக அபகரித்து வைத்துள்ளதால், இந்த ஆத்மா சேதனனுக்குச் சொந்தமானது என்று நினைக்கலாம்படி ஆனது. அவனது ஆத்மாவை "ஆத்ம ஸமர்ப்பணம்" என்று கூறுவதும் அபகரிப்பது போன்றே ஆகும் என்னும்படியாக

அல்லவோ உள்ளது? இவனது உலகங்களை மீண்டும் இவனுக்கே தானம் அளித்த மஹாபலியின் செய்கை போன்று அல்லவோ "ஆத்ம ஸமர்ப்பணம்" என்பது உள்ளது?

வ்யாக்யானம் - (கிடந்தவாறும்) – வசீகரணபரிகரந்தானும் சீலாதி குணங்களான ஆத்ம குணங்களுமல்ல; அவயவசோபையான ரூபகுணங்களுமல்ல; "கிடந்ததோர் கிடக்கை" என்னும் கிடையழகாய்த்து. (கமலநன்முகமும்) – விகாஸம், செவ்வி, குளிர்த்தி, பரிமளம் என்றாற்போலே சொல்லுகிறவற்றைப் பற்றத் திருமுகத்துக்குத் தாமரை ஒரு போலியாகச் சொல்லுமித்தனை போக்கி, ஸர்வதா ஸத்ருசமல்லாமையாலே, (நன்முகம்) என்கிறார். சுத்தஸத்வமாய், ஜ்யோதிர்மயமான முகத்துக்கு ப்ராக்ருதவஸ்து ஸத்ருசமாகவற்றோ? ஆச்ரித விஷயத்தில் போதுசெய்கிற இம்முகத்துக்கு த்ருஷ்டாந்தமுண்டோ? ஸம்ஸாரத்துக்குள்ளே குளிர்ந்த முகம் இதொன்றுமே என்கிறார். (கண்டும் உள்ளமே வலியை போலும்) – கண்வளர்ந்தருளுகிற அழகைக் கண்டு வைத்தும், நெஞ்சே! ஒரு விகாரம் பிறவாதே திண்ணிதாயிருந்தாயீ! கீழ்ப்பிறந்த விகாரமெல்லாம் விஷய வைலக்ஷண்யத்தைப் பற்ற அஸத்ஸமமாயிருக்கிறதாய்த்து இவர்க்கு.

விளக்கம் – (கிடந்தவாறும்) – என்னை வசப்படுத்தியது அவனது எளிமை முதலான ஆத்ம குணங்கள் அல்ல, அவனது அழகான அவயவங்கள் அல்ல, (23) – கிடந்ததோர் கிடக்கை – என்னும்படியாக உள்ள, அவனது அழகான சயனத் திருக்கோலம் அல்லவோ வசப்படுத்தியது. (கமல நன்முகம்) – இவனது திருமுகத்தின் மலர்ச்சி, அழகு, குளிர்ச்சி, நறுமணம் ஆகிய தன்மைகளைத் தாமரை கொண்டுள்ளதால் அதனை இவனது திருமுகத்துக்கு ஒப்பாகக் கூறலாம் அல்லாமல், அனைத்துவிதங்களிலும் அது ஒப்பாகாது. இதனால் நன்முகம் என்றார். சுத்தமான ஸத்வமயமாகவும், ஜ்யோதி ரூபமாகவும் உள்ள அழகிய மணவாளனின் திருமுகத்திற்கு, இந்த உலகில் உள்ள எந்த ஒரு பொருளாவது ஒப்பாகுமோ? சூரியனைக் கண்டால் மலரும் தாமரை மலரானது, தனக்கு விருப்பமானவர்களைக் கண்டால் மலர்கின்ற இவனது திருமுகத்திற்கு ஒப்பாக இயலுமோ?ஸம்ஸார உலகில் இவனது திருமுகம் மட்டுமே குளிர்ந்த முகம் என்கிறார். (கண்டும் உள்ளமே வலியை போலும்) – எனது நெஞ்சமே! அவன் கண்வளர்கின்ற அழகைக் கண்ட பின்னரும், உன்னில் எந்தவிதமான மாற்றமும் உண்டாகவில்லை என்றால், உனது வலிமையை எப்படிக் கூறுவது? இதுவரை தனக்கு உண்டான

மாற்றங்கள் அனைத்து, பெரியபெருமாளின் மேன்மையைக் காணும்போது, ஏதும் இல்லை என்றே இவருக்குத் தோன்றுகிறது.

வ்யாக்யானம் – இப்போது எனக்கு வந்த வன்மையென் என்ன, (ஒருவனென்றுணர மாட்டாய்) – அத்விதீயனென்று உணரமாட்டுகிறிலை. ஒருவனென்று உணரப்புக்கால் அவனை உள்ளபடி உணரவேணும். அப்படி உணர்ந்தால், அத்தலையில் ஆச்ரித வாத்ஸல்யத்துக்கு ஸத்ருசமாகவும் விடாய் பிறக்கவேணும்; அது பிறவாமையாலே "வலியை" என்கிறார்.

விளக்கம் – ஆழ்வாரிடம் அவரது உள்ளம், "அப்படி எனக்கு உள்ள வன்மை என்று எது உள்ளது?", என்றது. இதற்கு ஆழ்வார் விடை கூறுகிறார். (ஒருவன் என்று உணர மாட்டாய்) – இவனைப் போன்று வேறு ஒருவன் இல்லை என்பதை உணராமல் உள்ளாய். இவ்விதம் இவன் ஒப்பற்றவன் என்று நீ உணர்ந்தால், அவனை உள்ளது உள்ளபடி அறிதல் வேண்டும். அதாவது, அவனுடைய மேன்மை மற்றும் அடியார்கள் மீது அவன் கொண்டுள்ள ப்ரேமை ஆகியவற்றைத் தெளிவாக அறிதல் வேண்டும். அதன் பின்னர் அவன் மீது அளவுகடந்த ஈடுபாடு உண்டாக வேண்டும். இவை உன்னிடம் தோன்றவில்லை என்பதால், "வலியை" என்றேன்.

வ்யாக்யானம் – அப்படியாகில், கீழ் "கண்ணினை களிக்குமாறே" என்றும், "பனியரும்புதிருமாலோ" என்றும், "உடலெனக்குருகுமாலோ" என்றும் சொல்லிப் போந்தவையெல்லாம் என்னாய்த்தென்னில்; (கள்ளமே காதல் செய்து) – உனக்கு ப்ராக்ருத விஷயத்தில் பண்ணிப்போந்த பூர்வ வாசனையாலே இங்கும் அநுவர்த்தித்துப் போந்தவித்தனையொழிய, இவ்விஷயத்துக்கு ஸத்ருசமாக ஸ்நேஹித்தாயல்லையே. விஷயாந்தரங்களில் பண்ணிப்போந்ததும் சபல பக்தியாகையாலே இங்கும் சபல பக்தியிறே பண்ணிற்று. (உன் கள்ளத்தே கழிக்கின்றாயே) – இந்த க்ரித்ரிம பக்தியானது பண்டே உன் பாழியிறே; இங்கும் அது தன்னையே முடிய நடத்தினாயித்தனை போக்கி இவ்விஷயத்துக்கு அநுரூபமன்றிறே உன்னுடைய ப்ரேமம் என்கிறார்.

விளக்கம் – அப்படி ஈடுபாடு உண்டாகவில்லையெனில், (17) - கண்ணினை களிக்குமாறே - என்றும், (18) – பனியரும்புதிருமாலோ - என்றும், (19) – உடலெனக்குருகுமாலோ – என்றும் ஏன் கூறவேண்டும் என்பதற்கான விடையை அருளிச் செய்கிறார். (கள்ளமே காதல் செய்து) – எனது நெஞ்சமே! நீ எல்லையற்ற காலம் இந்த உலக விஷயங்களில் கள்ளத்தனமாகவே ஈடுபட்டுள்ளாய். இது போன்றே பெரியபெருமாளைக் குறித்தும் கள்ளத்தனமாகவே ஈடுபட்டாய். இவனது மேன்மையை அறிந்து, இவன் மீது உண்மையான ப்ரேமை கொள்ளவில்லை. மற்ற விஷயங்களில் உனக்கு உள்ள கள்ளக் காதல் போன்று அல்லவோ இவனிடமும் உள்ளது? (உன் கள்ளத்தே கழிக்கின்றாய்) – இத்தகைய கள்ளத்தனம் என்பது உனக்கு எல்லையற்ற காலமாக, உனது சுபாவமாகவே அல்லவோ உள்ளது? இவன் விஷயத்திலும் நீ அதே போன்று அல்லவோ நடக்கிறாய்? மற்ற விஷயங்கள் போலவே இவனையும் நீ எண்ணினாய், ஆக இவனைக் குறித்த காதலுக்கு உனது காதல் ஏற்றது அல்லவே.

25. குளித்து மூன்று அனலை ஓம்பும் குறிகொள் அந்தணமை தன்னை
ஒளித்திட்டேன் என் கண் இல்லை நின் கண் பத்தனும் அல்லேன்
களிப்பது என்கொண்டு நம்பீ கடல்வண்ணா கதறுகின்றேன்
அளித்து எனக்கு அருள் செய்கண்டாய் அரங்கமாநகருளானே

பொருள் – பெரியபெருமாளே! ஸ்ரீரங்கநாதா! நீராடிய பின்னர், மூன்றுவிதமான அக்னிகளை வளர்ப்பதற்கான தகுதியைக் கொண்டதும், மந்த்ரம் முதலானவற்றால் தோஷங்கள் வராமல் காப்பாற்றவல்லதும் ஆகிய ப்ராஹ்மணத் தன்மையை நான் நீக்கிக் கொண்டுவிட்டேன். ஆத்மாவைப் பற்றிய ஞானமும் என்னிடம் இல்லை. உன்னிடமும் எனக்கு எந்தவிதமான ப்ரேமையும் இல்லை. இப்படியாக எந்தவிதமான பக்கபலமும் இல்லாத நான், எதனைக் கண்டு மகிழ்வு கொள்வது? உயர்ந்த குணங்களால் பூர்ணமாக உள்ளவனே! கடல்போன்ற நிறமும் குணமும் கொண்ட அழகியமணவாளா! எனது வாய் விட்டுப் புலம்புகிறேனே! என் விஷயத்தை நீ ஆராய்ந்து, எனக்கு ஏற்ற தகுதிகளை அனைத்தையும் அளித்து, கருணை செய்யவேண்டும்.

அவதாரிகை – கீழ் பகவத் விஷயத்தில் தமக்குப் பிறந்த ஆதரம் விஷயாநுரூபமாகப் போராமையாலும், அசித்ஸம்வர்க்கயுக்தனுக்குப் பிறந்ததாகையாலே பித்தோப ஹதனுக்குப் பிறந்த தெளிவுபோலே விச்வஸிக்கவொண்ணாமையாலும், என் செய்வோமென்று திருவுள்ளத்தைக் குறித்து அநுதபித்தாராய் நின்றார். "இனி அசித்ஸம்வர்க்கமற்று ஒரு தேச விசேஷத்திலே நித்யாநுபவம் பண்ணுகைக்கு நம் கையில் முதல் காண்கிறிலோம், நாம் இவ்விஷயத்தை இழந்தே போமித்தனையாகாதே" என்று சோகிக்க, "நீர் சோகிக்கிறதென்? அசித்ஸம்வர்க்கமற்று நம்மைப் பெறுகைக்கு சாஸ்த்ரங்களில் த்ரைவர்ணிகாதிகாரமாயும், ஸர்வாதிகாரமாயும் உண்டா ஸாதனங்கள் ப்ரஸித்தமன்றோ? அவற்றிலே ஒன்றை அநுஷ்டித்து நம்மை லபிக்கமாட்டீரோ?" என்ன; எனக்கு அவையொன்றிலும் யோக்யதையே தொடங்கி இல்லையென்று மேல் பத்துப்பாட்டாலே தம்முடைய உபாயசூந்யதையை அருளிச்செய்கிறார். ஆனால் பின்னை, கீழ் இவர்க்குப் பிறந்ததாகச் சொன்ன ஜ்ஞாந பக்திகள் என்னாய்த்து என்னில் – பகவத் ப்ரஸாதத்தாலே பிறந்த போகோபகரணமான ஜ்ஞாநபக்திகளாய்த்து இங்கு சொல்லிற்று; அவை ஸாதந கோடியில் அந்தர்ப்பவியாது. அவ்வநுபவம் கதாசித்கமன்றிக்கே நித்யமாகைக்குத் தம் கையில் ஸாதநமில்லை என்கிறார் இங்கு. இதில் முதல் பாட்டிலே ப்ரஸித்தமாய் த்ரைவர்ணிகராவனர்களுக்கு அதிகாரமான கர்மஜ்ஞாநபக்திகளில் எனக்கோர் அந்வயமில்லை என்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் பெரியபெருமாள் குறித்துத் தனக்கு உண்டான ப்ரேமை என்பது, அவனால் ஏற்பதற்குத் தக்கதாக இல்லை என்பதாலும்; அசித் பொருளின் பரிணாமமாகவே உள்ள சரீரத்துடன் கூடியவனாகிய தனக்கு அந்த ப்ரேமை பிறந்தது என்பது, பைத்தியம் பிடித்த ஒருவனுக்கு ஒருநாள் அந்த நிலை தெளிந்தால் நம்ப இயலாதது போன்று உள்ளதாலும், அடுத்து என்ன செய்வது என்று தனது திருவுள்ளத்தைக் குறித்துக் கூறியபடி நின்றார். மேலும், "அசித் பொருளான இந்த சரீரத்துடனான தொடர்பு அறுந்து, பரமபதம் சென்று, எம்பெருமானுடைய நித்ய அனுபவத்தை அடையவைக்கும் உபாயம் ஏதும் நம்மிடம் இல்லை. இத்தகைய பகவத் விஷயத்தை நாம் இழந்துவிடுவோம் என்றே எண்ணுகிறேன்", என்று வருந்தியபடி நின்றார். இதனைக் கண்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "நீவிர் ஏன் வருந்தவேண்டும்? உம்முடைய சரீரம் நீங்கப்பெற்று, நம்முடைய அனுபவம் பெறுவதற்கு, மூன்று வர்ணத்தினர்களும் அநுஷ்டிக்கத்தக்கதும், அனைவராலும்

கடைபிடிக்கத்தக்கதும் ஆகிய உபாயங்கள் சாஸ்த்ரங்களில் பல கூறப்பட்டுள்ளனவே! அவற்றில் ஏதேனும் ஒன்றைக் கைக்கொண்டு நம்மை அடையமாட்டீரோ?", என்றான். இதற்கு ஆழ்வார், "அவற்றைக் கடைப்பிடிப்பதற்கான தகுதிகள் என்னிடம் ஏதும் இல்லை", என்பதை அடுத்து உள்ள பத்து பாசுரங்களில் கூறுகிறார். அதாவது, தன்னிடம் உபாயங்கள் ஏதும் இல்லாத நிலையைத் தெரிவிக்கிறார். ஆனால் கடந்த சில பாசுரங்களில் தன்னிடம் ஞானம் மற்றும் பக்தி முதலானவை உண்டு என்றாரே, இப்போது இவ்விதம் கூறுகிறாரே என்ற கேள்வி எழலாம். கடந்த பாசுரங்கள் பெரியபெருமாளின் கருணை காரணமாக உண்டான ஞானம் மற்றும் பக்திகளைக் கூறினார். அவற்றைச் ஸாதனமாக ஏற்க இயலாது. அத்தகைய அனுபவங்கள் இந்தப் பிறவியுடன் முடிந்துவிடும், அவை நித்யமாகத் தனக்கு நிலைப்பதற்கு ஏற்ற உபாயம் ஏதும் இல்லை என்று இங்கு கூறுகிறார். இப்படியாக இந்த முதல் பாசுரத்தில், மூன்று வர்ணத்தினரால் அநுஷ்டிக்கத்தகுந்த கர்மம், ஞானம் மற்றும் பக்தி போன்றவை தன்னிடம் இல்லை என்கிறார்.

வ்யாக்யானம் – (குளித்து மூன்றித்யாதி) – ஜந்மமாத்ரத்தையே கொண்டு நீ அவற்றை "அநுஷ்டித்து வா" என்னுமித்தனை போக்கி, ஜன்மப்ரப்ருதி ப்ராஹ்மண்யத்துக்கு அநுரூபமாயிருப்பதோர் அநுஷ்டாநமில்லை என்கிறார். (குளித்து) – நித்ய ஸ்நாநம், நைமித்திக ஸ்நாநம், ப்ராயச்சித்த ஸ்நாநமென்று ஸ்நாநம் பஹுமுகமாயிருக்கும். நித்ய ஸ்நாநம் நைமித்திக ஸ்நாநத்திற்கு உடலன்று; அந்த நைமித்திக ஸ்நாநம் ப்ராயச்சித்த ஸ்நாநத்திற்கு உடலன்று; இவை தனித்தனியே ஸ்வதந்த்ரங்களாகயிறே இருப்பது. கர்மாநுஷ்டாநந்தானொழிய போக்யதாபாதகங்கள் எண்ணிப்போரத்தான் அரிதாயிறே இருப்பது. (மூன்றனலை) – அக்நி என்னாதே "அனல்" என்றது, ஆராதியாநின்றால் அபர்யாப்தியே ஸ்வபாவமாயிருக்கும் விஷயமென்று தோற்றுகைக்காக. (மூன்றனல்) – ஒன்றே துராராதநமாயிருக்க மூன்றையிறே விதித்தது. (ஓம்பும்) – சவலைப்ரஜைக்குச் சோறும் நீரும் முடிந்துகொண்டு திரியும் மாதாவைப்போலே, உமியும் இந்தநமும் கொண்டு திரியவேண்டும் விஷயமென்கை.

விளக்கம் – (குளித்து மூன்று அனலை) – அந்தணன் என்னும் பிறவி காரணமாக, சில செயல்களைக் கூறும் சாஸ்த்ரங்கள், "அவற்றை அநுஷ்டித்து வரவேண்டும்",

என்கின்றன. நான் பிறந்தது முதலாக அந்தணன் என்னும் தகுதிக்கு ஏற்ப உள்ள அந்தச் செயல்கள் ஏதும் செய்யாமல் விடுத்தேன். (குளித்து) – நீராடுதல் என்பது மூன்றுவிதமானது. இவை நித்யஸ்நாநம் என்னும் அன்றாட நீராடுதல், நைமித்திகஸ்நாநம் என்னும் க்ரஹண கால நீராடுதல், ப்ராயச்சித்தஸ்நாநம் என்னும் பாவம் காரணமாக நீராடுதல் போன்றவை ஆகும். இப்படியாகப் பலவிதமான நீராடுதல்கள் உள்ளன. இவற்றில் நித்யஸ்நாநம் என்பது நைமித்திகஸ்நாநம் என்பதுடன் தொடர்புடையது அல்ல; அதாவது நித்யஸ்நாநம் செய்துள்ளபோதிலும், நைமித்திகஸ்நாநம் செய்யும் கட்டாயம் ஏற்பட்டால், அதனையும் செய்யவேண்டும் என்று கருத்து. இது போன்று நைமித்திகஸ்நாநம் என்பது ப்ராயச்சித்த ஸ்நாநம் என்பதுடன் தொடர்புடையது அல்ல. இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு அல்லாமல் உள்ளவை ஆகும். சாஸ்த்ரங்களில் கூறப்படும் மற்ற கர்மங்களைச் செய்யும் தகுதியை உண்டாக்கவல்ல நித்யகர்மங்களைச் செய்வதே அரிதாக உள்ளது என்கிறார். (மூன்றனலை) – அக்னி என்று கூறாமல் அனல் என்று ஏன் கூறவேண்டும்? அனல் என்றால் போதும் என்னும் நிலை இல்லாத ஒன்றாகும். ஆக, எத்தனை ஆராதனை செய்தாலும், "இந்த ஆராதனை போதுமானது" என்று கூறாமல், மேலும் எதிர்பார்ப்பது என்பதை உணர்த்துகிறார். மூன்றுவிதமான அக்னிகள் என்பது கார்ஹபத்யம், ஆஹவநீயம் மற்றும் தக்ஷிணாக்னி ஆகும். (மூன்று அனல்) – ஒன்றை ஆராதிப்பதே அரிதாக இருக்கும்போது, சாஸ்த்ரங்கள் மூன்றையும் விதிக்கின்றன என்றார். (ஓம்பும்) – சவலைக் குழந்தை ஒன்றுக்காக உணவும் நீரும் கட்டியபடி ஒரு தாய் எவ்விதம் திரிவாளோ அது போன்று இந்த அக்னிகளை ஆராதிக்க உமியும் ஸமித்தும் கொண்டு திரியவேண்டி உள்ளது என்றார்.

வ்யாக்யானம் – (குறிகொள்) – மந்த்ரலோபம், க்ரியாலோபம், த்ரவ்யலோபம், காலபேதம், தேவதாவ்யத்யயம் என்கிற இவற்றில் ஒன்றுண்டாமாகில் நிஷ்பலமாயிருக்கையாலே, கரணம் பிழைக்கில் மரணமென்கை. பண்ணின அக்ருத்யகரணங்களை க்ஷாந்திக்கு விஷயமாக்கி ஓரஞ்ஜலியாலே ஸுப்ரஸந்நமாம் விஷயமன்றே. (அந்தணமை) – இப்படி இருக்கிறதேதென்னில் – ப்ராஹ்மண்யம்; அதுதன்னை (ஒளித்திட்டேன்) ப்ராஹ்மண்ய மில்லாமை என்னளவேயாய்ப் போகையன்றியே, இவ்வர்ணந்தான் தண்ணியது என்னும்படி பண்ணினேன். விசிஷ்டராயிருப்பாரைக்கண்டால் "இன்னான் அதிகரித்த வர்ணத்திலே சிலரன்றோ"

என்றுகொண்டு அவர்களுக்கும் அவத்யமாம்படி திரிந்தேன். இதிறே நான் கர்மயோகத்தில் நின்ற நிலை.

விளக்கம் – மந்த்ரத்தினை உச்சரிக்கும்போது உண்டாகும் தவறுகள், கர்மங்கள் செய்யும்போது உண்டாகும் தவறுகள், பயன்படுத்தும் பொருள்களில் உள்ள பிழைகள், காலம் தவறிச் செய்வதால் உண்டாகும் தவறுகள், ஒரு தேவதையின் பெயருக்குப் பதில் மற்றொரு தேவதையின் பெயரைக் கூறுவது போன்றவற்றில் ஏதேனும் ஒன்று ஏற்பட்டாலும், கரணம் தப்பினால் மரணம் என்னும்படி, செய்கின்ற அநுஷ்டானமே தவறிவிடும். ஆகவே இவை, செய்த தவறுகளை அனைத்தையும் போக்கவல்ல ஓர் அஞ்ஜலி செய்வது போன்றது அல்லவே! அந்த அஞ்ஜலியானது எம்பெருமானைப் பொறுக்கவைத்து, அருளும்படிச் செய்துவிடும். (அந்தணமை) – இப்படி அஞ்ஜலி போன்று உள்ளது எது என்றால், ப்ராஹ்மணத்தன்மை என்கிறார். அந்தத் தன்மை என்னவானது? (ஒளித்திட்டேன்) – இந்தத் தன்மை என்னிடம் இல்லாமல் போகும்படி மட்டும் நான் செய்ய்யவில்லை, எனது செயல்களால் ப்ராஹ்மணர்கள் அனைவரும் தாழ்ந்தவர்கள் என்று பலரும் கூறும்படியாகச் செய்துவிட்டேன். ஒரு சிலர் உண்மையான அந்தணர்களாக இருக்கக்கூடும். ஆனால் எனது செயல் காரணமாக அவர்களையும் ஒரு சிலர், "ப்ராஹ்மணத்தன்மை அற்ற இவனது வர்ணத்தைச் சார்ந்தவர்கள்தான் அவர்களும்", என்று கூறும்படி, அவர்களுக்கும் தாழ்ச்சி உண்டாகும்படியாகத் திரிந்தேன். இப்படியாக அல்லவோ நான் கர்மயோகம் இன்றி இருந்தேன்.

வ்யாக்யானம் – ஆனால் ஜ்ஞாநயோகமிருந்தபடி எங்ஙனே? என்னில்; (என்கணில்லை) – என் விஷயமாக எனக்கொன்றில்லை. ஆத்மவிஷய ஜ்ஞாநமெனக்கில்லை என்கை. கர்மயோகமில்லை என்றபோதே தத்ஸாத்யமான ஜ்ஞாநயோகமில்லை என்னுமிடம் அர்த்தஸித்தமன்றோ என்னில்; இஜ்ஜந்மத்தில் கர்மயோகம் பக்வமாய், அவ்வளவிலே தேஹவிச்லேஷம் பிறந்து அநந்தரஜந்மத்தில் ஜ்ஞாநம் நைஸர்க்கிகமாயிருக்குமிறே, அதுவும் இல்லை என்கை.

விளக்கம் – "ஞானயோகம் உள்ளதா", என்று சிலர் கேட்க ஆழ்வார் கூறுகிறார். (என் கண் இல்லை) – என் விஷயமாக எனக்கு ஒன்றும் இல்லை. அதாவது ஆத்மவிஷயம் குறித்த ஞானம் ஏதும் எனக்கு இல்லை என்று கருத்து. கர்மயோகம் இல்லை என்றாலே, அதன் விளைவாக உண்டாகும் ஞானயோகமும் இல்லை என்பது அறிந்ததே. அப்படி உள்ளபோது, தனித்து ஏன் கேட்கவேண்டும்? இந்தப் பிறவியில் கர்ம அநுஷ்டானம் இல்லை என்றாலும், கடந்த பிறவியில் கர்மயோகம் உண்டாகி, அந்த நேரத்தில் மரணம் உண்டாகியிருக்கலாம்; அந்தக் கர்மயோகத்தின் பலனாகிய ஞானயோகம் அடுத்த ஜன்மத்தில் கைகூட வாய்ப்பு உள்ளதால் இப்படி கூறப்பட்டது. அதுவும் இல்லை என்கிறார்.

வ்யாக்யானம் – ஆனால் பக்தியோகமிருந்தபடி என்னென்னில்; (நின்கணும் பத்தனல்லேன்) – கண்டார்க்கு ஸ்ப்ருஹை பண்ணியல்லது நிற்கவொண்ணாத நின்பக்கல் எனக்கு ஸ்நேஹமில்லை. கர்மஜ்ஞாநங்கள் இரண்டுமில்லையாயிருக்க, உபாய ஸாத்யமான பக்தி இல்லையென்னுமிடம் சொல்லவேணுமோ? என்னில்; ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதிபி: நரணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே என்கிறபடியே உண்டாகலாமிறே; அதுவுமில்லையென்கை. அதவா, கர்ம ஜ்ஞாநபக்திகள் மூன்றையும் தனித்தனியே உபாயமாகச் சொல்லுவாருமுண்டு; அந்த ப்ரகாரத்திலே சொல்லிற்றாகவுமாம். கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:, ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே, பக்த்யா த்வநந்ய்யா என்னக் கடவதிறே. இதிறே கர்மஜ்ஞாநபக்திகளில் நான் நின்ற நிலை. மற்றும் இவ்விஷயத்தில் அறிவுடையார், "நோற்ற நோன்பிலேன்" என்றும், "கறவைகள் பின்சென்று" என்றும், ந தர்மநிஷ்டோஸ்மி என்றும், தந்தாம் வெறுமைகளைப் பேற்றுக்குடலாக முன்னிட்டுக் கொண்டு போகக் கடவதாயிறே இருப்பது.

விளக்கம் – அப்படியென்றால் பக்தியோகமாவது உண்டா? (நின்கணும் பத்தனல்லேன்) – உன்னை ஒருமுறை கண்டவர்கள் கூட உன் மீது ஆசை கொள்ளாமல் இருக்கமுடியாது. அப்படிப்பட்ட உன் மீது எனக்குச் சிறிதும் ப்ரேமை இல்லை. கர்மயோகம், ஞானயோகம் ஆகிய இரண்டும் இல்லை என்னும்போது, இவற்றால் உண்டாகும் பக்தியோகம் இல்லை என்பதைத் தனியே கூறவேண்டுமா என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். ஸ்ம்ருதியில் - ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு

தபோஜ்ஞாந ஸமாதிபி: நரணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே – பல ஆயிரக்கணக்கான பிறவிகள் எடுத்து, அந்தந்த பிறவிகளில் கர்மஞானயோகங்களை இயற்றி, தங்களது பாவங்களை நீக்கிக் கொண்டவர்களுக்கு மட்டுமே க்ருஷ்ணன் மீது பக்தி உண்டாகும் – என்று கூறப்பட்டது. இதற்கு ஏற்றபடி கடந்த பிறவிகளின் பலனால் பக்தி உண்டாகியிருக்கலாமே என்றால், அதுவும் தன்னிடம் இல்லை என்கிறார். அல்லது வேறு விதமாகவும் இதற்குப் பொருள் கூறலாம்: கர்மம், ஞானம் மற்றும் பக்தி ஆகிய மூன்றும் தனித்தனியே மோக்ஷ உபாயம் என்று சிலர் கூறுவர், இது போன்று இவரும் கூறுவதாகவும் கொள்ளலாம். இப்படியாக மூன்றும் தனித்தனியே மோக்ஷ உபாயம் என்பதைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- கீதை (3-20) - கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய: - ஜனகர் முதலானவர்கள் தங்கள் கர்மங்களால் மோக்ஷம் பெற்றனர்.
- கீதை (4-33) - ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே – அனைத்துக் கர்மங்களும், அதன் ஸாதனங்களும் ஞானத்திலேயே முடிகின்றன.
- கீதை (11-54) - பக்த்யா த்வநந்ய்யா – எதனையும் எதிர்பாராத பக்தி மூலம்

இப்படியாக அல்லவோ நான் கர்மஞானபக்தி யோகத்தில் நின்ற நிலை உள்ளது? திருவாய்மொழி (5-7-1) - நோற்ற நோன்பிலேன், திருப்பாவை (28) – கறவைகள் பின் சென்று, ஸ்தோத்ர ரத்னம் (22) - ந தர்மநிஷ்டோஸ்மி – தர்ம மார்க்கத்தை அறியேன் – போன்ற வரிகளில் தங்களிடம் கைம்முதல் ஏதும் இல்லை என்பதையே அவனுடைய பேறு பெறுவதற்கு வாய்ப்பாகக் கூறியது காண்க.

வ்யாக்யானம் – பெரியபெருமாளும் தம்முடைய க்ருபைக்கு இவர்கள் சொன்ன வெறுமைகளும் அரிதாகையாலே, “பேற்றுக்குடலாக ஆழ்வீர்! நீர் நிரபேக்ஷரன்றோ?”, என்ன; (களிப்பதென் கொண்டு) – கீழ் நின்ற நிலையில் எனக்கு அநுதாபமுண்டாயோ? அதடியாக மா சுச: என்றுண்டாயோ? எது ஆலம்பநமாகக் களிப்பது? இத்தால், அகிஞ்சநனென்றபடி. “உமக்கு அநுதாபமில்லையாகில் விடுமித்தனையன்றோ” என்னில்; “என்பக்கல் கைம்முதலில்லையானால் உன்பக்கலிலுமில்லையோ?”, என்கிறார். (நம்பீ) – நான் உபாயாந்தரங்களில் வெறுமையில் பூர்ணனானவோபாதி,

தேவரீர் சீலாதி குண பரிபூர்ணரல்லீரோ? தேவரீருடைய பூர்த்தி ஸஹகாரநிரபேக்ஷமன்றோ. "அறிவொன்று மிலாத" என்ற அநந்தரம் "குறைவொன்றுமில்லாத கோவிந்தா" என்றாளிறே.

விளக்கம் – இதனைக் கேட்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "ஆழ்வீர்! இவர்கள் போன்று தங்களிடம் ஏதும் இல்லை என்று கூறுபவர்களும் அரிதாகவே உள்ளார்கள். ஆனால் எனது கருணைக்குக் காரணமான இத்தகைய நிலை உம்மிடம் உள்ளதால், நீவிர் பேறு பெறுவதில் எந்தவிதமான குறையும் இல்லை", என்றான். இதற்கு ஆழ்வார் பதில் அளிக்கிறார். (களிப்பதென் கொண்டு) – எந்த ஒன்றை வைத்துக் கொண்டு நானும் பேறு அடைந்துவிடுவேன் என்று ஏண்ணுவது? என்னிடம் கர்மயோகம் போன்ற நிலைகள் ஏதும் இல்லையே என்னும் சுயஅநுதாபம் கூட இல்லை. அப்படி இருந்தாலாவது நீ என்னைப் பார்த்து – மாசுச: - வருத்தம் கொள்ளாதே – என்பாய். ஆனால், அந்த நிலையும் என்னிடம் இல்லை. எனவே அநுதாபமும் இல்லாதவன் என்றார். இதற்குப் பெரியபெருமாள், "உம்மிடம் ஏதும் இல்லை என்றால், உம்மை நான் கைவிட வேண்டியது மட்டுமே வழி", என்றான். உடனே ஆழ்வார், "என்னிடம்தான் எதுவும் இல்லை என்றேன். உன்னிடம் எதுவும் இல்லையோ", என்கிறார் (நம்பீ) – நான் மற்ற உபாயங்கள் ஏதும் இல்லாதவனே ஆவேன். ஆனால் நீயோ சீலம் முதலான எல்லையற்ற கல்யாண குணங்கள் உள்ளவன் அல்லவோ? திருப்பாவையில் (28) - அறிவொன்றுமிலாத – என்று தன்னைப் பற்றிக் கூறியவுடன், (28) - குறைவொன்றுமில்லாத கோவிந்தா – என்று அவனைப் பற்றிக் கூறினாள். இது போன்றே இவரும் தனது வெறுமையைக் கூறியவுடன், அவனது பூர்ணமான தன்மையைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (கடல்வண்ணா) – தேவரீருடைய சீலாதிகுணபூர்த்தியெல்லாம் வேணுமோ? வடிவழகே அமையாதோ என் பேற்றுக்கு? ஒரு கடலோடே ஸ்பர்த்தை பண்ணி ஒரு கடல் சாய்ந்தாற்போலேயிறே பெரியபெருமாள் கண்வளர்ந்தருளுகிறது. "ஐயப்பாடறுத்துத் தோன்றும் அழகன்" என்றும், "ஆதரம் பெருகவைத்த அழகன்" என்றும் இவ்வடிவழகேயிறே இவர் பற்றாசாகச் சொல்லிப்போந்தது. இத்தால் சரண்யனென்றபடி.

விளக்கம் – (கடல்வண்ணா) – எனது பேற்றுக்கு உன்னுடைய சீலம் முதலான அனைத்துக் குணங்களும் பூர்ணமாக இருக்கவேண்டுமோ? வேண்டாம், உனது அழகான திருமேனியே போதுமானது. ஒரு கடலுடன் போட்டி போட்டுக்கொண்டு மற்றொரு கடல் சாய்ந்துள்ளது போன்று அல்லவோ பெரியபெருமாள் சயனித்துள்ள அழகுள்ள உள்ளது? தன்னிடம் உபாயம் ஏதும் இல்லாமல், திருமாலை (15) - ஐயப்பாடறுத்துத் தோன்றும் அழகன் என்றும், திருமாலை (16) - ஆதரம் பெருகவைத்த அழகன் என்றும் இவனது அழகை அல்லவோ தனது உபாயமாகக் கூறினார்? இதனால் இவனே சரணம் அடையத்தக்கவன் என்றார்.

வ்யாக்யானம் – உம்முடைய வெறுமையையும், நம்முடைய பௌஷ்கல்யத்தையும் அறிந்தீராகில் இதற்கு மேற்பட உமக்கு வேண்டுவதென்னென்ன; (கதறுகின்றேன்) – அந்நிலையில்தான் நிற்கப்பெற்றேனோ? ஸாதநாநுஷ்டாநம் பண்ணிப் பலம் தாழ்ந்ததென்று கூப்பிடுவாரைப்போலே, ச்ரவணகடோரமாகக் கூப்பிடா நின்றேன். ஸ்வரக்ஷணத்தில் கைவாங்கி, தேவரீர் கண்வளர்ந்தருளுகிற அழகுக்கு மங்களாசாஸநம் பண்ணுகையே யாத்ரையாக இருக்கிறேனோ? இத்தால் பலித்ததாய்விட்டது, "ஆசாலேசமுடையார்க்கு முகங்கொடுக்கக்கடவ அவர் ஓர் ஆச்ரிதன் கூப்பிடாநிற்க அநாதரித்து நிற்பதே" என்று நாட்டார் சொல்லும்படி தேவரீர்க்கு ஓர் அவத்யத்தைத் தந்தேனித்தனையிறே.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "நீவிர் உம்மிடம் கைம்முதல் ஏதும் இல்லை என்பதையும், என்னிடம் குணங்கள் பரிபூர்ணமாக உள்ளன என்பதையும் அறிந்துள்ளீர் என்றால், இதற்கும் மேலே உமக்குப் பேறு உண்டாக வேறு எதுவும் அவசியம் இல்லையே, வேறு எதனை எதிர்பார்க்கிறீர்?", என்றான். இதற்கு ஆழ்வார் கூறுவது, (கதறுகின்றேன்) – நான் எனது நிலையில் அப்படியே இருந்தேனோ? கர்மயோகம் முதலான பலவிதமான ஸாதனங்களை அநுஷ்டித்தவர்கள், அதற்கு ஏற்ற பலன் கிட்டவில்லையே என்னும் ஆதங்கத்தில் உரக்க உன்னை அழைப்பது போன்று, நானும் கேட்பவர்களின் செவிகள் துன்புறும்படியாக அழைக்கிறேன். என்னை நானே காப்பாற்றிக் கொள்ள இயலும் என்னும் சிந்தனை நீங்கி அழைக்கிறேன். நீ சயனித்துள்ள அழகை நான் புகழ்ந்து பாடுவதற்குப் பதிலாக, உலகினர் உன்னைக் கண்டு, "சிறிய அளவே ப்ரேமை உள்ளவர்களுக்கும் தன்னை எளிதாகக் காண்பித்துக்

கொடுக்கக்கூடிய பெரியபெருமாள், ஓர் அடியார் இத்தனை கதறும்போது கூட முகம் காண்பிக்காமல் உள்ளானே", என்று இகழ்ந்து பேசும்படியான தாழ்ச்சியை உண்டாக்கிவிட்டேன்.

வ்யாக்யானம் – "இப்படி உமக்கொரு நன்மைகளுமில்லையாகில் பின்னை நம்மைச் செய்யச் சொல்லுகிறதென்?" என்னில்; (அளித்தெனக்கருள் செய் கண்டாய்) – என்னை தேவரீர்க்கு க்ருபா விஷயமாக்கி க்ருபையும் பண்ணவேணும். அதாவது, அநுதாபத்தைப் பிறப்பிக்கவேணும் என்கை. ஏன்றான்? நமக்கு இங்ஙனே அடியே தொடங்கிச் செய்ய வேண்டுகிற நிர்ப்பந்தந்தானென்? என்னில்; (அரங்கமாநகருளானே) – தந்தாமுக்கென்ன ஒரு முதலும் இல்லாதாரை ரக்ஷிக்கைக்காகவன்றோ இங்கு வந்து சாய்ந்தருளிற்று. குறைவற்றாரை ரக்ஷிக்கப்பார்க்கில் இங்கு வரவேணுமோ? அங்கே இருக்க அமையாதோ? இங்கே வந்தது – கிடையழகு காட்டியும், அர்ச்சக பராதீநமான சீலவத்தையைக் காட்டியும் ருசியே தொடங்கி உண்டாக்கி ரக்ஷிக்கைக்காகவன்றோ.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "இப்படியாக உம்மை நான் கரையேற்ற உம்மிடம் எந்தவிதமான நன்மைகளும் இல்லை. என்னை என்ன செய்யும்ப்படிக் கூறுகிறீர்?", என்றான். இதற்கு ஆழ்வார் (அளித்து எனக்கு அருள் செய்கண்டாய்) – காரணமே இல்லாமல் கருணையைப் பொழியும் நீ, உன்னுடைய கருணைக்கு என்னை இலக்காக்கி, என் மீது கருணையைப் பொழியவேண்டும். எனக்கு அநுதாபத்தைப் பிறக்கவைத்து, அருளவேண்டும். இதற்குப் பெரியபெருமாள், "நான் ஏன் அப்படிச் செய்யவேண்டும்? இப்படியாக உமக்கு முழு உதவியையும் செய்யவேண்டும் என்ற கட்டாயம் எனக்கு என்ன உள்ளது?", என்றான். இதற்கு ஆழ்வார் (அரங்கமாநகருளானே) – தன்னிடம் கைம்முதல் ஏதும் இல்லை என்று உன்னிடம் வந்து நிற்பவர்களைக் காப்பாற்றுவதற்காக அல்லவோ நீ இந்தத் திருவரங்கத்தில் சயனித்துள்ளாய்? எந்தவிதமான குறைகளும் இல்லாதவர்களை மட்டுமே காப்பது என்று நீ எண்ணினான், இதற்காக இங்கே வந்திருக்க வேண்டாமே, பரமபதத்திலேயே இருந்திருக்கலாமே. நீ இங்கே வந்தது – உன்னுடைய சயன அழகையும், அர்ச்சை வடிவமாக சீல குணத்தையும் இங்கு உள்ளவர்களுக்குக் காண்பித்து உன் மீது ருசி உண்டாகும்படிச் செய்து, அவர்களைக் காப்பாற்றுவதற்காக அல்லவோ?

26. போது எல்லாம் போது கொண்டு உன் பொன்னடி புனைய மாட்டேன்

தீது இலா மொழிகள் கொண்டு உன் திருக்குணம் செப்ப மாட்டேன்

காதலால் நெஞ்சம் அன்பு கலந்தினேல் அது தன்னாலே

ஏதிலேன் அரங்கர்க்கு எல்லே என் செய்வான் தோன்றினேனே.

பொருள் – பெரியபெருமாளே! ஸ்ரீரங்கநாதா! அழகிய மலர்கள் கொண்டு உன்னுடைய தாமரை போன்ற அழகான திருவடிகளில் நான் எப்போதும் சமர்ப்பணம் செய்ய சக்தி இல்லாதவனாக உள்ளேன். சிறிதும் தோஷம் இல்லாத சொற்கள் கொண்டு உன்னுடைய திருக்கல்யாண குணங்களைக் கூற இயலாதவனாக உள்ளேன். உன் மீது கொள்ளும் காதல் காரணமாகப் பெருகும் அன்பு என்பதை எனது உள்ளத்தில் நான் உண்டாக்கவில்லை. இப்படியாக திருவரங்கநாதனான உன்னை எனது எந்த ஓர் அவயவத்தாலும் அனுபவிக்காதவனாகவே உள்ளேன். ஆஹா! இப்படியாக உனக்கு நான் ஏதும் செய்யாமல் ஏன் பிறந்தேன்?

அவதாரிகை – த்ரைவர்ணிகாதிகாரமான உபாயங்களில்லையாகில் ஸர்வாதிகாரமான அர்ச்சந ஸ்தவநாதிகள் உமக்குண்டோ என்னில், அதுவுமில்லை என்கிறார்.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "உம்மிடம் அந்தணர், க்ஷத்ரியர் மற்றும் வைசியர் ஆகியவர்கள் அநுஷ்டிக்கவல்ல கர்ம, ஞான, பக்தி யோகங்கள் இல்லை என்கிறீர். ஆனால், அனைவராலும் கடைப்பிடிக்கவல்ல அர்ச்சனை செய்தல் போன்றவை உம்மிடம் இருக்கலாமே! அவற்றைக் கொண்டு எம்மை வழிபடலாமே!", என்றான். இதற்கு ஆழ்வார், "அவையும் என்னிடம் இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் – (போது எல்லாம் போது கொண்டு உன் பொன்னடி புனைய மாட்டேன்) – அழகிய செவ்விப்பூக்களைக் கொண்டு ஸர்வகாலமும் உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளிலே புனையவிறே அடுப்பது; அதில் ச்ரத்தையில்லாமையாலே அன்று, சக்தியே இல்லை என்கிறார். உன்னையொழிந்த

விஷயங்களிலே செய்யவென்றால் ச்ரத்தாசக்திகள் இரண்டும் உண்டாயிருக்கும். யௌ தத்பூஜாகரௌ கரௌ என்கிறபடியே, தேவரீர் திருவடிகளையே ஆராதிக்கக்கண்ட கைகளைக் கொண்டு, அப்ராப்தமாய், அநர்த்தாவஹமாயிருக்கும் விஷயங்களை ஆராதித்துப் போந்தேன்; "காலமெல்லாம் மாட்டேன். ஒருக்கால் வல்லேன்", என்கிறாரல்லர்; "ஸர்வகாலமும் மாட்டேன்", என்கிறார். ஒரு காலத்தில் சக்தனாகில் அதுதானே பேற்றுக்குப்போரும்படியாயிறே தேவரீர் ப்ரபாவமிருப்பது. ஸக்ருதுச்சரிதம் யேந என்றும், ஸக்ருத் ஸம்ருதோபி கோவிந்த: என்றும், ஸக்ருதேவ ப்ரபந்நாய என்றும் சொல்லக்கடவதிறே.

விளக்கம் – (போது எல்லாம் போது கொண்டு உன் பொன்னடி புனைய மாட்டேன்) – அனைவராலும் விரும்பக்கூடியதான அழகிய உனது திருவடிகளில் அழகான மலர்களைக் கொண்டு எப்போதும் அலங்கரிப்பது அல்லவோ செய்யத்தகுந்த செயலாகும்? ஆனால் நான் அதனைச் செய்யாமல் இருப்பது என்பது, எனக்கு அதில் ச்ரத்தை இல்லை என்பதுடன், எனக்குச் சக்தியும் இல்லை என்பதாலேயே ஆகும். ஆனால் இது போன்று உன்னைத் தவிர்த்த விஷயங்களில் எனக்கு ச்ரத்தையும் உள்ளது, சக்தியும் உள்ளது! விஷ்ணுதர்மம் (1-13) – யௌ தத்பூஜாகரௌ கரௌ – எது அவனைப் பூஜிக்கிறதோ அதுவே சிறந்த கைகள் – என்னும் ப்ரமாணத்திற்கு ஏற்ப உனது திருவடிகளை மட்டுமே ஆராதனை செய்ய உள்ள கைகள் கொண்டு, இம்மைக்கும் மறுமைக்கும் தீமைகளை உண்டாக்கவல்ல விஷயங்களை ஆராதனை செய்தபடி இருந்தேன். "ஏதோ ஒரு காலத்தில் மட்டுமே இப்படி உள்ளவன் அல்லேன், எந்தக் காலத்திலும் இது போன்று செய்யாதவன் ஆகிறேன்", என்றார். ஏதோ ஒரு காலத்தில் நான் உன்னை ஆராதனை செய்தாலும், அதனையே சாக்காக வைத்து, எனக்குப் பேறு செய்வது அல்லவோ உனது தன்மையாக உள்ளது? இதனைக் கீழே உள்ள வரிகள் கூறுகின்றன:

- விஷ்ணுதர்மம் (70-84) - ஸக்ருதுச்சரிதம் யேந – யாரா ஒருமுறை ஹரி என்று உச்சரிக்கப்பட்டதோ
- ஸக்ருத் ஸம்ருதோபி கோவிந்த: - கோவிந்தன் ஒருமுறை எண்ணப்பட்டாலும்

- இராமாயணம் யுத்தகாண்டம் (18-33) - ஸக்ருதேவ ப்ரபந்நாய – ஒருமுறை என்னைச் சரணம் என்று புகுந்தாலும்

வ்யாக்யானம் – காயிகமான வ்யாபாரத்தைப் புறம்பே விநியோகம் கொண்டீரேயாகிலும், உம்முடைய பேச்சு குற்றமற்றிரா நின்றது; ஆனபின்பு நம் குணங்களைப் பேசமாட்டீரோ என்ன; (தீதிலாமொழிகள் கொண்டுன் திருக்குணஞ்செப்பமாட்டேன்) – பேச்சு குற்றமற்றாலும் உன்னுடைய கல்யாணகுணங்களைப் பேசவென்றால் க்ஷமனாகிறிலேன். ஹேயகுணயுக்தங்களான க்ஷுத்ரவிஷயங்களைப் பேசவென்றால் வாச்சியீடனாக நறுக்கறப் பேசவல்லேன்; ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி என்கிற குணங்களில் வந்தால் நாக்கு புரளாது. அவை இரண்டுக்கும் விஷயம் புறம்பேயாக்கினீராகில் நெஞ்சாலே நம்மை ஸ்நேஹிக்கவல்லீரேயென்ன; (காதலால் நெஞ்சமன்பு கலந்திலேன்) – காதலடியாக வரும் அன்பு இதுக்கு முன்பு நெஞ்சில் ஸ்பர்சித்ததில்லை. அதாகிறது ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: என்கிற ப்ரேமம் புறம்பே ஒரு விஷயத்தில் உண்டாகிலிறே, அத்தை அங்குநின்றும் மீட்டுப் போந்து தேவரீர் பக்கலிலே ஆக்கவேண்டுவது. முன்பு ஸ்த்ரீபதார்த்தங்களில் பண்ணிப்போந்த ப்ரேமம் அவர்கள் பக்கல் அர்த்தாதிகளை அபஹரிக்கைக்காக வாய்த்தல்லது அவர்களே உத்தேச்யரென்னும் ப்ரேமமும் இல்லை. ஸ்மரபரவசோ வஞ்சநபர: என்னக்கடவதிறே. பரமஸுஹ்ருதி பாந்தவே களத்ரே ஸுததநயாபித்ருமாத்ருப்ருத்யவர்க்கே சடமதிருபயாதி யோர்த்தத்ருஷ்ணாம் என்னக் கடவதிறே.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், “உடலால் எனக்குச் செய்யவேண்டிய அர்ச்சனை முதலானவற்றை எனக்குச் செய்யாமல் மற்ற உலகவிஷயங்களுச் செய்தீர். போகட்டும், உம்முடைய வாக்கானது குற்றம் இல்லாமல் உள்ளதே, அதனைக் கொண்டு என்னுடைய திருக்கல்யாண குணங்களைக் கூறலாமே”, என்றான். இதற்கு ஆழ்வார் பதில் அளிக்கிறார். (தீதிலாமொழிகள் கொண்டுன் திருக்குணஞ்செப்பமாட்டேன்) – என்னுடைய சொற்கள் குற்றம் இல்லாதவை என்றாலும் உன்னுடைய திருக்கல்யாண குணங்களைப் பேசுவதற்குத் திறன் இல்லாதவனாகவே உள்ளேன். தாழ்வான குணங்களுக்கும் தாழ்வான உலகவிஷயங்களைப் பேசத் தொடங்கினால், எனது நாக்கானது வாச்சி என்னும் அரிவாள் கொண்டு நறுக்குத் தறித்தது போன்று பேசுகிறது.

ஆனால் விஷ்ணுதர்மம் (1-13) - ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி – எது ஸ்ரீஹரியைத் துதிக்கிறதோ அதுவே நாக்கு – என்பதற்கு ஏற்ப உன்னைப் புகழவே உள்ள நாக்கானது, உன் விஷயத்தில் புரள மறுக்கிறது. இதனைக் கேட்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "உமது உடலும், வாக்கும் உலகவிஷயங்களின் பின்னே செல்லட்டும். உம்முடைய நெஞ்சம் கொண்டாவது என்னிடம் நீவிர் அன்பு செலுத்தலாம் அல்லவோ", என்றான். இதற்கு ஆழ்வார், (காதலால் நெஞ்சமன்பு கலந்திலேன்) – உன் விஷயத்தில் காதல் மூலமாக உண்டாகும் அன்பு என்பது எனது நெஞ்சத்திலே எப்போதும் உண்டானதே இல்லை. கீதை (2-62) - ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: - விஷயங்களின் தொடர்பால் காமம் ஏற்படுகிறது – என்பதற்கு ஏற்றாப்போல், உலகவிஷயங்களில் உண்மையான காதல் எனக்கு உண்டாகியிருந்தால், அந்தக் காதலை உன் மீது திருப்பலாம்; ஆனால் பெண்கள் முதலான விஷயங்களில் எனக்கு உண்மையான ப்ரேமை உண்டாகவில்லை, மாறாக அவர்களிடம் நான் காண்பித்த போலியான ப்ரேமை என்பது அவர்களிடம் உள்ள பொருள்களை அபகரிக்க மட்டுமே ஆகும், அவர்களை நான் மெய்யாக விரும்பிய காதல் என்னுடம் இருந்ததில்லை. ஸ்தோத்ர ரத்னம் (62) - ஸ்மரபரவசோ வஞ்சநபர: - அன்பு கொண்டவர்களை வஞ்சிப்பவன் – என்று கூறுவது போன்று நான் இருந்தேன். விஷ்ணு புராணம் (3-7-30) - பரமஸுஹ்ருதி பாந்தவே களத்ரே ஸுததநயாபித்ருமாத்ரு ப்ருத்யவர்க்கே சடமதிருபயாதி யோர்த்தத்ருஷ்ணாம் – நண்பனிடமும், உறவினனிடமும், மனைவிடமும், பெற்ற பிள்ளைகளிடமும், தாய்தந்தையிடமும், வேலைக்காரர்களிடமும் யார் ஒருவன் பொருளாசை கொள்கிறானோ – என்பது காண்க.

வ்யாக்யானம் – (அதுதன்னாலே ஏதிலேன்) – மநோவாக்காயங்கள் ஒருபட்டிருப்பார் பெறும் பேற்றுக்கு இவற்றிலொன்றாகிலும் வேண்டியிருக்க, அதுவும் எனக்கின்றிக்கே இருக்கையாலே, (ஏதிலேன்) – ஏதுமில்லேன். (அரங்கர்க்கு ஏதிலேன்) – ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் என்கிற ஸௌஹார்த்தத்தையும், ருஜு: என்கிறபடியே ஆர்ச்சித விஷயத்தில் மநோவாக்காயங்கள் மூன்றும் செவ்விதாயிருக்கிற ஆர்ஜவ குணத்தையும் கேட்டே போகாமே அநுஷ்டாந சேஷமாக்குகைக்காகக் கோயிலிலே ஸந்நிஹிதரான தேவரீர்க்கு ஒன்றுமாகப் பெற்றிலேன்; ஒரு கரணத்தாலும் தேவரீரை ஸ்பர்சிக்கப் பெற்றிலேன். (எல்லே) – என்னே! அஸந்நிஹிதராய் இழந்தேனல்லேன்; ப்ராப்தியில்லையாய் இழந்தேனல்லேன்; செய்த அம்சத்திலே பிழைபிடிக்குமவராய் இழந்தேனல்லேன்; என்னிழவுக்கு அடி பாபமேயிறே. ஸ்ரீகௌஸ்துபம்போலே

உகப்பான வஸ்துகிடீர் இப்படி வ்யர்த்தமாய்ப் போய்த்தது. அரங்கத்துறையும் இன் துணைவற்குக்கிடீர் நான் தூரஸ்தனாய்த்து! கஷாயபாநம் பண்ணுமாபோலே ஹிதபுத்தியாலே ஸேவிக்க வேண்டும் விஷயமாகத்தான் இழந்தேனோ? பாலே மருந்தானாற்போலே தர்சநீயரான தேவரீரே மோக்ஷப்ரதராயிருக்கவன்றோ இழந்தது.

விளக்கம் - (அதுதன்னாலே ஏதிலேன்) – உன்னிடம் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் மனம், வாக்கு அல்லது உடல் ஆகிய மூன்றினையும் உனக்கேயாக வைத்திருப்பர். இப்படியாக உள்ள மூன்றில் ஒன்றாவது பேறு பெறுவதற்கு உன்னிடம் ஈடுபட்டிருக்கவேண்டும். எனக்கு அப்படி ஏதும் இல்லாதவனாகவே உள்ளேன். (அரங்கர்க்கு ஏதிலேன்) – கீதை (5-29) - ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் – அனைத்து ஜீவன்களுக்கும் நண்பனான – என்று கூறுவது போன்று அனைத்து உயிர்களுக்கும் நண்பனாகவும்; ஸ்தோத்ர ரத்னம் (18) – ருஜு: - அடியார்களுக்கு வசப்பட்டவனாக – கூறுவது போன்று அடியார்கள் விஷயத்தில் மனம், வாக்கு, சரீரம் ஆகியவை மூன்றும் ஒரே போன்று இருப்பவனாகவும்; திருக்கல்யாண குணங்களை சாஸ்த்ரங்களில் கேட்டு மட்டுமே அறியாமல், அவற்றை நேரிலே காணலாம்படியாக நீ திருவரங்கம் பெரியகோயிலில் உள்ளாய். எனது எந்த ஒரு கரணத்தாலும் உன்னை அனுபவிக்கவில்லையே! (எல்லே) – என்னே! நீ என் அருகில் இல்லாத காரணத்தால் உன்னை நான் இழக்கவில்லை; நீ தகாதவனாக உள்ளதால் உன்னை இழக்கவில்லை; என்னிடம் உள்ள தோஷங்களை ஆராய்பவன் என்பதான் உன்னை நான் இழக்கவில்லை (அதாவது இது போன்ற தோஷங்கள் ஏதும் பெரியபெருமாளிடம் இல்லை என்றார் – அவன் அருகிலேயே இருப்பவன், ஏற்கத் தக்கவன், குற்றங்களை ஆராயாமல் ஏற்பவன்). ஆனால் உன்னை நான் இழந்தது எனது பாவங்களின் காரணமாகவே ஆகும். உனது திருமார்பில் எப்போதும் உள்ள ஸ்ரீகௌஸ்துபமணி போன்று உனக்கு மகிழ்வை ஏற்படுத்தவல்ல எனது ஆத்மா, இப்படி வீணாகப்போனதே! பெரியதிருமொழி (3-7-6) – அரங்கத்துறையும் இன் துணைவன் – என்பதற்கு ஏற்ப உள்ள உன்னிடமிருந்து நான் வெகுதூரம் விலகி நிற்கிறேன். நோய் வாய்ப்பட்ட உடலுக்கு நன்மை அளிப்பதாகவும், வாய்க்கு கசப்பாகவும் உள்ள மருந்து போன்று நீ உள்ளதால் நான் விலக்கிவிட்டேனோ? பால் மருந்தாக உள்ளது போன்று, மிகவும் அழகான நீயே மோக்ஷம் அளிப்பவனாக உள்ளபோதிலும் அல்லவோ உன்னை நான் இழந்தேன்?

வ்யாக்யானம் – (என் செய்வான்) – விசித்ரா தேஹஸம்பந்தி என்கிறபடியே, தேவரீருக்குறுப்பாக ப்ராப்தமான ஜந்மமாயிருக்க, நான் ஏதுக்காகப் பிறந்தேன். "என் செய்வான் பிறந்தேன்" என்னாதே, "தோன்றினேன்" என்கிறது உத்பாதங்கள்போலே அநர்த்த ஹேதுவாகப் பிறந்தேனென்கை. உத்பாதங்களுடைய தோற்றந்தான் தமக்கும் ப்ரயோஜநமின்றிக்கே பிறர்க்கும் அநர்த்தமாயிறே இருப்பது; அதுபோலேயாய்விட்டதிறே என் ஜந்மம் என்கிறார்.

விளக்கம் – (என் செய்வான்) – விஷ்ணுதத்வம் – விசித்ரா தேஹஸம்பந்தி – விசித்ரமான இந்த உடலானது அவனுக்கே – என்னும்படி, உனக்குக் கைங்கர்யம் செய்வதற்காக இந்தப் பிறவி உள்ளபோது, அதற்காக இந்தப் பிறவியைப் பயன்படுத்தாத நான் ஏன் தோன்றினேன்? இங்கு "நான் ஏன் பிறந்தேன்" என்று கூறாமல், "நான் ஏன் தோன்றினேன்", என்றது ஏன்? தீமைகளும், பாவங்களும் தோன்றுவது போன்று தன்னுடைய பிறப்பானது தீமையாகவே உள்ளது என்கிறார். தீமைகள் தோன்றுவதால் அவற்றுக்கும் நன்மை இல்லை, மற்றவர்களுக்கும் நன்மை இல்லை. இது போன்றே தனது பிறவியும் உள்ளதாகப் புலம்புகிறார்.

27. குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட்டு ஓடித்
தரங்கநீர் அடைக்கல் உற்ற சலம் இலா அணிலும் போலேன்
மரங்கள் போல் வலிய நெஞ்சம் வஞ்சனேன் நெஞ்சு தன்னால்
அரங்கனார்க்கு ஆட்செய்யாதே அளியத்தேன் அயர்க்கின்றேனே.

பொருள் – வானரங்கள் பாலம் கட்டும் பொருட்டு மலைகளைத் தள்ளிக்கொண்டு வந்தன. அப்போது அங்கு இருந்த அணில்கள் கடல் நீரிலே மூழ்கி, அங்கு கரையில் இருந்த மண்ணில் புறண்டு, அலைகளுடன் பொங்கும் கடலை அடைப்பதில் ஈடுபட்டு இருந்தன. இப்படிப்பட்ட களங்கம் இல்லாத அணில்கள் போன்றும் நான் இல்லை. மரங்கள் போன்று எனது மனம் கடினமாகவே உள்ளது. எனது ஸ்வரூபத்திற்கு விரோதமான செயல்களிலேயே நான் ஈடுபட்டுள்ளேன். ஸ்ரீரங்கநாதனுக்கு உண்டான அனைத்து விதமான கைங்கர்யமும் செய்யும் தகுதியை நான் பெற்றுள்ளபோதிலும், அவனுக்கு அத்தகைய கைங்கர்யம் ஏதும் செய்யாமல் உள்ளேன்.

அவதாரிகை – மநுஷ்யாதிகாரமானவை ஒன்றுமில்லையாகில், திருவடி, திருவனந்தாழ்வான் முதலானவர்களால் கொள்ளும் அடிமையை, சாஸ்த்ர வச்யதையுமின்றிக்கே இருந்துள்ள திர்யக்குகளைக் கொள்ளுவதாக நாம் வந்து அவதரித்த காலத்தில், திர்யக் ஸாமாந்யத்தாலே அணில்கள் சுத்தபாவனையோடே பண்ணின சில கிஞ்சித்காரமுண்டு; அதுதானுண்டோவென்னில்; அதுவுமில்லை என்கிறார்.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "மனிதர்களால் செய்யக்கூடிய நல்ல செயல்கள் ஏதும் உம்மிடம் இல்லை என்கிறீர். போகட்டும். பரமபதத்தில் நான் உள்ளபோது எனக்கு கருடன், விஷ்வக்ஸேநர் முதலானவர்கள் செய்கின்ற கைங்கர்யங்களை இந்த உலகில் உள்ள விலங்குகளும் செய்யவேண்டும் என்று விருப்பம் கொண்டேன். இதனால் இராமனாக வந்தேன். அப்போது வானரங்கள் மட்டும் அல்லாது, அணில்களும் தூய நிந்தனையுடன் தங்களால் இயன்ற கைங்கர்யங்களைச் செய்தன. அது போன்றாவது நீவிர் செய்யலாமே", என்றான். இதற்கு ஆழ்வார், "அதுவும் செய்யவில்லை", என்கிறார்.

வ்யாக்யானம் – (குரங்குகள் மலையை நூக்க) – மலைகளாலே கடலைத் தூர்க்கிறவிடத்தில், மலைகளுக்குத் தொகையுண்டாய்க்கொண்டு ஸ்ரீவாநர வீரர்களுக்குத் தொகையில்லாமையாலே, ஒரு மலையை அநேகர் கூடித் தொட்டுக்கொண்டு வருவார்களாய்த்து. ஒரு மலை ஒருத்தர்க்குப் பாத்தம்போராதபடி பெருமிடுக்கராயிருக்கச் செய்தேயும் உபாத்யாயன் கசைபோலே எல்லாரும் கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் பெறவேணுமென்றிருக்குமவர்களாகையாலே இப்படிச் செய்கிறார்களாய்த்து. ஸ்வரூப ஜ்ஞாநமுடையாரோடு இல்லாதாரோடு வாசியறத் துரும்பெழுந்தாடும்படியிறே, அடிமை கொள்ளுகிறவர் கையும் வில்லுமாய் நின்ற நிலைதான். (மலையை நூக்க) – கடலிலே பொகட என்னாதே, நூக்க என்றது – ஒரு திரளுக்கு ஒரு மலை விஷயமாகப் போராமையாலே வேறேயொரு திரள் வந்து பற்ற, அவர்கள் பக்கலிலே நூக்கி, இப்படி கைமேலே போயாய்த்து மலை கடலிலே புகுவது. அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே என்று கொண்டு, பெருமாளுக்கு ஆற்றாமை கரைபுரண்டு செல்லாநிற்க, அக்காரியத்துக்கு வேண்டுவார் ப்ரவர்த்தியா நின்றார்களென்று ஆறியிருக்கவொண்ணாதிறே. "கடல் தூர்ப்புண்டு

அக்கரைப்பட்டதாய் விடவற்றே" என்னும் த்வரையாலே எல்லாருமொக்க ப்ரவர்த்தித்தாராய்த்து.

விளக்கம் - (குரங்குகள் மலையை நூக்க) – மலைகளைக் கொண்டு கடலின் குறுக்கே அடைத்தபோது, அங்கு வானரங்கள் இருந்த எண்ணிக்கை அளவிற்கு மலைகள் இல்லை. ஆகவே ஒரு மலையைப் பல வானரங்கள் சேர்ந்து ஒன்றாகத் தூக்கி வந்தனர். ஒவ்வொரு வானரமும் ஒரு பெரிய மலையைத் தனியாகவே, ஒரு சிறு கல்லைத் தூக்குவது போன்று தூக்கும் வலிமை உடையது என்றாலும், தங்கள் எண்ணிக்கை அளவு மலைகள் இல்லாத காரணத்தால் ஒரு மலையைப் பலரும் தூக்கினர். பள்ளியில் ஆசிரியர் ஒரு மாணவனைப் பிரம்பு எடுத்து வரும்படிக் கூறினால், அவர் கூறியதைக் கேட்கவேண்டும் என்ற ஆர்வம் காரணமாகப் பல மாணவர்கள் சேர்ந்து அந்தச் சிறு பிரம்பை தூக்கி வருவார்கள் அல்லவோ? இதே போன்று இங்கும் கொள்ளவேண்டும். இப்படிக் கைங்கர்யம் செய்யும் புத்தி வானரங்களுக்கு வருமோ என்றால் – கைங்கர்யம் கொள்ளும் ஸ்வாமியான அவன் வில்லும் கையுமாக நிற்கும் இராமனைக் காணும்போது, ஸ்வரூபஜ்ஞானம் உள்ளவர்கள் மற்றும் அந்த ஞானம் இல்லாதவர்கள் என்னும் வேறுபாடு இல்லாமல் துரும்பு போன்றவர்களும் கைங்கர்யம் செய்வார்கள். (மலையை நூக்க) – "மலைகளைக் கடலில் போட" என்று கூறாமல், "நூக்க" என்று ஏன் கூறவேண்டும்? ஒரு வானரக்கூட்டம் ஒரு மலையைத் தூக்கிக் கொண்டு வருகின்றனர். அப்போது அடுத்த கூட்டம் அவர்களுடமிருந்து அந்த மலையை அப்படியே பற்றுகின்றனர். ஆக மலையானது ஒரு கூட்டத்திலிருந்து மற்றொரு கூட்டத்திற்கு அப்படியே கைகள் மேலேயே நகர்ந்து செல்வதால் இந்தப் பதம் இடப்பட்டது. இராமாயணம் யுத்தகாண்டம் – அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே – லக்ஷ்மணா! உன்னைக் காணும்போது சீதையின் நினைவு உண்டாவதால், நான் கடலில் இறங்கி உறங்கப் போகிறேன் – என்று இராமன் சீதையின் பிரிவு தாங்காமல் தவிப்பதை வானரங்கள் பார்த்தனர். ஆகவே மிகுந்த வேகத்துடன் கடலை அடைக்கும் பணியில் ஒவ்வொருவரும் ஈடுபட்டனர். அவர்களின் மனதில், "இந்தக் கடல் எப்போது அடைக்கப்படும்? நாம் எப்போது அக்கரைக்குச் செல்லப் போகிறோம்?", என்ற ஆர்வம் மிகுதியாக இருந்ததால், ஒவ்வொருவரும் ஒத்த செயலைச் செய்தனர்.

வ்யாக்யானம் – (குளித்து இத்யாதி) – ஸ்ரீவாநரவீரர்களுடைய த்வரைதான் அணில்களுக்குப் போந்திராமையாலே, "பெருமாளுக்கு ஆற்றாமை கரைபுரளா நிற்க, முதலிகளுக்கு இத்தனை மெத்தனவெல்லாம் என்தான்? இருந்தபடியால் சடக்கெனக் கடலடைக்கிறவர்களுக்கு சக்தி இல்லை; ஆன பின்பு, மலையாலே தூர்ப்புண்ட ப்ரதேசத்துக்கு மணல் சுமக்கப் பரிகரமில்லையிறே", என்று அணில் நீரிலே புக்குத் தோய்கையும், கரையிலே ஏறினால் மணல் தொற்றுகையும், உதறினவாறே விட்டுக் கழிகையும், இவை முன்பே கைகண்டபடியாலே, இப்ரகாரத்தாலே கடலைத் தூர்ப்போமென்று பார்த்துக் கடலிலே புக்கு முழுகுமாய்த்து. இம்முழுக்கு தன்னாலே நீர் சுவறும், மணலும் கொண்டுவரலாமென்றாய்த்து நினைவு. (தாம்) – கடலிலே நீர் சுவறுவதும் மணல் தொற்றுவதும் தம்முடம்பினளவிலே என்றறியாதாய்த்து அடிமையில் த்வரையாலே. தாழ்வுபட்ட கார்யமடங்கத் தங்களாலே தலைக்கட்டுகிறதாக அபிமாநித்துத் திரிகிறபடியாலே "தாம்" என்னவுமாம். (புரண்டிட்டோடி) – புக்க மலைகளுக்கு நேரே மணல் புக்குச் சொரிந்துகொண்டு வருகிறபடி போராதென்று பார்த்து, மணலிலே புரண்டோடித் திரியாநிற்குமாய்த்து; உள்ள மணலும் வழியிலே உதிரும்படியாக ஓட, இடையிலே நின்றவர்கள் இவற்றின் த்வரையைக் கண்டு, "ஏன்தான் இத்தனை வேகம்?" என்றால் – "பெருமாளுக்குப் பகலமுது லங்கையில் வடக்குவாசலில் விடுவித்த தாயிருக்கும்; உங்களுக்கு த்வரையற்றிருந்தீர்" என்னுமாய்த்து. ருசியானது தந்தாமளவைப் பார்க்கவொட்டாதிறே.

விளக்கம் – (குளித்து) – வானரங்களின் வேகமானது கடலை அடைக்கப் போதுமானதாக இல்லை என்று அங்கு இருந்த அணில்கள் எண்ணின. அவை தங்களுக்குள், "இராமனுக்குச் சீதையைப் பிரிந்த வேதனை கரைபுரண்டு நிற்கிறது. இதனை உணராமல் இந்த வானரங்கள் பொறுமையாக ஏன் வேலை செய்கின்றனர்? மேலும் இந்தக் கடலை வேகமாக அடைப்பதற்குப் போதுமான சக்தி இவர்களிடம் இல்லை போலும். ஒவ்வொரு மலைகளுக்கும் இடையே உள்ள இடைவெளிகளை அடைக்க மணல் தேவை. அந்த மணலைக் கொண்டு போக இவர்களிடம் ஆள் இல்லை போலும்", என்று பேசிக் கொண்டன. ஆகவே அந்த அணில்கள் கடல்நீரில் சென்று தங்களது உடல்களை நனைத்துக் கொண்டன. அதன் பின்னர் கரையில் அவை நடக்கும்போது, அவற்றின் மீது அங்கிருந்த மணல் ஒட்டிக்கொண்டது. அவை நேராக மலைகளின் இடைவெளிகளில் அந்த மணலைச் சென்று உதறின. இப்படியாக இவையும் கடலை

அடைக்க உதவின. அவை தங்கள் மனதில், "இப்படியே செய்தால், கடலும் விரைவாக வற்றிவிடும்; மணலும் கொண்டு வந்து சேர்த்தது போன்று ஆகும்", என்று எண்ணின. (தாம்) – இத்தனை சிறிய உடல் கொண்ட அணில்களால் கடலையும் வற்றச் செய்ய இயலாது, இவற்றால் இடைவெளிகளும் பெரிதளவில் அடைக்கப்படாது. ஆனாலும் இராமனுக்குக் கைங்கர்யம் செய்ய வேண்டும் என்ற வேகம் காரணமாக அணில்கள் இவ்விதம் எண்ணின என்று கருத்து. வானரங்கள் செய்ய இயலாத செயலைத் தாங்கள் செய்வதாக அணில்கள் எண்ணியபடி ஓடுவதால், "தாம்" என்ற பதத்தை இட்டார். (புரண்டிட்டு ஓடி) – மலைகளுக்கு அருகில் உள்ள மணலில் புரண்டு, அதன் பின்னர் நீண்ட தூரம் ஓடுகின்றன. இதன் காரணம், அதிக தூரம் சென்றால் அதிகமான மண் தங்கள் மீது ஒட்டிக் கொள்ளும் என்று எண்ணுகின்றன போலும். இவற்றின் வேகத்தைக் கண்டு அங்கிருந்த வானரங்கள் இவற்றிடம், "ஏன் இத்தனை வேகமாக ஓடுகின்றீர்கள்?", என்றனர். உடனே அந்த அணில்கள், "எம்பெருமானான இராமனுக்கு பகல் உணவானது கடலைக் கடந்து, இலங்கைக்குச் சென்று, அங்குள்ள வடக்கு வாசலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் எண்ணம் கொண்டுள்ளோம். இதற்கு விரைவாகக் கடலை அடைக்க வேண்டும். ஆனால் இந்த வேகம் உங்களிடம் இல்லையே", என்று கூறியபடி ஓடுகின்றன. பெரியபெருமாளின் கைங்கர்யத்தில் ஆர்வம் கொள்பவர்கள், தங்களால் அந்தச் செயல்களைச் செய்ய இயலுமா என்று ஆராய்ந்து பார்க்க முடியாமல், அந்த கைங்கர்ய வேகம் தடுத்துவிடுகிறது.

வ்யாக்யானம் – (தரங்கநீர் அடைக்கலுற்ற) – திரையையுடைத்தாய்க் கிளர்ந்திருந்துள்ள கடலை அடைக்கையிலே சமைந்த. (உற்ற) – கடல் அடைக்கிறார்கள் தாங்களாய், முதலிகளும் தங்களுக்கு எடுத்துக் கைநீட்டுகிறவர்களாயாய்த்து இவற்றினுடைய அபிமாநம். (சலமிலாவணிலும் போலேன்) – இவற்றினுடைய வ்யாபாரம் அங்குத்தைக்குக் கிஞ்சித்காரமாய்ப் பலிப்பதொன்றில்லையாகில் அடிமையாகிறபடி எங்ஙனே என்னில், அடிமை கொள்ளுகிறவனுக்கு இவற்றின் பாவசுத்தியே அமையும் என்கை. சலமிலாமையாவது – "கடல் தூர்ப்புண்டு பெருமாள் அக்கரைப்பட்டாராகவல்லரே" என்கிற பாவத்தில் புரையற்றிருக்கை. சலம் – சலிப்பு, இலா – இல்லாமை, நின்றநிலை பேராதே நிற்கை. சாஸ்த்ரவச்யதையுமின்றிக்கே, வர்ணாச்ரம நியமமுமின்றிக்கே, ஹஸ்தபாதாதி கரணமுமின்றியிலேயிருக்கிற திர்யக்ஸாமாந்யமாத்ரமான இவை, குளிப்பது ஓடுவது புரளுவதாகிற இவற்றினுடைய

பாவமும் எனக்கு இல்லையென்று, "குளித்து மூன்றனலை – ஒளித்திட்டேன்", என்கிறார். சலம் – வ்யாஜம். அவாப்த ஸமஸ்த காமனுக்கு, எதிர்த்தலையில் பாவசுத்தியொழிய அவனுக்கு வேண்டுவதொன்றில்லை; இவனால் செய்யலாவதுமொன்றில்லை; "நமக்குள்ள ஜ்ஞாந சக்திகளைக் கொண்டு பூர்ணனுக்கு நாமொன்று செய்கையாவதென்?", என்று கைவாங்குமவர்கள் பாக்யஹீநர். "அந்தப் பூர்த்திதான் நாமிட்டதுகொண்டு த்ருப்தனாகைக்குறுப்பு" என்று சுத்தபாவராய் மேல்விழுகைக்குக்குறுப்பாம் பாக்யவான்களுக்கு. இப்பாவசுத்திதான் ஒருவர்க்கும் கிடையாமையாலே எல்லார்க்கும் செய்யலாவதொன்றென்னவொண்ணாது. ஆக அணில்களுக்குள்ள ஆநுகூல்யமும் எனக்கில்லை என்கிறார்.

விளக்கம் – (தரங்கநீர் அடைக்கல் உற்ற) – அலைகளைக் கொண்டதாகவும், பொங்குவதாகவும் உள்ள கடலை அடைப்பதில் முயன்றுள்ள. (உற்ற) – இந்த அணில்கள் உண்மையில் தாங்களே கடலை அடைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும், வானரங்கள் தங்களுக்குத் தேவையான கள் முதலானவற்றை எடுத்துக் கொடுக்கும் பணியாட்கள் என்றும் எண்ணியபடி வேலை செய்கின்றன. (சலம் இலா அணிலும் போலேன்) – இந்த அணில்களின் செய்யும் செயல் மூலம் அங்கு கடலை அடைத்தல் என்னும் செயலுக்குச் சிறிதும் பயன் இல்லை என்றபோதிலும், இவை செய்பவற்றை ஏன் இராமனின் கைங்கர்யமாகக் கொள்ளவேண்டும் என்ற கேள்வி எழலாம். கைங்கர்யத்தைக் கைக்கொள்ளும் எம்பெருமான் - ஒருவன் செய்யும் கைங்கர்யத்தைக் காட்டிலும், எந்தவிதமான பலனும் எதிர்பாராமல் கைங்கர்யம் செய்யும் எண்ணத்தை மட்டுமே பெரிதாக எடுத்துக் கொள்கிறான். இதுவே சலம் இல்லாமை ஆகும். அணில்களுக்கு இந்தச் சலம் இல்லாமை அப்படி என்றால் – இராமன் மிகவும் விரைவாக அக்கரைக்குச் செல்லவேண்டும் என்ற ஆர்வம் மேலிட செயல்கள் செய்கின்றன அல்லவா, அந்த எண்ணமே ஆகும். சலம் என்பதைச் சலிப்பு என்று கொண்டு, நின்ற நிலை மாறாமல் உள்ளதைக் கொள்ளலாம். "இந்த அணில்கள் மனிதர்கள் போன்று சாஸ்த்ரங்களை அறியக்கூடிய பிறவி கொண்டவை அல்ல, வர்ணாச்ரம தர்மங்களுக்கு உட்பட்டவை அல்ல, கைங்கர்யம் செய்வதற்கு ஏற்ற கைகால்களைக் கொண்டவையும் அல்ல. இத்தனை தாழ்வான விலங்குப் பிறவிகளாக இருந்தும் இவை குளித்து, ஓடி, புரண்டு இராமனுக்குக் கைங்கர்யங்கள் செய்கின்றன. இத்தகைய செயல்கள்கூட என்னிடம் இல்லையே", என்கிறார். இதனை திருமாலை (25) – குளித்து மூன்றனலை –

என்பதன் மூலமும், இந்தப் பாசுரம் மூலமும் வெளிப்படுத்துகிறார். சலம் என்றால் வ்யாஜம், இதன் மூலம் பயனைக் கூறுகிறார். தனது அனைத்து விருப்பங்களும் நிறைவேறப் பெற்ற எம்பெருமான், ஜீவனிடம் உள்ள "பயனை எதிர்பாராமல், எம்பெருமானுக்காகச் செய்யும் கைங்கர்யம்" என்ற நல்லெண்ணம் தவிர வேறு எதனையும் எதிர்பார்ப்பதில்லை. எம்பெருமானுக்கு ஜீவன் செய்யக்கூடிய உதவி என்பது உண்மையில் ஏதும் அவசியம் இல்லை. ஆனால், "எம்பெருமானோ தனக்கு வேண்டிய அனைத்தையும் கொண்டவனாக உள்ளான். இப்படி உள்ளபோது, நமக்கு உள்ள அற்பமான ஞானம், சக்தி போன்றவற்றைக் கொண்டு அவனுக்குப் பெரிதாக நாம் என்ன செய்ய இயலும்?", என்று எண்ணியபடி கைங்கர்யம் செய்யாமல் சிலர் இருக்கக்கூடும். இவர்கள் அவனுக்குக் கைங்கர்யம் செய்யும் பாக்கியத்தைப் பெறாதவர்களே ஆவர். மேலும் சிலர், "எம்பெருமான் பரிபூர்ணமான குணங்கள் கொண்டவன் என்பதால், நாம் அளிக்கும் அற்பமானவற்றையும் ஏற்று மனநிறைவு கொள்வான்", என்று எண்ணக்கூடும். இப்படியாக எந்தவிதமான பலனும் எதிர்பாராமல் அவனுக்குக் கைங்கர்யம் செய்பவர்கள் பாக்கியம் செய்தவர்கள் ஆவர். இப்படியாக எந்தவிதமான பலனும் கருதாமல் அவனுக்குக் கைங்கர்யம் செய்யும் எண்ணம் யாருக்கும் அத்தனை எளிதாக உண்டாகாது என்பதால், அனைவராலும் எளிதாகக் கைங்கர்யம் செய்துவிட இயலாது. இப்படி பலன் கருதாமல் கைங்கர்யம் செய்த அணில்களுக்கு இருந்த நிலை கூட தனக்கு இல்லையே என்று வருந்துகிறார்.

வ்யாக்யானம் – (மரங்கள்போல் வலிய நெஞ்ச வஞ்சனேன்) – இவ்விஷயத்தில் தம் நெஞ்சில் நெகிழ்ச்சியில்லாதபடிக்கு த்ருஷ்டாந்தம் சொல்லுகிறார். "இரும்புபோல் வலிய நெஞ்சம்" என்றவர் அதுக்கும் அவ்வருகே ஒரு வன்மை சொல்லுவதற்காக "மரங்கள்போல் வலிய நெஞ்சம்" என்கிறார். அக்நியிலேயிட்டு உருக்கி நினைத்த கார்யம் கொள்ளலாம் இரும்பு; இத்தை நெருப்பிலிட்டால் கரிந்துபோய் முன்பு நின்ற நிலையும் கெடுமித்தனையிறே. (வஞ்சனேன்) – இப்படி நெஞ்சு திண்ணியதாக இருக்கச்செய்தே இது த்ரவத்ரவ்யமோவென்று தேவரீரும் ப்ரமிக்கும்படி பாவித்துக் காட்டாநிற்பன். அகவாயில் நினைவு ஒன்றாயிருக்க, "இவனத்தனை பகவத்ப்ரேமமுடையாரில்லை" என்று ப்ரமிக்கும்படி மறைத்து வர்த்திப்பன். "இறையிறையுருகும் வண்ணம்" என்று கீழ் சொன்னத்தை அநுசயிக்கிறார். (நெஞ்சு தன்னால் அரங்கனார்க்காட்செய்யாதே) – அணில்கள் பக்கலிலும் பாவசுத்தியேயிறே உள்ளது. அந்நெஞ்சைக் கொண்டு

ஸந்நிஹிதனான உன் பக்கலிலே அல்பாநுகூல்யமும் பண்ணாதே, இந்த பாவசுத்தி மாத்ரத்தையே பரிபூர்ண சேஷவ்ருத்தியாய்க் கொள்ளும் பகவதபிப்ராயத்தாலே "ஆள் செய்யாதே" என்கிறார். (அளியத்தேன்) – அஹம் ஸர்வம் கரிஷ்யாமி என்னும் இளையபெருமாளைப்போலே, ஸர்வவித கைங்கர்யங்களுக்கும் அர்ஹமான அருமந்த வஸ்துகிடீர் இது. (அயர்க்கின்றேனே) – விஸ்மரித்து அநர்த்தப்பட்டுப்போவதே! இவ்விஷயம் ஸந்நிஹிதமல்லாமையாலேயாதல், இத்தலையில் யோக்யதை இல்லாமையாலேயாதலன்றிறே; "மறந்தேனுன்னை முன்னம்" என்கிறபடியே விஸ்ம்ருதியாலேயிறே அநர்த்தப்பட்டது.

விளக்கம் – (மரங்கள் போல் வலிய நெஞ்ச வஞ்சனேன்) – எம்பெருமான் விஷயத்தில் தனது உள்ளமானது ஈடுபாடு இல்லாமல் உள்ளதற்கு ஓர் உதாரணம் காட்டுகிறார். பாசுரம் 17 ல், "இரும்பு போல் வலிய நெஞ்சம்", என்றார். இங்கு அந்த இரும்பைக் காட்டிலும் வலிமையானதை உணர்த்த, "மரங்கள் போல் வலிய நெஞ்சம்", என்றார்.இதன் கருத்து என்னவென்றால் – இரும்பை நெருப்பில் வைத்து அடித்தால், நாம் வேண்டும்படி அது வளைந்து கொடுத்துவிடும்; ஆனால் மரத்தை நெருப்பில் இட்டால் எதற்கும் பயன் இல்லாதபடி ஆகிவிடும்; ஆக இந்த மரங்கள் இரும்பைக் காட்டிலும் வலியவை; இது போன்று தனது உள்ளத்தைக் கூறுகிறார். (வஞ்சனேன்) – இப்படி எனது உள்ளம் மிகவும் கடினமாக உள்ளது. ஆனாலும் பெரியபெருமாளான நீ இதனைக் கண்டவுடன், "இத்தனை எளிதாக உருகும் பொருள் இவனது உள்ளத்தைக் காட்டிலும் வேறு உள்ளதோ?", என்று மயங்கும்படியாக நான் உன்னிடம் வேஷம் போடுகிறேன். எனது உள்ளத்தில் மற்ற சிந்தனைகள் பலவும் இருக்க மற்றவர்கள் என்னைக் காணும்போது, "இவனைக் காட்டிலும் பெரியபெருமாளிடம் ஈடுபாடு கொண்டவர்கள் வேறு யாரும் இல்லை", என்று எண்ணும்படியாக எனது எண்ணங்களைப் போலியாக மறைத்து நிற்கிறேன். பாசுரம் 17 ல், "இறை இறை உருகும்வண்ணம்" என்று கூறியதும் போலியே என்கிறார். (நெஞ்சு தன்னால் அரங்கனார்க்காட்செய்யாதே) – தங்களது உயர்ந்த சிந்தனை காரணமாக அணில்கள் எம்பெருமானுக்குப் பயன் கருதாமல் கைங்கர்யம் செய்தன; நீ எனக்கு அளித்த உள்ளத்தைக் கொண்டு, மிகவும் அருகில் உள்ள உனக்குச் சிறிதாவது கைங்கர்யம் செய்து உன்னிடம் ஈடுபடலாம், அதனையும் நான் செய்யாமல் உள்ளேன். "ஆள்செய்தல்" என்னும் பதம் பூர்ணமான கைங்கர்யத்தை மட்டுமே குறிக்கும், இது

போன்ற சிறிய அளவிலான கைங்கர்யத்தையும் குறிக்குமோ என்ற சந்தேகம் எழலாம். பயன் கருதாமல் செய்கின்ற கைங்கர்யம் சிறிய அளவாக இருந்தாலும், அந்த நல்லெண்ணம் காரணமாக, அத்தகைய கைங்கர்யமும் பூர்ணமானதே என்று எம்பெருமான் கொள்கிறான். ஆகவே சிறிய கைங்கர்யங்களும் இந்தப் பதம் மூலம் கூறப்படலாம் என்று கருத்து. (அளியத்தேன்) – "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – இராமா! உனக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களும் நான் செய்வேன்" என்று லக்ஷ்மணன் கூறுவது போன்று, ஸ்ரீரங்கநாதனுக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்வதற்கு ஏற்ற தகுதி படைத்த ஆத்மா அல்லவோ இது? இப்படி வீணாக உள்ளதே என்கிறார். (அயர்க்கின்றேனே) – அருகில் உள்ள பெரியபெருமாளை மறந்து இப்படி தகாதவற்றைச் செய்கின்றேனே. இப்படி பெரியபெருமாள் அருகில் இருந்தும் இல்லாமல் உள்ளவனாக ஆகிவிட்டான். இந்த நிலை, அவனுக்குக் கைங்கர்யம் செய்யும் தகுதியை நான் இழந்தேன் என்பதால் ஆனது என்றாலும், அதற்காக நான் பெரிதும் வருந்தவில்லை. ஆனால், பெரியதிருமொழி (6-2-2) – மறந்தேன் உன்னை முன்னம் – என்பதற்கு ஏற்ப அவனை மறந்துவிட்டதால் பெரிதும் வருந்துகிறேன்.

28. உம்பரால் அறியல் ஆகா ஒளி உளார் ஆனைக்காகி

செம்புலால் உண்டு வாழும் முதலைமேல் சீறி வந்தார்

நம் பரம் ஆயது உண்டே நாய்களோம் சிறுமை ஓரா

எம்பிராற்கு ஆட்செய்யாதே என் செய்வான் தோன்றினேனே.

பொருள் – தேவர்களால் எளிதாக அறிய இயலாத தன்மை உடைய ஒளிமயமான பரமபதத்தில் வீற்றுள்ள ஸ்ரீரங்கநாதன், கஜேந்த்ராழ்வானுக்காக சிவந்த மாமிசத்தை உண்டு வாழ்கின்ற முதலை மீது கோபம் கொண்டு விரைவாக குளத்தின் கரைக்கு ஓடி வந்தான். இப்படியாக அடியார்களைக் காக்கின்ற அவனுடைய தன்மை உள்ளபோது, நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பு நமக்கு உண்டோ? நாய் போன்ற தாழ்வான நம்முடைய குற்றங்களை ஆராயாமல் எம்பெருமான் உள்ளான். இப்படிப்பட்ட அவனுக்குக் கைங்கர்யம் செய்யாமல் நான் எதற்காகப் பிறந்தேன்?

அவதாரிகை – அணில்கள் திர்யக்காய்வைத்து நமக்குக் கிஞ்சித்கரிக்க உத்யோகித்த பாவசுத்தி உமக்கில்லையாகில், ஸ்ரீகஜேந்த்ராழ்வான் பொய்கையிலே புக்கு இடர்பட்டு நாம் சென்று தனக்குதவக் கடவதாக நினைத்ததொரு நினைவுண்டு, அதுதான் உமக்குண்டோவென்ன; அதுவுமில்லை என்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் உள்ளதைக் கேட்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "அணில்கள் விலங்குகளாக உள்ளபோதிலும், எனக்குக் கைங்கர்யம் செய்ய முயன்றன. அத்தகைய உயர்ந்த எண்ணம் உம்மிடம் இல்லை என்கிறீர். போகட்டும். முதலையின் பிடியில் சிக்கித் துன்பத்தில் தவித்த கஜேந்த்ரன், நானே அவனது ரக்ஷகன் என்று எண்ணியபடி நின்றான். அத்தகைய நினைப்பு உம்மிடம் உள்ளதோ?", என்றான். இதற்கு ஆழ்வார், "அத்தகைய நினைப்பும் என்னிடம் இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் – (உம்பரித்யாதி) – ப்ரஹ்மாதிகள் அறியவொண்ணாத ஒளியுண்டு ஸ்ரீவைகுண்டம், அத்தை வாஸஸ்தாநமாகவுடையவர். அத யதத: பராதிவோ ஜ்யோதிர் தீப்யதே, அத்யர்க்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: என்னக்கடவதிறே. ஜ்ஞாநாதிகரானாலும் ஈச்வரோஹம் என்றிருப்பார்க்கு நிலமன்றே பரமபதம்; ப்ராபிக்க முடியாமையே அன்று, அறியவும் முடியாதென்கை. யந்த தேவா ந முநயோ ந சாஹம் ந ச சங்கர: ஜாநந்தி பரமேசஸ்ய தத் விஷ்ணோ: பரமம் பதம். கலங்காப்பெருநகரத்திலே நித்யஸூரிகளை அநுபவித்திருக்கிறவர் கிடீர் ஸம்ஸாரத்திலே ஆர்த்தரக்ஷணத்துக்காக வந்தார். (ஆனைக்காகி) – இப்படி கரைபுரண்ட மேன்மையை உடையவன்றான் பதறி வந்து கார்யம் செய்தது ஒரு பிராட்டி, திருவனந்தாழ்வான் போல்வார்க்கோவென்னில் ஒரு திர்யக்குக்காகக் கிடீர்! இடர்பட்ட அதினளவேது, உதவினவன் அளவேது என்கிறார். ஆச்ரிதர் ஒருதலையானால் தன் மேன்மை பார்த்தல், அவர்களுடைய சிறுமை பார்த்தல் செய்யுமவனன்றிக்கே, அவர்கள் பக்கல் பார்ப்பது அத்தலையில் ஆபத்தும் தன்னோட்டை ஸம்பந்தமுமேயாய்த்து.

விளக்கம் – (உம்பரால் இத்யாதி) – நான்முகனாலும் அறிய இயலாத ஒளி கொண்டது ஸ்ரீவைகுண்டம் ஆகும். அதனைத் தனது இருப்பிடமாகக் கொண்டவன். சாந்தோக்ய உபநிஷத் (3-3-17) - அத யதத: பராதிவோ ஜ்யோதிர் தீப்யதே – உயர்ந்த இடங்களில்

எந்த ஒரு உயர்ந்தது ஒளி வீசுகிறதோ – என்றது. மஹாபாரதம் ஆரண்யகாண்டம் - அத்யர்க்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: - மஹாவிஷ்ணுவின் அந்த லோகம் சூரியன் மற்றும் அக்னியின் ஒளியையும் விஞ்சி உள்ளது – என்றது. மிகுந்த ஞானம் கொண்டவர்களாக இருந்தாலும் – ஈச்வரோஹம் – நானே ஈச்வரன் – என்னும் எண்ணத்துடன் இருப்பவர்களுக்கு அறிய இயலாமலும், அடைய இயலாமலும் பரமபதம் உள்ளது. விஷ்ணுபுராணம் (1-9-55) - யந்த தேவா ந முநயோ ந சாஹம் ந ச சங்கர: ஜாநந்தி பரமேசஸ்ய தத் விஷ்ணோ: பரமம் பதம் – தேவர்களாலும், முனிவர்களாலும், நான்முகனாகிய என்னாலும், சங்கரனாலும் அறிய இயலாத இடம் எதுவோ அதுவே விஷ்ணுவின் பரமபதம் – என்றது. மூன்றாம் திருவந்தாதி (51) – கலங்காப் பெருநகரம் – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள பரமபதத்தில் நித்யஸூரிகளை அனுபவித்தபடி இருப்பவன் அல்லவோ, ஸம்ஸாரத்தில் துன்பத்தில் நின்ற ஒருவனைக் காக்க ஓடிவந்தான்? (ஆனைக்காகி) – இப்படியாக மேன்மை பொருந்திய அவன் இவ்விதம் ஓடி வந்தது பெரியபிராட்டிகாகவா, ஆதிசேஷனுக்காகவா, அல்லது அவர்கள் போன்றவர்களுக்காகவா என்றால் இல்லை; ஒரு விலங்கிற்காக அல்லவா ஓடி வந்தான்? துன்பத்தில் நின்ற அதன் தாழ்வு என்ன, அதற்காக ஓடி வந்து உதவிய இவனது மேன்மை என்ன! தன்னுடைய அடியார்களுக்கு ஏதேனும் ஆபத்து என்றால் அவர்களது சிறுமையையோ, தன்னுடைய மேன்மையையோ இவன் பார்ப்பதில்லை. அந்த நேரத்தில் அவர்களது ஆபத்தான நிலையையும், அவர்களுக்கு தன்னுடன் உள்ள உறவுமுறையையும் மட்டுமே காண்கிறான்.

வ்யாக்யானம் – ஆச்ரிதர் சிறுமை பாராதொழிந்தால் தன் சீற்றத்துக்கு நேர் நிற்கவல்லதொன்றுண்டோ? சீறிவந்தது ஆர்மேலே என்னில். (செம்புலாலுண்டு வாழும் முதலை மேல்) – தன்னிலும் க்ஷுத்ரமாயிருப்பதொரு நீர்ப்புழுவை பக்ஷ்யமாகக் கொண்டு, அத்தாலே வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல்செல்ல இருப்பாரைப்போல பூர்ணம்மந்ய மாநமாய் இருப்பதொரு நீர்ப்புழுவை இலக்காகக்கிடீர் வந்தது. பராவரேசம் சரணம் வ்ரஜத்வம் அஸுரார்த்தநம் என்கிறபடியே ப்ரஹ்மாதிகள் போக்கற்று சரணம்புக, ஹிரண்யராவணாதிகளை அழியச் செய்யுமவர்கிடீர் ஒரு க்ஷுத்ரபதார்த்தத்தை இலக்காகக் கொண்டு அரைகுலையத் தலைகுலைய வந்தார். க்ரோதமாஹாரயத் தீவ்ரம், அத ராமோ மஹாதேஜா: இத்யாதிப்படியே ஆச்ரயத்திலில்லாததொன்றை ஏறிட்டுக் கொண்டாய்த்து வந்தது. தம்மளவில் நித்யம்

ப்ரசாந்தாத்மாவாயிருப்பர்; ஆச்ரித பரிபவத்தில் வந்தால் கோபஸ்ய வசமேயிவாந் என்கிறபடியே க்ரோதமிட்ட வழக்காயிருப்பர். "கொடியவாய் விலங்கினுயிர் மலங்கக் கொண்ட சீற்றமொன்றுண்டு" என்று ஆச்ரிதர் தங்களுக்குத் தஞ்சமாக நினைத்திருப்பதொன்றிறே இது. (வந்தார்) – இருந்தவிடத்தே இருந்து ஸங்கல்பத்தாலே செய்யலாயிருக்க, மடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலைய வந்தாராய்த்து. ஜகதுபஸம்ஹாரமாகிலிறே ஸங்கல்ப த்தாலே செய்யலாவது; ஆச்ரித விரோதிகளை அழியச்செய்யுமிடத்துக் கைதொடராய்ச் செய்யாதவன்று சீற்றம் மாறமாட்டா; அற்றை வரவு தமக்கு உதவினாற்போலே இருக்கிறதாய்த்து இவர்க்கு. முதலையின் வாயில் அகப்பட்டார் தாம் என்று தோற்றியிருக்கும்படியாக, "கொடியவாய் விலங்கு" என்றாரிறே ஒருவர். ஆச்ரிதரிலே ஒருவர்க்கு உதவினது தந்தாமுக்கு உதவினதென்று இராதவன்று "நமக்கு பகவத் ஸம்பந்தமில்லை" என்றிருக்கவாய்த்து அடுப்பது.

விளக்கம் – காப்பாற்ற வந்த அடியானாகிய கஜேந்த்ரனின் சிறுமையை எம்பெருமான் காணாமல் தவிர்த்தான் என்பது இருக்கட்டும். தான் யார் மீது கோபம் கொண்டு வந்தானோ, அந்த எதிரியாவது தனக்கு நேரே நிற்பதற்கு வலிமை உள்ளவனா என்றாவது ஆராய்ந்தானோ என்றால் இல்லை. அப்படி யார் மீது கோபம் கொண்டு வந்தான்? (செம்புலால் உண்டு வாழும் முதலை மேல்) – தன்னைக் காட்டிலும் தாழ்வான மீன்களைத் தனது உணவாகக் கொண்டு வாழ்வதும், திருவாய்மொழி (4-5-1) - வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல்செல்ல – என்று ஆட்சி செய்தபடி உள்ள எம்பெருமான் போன்று தனக்குப் பூர்ணத்வம் கிட்டியது என்று எண்ணியபடி வாழ்வதும் ஆகிய நீர்ப்புழுவான ஒரு முதலை மீது அல்லவோ சீறி வந்தான்? விஷ்ணுபுராணம் (1-9-35) - பராவரேசம் சரணம் வ்ரஜத்வம் அஸுரார்த்தநம் – அசுரர்களின் சத்ருவான எம்பெருமானைச் சரணம் அடையுங்கள் – என்று கூறியதற்கு ஏற்ப, ஹிரண்யன் மற்றும் இராவணன் போன்றவர்களின் கொடுமை தாங்காமல் நான்முகன் உள்ளிட்ட தேவர்கள் எம்பெருமானிடம் சரணம் அடைந்தனர். அவர்களை அழிக்க எம்பெருமான் புறப்பட்டான் என்பதில் வியப்பில்லை. ஆனால், ஒரு அற்பமான விலங்கைத் தனது இலக்காகக் கொண்டு இடுப்பில் உள்ள ஆடை நழுவ, அழகான தலைமுடி கலைய ஓடி வந்தான் என்பது வியப்பு அல்லவோ? இராமாயணம் - க்ரோதமாஹாரயத் தீவ்ரம் – அரக்கர்களை அழிப்பதற்காக இராமன் கோபத்தை வரவழைத்துக் கொண்டான் – என்றும், அத ராமோ மஹாதேஜா: - தேஜஸ் மிகுந்த இராமன் இராவணனால் அடிபட்ட

அனுமனைக் கண்டவுடன் இராவணன் மீது கோபம் கொண்டான் – என்றும் கூறுவது காண்க. ஆக தன்னிடம் இல்லாத கோபத்தை வரவழைத்துக் கொண்டான். இராமாயணம் - நித்யம் ப்ரசாந்தாத்மா – எப்போதும் சாந்தியை உடையவனாகவே இருப்பான் – என்னும்படியாக உள்ளவன், தன்னுடைய அடியார்களின் விஷயத்தில் ஏதேனும் அபசாரம் உண்டானால், கோபத்தின் வசப்படுவான். இதனை இராமாயணம் - கோபஸ்ய வசமேயிவாந் – என்றது காண்க. பெரிய திருமொழி (5-8-3) - கொடியவாய் விலங்கினுயிர் மலங்கக் கொண்ட சீற்றமொன்றுண்டு – என்று கூறுவதற்கு ஏற்ப இந்தக் குணத்தை அல்லவோ தாங்கள் சரணம் புக ஏதுவானது என்று அடியார்கள் எண்ணியுள்ளனர்? (வந்தார்) – தான் வீற்றுள்ள இடத்தில் இருந்தபடி தனது ஸங்கல்பம் மூலமாகவே அந்த முதலையை அழித்திருக்கலாம்; ஆயினும் அந்தக் குளத்தின் கரைக்கு இடுப்பில் உள்ள ஆடை நழுவ, அழகான தலைமுடி கலைய ஓடி வந்தான். இந்த உலகை ஸம்ஹாரம் செய்வது என்றால் ஸங்கல்பம் மூலம் செய்துவிடலாம், ஆனால் தனது அடியார் ஒருவனது விரோதியை அழிக்க தானாகவே ஓடி வந்து தனது கையால் அழிக்காதவரை கோபம் நீங்காது என்பதால் நேரே வந்தான். அன்றைக்கு யானைக்காக அவன் ஓடி வந்து உதவியது என்பது தனக்குச் செய்த செயல் போன்று ஆழ்வாருக்கு உள்ளது. தானே முதலையின் வாயில் பிடிபட்டது போன்று தோன்றியதால்தான் பெரியதிருமொழியில் (5-8-3) - கொடியவாய் விலங்கு – என்றார். அடியார் ஒருவருக்கு எம்பெருமான் உதவியது தனக்கே எம்பெருமான் உதவியதாக எண்ணவேண்டும்; இந்த எண்ணம் ஒருவருக்கு உண்டாகவில்லையென்றால், "நமக்கு எம்பெருமானின் ஸம்பந்தம் இல்லை" என்று முடிவு செய்துவிடவேண்டும்.

வ்யாக்யானம் – (நம்பரமாயதுண்டே) – இப்படி ஆச்ரித விஷயத்தில் பக்ஷபாதியாய் ரக்ஷிக்குமவனான பின்பு, தம்முடைய ரக்ஷணத்தில் நமக்கொரு பரமுண்டோ? தன் மேன்மை பார்த்தல், நம் சிறுமை பார்த்தல், நம்முடைய பாபத்தின் கனத்தாலே சீறி, "சில நாள் அநுபவித்தால் பின்பு செய்கிறோம்" என்று ஆறியிருக்குமவனாதலாய் நம் காரியத்துக்கு நாம் கடவோமாகிறோமோ? (நாய்களோம்) – அவ்வானை ஸநகாதிகளுடைய ஸ்தாநத்திலேயாம்படியிறே நம்முடைய தண்மை. திறந்த வாசலெல்லாம் நுழைந்தாலும் நம்மைக் கொள்வாரில்லாத புகலுறுதியை உடையோம். வளர்த்தவனுக்கும் தொட்டால் குளிக்கவேண்டும்படியான தண்மையையுடைய பதார்த்தம். (சிறுமையோராவெம்பிராற்கு) – எத்தனையேனும் தண்ணியோமானாலும்

தண்மை பார்க்கக் கண்ணில்லாதவர்க்கு. தோஷதர்சநத்தில் அவிஜ்ஞாதாவாய் குணதர்சநத்தில் ஸஹஸ்ராம்சுவாயிருப்பர். யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித் என்று ஓதப்படுகிறவனுக்கு அவிஜ்ஞாத்ருத்வமாவது – இத்தலையில் தோஷம் கண்டு பொறுத்து உபகரித்தானாயிரா தொழிகை.

விளக்கம் – (நம் பரம் ஆயதுண்டே) – இப்படியாகத் தன்னுடைய அடியார்களைக் காப்பாற்றும் விஷயத்தில் பாரபக்ஷத்துடன் (அதாவது, அடியார்களின் விரோதியை நேரே வந்து அழிப்பவன், உலக ஸம்ஹாரம் செய்யும்போது இருந்த இடத்திலேயே செய்தல் முதலானவை பாரபக்ஷமான செயல்கள் அல்லவோ) எம்பெருமான் உள்ளபோது, நம்மைக் காப்பாற்றும் பொறுப்பானது நமது கைகளிலா உள்ளது? தன்னுடைய மேன்மையைக் காண்பவன், நமது தாழ்வைக் காண்பவன், "இவன் தவறு செய்துள்ளான், சிலநாள் அனுபவிக்கட்டும், சற்று தாமதம் செய்து காப்பாற்றுவோம்" என்று எண்ணுபவன் – இப்படியாக எம்பெருமான் இருந்தால் நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்யலாம். ஆனால் அவனோ தாமதிக்காமல் வருபவனாக உள்ளான். (நாய்களோம்) – கஜேந்த்ரனாகிய அந்த யானையானது ஸநகர் உள்ளிட்ட உயர்ந்தவர்களைப் போன்று உள்ளது என்று கூறும்படியாக அல்லவோ நமது தாழ்வு உள்ளது? திறந்து கிடக்கும் வாசல் எதில் புகுந்தாலும் அங்குள்ளவர்கள் அடித்துவிரட்டும்படியாக அல்லவோ நமது நிலை உள்ளது? வளர்த்தவனாக இருந்தாலும் நாயை அவன் தொட்டால், கையைக் கழுவவேண்டும் என்னும்படியாக தாழ்வை உடைய நாய்கள் போன்றவர்களாக உள்ளோம். (சிறுமையோரா எம்பிராற்கு) – நாம் எத்தனை தாழ்ந்தவர்களாக இருந்தாலும் நம்முடைய தாழ்ச்சியைக் காண்பதற்குக் கண்ணில்லாதவர்களாக உள்ளோம். நம்முடைய தோஷங்களை அறியாதவனாய், நமது சிறிய நற்குணத்தையும் ஆயிரமாகக் காண்பவனாய் எம்பெருமான் உள்ளான். முண்டக உபநிஷத் - யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித் – யார் அனைத்தையும் அறிகிறானோ, அனைத்தையும் காண்கிறானோ – என்று கூறுகிறது. ஆக அனைத்தையும் அறிந்த அவன், நமது தோஷங்களை மட்டும் எப்படி அறியாமல் உள்ளான் என்ற கேள்வி எழலாம். நம்முடைய தோஷங்களைப் பொறுத்துக் கொண்டு, அதன் மூலம் தன்னுடைய மேன்மைகளை வெளிப்படுத்த உதவினான் என்று எண்ணியபடி எம்பெருமான் உள்ளான் என்று கருத்து.

வ்யாக்யானம் – (எம்பிராற்காட்செய்யாதே) – தோஷம் பாராதே ஆபத்தே ஹேதுவாக ரக்ஷிக்கிறது வகுத்த விஷயமாகையாலே, வகுத்த சேஷியுமாய் உபகாரகனுமாய் இருக்குமவனுக்கு அடிமை செய்கையிறே ப்ராப்தம்; அது செய்யாதே, எங்கள் கார்யம் தமக்கே பரமாக ஏறிட்டுக்கொண்டால், நம்முடைய கரணங்களுக்கு ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியிலே அந்வயிக்கையிறே ப்ராப்தம்.

விளக்கம் – (எம்பிராற்கு ஆட்செய்யாதே) – இப்படியாக நம்முடைய குற்றங்களை ஆராயாமல், நமக்கு உண்டாகும் ஆபத்து ஒன்றையே காரணமாக வைத்து நமக்கு அவன் உதவுவது ஏன் என்றால், நம்முடைய இயல்பான எஜமானனாக அவன் உள்ளதால் ஆகும். இப்படியாக நமது இயல்பான எஜமானனாகவும், நமக்கு உதவுபவனாகவும் அவன் உள்ளபோது அவனுக்கே நாம் கைங்கர்யம் செய்தபடி இருத்தல் வேண்டும் அல்லவோ? ஆனால் அதனைச் செய்யாமல் உள்ளோமே! நமது செயல்கள் அனைத்தையும் எம்பெருமான் தனது பொறுப்பாக ஏற்றுக் கொள்கிறான், அதன் பின்னர் நமது இந்த்ரியங்கள் முதலானவற்றை நமது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி அவனுக்கே அல்லவோ ஒப்படைக்கவேண்டும்? அதனைச் செய்யாமல் உள்ளோமே!

வ்யாக்யானம் – (என்செய்வான் தோன்றினேனே) – வ்யர்த்த ஜந்மாவானேன். ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய என்கிறபடியே ஜந்மப்ரயோஜநம் அடிமையானால் அதுக்கு அசலான என் ஜந்மம் வ்யர்த்தமேயிறே. "பிறந்தேன்" என்னாதே, "தோன்றினேன்" என்றது – அஹம் ஸர்வம் கரிஷ்யாமி என்ற இளையபெருமாள் பிறவி போலேயாகிலிறே பிறந்தேனென்னலாவது; அதில்லாமையாலே "தோன்றினேன்" என்கிறார்.

விளக்கம் – (என்செய்வான் தோன்றினேனே) – எதற்கும் உதவாத பிறவியைக் கொண்டேன். இராமாயணம் - ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய – வனவாஸம் செய்வதற்காகவே படைக்கப்பட்டவன் – என்று லக்ஷ்மணனிடம் அவன் தாய் கூறுவதற்கு ஏற்ப, பிறவி எடுப்பதே எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யவே ஆகும். அதனைச் செய்யாமல் உள்ள பிறவி பயனற்றதே ஆகும். இங்கு "பிறந்தேன்" என்று கூறாமல், "தோன்றினேன்" என்று ஏன் கூறினார்? லக்ஷ்மணன் – அஹம் ஸர்வம்

கரிஷ்யாமி – இராமா! உனக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்வேன் – என்றான். இப்படிப்பட்ட எண்ணம் கொண்டவனாக இருந்தால் "பிறந்தேன்" என்று கௌரவமாகக் கூறிக்கொள்ளலாம். அந்த எண்ணம் இல்லாத காரணத்தால் "தோன்றினேன்" என்று கூறினார்.

29. ஊர் இலேன் காணி இல்லை உறவு மற்றொருவர் இல்லை

பாரில் நின் பாதமூலம் பற்றிலேன் பரம மூர்த்தி

காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்

ஆர் உளர் களை கண் அம்மா அரங்கமாநகருளானே.

பொருள் – ஸ்ரீரங்கநாதா! நீ அன்றாடம் வாஸம் செய்கின்ற திவ்யதேசங்களில் நான் பிறக்கவில்லை. உனக்காகக் கைங்கர்யம் செய்யும் காணியாட்சி முதலானவற்றை நான் கொண்டவன் அல்லன். உன்னைத் தவிர்த்து இந்த உலகில் எனக்கு உறவினர்கள் யாரும் இல்லை. இந்தப் பூமியில் திக்கற்றவர்கள் பற்றத்தகுந்ததாக உள்ள உனது திருவடிகளையும் நான் பற்றவில்லை. நீர்கொண்ட மேகம் போன்ற நிறமும் குணமும் உடையவனே! எளிமை முதலானவையுடன் கூடிய க்ருஷ்ணனே! எனது நிலை குறித்து இப்படிக் கதறுகிறேன். என்னுடைய ஸ்வாமியே! பெரியபெருமாளே! திருவரங்கத்தில் சயனித்துள்ளவனே! உன்னைவிட்டால் என்னைக் காப்பாற்றுவதற்கு யார் உள்ளார்கள்?

அவதாரிகை – ஆனை இடர் பட்டபோது, அது தனக்குதவுகைக்காக நினைத்த நினைவு உமக்கில்லையாகில் ஸ்ரீசாளக்ராமம், திருவயோத்யை, கோயில் முதலாக நாம் உகந்தருளின நிலங்களில் ஒருவனுக்கு ஜந்மாதிகளுண்டானால் அவனை நமக்கு ரக்ஷித்தே தீரவேணும். அங்ஙனே இருப்பன சிலவுண்டோவென்னில், அவையும் எனக்கில்லை என்கிறார்.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "கஜேந்த்ரன் துன்பம் அடைந்தபோது நாம் வந்து அவனைக் காப்பாற்றினோம். இப்படி அவனைக் காப்பாற்றியதற்குக் காரணம், என்னையே அவன் உபாயமாக எண்ணியிருந்த நினைவே ஆகும். இப்படிப்பட்ட

நினைவு உமக்கு இல்லை என்கிறீர். போகட்டும். நான் மிகவும் விருப்பத்துடன் எழுந்தருளியுள்ள சாளக்ராமம், அயோத்தி, திருவரங்கம் முதலான திவ்யதேசங்களில் பிறந்த ஒருவனை, அந்தக் காரணம் மட்டுமே வைத்து நாம் காப்பாற்றுவோம். உமக்கு அந்த நிலை உண்டோ?", என்றான். இதற்கு ஆழ்வார், "நான் அப்படிப்பட்ட இடங்களில் பிறக்கவில்லை", என்கிறார்.

வ்யாக்யானம் – (ஊரிலேன்) – இங்கு "ஊர்" என்று இவர் நினைக்கிறது ஸதா பகவத் ஸந்நிதியுண்டான ஸ்ரீசாளக்ராமமென்ன, அவதாரஸ்தலமான திருவயோத்தியாதி களென்ன, கோயில் முதலாயிருந்துள்ள திருப்பதிகளென்ன, இவற்றையாய்த்து. "ஊர்" என்கிற ஸாமாந்யவாசி சப்தம் இவ்விசேஷங்களைக் காட்டுமோவென்னில், சேதநரிலே ஒரு குறிச்சியில் பிறவாதாரில்லையிறே; அவைதான் அத்ருஷ்ட ஹேதுவென்கைக்கு ஒரு ப்ரமாணமுமில்லை; இங்கு உபாய சூந்யதையைச் சொல்லிப்போருகிற ப்ரகரணத்தோடு சேர வேண்டுகையாலே இச்சப்தம் இவ்விசேஷங்களையே சொல்லிற்றாகக் கடவது. நாம் அபிமாநித்திருந்த எல்லைக்குள்ளே பிறந்தானென்று தேவரீர்க்குப் பற்றாகப் பிடிக்கலாவதொரு தேசத்தில் பிறக்கப்பெற்றிலேன். தேசவாஸாமாத்ரமே ஆத்ம உத்தாரகமென்கைக்கு ப்ரமாணமென் என்னில், தேசோயம் ஸர்வகாமதுக், பவத்விஷய வாஸிந:, திர்யக்யோநி கதாச்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா: என்றும் சொல்லக் கடவதிறே. (காணியில்லை) – அப்படி அத்தேசங்களில் ஜந்மமில்லையாகில், ஏதேனுமோர் உபாதியாலே அவ்வோவிடங்களில் க்ஷேத்ர ஸ்பர்சமுண்டாகக்கூடும், அது உண்டோ என்னில், அதுவுமில்லை என்கிறார். அதாவது தேஹ யாத்ராவிசேஷமாகத் திருப்பல்லாண்டு பாடுகை முதலான நிமித்தங்களிலே அந்வயித்தல், "திருநந்தவனம்" என்றாற்போலே சிலவுண்டாதல், தாநத்தாலும் விலையாலுமுண்டாய் அவ்வூரிலே சென்று காணியாள வேண்டும்படியான ஸ்பர்சமுண்டாயிருக்கை.

விளக்கம் – இங்கு "ஊர்" என்று எவற்றைக் கூறுகிறார்? எப்போதும் எம்பெருமானின் தேஜஸ் வெளிப்படும்படியாக உள்ள சாளக்ராமம் (முக்திநாத்), இராமனின் திருஅவதார ஸ்தலமான அயோத்தி, திருவரங்கம் பெரியகோயில் ஆகியவற்றையே இவர் "ஊர்" என்று கூறுகிறார். "ஊர்" என்னும் சொல், திவ்யதேசங்களை உணர்த்துமோ என்ற கேள்வி எழலாம். இங்கு மோக்ஷ உபாயமாக ஓர் ஊர் உள்ளதைப் பற்றிக் கூறுகிறார். ஆகவே இந்தப் பதம் குறிப்பிட்ட ஊர்களைக் குறிக்கவில்லையென்றால், எந்த ஊரில்

பிறந்தாலும் மோக்ஷம் கிட்டும் என்றாகிவிடும். ஆனால், இவ்விதம் நடக்க எந்தவொரு ப்ரமாணமும் இல்லை. ஆகவே ஊர் என்ற பதம் இது போன்ற திவ்யதேசங்களைக் குறிப்பதாகவே இங்கு கொள்ளவேண்டும். இப்படியாக ஒரு திவ்யதேசத்திலே நான் பிறந்தவன் என்றால் அதனைச் சாக்காக வைத்துக்கொண்டே, "நமக்கு ஏற்றபடியாக உள்ள ஊரில் பிறந்தான்", என்று என்னை நீ கரையேற்றலாம். நான் அப்படியும் பிறக்கவில்லை.

ஒரு திவ்யதேசத்தில் பிறத்தல் என்பது ஆத்மாவைக் கரையேற்றிவிடும் என்பதற்கான ப்ரமாணம் என்ன? காருட புராணம் - தேசோயம் ஸர்வகாமதுக் – இந்த இடம் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுவதாக உள்ளது, இராமாயணம் ஆரண்யகாண்டம் (1-20) - பவத்விஷய வாஸிந: - உனது ராஜ்யத்தில் வசிக்கும் நாங்கள் உன்னால் காக்கப்பட வேண்டியவர்கள், இராமாயணம் உத்தரகாண்டம் (109-22) - திர்யக்யோநி கதாச்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா: - விலங்குகள் உட்பட அனைத்தும் இராமனைப் பின்தொடர்ந்தன – என்ற வரிகள் காண்க. (காணியில்லை) – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "சரி, நீவிர் அது போன்ற திவ்யதேசங்களில் பிறக்கவில்லை. அது போன்ற திவ்யதேசங்களின் தொடர்பாவது உமக்கு உண்டா?", என்றார். அதுவும் இல்லை என்கிறார். அதாவது – உயிர் வாழ்வதன் நோக்கமாக உள்ள திருப்பல்லாண்டு பாடுதல் முதலான செயல்களில் ஈடுபடுதல், திருநந்தவனம் அமைத்து மாலை கட்டிக் கொடுத்தல், தானம் முதலானவற்றால் அந்த ஊரில் காணியாட்சிகளைப் பெறுதல் போன்றவையாகும்.

வ்யாக்யானம் – அவையொன்றுமில்லையாகில் அவ்வூரிலுள்ளாரோடே ஒரு கொள் கொடையால் வரும் ஸம்பந்தமாதல், மந்த்ரஸம் பந்தமாதல் உண்டோவென்னில், (உறவு மற்றொருவரில்லை) – இவையின்றிக்கே ஒழிந்தால் கண்பழகி இருப்பாரொரு பந்துக்களுண்டோ என்னில், அதுவுமில்லை என்கிறார். ஆனால் உமக்கு வாஸமெங்கே யென்ன, (பாரில்) – ஒரு பற்றாசு பெறாவிடில் தரிக்கவொண்ணாதபடி அநந்த க்லேச பாஜநமான பூமியிலே வாஸம். கலங்காப்பெருநகரிலே இருக்கிறேனோ நிர்ப்பரனாயி ருக்கைக்கு? ஒருவர் கூறை எழுவர் உடுக்கிற பயஸ்தாநத்திலேயன்றோ எனக்கு வாஸம். ஆகையால் (நின்பாத மூலம் பற்றிலேன்) – ஸர்வப்ரகாரத்தாலும் புகலற்றார்க்குப் புகலான உன் திருவடிகளில் எனக்கு ஓரந்வயமில்லை. தமேவ சரணம் கத: என்று

ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு இலக்கான காகத்துக்குங்கூட புகலிடமாயிறே தேவரீர் திருவடிகளிருப்பது. ஆனால் பின்னை ஒருவழியாலும் உமக்கொரு நன்மை இல்லையாகில், பின்னை இழக்குமித்தனையன்றோ என்ன (பரமமூர்த்தி) – ஸ்வகதமாக ஒரு உஜ்ஜீவநோபாயமில்லை என்றேனத்தனை போக்கி உன் பக்கலிலும் இல்லையோ? ஸர்வாதிகனாய், பரமசேஷியாய் இருக்குமவனல்லையோ? சேஷத்வ ப்ரதிஸம்பந்தியாயிறே சேஷித்வம் இருப்பது. இவன் "ஸ்வதந்த்ரோஹம்" என்று ப்ரமித்தவன்றும் இவன் ப்ரபத்தியொழிய ஸ்வரூபத்தை மாறாடவொண்ணாதே.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "உமக்கு திவ்யதேசங்களில் பிறப்பு முதலானவை இல்லை என்கிறீர். போகட்டும். ஏதேனும் ஒரு திவ்யதேசத்தில் வசிப்பவர்களுடன் கொடுப்பது கொள்வது முதலானவை மூலம் உண்டாகும் தொடர்பு, மந்த்ரங்கள் மூலம் அவர்களுடன் தொடர்பு போன்றவையாவது உண்டோ?", என்றான். இதற்கு விடை அருளிச்செய்கிறார். (உறவு மற்றொருவரில்லை) – "இவை ஏதும் இல்லை", என்றார். உடனே பெரியபெருமாள், "முகம் பார்த்துப் பேசும் உறவினர்கள் உண்டா?", என்றான். அதுவும் இல்லை என்றார். இதனைக் கேட்ட அழகியமணவாளன், "அப்படி என்றால் நீவிர் வசிக்கும் இடம்தான் எது?", என்றான். (பாரில்) – வசிப்பதற்கு ஏற்ற இடம் என ஒன்று இல்லையென்றால், எல்லையற்ற துன்பங்களை உண்டாக்கும் இந்தப் பூமியில் வசிப்பதாகக் கூறுகிறார். மூன்றாம் திருவந்தாதி (51) – கலங்காப் பெருநகர் – என்று கூறும்படியாக உள்ள பரமபதத்தில் இருந்தால் எந்தவிதமான கலக்கமும் இல்லாமல் இருக்கலாம். நான் அப்படி இல்லையே! ஒருவனின் உணவு மற்றும் உடையை ஏழு மனிதர்கள் பறித்துக் கொள்கின்ற அவலமான பூமியில் அல்லவோ நான் உள்ளேன்? எனவே, (நின்பாத மூலம் பற்றிலேன்) –வேறு எந்தவிதமான கதியும் இல்லாதவர்களுக்கு, அனைத்துவிதங்களிலும் ஏற்ற புகலிடமாக உள்ள உனது திருவடிகளுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-33) - தமேவ சரணம் கத: - இராமனையே சரணம் அடைந்தது – என்று கூறுவதற்கு ஏற்ப, ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு இலக்கான அற்பமான காக்கைக்குக் கூட புகலிடமாக அல்லவோ உனது திருவடிகள் உள்ளன? இதனைக் கேட்ட பெரியபெருமாள், "நீவிர் கூறுவது போன்று வேறு எந்தவிதமான நன்மையும் உம்மிடம் இல்லையென்றால், என்னை அடைதல் என்னும் கதியை நீவிர் இழக்கவேண்டும் என்றே தோன்றுகிறதே!", என்றான். (பரமமூர்த்தி) – என்னைக் காப்பாற்றிக் கொள்ள என்னிடம்

எந்தவிதமான வழியும் இல்லை என்று மட்டுமே கூறினேன். உன்னிடம் இல்லை என்று கூறினேனா? உன்னிடம் என்னைக் காக்கும் வழி உள்ளதே! அனைவரையும் நியமிப்பவனாக, அனைவரின் கைங்கர்யம் கொள்ளுபவனாக உள்ளவன் நீ அல்லவோ? கைங்கர்யம் கொள்ளுதல் என்னும் தொடர்பின் அடிப்படை காரணமாக அல்லவோ கைங்கர்யம் கொள்பவன் என்னும் நிலை உள்ளது? ஒரு ஜீவன் தன்னைச் சுதந்திரமானவன் என்று எண்ணக்கூடும்; ஆனால் ஜீவன் உடைமை என்றும், அவனை உடையவன் எம்பெருமான் என்றும் உள்ள நிலை மாறாது.

வ்யாக்யானம் – ஸ்வரூபத்தை அழிக்கவொண்ணாதாகில் ஸ்வரூபாநுரூபமான ஸித்திக்கு வழியேதென்ன, (காரொளி வண்ணனே) – முதலடியிலே ருசிஜநகமாய், ருசி பிறந்தார்க்கு உபாயமுமாயன்றோ உன் வடிவழகிருப்பது. (கண்ணனே) – வடிவழகுண்டானாலும் உத்துங்க தத்வமன்றோ என்னவொண்ணாதபடி ஸௌலப்யாதி கல்யாண குணயுக்தனல்லையோ? பரமசேஷியாய், விலக்ஷண விக்ரஹோபேதனாய், ஸௌலப்யாதி கல்யாண குணயுக்தனாயிருக்கிற நீ இருக்க, எனக்கு இழக்கவேணுமோ? வகுத்த சேஷியாவது, சேஷித்வ ஸம்பந்தமில்லையாகிலும் விடவொண்ணாத வடிவழகை உடையனாவது, இவையிரண்டும் இல்லையாகிலும் விடவொண்ணாத நீர்மையுடை யனாவது எங்களோடே கலந்து பரிமாறுகை. இப்படிப்பட்ட தேவரீருள்ளீராக எனக்கு ஓரிழவுண்டோ? (கதறுகின்றேன்) – தேவரீருடைய இந்த வைலக்ஷண்யங்களை அநுஸந்தித்து, ஸாதநாநுஷ்டாநம் பண்ணி, பலம் தாழ்ந்தாரைப் போலே கூப்பிடா நின்றேன்.

விளக்கம் – பெரியபெருமாட ஆழ்வாரிடம், "இயல்பாகவே நீவிர் எனது அடிமை என்பதை மாற்ற இயலாது என்கிறீர். அப்படியென்றால், அந்தக் அடிமைத்தனம் வெளிப்படும்படியாக நிலை உமக்கு உண்டாக நீவிர் செய்வது என்ன?", என்றான். (காரொளி வண்ணனே) – உன்னைப் பார்த்தவுடனேயே உன் மீது ருசி உண்டாகி, அப்படி ருசி உண்டானவுடன் அவர்களுக்கு உபாயமாக அல்லவோ உனது அழகு உள்ளது? (கண்ணனே) – இப்படியாக உனது வடிவழகு உள்ளது என்றாலும், அதனை கையில் கொள்ள இயலாது என்று எண்ணுவதற்கு வாய்ப்பு அளிக்காமல், எளிமை முதலான திருக்கல்யாண குணங்களை வெளிப்படுத்தியபடி, பரமபதத்தை விடுத்து இங்கே அல்லவோ நீ வந்தாய்? இப்படி அனைவரிடமும் கைங்கர்யம்

கொள்பவனாகவும், அனைத்தையும்விட மேன்மையான வஸ்துவாகவும், எளிமை முதலான குணங்களின் இருப்பிடமாகவும் நீ உள்ளபோது, நான் அடைய உள்ள பேறான உன்னை இழப்பேனோ? எனது ஸ்வரூபத்திற்கு ஏற்ற எஜமானனாக நீ உள்ளாய்; அப்படி எஜமானனாக இல்லையென்றாலும் தவிர்க்க இயலாத வடிவழகை உடையவனாக நீ உள்ளாய்; இந்த இரண்டும் இல்லையென்றாலும் எளிமை முதலான உயர்ந்த குணங்கள் மூலம் எங்களால் தள்ள இயலாதவனாக நீ உள்ளாய். இப்படியாக நீ உள்ளபோது, ஸ்ரீரங்கநாதா, எனக்கு என்ன குறை உள்ளது? (கதறுகின்றேன்) – இப்படியாக உள்ள உனது மேன்மைகளை எண்ணியபடி, பக்தி முதலான ஸாதனங்களை அநுஷ்டித்து, பலன் தாமதமாகக் கிட்டுபவர்கள் அழைப்பது போன்று நான் உள்ளேன்.

வ்யாக்யானம் – (ஆருளர் களைகண்) – நான் இப்படி கூப்பிடாநிற்க தேவரீர் ஆறியிருக்கிறது தேவரீரையொழிய வேறு ஆர் ரக்ஷகராக? நான் எனக்கு ரக்ஷகனாகவோ? என்னளவும் புகுரநில்லாத பிறர் எனக்கு ரக்ஷகராகவோ? (அம்மா) – உடைமை நசித்தால் இழவு உடையவனதன்றோ? (அரங்கமா நகருளானே) – உடையவனானாலும் ஸந்நிஹிதனல்லனென்றுதான் ஆறியிருக்கி றேனோ? "ஸம்ஸாரத்தில் நம்மைப் பெறவேணுமென்று கூப்பிடுவாருமுண்டோ?" என்னும் நசையாலேயன்றோ கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது.

விளக்கம் – (ஆருளர் களைகண்) – நான் இத்தனை அழைத்தும் நீ என்னைக் காக்காமல் உள்ளது ஏன்? உன்னைத் தவிர வேறு யாரேனும் என்னைக் காப்பாற்றுவார்கள் என்று நீ எண்ணியுள்ளாயோ? அல்லது எந்தவிதமான ஆற்றலும் இல்லாத நானே என்னைக் காத்துக் கொள்ள இயலுமோ? "நம்மிடம் ஏதும் இல்லை" என்று நான் அறிந்து கொண்டது போன்று ஒரு சிலர் அறியாமல் இருக்கக்கூடும், அவர்களால் என்னைக் காக்க இயலுமோ? (அம்மா) – உனக்கு உடைமையாக உள்ள என்னை நீ இழந்தால் நஷ்டம் யாருக்கு? உனக்கு அல்லவோ? (அரங்கமாநகருளானே) – "இவன் எனக்கு உடையவன், ஆனாலும் எனது அருகில் இல்லை" என்று பரமபதத்தில் இருந்தால் என்னைக் குறித்து நீ எண்ணிக் கொள்ளலாம். ஆனால் நீ அத்தனை தொலைவில் இல்லையே! "இந்த உலகில் யாரேனும் நம்மை ஆசையுடன் வந்து ஏற்பார்களோ?", என்று ஆர்வமுடன் திருவரங்கம் பெரிய கோயிலில் அல்லவோ கண்வளர்கிறாய்?

30. மனத்தில் ஓர் தூய்மை இல்லை வாயில் ஓர் இன்சொல் இல்லை

சினத்தினால் செற்றம் நோக்கித் தீ விளி விளிவன் வாளா

புனத்துழாய் மாலையானே பொன்னிசூழ் திருவரங்கா

எனக்கு இனிக் கதி என் சொல்லாய் என்னை ஆளுடைய கோவே

பொருள் – எப்போதும் புதிதாகவே உள்ள திருத்துழாய் மாலை அணிந்தவனே! காவேரியால் சூழப்பட்ட திருவரங்கம் பெரியகோயிலில் உறைபவனே! என்னை உனது கைங்கர்யத்தில் ஈடுபடுத்திக் கொண்ட எனது ஸ்வாமியே! எனது மனதில் சிறிய அளவில் கூட தூய்மை இல்லை. வாயின் மூலமாக இனிய சொல்லோ அல்லது பயனான சொல்லோ வரவில்லை. எந்தவிதமான பயனும் இல்லாமல் கோபத்துடன் பார்த்தபடி, நெருப்புப் போன்று சுடுகின்ற சொற்களையே வீசி நிற்கிறேன். இப்படிப்பட்ட நான் உன்னை அடைந்த பின்னர் என்ன கதி என்பதைக் கூறுவாயாக.

அவதாரிகை – ப்ரஸித்தமான கர்மாத்யுபாயங்களில்லை; ஸ்த்ரீஸூத்ராதிகாரமான த்யாந ஸங்கீர்த்தநாதிகளுமில்லை; அணில்களுக்குண்டான பாவ சுத்தியுமில்லை; ஆனை இடர்பட்டபோது நினைத்த நினைவுமில்லை; புண்யதேச வாஸத்தால் வரும் நன்மையுமில்லை என்றார் கீழ் அஞ்சுபாட்டாலே. "இந்நன்மையொன்றுமில்லையாகிலும் உம்முடைய பக்கல் தீமைகளில்லையாகில் உம்மால் வரும் இழவில்லாமையாலே உம்மை அங்கீகரித்து உம்முடைய கார்யங்களும் செய்கிறோம். அது இருந்தபடியென்?" என்று பெரியபெருமாள் கேட்டருள; "நன்மைகள் ஒன்றுமில்லாதவோபாதி தீமைகளெனக்கில் லாததில்லை" என்கிறார் மேல் அஞ்சுபாட்டாலே. அதில் இப்பாட்டில் ஆநுகூல்யா பாவத்தை அநுபாஷித்துக்கொண்டு தம்முடைய பரஸம்ருத்த்யஸஹத்வமாகிற அநாத்ம குணத்தைப் பேசுகிறார்.

விளக்கம் – கர்ம ஞான பக்தி யோகங்கள் என்னும் உபாயங்கள் தன்னிடம் இல்லை என்றார் (பாசுரம் 25). பெண்களும் சூத்திரர்களும் கூட பின்பற்றலாம் என்னும்படியான த்யானம் மற்றும் திருநாம ஸங்கீர்த்தனம் போன்றவையும் தன்னிடம் என்றார் (பாசுரம் 26). இராமனுக்காக உதவிய அணில்களிடம் காணப்பட்ட நல்லெண்ணம் தன்னிடம் இல்லை என்றார் (பாசுரம் 27). கஜேந்த்ரன் ஆபத்தில் சிக்கிய காலத்தில் அவனுக்கு

இருந்த நினைவு கூட தன்னிடம் இல்லை என்றார் (பாசுரம் 28). திவ்யதேசத்தில் வசிப்பதால் உண்டாகும் நன்மையும் ஏதும் இல்லை என்றார் (பாசுரம் 29). இப்படியாகத் தன்னிடம் நன்மையான செயல்கள் ஏதும் இல்லை என்று கடந்த ஐந்து பாசுரங்களில் கூறினார். இதனைக் கேட்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "உம்மிடம் நன்மைகள் ஏதும் இல்லை என்கிறீர். போகட்டும். உம்மிடம் தீமைகள் ஏதும் இல்லை என்றால், உம்மால் எனக்கு எந்தவிதமான தீங்கும் நேராது என்பதைக் கருத்தில் கொண்டு உமக்கு வேண்டியதை நாம் அளிக்கிறோம். உம்மிடம் தீமைகள் ஏதும் இல்லை அல்லவோ?", என்று கேட்டான். இதற்கு ஆழ்வார், "என்னிடம் நன்மைகள் ஏதும் இல்லாதது போன்று, என்னிடம் உள்ள தீமைகள் உலகத்திலேயே இல்லை", என்று அடுத்த ஐந்து பாசுரங்களில் கூறுகிறார். முதலில் இந்தப் பாசுரத்தில் அனுகூலனாக உள்ள அடிப்படைத் தகுதியே தன்னிடம் இல்லை என்று கூறி, மற்றவர்களின் ஏற்றத்தைக் கண்டு பொறாமை கொள்ளும் தீயகுணம் உள்ளதைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (மனத்திலோர் தூய்மையில்லை) – மநஸா து விசுத்தேந என்றும், யே து ஜ்ஞாநவித: சுத்த சேதஸ: என்றும் மநச்சுத்தியைப் பேற்றுக்குப் பரிகரமாகச் சொல்லக் கடவதிறே; அந்த சுத்தி எனக்கில்லை என்கிறார். ஓர் தூய்மையில்லை என்றது – காம க்ரோத லோப பய த்வேஷாதிகளில் ஒன்று குறைந்து, அதில் சுத்தனாகப் பெற்றிலேன். கலுஷம் காதாசித்கமாக இல்லையாகவும் பெற்றிலேன். (வாயிலோர் இன்சொலில்லை) – மநச்சுத்தி இல்லையானால் வாயில் ப்ரியவசநங்கள் தானுண்டோவென்னில், அதுவுமில்லை என்கிறார். ஓர் இன்சொல்லாவது – இதுக்கு முன்பு ஒருவரைக் குளிர "ஏன்" என்றறியேன். குளிர "ஏன்" என்றார் திறத்திலும் அநுகூலமாக ஒரு மறுமாற்றம் சொல்லியும் அறியேன். "நெடுஞ்சொலால் மறுத்த நீசனேன்" என்கிறபடியே. அபிமத விஷயங்களை உகக்கும்போதும் ச்ரவணகடுகமாயாய்த்து இருப்பது. ஆக இவ்விரண்டு பதத்தாலும் கீழ் அஞ்சு பாட்டாலும் சொன்ன அர்த்தத்தை அநுபாஷித்தாராய்த்து.

விளக்கம் - (மனத்திலோர் தூய்மையில்லை) – மநஸா து விசுத்தேந – தூய்மையான மனதால் மட்டுமே அறியப்படுகிறான் – என்றும், யே து ஜ்ஞாநவித: சுத்த சேதஸ: - அவர்கள் தூய்மையான மனம் கொண்டவர்களாக உலகம் அனைத்தையும் ஞானமயம் என்று அறிபவர்களாக – என்றும் கூறுவதற்கு ஏற்ப தூய்மையான மனம் என்பதே பரமாத்மஞானம் அடைவதற்கான வழி என்றபோதிலும், எனக்கு அந்த மனத்தூய்மை

இல்லை. “தூய்மை இல்லை” என்றால் – காமம், க்ரோதம், பேராசை, பயம், விரோதம் முதலானவற்றில் ஒன்றாவது குறைந்து, அதன் மூலமாக உண்டாகும் மனத்தூய்மையும் இல்லை – என்பதாகும். ஏதோ ஒரு நேரம் மனம் தூய்மையாக இருந்து, மீண்டும் களங்கம் அடைகிறதா என்றால், அப்படியும் இல்லை, எப்போதும் தூய்மை இல்லை என்றார். (வாயிலோர் இன்சொலில்லை) – மனதில் தூய்மை இல்லை என்றாலும், கூறும் சொற்களிலாவது இனிமை உண்டா என்றால், அதுவும் இல்லை என்கிறார். “ஓர் இன்சொல்” என்றால் – நானாகச் சென்று யாரையும் நலம் விசாரித்தது இல்லை, யாராவது என்னிடம் வந்து நலம் விசாரித்தாலும் அவர்களுக்குப் பதில் அளித்ததும் இல்லை – என்று பொருள். பெரியதிருமொழி (1-6-5) - நெடுஞ்சொலால் மறுத்த நீசனேன் – என்றது காண்க. எனக்கு விருப்பமான பெண்களுடன் உள்ளபோதும், அவர்களது செவிகள் சுடும்படியான சொற்களையே கூறுவேன் என்கிறார். இப்படியாகக் கடந்த ஐந்து பாசுரங்களில் கூறப்பட்டவற்றைச் சுருக்கமாக அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் – (சினத்தினால் செற்றம் நோக்கி) – இவையில்லாமையேயன்றிக்கே பரஸம்ருத்தி கண்டால் நிர்நிபந்தநமாக அவர்களுக்கு அநர்த்தங்களையே தேடாநிற்பன். நெஞ்சில் கோபத்தாலே சாத்ரவம் தோற்றப் பாராநிற்பன். செற்றம் – கோபம், சினம் என்றும் கோபம். மிக்க கோபத்தாலே ஒராளுமொருநோக்கும் நேராகவாய்த்து பார்ப்பது. (தீவிளிவிளிவன்) – நோக்கேயன்றியே வாய்விட்டால் கேட்டார்க்கு நெருப்பை வழியவிட்டாற்போலேயாய், குடி பறியும்படியாகவாய்த்து வாய்விடுவது. (வாளா) – இதெல்லாம் செய்கிறதுதான் ஒருகாலைக்கு வெற்றிலை பெறப்பார்க்கவோ என்னில், இதுதானே ப்ரயோஜநமாயிருப்பன். ப்ரயோஜநத்துக்கொரு ப்ரயோஜநம் வேண்டாவிறே. ஸாத்விகர், பரப்ரயோஜநத்தையே ப்ரயோஜநமாக நினைத்திருக்குமாபோலே பராநர்த்தத்தையே ப்ரயோஜநமாக நினைத்திருப்பன். உம்முடையபடி இதுவாகில் நம்மை நிர்ப்பந்திக்கிறதென்னென்ன. (புனத்துழாய் மாலையானே) – தம் தண்மை பார்த்து அகலவொண்ணாதபடி “அபேக்ஷாமாத்ரமே ஹேதுவாக ரக்ஷிக்கக்கடவோம்” என்று ரக்ஷணதர்மத்திலே தீக்ஷித்துத் தனிமாலையிட்டன்றோ தேவரீரிருக்கிறது; ப்ராப்தியாலும் போக்யதையாலும் என்னால் உன்னை விடப்போமோ? தன்னிலத்திற்போலே செவ்வி பெறும்படியான திருத்துழாய் மாலையையுடையவனே (பொன்னி சூழ் திருவரங்கா) – ரக்ஷகனாய் தூரவிராதே ஸந்நிஹிதனாகவும் பெற்றேன். எத்தனையேனும் தண்ணியர்க்கும்

ஆச்ரயிக்கும்படியன்றோ தேவரீர் கோயிலிலே வந்து கண் வளர்ந்தருளுகிறது. இட்ட திருத்துழாய்மாலைக்குப் புறமாலைபோலேயாய்த்து திருப்பொன்னி யோட்டைச் சேர்த்தியிருக்கிறபடி.

விளக்கம் - (சினத்தினால் செற்றம் நோக்கி) – மனதில் தூய்மை இன்மை, வாயில் இனிமையான சொற்கள் இன்மை போன்ற தோஷங்கள் மட்டும் அல்ல; ஒருவரது பெருமைகளைக் காணும்போது அவர்கள் மீது பொறாமை கொண்டு, அவர்களுக்குத் தீமைகளைச் செய்ய முனைவேன். நெஞ்சில் உள்ள கோபம் காரணமாக அவ்ர்களை எரிப்பது போன்று காண்பேன். செற்றம் என்றால் கோபம், சினம் என்றால் எப்போதும் கோபம், ஆக மிகுந்த கோபத்தால் எதிரில் உள்ளவர் விழும்படியாகப் பார்ப்பேன். (தீவிளிவிளிவன்) – பார்வை மட்டும் இப்படி இருப்பதில்லை; வாய் திறந்து பேசினால், அச்சொற்களைக் கேட்பவர்களின் காதுகளில் நெருப்பை அள்ளிக்கொட்டும்படியாகவும், அவர்கள் அழிந்து போகும்படியாகவும் உள்ள சொற்கள். (வாளா) - இப்படிச் செய்வது ஒரு வேளைக்கு வெற்றிலை வாங்க உதவும் என்று ஏதேனும் பயனைக் கருத்தில் கொண்டோ என்றால், அப்படியும் இல்லை; இப்படியாக அவர்களைத் திட்டிவதே பயன் என்று இருப்பேன் என்கிறார். இப்படியாக அவர்களை வாட்டுவதே பயனாக உள்ளபோது, அதற்கு ஒரு பயன் அவசியம் இல்லை அல்லவோ? நல்லவர்களை மற்றவர்களுக்குக் கிட்டும் பயனையே தங்கள் பயனாக எண்ணுவது போன்று, மற்றவர்களின் துன்பமே எனது பயனாகக் கொண்டேன் என்றார். இதனைக் கேட்ட பெரியபெருமாள், "உம்மிடம் இத்தனை தீமைகள் உள்ளபோது, என்னை உமக்கு உதவும்படிக் கட்டாயப்படுத்துவதில் எந்தவிதமான பயனும் இல்லை", என்றான். இதற்கு பதில் கூறுகிறார். (புனத்துழாய் மாலையானே) – எங்களைப் போன்றவர்களின் தாழ்வைக் கண்டு எங்களைக் கைவிட்டு அகன்று செல்ல இயலாதபடி, "இவர்கள் நம்மை நாடுவது ஒன்றையே கருத்தில் கொண்டு இவர்களைக் காப்பாற்றியே தீரவேண்டும்" என்று எங்களைக் காப்பதில் நீ உறுதியாக உள்ளாய் அல்லவோ? இதனை வெளிப்படுத்த அல்லவோ நீ திருத்துழாய் மாலை அணிந்துள்ளாய்? எனக்கு இயல்பான ஸ்வாமியாக உள்ள உனது இனிமையைக் கண்ட பின்னரும் என்னால் உன்னை விட்டு அகல இயலுமோ? நிலத்தில் இருந்தால் எவ்விதம் பசுமை மாறாமல் துளசி இருக்குமோ அது போன்றே உன்னிடம் உள்ளபோதும் அவை பசுமையாக உள்ளன. இப்படிப்பட்ட மாலை அணிந்த ஸ்ரீரங்கநாதா! (பொன்னி சூழ் திருவரங்கா) – காப்பாற்றுபவர் அருகில்

இல்லாமல் தூரமாக இருந்தால் பயன் இல்லை என்பதைக் கருத்தில் கொண்ட நீ, எனக்கு அருகில் இருக்கும்படியான நிலையையும் பெற்றுள்ளேன். எத்தனை தாழ்வுடன் கூடியவராக இருந்தாலும், அவர்களும் எளிதாக வந்து அண்டும்படியாக அல்லவோ நீ பெரியகோயிலில் கண்வளர்கிறாய்? திருத்துழாய் மாலை மீது மற்றொரு மாலை இட்டது போன்று காவேரி உள்ளது.

வ்யாக்யானம் – (எனக்கு) – கீழே தண்மையை உப்பாதித்தாரிறே. இப்படி தோஷப்ரசுரனான எனக்கு. (இனி) – என் தோஷத்தை அநுஸந்தித்து, நான் எனக்கு ரக்ஷகனாகை தவிர்ந்து, தேவரீர் பக்கலிலே ந்யஸ்தபரனான பின்பு. (கதியென் சொல்லாய்) – போக்கடி சொல்லாய். போக்கடியறச் சூழ்த்துக் கொண்டுவைத்து அவனைச் "சொல்லாய்" என்னும்படியிறே ப்ராப்தியில் ஊற்றமிருப்பது. "நீர் போக்கடி சொல்லென்ற போதாக நமக்குச் சொல்லவேண்டுகிறதென்?" என்னில் (என்னையாளுடைய கோவே) – இத்தலையில் சேஷத்வமும் அத்தலையில் சேஷித்வமும் வ்யவஸ்திதமாயன்றோ இருப்பது; வேறு இதுக்குக் கடவாரார்? இது ஆருடைய வஸ்துவாய் நோவுபடுகிறது?

விளக்கம் - (எனக்கு) – இதுவரை தனது தாழ்வுகளைக் கூறினார். இப்படியாகப் பலவிதமான தோஷங்கள் உள்ள எனக்கு. (இனி) – என்னுடைய தாழ்வுகள் காரணமாக நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ள இயலாது என்று உணர்ந்து, என்னைக் காப்பாற்றும் பொறுப்பை உன்னிடம் அளித்த பின்னர். (கதியென் சொல்லாய்) – நான் பிழைக்க வழி கூறுவாயாக. பிழைக்கச் சிறிதும் வழியே இல்லாதபடி பலவிதமான தீமைகளைச் செய்த பின்னரும், அவனிடம் சென்று, "எனக்கு வழி கூறுவாய்" என்று கேட்கலாம்படியாக அல்லவோ அவன் உள்ளான்? இதனைக் கேட்ட பெரியபெருமாள், "நம்மிடம் வந்து நீ பிழைக்க வழி கேட்டவுடன் உனக்கு அதனைக் கூறவேண்டும் என்று நம்மக்கு என்ன கட்டாயம் உள்ளது?", என்றான். இதற்கு ஆழ்வார், (என்னையாளுடைய கோவே) – நான் உனது அடிமை என்பதும், நீ எனது எஜமானன் என்பதும் எப்போதும் மாறாமல் உள்ளது அல்லவோ? என்னைக் காப்பதற்கு உன்னைவிட்டால் யார் உள்ளார்? இப்படியாக வேதனைப்படும் இந்த ஆத்மா யாருடையது, உன்னுடையது அன்றோ?

31. தவத்துளார் தம்மில் அல்லேன் தனம் படைத்தாரில் உள்ளேன்

உவத்தநீர் போல என்றன் உற்றவர்க்கு ஒன்றும் அல்லேன்

துவர்த்த செவ்வாயினார்க்கே துவக்கு அறத் துரிசனானேன்

அவத்தமே பிறவி தந்தாய் அரங்கமா நகருளானே

பொருள் – திருவரங்கத்தில் கண்வளர்பவனே! அழகியமணவாளா! தவங்கள் பல இயற்றியவர்களின் கூட்டத்தில் நான் இல்லை. மிகுந்த செல்வம் படைத்தவர்களின் கூட்டத்திலும் நான் இல்லை. உப்புத்தண்ணீர் போன்று எனது உறவினர்களுக்கு நான் எந்தவிதமான பயனும் இல்லாதவன் ஆவேன். சிவந்த உதடுகளைக் கொண்ட பெண்களுடைய உறவுகளும் அறுகும்படியான கள்வனாக உள்ளேன். இப்படியாக நான் வீணாகப் போகும்படியாக ஒரு பிறவி தந்தாயே!

அவதாரிகை – சாஸ்த்ரீயமாய் மோக்ஷார்த்தமான விஹிதங்களில் எனக்கு ஓர் அந்வயமில்லை என்றீர்; ஸ்வர்க்க பலார்த்தமாகவாதல், விப்ரலம்பகராய் த்ருஷ்ட பலார்த்தமாகவாதல், ஸத் கர்மாதிகளைப் பண்ணிப் போந்தீராகில் அவற்றில் உபாதிகளைப் போக்கி நன்மையில் மூட்டுகிறோம்; அவைதானுண்டோவென்னில் – அவையொன்றுமில்லை; ஸ்வப்ராப்திக்குப் பரிகரமாக தேவரீர் தந்த ஜந்மத்தை, விஷய ப்ரவணனாய் ப்ரத்வேஷத்தாலே விநாசஹேதுவாகத் தந்தீராகக் கொண்டேன் என்கிறார். ஆனால் கீழில் பாட்டோடு இதுக்கு ஸங்கதியென் என்னில்; பரஸம்ருத்த்ய ஸஹத்வமேயன்றிக்கே, விஷயாந்தர ப்ராவண்யத்தாலே என் பந்து ஜநங்களுக்கும் அசலானேன் என்கிறார்.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "மோக்ஷம் பெறுவதற்காக சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட உபாயங்களின் ஒன்றுகூட உம்மிடம் இல்லை என்கிறீர். போகட்டும். ஸ்வர்க்கத்தை அடைதல், பணம் பறித்தல் போன்றவற்றுக்காக வேதங்களில் கூறப்படும் யாகங்களையாவது நீவிர் இயற்றியிருந்தால் கூறுங்கள். அவற்றில் நிற்கும் உம்முடைய எண்ணத்தை மாற்றி, நீவிர் மோக்ஷம் அடையும் நன்மைகளை நான் செய்கிறேன். அப்படி ஏதாவது உண்டா?", என்றான். இதற்கு ஆழ்வார், "அப்படி ஏதும் இல்லை. உன்னை அடைவதற்காக நீ இந்தப் பிறவியை அளித்தாய். ஆனால் நானோ இதனை

உலக விஷயங்களில் ஈடுபடுத்தி, அனைவரிடமும் வெறுப்பைக் காட்டியபடி வாழ்கிறேன், ஆக நீ தந்த இந்தப் பிறவி அழிவதற்கே அளித்ததாக எண்ணி வாழ்கிறேன்", என்றார். கடந்த பாசுரத்திற்கும் இதற்கும் என்ன தொடர்பு உள்ளது? கடந்த பாசுரத்தில் மற்றவர்கள் அடைகின்ற பெருமையைப் பொறுக்க இயலாதவன் என்றார், இங்கு உலகவிஷயங்களில் ஈடுபட்டபடி உள்ளதால் உறவினர்களுக்கும் ஆகாதவனாகிவிட்டதாகக் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (தவத்துளார் தம்மிலேன்) – யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந என்று தபஸ்ஸை மோக்ஷார்த்தமாக விதித்ததிறே. முமுக்ஷுக்களாய்த் தபஸ்ஸை அநுஷ்டித்தாரில் கூட்டாகப் பெறாமையன்றிக்கே ஸ்வர்க்காதி ப்ரயோஜநாந்தரபரராய் அதுதன்னையே பேணுவாருமுண்டு; அவர்களுக்கும் கூட்டாகப் பெற்றிலேன். இவை இத்தனையிமின்றியிலே ஒழிந்தால் ஒரு தபஸ்ஸை ஆரம்பித்து அதில் வைகல்யத்தாலே ப்ராயச்சித்திகளானார் தங்களில்தான் கூடப்பெற்றேனோ? ஆக, தபஸ்ஸ்பர்சமுடையார் ஒருவரிலும் கூடப்பெற்றிலேன் என்கிறார். (தனம் படைத்தாரிலல்லேன்) – அர்த்த லாபத்தையும் புருஷார்த்த ஸாதநமாகச் சொல்லக் கடவது விலக்ஷண விஷயத்தில் வ்யவிக்குமன்று. யஜ்ஞேந தாநேந என்றும், யஜ்ஞோ தாநம் தபச்சைவ பாவநாநி என்றும், தத்தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் என்றும் சொல்லக்கடவதிறே. யயாகயாச விதயா பஹ்வந்நம் ப்ராப்நுயாத் என்று ஸத் விஷயத்திலே வ்யவிக்குமன்று த்ரவ்யார்ஜநத்துக்கு ப்ரகார நியதியில்லை என்றும் சொல்லிற்றிறே. இம்முகத்தாலே த்ரவ்யார்ஜநம் பண்ணுவாரில் கூட்டல்லேன். திருமங்கையாழ்வார் போல்வார் அநுஷ்டிப்பதும் செய்தார்களிறே. இவையின்றிக்கேயொழிந்தாலும், யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திச்ய வா புந: என்கிற ராஜஸ தாநமாதல், அஸத்க்ருதமவஜ்ஞாதம் என்கிற தாமஸ தாநமாதல், க்யாத்யர்த்த தாநமாதல் இவை உண்டோவென்னில், அவையொன்றுமில்லை என்கிறார். இவை இரண்டும் இல்லாதாரும் பந்துக்களுக்குறுப்பாய் இருப்பர்களிறே, அதிருந்தபடியென்னென்னில் (உவத்தநீர் போல என்றனுற்றவர்க்கொன்றுமல்லேன்) – உவர்நீரை முகத்திலே ஏறிட்டுக்கொண்டால் அது கண்விழிக்கவொண்ணாதபடி கரிக்குமாபோலே, என்னை நேர்முகம் பார்க்கவொண்ணாதபடியாய்த்து நான் அவர்கள் திறத்தில் வர்த்தித்தபடி. அவர்ஜநீய பந்துக்கள் என் முகத்தே விழித்தால் அற்றைக்கு ஜீவிக்கமாட்டாதபடியாய்த்து அவர்களுக்கு அவத்யபூதனாய் வர்த்தித்தபடி. அவர்களுக்கு

அப்ரியமே பண்ணுகையாலே ப்ரியவிஷயமாகவும் பெற்றிலேன். அவர்களுக்கு அஹிதமெண்ணுகையாலே ஹிதைஷியாகவும் பெற்றிலேன். எனக்கும் அநர்த்தங்களை விளைத்துக்கொள்ளுகையாலே தனக்குத் தானுளன் என்னுமளவும் பெற்றிலேன். அவர்களுக்கு அவத்யபூதனாயே போனேன்.

விளக்கம் - (தவத்துளார் தம்மிலேன்) – ப்ருஹத் உபநிஷத் - யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந – பரமாத்மாவை யஜ்ஞம், தானம், தவம் போன்றவை மூலம் காண விரும்புகிறனர் – என்று மோக்ஷ உபாயமாகவே தவத்தை வேதங்கள் முழங்கின. மோக்ஷத்தை விரும்பித் தவம் செய்பவர்களின் கூட்டத்தில் சேராமல் உள்ளதோடு, ஸ்வர்க்கம் உள்ளிட்ட பலன்களை விரும்பித் தவம் செய்பவர்களின் கூட்டத்திலும் சேராமல் உள்ளேன். இது மட்டும் அல்ல. ஏதோ ஒரு தவம் செய்யத் தொடங்கி, அது தடைபட்டதன் காரணமாக ப்ராயச்சித்தம் செய்தபடி உள்ளவர்களின் கூட்டத்திலும் சேராமல் உள்ளேன். ஆக எந்தவிதமான தவங்கள் இயற்றுபவர்களாக இருந்தாலும் அவர்களுடன் சேராமல் உள்ளேன் என்கிறார். (தனம் படைத்தாரிலல்லேன்) – நல்ல விஷயத்திற்காகப் பணத்தைச் செலவிடும்போது, அந்தப் பணத்தை லௌகீகமாகக் கூறாமல், புருஷார்த்த ஸாதனமாகக் கூறுவர். இதனைக் கீழே உள்ள பல வரிகளில் காணலாம்:

- ப்ருஹத் உபநிஷத் - யஜ்ஞேந தாநேந – யஜ்ஞத்தாலும், தானத்தாலும்
- கீதை (18-5) - யஜ்ஞோ தாநம் தபச்சைவ பாவநாநி – யஜ்ஞமும், தானமும், தவமும் தூய்மைப்படுத்தவல்லவை
- கீதை (17-20) - தத்தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் – அந்த தானம் ஸாத்விகம் எனப்படுகிறது

தைத்திரீய உபநிஷத் - யயாகயாச விதயா பஹ்வந்நம் ப்ராப்நுயாத் – ஏதோ ஒரு வழியில் அதிகமாக ஈட்டக்கடவன் – என்று, நல்ல விஷயங்களுக்காகச் செலவிடும் பணத்தைத் தவறான வழிகளிலும் ஈட்டலாம் என்றது. இப்படியாகப் பணத்தை ஈட்டுபவர்களின் கூட்டத்திலும் நான் இல்லை. திருமங்கையாழ்வார் போன்றோர் இப்படி அல்லவோ செய்தனர்? இப்படியாக தவம் மற்றும் தானம் ஆகிய இரண்டும் இல்லை என்றாலும்:

கீதை (17-21) - யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திச்ய வா புந: - பிரதி உபகாரத்தை எதிர்பார்த்தும், பலனை எதிர்பார்த்தும் அளிக்கப்படுகிறது – என்னும்படியான ராஜஸ தானம் அல்லது கீதை (17-22) – அஸத்க்ருதமவஜ்ஞாதம் – அஸத் பாத்ரங்களுக்கு அளிக்கப்படும் தானம் – என்னும்படியான தாமஸ தானம் அல்லது "இவர் பெரிய வள்ளல்" என்று பெயர் பெறுவதற்காகச் செய்யப்படும் தானம் ஆகிய இவையாவது உண்டா என்றால், அவையும் தம்மிடம் இல்லை என்கிறார்.

இவை இரண்டும் இல்லை என்றால், உறவினர்களுக்கு உதவியாகவாவது ஒரு சிலர் இருப்பார்கள். அப்படியாவது உண்டா என்றால் இல்லை என்கிறார். (உவத்தநீர் போல என்றனுற்றவர்க்கொன்றுமல்லேன்) – உப்புநீரை எடுத்து முகம் கழுவினால், அது கண்களைத் திறக்கவிடாமல் செய்வது போன்று, எனது உறவினர்கள் என்னை நேருக்குநேர் காண இயலாதபடியாக அவர்களுக்கு குற்றமே செய்தபடி வாழ்ந்தேன். இதனையும் மீறி எந்த உறவினராவது என்னைப் பார்த்துவிட்டால், அவர்கள் அன்றைய தினம் நிம்மதியாக வாழஇயலாதபடி அவர்களுக்குத் தீமை செய்தபடி உள்ளேன். அவர்களுக்குப் பிடிக்காத விஷயங்களை மட்டுமே நான் செய்தபடி உள்ளதால், அவர்களின் ப்ரியத்திற்கும் ஆளாகவில்லை. அவர்களுக்குத் தீமைகளைச் சரியான திட்டம் போட்டுச் செய்தேன். எனக்கும் நான் தீமைகளையே செய்துகொண்டதால் என் ஒருவனுக்காவது நான் உறவினனாக உள்ளேனோ என்றால், அதுவும் இல்லை. அவர்களுக்கு உதவாதவனாக ஆனேன்.

வ்யாக்யானம் – பந்துக்களுக்கு ஆகாதவர்களும் தந்தாமுக்கு அபிமதைகளான ஸ்த்ரீகளுக்கு ஆயிருப்பார்களே, அது இருந்தபடியென், என்னில் (துவர்த்த இத்யாதி) – அகவாயில் அநாத்ம குணங்களை மறைத்து அதரத்தின் பழுப்பைக்காட்டி அகப்படுத்திக் கொள்ளுமவர்களாய்த்து; இவனும் உள்வாயில் தண்மையறியான்; தன்னோடு அவர்களுக்கொரு பந்தமில்லாமையுமறியான்; இவனும் அவ்வதரத்தின் பழுப்புக்கு அவ்வருகுபோகமாட்டாதே அகப்படுமாய்த்து; அகவாயில் அநாத்ம குணங்களை மறைக்கைக்கும், புறம்புள்ளாரோடு இவனுக்குண்டான துவக்கை அறுக்கைக்கும் அதரத்தின் பழுப்பேயாத்து அவர்களுக்குப் பரிகரம். புறம்புள்ள ஸகல பந்துக்களையும் விட்டுப் பற்றினவர்களுக்கும் துர்ப்பரனாய்த் தலைக்கட்டினேன். அதாகிறது – அவர்கள் பக்கலிலும் அபகாரகனாய்ப் போந்தவனாகையாலே அவர்களுக்கும் அவனோட்டை

ஸம்பந்தம் அறவேணுமென்றிருக்கை. துரிசன் – கள்ளன். தேந சாஸ்ம்யவமாநித: என்று "நீசனான ராவணனுக்கும் ஆகாதானொருவன்" என்று அவன் சொன்னாற்போலே, "தண்மைக்கெல்லையான ஸ்திரீகளுக்குமாகாதே அவர்களாலே பஹிஷ்கரிக்கப்பட்டேன் நானொருவன்" என்கிறார்.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "உறவினர்களுக்கு ஒருவன் ஆகாதவனாக இருந்தாலும், தன்னுடைய மனதிற்குப் பிடித்தமான பெண்களுக்காவது ப்ரியமானவனாக இருப்பான். நீவிர் அது போன்றாவது உள்ளீர்களா?", என்று கேட்க விடை அளிக்கிறார். (துவர்த்த) – தங்களது உள்ளத்தில் மறைந்து கிடக்கும் தீயகுணங்களைக் காண்பிக்காமல், சிவந்த உதடுகளைக் காண்பித்து வசப்படுத்திக்கொள்ள முயல்வார்கள். இவனும் அவர்களின் உள்ளத்தில் இருக்கும் குற்றங்களை அறியமாட்டான். தன்னிடம் அவர்களுக்கு உண்மையான அன்பு ஏதும் இல்லை என்பதையும் உணரமாட்டான். அவர்களது உதடுகளின் அழகின் பின்னே ஏதேனும் ஆபத்து உள்ளதா என்று ஆராயாமல், சிக்கிக்கொள்வான். தங்களது உள்ளத்தில் உள்ள குற்றங்களை மறைப்பதற்கும், இவனை இவனது உறவினர்களிடமிருந்து பிரிப்பதற்கும் அவர்களது வாயழகையே கருவியாகப் பயன்படுத்துவார்கள். இப்படியாக எனது அனைத்து உறவினர்களையும் யாருக்காக விட்டுப் பற்றினேனோ அந்தப் பெண்களையும் நான் தள்ளினேன். அதாவது, அவர்களுக்கும் நான் தீமை செய்த காரணத்தினால், "இவனுடனான தொடர்பை நாம் அறுத்துக் கொள்ளவேண்டும்", என்று அவர்கள் முடிவுசெய்யும்படியாக எனது செய்கை இருந்தது. துரிசன் என்றால் கள்ளன் என்று பொருள். இராமாயணம் – தேந சாஸ்ம்யவமாநித: - இராவணனாலும் அவமதிக்கப்பட்டவன் – என்று "மிகவும் தாழ்ந்தவனான இராவணனுக்கும் நான் ஆகாதவனாகிவிட்டேன்" என விபீஷணன் கூறினான். இதே போன்று, "தாழ்வுகளின் எல்லையாக உள்ள பெண்களுக்கும் நான் வேண்டாதவனாகி, அவர்களாலும் ஒதுக்கப்பட்டேன்", என்கிறார்.

வ்யாக்யானம் – ஆனபின்பு (அவத்தமே பிறவி தந்தாய்) – தேவரீர் எனக்கு ஜந்மத்தை வ்யர்த்தமே தந்தருளினீராய்ப் பலித்தது. தம்முடைய கர்மமடியாக வந்த அநர்த்தத்தை அத்தலையிலே ஏறிடுவானென்னென்னில், கர்மஸ்வரூபத்தையும் ஸ்வஸ்வரூபத்தையும் உள்ளபடி அறிந்தவராகையாலே அருளிச்செய்கிறார். கர்மமாவது – ஈச்வர

ஹ்ருதயத்திலே நிக்ரஹ ரூபேண நின்று பலிப்பதொன்று. ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் ஈச்வராதீநமாம்படியாய்த்து ஸ்வரூபமிருப்பது, கர்மத்தைப் பொறுத்தோமென்னப் போமதொன்று. ததாமி புத்தியோகம் தம் என்கிறபடியே புத்தி ப்ரதாநம் பண்ணி நல்வழி போக்குமிடத்தில் நிவாரகரில்லை; ஆக இவ்வளவு உணர்ந்த இவர்க்குச் சொல்லலாமிறே. கிணற்றில் விழுந்த ப்ரஜையைக் கண்டு தாய் பேசாதேயிருந்தால் "தாய் தள்ளினாள்" என்னக் கடவதிறே. (அரங்கமாநகருளானே) – சாஸ்த்ரங்களாலே மீட்கவொண்ணாதபடி கர்மபரதந்த்ரராய் விஷயாந்தர ப்ரவணராயிருப்பாரை, அழகாலும் சீலத்தாலும் மீட்கைக்காகவன்றோ கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது.

விளக்கம் – (அவத்தமே பிறவி தந்தாய்) – இப்படியாகப் பல கோணங்களில் ஆராயும்போது, நீ எனக்கு அளித்த இந்தப் பிறவியானது பயனற்றுப் போய்விட்டது என்றே கூறலாம். இங்கு ஒரு கேள்வி எழலாம் – தன்னுடைய முற்பிறவி கர்மங்களின் காரணமாக வந்த தாழ்வை, அவன் அளித்ததாக இவர் எப்படிக் கூறலாம்? கர்மத்தின் ஸ்வரூபம் என்ன, தன்னுடைய ஸ்வரூபம் என்ன என்பதை உள்ளது உள்ளபடி இவர் அறிந்தவர் என்பதால் இவ்விதம் கூறினார். கர்மம் என்பது – ஜீவனது ஸ்வரூபத்திற்கு ஏற்ற பயனை அடைய இயலாதபடி ஈச்வரன் செய்கின்ற தடைகளே ஆகும். ஜீவனால் ஏற்கப்படக்கூடியது, தள்ளப்பட வேண்டியது என்று உள்ள அனைத்தும் ஈச்வரனுக்கு வசப்பட்டவை என்று கூறலாம்படியாக ஜீவனின் ஸ்வரூபம் உள்ளது. எம்பெருமான் ஜீவனைப் பார்த்து, "நான் உன்னைப் பொறுத்தேன்" என்று கூறினால், அந்த நொடியிலேயே கர்மம் அகலக்கூடியதாகும். கீதை (10-10) - ததாமி புத்தியோகம் தம் – என்னை அடைவதற்கான யோகத்தை நானே அளிக்கிறேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஜீவனுக்கு நல்ல புத்தி உண்டாக்கி, இவனை நல்ல வழியில் அழைத்துச் செல்லவேண்டும் என்று ஈச்வரன் எண்ணிவிட்டான் என்றால், அவனைத் தடுக்க யாரும் இல்லை. இதனை இவர் அறிந்தவர் என்பதால், "வீணான பிறவியை அளித்தாய்" என்றார். தனது குழந்தைக் கிணர்ரில் விழுகின்றபோது அதனை அதன் தாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால், "தாய் குழைந்தையைக் கிணற்றில் தள்ளினாள்", என்று கூறுவார்கள் அல்லவா? அது போன்றே இங்கு இவர் கூறுகிறார். (அரங்கமாநகருளானே) – சாஸ்த்ரங்களால் திருத்த இயலாதபடி, கர்மங்களின் வசப்பட்டு, அது இட்டுச் செல்கின்ற "உலகவிஷயங்களை அனுபவித்தல்" என்னும்

பாதையில் ஒருவன் செல்லக்கூடும். இப்படிப்பட்டவர்களைத் தனது அழகாலும், எளைமையாலும் மீட்டு, தனது கைங்கர்யத்தில் ஈடுபடுத்திக் கொள்வதற்காக அல்லவோ இவன் திருவரங்கம் பெரியகோயிலில் கண்வளர்கிறான்?

32. ஆர்த்து வண்டு அலம்பும் சோலை அணி திருவரங்கம் தன்னுள்
கார்த்திரள் அனைய மேனி கண்ணனே உன்னைக் காணும்
மார்க்கம் ஒன்று அறியமாட்டா மனிசரில் துரிசனாய
மூர்க்கனேன் வந்து நின்றேன் மூர்க்கனேன் மூர்க்கனேனே

பொருள் – வண்டுகள் ஓயாமல் ரீங்காரம் செய்தபடி உள்ள சோலைகளால் சூழப்பட்டதும், இந்த உலகிற்கே ஆபரணம் போன்று விளங்குவதும் ஆகிய திருவரங்கம் பெரியகோயிலில் நீர் கொண்ட மேகம் போன்று நிறத்தாலும் குணத்தாலும் ஒத்த திருமேனி கொண்ட பெரியபெருமாளே! உன்னை அடைவதற்கான உபாயம் ஏதும் அறியாத மனிதர்களில் நான் முதன்மையாக உள்ளேன். உன்னுடைய ஆத்மாவை எனது என்று களவு செய்பவனாக உள்ளேன். பிடித்தவற்றை விடாத மூடனாக உள்ளேன். இப்படியாக உள்ள நான் எனது தாழ்மையை எண்ணிப் பாராமல் உன் முன்பாக வந்து நின்றேனே! எனது மூர்க்கத்தனம்தான் எத்தகையது!

அவதாரிகை – நம் பக்கல் விமுகரான ஸம்ஸாரிகளுக்குங்கூட ஆகாதபடி வர்த்தித்த நீர் நம்பக்கல் வந்தபடியென்னில்; ப்ரதிபந்நகாரிகளாயிருப்பார் செய்யுமவற்றுக்கு ஓர் அடைவுண்டோ? என் மௌர்க்யத்தாலே வந்தேன் என்கிறார்.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், “நம்மிடம் ஈடுபடாமல் பலர் உள்ளனர். அவர்களுக்கும் நீவிர் ஆகாதவராக உள்ளீர். இப்படி உள்ளபோது, நம்மிடம் இப்போது எப்படி வந்தீர்?”, என்றான். இதற்கு ஆழ்வார், ”அழகியமணவாளா! மூர்க்கர்கள் தங்களுக்குத் தோன்றியபடி செய்வார்கள். இப்படி நான் உள்ளபோது, நான் உன்னிடம் வந்ததை ஆராய இயலுமோ? என்னுடைய மூர்க்கத்தனத்தால் வந்தேன்”, என்கிறார்.

வ்யாக்யானம் – (ஆர்த்துவண்டலம்பும் சோலை) – திருச்சோலையில் மதுவைப் பாநம் பண்ணி இழிந்த வண்டுகளானவை, அபிநிவேசத்தாலே பரிச்சேதித்திழிய அறியாதே இழிந்து கழுத்தே கட்டளையாகப் பருகி, புக்க மது இருந்த இடத்திலிருக்க வொட்டாமையாலே ஆர்த்துக் கொள்ளாநிற்கும். முக்தர் பகவதநுபவஜநித ஹர்ஷத்துக்குப் போக்குவீடாக ஸாமகாநம் பண்ணுமாபோலே, ஒரு தேச விசேஷத்திலே பகவதநு பவத்தாலே முக்தருக்குப் பிறக்கும் விகாரம் திர்யக்குகளுக்கும் பிறக்கும்படியாயாய்த்து கோயிலின் யோக்யதை இருப்பது. காயந்தி கேசித் ப்ரணமந்தி கேசித் ந்ருத்யந்தி கேசித் என்று மதுவநமழித்த முதலிகள் ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுப் பாடுவார், ஆடுவார், ஒருவரையொருவர் பொகடுவார் ஆனார்களிறே. இவர் தம்முடைய ஸத்தையுண் டாகைக்குக் கூப்பிடுகிறார். இவை ப்ரீதிக்குப் போக்குவீடாகக் கூப்பிடுகின்றன. (வண்டலம்பும் சோலை) – மதுபாநம் பண்ண இழிந்த வண்டுகள் மதுவின் மிகுதியாலே, ப்ரளயத்தில் அகப்பட்டு அலைகிற மார்க்கண்டேயனைப் போலேயும், கிண்ணகத்தில் அகப்பட்ட திருச்சோலைபோலேயும், அலையாநிற்குமாய்த்து. அலம்பல் – தளும்பல்.

விளக்கம் - (ஆர்த்துவண்டலம்பும் சோலை) – திருவரங்கத்தில் உள்ள சோலைகளில் அமர்ந்து மதுவைப் பருக வேண்டும் என்று வரும் வண்டுகள், மதுவைப் பருகவேண்டும் என்ற ஆர்வம் காரணமாக, அளவுடன் பருகவேண்டும் என்று உணராமல், கழுத்துமுட்ட மதுவைப் பருகுகின்றன. இதன் காரணமாக ஓர் இடத்தில் இருக்க இயலாமல் ரீங்காரம் செய்தபடி அங்கும் இங்கும் பறந்தபடி உள்ளன. பரமபதத்தில் உள்ள எம்பெருமானைக் காணும் முக்தர்கள் தங்களுக்கு உண்டான பேரானந்தம் காரணமாக ஸாமகானம் செய்வது போன்று இந்த வண்டுகளின் செய்கை உள்ளது. பரமபதம் அளவிற்குச் சென்று முக்தர்களுக்குக் கிட்டும் ஆனந்தம் என்பது, அற்பவிலங்குகளுக்கும் இங்கேயே கிட்டும்படியாக பெரியகோயிலின் இனிமை உள்ளது. இராமாயணம் சுந்தரகாண்டம் - காயந்தி கேசித் ப்ரணமந்தி கேசித் ந்ருத்யந்தி கேசித் – சில வானரர்கள் பாடுகிறார்கள், சிலர் வணங்கியபடி உள்ளனர், சிலர் ஆடுகிறார்கள் – என்று கூறும்படியாக மதுவனத்தை அழித்த வானர வீரர்களில் சிலர் ஆனந்தம் காரணமாக பாடுவார்கள், ஆடுவார்கள், ஒருவரை ஒருவர் சுமந்தபடி ஓடுவார்கள். இந்த வானர வீரர்கள் அடைந்த ஆனந்தத்தை இங்குள்ள வண்டுகள் பெற்றன. ஆழ்வார் அரங்கனை அழைப்பது தன்னுடைய இருப்பை நிலைநிறுத்த ஆகும், வண்டுகள் அரங்கனை அழைப்பது ஆனந்தம் காரணமாக ஆகும். (வண்டலம்பும் சோலை) – ப்ரளய காலத்தில் அகப்பட்டுக்

கொண்ட மார்க்கண்டேய மஹரிஷி போன்றும், ஆற்றின் வெள்ளத்தில் அகப்பட்ட திருச்சோலை போன்றும் மதுவைப் பருகின வண்டுகள் மதுவின் மிகுதியால் அலைகின்றன.

வ்யாக்யானம் – (அணிதிருவரங்கம் தன்னுள்) – ஸம்ஸாரத்துக்கு ஆபரணம் போலேயாய்த்து கோயிலிருப்பது. லீலாவிபூதிக்கு நாயகனொருவனு ண்டேயாகிலும் கோயிலிலே வந்து ஸந்நிஹிதனல்லாதபோது தாலிகட்டாத ஸ்த்ரீகள் போலேயாய்த்து லீலாவிபூதி இருப்பது. (சோலையணி திருவரங்கம்) – சோலையை ஆபரணமாகவுடைய கோயிலென்னவுமாம். (கார்த்திரள் அனைய மேனி) – மது வெள்ளத்தைக் கண்டு கடலென்று பருகி, நெகிழ்ந்து போகமாட்டாதே அவை உள்ளே புகுந்து சாய்ந்தாற் போலேயாய்த்து பெரியபெருமாள் கண்வளர்ந்தருளுகிறபடி. வடிவின் கறுப்பாலும், குளிர்த்தியாலிம், பரோபகாரமே ஸ்வபாவமாயிருக்கையாலும், தனக்கென்ன ஒன்றுவையாமையாலும் மேகத்தை ஒருவகைக்குப் போலியாகச் சொல்லும்படியாயாய்த்து வடிவிருப்பது. "தொக்க மேகப்பல்குழாங்கள்" என்று வடிவுக்கு ஸ்மாரகமாக மேக ஸமூஹங்களைச் சொல்லக் கடவதிறே. (கண்ணனே) – மேகத்திற்காட்டில் வ்யாவ்ருத்தி சொல்லுகிறது. கடக்க நின்று ஜலத்தை உபகரிக்குமதிறே மேகம், ஸஜாதீயனாய் வந்து கிட்டித் தன்னையாய்த்து உபகரிப்பது. பெரியபெருமாளைக் கண்டால் யசோதைப் பிராட்டி வைத்த வெண்ணெயைக் களவுகண்டு அமுது செய்து மூலையடியே திரிந்து வளர்ந்த செருக்குத் தோற்றியாய்த்திருப்பது. கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெயுண்ட வாயன் என்னக்கடவதிறே.

விளக்கம் – (அணிதிருவரங்கம் தன்னுள்) – ஸம்ஸார உலகிற்கு ஆபரணம் போன்று திருவரங்கம் பெரியகோயில் உள்ளது. இந்த உலகிற்கு நாயகனாக எம்பெருமான் உள்ளபோதிலும், அவன் திருவரங்கம் பெரியகோயிலில் வந்து, அனைவருக்கும் அருகில் உள்ளவனாக இல்லையென்றால், இந்த உலகம் தாலி கட்டாத பெண்கள் போன்று உள்ளது. (சோலையணி திருவரங்கம்) – சோலையை ஆபரணமாகக் கொண்ட திருவரங்கம் என்றும் கூறலாம். (கார்த்திரள் அனைய மேனி) – பெரியபெருமாளின் சயனத் திருமேனி எப்படி உள்ளது என்றால், சோலைகளில் உள்ள மதுவைக் கண்ட மேகங்கள், "இவை கடல் போலும்", என்று எண்ணி பெரியகோயிலுக்கு வந்து,

கழுத்துமுட்ட மதுவைப் பருகிவிட்டு, மேலே செல்ல இயலாமல் கோயிலின் உள்ளேயே கிடந்தனவோ என்று கூறும்படியாக உள்ளது. கறுமையான நிறத்தாலும், குளிர்ச்சியாலும், ப்ரதிபலன் எதிர்பாராமல் உதவுகின்ற தன்மையாலும், தனக்கென்று ஏதும் வைத்துக் கொள்ளாத காரணத்தாலும் மேகக்கூட்டங்கள் ஓரளவு பெரியபெருமாளின் திருமேனிக்கு ஒப்புமை கூறலாம்படி உள்ளன. திருவாய்மொழியில் (8-5-8) – தொக்க மேகப்பல்குழாங்கள் – என்று மேகங்களைக் கண்டால் இவனது திருமேனியின் நிறம் நினைவில் தோன்றுவதாக ஆழ்வார் அருளியது காண்க. (கண்ணனே) – மேகத்தைக் காட்டிலும் பெரியபெருமாளுக்கு உள்ள மேன்மை கூறப்பட்டது. மிகவும் எட்டாத உயரத்தில் நின்றபடி மட்டுமே உதவுவது மேகம் ஆகும். ஆனால் தாழ்ந்தவர்களுடன் பிறந்து, அவர்கள் அருகில் நின்று, தன்னையே அளிப்பது பெரியபெருமாள் மட்டுமே. பெரியபெருமாளைக் காணும்போது, யசோதை வைத்திருந்த வெண்ணெயைக் களவு செய்து, உண்டு, எங்கும் சுற்றித் திரிந்த செருக்கைக் காணலாம். இதனை அமலனாதிபிரானில் (10) - கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெயுண்ட வாயன் – என்றார் அல்லவோ?

வ்யாக்யானம் – (உன்னைக் காணும் மார்க்கமொன்றறியமாட்டா) – உன்னைப் பெறுகைக்குறுப்பாக நீ உபதேசித்து வைத்த மார்க்கமுண்டு – வழி, அதாகிறது உபாயம். அவையாகிறன கர்மயோகம், தத்ஸாத்யமான ஜ்ஞாநயோகம், உபயஸாத்யமான பக்தியோகம், அவதாரரஹஸ்யம், புருஷோத்தமவித்யை, அநுக்தமான திருநாம ஸங்கீர்த்தநம், புண்யக்ஷேத்ரவாஸம் இப்படி சேதநபேதத்தோபாதி போருமிறே உபாயபேதமும். இவற்றிலே ஒன்றை அநுஷ்டிக்க மாட்டாமையேயன்றிக்கே அறியவும் மாட்டாதவனாய்த்து. (மனிசரில்) – அறிவுக்கு அடைவில்லாத திர்யக்யோநியாய் இழக்கவுமாமிறே. அறிகைக்கு யோக்யமான மநுஷ்ய ஜந்மத்தைப் பெற்றுவைத்திறே இழக்கிறது. (துரிசனாய) – அவர்கள் தாங்கள் நித்யஸூரிகள் கோடியிலேயாம்படி அவர்களுக்கு த்யாஜ்யனான க்ருத்ரிமன், திர்யக்ஜந்மமாய் அயோக்யனென்று ஆறியிருக்கிறேனல்லேன், மநுஷ்ய ஜந்மத்தாலுள்ள ப்ரயோஜநம் பெற்றிலேன். மாநுஷ்யம் ப்ராப்ய. உபயவிலக்ஷணனானேன் என்கிறார். துரிசு – களவு.

விளக்கம் - (உன்னைக் காணும் மார்க்கமொன்றறியமாட்டா) – உன்னை நாங்கள் அடைவதற்காக நீ கீதையில் உபதேசித்த மார்க்கங்கள் பல உண்டு. அவையாவன –

கர்மயோகம், கர்மயோகம் மூலம் உண்டாகும் ஞானயோகம், கர்மயோகம் மற்றும் ஞானயோகம் மூலம் உண்டாகும் பக்தியோகம், உனது திருஅவதார ரஹஸ்யம், புருஷோத்தம வித்யை, மற்ற சாஸ்த்ரங்களில் புகழப்படும் திருநாம ஸங்கீர்த்தனம், திவ்யதேசத்தில் வசித்தல் – போன்ற பலவும் உண்டு. இப்படியாக சேதனர்கள் கரை ஏறுவதற்கு அவரவர்களுக்கு ஏற்றபடி பல உபாயங்கள் உள்ளன. ஆனால் இவற்றில் ஒன்றைக் கூட நான் பின்பற்றவில்லை. அவற்றைப் பற்றி நான் அறியவும் இல்லை. (மனிசரில்) – நான் விலங்காகப் பிறந்திருந்தால் இவற்றை அறியாமல் உள்ளதற்குக் காரணம் கூறலாம். ஆனால் இவற்றைப் பற்றிய ஞானம் அடைவதற்கு ஏற்ற மனிதனாகப் பிறந்தபோதிலும் அல்லவோ நான் இவற்றை அறியவில்லை? (துரிசனாய) – என்னுடன் ஒப்பு நோக்கினால் சாதாரண மனிதர்கள் கூட நித்யசூரிகளே ஆவர் என்று கூறலாம்படி அவர்களாலும் கைவிடுவதற்கு ஏற்ற கள்வன் நான். விலங்காகப் பிறவி எடுத்திருந்தால் அறிந்து கொள்ளும் தகுதி இல்லை என்று ஆறுதல் அடையலாம்; ஆனால் மனிதனாகப் பிறவி எடுத்துள்ளபோது அல்லவோ அதன் பயனை அடையாமல் உள்ளேன்?

வ்யாக்யானம் – இப்படியிருக்கிற நீர் என்பக்கல் வருவானென்னென்னில் (மூர்க்கனேன் வந்து நின்றேன்) – என் தண்மை பாராதே மூர்க்கனாகையாலே வந்துகொடு நின்றேன். என் தண்மையுமறிந்து உன் வைலக்ஷண்யத்தையுமறிந்துவைத்து அயோக்யன் என்று அகலவிறே அடுப்பது. அத்தைச் செய்யாதே வந்து கொடுநின்றேன். தண்ணீர் குடிக்கிற ஊற்றிலே நஞ்சையிடுவாரைப்போலே, விலக்ஷணபோக்யமான விஷயத்தைக் கிட்டி அழித்தேனென்கிறார்.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "நீவிர் இப்படிப்பட்டவர் என்றால் என்னிடம் ஏன் வரவேண்டும்?", என்றான். இதற்கு ஆழ்வார் பதில் அளிக்கிறார். (மூர்க்கனேன் வந்து நின்றேன்) – என்னுடைய தாழ்வு எத்தகையது என்பதை நான் அறியாதவன் என்பதால் உன் முன்பாக வந்து நின்றேன். என்னுடைய தாழ்ச்சி, உன்னுடைய மேன்மை ஆகிய இரண்டையும் நான் அறிந்து கொண்டு, உன்னை அணுகும் தகுதி கொண்டவன் அல்லேன் என்று உணர்ந்து கொண்டு உன்னைவிட்டு அகன்று செல்வது அல்லவோ உகந்தது? அதனைச் செய்யாமல் உன்னிடம் துணிவுடன் வந்தேன். ஊரில் உள்ள குடிநீர்

நிலையில் விஷத்தைக் கலப்பது போன்று, நல்லவர்களுக்கு இனிமை அளிக்கும் விஷயமாக உள்ள உன்னை அண்டினேன்.

வ்யாக்யானம் – கண்ணன் என்றது அங்குத்தைக்கு ஆகாதாரில்லையிறே. அத்தையே பற்றி வந்து நின்றேன். (மூர்க்கனேன் மூர்க்கனேனே) – இதொரு மௌர்க்யமே என்கிறார். வீப்ஸையால் இரண்டு தலையும் அநுஸந்தித்து அத்தலைக்கு வந்த அவத்யத்தைப் பார்த்தும், தம்முடைய தண்மையைப் பார்த்தும் அருளிச்செய்கிறார்.

விளக்கம் – "கண்ணன்" என்று கூறுவதன் மூலம் அவனுக்கு ஆகாதவர்கள் என யாரும் இல்லை என்பது வெளிப்படுகிறது. (மூர்க்கனேன் மூர்க்கனேனே) – இது அறிவின்மை என்கிறார். அல்லது, தான் பெரியபெருமாளிடம் சென்றதால் அவனுக்கு உண்டான தீங்கையும், தன்னுடைய தாழ்வையும் பார்த்து இருமுறை "மூர்க்கனேன்" என்றார்.

33. மெய் எல்லாம் போக விட்டு விரிகுழலாரில் பட்டுப்

பொய் எல்லாம் பொதிந்து கொண்ட போட்கனேன் வந்து நின்றேன்

ஐயனே அரங்கனே உன் அருள் என்னும் ஆசை தன்னால்

பொய்யனேன் வந்து நின்றேன் பொய்யனேன் பொய்யனேனே

பொருள் – என்னுடைய ஸ்வாமியே! ஸ்ரீரங்கநாதா! மெய்யாக உள்ள அனைத்தையும் கைவிட்டு, விரிந்த கூந்தலைக் கொண்ட பெண்களின் மாயவலையில் அகப்பட்டுக் கொண்டு, பலவிதமான பொய்களை என்னுள்ளே கொண்டு, வேறு போக்கிடம் இல்லாமல் நான் உள்ளேன். உன்னுடைய க்ருபை என்பதன் மீது, உன்னுடைய கருணை காரணமாக எனக்கு ஆசை உண்டானது. இதனால் உன் முன்பாக வந்து நின்றேன்.

அவதாரிகை – இப்படி நன்மைகளுமில்லை, தீமைகளாலும் குறைவில்லை, நான் இங்குத்தைக்கு ஆகாதானொருவனென்கிறார் அநந்தரம். கீழ்ப்பாட்டோடு இப்பாட்டுக்கு ஸங்கதியென்னென்னில், "மூர்க்கனேன் வந்து நின்றேன்" என்றீர், அந்த மௌர்க்யம்

ஹ்ருதயத்திலே பட்டுச் சொல்லுகிறீரோ என்னில், அதுவும் பொய்யென்கிறார். "ஆனால் நம்மைக் கிட்டுகைக்கொரு உபாயமில்லையாகில் மேல் போக்கென்?", என்று கேட்க, "தேவரீர் திருவடிகளோட்டை ஸம்பந்தமும் க்ருபையுமொழிய வேறுண்டோ?", என்று சரமோபாயமான க்ருபையை வெளியிடுகிறார்.

விளக்கம் – கடந்த சில பாசுரங்களில் தன்னிடம் எந்தவிதமான நன்மைகளும் இல்லை, தீமைகளுக்கும் தன்னிடம் குறைவு இல்லை என்றார். கடந்த பாசுரத்துடன் இந்தப் பாசுரத்திற்குத் தொடர்பு என்ன என்றால், பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "நீவிர் உம்மை மூர்க்கனேன் வந்து நின்றேன் என்று கூறினீர். உம்முடைய அந்த மூர்க்கத்தனத்தை நீவிர் உமது நெஞ்சத்தில் உணர்ந்து கொண்டு, மனப்பூர்வமாக அப்படிக் கூறினீர்களா?", என்றான். இதற்கு ஆழ்வார், "அப்படி இல்லை. நான் கூறியதும் பொய்யே", என்றார். உடனே பெரியபெருமாள், "அப்படி என்றால் என்னை வந்து அடைவதற்கு உம்மிடம் எந்தவிதமான உபாயமும் இல்லை என்றாகிறது. பின்னர் உம்மை நான் எவ்விதம் கரை ஏற்றுவது?", என்றான். இதற்கு ஆழ்வார், "அழகியமணவாளா! உன்னுடைய திருவடிகளின் தொடர்பு மற்றும் க்ருபை ஆகியவை தவிர எனக்கு வேறு உபாயம் உள்ளதோ?", என்கிறார். இதன் மூலம் இறுதியான உபாயமாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் க்ருபை என்பதை வெளியிடுகிறார்.

வ்யாக்யானம் – (மெய்யெல்லாம்) – மெய்யாகிறது பூதஹிதமாய், யதார்த்தமாயிருக்கும் அர்த்தமாய்த்து. கீழ்ச்சொன்ன நன்மைகளெல்லாவற்றுக்கும் ப்ரதமசிலையாய்த்து ஸத்யந்தானிருப்பது. ஸத்யமூலமிதம் ஸர்வம் என்னக்கடவதிறே. ஜந்ம வ்ருத்தத்தால் குறைய நின்ற கைசிகன், "பகவத் விஷயத்தில் அவகாஹித்தாரில் பொய் சொல்லக் கடவாரில்லைகாண்" என்று தன்னை பக்ஷிக்க நினைத்த ப்ரஹ்மராக்ஷஸனைக் குறித்துச் சொன்னானிறே, பகவத்விஷயத்திலே நாலடி வர நிற்கையாலே. (எல்லாம்) – இவைதான் பலவகையாய்த்து இருப்பது. மநஸ்ஸால் நினைப்பது மெய்யாய், அத்தோடே சேரச் சொல்லுவதும் மெய்யாய், செய்வதும் மெய்யாயிருக்கை. பந்துவாயிருப்பானொருவனுக்கு மெய்யைச் சொல்லி, புறம்புள்ளார்க்கு அஸத்யனாயிருக்கவும் கூடுமிறே, அதுவுமில்லை. இவையெல்லாம் நானிருக்கிற நாட்டிலும் நடையாடாதபடி வாஸனையோடே போகவிட்டேன் என்கிறார். தன்னோடே பரிமாறினார் பக்கலிலே மெய்யிருக்குமாகில் தன் பக்கலிலே வந்து பொசியக்

கூடுமென்று அவர்கள் பக்கலிலும் மெய் நடையாடாதபடி பண்ணினேன், ஸம்ஸாரிகள் அஜ்ஞராகையாலே பொய்யோடும் செல்லும்; மெய்கொண்டே நடக்கவேண்டும்படி ஸர்வஜ்ஞரான தேவரீர் திருவடிகளிலேயிறே அஸத்யனாய்த்து.

விளக்கம் – (மெய் எல்லாம்) – மெய் என்றால் மற்ற உயிர்களுக்கு நன்மை அளிப்பதாக இருக்கவேண்டும், உள்ளதை உள்ளபடிப் பேசவேண்டும். கடந்த சில பாசுரங்களில் தன்னிடம் பலவிதமான நன்மைகள் இல்லை என்றார், அவை அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது ஸத்யமே ஆகும். கைசிக மாஹாத்ம்யம் – ஸத்யமூலமிதம் ஸர்வம் – இந்த உலகம் அனைத்தும் ஸத்யத்தால் ஆனது – என்றது காண்க. பிறப்பால் சண்டாளனாகிய நம்பாடுவான் தன்னை உண்ண விரும்பிய ப்ரஹ்மரக்ஷஸ்ஸிடம், "எம்பெருமானிடம் ஈடுபாடு கொண்ட யாரும் பொய் உரைக்கமாட்டனர்", என்றான். இவன் எம்பெருமானிடம் சிறிதே ஈடுபாடு கொண்டவனாக உள்ளபோதிலும் இப்படியாக உரைத்தான் (இதனைப் பற்றிய விரிவை அடியேனின் கைசிக புராணம் நூலை www.namperumal.com என்னும் இணையதளத்திலிருந்து download செய்து படிக்கவும்). (எல்லாம்) – இந்த ஸத்யம் என்பது பலவகையாக இருக்கும். மனதால் நினைப்பதும் ஸத்யமாக, அதனைச் சொற்களால் கூறுவதும் ஸத்யமாக, அதனைச் செயலில் செய்வது ஸத்யமாக உள்ள தன்மை. சிலர் உறவினர்களிடம் உண்மையைக் கூறிவிட்டு மற்றவர்களிடம் பொய் கூறுவார்கள். தான் அப்படியும் இல்லை என்கிறார். இப்படியாக உள்ள பலவகையான ஸத்யங்கள் அனைத்தும் தான் இருக்கும் திசை வைத்தும் நிற்க இயலாமல் ஓடும்படிச் செய்தேன் என்கிறார். தன்னுடன் யாரேனும் வந்து பேசினாலும், அவர்கள் பக்கம் உள்ள உண்மை என்பது தன்னிடம் வந்துவிடும் என்று எண்ணி, அவர்களிடமும் உண்மை தங்காதவாறு விரட்டியதாக உரைக்கிறார். ஆனால் ஸம்ஸாரிகள் அறிவற்றவர்கள் என்பதால் அவர்களிடம் பொய்யை மட்டுமே உரைத்து எனது நாட்களைக் கழிக்கலாம், ஆனால் அனைத்தும் அறிந்த உன்னிடம் (பெரியபெருமாள்) மெய்யே கூறவேண்டும் என்பதை அறிந்தபோதும் உன்னிடமும் பொய்யே கூறினேன் என்கிறார்.

வ்யாக்யானம் – நீர் இப்படி மெய்யை நேராகப் பொகடுகைக்கு வாஸனை பண்ணிற்று எங்கே என்னில், (விரிகுழலாரில்பட்டு) – உன் கோஷ்டிக்குப் பொய் ஆகாதாப் போலேயிறே அவர்கள் கோஷ்டிக்கு மெய் ஆகாதபடி. ஸத்யனாயிருக்குமவனுக்கு

ஸ்த்ரீகளோடு ஒரு க்ஷணகாலமும் ஸம்ஸர்க்கம் அரிதாயாய்த்து இருப்பது. (விரிகுழலாரில்) – மயிர் முடித்திருக்கில் "இதொரு மயிர்முடியே! மாலை சுற்றின விரகே!" என்று அதிலே வித்தனாயிருக்கும்; விரித்திருக்கில் "ஓசழக்காக மயிரை விரித்துப் பொகட்டினபடியென்!" என்று அதிலே வித்தனாயிருக்கும். "என்னை நைவிக்கும்" என்று பகவத்விஷயத்தில் ஸாத்விகர் படுமதெல்லாம் படுமாய்த்து. (பட்டு) – வலையிலே அகப்பட்ட சில பதார்த்தங்களைப்போலே தன்னால் மீளவொண்ணாதபடி அகப்படுகை. ஆசார்யோபதேசத்தாலே வகுத்த விஷயத்தில் பனியிருங்குழல்களைக் கண்ணாலே காணாநிற்க, நெஞ்சு ஸ்த்ரீ பக்கலிலேயாம்படியிறே அதில் அகப்பாடிருப்பது.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "இப்படியாக உண்மை என்பதை முற்றிலுமாகக் கைவிடுவதற்கு நீவிர் எங்கே பழகிக் கொண்டீர்?", என்று வியந்து கேட்டான். இதற்கு விடை அளிக்கிறார். (விரிகுழலாரில்பட்டு) – உன்னுடன் சேர்ந்தவர்களுக்குப் பொய் என்றால் ஆகாதது போன்று, மெய் என்றால் ஆகாதபடியுள்ள பெண்களிடம் கற்றேன் என்கிறார். உண்மையை மட்டுமே பேசும் ஒருவனால் பெண்களுடன் நொடிப்பொழுதும் சேர்ந்து இருத்தல் மிகவும் கடினம் அல்லவோ? (விரிகுழலாரில்) – அந்தப் பெண்கள் தங்கள் தலைமுடியை முடிந்திருந்தார்கள் என்றால், "ஆகா! இந்தக் கூந்தல் எத்தனை அழகாக உள்ளது! இதில் உள்ள மலர்கள் எத்தனை அழகாக உள்ளது!", என்று அதிலேயே ஈடுபாட்டுடன் இருப்பான். அவர்கள் தலைமுடியை விரித்து விட்டிருந்தால், "விரித்துவிட்ட இந்தக் கூந்தலின் அழகு உள்ளபடி என்னே!", என்று அதில் ஈடுபாட்டுடன் இருப்பான். திருவாய்மொழி (5-10-2) – என்னை நைவிக்கும் – என்று கூறுவதற்கு ஏற்ப எம்பெருமானிடம் ஈடுபட்ட ஸாத்விகர்கள் அவனில் மயங்கி நிற்பது போன்று இவனது செய்கை பெண்களைப் பொறுத்து உள்ளது. (பட்டு) – வலையில் சிக்கிக்கொண்ட மீன்களால் எவ்விதம் தங்கள் முயற்சியால் தப்பிக்க இயலாதோ அது போன்று இவன் சிக்கிக் கொண்டான். ஆசார்யனின் உபதேசம் மூலமாக எம்பெருமானின் திருமேனியின் முன்பாக இவன் நிற்கும்போதும், இவனது உள்ளமானது பெண்களிடம் இருப்பதாகிய அளவிற்கு இவன் அவர்களிடம் சிக்குண்டான்.

வ்யாக்யானம் – (பொய்யெல்லாம் பொதிந்துகொண்ட) – மெய்யை குடநீர் வழித்தாற்போலே பொய்களைக் கூடுபூரித்தேன். பகவத்விஷய ஸம்ஸர்க்கம் பொய்யரை

மெய்யராக்குமாபோலேயாய்த்து இவ்விஷயம் ஸத்யரை அஸத்யராக்கும்படி. (எல்லாம்) – மெய்க்குச் சொன்னவைகளெல்லாம் இதுக்கும் உண்டிறே. "பொய்" என்று பேர்பெற்றவை எல்லாவற்றையும் தம்மோடே சேர்த்துக்கொண்டாராய்த்து. (பொதிந்துகொண்டே) – அவற்றில் ஒன்றும் தம்மோடே சேர்த்துக்கொண்டாராய்த்து. (பொதிந்துகொண்ட) – அவற்றில் ஒன்றும் சோராதபடி பொதிந்துகொண்டேன். நாட்டார் தந்தாம் அபிமத விஷயங்களுக்குக் கார்த்திகைக்கு ஒரு பொய் சொல்லவேண்டினால், அவர்களும் என் பக்கலிலே வந்து கேட்டுப்போம்படி பொதிந்துகொண்டேன். எட்டுப்புரியும் கட்டினாராய்த்து. (போட்கனேன் வந்துநின்றேன்) – என்னை அநுஸந்தித்தால் "மெய்யரன்றே அங்குத்தைக்கு ஆவார்" என்று மீளவிறே அடுப்பது; பண்ணறையனாகையாலே நிர்லஜ்ஜனாய் வந்து கொடுநின்றேன். (நின்றேன்) – ஸாதநாநுஷ்டாநம் பண்ணி பலத்துக்கு அவஸரப்ரதீக்ஷராய் நிற்பாரைப்போலே வந்து நின்றேன். (போட்கனேன்) – போட்கமை பண்ணறை கதிஸூந்யதை.

விளக்கம் - (பொய்யெல்லாம் பொதிந்துகொண்ட) – உண்மை பேசுவதை மறந்தும் செய்யாமல் விட்டது போன்று, பொய்களை மட்டுமே பேசியபடி உள்ளேன். எம்பெருமானுடன் சேர்த்தி உள்ளவர்களை அந்தத் தொடர்பானது அவர்கள் பொய் பேசுபவர்களாக இருந்தாலும் உண்மையே பேசும்படியாக மாற்றிவிடும். ஆனால், பெண்களுடன் கொள்ளும் தொடர்பானது உண்மையை மட்டுமே பேசுபவர்களையும் பொய் கூறுபவர்களாக மாற்றிவிடும். (எல்லாம்) – மெய் போன்றே பொய்யும் பலவகைப்படும். இந்த உலகினரால் "பொய்" என்று கூறப்படும் அனைத்தையும் இவர் தன்பக்கம் சேர்த்து வைத்துக்கொண்டார். (பொதிந்துகொண்டே) – பொய்களின் விதங்களில் எந்தவிதமான பொய்யும் தன்னை விட்டுத் தப்பிச் சென்றுவிடாதபடி பார்த்துக் கொண்டதாகக் கூறுகிறார். உலகில் உள்ளவர்கள் தங்களுடைய ப்ரியமானவர்களிடம் எப்போதாவது ஒரு பொய்யைச் சொல்ல வேண்டிய நிலை உண்டானால், அவர்கள் தன்னிடம் வந்து கேட்டுச் செல்லும்படியாக பொய்கள் அனைத்தையும் தன்னிடம் மொத்தமாக வைத்துள்ளதாகக் கூறுகிறார். (போட்கனேன் வந்துநின்றேன்) – என்னுடைய நிலையை ஆராயும்போது, "உண்மை பேசுபவர்கள் மட்டுமே எம்பெருமானை அண்டலாம்", என்று எம்பெருமானை விட்டு அகலச் செல்வதே நலமாகும். ஆனால் நான் அதனைச் செய்யாமல், எந்தவிதமான வெட்கமும் இன்றி பெரியபெருமாள் முன்பாக நிற்கிறேன். (நின்றேன்) – பலவிதமான ஸாதனங்களைக்

கடைபிடிப்பவர்கள் பலனுக்காக பெரியபெருமாள் முன்பாக நிற்பது போன்று, எந்தவிதமான ஸாதனங்களையும் இயற்றாத நான் அவன் முன்பாக நின்றேன். (போட்கனேன்) – போட்கமை என்றால் கதியற்ற நிலை.

வ்யாக்யானம் – "இப்படிப்பட்ட நீர் சமதமாத்யுபேதர் சேரும் நம்பக்கலிலே வருவானென்? விரிகுழலார்பக்கல் போகீர்" என்ன, (ஐயனே) – என்னால் அழித்துக்கொள்ளவொண்ணாத நிருபாதிக ஸம்பந்தமடியாக வந்தேன்; எத்தனையேனும் அநீதியிலே கைவளர்ந்த ப்ரஜைகளுக்கும் மாதாபிதாக்களிருக்குமிடத்தில், பிறர்காணாதபடி புழக்கடையாலே வந்து புகுரலாம்படியிறே ப்ராப்தியிருப்பது. (அரங்கனே) – நம்மை "நிருபாதிக பந்து" என்று அறிந்தது சாஸ்த்ரவாஸனையாலேயோ, ஆசார்யோபதேசத் தாலேயோவென்ன, அவற்றாலன்று. கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளு கிறபடியைக் கண்டு அறிந்தேன். நித்யவிபூதியிலிருப்பைக் காற்கடைக் கொண்டு, அநபிமதமான ஸம்ஸாரத்திலே ஸம்ஸாரிகளுடைய உஜ்ஜீவனமே ப்ரயோஜனமாகக் கண்வளர்ந்தருளுகிறபடியாலே, இஜ்ஜந்துக்களில் தேவரீர் திருவடிகளுக்கு ஆகாதாரில்லை என்னுமிடத்தையும் இக்கிடைதானே உபதேசிக்கிறதில்லையோ?

விளக்கம் – இதனைக் கேட்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "இப்படிப்பட்ட தாழ்ந்த நிலையில் உள்ள நீவிர், அனைத்து புலன்களையும் சமநிலையில் வைத்துள்ளவர்களால் அடையப்படும் நம்மிடம் ஏன் வரவேண்டும்? நீவிர் விரும்பும் விரிந்த கூந்தல் கொண்ட பெண்களிடமே செல்ல வேண்டியதுதானே?", என்றார். இதற்கு ஆழ்வார் பதில் அளிக்கிறார். (ஐயனே) – என்னால் அழித்துக்கொள்ள இயலாதாபடி இயற்கையாகவே எனக்கு உன்னுடன் தொடர்பு உள்ளதே, அதனால் வந்தேன். பல தகாத செயல்களைச் செய்தபோதிலும் தாய்தந்தையர்களைக் காண பின்வாசல் வழியாக, மற்றவர்கள் காணாதபடி வருவது இயல்பன்றோ? (அரங்கனே) – இதனைக் கேட்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "நீவிர் நம்மை உமது இயற்கையான உறவினன் என்கிறீர். இதனை நீவிர் அறிந்துகொண்டது சாஸ்த்ரங்கள் மூலமா அல்லது ஆசார்யனின் உபதேசத்தாலா?", என்று வினவினான். இதற்கு ஆழ்வார், "இவை இரண்டாலும் அல்ல. அழகியமணவாளா! நீ பெரியகோயிலில் சயனித்துள்ளதைக் கண்டு நான் அறிந்து கொண்டேன். பரமபதத்தில் உன்னை போற்றிக் கொண்டாடியபடி இருப்பர்; ஆயினும்

அதனைப் பெரிதும் எண்ணாமல், வெறுக்கின்றவர்களும் உள்ள இடமான ஸம்ஸாரிகளின் பூமியில், இவர்களைக் கரையேற்றுவதே பேறாக எண்ணி அல்லவோ நீ இங்கே கண்வளர்கிறாய்? இதன் மூலம் இந்த ஸம்ஸாரிகளில் உனக்கு ஆகாதவர்கள் என்று யாரும் இல்லை என்பதை உன்னுடைய இந்த சயனக்கோலம் அல்லவோ உரைக்கிறது?

வ்யாக்யானம் – நம்பக்கலிலே வந்து நீர் கொள்ளப்புகுகிற கார்யமென் என்ன, (உன்னருளென்னும் ஆசைதன்னால் வந்து நின்றேன்) – தேவரீர் க்ருபையின் பக்கல் எனக்குண்டான நசையாலே வந்தேன். தந்தாமை முடியச்சூழ்த்துக் கொண்டவர்களுக்கும் தேவரீர் க்ருபையில் நசைபண்ணலாம்படியிறே தேவரீர் க்ருபையிருப்பது. ப்ரஹ்மாஸ்த்ரத்தாலே அழியச் செய்ய தேவரீர் உத்யோகித்த தசையிலும் காகத்துக்கும் திருவடிகளிலே புகுரலாம்படியிறே தேவரீர் க்ருபை இருப்பது. வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் என்னக்கடவதிறே.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "நீவிர் நம்மிடம் வந்து என்ன பெறப் போகிறீர்?", என்றான். இதற்கு ஆழ்வார் விடை அளிக்கிறார். (உன்னருளென்னும் ஆசைதன்னால் வந்து நின்றேன்) – உன்னுடைய க்ருபையைப் பெறவேண்டும் என்று எனக்கு உண்டான ஆசை காரணமாகவே உன்னிடம் வந்தேன். ஒருவன் தான் அழிந்துபோகும் அளவிற்கான தீமையைத் தனக்குத்தானே வரவழைத்துக் கொண்டாலும், அவன் கூட பெரியபெருமாளின் கருணையைப் பெறவேண்டும் என்று ஆசைப்படும் அளவிற்கு அல்லவோ உன்னுடைய கருணை உள்ளது? ப்ரஹ்மாஸ்த்ரம் கொண்டு நீ காகாஸுரனை அழிக்க முற்பட்டபோதும், அவன் உன்னுடைய திருவடிகளில் வந்து சரணம் புகும்படியாக அல்லவோ உன்னுடைய கருணை உள்ளது? இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-35) - வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் – சரணம் அடைந்த காகாஸுரனை இராமன் தனது க்ருபையால் காப்பாற்றினான் – என்றது காண்க.

வ்யாக்யானம் – "உம்முடைய பக்கல் நன்மைகளில்லாமையும் அறிந்து, தீமைகளுண்டென்னுமிடமும் அறிந்து, நம்மோட்டை ஸம்பந்தமும் அறிந்து

வந்தீரல்லீரோ? அதிகாரிகளில் இப்படிப்பட்ட உம்மையன்றோ நாம் தேடியிருக்கிறது. இதுதான் மெய்யோ?" என்ன, (பொய்யனேன்) – நிரூபித்தவிடத்தில் இதுவும் பொய்யாயிருந்ததென்கிறார். ஸ்வதஸ்ஸர்வஜ்ஞரான தேவரீர் ஸந்நிதியிலே மெய்யென்று சொல்லலாவது என்பக்கலுண்டோ என்கிறார். (பொய்யனேன்) – "தீமைகள் எனக்கில்லாதன இல்லை" என்று சொன்ன இவ்வார்த்தைகள் அஹமஸ்ம்ய பராதாநாமாலய: என்னும் இவ்வார்த்தை, இவ்வதிகாரத்துக்கு தேவரீர் ஸந்நிதியில் விலைசெல்லும் வார்த்தையென்று சொன்னேனித்தனை; என் தண்மை என் நெஞ்சில் பட்டுச் சொன்னேனல்லேன். (பொய்யனேனே) – ஸ்வதஸ்ஸர்வஜ்ஞரான தேவரீர் இப்பொய் தன்னை மெய்யென்று ப்ரமிக்கும்படியன்றோ நான் பொய் சொன்னபடி. தாம் கீழ் "ஆதரம் பெருகவைத்த அழகன்" என்றும், "கண்ணினை களிக்குமாறே" என்றும், "பனியரும்புதிருமாலோ" என்றும், "உடலெனக்குருகுமாலோ" என்றும் சொன்ன பொய் மாலைகளை அநுஸந்தித்து பொய்யனேன் பொய்யனேனே என்கிறார். மெய்கொண்டு பரிமாறவேண்டும் தேவரீர் திருவடிகளிலே எத்தனை பொய்சொன்னேன் என்கிறார்.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "உம்மிடம் சிறிதளவும் நல்லசெயல்கள் என்பது இல்லை என்பதையும், தீமைகள் மட்டுமே உண்டு என்பதையும் நீவிர் அறிந்தீர். மேலும் உமக்கும் நமக்கும் உள்ள உறவை அறிந்து கொண்டு எம்மிடம் வந்துள்ளீர். உம்மைப் போன்ற அதிகாரிகளைத் தேடியபடியே இங்கு நாம் கண்வளர்கிறோம். இவ்விதம் நீவிர் நம்மை நாடி வந்தது உண்மைதானே?", என்றான். இதற்கு ஆழ்வார் விடை தருகிறார். (பொய்யனேன்) – நன்றாக ஆராய்ந்து பார்த்தால் இவ்விதம் தான் வந்ததும் பொய்யே என்கிறார். அனைத்தையும் உள்ளது உள்ளபடி அறிந்துள்ள உனக்கு முன்பாக மெய் என்று கூறிக்கொள்ளும்படி என்னிடம் ஏதாவது ஒன்றாவது உண்டோ? இல்லை என்கிறார். (பொய்யனேன்) – "என்னிடம் தீமைகள் என்பதில் இல்லாததே கிடையாது" என்று நான் கூறியது ஏன் என்றால், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - அஹமஸ்ம்ய பராதாநாமாலய: - நான் குற்றங்களுக்கு இருப்பிடமாக உள்ளேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, உன் முன்பாக உரைக்கும்போது அதற்கான பலன் உண்டு என்று சாஸ்த்ரங்கள் கூறுவதால் கூறினேன். என்னுடைய தாழ்ச்சியை நான் உணர்ந்த காரணத்தால் அவ்விதம் கூறவில்லை. (பொய்யனேனே) – அனைத்தையும் அறிந்தவனாகிய நீ கூட நான் உரைத்ததை மெய் என்று எண்ணி மயங்கும்படியாக

அல்லவோ நான் பொய்களை உரைத்தேன்? இதுவரைத் தான் தொடுத்த பொய் மாலைகளைக் கூறுகிறார்:

- திருமாலை (16) - ஆதரம் பெருகவைத்த அழகன்
- திருமாலை (17) - கண்ணினை களிக்குமாறே
- திருமாலை (18) – பனியரும்புதிருமாலோ
- திருமாலை (19) – உடலெனக்குருகுமாலோ

மேலே கூறிய அனைத்தும் பொய் என்பதை உணர்த்தும்விதமாக "பொய்யனேன் பொய்யனேனே" என்கிறார். உண்மையை மட்டுமே கூறியபடி வந்துவிழ வேண்டிய உனது திருவடிகளின் கீழே எத்தனை பொய்களை உரைத்துள்ளேன் என்று வியக்கிறார்.

34. உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவான் உணர்வு ஒன்று இல்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே கோலம் பூண்டு
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம் உடன் இருந்து அறிதி என்று
வெள்கிப்போய் என்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேனே.

பொருள் – என்னுடைய உள்ளத்தில் எப்போதும் நிலையாக நிற்கின்ற பெரியபெருமாளான உன்னை ஆராதனை செய்வதற்கு ஏற்ற ஞானம் எனக்குச் சிறிதும் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட நான் மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டு உனக்குத் தொண்டு செய்கின்ற வேஷம் பூண்டு நிற்கிறேன். இப்படியாக உன் முன்பாக நிற்பவர்களின் சிந்தனை முழுவதும் நீ அறிவாய் என்று தெரிந்த நான், எனது வேஷம் காரணமாக வெட்கம் அடைந்து, உன்னை விட்டு அகன்று சென்று, எனது விலா எலும்பு ஒடிந்து போகும்படியாகச் சிரித்தேன்.

அவதாரிகை – "ஜ்ஞாந ப்ரஸர த்வாரமான மநஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணுமவனாய், நம் குற்றங்களை நேராக அறியும் ஸர்வஜ்ஞனான இவனைப் பொய்யனான நான் கிட்டி

அவத்யத்தை விளைத்து என்ன காரியம் செய்தேன்", என்று லஜ்ஜித்து, "இதிற் காட்டில் நம் குற்றம் அறிகைக்கு ஜ்ஞானமின்றிக்கே இருக்கிற ஸம்ஸாரிகளோடே முடிந்துபோகையே நன்று" என்று பெரியபெருமாள் திருவடிகளிலே நசையற்று அகலுகிறார்.

விளக்கம் – ஆழ்வார் தனது மனதில், "ஞானம் வெளிப்படும் இடமான மனதில் எப்போதும் இவன் வசிக்கிறான். இப்படி இருப்பதால் நமது குற்றங்கள் என்ன என்பதைத் தானாகவே நேரடியாக இவன் அறிந்துகொள்கிறான். இவ்விதம் அனைத்தும் அறிந்தவனாகிய இவனை, பொய்களை மட்டுமே அறிபவனாகிய நான் அணுகினேன். இதனால் இவனுக்குத் தோஷம் விளையும்படியாக அல்லவோ நான் செய்தேன்?", என்று வெட்கம் கொண்டார். மேலும், "இப்படி நான் இவனுக்குத் தோஷங்களை உண்டாக்குவதை விடுத்து, தம்முடைய குற்றங்கள் என்ன என்பதை அறிவதற்கான ஞானம் இன்றி இருக்கும் ஸம்ஸாரிகளுடன் சேர்ந்து நின்று அறிவதே சிறந்தது", என்று எண்ணியபடி பெரியபெருமாள் திருவடிகளிலே சேர்கின்ற ஆசையைத் தவிர்த்துச் செல்கிறார்.

வ்யாக்யானம் – (உள்ளத்தே) – நினைவுக்கு வாய்த்தலையான நெஞ்சிலே இருக்குமவனாய்த்து. புறம்புள்ளானொருவனாகிலிறே கண்ணால் கண்டதுக்கு அவ்வருகு அறியான் என்றிருக்கலாவது. (உறையும்) – ஸதாஸந்நிஹிதனாயிருக்கை போக்குப் புகுதியுண்டாகிலிறே போனபோதாக மூலையடியே நடக்கலாவது. (மாலை) – ஸர்வாதிகனை. ஆத்மா உள்ளே வர்த்தியா நிற்கச்செய்தே ஸர்வத்தையும் அறியமாட்டான்; ஆகாசம் வ்யாபியா நிற்கச்செய்தே வ்யாப்யத்தைக் குறித்து அதுக்கு நியந்த்ருதையில்லை; இவன் ஸர்வஜ்ஞனாய் ஸர்வநியந்தாவாயிருக்கும். (உள்ளுவான் உணர்வு) – நம்முள்ளே வர்த்தியாநின்றான் என்று அநுஸந்திக்கைக்கீடான ஜ்ஞாநமில்லை. (உணர்வொன்றில்லா) – ஆத்மஜ்ஞானமுண்டாகிலிறே பகவத் ஜ்ஞாநமுண்டாவது.

விளக்கம் – (உள்ளத்தே) – எண்ணங்கள் விளைகின்ற இடமான நெஞ்சத்தில் இருப்பவனாக பெரியபெருமாள் உள்ளான். இவன் வெளியில் இருப்பவன் என்றால்,

கண்ணிற்குப் புலப்படாத உள்ளத்தில் இருப்பதை இவன் அறியமாட்டான் எனலாம். ஆனால் உள்ளேயே இருப்பதால் அனைத்தையும் அறிகிறான். (உறையும்) – நெஞ்சை விட்டு சற்றும் அகலாதபடி எப்போது வாழ்பவன். சில நொடிகளாவது இவன் அங்கிருந்து அகன்றான் என்றால், அப்போது நமது விருப்பப்படி நடந்து கொள்ளலாம், அதுவும் இயலாதபடி எப்போதும் உள்ளவன். (மாலை) – அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தவனை. சரீரத்திற்குள்ளேயே ஆத்மா உள்ளபோதிலும், அந்த ஆத்மா உள்ளே இருக்கின்ற அனைத்தையும் அறியமாட்டான்; ஆகாயம் எங்கும் பரவியுள்ளபோதும், அந்தப் பொருள்கள் அனைத்தையும் அதனால் நியமிக்க இயலாது. இவனை அனைத்தும் அறிந்தவனாக, அனைத்தையும் நியமிப்பவனாக உள்ளான். (உள்ளுவான் உணர்வு) – நமக்குள்ளேயே அவன் அந்தர்யாமியாக எப்போதும் உள்ளான் என்று அறிவதற்கான ஞானம் நம்மிடம் இல்லை. (உணர்வு ஒன்று இல்லா) – ஆத்மாவைப் பற்றிய ஞானம் ஏற்பட்டால் அல்லவோ எம்பெருமானைப் பற்றிய ஞானம் உண்டாகும்? ஆத்மாவைப் பற்றிய ஞானமே நமக்கு இல்லையே!

வ்யாக்யானம் – (கள்ளத்தேன்) – ஜ்ஞாநஹீநனென்று என்னை நாட்டார் அறியாமல் பகட்டி மறைத்துப்போந்தேன். நமக்கோர் ஆத்ம குணமில்லையென்று சொல்லும்போது என் அந்தராத்மா அறிய இல்லை என்பன்; அத்தாலே அவர்களும், இவனுக்கு ஆத்மவிஷய ஜ்ஞாநமும் பரமாத்ம விஷய ஜ்ஞாநமும் உண்டென்று நினைத்திருக்கும்படியாக அவர்களையும் மறைத்துப்போந்தேன். அடியில் அநாத்மகுணமுண்டாயிருக்கவிறே இல்லையென்பது, அக்களவுக்கு உன்னையும் பெருநிலையாக நிறுத்திக் களவு கண்டு போந்தேன். (நானும் தொண்டாய்) – ஒரு நன்மையுமின்றிக்கே இருக்கிற நானும், ஆத்மகுணோபேதர் அதிகரிக்கும் உன்னுடைய அடிமையிலே அந்வயியாநின்றேன். ஆர் செய்யக் கடவ அடிமையிலே ஆர் அந்வயிக்கிறார்? சண்டாளன் வேதாத்யயநத்தை அதிகரித்தால் நாட்டார் கர்ஹிப்பார்களென்று, ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே என்று தானும் அருவருத்திருக்குமிறே; அப்படியே படுகிறார். (தொண்டுக்கே கோலம் பூண்டு) – உன்னைக் களவுகண்டு விடுமதன்றிக்கே, ஸாத்விகர் சிரஸாவஹிக்கும்படி ரூப நாமங்களை தரித்துப்போந்தேன். பரப்புமாறத் திருநாமத்தை இடுவது, ஸ்ரீபஞ்சாயுதங்களை தரிப்பது, அஹ்ருத்யமாகத் திருநாமத்தைச் சொல்லுவது, உன் போக்யதையைச் சொல்லுவது, யமாதிகள் தலையில் என் கால் என்பதாய்,

நானுமொருவனாய் பரோபதேசம் பண்ணுவதாய், எத்தனைசெய்தேன், எத்தனை ஜல்பித்தேன் என்கிறார். (உள்ளுவாருள்ளிற்றெல்லாமுடனிருந்தறிதியென்று) – நினைவுக்கு வாய்த்தலையைப் பற்றியிருக்கையாலே அநுஸந்திப்பார் அநுஸந்திக்குமதெல்லாவற்றையும் கூடவிருந்து அறிதி என்று. ஏகோ அஹமஸ்மீதி ச மந்யஸே த்வம் இத்யாதி. ஸர்வஜ்ஞனாய் ஸர்வநியந்தாவாயிருக்கிற நீ உடனே இருக்கவே நான் இவ்வமணக் கூத்தெல்லாம் அடித்தேன் என்கிறார்.

விளக்கம் – (கள்ளத்தேன்) – நான் அறிவில்லாதவன் என்று மற்றவர்கள் அறிந்து கொள்ள இயலாதபடி அனைத்தும் தெரிந்தவன் போன்று வெளிவேடம் பூண்டேன். அறிவற்றவர்களிடம் நான் பேசும்போது, "எனக்குள்ளே இருக்கின்ற பெரியபெருமாள் சாட்சியாக என்னிடம் தீய குணங்கள் எதுவும் இல்லை", என்று கூறுவேன். அறிவுள்ளவர்களிடம் நான் பேசும்போது, "எனக்குள்ளே இருக்கின்ற பெரியபெருமாள் சாட்சியாக என்னிடம் நல்ல குணங்கள் எதுவும் இல்லை", என்று கூறுவேன். இப்படியாக நான் பேசுவதைக் கண்டு பலரும், "இவனுக்கு ஆத்மாவைப் பற்றிய ஞானமும், பரமாத்மாவைப் பற்றிய ஞானமும் மிகுதியாகவே உள்ளன", என்று வியக்கும் அளவிற்கு அவர்களை ஏமாற்றியபடி உள்ளேன். என்னுடைய பிறப்பிலிருந்தே என்னிடம் தீய குணங்கள் மட்டுமே நிறைந்திருக்க, நீ பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அவர்களை இப்படி ஏமாற்றுகிறேன். (நானும் தொண்டாய்) – எந்தவிதமான நல்ல செயல்களும் இல்லாத நான், ஆத்மகுணங்கள் நிரம்பியவர்கள் மட்டுமே செய்வதாகிய உன்னுடைய கைங்கர்யம் என்பதைச் செய்ய முற்படுகிறேன். யாருக்கு மட்டுமே உரிமை உள்ள கைங்கர்யங்களை யார் செய்வது என்று ஆராயவில்லை. சண்டாளன் ஒருவன் வேத அத்யயனம் செய்ய முற்பட்டால், காண்பவர்கள் இகழ்வார்கள் என்று கருதி, ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே – அவனது ஆத்மாவே அவனை தூற்றும் – என்னும்படியாக, தன்னைத்தானே நொந்து கொள்வான் அல்லவோ? இப்படியே இவரும் இங்கு கூறியபடி உள்ளார். (தொண்டுக்கே கோலம் பூண்டு) – உன்னுடைய விஷயத்தில் இப்படியாக வேஷம் இடுவது மட்டும் அல்லாமல், ஸத்வ குணங்கள் கொண்ட பலரும் என்னைத் தங்கள் தலையில் தூக்கி வைத்துக் கொள்ளும்படியாக நான் பெயர் வைத்துக் கொண்டுள்ளேன். பன்னிரு திருமண் இட்டுக் கொள்ளுதல், பஞ்சாயுதங்களை பொறித்துக் கொள்ளுதல், மனம் ஒப்பக் கூறாமல் வெளிவேஷத்தின் பொருட்டு உன்னுடைய திருநாமம் கூறுதல், உன்னுடைய இனிமையை நான் மட்டுமே

உணர்ந்தது போன்று உரைத்தல், யமன் ஆகியவர்களின் தலைகளின் என் கால்களை வைக்கும் அளவிற்கு நான் உயர்ந்தவன் என்று கூறுதல், மற்றவர்களுக்கு உபதேசம் செய்தல் – இப்படியாக எத்தனை தீய செயல்களைச் செய்தேன், எத்தனை உளறினேன் என்கிறார். (உள்ளுவான் உள்ளிற்று எல்லாம் உடன் இருந்து அறிதி என்று) – நினைவுகளின் பிறப்பிடமாக உள்ளத்திலேயே நீ உள்ளதால், நினைப்பவை அனைத்தையும் உடனேயே அறிகிறாய் என்று தெளிந்தேன். ஏகோ அஹமஸ்மீதி ச மந்யஸே த்வம் – சகுந்தலை துஷ்யந்தனிடம், "ராஜன்! நான் மட்டுமே உள்ளேன் என்று நீ நினைக்கிறாய். ஆனால் உனது இதயத்தில் உள்ள எம்பெருமானை நீ அறியவில்லை – என்றது காண்க. அனைத்தையும் அறிந்தவனாக, அனைத்தையும் நியமிப்பவனாக உள்ள நீ என்னுடன் நெருக்கமாக உள்ளபோதிலும், நான் இது போன்ற அம்மணக் கூத்துகளைச் செய்தேன்.

வ்யாக்யானம் – (வெள்கிப்போய்) – தம்முடைய க்ருத்ரிமத்வத்தையும், அவனுடைய ஸர்வஜ்ஞத்வத்தையும், அவனுடைய ஸந்நிதியையும் அநுஸந்தித்து லஜ்ஜாவிஷ்டரானார். (போய்) – ஸந்நிதியிலே லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டு நிற்கமாட்டாமையாலே கடக்கப் போந்தார். அவனில்லாத இடம் தேடிப் போகிறாரிறே இவர். பாஹ்யவிஷயங்களிலே லஜ்ஜித்தால் அங்குநின்றும் அது இல்லாத இடம் தேடிப் போவரே. அவ்வாஸனையாலே போகிறாராய்த்து இங்கும். (என்னுள்ளே) – இவ்வர்த்தத்தில் ஸம்ஸாரிகள் இவர்க்குக் கூட்டல்லர்கள்; பெரியபெருமாள் பக்கல்நின்றும் அகன்றாராய் நின்றார்; அவர் ஸந்நிதியுண்டானாலும் அவர் இதுக்குக் கூட்டல்லர்; இனி இவர் தம்மிலே சிரிக்குமத்தனையிறே; தம்முடைய அபஹாஸ்யதைக்குத் தாமே ஸஹ காரியாமத்தனையிறே. (விலவறச் சிரித்திட்டேனே) – விலாக்கள் ஒடியும்படி சிரித்தாராய்த்து. அபஹாஸ்யதைக்கு அவதியுண்டானாலிறே சிரிப்புக்கு அவதியுண்டாவது. அகல நினைத்தவராகையாலே, தீப்பாய்வார், வெற்றிலை தின்று பூச்சூடித் தீப்பாயுமாபோலே சிரிக்கிறாய்த்து. அர்ஜுநன் இவ்விஷயத்தில் நசை கிடக்கையாலே சோகித்துக் கைவாங்கினான்; இவர் நசையற நீங்குகிறாராகையாலே சிரித்துக் கைவாங்குகிறார்.

விளக்கம் - (வெள்கிப்போய்) – தன்னுடைய கபடத்தன்மை, அவனது அனைத்தையும் அறிந்த தன்மை, அவன் தனக்கு மிகவும் அருகில் தனது உள்ளத்திலேயே இருக்கும்

நிலை ஆகியவற்றை எண்ணி வெட்கம் கொண்டார். (போய்) – இப்படியாக வெட்கம் கொண்ட காரணத்தினால், பெரியபெருமாள் திருமுன்பாக நிற்க இயலாததால், அவனை விட்டு அகன்றார். ஒரு சில விஷயங்களை குறித்து வெட்கம் கொண்டால், அந்த விஷயங்கள் இல்லாத இடங்களைத் தேடிப்போவது வழக்கம் அல்லவோ? இது போன்று இவரும் பெரியபெருமாள் இல்லாத இடமாகத் தேடிச் செல்கிறார். (என்னுள்ளே) – இப்படியாக இவர் தன்னை உணர்ந்து சிரிப்பதன் காரணமாக, இவருடன் மற்ற ஸம்ஸாரிகள் சேர்ந்து சிரிக்க மாட்டனர்; பெரியபெருமாளை விட்டு அகன்று சென்றதாக இவர் எண்ணிக் கொண்டதால், அவனும் இவருடன் சேர்ந்து சிரிக்கமாட்டான்; அவன் முன்பாக நின்றபடியே சிரித்தாலும், அவன் சேர்ந்து சிரிக்கமாட்டான். ஆகவே இவர் தனக்குத்தானே சிரிக்கும்படியாக ஆனது. தன்னுடைய சிரிக்கத்தக்க நிலையை இவர் உணர்ந்த காரணத்தினால், சேர்ந்து சிரிப்பவர்கள் யாரும் இன்றி, இவர் சிரிப்பதற்கு இவரே துணையாக நின்றார். (விலவறச் சிரித்திட்டேனே) – விலாவில் உள்ள எலும்புகள் உடைந்து போகும்படியாகச் சிரித்தார். இவருடைய கபடத்தனங்களுக்கு ஓர் நல்லை இருந்தால் அல்லவோ இவரது சிரிப்புக்கு ஓர் எல்லை இருக்கும்? தீக்குளிக்க எண்ணுபவர்கள் வெற்றிலை தின்று, மலர்களைச் சூடித் தீக்குளிப்பது வழக்கம். இது போன்று பெரியபெருமாளை விட்டு அகல நினைக்கும் இவர், சிரிக்கிறார். க்ருஷ்ணன் கூறிய உபாயங்கள் பலவற்றையும் கேட்ட அர்ஜுனன், அவற்றின் கடினத்தை எண்ணி சோகம் கொண்டான். ஆனாலும், க்ருஷ்ணன் தனக்கு உதவுவான் என்ற எண்ணம் கொண்ட காரணத்தினால், ஆசை விலகாமல் சோகத்துடன் பின்வாங்கினான். இவரோ, பெரியபெருமாளை விட்டு அகலவேண்டும் என்ற எண்ணம் கொண்டதால் மகிழ்வுடன் சிரித்தபடி பின்வாங்குகிறார்.

35. தாவி அன்று உலகம் எல்லாம் தலை விளாக்கொண்ட எந்தாய்

சேவியேன் உன்னை அல்லால் சிக்கெனச் செங்கண் மாலே

ஆவியே அமுதே என்தன் ஆருயிர் அனைய எந்தாய்

பாவியேன் உன்னை அல்லால் பாவியேன் பாவியேனே.

பொருள் – முன்பு ஒரு காலம் பலிச்சக்ரவர்த்திடம் உலகம் அனைத்தும் சிக்கியபோது, அவை அனைத்தையும் கடந்து சென்று, அனைவரின் தலைகளிலும் திருவடிகள்

படும்படியாக நின்று அளந்த எனது தந்தையே! உன்னைத் தவிர வேறு எந்த ஒரு வஸ்துவையும் நான் வணங்கமாட்டேன். சிவந்த கண்கள் கொண்ட அழகியமணவாளா! எனது உயிரே! எனக்கு என்றும் அமிர்தம் போன்றவனே! என்னுடைய உயிரின் ஆத்மாவாக உள்ளவனே! பெரும் பாவியாகிய நான் உன்னைத் தவிர வேறு யாரையும் எண்ணமாட்டேன்.

அவதாரிகை – இவர் இப்படி கைவாங்கினவாறே பெரியபெருமாள், "இவரை இழந்தோமாகாதே" என்று நொந்து, "ஆழ்வீர்! நீர் அகலநினைத்ததுக்கு ஹேதுவென்?" என்று கேட்டருள, "ஸர்வஜ்ஞரான தேவரீர் திருமுன்பே க்ருத்ரிமங்களைச் சொல்லி, உம்மைக் கிட்டி அவத்யாவஹனாவதிற்காட்டில் என் அகவாய் அறியாத ஸம்ஸாரிகளுக்கும் நானுமாயிருக்கப் பார்த்தேன்" என்ன; "நீர் கிட்டின ப்ரயோஜநம் அழகிது, நாம் தோஷத்தில் அவிஜ்ஞாதா, அவர்கள் தோஷத்தில் ஸர்வஜ்ஞர், நாம் குண ஸர்வஜ்ஞர். ஆகையாலே நம் வாசல் ஸர்வாதிகாரங்காணும்", என்ன; "இது உக்திமாத்ரமேயோ? அநுஷ்டானமும் உண்டோ?" என்ன; த்ரைவிக்ரமாபதாநம் கேட்டறியீரோ? வஸிஷ்ட சண்டாள விபாகமற எல்லார் தலையிலும் நம் கால் பொருந்தினபடி அறியீரோ?" என்று சீலாதிக்யத்தையும் தன் செல்லாமையையும் காட்டி ஸமாதாநம் பண்ண, ஸமாஹிதராகிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் ஆழ்வார் பெரியபெருமாளை விட்டு அகல முனைவது பற்றிக் கூறப்பட்டது. இவர் இப்படித் தன்னை விட்டு அகல முனைவதைக் கண்ட பெரியபெருமாள், "இவரை நாம் இழந்து நிற்போமோ?", என்று வருத்தம் கொண்டான். உடனே அவன் ஆழ்வாரிடம், "ஆழ்வாரே! நீவிர் நம்மை விட்டு அகல எண்ணுவதற்கு என்ன காரணம்?', என்றான். உடனே ஆழ்வார், "பெரியபெருமாளே! அனைத்தும் அறிந்தவனாக உள்ள உன் முன்பாக நின்று, பலவிதமான பொய்களை உரைத்து, உனக்குத் தாழ்வுகளை தேடித்தர நான் விரும்பவில்லை. ஆகவே எனது உள்ளத்தில் என்ன இருக்கிறது என்று அறியாமல் உள்ள ஸம்ஸாரிகளுடனேயே நான் இன்பமாக இருப்பது என்று முடிவுசெய்தேன்", என்றார். இதனைக் ஏட்ட பெரியபெருமாள், "நீவிர் அடைந்த நமது நன்மைகளை அறிவீரோ? நாம் யாருடைய தோஷத்தையும் காண்பதற்கு அறியாதவன், ஆனால் ஸம்ஸாரிகள் அனைவரது தோஷங்களையும் அறிந்தவர்கள்; நாம் உம் போன்றவர்களின் குணங்களை நன்கு அறிவோம்; ஆகையால் நம்மிடம் வந்து

நிற்பதே உம் போன்றவர்களுக்கு ஏற்றது", என்றான். இதற்கு ஆழ்வார், "நீ இப்படிக் கூறுவது பேச்சளவில் மட்டும்தானா? அல்லது வேறு எங்காவது உனது செய்கை மூலம் இதனை உணர்த்தியுள்ளாயா?", என்றார். உடனே பெரியபெருமாள், "த்ரிவிக்ரமனைப் பற்றி நீவிர் அறியவில்லையோ? உயர்ந்தவர்கள் தொடங்கி சண்டாளர்கள் தலைகள் உட்பட அனைவரின் தலைகள் மீதும் எந்தவிதமான வேறுபாடும் காணாமல் நாம் நமது திருவடியை வைத்தோமே! அதனை அறியவில்லையோ?", என்றான். இப்படியாகத் தனது எளிமையை வெளிப்படுத்தி, ஆழ்வார் தன்னை விட்டு அகன்றான் தன்னால் அதனைத் தாங்க இயலாது என்பதையும் உணர்த்து ஆழ்வாரைச் ஸமாதானம் செய்கிறான். ஆழ்வாரும் ஸமாதானம் ஆகிறார்.

வ்யாக்யானம் – (தாவி) உங்கள் தலையிலே நாம் காலை வைக்கப்புகா நின்றோமென்னில்; துர்மாந வாஸநையாலே ஸம்வதியாதே ஆணையிடுவர்களிறே; "திருவாணை நின்னாணை" என்று ஸாத்விகர் திருவடிகளை லபிக்கைக்கை மறுக்கவொண்ணாதபடி இடும் ஆணையை, திருவடிகளைக் கிட்டாமைக்கு இருவர்களாய்த்து, இவர்கள் அறியாதபடி அநாயாஸேந எல்லார் தலையிலும் திருவடிகள் பட வளர்ந்தான். தாவுதல் – கடத்தல். (அன்று) – மஹாபலியாலே அபஹ்ருதமாய், தன்னுடைய சேஷித்வமும், ஸம்ஸாரிகளுடைய சேஷத்வமும் அழிந்துகிடந்த அன்று. (உலகமெல்லாம்) – மஹாபலியால் அபஹ்ருதமான அளவன்றியே ப்ரஹ்மலோக பர்யந்தமாக ஸகலலோகங்களையும், வஸிஷ்ட சண்டாள விபாகமற எல்லார் தலையிலும் திருவடிகள் படும்படி வளர்ந்தபடி. (தலைவிளாக்கொண்ட) – ரக்ஷ்யத்தினுடைய அளவல்லவாய்த்து ரக்ஷகனுடைய பாரிப்பு. அத்யத்திஷ்டத்தசாங்குலம் என்னக்கடவதிறே. (எந்தாய்) – "அமரர்சென்னிப்பூவினை" என்று நித்யஸூரிகள் சிரஸாவஹிக்கும் திருவடிகளை விமுகரான ஸம்ஸாரிகள் தலையிலே வைக்கைக்கு ஹேதுவென் என்னில்; அவர்ஜநீய ஸம்பந்தமென்கிறார். தம் தலையிலும் திருவடிகளை வைக்கையினாலே "எந்தாய்" என்கிறார். உறங்குகிற ப்ரஜையைக் கட்டிக்கொண்டு கிடக்கும் தாயைப்போலே, அன்று தன் பேறாகவிறே ரக்ஷித்தது. அன்றறியாத குறைதீர முறையறிந்த இன்று உபகார ஸ்ம்ருதியாலே "எந்தாய்" என்கிறார். ஸம்ஸாரிகள் இன்றும் அறிந்திலர்களே; அவர்களுக்குமாகத் தாம் உகக்கிறாரிறே.

விளக்கம் – (தாவி) – த்ரிவிக்ரமனாக நின்றபோது ஸம்ஸாரிகளிடம், “உங்கள் தலையில் நான் திருவடியை வைக்கப்போகிறேன்”, என்று கூறிய பின்னர் வைத்திருந்தால், எல்லையற்ற காலமாக நிறைந்துள்ள அஹங்காரம் முதலானவை காரணமாக இவர்கள், “அவ்விதம் வைக்கவேண்டாம்”, என்று கட்டளை இட்டிருப்பார்கள். திருவாய்மொழி (10-10-2) - திருவாணை நின்னாணை – என்று கூறுவது போன்று நல்லவர்கள் இவனது திருவடிகளைப் பெறுவதற்காக எவ்விதம் மறுக்க இயலாத ஆணை இடுவார்களோ அது போன்று இவர்கள் தடுப்பதற்கு ஆணை இடுவார்கள். எனவேதான் யாரும் அறியாதபடி, எந்தவிதமான பெருமுயற்சியும் எடுக்காமல், மிகவும் சுலபமாக, அனைவரின் தலைகளிலும் திருவடிகள் படும்படியாக வளர்ந்தான். தாவுதல் என்றால் கடந்து வளர்தல். (அன்று) – மஹாபலி மூலமாக இந்த உலகங்களை அனைத்தும் அபகரிக்கப்பட்டதால், தன்னுடைய எஜமானத்தன்மை, ஸம்ஸாரிகளின் தொண்டு புரியும் தன்மை ஆகியவை அழிந்து காணப்பட்ட அன்று. (உலகம் எல்லாம்) – மஹாபலியால் அபகரிக்கப்பட்ட மூன்று உலகங்கள் மட்டும் அல்லாமல், ப்ரஹ்மலோகம் முடிய உள்ள அனைத்து உலகங்களையும் அளந்து. எப்படி அளந்தான் என்றால், உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்னும் வேறுபாடு காணாமல், அனைவரின் தலைகளிலும் தனது திருவடிகள் படும்படியாக வளர்ந்தான். (தலைவிளாக்கொண்ட) – காக்கப்படும் பொருள்களின் அளவைக் காட்டிலும், அவற்றைக் காப்பவனின் பாரிப்பு அதிகம். புருஷஸூக்தம் – அத்யத்திஷ்டத்தசாங்குலம் – அனைத்து திசைகளிலும் சூழ்ந்து எங்கும் வ்யாபித்து – என்றது காண்க. (எந்தாய்) – திருக்குறுந்தாண்டகத்தில் (6) அமரர்சென்னிப்பூவினை என்று கூறும்படி நித்யஸூரிகள் இவனது திருவடிகளைத் தங்கள் தலையால் தாங்குகின்றனர்; அப்படிபட்ட திருவடிகளை சற்றும் ஈடுபாடு இல்லாத ஸம்ஸாரிகள் தலை ஏன் வைக்கவேண்டும் என்றால், எம்பெருமானால் விட இயலாத ஸம்பந்தமே காரணம் என்கிறார். தன்னுடைய தலையிலும் அவன் திருவடிகளை வைத்த காரணத்தினால் “எந்தாய்” என்றார். உறங்கும் தனது குழந்தையைத் தாயானவள் கட்டிக் கொண்டு உறங்குவது போன்று, ”இந்த ஸம்ஸாரிகளைக் காப்பது நமது பேறு” என்று எண்ணி அல்லவோ அன்று திருவடிகளால் அணைத்துக் காத்தான்? அன்று அவனுக்கும் தனக்கும் இடையே உள்ள உறவுமுறை அறியாத குறை இருந்தது; இன்று அக்குறை தீர்ந்தது; அதற்கு நன்றி செலுத்தும் விதமாக, ”எந்தாய்” என்றார். ஆனால் ஸம்ஸாரிகள் இன்னமும் இவனுடனான அந்த உறவை அறியவில்லை. ஆகவே அவர்களுக்கும் சேர்த்து தான் வியந்து கூறுகிறார்.

வ்யாக்யானம் – (சேவியேனுன்னையல்லால்) – இப்படிப்பட்ட நம்மை விட்டுப் புறம்பே போக நினைப்பானென் என்ன, உன்னுடைய நீர்மை அறியாதே நினைத்தேனத்தனை; உன்னை விட்டுப் புறம்பே போகேன் என்கிறார். உன்னை இழந்தால் நானும் பிறருமிறே உள்ளது; இரண்டிலும் அந்வயிக்கப் பார்த்திலேன். அவை இரண்டுமிறே ப்ரணவத்திலும் மத்யம பதத்திலும் சொல்லுகிறது. சேஷத்வ வாஸனையாலே புறம்புபோனாலும் ஸேவிக்குமத்தனையாய்த்து இவர். இது எத்தனை குளிக்க நிற்கும் என்ன. (சிக்கென) – இது எல்லாக் குளிக்கும் நிற்கும். யாவதாத்மபாவி. ஸர்வேச்வரனைக் குறித்து மா சுச: என்கிறார் இவர்.

விளக்கம் – (சேவியேன் உன்னை அல்லால்) – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "இப்படியான தன்மை உள்ள நம்மை விட்டு நீவிர் அகல எண்ணுவது ஏன்?", என்றான். இதற்கு ஆழ்வார், "உன்னுடைய எளிமையை அறியாத நான் உன்னை விட்டு அகல எண்ணினேன். இதனை இப்போது அறிந்த காரணத்தினால், உன்னை விட்டு இனி அகல முற்படமாட்டேன்", என்றார். உன்னை விட்டு நான் சென்றால் என்னை நானே பார்த்துக் கொள்ளும் திறன் உள்ளவனாக இருக்கவேண்டும் அல்லது என்னைக் காப்பாற்றும் மற்றவர்களுக்கு அடிமையாக இருத்தல் வேண்டும். இந்த இரண்டும் தனக்கு வராது என்கிறார். திருமந்த்ரத்தில் ப்ரணவத்தின் மூலம் மற்றவர்களுக்கு அடிமையாக இருத்தலும், நடுப்பதம் மூலம் தனக்குத் தானே அடிமையாக உள்ளதும் அல்லவோ நீக்கப்படுகிறது? எம்பெருமானுக்கு மட்டுமே அடிமைப்பட்டிருத்தல் என்பது இவருக்கு இயல்பானது ஆகையாலே மற்றவைகளைக் குறித்துக் கூறும்போதும், "ஸேவிக்க" என்று கூறுகிறார். இதனைக் கேட்ட பெரியபெருமாள், "உம்முடைய இந்த நிலை எத்தனை நாட்கள் நீடிக்கும்?", என்றார். இதற்கு விடை அளிக்கிறார். (சிக்கென) – அனைத்துக் காலத்திலும் நிலையாகவே இருப்பேன். எனது ஆத்மா உள்ளவரை என்கிறார். ஸர்வேச்வரனைப் பார்த்து, கீதையில் அவன் கூறிய சொற்களான – மா சுச: - வருந்தாதே – என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் – (செங்கண்மாலே) – இது ஸ்வபாவகதநமன்று, தாத்காலீந விசேஷணம். இவர் "சிக்கென" என்றவாறே, திருவுள்ளம் இவர் பக்கலிலே ப்ரஸந்நமாய், இவர் பக்கல் வ்யாமோஹம் உள்ளடங்காமையாலே கண்வழியே புறப்பட்டு ப்ரகாசிக்கிறபடி.

(செங்கண்மாலே) – வ்யாமோஹத்தாலே குதறிச் சிவந்த கண்களை உடையவனே! ஸ்ரீவிபீஷணாழ்வானைக் குறித்து மஹாராஜர், வத்யதாம் என்றபோது பெருமாள் திருவுள்ளமழிந்தாற்போலேயாய்த்து, இவர் "விலவறச் சிரித்திட்டேன்" என்றபோது பெரியபெருமாள் திருவுள்ளம் அழிந்தபடி; பின்பு திருவடி வார்த்தையாலே அத ராம: ப்ரஸந்நாத்மா என்று பெருமாள் உளரானாற்போலேயாய்த்து, இவர் "சிக்கென" என்ற பின்பு பெரியபெருமாள் உளரானபடி. திருவடி அவதாரத்திலே மா சுச: என்றான்; இவர் அர்ச்சாவதாரத்திலே மா சுச: என்கிறார். (செங்கண்மாலே) – என் ஸ்வரூப லாபத்துக்கு முகம் மலரும்படி வ்யாமுக்தரான தேவரீரையொழிய புறம்பு எங்கே போவேன்?

விளக்கம் – (செங்கண்மாலே) – இந்தப் பதமானது அழகியமணவாளனின் கண்களுக்கு இயல்பாகவே உள்ள சிவந்த தன்மையைக் கூறவில்லை. ஆழ்வார் "சிக்கென" என்று கூறியவுடன், பெரியபெருமாளின் நெஞ்சம் முழுவதும் பயம் நீங்கி ஆழ்வாரின் பக்கம் திரும்பியது. ஆழ்வாரின் மீது உண்டான காதலானது அழகியமணவாளனின் உள்ளத்தின் உள்ளே பூட்டி வைக்க இயலாதபடி, அவன் கண்கள் வழியே அந்தக் காதல் வெளிப்பட்டதை இந்தப் பதம் கூறுகிறது. (செங்கண்மாலே) – பெருங்காதலின் விளைவாக மிகவும் சிவந்த கண்கள் கொண்டவனே! சுக்ரீவன் இராமனிடம் விபீஷணனைக் குறித்துக் கூறும்போது – வத்யதாம் – அழிக்கவேண்டும் – என்றான். இதனைக் கேட்ட இராமனின் திருவுள்ளம் நொறுங்கியது. இது போன்று ஆழ்வார், "விலவறச் சிரித்திட்டேன்" என்னும்போது பெரியபெருமாளின் திருவுள்ளம் நொறுங்கியது. அதன் பின்னர் அனுமன், "விபீஷணனைச் சேர்க்கலாம்", என்று கூறியவுடன் - அத ராம: ப்ரஸந்நாத்மா – இராமனின் திருமுகம் மலர்ந்தது. இதே போன்று ஆழ்வார் "சிக்கென" என்றவுடன், பெரியபெருமாளின் உள்ளம் தெளிந்து முகம் மலர்ந்தது. இராமாவதாரத்தின் போது அனுமன் இராமனிடம், "வருந்தவேண்டாம்", என்றான்; ஆழ்வார் அர்ச்சாவதாரத்தில் பெரியபெருமாளிடம், "வருந்தவேண்டாம்", என்கிறார். (செங்கண்மாலே) – என்னை அடைந்தால் உன்னுடைய திருமுகம் மலர்கிறது. இப்படியாக என் மீது மாறாத காதல் கொண்ட உன்னை விட்டு நான் எங்கே செல்வேன்?

வ்யாக்யானம் – அவ்வளவேயோ? (ஆவியே) – என் ப்ராணனைவிட்டுப் புறம்பே போகவோ? இவர்க்கு ஒருவாயுவிசேஷமன்று ப்ராணன்; "என் திருமகள்சேர்

மார்வனேயென்னும் என்னுடையாவியென்னும்" என்கிறபடியே ஒருமிதுநங்காணும் இவர்க்கு ப்ராணன். (அமுதே) – தாரகமாத்ரமேயாயிருக்கையன்றிக்கே நிரதிசய போக்யமுமாய், சாவாமல் காக்கும் மருந்தாயிருக்குமவனல்லையோ? அவ்வளவேயோ? (என்னாருயிரனைய) – என் ஆத்மாவன்றோ நீ; ஆத்மாவைவிட்டு சரீரத்துக்குப் புறம்பே போக்குண்டோ? (எந்தாய்) – அயோக்யனென்று அகலப்புக்க என்னை நசியாதபடி மீட்ட என் ஸ்வாமியல்லையோ? வத்ஸலனைவிட்டுப் புறம்பே போகவோ? ப்ராணன் விட்டுப் புறம்பே போகவோ? போக்யவஸ்துவை விட்டுப் புறம்பே போகவோ? என்னை நல்வழி போக்குவித்த ஸ்வாமியை விட்டுப் புறம்பே போகவோ? என்கிறார்.

விளக்கம் – அது மட்டும் அல்ல, ஆழ்வார் தொடர்கிறார். (ஆவியே) – என்னுடைய ப்ராணனாகவே உள்ள அழகியமணவாளா! உன்னை விட்டு நான் எங்கே செல்வேன்? வாயுவின் ஒரு நிலையை இவர் தன்னுடைய ப்ராணனாக எண்ணுவதில்லை; திருவாய்மொழி (7-2-9) - என் திருமகள்சேர் மார்வனேயென்னும் என்னுடையாவி யென்னும் – என்று கூறுவது போன்று பெரியபெருமாளையே தனது ப்ராணனாக எண்ணுபவர் இவர்; அவனே இவர்க்கு உயிர். (அமுதே) – என்னைத் தாங்கும் எனது ப்ராணனாய் இருப்பது மட்டும் அல்லாமல், எல்லையில்லாத இனிமை கொண்டவனாக, எனது ஆத்மாவைச் சாகவிடாமல் காப்பாற்றும் மருந்தாகவும் உள்ளாய். அது மட்டும் அல்ல. (என் ஆருயிர் அனைய) – எனது ஆத்மாவாக நீ அல்லவோ உள்ளாய்? ஆத்மாவான உன்னை நீங்கி சரீரமான நான் வாழ வழி உள்ளதோ? (எந்தாய்) – "நான் அயோக்யன்" என்று எண்ணி உன்னை விட்டு அகலப் பார்த்தேன், ஆனால் நான் உன்னைவிட்டு அகன்று சென்று அழிந்துவிடாதபடி மீட்டுக் கொண்ட எனது ஸ்வாமி அல்லவோ நீ? வாத்ஸல்யம் கொண்ட பசுவை விட்டுக் கன்று அகலலாமோ? ப்ராணனை விட்டு உடல் அகலலாமோ? இனிமை அளிக்கவல்ல வஸ்துவை விட்டு அகலலாமோ? என்னை நல்லவழியில் ஈடுபடுத்திய எனது ஸ்வாமியான பெரியபெருமாளை விட்டு அகலலாமோ? அப்படி அகல வழி உள்ளதோ என்கிறார்.

வ்யாக்யானம் – வார்த்தைகள் அழகியதாயிருந்தது; கீழே "ஐயனே! அரங்கனே!" என்றும், "என்னையாளுடைய கோவே!" என்றும் அபுத்தியா சொன்னவை போலன்றிறே என்ன, (பாவியேனுன்னையல்லால்) – உன்னையொழியப் புறம்பு ஒருவரை நெஞ்சாலும் நினையேன். (பாவியேன் பாவியேனே) – பாபப்ரசுரமான ஸம்ஸாரிகளை

விடமாட்டாதே எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்த உனக்கு அயோக்யனென்று அகல நினைத்ததுக்கு ஹேது என் பாபமேயிறே. (பாவியேன்) – குற்றம் காணமாட்டாத வளவேயோ? உபேக்ஷித்த ஸம்ஸாரிகளையும் உபேக்ஷிக்க மாட்டாத உன்னை அகல நினைத்ததுக்கு ஹேது என் பாபப்ரசுர்யமேயன்றோ. என்னைக் கொண்டு அகன்று என் ஸத்தையை அழியப்புக்கவளவேயோ? எல்லார்க்கும் ஸத்தாஹேதுவான உன்னையும் அழித்து, உன்னையொழிந்த எல்லாருடைய ஸத்தையையும் நசிப்பிக்கைக்குக் கிடீர் நான் நினைத்தது என்கிறார்.

விளக்கம் – இதனைக் கேட்ட அழகியமணவாளன் ஆழ்வாரிடம், "நீவிர் கூறும் சொற்கள் மிகவும் நன்றாகவே உள்ளது. 'ஐயனே அரங்கனே' என்றும், 'என்னை ஆளுடைய கோவே' என்றும் கீழே கூறிய பின்னர், சிறிது நேரம் கழித்து அனைத்தும் பொய் என்றீர். இது போன்ற சொற்கள்தானோ இப்போது நீவிர் கூறியது?", என்றான். இதற்கு ஆழ்வார் விடை தருகிறார். (பாவியேன் உன்னை அல்லால்) – உன்னைத் தவிர இனி வேறு யாரையும் மனதாலும் எண்ணமாட்டேன். (பாவியேன் பாவியேனே) – பாவங்களின் இருப்பிடமான ஸம்ஸாரிகளைக் கைவிடாமல், அவர்கள் அனைவரது தலைகளிலும் திருவடிகளை வைத்த உன் திருமுன்பாக நான் நின்று கொண்டு, "நான் அயோக்யன்", என்று எண்ணி உன்னைவிட்டு அகல முற்பட்டதற்குக் காரணம் எனது பாவங்களே அல்லவோ? (பாவியேன்) – அடியார்களின் குற்றங்களைக் காணாமல் இருப்பதோடு மட்டும் நீ நிற்பதில்லை, உன்னிடம் ஈடுபாடு இல்லாத ஸம்ஸாரிகளைக் கூட நீ வெறுப்பதில்லை. இப்படிப்பட்ட உன்னை விட்டும் நான் அகல முற்பட்டதற்குக் காரணம் எனது பாவங்களே அல்லவோ? அல்லது பாவியேன் பாவியேனே என்பதில் உள்ள முதல் "பாவம்" என்ற பதத்திற்குப் பெரியபெருமாளை விட்டு அகன்று சென்று தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் அளவிற்குப் பாவம் என்று பொருள் கொள்ளலாம்; இரண்டாவது "பாவம்" என்ற பதத்திற்கு - அனைவர்க்கும் இருப்பை அளிக்கின்ற பெரியபெருமாளையும் அழித்து, அனைவரையும் அழிப்பதற்காகத் தான் அகல முற்பட்டதாகவும், அதற்குக் காரணமான பாவம் என்றும் கூறியதாகவும் கொள்ளலாம்.

36. மழைக்கு அன்று வரை முன் ஏந்தும் மைந்தனே மதுர ஆறே

உழைக்கன்றே போல நோக்கம் உடையவர் வலையுள் பட்டு

உழைக்கின்றேற்கு என்னை நோக்காது ஒழிவதே உன்னை அன்றே

அழைக்கின்றேன் ஆதிமூர்த்தி அரங்கமா நகருளானே

பொருள் – முன்பு ஒரு காலத்தில் இந்த்ரனால் பொழியப்பட்ட கல்மழையிலிருந்து ஆயர்களைக் காப்பதற்காக கோவர்த்தன மலையை, அவர்களின் துன்பத்திற்கு முன்பாகவே எடுத்து நின்றவனே! மிகவும் இனிமையான வழிக்கு நிகரானவனே! மான்குட்டியின் கண்கள் போன்ற கண்களைக் கொண்ட பெண்களின் பார்வை என்னும் வலையில் அகப்பட்டுத் தவிக்கும் என்னை நீ ஆறுதலாகக் காணாமல் இருப்பது உனக்கு ஏற்குமோ? அனைத்திற்கும் காரணமானவனே! திருவரங்கத்தில் கண்வளர்பவனே! உன்னை அல்லவோ நான் அழைத்தபடி உள்ளேன்!

அவதாரிகை – அயோக்யனென்று அகலாதபடி தன் நீர்மையைக் காட்டிச் சேரவிட்டுக் கொண்டானென்றார் கீழிற்பாட்டில். இதில் தம்முடைய அயோக்யதை கழிந்தவாறே ப்ராப்யத்தில் த்வரை மிக்கு, யோக்யரைக் கொண்டுபோய் அடிமை கொள்ளும் தேசத்தேறக் கொடுபோகவேண்டியிருந்தார். அது செய்யக் கண்டிலர். அதுக்கு அடி இவரை அகலாமே சேரவிடுகைக்குத் தான் பட்ட பாடறியுமவனாகையாலே ஆமமற்றுப் பசி மிகவேணுமென்று பேசாதிருந்தான்; விஷயங்கள் நடையாடுகிற தேசத்திலிருந்து க்லேசப்பட்டே போமித்தனையாகாதே என்று ப்ராப்யத்தில் த்வரையாலும், விரோதியில் அருசியாலுமாக, பெரியபெருமாள் கண்வளர்ந்தருள அரிதாம்படியாகவும், கேட்டாரெல்லோரும் நீராம்படியாகவும் பெருமிடறு செய்து கூப்பிடுகிறார்.

விளக்கம் – "நான் பெரியபெருமாளிடம் செல்லத் தகுதி இல்லாதவன்" என்று அவனை விட்டுச் செல்ல ஆழ்வார் முயன்றபோது, அவ்விதம் செய்யவிடாமல், தனது நீர்மைக் குணத்தைக் காண்பித்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டான் என்று கடந்த பாசுரத்தில் கூறினார். இப்படியாகத் தான் அவன் அருகில் இருக்க தகுதி இல்லாதவன் என்று எண்ணிய நிலை மாறிய பின்னர், அழகியமணவாளனை அடையவேண்டும் என்ற வேகம் இவருக்கு அதிகமானது. இதனால் ஆழ்வார் எண்ணியது என்ன? இப்படியாக அவனை அடையவேண்டும் என்னும் ஆர்வம் கொண்டவர்களை அழைத்துச் சென்று,

அவர்களைத் தனது கைங்கர்யத்தில் ஈடுபடுத்திக் கொள்ளும் இடமான பரமபதத்திற்கு அவன் தன்னை உடனே கொண்டு செல்லவேண்டும் என்று விரும்பினார். ஆனால் பெரியபெருமாளோ அதனைச் செய்யவில்லை. காரணம் – இவர் தன்னைவிட்டு அகன்று சென்றுவிடாமல் தன்னுடனே சேர்த்துக் கொள்வதற்கு தான் என்ன பாடுபட்டோம் என்று அவனுக்கு அல்லவோ தெரியும்? ஆகையால், இவருக்குத் தன்னை அடையவேண்டும் என்ற பசியானது மேலும் அதிகரிக்கவேண்டும் என்று எண்ணியவனாக, பேசாமல் இருந்தான். இவன் ஏதும் செய்யாமல் இருந்ததைக் கண்ட ஆழ்வார், "உலகவிஷயங்களின் பிடியானது மேலோங்கி நிற்கின்ற இந்த உலகில் நாம் இருந்தால் அதிகமான துன்பம் அனுபவிக்க நேரிடுமே!", என்று எண்ணிக் கலங்கினார். இதனால் அவனை அடையவேண்டும் என்ற ஆர்வம் காரணமாகவும், தனது ஆத்மாவிற்கு விரோதியாக உள்ள விஷயங்கள் மீது உள்ள வெறுப்பு காரணமாகவும் இவர் செய்வது என்னவென்றால் – அழகியமணவாளன் நிம்மதியாகச் சயனிக்க இயலாதபடியும், யார் கேட்டாலும் அவர்கள் உருகும்படியாகவும் உரத்த குரல் கொண்டு புலம்புகிறார்.

வ்யாக்யானம் – (மழைக்கு) – மழையென்றாலும் ஆனையென்றாலும் வ்யவஸ்திதமாயாய்த்து இவர்கள் கோஷ்டியிருப்பது. இப்போது கோவர்த்தநோத் தரணத்தைச் சொல்லுவானென்னென்னில், அவனைப் பற்றித் தம் துக்க நிவ்ருத்தியைப் பண்ணிக் கொள்ள நினைத்தவராகையாலே அவனுடைய ஆபத்ஸகத்வத்தை அருளிச் செய்கிறார். பசித்தவர்கள், "சீமானே! என் பசியைப் போக்கவேணும்", என்னுமாபோலே "ஆபத்ஸகனே! என் துக்க நிவ்ருத்தியைப் பண்ணித் தரவேணும்" என்கிறார். (அன்று) – கோகோபீஜநஸங்குலமதீவார்த்தம் என்கிறபடியே கன்றுகளும், பசுக்களும், இடையரும் நடுங்கின அன்று. அன்றும் இன்றுமேயாய்த்து ஆபத்து. அன்று கல்வர்ஷத்து அகப்பட்டாரை ரக்ஷித்தாற்போலே இன்று துக்க வர்ஷத்தே அகப்பட்ட என்னை ரக்ஷிக்கவேணும். கல்வர்ஷத்தே நோவுபடவேணுமோ ரக்ஷிக்கும்போது? துக்கவர்ஷத்தே நோவுபட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? ஒருவூராக நோவுபடிலோ ரக்ஷிக்கலாவது. அவ்வூராகப்பட்ட நோவை ஒருவன் பட்டால் ரக்ஷிக்கலாகாதோ?

விளக்கம் – (மழைக்கு) – ஆழ்வார்களின் சொற்களில் "மழை" என்றால் இந்த்ரன் பெய்வித்த கல்மழை என்பதையும், "ஆனை" என்றால் கஜேந்த்ரனையும் குறிக்கும். இங்கு

கோவர்த்தன மலையை உயர்த்திய நிகழ்வை ஏன் கூறவேண்டும்? பெரியபெருமாளை அண்டி நின்று தன்னுடைய துன்பத்தைப் போக்கிக்கொள்ள ஆழ்வார் எண்ணுகிறார், இதனால் அவனை அண்டி நின்று ஆயர்கள் தங்களது துன்பத்தைப் போக்கிக் கொண்ட நிகழ்வை இங்கு கூறுகிறார். பசியுடன் உள்ளவர்கள், "செல்வம் படைத்தவனே! எனது பசியை நீக்கவேண்டும்", என்று மற்றவர்கள் வீட்டில் நிற்பது போன்று இவர் பெரியபெருமாளிடம், "ஆபத்து காலத்தில் துணை நிற்பவனே! எனக்குள்ள துன்பங்களை நீக்கித் தரவேண்டும்", என்கிறார். (அன்று) – விஷ்ணுபுராணம் – கோகோபீஜநஸங்குல மதீவார்த்தம் – கோகுலம் முழுவது வருத்தம் கொண்டபோது – என்பதற்கு ஏற்ப கன்றுகள், பசுக்கள், இடையர்கள் ஆகிய அனைவரும் நடுங்கியபடி நின்ற நாளில். அவர்களுக்கு அன்று உண்டான ஆபத்து போன்று அல்லவோ இன்று இவர்க்கு உண்டான துயம்? அன்று கல்மழையால் துன்பத்தில் தவித்தவர்களைக் காப்பாற்றியது போன்று, இன்று துன்பம் என்னும் மழையால் வருந்தும் என்னைக் காக்கவேண்டும். நீ என்னைக் காக்க வேண்டும் என்றால் நான் கல்மழையால்தான் துன்பம் கொள்ளவேண்டுமோ? துன்பங்களே மழையாகப் பொழியும்போது அவர்களைக் காப்பாற்றக்கூடாதோ? ஓர் ஊரில் உள்ள அனைவரும் சேர்ந்து துன்பத்தில் நின்றால்தான் நீ காப்பாற்றுவாயோ? அன்று கோகுலத்தில் உள்ளவர்களி அனைவரும் சேர்ந்து அனுபவித்த துயரங்கள் அனைத்தையும் இன்று நான் ஒருவனாக அனுபவிக்கும்போது என்னை நீ காப்பாற்றக்கூடாதோ?

வ்யாக்யானம் – (வரை) – இந்த்ரன் ஏவ ஸம்வர்த்தகமேகணம் வர்ஷிக்க உத்யோகித்தவாறே, திருவாழியை நினைக்க அவஸரமில்லாமையாலே கைக்கெட்டிற்றொரு மலையையெடுத்து ரக்ஷித்தானாய்த்து. இத்தால் இன்னத்தைப் பரிகரமாகக் கொண்டு இன்னத்தை ரக்ஷிக்கவேணுமென்னும் நியதியில்லை என்கை. என்னுடைய ரக்ஷணத்துக்குப் பரிகரம் உதவப் பார்த்திருக்க வேணுமென்னும் குறையில்லையென்கை. (முன்) – மழையிலே பசுக்கள் நோவுபடுவதற்கு முன்னே, ஏற்கவே ரக்ஷித்தபடி. பஹுதா ஸந்தத துக்க வர்ஷிணி என்கிறபடியே துக்கவர்ஷத்தில் நோவுபட்டுக் கூப்பிடவும் பேசாதிருப்பதே. (ஏந்தும்) – ஏழு திருநக்ஷத்ரத்திலே மலையை எடுத்தவிடத்தில் ஒரு பூம்பந்தை எடுத்தாற்போலே வருத்தமற்றிருந்தபடி. ரக்ஷணதர்மத்தில் உனக்கு வருத்தமுண்டாய்த்தான் இழக்கிறேனோ? சேஷபூதர் சூட்டுநன்மாலைகள் ஏந்தினாற் போலேயாய்த்து சேஷி மலையேந்தினபடி. (மைந்தனே)

– மலையை அநாயாஸேந எடுக்கைக்கு உடலான பெருமிடுக்கை உடையவனே! “மைந்தன்” என்று பாலனாய், இத்தை ரக்ஷிக்கப்பெற்ற ப்ரியத்தாலே இளகிப் பதித்தபடி என்றுமாம். தந்தாம் ஜீவநம் பெற்றவாறே இளகிப்பதிக்குமத்தனையிறே. ஸ்வரூபாநுரூபமாகவிறே ஜீவநமிருப்பது. உன் பேற்றுக்கு நான் கூப்பிடவேண்டுவதே என்கிறார்.

விளக்கம் – (வரை) – இந்த்ரனால் ஏவப்பட்ட மேகக்கூட்டங்கள் ப்ரளயகாலம் போன்று மழையைக் கொட்டத் தொடங்கின. அப்போது எம்பெருமான் சக்ராயுதம் எடுத்து இந்த்ரனைத் தண்டிக்க முற்படவில்லை, தனது சிறிய திருக்கரங்களுக்கு எட்டிய கோவர்த்தன மலையை எடுத்து ஆயர்களை காப்பாற்றினான். இதன் மூலம் உணரப்படுவது என்னவென்றால், “இந்தப் பொருளைக் காப்பாற்றுவதற்கு இந்தப் பொருளைத்தான் பயன்படுத்தவேண்டும்” என்ற விதிமுறைகள் எம்பெருமானுக்கு இல்லை என்பதாகும். ஆகவே என்னை அவன் காப்பதற்கு ஏதோ ஒரு குறிப்பிட்ட ஆயுதம் இல்லாமல் உள்ளான் என்னும் குறை கூற இயலாது. (முன்) – அந்த மழையில் பசுக்கள் துன்பம் கொள்வதற்கு முன்பாகவே இவன் காப்பாற்றினான். ஸ்தோத்ரரத்னம் (49) - பஹூதா ஸந்தத துக்க வர்ஷிணி – பலவிதமான இடைவிடாத துன்பங்களை அளிப்பதான ஸம்ஸார மழை – என்று கூறுவதற்கு ஏற்ப, துன்பம் என்னும் மழையில் நான் சிக்கித் தவிக்கும்போது ஏதும் செய்யாமல் இருப்பதே. (ஏந்தும்) – ஏழு வயதில் உயர்ந்த கோவர்த்தன மலையை எடுத்தபோதும், ஏதோ ஒரு மலரால் ஆகிய பந்தை எடுத்தவன் போன்று சோர்வின்றி நின்றான். ஆனால் எனது பாவங்கள் காரணமாக என்னை நீ காப்பாற்றினால் உனக்குச் சோர்வு உண்டாகும் போலும், இதனால்தான் நான் காப்பாற்றப்படாமல் உள்ளேனோ? இவனுக்குச் சூட்ட இவனது அடியார்கள் மலர்மாலைகளை எடுத்து நிற்பது போன்று, இவன் அவர்களைக் காப்பாற்ற மலையை உயர்த்தி நின்றான். (மைந்தனே) – மலையை எளிதாக எடுப்பதற்கு ஏற்றதான வலிமையானவனே! அல்லது “மைந்தன்” என்ற சொல்லுக்குப் பாலகன் என்று பொருள் கொள்ளலாம், அதாவது தன்னை அண்டியவர்களைக் காப்பாற்றிய காரணத்தினால் மகிழ்ச்சி அடைந்து அதனால் வயது குறைந்தவன் போன்று நின்றான் என்று பொருள். தங்களது விருப்பம் நிறைவேறியவுடன் வயது குறைந்தவர்கள் போன்று ஆவதைக் காணலாம். அவரவர்களின் ஸ்வரூபத்திற்கு ஏற்ப விருப்பமும் அடைய விரும்பும் பொருளும் மாறுபடும் அல்லவோ? உனது ஸ்வரூபத்திற்கு ஏற்ப என்னைக் காப்பது

என்னும் செயல் உனது விருப்பமாக இருத்தல் வேண்டும், நீ அதனைச் செய்து உனக்கு மகிழ்ச்சியை உண்டாவதற்கு நான் உன்னை அழைக்க வேண்டியதாக உள்ளதே!

வ்யாக்யானம் – (மதுரவாறே) – ரக்ஷகனன்றியே பக்ஷகனானாலும் விடலாயோ உன் வடிவிருப்பது? (மதுரவாறே) – ஸமுத்ரம் என்னாதே ஆறு என்பானென்னென்னில், கடலானால் விநியோக யோக்யமன்றிக்கே இருக்கும்; இது விடாய்த்தார்க்குக் குளித்தல், முகத்திலே இறட்டிக்கொள்ளுதல், பாநம் பண்ணுதல் செய்யலாயிருக்கும், விடாயில்லாத போதும் அழுக்கைக் கழற்றிக் கொள்ளலாயிருக்கும். கடலானால் இவனிருந்தவிடத்தில் ஓடாது, இது இவனிருந்தவிடத்தே வருகையாலும்; கிண்ணகமெடுத்தால் நடுவுள்ள அணைகளை முறித்துக்கொண்டு வருமாபோலே இவ்வாறும் அயோக்யதாநு ஸந்தாநத்தால் இட்ட அணைகளையும் முறித்துக் கொண்டு வருமாய்த்து. நின்றார் நின்றவிடங்களிலே உபஜீவிக்கலாம்படியிறே இருப்பது. பரமபதத்தில் நின்றும் போந்து இடைச்சேரியிலே வந்து பிறந்தபடியை நினைக்கிறார்.

விளக்கம் – (மதுரவாறே) – அனைவரையும் காப்பாற்றுபவனாக நீ இல்லாமல், அனைவரையும் விழுங்குபவனாக இருந்தாலும் உன்னைக் கைவிட இயலாமல் அல்லவோ உனது அழகு உள்ளது? (மதுரவாறே) – "ஸமுத்திரம்" என்று கூறாமல் "ஆறு" என்று ஏன் அளவுபடுத்தவேண்டும்? கடல் நீரானது உப்பாக உள்ளதால் அது எந்த ஒரு செயலுக்கும் பயன்படாமல் இருக்கும். ஆனால் ஆற்று நீரானது வெப்பத்தில் வருந்துபவர்களுக்கு நீராட உதவும், முகத்தைக் கழுவ உதவும், குடிக்கப் பயன்படும், வெப்பம் இல்லாதபோதும் அழுக்கை நீக்க உதவும். மேலும் கடலானது ஒருவன் உள்ள இடம் தேடி வருவதில்லை. ஆறானது ஒருவன் உள்ள இடம் தேடி வரும். ஆறானது வெள்ளப்பெருக்கு உண்டானால் எவ்விதம் நடுவில் உள்ள அணைகளை முறித்துக் கொண்டு ஓடிவருமோ அது போன்று பெரியபெருமாள் என்னும் இந்த ஆறானது, "தான் அயோக்யன்" என்று ஆழ்வார் இட்டுக்கொண்ட அணைகளை முறித்துக்கொண்டு ஆழ்வாரிடம் ஓடிவருவதாக உள்ளது. தன்னை உபயோகிப்பவன் உள்ள இடம் தேடி ஆறு வருவது போன்று, எம்பெருமான் வருகிறான். பரமபதத்தை விடுத்து, தன்னை விரும்பும் ஆயர்களின் நடுவில் வந்து அவதரித்த நீர்மையைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் – இந்த்ரனடியாக மழையால் வந்த ஆபத்தைப் போக்கினோம் அன்று; இன்று உமக்கு ஆபத்துக்கு அடியென் என்ன. (உழைக்கன்றித்யாதி) – ஸ்த்ரீகளுடைய நோக்காகிற வலையிலே அகப்பட்டு நோவுபடுகிறவனன்றோ நான். முக்தமான மானினுடைய விழிபோலே, அகவாயில் ஒன்றுமின்றிக்கேயிருக்க, அஹ்ருதயமாக அநந்ய ப்ரயோஜநைகளைப்போலே தங்கள் செல்லாமை தோற்ற நோக்குகிறவர்களுடைய நோக்காகிற வலையிலே அகப்பட்டுத் துடிக்கிற என்னை. உழை – மான். வலையாகிறது அகப்படுத்திக் கொள்ளவற்றாய், கால்வாங்கிப் போகவொண்ணாதபடி பண்ணுமதாய், அதுதன்னில் ப்ரயோஜனமன்றிக்கே இருக்குமதிறே. பகவத்விஷயத்தில் போகாமே துவக்குகைக்கு வேண்டுவதுண்டாய், அதுதன்னிலே போக்யதையின்றிக்கே இருக்கை.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "இந்த்ரன் மூலமாக உண்டான மழையின் காரணமாக வந்த ஆபத்தை முன்பு நாம் நீக்கினோம். இன்று உமக்கு ஆபத்து என்கிறீர். இதற்குக் காரணம் என்ன?", என்றான். இதற்கு ஆழ்வார் விடை அளிக்கிறார். (உழைக்கன்றித்யாதி) – பெண்களின் பார்வை என்னும் வலையில் சிக்கிக்கொண்டு துன்பத்தில் நிற்பவன் அல்லவோ நான்? மான்குட்டியின் கண்கள் போன்று அழகான கண்களைக் கொண்ட பெண்களின் பார்வை என்னும் வலையில் சிக்கித் தவிக்கின்றேன். அவர்களுடைய பார்வை எப்படிப்பட்டது என்றால், இதயத்திலிருந்து அன்பு வெளிப்படாமல், என்னை விட்டால் வேறு கதி அற்றவர்கள் போன்று, வேடம் பூண்டவர்களாக உள்ளனர். உழை என்றால் மான் ஆகும். வலை என்றால் விலங்குகளை அகப்படுத்துவதாகவும், அதில் சிக்கிக் கொண்டால் தப்புவதற்கு அரிதாகவும் உள்ளதாகும். மேலும் சிக்கிக் கொண்ட உயிருக்குத் தன்னிடம் அளிப்பதற்கு எந்தவிதமான பயனும் இல்லாமலும் உள்ளது. பெண்களின் வலை என்பது நம்மை பகவத் விஷயத்தில் ஈடுபட விடாமல் தடுப்பதும், தன்னில் ஏதும் பயன் இல்லாமலும் உள்ளதாகும்.

வ்யாக்யானம் – (என்னை) – பசுக்களைப் போலன்றிக்கே நோவுபடுவதும் செய்து, நோவுபட்டேனென்று அறிவதும் செய்து, ரக்ஷகாபேக்ஷையுடையேனாய், ரக்ஷகன் நீயே என்றிருக்கிற என்னை. (நோக்காதொழிவதே) – கல்லால் வந்த ஆபத்துக்குக் கல்லாலே நோக்கினாய்; கண்ணாலே வந்த ஆபத்தைக் கண்ணாலே

நோக்கவேண்டாவோ? என்னை ரக்ஷிக்கும்போது மலையை எடுக்கவேணுமோ? குளிரநோக்குமத்தனையன்றோ செய்ய வேண்டுவது. நோக்கவேணுமென்னாதே, "நோக்காதொழிவதே" என்று கிலாய்க்கிறாரிறே ஸம்பந்தத்தாலும், நீர்மையில் ஊற்றத்தாலும், சீலத்தாலும். இவர் இப்படி கிலாய்த்துச் சொன்ன பின்பும், "இவர் நாம் கிட்டக் கொள்ள அயோக்யனென்று அகலக்கூடும், ஆமமறுகிடீர்" என்று பேசாதே கிடந்தார். வ்யாதி க்ரஸ்தமான ப்ரஜைகள் வ்யாதி தலைசாய்ந்து சோறுசோறென்று கூப்பிடப்புக்கால் த்வநிதானே தாய்க்கு உகப்பாமாபோலே இவர் கூப்பீடு தன்னையே கேட்டுக்கொண்டு கிடந்தார். (உன்னையன்றே அழைக்கின்றேன்) வேறே ஒரு காபுருஷன் வாசலிலேயோ நான் கூப்பிடுகிறது. ரக்ஷ்யம் தேட்டமாயிருக்கிற தேவரீரை ரக்ஷகாபேக்ஷை உடையேனாய்க் கொண்டு கூப்பிடாநிற்க, செவிபடாதொழொகைக்குப் புறம்பு அந்யபரதையென்? ஜகத் வ்யாபாரமும் மதர்த்தமன்றோ?

விளக்கம் – (என்னை) – உன்னால் காப்பாற்றப்பட்ட பசுக்கள் போன்று அல்லாமல், மிகுந்த துன்பத்தை அடைந்தேன், இப்படியாக பெருந்துன்பத்தில் நான் உள்ளேன் என்பதையும் அறிந்தேன், என்னைக் காக்கக் கூடியவன் நீ மட்டுமே என்று உள்ளேன். இப்படியாக பலவற்றையும் நான் அறியும்படிச் செய்து, உன்னிடம் என்னைக் காக்க வேண்டும் என்று நான் வேண்டி நிற்கும்படியாக நீ செய்தாய். இப்படியாக நின்ற என்னை. (நோக்காதொழிவதே) – கல்மழை மூலம் வந்த ஆபத்தை நீக்க கல்லால் ஆன கோவர்த்தன மலையை நீ நோக்கினாய். இன்று எனக்குக் கண்களால் வந்த ஆபத்து நீங்கும்விதமாக நீ என்னைக் கண்ணாலே பார்க்கவேண்டாமோ? என்னைக் காப்பதற்கு நீ மலையை எடுக்கும் அவசியம் இல்லை. என்னுடைய உள்ளம் குளிரும்படி நீ நோக்கினாலே போதுமானது. "என்னைக் காணவேண்டும்" என்று பெரியபெருமாளை வேண்டாமல், "நோக்காமல் உள்ளாயே" என்று வருத்தம் கொண்டு ஏன் கூறவேண்டும்? இதன் காரணம் – அழகியமணவாளனுடன் தனக்கு உள்ள உறவு, அவனது நீர்மையில் உள்ள உறுதி, அவனுடைய எளிமை ஆகியவற்றால் ஆகும். இப்படியாக ஆழ்வார் புலம்பிய பின்னரும் பெரியபெருமாள் தனது மனதில், "இப்போது இவரை நாம் அண்டி எடுத்துக்கொண்டால், உடனேயே தான் அயோக்யன் என்று கூறி விலகிவிடலாம். ஆகவே இவருக்கு நம்மை அண்டும் வேகம் அதிகரித்த பின்னர் நம்மை இவருக்கு அளிக்கலாம்", என்று பேசாமல் இருந்தான். உடல்நிலை குன்றியிருந்த குழந்தைகள்,

நோய் நீங்கிய பின்னர் “சோறு சோறு” என்று கேட்டால், அந்த ஓசையே தாய்க்கு இனிமை அளிப்பது போன்று, ஆழ்வாரின் அழைத்தலையே கேட்டபடி இவன் சயனித்துக் கிடந்தான். (உன்னையன்றே அழைக்கின்றேன்) – யாராவது தாழ்ந்த ஒருவனின் வாயிலில் நின்று கொண்டா நான் அழைக்கிறேன்? ”நாம் சென்று காப்பாற்ற யாரேனும் உள்ளனரா” என்று எங்கும் தேடுகின்ற உன்னை, “என்னைக் காக்கவேண்டும்” என்று நான் அழைக்கிறேனே! எனது கூக்குரல் உனது செவிகளில் விழவில்லையோ? இதனை விடுத்து வேறு ஏதேனும் செயல் உனக்கு உள்ளதோ? “உலகைக் காத்துக் கொண்டிருந்தேன்” என்று நீ சமாதானம் கூற முடியாதபடி, அந்தச் செயலும் எனக்காகச் செய்யவேண்டியதாக அல்லவோ உள்ளது?

வ்யாக்யானம் – நீர் அழைக்குங்காட்டில் அப்போதே உம்முடைய கார்யம் செய்ய வேண்டுகிற தேவையென் என்ன. (ஆதிமூர்த்தி) – இது உருமாய்ந்து கிடந்த காலத்திலே அபேக்ஷாநிரபேக்ஷமாக, பஹு ஸ்யாம் என்கிற ஸங்கல்பத்தாலே இவற்றை உண்டாக்கின உனக்கு இதினுடைய ரக்ஷணம் பண்ணுகை பரமன்றோ? பெற்றார்க்கு ரக்ஷிக்கையும் பரமன்றோ. எங்கேனும் இடறிலும் “அம்மே” என்ன ப்ராப்தியில்லையோ?

விளக்கம் – ஆழ்வாரின் புலம்பலைக் கேட்ட அழகியமணவாளன், “நீவிர் எம்மை அழைத்த உடனேயே உம்முடைய செயலை நாம் நிறைவேற்ற வேண்டும் என்னும் கட்டாயம் நமக்கு என்ன உள்ளது?”, என்றான். இதற்கு ஆழ்வார் விடை அளிக்கிறார். (ஆதிமூர்த்தி) – ப்ரளய காலத்தில் இங்குள்ள அனைத்தும் உருத்தெரியாமல் ஒன்றுடன் ஒன்று கலந்து நின்றன. அப்போது சாந்தோக்ய உபநிஷத் – பஹு ஸ்யாம் – பலவாகக் கடவேன் – என்னும்படி ஸங்கல்பம் செய்து இவை அனைத்தையும் படைத்தாய். இப்படியாகப் படைத்த இவற்றைக் காப்பாற்றும் பொறுப்பும் உனக்கு அல்லவோ உள்ளது? குழந்தைகளைக் காக்கும் பொறுப்பு பெற்றவர்களுக்கு அல்லவோ உள்ளது? தடுக்கி விழுந்தாலும் “அம்மா” என்று அல்லவோ அழைப்பர்?

வ்யாக்யானம் – என்னுடைய ரக்ஷணத்துக்கு ஜகத்ஸ்ருஷ்யாதிகள் தேடிப் பழங்கிணறு கண்வாருகிறதென்? (அரங்கமாநகருளானே) – பரமபதத்தை விட்டுக் கோயிலிலே கண் வளர்ந்தருளுகிறது என்னுடைய ரக்ஷணம் பண்ணவல்லவாகில் இக்கிடைக்கு வேறே

ப்ரயோஜநமுண்டோ? கர்மாநுகூலமாக ஸம்ஸாரிகளை ரக்ஷிக்கைக்கு வந்து கிடக்க வேணுமோ? (அரங்கமாநகருளாநே உன்னையன்றே அழைக்கின்றேன்) – நான் ஏதேனும் பரமபதத்தே வந்து கூப்பிட்டேனோ? ருசி பிறக்க வந்து கிடக்கிறவிடத்திலே ருசி பிறந்தார் இழந்துபோகவோ? இவர் இப்படி கூப்பிடப் பெரியபெருமாள் ஆறியிருப்பானென்னென்னில், பரமபதத்திலுள்ளார் போகத்தாலே கூப்பிடக் கேட்டறிவர். ஸம்ஸாரிகள் விஷயலாபத்தாலே கூப்பிடக் கேட்டறிவர். தம்முடைய க்ருஷிபலமான கூப்பீடு கேட்டறியாமையாலே பேசாதே கிடந்தார்.

விளக்கம் – பழைய கிணற்றைத் தூறு எடுப்பது போன்று என்னைக் காப்பாற்ற உலகின் ஸ்ருஷ்டி காலத்தைத் தேடிப் போகவேண்டுமோ? (அரங்கமாநகருளாநே) – பரமபதத்தை விடுத்து திருவரங்கம் பெரியகோயிலில் வந்து நீ கண்வளர்வதற்கு "என்னைக் காப்பாற்றுதல்" என்பது காரணம் அல்ல என்றால், நீ இங்கு வந்து கண்வளர்வதற்கு வேறு என்ன பயன் உள்ளது? புண்ணியபாவ பலன்களின் அடிப்படையில் ஸம்ஸாரிகளைக் காப்பாற்றப் போகிறாய் என்றால், அங்கேயே இருந்திருக்கலாமே, இங்கு வரவேண்டிய அவசியம் இல்லையே! (அரங்கமாநகருளாநே உன்னையன்றே அழைக்கின்றேன்) – நான் உன்னை பரமபதத்தில் வந்து அழைக்க ஏற்றவன் அல்லன். எனக்கு உன் மீது ஆசையை உண்டாக்குவதற்காக இங்கு வந்து நீ சயனித்து, எனக்கு உன் மீது ருசியையும் அளித்த பின்னர், அதனை நான் இழப்பது சரியோ? இப்படியாக இவர் அழைத்த பின்னரும் அழகியமணவாளன் ஏதும் பேசாமல் இருப்பது ஏன் என்ற கேள்வி எழலாம். பரமபதத்தில் உள்ளவர்கள் தன்னை எவ்விதம் அனுபவித்து அழைப்பர் என்பதை இவன் அறிவான், தங்களது உலகியல் பலன்களைப் பெறுவதற்காக ஸம்ஸாரிகள் எவ்விதம் தன்னை அழைப்பர் என்பதை இவன் அறிவான். ஆழ்வாரின் அழைத்தல் என்பது இவை இரண்டும் அல்ல. ஆழ்வாரைத் தன்னிடம் சேர்த்துக் கொள்வதற்கு எல்லையற்ற காலமாக இவன் முயற்சித்தான், இவனது முயற்சிகள் இப்போதுதான் பலித்தது. ஆகவே ஆழ்வார் தன்னை எவ்விதம் அழைப்பார் என்று இதுவரை இவன் அறியாமல் இருந்த காரணத்தால், அவரது அழைத்தலை அறியும்விதமாக, அவரைக் கூக்குரல் இடவைத்து இவன் பேசாமல் கிடந்தான் என்று கருத்து.

37. தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ் திருவரங்கத்துள் ஓங்கும்

ஒளி உளார் தாமே அன்றே தந்தையும் தாயும் ஆவார்

எளியதோர் அருளும் அன்றே என் திறத்து எம்பிரானார்

அளியன் நம் பையல் என்னார் அம்ம ஓ கொடியவாறே

பொருள் – எப்போதும் பொங்கிப் பாய்வதால் தெளிவாக இல்லாமல், கலங்கியபடியே உள்ள நீரைக் கொண்டதான காவேரி நதியால் சூழப்பட்டபடி திருவரங்கம் பெரியகோயில் உள்ளது. அந்தக் கோயிலே ப்ரகாசம் அடையும்படியாக ஒளியுடன் கூடியவனாக அழகியமணவாளன் உள்ளான். அப்படிப்பட்ட அவனே நமக்குத் தந்தையும் தாயுமாக உள்ளான். இவன் என் பொருட்டு செய்யவேண்டியது மிகவும் எளிதானது. அது என்ன? எனக்கு அனைத்துமாக உள்ள அவன் என்னைக் குறித்து, "நமது பையல் இவன். நமது கருணைக்கு ஏற்புடையவன்", என்று கூறவேண்டும். ஆனால் அதனைச் செய்யாமல் உள்ளானே! இவனது மனம் எத்தனை கொடியதாக உள்ளது?

அவதாரிகை – இப்படிக் கூப்பிடச் செய்தேயும் பெரியபெருமாள் இரங்கி மா சுச: என்னக் காணாமையாலே தம்மையொழிய வேறே எனக்கொரு பந்துக்களுண்டாய் இருக்கிறாரோ? ப்ரயோஜநாந்தரபரனாய் பந்தகமாயிருந்துள்ள புருஷார்த்தத்தை அபேக்ஷிக்கிறானென்றிருக்கிறாரோ? நம்முடையவனென்று அங்கீகரிக்க நான் பிழைப்பேனானால், இத்தனையும் செய்யாதே ஆர்த்தத்வநி கேட்டுக் கண்ணுறங்கும்படி, அம்மே! இவர் திருவுள்ளம் இப்போது இங்ஙனே கொடியதாய்த்தாகாதே என்று இன்னாதாகிறார்.

விளக்கம் – இப்படியாகப் பலவிதமாக ஆழ்வார் கூக்குரல் இட்டபோதும் அழகியமணவாளன் இரக்கம் கொண்டு, "வருத்தம் கொள்ளாதே", என்று கூறவில்லை. ஆகவே ஆழ்வார் தனது மனதில், "அவனைத் தவிர எனக்கு ஆறுதலாகப் பல உறவினர்கள் உண்டு என்று கருதி அவன் பேசாமல் உள்ளானோ? ஸம்ஸாரத்தில் ஈடுபட வைக்கின்ற பல விஷயங்களை நான் விரும்புகிறேன் என்று எண்ணுகிறானோ? 'இவன் நம்முடையவன்' என்று என்னை ஏற்றுக்கொண்டால் போதுமானது, நான்

பிழைப்பேனே! அதனைச் செய்யாமல், என்னுடைய புலம்பல்களைக் கேட்டபடி கண்வளர்கிறானே! இவனது மனம் இத்தனை கொடியதாக மாறியதே! அம்மம்மா!", என்று எண்ணுகிறார்.

வ்யாக்யானம் – (தெளிவிலாக்கலங்கல்) – ஊற்றுமாறித் தெளிகைக்கு அவகாசமில்லாதபடி மேன்மேலும் பெருகுகையாலே கலக்கம் மாறாதாய்த்து. இவரைப் போலேயாய்த்து ஆறும். ப்ராப்த்திக்கு முன்பு சோகத்தாலே கலங்கியிருப்பர்; கிட்டினால் ப்ரேமத்தாலே கலங்கியிருப்பர்; ஆறும் கோயிலுக்கு மேற்கு பெரியபெருமாளைப் காணப்புகா நின்றோமென்னும் ஹர்ஷத்தாலே கலங்கிவரும்; கோயிலுக்குக் கிழக்குப் பட்டால் பிரிந்துபோகிற சோகத்தாலே கலங்கிப்போம். கோயிலருகு வழிபோவாரில் சேதநாசேதந விபாகமில்லை போலே காணும் கலக்கத்துக்கு. (நீர்சூழ்) – "அதனில் பெரிய என்னவாவறச் சூழ்ந்தாய்" என்று பெரியபெருமாள் என்னளவிலிருக்குமாபோலேயாய்த்து கோயிலை விளாக்குலை கொண்டிருக்கும்படி. துக்தாப்தி இத்யாதி. ரத்நகமான க்ஷீராப்தி தமப்பனார்; நான் இவ்விடத்தில் ஜநநீ; ஸாக்ஷால்லக்ஷ்மி பெண்; மணவாளப்பிள்ளை ஸர்வ லோகோத்தரான அழகியமணவாளப்பெருமாள்; இதுக்கு ஸத்ருசமாக அங்கமணி செய்யலாவதேதென்று விசாரித்துக்கொண்டு வருகிறாப்போலேயாய்த்து ஆறு பெருகி, மத்தகஜம்போலே பிசுகிப் பிற்காலித்து வருகிறபடி. (திருவரங்கத்துளோங்குமொளியுளர்) – ஆற்றுப்பெருக்கை நீக்கித் தரைகண்டு உள்புக அரிதாமாபோலேயாய்த்து பெரியபெருமாள் தேஜஸ்ஸை நீக்கிப் புக்கு அதுக்கு ஆச்ரயமான வடிவழகு காண அரிதாயிருக்கிறபடி. பரமபதத்திலொளி பகல்விளக்கு என்னும்படியாய்த்து. அந்தகாரத்தில் தீபம்போலே குறைவாளரான ஸம்ஸாரிகளுக்கு உதவப்பெற்ற பின்பு ஒளி மிக்கிருக்கிறபடி. (ஓங்குமொளி) – நித்யஸூரிகள் நடுவேயிருக்கிறபோது, ஆதித்யர்கள் நடுவே ஆதித்யன் இருக்குமாபோலேயாய்த்து இருப்பது. இங்கு ஆர்த்தர் மிகவுமுண்டாகையாலே தத்ரக்ஷணம் பண்ணி ஒளியும் மிகா நிற்குமத்தனை.

விளக்கம் – (தெளிவிலாக் கலங்கல்) – காவேரி நதியில் நீரின் வேகத்தில் சற்று மாறுபாடு உண்டானால் தெளிவாக இருக்க வாய்ப்புள்ளது. ஆனால் அவ்விதம் தெளிவதற்கு சற்றும் இடம் அளிக்காமல் நீர் பெருகியபடி உள்ளதால் எப்போதும் கலங்கியபடியே உள்ளது. ஆழ்வாரைப் போன்றே நதியும் கலங்கியபடி உள்ளது. அழகியமணவாளை

அடைவதற்கு முன்பாக “அவனை இன்னமும் அடையவில்லையே” என்று வருத்தம் கொண்டபடி இருப்பார்; அவனை அடைந்த பின்னர் அவன் மீது காதல் கொண்டு கலக்கத்துடன் இருப்பார். இது போன்றே காவேரி நதியானது திருவரங்கம் பெரியகோயிலின் மேற்குத் திசையில் இருந்து ஓடி வரும்போது, “அழகியமணவாளனைக் காணப்போகிறோம்” என்ற ஆனந்தம் காரணமாக வேகமாக வரும்; பெரியகோயிலின் கிழக்குத் திசைக்குச் சென்ற பின்னர் “இவனை விட்டுப் பிரியப்போகிறோமே” என்ற சோகம் காரணமாக கலங்கியபடிச் செல்லும். ஆகவே, பெரியகோயிலின் அருகில் செல்லும்போது கலக்கத்துடன் செல்வதற்குச் சேதனம் மற்றும் அசேதனம் என்னும் வேறுபாடு இல்லை என்றாகிறது. (நீர்சூழ்) – திருவாய்மொழி (10-10-10) - அதனில் பெரிய என்னவாவறச் சூழ்ந்தாய் – என்னும்படியாக பெரியபெருமாள் ஆழ்வார்களிடம் கொண்ட ப்ரேமையால் அவர்களைச் சூழ்ந்தபடி உள்ளது போன்று, இந்தக் காவேரி அவனைச் சூழ்ந்து ஓடுகிறது. ஸ்வாமி பராசரபட்டரின் ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1-21) – துக்தாப்தி: - என்னும் ச்லோகம் இங்கு கொள்க (குறிப்பு: இதனை அடியேனின் இணையதளத்தில் பெறலாம்). அந்தச் ச்லோகத்தில் இவ்விதம் கூறுகிறார்: இரத்தினங்கள் பல நிறைந்த திருப்பாற்கடல் பெண்ணின் தந்தை, நான் (காவேரி) பெண்ணின் தாய், பெண் யார் என்றால் ஸ்ரீரங்கநாச்சியார்; இவளது மாப்பிள்ளை யார் என்றால் அனைவரையும் விட சிறந்தவனான அழகியமணவாளப்பெருமாள் – என்று கூறியது காண்க. இங்கு பெற்ற பெண்ணிற்கும் மாப்பிள்ளைக்கும் சீராக என்ன செய்வது என்று எண்ணியபடி, கலங்கியபடி, மதம் கொண்ட யானை போன்று தயங்கித் தடுமாறி காவேரி வருகிறாள் என்றார். (திருவரங்கத்துள் ஓங்கும் ஒளியுளார்) – காவேரியின் வெள்ளப்பெருக்கை நீக்கி, அதன் தரையைக் காண்பது அரிதாக உள்ளது போன்று, பெரியபெருமாளின் ஒளியை நீக்கி அவன் சயனித்துள்ள இருப்பிடத்தின் வடிவழகைக் காண்பதற்கு அரிதாக உள்ளது. இவன் திருவரங்கத்தில் வந்து சயனித்த பின்னர், பரமபதத்தில் உள்ள ஒளியானது பகல் ஒளி போன்று குறைந்துபோனது. இருளில் உள்ள தீபம் மிகவும் ப்ரகாசமாக உள்ளது போன்று, ஞானம் அற்ற ஸம்ஸாரிகளுக்கு மத்தியில் உதவுகின்ற இவனது ஒளி இங்கு வந்த பின்னர் மேலும் ஓங்கியது. (ஓங்கும் ஒளி) – நித்யஸூரிகளின் நடுவில் இவன் உள்ளபோது, சூரியன்களுக்கு நடுவில் மற்றுமொரு சூரியன் உள்ள அளவே இவனது ஒளி இருந்தது. ஆனால் இங்கு வருத்தம் கொண்டவர்கள் பல உள்ளதால் அவர்களுக்கு உதவும்போது இவனது ஒளி பன்மடங்கானது.

வ்யாக்யானம் – (ஒளியுளார் தாமேயன்றே தந்தையும் தாயுமாவார்) – அவதாரணத்தாலே மாதா பிதா என்று தொடங்கி, நாராயண: என்கிற பொதுவிலன்று. வ்யூஹாவஸ்தை, விபவாவஸ்தை என்கிற விசேஷங்களிலுமன்று. இனி எனக்குத் தந்தையும் தாயுமாவார் பெரியபெருமாளே என்கிறார். தம்மையொழிய வ்யக்த்யந்தரத்திலேயும் ஒரு பந்தமுண்டென்று ஆறியிருகிறாரோ? ஸர்வேஷாமேவ லோகாநாம் இத்யாதி. இச்லோகந்தான் தர்மபுத்ராதிகள் வநவாஸம் பண்ணுகிற ஆபத்தசையிலே க்ருஷ்ணனும் ஸத்யபாமைப் பிராட்டியும் எழுந்தருள, அத்தைக்கேட்ட ஸ்ரீபராசராதி மஹர்ஷிகள் வந்து மார்க்கண்டேய பகவானைக் கண்டு பேரோலக்கமாகவிருக்க; தர்மபுத்ரன், "இவ்வாபத்துக்கு ஆச்வாஸ ஹேதுவாக எனக்கொரு நல்வார்த்தை அருளிச்செய்ய வேணும்", என்று ரிஷிகளைக் கேட்க; அவர்கள் சொன்னவை அடங்கப் பூர்வபக்ஷித்து ஸ்ரீமார்க்கண்டேய பகவான் எழுந்திருந்து சொன்னதாயிருக்கும். பின்பு சீராமப் பிள்ளையுடைய ஆபத்தசையிலே பட்டர் அருளிச்செய்ததாயிருக்கும். (தந்தையும் தாயுமாவார்) – ப்ரியத்துக்கும் கடவர், ஹிதத்துக்கும் கடவர்.

விளக்கம் - (ஒளியுளார் தாமேயன்றே தந்தையும் தாயுமாவார்) – இங்கு "தாமே" மற்றும் "அன்றே" என்பதில் உள்ள ஏவகாரம் மூலம் என்ன கூறுகிறார்? ஸுபால உபநிஷத் – மாதா பிதா – என்று தொடங்கி, நாராயண: - நாராயணனே தாயும் தந்தையும் – என்று கூறுவது போன்று பொதுவாக அல்ல என்கிறார்; வ்யூஹம் மற்றும் விபவம் போன்று பொதுவாக அல்ல என்கிறார்; இவற்றிலும் மாறுபட்டு பெரியபெருமாள் மட்டுமே தனக்குத் தந்தையும் தாயுமாக உள்ளான் என்று உணர்த்துகிறார். இப்படியாக இவனைத் தவிர வேறு உறவினர்கள் யாரும் இல்லாதபோது, வேறு யாரேனும் எனக்கு உள்ளார்கள் என்று இவன் எண்ணுவதால், ஏதும் பேசாமல் சயனித்துள்ளானோ? மஹாபாரதம் ஆரண்யகாண்டத்தில் உள்ள - ஸர்வேஷாமேவ லோகாநாம் – அனைத்து உலகிற்கும் தந்தையும் தாயும் இவனே – என்னும் ச்லோகம் இங்கு கொள்ளவேண்டும். இந்த ச்லோகம் மார்க்கண்டேய மஹரிஷி அருளியது ஆகும். இந்த ச்லோகம் பிறந்த நிகழ்வு என்ன? பாண்டவர்கள் வனவாஸம் செய்யும்போது அவர்களைக் காண்பதற்காக க்ருஷ்ணனும் ஸத்யபாமாவும் எழுந்தருளினர். இதனைக் கேள்விப்பட்ட பராசரர் உள்ளிட்ட பல மஹரிஷிகள் மார்க்கண்டேய மஹரிஷியை முன்னிறுத்தி அங்கு சபையில் வீற்றிருந்தனர். அப்போது தர்மன் அந்த மஹரிஷிகளிடம், "இந்த ஆபத்துக்காலம்

எனக்கு நீங்குவதற்குக் காரணமாக ஒரு வழியை நீங்கள் உரைக்கவேண்டும்", என்று வேண்டினான். அவர்கள் பலவிதமான மார்க்கங்களை உரைத்தனர். இவர்கள் கூறிய அனைத்தையும் மறுத்து, மார்க்கண்டேய மஹரிஷி மேலே உள்ள ச்லோகத்தை உரைத்து, நாராயணனைப் பற்றுவதே மார்க்கம் என்றார். இந்த ச்லோகத்தை ஸ்வாமி பராசரபட்டர் தனது சகோதரரான சீராமப்பிள்ளையின் ஆபத்துக்காலத்தில் உரைத்தார் என்று ஐதிஹம். (தந்தையும் தாயுமாவார்) – தாய் போன்று நமக்கு இனிமையாக உள்ளதையும், தந்தை போன்று நமக்கு நன்மையை அளிப்பதையும் பார்த்துப்பார்த்துச் செய்பவன் அழகியமணவாளன் மட்டுமே என்கிறார்.

வ்யாக்யானம் – (எளியதோரருளுமன்றே என்திறத்து) – என் விஷயத்தில் மலையையெடுத்து ரக்ஷிக்கவேணுமோ? உம்மையொழிய வேறேயொரு ப்ரயோஜநத்தைக் கணிசித்தேனாய் அத்தைக் கொடுத்துவிடுகிறோமென்று ஆறியிருக்கிறீரோ? ஸ்ரீவிபீஷணாதிகள் ரக்ஷணம்போலே வில்லும் கோலும் எடுத்து ரக்ஷிக்கவேண்டித்தானிருக்கிறீரோ? குளிர ஒரு கடாக்ஷங்கிடீர் என் விஷயத்தில் பண்ண வேண்டுவது. (எம்பிரானார்) – எனக்கு உபகாரகரானவர். இன்னாதாகிற தசையிலும் உபகாரகனென்பானென் என்னில், செய்த அம்சத்தை இல்லை செய்யுமவரல்லாமையாலே அத்தை முன்னிடுகிறார். அடியிலே முறையை உணர்த்தி, அதுக்குமேலே ப்ராப்யப்ராபகங்கள் தாமே என்னுமிடத்தை உணர்த்தி, இப்போதும் நம் கூப்பீடு கேட்க வந்து ஸந்நிஹிதராயிருக்கிற ஆகாரமுண்டிறே.

விளக்கம் - (எளியதோர் அருளுமன்றே என்திறத்து) – என்னுடைய விஷயத்தில், என்னைக் காப்பாற்ற கோவர்த்தன மலையை எடுப்பது போன்ற கடினமான செயல்கள் ஏது அவசியம் இல்லையே! உன்னைத் தவிர நான் வேறு எதாவது பயனை வேண்டி நிற்கிறேன் என்று எண்ணி, அதனைக் கொடுத்துவிடலாம் என நினைத்துக் கொண்டு, பேசாமல் உள்ளாயோ? விபீஷணனைக் காப்பாதற்காக வில்லையும், பாண்டவர்களைக் காப்பதற்குத் தேரோட்டும் குச்சியையும் எடுத்துக் காப்பது போன்று இவனைக் காப்பாற்ற வேண்டுமா என நினைத்துக் கொண்டு, பேசாமல் உள்ளாயோ? எனது விஷயத்தில் நீ அது போன்று எதனையும் செய்யவேண்டாம், என்னை ஒருமுறை நன்றாக நோக்கினாலே போதுமானது. (எம்பிரானார்) – எனக்கு அனைத்து உதவிகளையும் செய்பவன். சற்று முன்னர் இவன் தன்னைப் பார்க்கவோ பேசவோ

செய்யவில்லை என்றார், ஆனால் இங்கு தனக்கு உதவுபவன் என்கிறார், இது ஏன்? தனக்கு அழகியமணவாளன் இதுவரை செய்த உதவிகளை மறந்துவிட்டு, "ஏதும் செய்யவில்லை", என்று கூறுபவர் அல்லர் இவர். ஆகவே அதனைக் கூறுகிறார். அப்படி என்ன செய்தான்? தனக்கும் இவருக்கும் உள்ள உறவுமுறையை முதலில் உணர்த்தினான்; அடையவேண்டிய இலக்கும், அந்த இலக்கை அடையவைக்கும் உபாயமும் தானே என்று உணர்த்தினான்; இப்போது இவர் அழைக்கும்போது ஓடிவருவதற்கு எளிதாக, மிகவும் அருகில், திருவரங்கத்தில் வந்து கண்வளர்கிறான்.

வ்யாக்யானம் – (அளியன் நம் பையலென்னார்) – "அளி" என்று தண்ணளி. "இவன் நமக்கு நல்லன், நம்முடைய பையல்" என்று ஒரு வார்த்தை அருளிச்செய்யக் கேட்கவாய்த்து இவர் ஆசைப்படுகிறது; "ஆழ்வீர்" என்னுமது இவர்க்கு அஸஹ்யமாய்த்து. சேஷபூதரான நாம் இவ்வர்த்தங்களை நினைத்திருக்க அமையாதோ? அவன் சொல்லவேணுமோ என்னில், அதுபோராது. சேஷியானவனும் இதுக்கு மேலெழுத்திடுமன்றாய்த்து சேஷத்வம் நிலை நின்றாவது. மணக்கால்நம்பி, "நம்மாணி திருமகிழ்மாலை மார்வனுக்குத் திற", என்றாரிறே. "பிள்ளைப்பிள்ளையாழ்வான் வாயாலே 'தம்பி அப்பிள்ளையாழ்வான் நம்மாணி' என்னப்பெற்றேன்", என்றாரிறே.

விளக்கம் - (அளியன் நம் பையலென்னார்) – "அளி" என்றால் கருணை என்பதாகும். அழகியமணவாளன் தன்னைக் குறித்து, "இவன் நமக்கு மிகவும் வேண்டியவன். நம்முடைய கருணைக்கு இலக்காக வல்லவன்", என்று கூறவேண்டும் என ஆசைப்படுகிறார். ஆனால் அழகியமணவாளனோ இவரை "ஆழ்வீர்" என்று அழைக்கிறான். இப்படி இவன் அழைப்பதை இவரால் பொறுக்க இயலவில்லை. இங்கு ஒரு கேள்வி எழலாம். அவனுடைய அடிமைகளாக உள்ள நாம் அவனுடைய கருணைக்கு இலக்காவோம் என்பதை நாமே எண்ணிக் கொண்டால் போதாதோ? இப்படி அவன் எண்ணவேண்டுமோ? இதற்கு விடை – நாம் எண்ணுவது மட்டும் போதாது. நம்மை அடிமைகளாகக் கொண்டவனும் அப்படியே எண்ணி நம்மை அழைத்தால் மட்டுமே அடிமைதனம் என்பது நிலைநிற்கும் என்கிறார். மணக்கால்நம்பியின் திருமாளிகை வாசலிலே அவரது சீடரான திருமகிழ்மாலை மார்வன் வந்து அழைத்தார். அப்போது மணக்கால்நம்பி, "திருமகிழ்மாலை மார்வனுக்குக் கதவைத் திற", என்று கூறாமல், "நம் பிள்ளையான திருமகிழ்மாலை மார்வனுக்குக் கதவைத் திற", என்றார். இது போன்றே

அப்பிள்ளையாழ்வான், “பிள்ளைப்பிள்ளையாழ்வான் தன்னுடைய திருவாயால் என்னை ‘தம்பி அப்பிள்ளையாழ்வான் நம் பிள்ளை’ என்று கூறும் பேறு பெற்றேன்”, என்பார். இது போன்று அழகியமணவாளன் தன்னை அழைக்கவேண்டும் என்கிறார்.

வ்யாக்யானம் – (அம்ம ஓ கொடியவாறே) – ஆர்த்தத்வநி கேட்டால் எழுந்திருக்க வேண்டாவோ? ஆர்த்தத்வநி கேட்டும் இவர் கண்ணுறங்குவதே! இவர் திருவுள்ளம் இங்ஙனே கொடிதாய்த்தாகாதே! அம்மே! இவர் ஸ்வபாவமிருந்தபடியென் என்கிறார்.

விளக்கம் – (அம்ம ஓ கொடியவாறே) – ஆழ்ந்த வருத்தம் கொண்ட ஒருவனின் கூக்குரல் கேட்டவுடன் எழுந்து ஓடி வரவேண்டாமோ? அதனைக் கேட்டும் இவன் எழாமல் உறங்குபவன் போன்று உள்ளானே! இவனது மனம் இத்தனை கொடியதாக மாறிவிட்டதே! அம்மம்மா! இவனது ஸ்வபாவம் எத்தனை கொடியதாக உள்ளது! என்கிறார்.

38. மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிகவுணர்ந்து
ஆம் பரிசு அறிந்து கொண்டு ஐம்புலன் அகத்து அடக்கிக்
காம்பு அற தலை சிரைத்து உன் கடைத்தலையில் இருந்து வாழும்
சோம்பரை உகத்தி போலும் சூழ்புனல் அரங்கத்தானே.

பொருள் – காவேரியால் சூழப்பட்ட பெரியகோயிலில் கண்வளர்பவனே! அழகியமணவாளா! மேன்மைகளை அளிப்பது போன்று மயங்க வைக்கும் இந்த உலக விஷயங்களை அவற்றின் வாசனையுடன் கைவிட்டும், ஆத்மஸ்வரூபத்தை உள்ளது உள்ளபடி நன்கு அறிந்தும், இப்படியாக ஆத்மாவின் ஸ்வரூபத்தை அறிந்ததன் பலனாக உள்ள உன்னுடைய கைங்கர்யம் என்பதை உணர்ந்தும், ஐந்து புலன்களை மேயவிடாமல் அடக்கி வைத்தும், மற்ற உபாயங்களில் உள்ள பற்றுதல்களை நீக்கியும், தங்களிடம் உள்ள அனைத்துவிதமான பாரங்களை நீக்கியும், உன்னுடைய கோயிலின் திருவாயிலில் காவல் புரிந்தபடியும் சிலர் வாழ்கின்றனர். இப்படியாக தங்களைப் பற்றிய

விஷயத்தில் சோம்பலுடன் உள்ள அவர்களைக் கண்டு நீ மிகவும் மகிழ்கிறாய் அல்லவோ?

அவதாரிகை – மஹாபாரதத்துக்குச் சரமச்லோகம் போலேயாய்த்து இப்ரபந்தத்துக்கு இப்பாட்டு. மஹாபாரதமாகிறது – மதிமந்தாநமாவித்ய யேநாஸௌ ச்ருதிஸாகராத் ஜகத்திதாய ஜநிதோ மஹாபாரத சந்த்ரமா: என்கிறபடியே ச்ருதி ஸாரமாய்த்து மஹாபாரதம்; ஸர்வேச்வரன் க்ஷீராப்தியைக் கடைந்து தேவர்களுக்கு அம்ருதத்தைக் கொடுத்தான்; ஸ்ரீவேதவ்யாஸபகவான் ச்ருதி ஸாகரத்தைக் கடைந்து ஸர்வாஹ்லாதகரமான மஹாபாரதத்தை ஸம்ஸாரிகளுக்கு ஆத்மோஜ்ஜீவந ஹேதுவாகக் கொடுத்தான். தேவர்களுக்கு ஈச்வரன் கொடுத்த அம்ருதம் பந்தகம்; ஸ்ரீவேதவ்யாஸ பகவான் ஸம்ஸாரிகளுக்குக் கொடுத்த மஹாபாரதம் ஸம்ஸார விமோசகமிறே; அம் மஹாபாரதந்தான் கோதென்னும்படியாய்த்து ஸ்ரீகீதை; அதில் ஸாரமாய்த்து சரமச்லோகம். இது சொல்லுகைக்காகக் கீழடங்கச் சொல்லிற்று; இதுக்குமேல் இதம் தே நாதபஸ்காய என்று தொடங்கி இந்தச் சரமச்லோகத்தினுடைய கௌரவத்தைச் சொல்லுகிறது. அப்படியே இப்பாட்டு அவதரிக்கைக்காகவாய்த்து இப்ரபந்தம் அவதரித்தது. இதுக்குமேலே ப்ரபந்த சேஷமும் இப்பாட்டில் சொல்லுகிற அர்த்தத்தில் நிஷ்டராயிருப்பாருடைய ஏற்றம் சொல்லுகிறது. ஆக, மஹாபாரதஸாரம் சரமச்லோகம் ஆனாற்போலே இப்ரபந்தஸாரம் இப்பாட்டு. இதுதான் த்வயத்தினுடைய அர்த்தத்தைச் சொல்லுகிறது. த்வயத்தில் ப்ராபகம் முன்னாய் ப்ராப்யம் பின்னாயிருக்க, இதில் ப்ராப்யம் முன்னாய் ப்ராபகம் பின்னாயிருப்பானென் என்னில்; வ்யுத்பத்திவேளையில் ப்ராப்யம் முன்னாய் ப்ராபகம் பின்னாயிருக்கக் கடவதிறே. ஸ்வர்க்க காமோ ஜ்யோதிஷ்டோமேந யஜேத என்றிறே வ்யுத்பத்திவேளையிலிருப்பது; அநுஷ்டாநவேளையிலே ஜ்யோதிஷ்டோமாநுஷ்டாந பூர்வகமாகவிறே ஸ்வர்க்கஸித்தி. ப்ராபக நிஷ்டையாலேயிறே ப்ராப்ய ஸித்தி. அப்படியே இப்பாட்டில் வ்யுத்பத்திவேளையாய் த்வயம் அநுஷ்டாநவேளையாயிருக்கிறது. அதில் பூர்வபாகத்தளவிலே அநுஸந்தித்தார் நம்மாழ்வார்; உத்தரபாகத்தை அநுஸந்தித்தாள் ஆண்டாள்; அவ்விரண்டையும் சேர அநுஸந்தித்தார் இவ்வாழ்வாரேயாய்த்து. இப்பாட்டுக்குக் கீழ்ப்பாட்டோடே ஸங்கதியென்னென்னில், "அளியன் நம்பையல் என்னார் அம்மவோ கொடியவாறே" என்று கிலாய்த்து வார்த்தை சொன்னவாறே, "விஷயாந்தர ப்ராவண்யகரமான ஸம்ஸாரத்திலே, வகுத்த புருஷார்த்தத்தை

அபேக்ஷிக்கையும், தத்ஸித்திக்கு நம் கைபார்த்திருக்கையும், அதுக்குமேலே விளம்பம் பொறாதே கிலாய்க்கையும், ஆக இவ்வளவு புகுரநிற்பாரைப் பெறுவோமே!" என்று பெரியபெருமாள் திருவுள்ளம் ப்ரஸந்நமாய், திருவுள்ளத்தில் ஹர்ஷமடங்கலும் திருமுகத்திலே தோற்றும்படியாயிருக்க, "தேவரீரைக் கிட்டி தேவரீர் பக்கலிலே ந்யஸ்தபரராய்த் தந்தாமுடைய ஹிதத்தில் கைவாங்கியிருப்பாரைக் கண்டால் இங்ஙனேயோ தேவரீர் திருவுள்ளமுகந்திருப்பது?" என்று பெரியபெருமாள் திருமுகத்தைப் பார்த்து விண்ணப்பம் செய்கிறார். சரமச்லோகம் ப்ரபத்தியை விதிக்கிறதாயிருக்கும்; அதில் ருசியுடையாருடைய அநுஸந்தாநமாயிருக்கும் த்வயம்; த்யவநிஷ்டர் பக்கல் ஈச்வரனுக்குண்டான உகப்பைச் சொல்லுகிறது இப்பாட்டு.

விளக்கம் – மஹாபாரதத்தின் சரமச்லோகமாக ஸ்ரீமத் பகவத்கீதை அமைந்துள்ளது போன்று, இந்தப் பிரபந்தத்துக்கு இந்தப் பாசுரம் அமைந்துள்ளது. புராணங்களில் - மதிமந்தாநமாவித்ய யேநாஸௌ ச்ருதிஸாகராத் ஜகத்திதாய ஜநிதோ மஹாபாரத சந்த்ரமா: - எந்த ஒரு வ்யாஸரால் ச்ருதி என்னும் கடலை, புத்தி என்னும் மத்து மூலம் கடைந்து, மஹாபாரதம் என்ற சந்த்ரன், உலகின் நன்மைக்காக உருவாக்கப்பட்டதோ – என்று கூறுவதற்கு ஏற்ப வேதங்களின் ஸாரமாக மஹாபாரதம் உள்ளது. திருப்பாற்கடலைக் கடைந்து, தேவர்களுக்கு ஸர்வேச்வரன் அமிர்தம் அளித்தான்; வேதங்கள் என்னும் கடலைக் கடைந்த வ்யாஸ மஹரிஷி, அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கவல்லதும், ஆத்மாவானது பிழைக்கவல்ல காரணமாக உள்ளதும் ஆகிய மஹாபாரதத்தை ஸம்ஸாரிகளுக்கு அளித்தார். ஸர்வேச்வரன் தேவர்களுக்கு அளித்த அமிர்தமானது, அவர்களை மேலும் பந்தப்படுத்தி இறவாமை அளிப்பதாகும்; ஆனால் வ்யாஸபகவான் ஸம்ஸாரிகளுக்கு அளித்த மஹாபாரதம் அவர்களை ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றி, மோக்ஷம் அளிக்கவல்லதாகும். மஹாபாரதம் என்பது சாறு இல்லாத சக்கை என்னும்படியாக ஸ்ரீமத் பகவத்கீதை உள்ளது, அந்த கீதையின் ஸாரமாக உள்ளது அதன் சரமச்லோகம் ஆகும். இந்தச் சரமச்லோகம் கூறுவதற்காக, அதற்கான தகுதிகளை உண்டாக்கும் பொருட்டு, அதன் முன்பாகப் பலவற்றைக் கூறினான். சரமச்லோகத்திற்குப் பின்னர் (18-67) - இதம் தே நாதபஸ்காய – உனக்கு உரைக்கப்பட்ட இந்த சாஸ்த்ரம் – என்று தொடங்கி, சரமச்லோகத்தின் பெருமைகளை உரைத்தான். அது போன்றே, இந்தச் சரமச்லோகம் உண்டாகவேண்டும் என்ற காரணத்தினாலேயே திருமாலை உண்டானது எனலாம். இந்தப் பாசுரத்திற்குப் பின்னர்

உள்ள பாசுரங்களில், இந்தப் பாசுரம் கூறும் ஆழ்பொருளில் மனதைச் செலுத்தியபடி உள்ளவர்களின் மேன்மை உரைக்கப்படுகிறது. ஆகவே மஹாபாரதத்திற்கு சரமச்லோகம் எவ்விதம் ஸாரமாக உள்ளதோ அது போன்று, இந்தப் பிரபந்தத்திற்கு இந்தப் பாசுரம் ஸாரமாக உள்ளது. இந்தப் பாசுரம் த்யவ மந்திரத்தின் பொருளையும் விளக்குவதாக உள்ளது. ஆனால் த்யவ மந்திரத்தில் உபாயம் என்பது முதலிலும், உபேயம் என்பது அதன் பின்னரும் கூறப்பட்டது. இந்தப் பாசுரத்தில் முதல் இரண்டு வரிகளில் உபேயமும், அடுத்த இரண்டு வரிகளில் உபாயமும் உரைக்கப்பட்டுள்ளது ஏன்? எந்த ஒரு பலனுக்கும் வ்யுத்பத்திவேளை மற்றும் அநுஷ்டானவேளை என்ற இரண்டும் உள்ளது. இவற்றில் வ்யுத்பத்திவேளை என்பது, அந்தப் பயன் என்ன என்பதை அறிந்து கொள்ளும் நிலையாகும். அதன் பின்னர் அந்தப் பயனை அடைவதற்கான உபாயத்தைக் கைக்கொள்ளும் வேளையானது அநுஷ்டானவேளை என்பதாகும். ஆகவே வ்யுத்பத்திவேளையில் உபேயம் முன்னரும், உபாயம் பின்னரும் அல்லவோ உள்ளது? தைத்திரீயம் - ஸ்வர்க்க காமோ ஜ்யோதிஷ்டோமேந யஜேத – ஸ்வர்க்கம் அடைய ஆசை உள்ளவன், ஜ்யோதிஷ்டோமம் செய்வானாக – என்று உள்ளது காண்க. இதன் மூலம், ஸ்வர்க்கம் என்னும் பயனை உணர்த்துவதால், இந்த வரியானது வ்யுத்பத்திவேளையில் உள்ளது. தொடர்ந்து அநுஷ்டாநவேளையின்போது ஜ்யோதிஷ்டோமம் இயற்றப்பட்டவுடன் அல்லவோ ஸ்வர்க்கம் கிட்டும்? ஆக, அநுஷ்டானவேளையில் உபாயமான (ப்ராபகம்) ஜ்யோதிஷ்டோமம் என்பதை இயற்றியவுடன், உபேயமான (ப்ராப்யம்) ஸ்வர்க்கம் கிட்டும். இதன் மூலம் வ்யுத்பத்தி மற்றும் அநுஷ்டானவேளைகளில் ப்ராப்யம் மற்றும் ப்ராபகங்கள் மாறிவரும் என்பது தெளிவு. இங்கு முதலில் கூறப்படும் ப்ராப்யத்தை அடைவதற்கான உபாயமாக அநுஷ்டானமாகிய த்வயம் உள்ளது. த்வயம் அநுஷ்டானவேளையில் உள்ளதால், அதில் உபாயம் முதலிலும் உபேயம் இறுதியிலும் உள்ளது. த்வயத்தின் முதல் பாகத்தினுடைய ஆழ்பொருளை நம்மாழ்வார் அருளிச்செய்தார் (திருவாய்மொழி: 6-10-10). த்வயத்தின் இரண்டாம் பாகத்தினுடைய ஆழ்பொருளை ஆண்டாள் அருளிச்செய்தாள் (திருப்பாவை: 29). ஆனால் இந்த இரண்டையும் ஒன்றாக ஒரே பாசுரத்தில் இந்த ஆழ்வார் மட்டுமே அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்திற்கும் கடந்த பாசுரத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? கடந்த பாசுரத்தில் - அளியன் நம்பையல் என்னார் அம்மவோ கொடியவாறே – என்று ஆழ்வார் கூறியதைக் கேட்ட பெரியபெருமாள் தனது மனதில், "இந்த ஸம்ஸாரம் என்பது நம்மைத் தவிர மற்ற விஷயங்களில் மட்டுமே ஈடுபாட்டினை வளர்ப்பதாக உள்ளது.

இதில் உள்ள இவரோ தன்னுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்ற புருஷார்த்தமான நம்முடைய கைங்கர்யத்தையே விரும்பி நிற்கிறார். அந்தக் கைங்கர்யம் கைகூடுவதற்குத் தனது முயற்சி ஏதும் இல்லாமல், அதற்கும் நம்மையே எதிர்பார்க்கிறார். இதனையும் கடந்து கைங்கர்யம் கிட்டுவதற்குத் தாமதம் ஆவதையும் இவரால் பொறுக்க இயலாமல் மிகவும் வருந்தியபடி உள்ளார். இப்படிப்பட்ட மேன்மைகள் கொண்ட இவரை நாம் அடைந்தோமே!", என்று மிகவும் மகிழ்ந்தான். தன்னுடைய இந்த மகிழ்ச்சி முழுவதும் தனது திருமுகத்தில் வெளிப்படுத்தியவனாக ஆழ்வார் முன்பாக இருந்தான். இதனைக் கண்ட ஆழ்வார், "அழகியமணவாளா! நம்பெருமாளே! உன்னை அடைந்து, தங்களைக் காப்பாற்றும் பொறுப்பை உன்னிடமே ஒப்படைத்து, தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பிலிருந்து ஒதுங்கியவர்களைக் கண்டு இப்படியா மகிழ்வாய்?", என்று பெரியபெருமாள் திருமுகத்தை நோக்கி இந்தப் பாசுரத்தை விண்ணப்பிக்கிறார். சரமச்லோகம் என்பது ப்ரபத்தியை விதிப்பதாக உள்ளது; அந்த ப்ரபத்தியில் ஆசை கொண்டவர்கள் எப்போதும் கூறுவதாக த்வயம் உள்ளது; அந்த த்வயத்தில் ஈடுபட்டவர்களிடம் பெரியபெருமாளுக்கு உள்ள மகிழ்வை இந்தப் பாசுரம் கூறுகிறது.

வ்யாக்யானம் – (மேம்பொருள்) – இதுக்கு மூன்றுபடி நிர்வாஹம். மேலெழுந்த பொருளென்றும், மேவின பொருளென்றும், மேம்பாட்டை விளைக்கும் பொருளென்றும். மேலெழுகையாவது – கர்மமடியாக வந்தேறியாய், பகவத்ஜ்ஞானம் பிறந்தவாறே மறந்து போமதாயிருக்கை; இத்தை போக்யமென்று பாரித்து இழிந்தவனுக்கு ஆபாதப்ரதீதியில் ஒன்று போலே தோற்றி, நிரூபித்தால் அநுபாவ்யமாயிருப்பதொன்றுமின்றிக்கே இருக்கை என்றுமாம். மேவின பொருள் என்றது – துரத்யயா என்கிறபடியே சேதநனால் பிரிக்கவொண்ணாதபடியிருக்கை. "தேவோஹம் மநுஷ்யோஹம்" என்று உடம்பைத் தானாக நினைத்திருக்கும்படியிறே இத்தோட்டைப் பொருத்தமிருப்பது; அத்தைச் சொல்லிற்றாகவுமாம். மேம்பாட்டை விளைக்கையாவது – தன்னைப் பற்றினாரை ஸர்வஜ்ஞதமராக அபிமாநித்திருக்கும்படி பண்ணவற்றாகை. பொருள் என்று பதார்த்தம். அதாகிறது தேஹம். இதுதான் தேஹாநுபந்தியான ப்ராக்ருத பதார்த்தங்களுக்கும் உபலக்ஷணம். (போகவிட்டு) – வாஸனையோடே விட்டென்கை. சரீரகளால் அவை துஷ்கரமாகையாலே ப்ரக்ருதிப்ராக்ருதங்கள் அபுருஷார்த்தம் என்கிற ஜ்ஞாநத்தையுடைய நாகையல்லது புகுரவிட்டான் இவனாகிலிறே இவனால் போகவிடலாவது; மம மாயா துரத்யயா என்கிறபடியே ஈச்வரன் பந்தித்த பந்தத்தை

இவனால் போக்கவொண்ணாதிறே. அநாத்மந்யாத்ம புத்திர்யா என்கிற ச்லோகத்தின்படியே தேஹத்தில் ஆத்மபுத்தியையும், தேஹாநுபந்தியான ப்ராக்ருத பதார்த்தங்களில் மமதா புத்தியையும், தேஹாதிரிக்தமான ஆத்மாவில் ஸ்வதந்த்ர புத்தியையும் தவிருகை. அளவுடையரான ஸநகாதிகளுக்கும் செய்யலாவது இவ்வளவே. இரண்டு மரம் கூட நின்றால் ஒன்றை வெட்ட நினைத்தவன் ஒரு மரத்திலே கொத்திப் பெருங்காயத்தையிட அது பட்டுநிற்குமாபோலே, இப்ரதிபத்தி மாத்ரத்திலே இது விடும். “மெய்ம்மையை மிகவுணர்ந்து ஆம் பரிசறிந்துகொண்டு” என்று மேலும் ஜ்ஞாந ப்ரகரணமாகையாலே, “போகவிட்டு” என்று ப்ரகரண பலத்தாலே ஜ்ஞாநத்தைச் சொல்லிற்றாகக்கடவது.

விளக்கம் - (மேம்பொருள்) – இதற்கு மூன்றுவிதமான பொருள் உரைக்கலாம். அவையாவன - மேலெழுந்த பொருள், மேவின பொருள் மற்றும் மேம்பாட்டை விளைக்கும் பொருள் என்பதாகும். மேலெழுந்த பொருள் என்றால் – கர்மத்தின் தொடர்பு காரணமாக உண்டானதாய், எம்பெருமானைப் பற்றிய ஜ்ஞானம் உண்டானவுடன் கழிந்துவிடுவதாகும். இந்த உடலை இனிமையானது என்று எண்ணி, உடலைக் கொண்டு சுகங்களை அனுபவிக்கும் ஒருவன், ”மேலோட்டமாகப் பார்த்தால் சுகம் அளிப்பதாக உள்ளது, ஆனால் ஆராய்ந்தால் இனிமை ஏதும் இல்லை”, என்று உணர்வதால் இந்த உடலை மேலெழுந்த பொருள் என்றதாகக் கூறலாம். மேவின பொருள் என்றால் – கீதையில் (7-14) - துரத்யயா – கடப்பதற்கு அரிது – என்பதற்கு ஏற்ப சேதனனால் பிரிக்க இயலாதபடி ஜீவனுடன் ஒட்டியுள்ள உடலைக் குறிக்கும். இந்த ஒட்டுதல் எப்படி உள்ளது என்றால், “நானே தேவன், நானே மனிதன்” என்று சொந்தம் கொண்டாடும்படி அல்லவோ உள்ளது? மேம்பாட்டை விளைக்கும் பொருள் என்றால் – ”தாங்கள் அனைத்திலும் சிறந்தவர்கள்” என்ற உணர்வைத் தங்களை நாடி வருபவர்களிடம் உண்டாக்கும்படி செய்யவல்ல உடலாகும். இங்கு பொருள் என்றால் சரீரம் ஆகும். இதன் மூலம் சரீரம் மட்டும் அல்லாமல், சரீரத்துடன் தொடர்புடைய உலகவிஷயங்கள் அனைத்தும் கூறப்படுகின்றன. (போகவிட்டு) – அனைத்தையும் அவற்றின் வாஸனையுடன் கைவிட்டு. சரீரம் உள்ளவரையில் இவை எதனையும் விட இயலாது. ஆகவே இங்கு ”விடுவது” என்பதன் மூலம், ”சரீரம் மற்றும் அதனுடன் சேர்ந்தவை அனைத்தும் புருஷார்த்தங்கள் அல்ல”, என்ற ஜ்ஞானம் பெறுதலே உணர்த்தப்பட்டது. இந்த உடலுடன் உள்ள தொடர்பை உண்டாக்கியவன் அதில் உள்ள

ஜீவன் என்றால் மட்டுமே உடலுடன் கூடிய தொடர்பைக் கைவிட இயலும் அல்லவோ? ஆனால் அந்தத் தொடர்பை உண்டாக்கியவன் அவன் அல்லவே! கீதையில் (7-14) - மம மாயா துரத்யயா – என்னுடைய மாயை என்பது கடக்க அரியது – என்று கூறியபடி, ஈச்வரன் உண்டாகிய சரீரபந்தம் என்பதை ஜீவனால் கைவிட இயலாது அல்லவோ? ஆகவே "போகவிட்டு" என்பதன் மூலம் உணர்த்தப்பட்டது என்னவென்றால்: விஷ்ணுபுராணம் - அநாத்மந்யாத்ம புத்திர்யா – தான் அல்லாத சரீரத்தையே தான் என்று எண்ணும் புத்தி – என்பதற்கு ஏற்ப உடலையே ஆத்மா என்று எண்ணும் புத்தி, உடலுடன் தொடர்புடைய விஷயங்கள் அனைத்தும் தன்னுடையது என்று எண்ணும் புத்தி, உடலைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மா சுதந்திரமானது என்று எண்ணும் புத்தி ஆகியவற்றை நீக்குதலே ஆகும். மிகுந்த ஜ்ஞானம் உள்ள ஸனகர் உள்ளிட்ட பலரும் இதனை மட்டுமே செய்ய இயலும். இரண்டு மரங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து நிற்கும்போது, அவற்றில் ஒன்றை மட்டுமே வெட்டுவதற்கு ஒருவன் வருகிறான்; அவன் வெட்டவேண்டிய மரத்தில் பெரிய காயம் ஒன்றை உண்டாக்கினால், அது மட்டுமே பட்டுப்போகும். இது போன்று பிணைந்து நிற்கும் ஆத்மா மற்றும் சரீரம் ஆகியவற்றில் மேலே கூறியபடியுள்ள புத்திகளை நீக்கினால், உடலானது தானாகவே கழிந்துவிடும். "மெய்ம்மையை மிகவுணர்ந்து ஆம் பரிசறிந்துகொண்டு" என்று தொடர்ந்து ஜ்ஞாநத்தைப் பற்றிக் கூறுவதால், "போகவிட்டு" என்ற பதம் மூலம் ஜ்ஞாநத்தைக் கூறினார் என்றே கொள்ளவேண்டும்.

வ்யாக்யானம் – (மெய்ம்மையை மிகவுணர்ந்து) – மெய்யென்கிறது ஆத்மாவை. "மெய்" என்ன ஆத்மாவைக் காட்டுமோவென்னில், ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யம் அபவத் என்கிற ச்ருதிச்சாயையாலே அருளிச்செய்கிறார். ஸத்யசப்தம் அஸத்யாத் வ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறதன்று; ஆத்மஸ்வரூபத்தின் நித்யதையைச் சொல்லுகிறது. "மெய்ம்மை" என்றொரு முழுச்சொல்லாய், ப்ரத்யக் விஷயத்தைச் சொல்லுகிறது; "கைம்மை, பொய்ம்மை" என்னுமாபோலே. ஆக "மெய்ம்மை" என்றா மெய்யான தன்மை என்றபடி. (மிகவுணர்ந்து) – "தேஹமே ஆத்மா" என்றிருக்கும் லோகாயதிகனளவன்றிக்கே, "தேஹாதிரிக்தமாய் நித்யமாயிருக்கும் ஆத்மா" என்னும் மீமாம்ஸகனளவன்றிக்கே, "ஜ்ஞாநம் ஆகந்துகம்" என்னும் வைசேஷிகனளவன்றிக்கே, ஸ்வயம்ப்ரகாசமாய், நித்யமாய், ஜ்ஞாநகுணகமாய், அணுபரிமாணமாய், ஈச்வரனுக்கு அநந்யார்ஹசேஷமாய்,

அதுதான் ததீயசேஷத்வ பர்யந்தமாக உணருகை. அதாவது – ஆத்மாவை உள்ளபடி உணருகை.

விளக்கம் - (மெய்ம்மையை மிகவுணர்ந்து) – "மெய்" என்பதன் மூலம் ஆத்மா கூறப்பட்டது. "மெய்" என்ற பதம் ஆத்மாவை எப்படி உணர்த்துவதாகும் என்ற கேள்வி எழலாம். தைத்திரீயம் - ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யம் அபவத் – ஸத்யம் எனப்படும் சேதனம், அஸத்யம் எனப்படும் அசேதனம் – என்ற ச்ருதி வரிக்கு ஏற்ப அருளிச்செய்தார். இங்குள்ள ஸத்யம் என்ற பதம் அஸத் பொருளைக் காட்டிலும் வேறுபட்ட பொருளைக் கூறுவதல்ல; ஆத்மாவின் நித்தியத்தன்மையை உரப்பதாகும். "மெய்ம்மை" என்பது முழுச்சொல்லாகத் தனக்குத்தானே ப்ரகாசமாக உள்ள ஆத்மாவைக் குறித்தது. "கைம்மை, பொய்ம்மை" என்று கூறுவது போன்று "மெய்ம்மை" என்றார். ஆகவே "மெய்ம்மை" என்றால் மெய்யான தன்மை என்று கருத்து. (மிக உணர்ந்து) – "இந்த உடலே ஆத்மா" என்று கூறும் லோகாயதன் போன்று அல்லாமல், "உடலைவிட வேறுபட்ட ஆத்மா நித்தியமானது, சுதந்திரமானது" என்று கூறும் மீமாம்ஸகன் போன்று அல்லாமல், "ஆத்மாவைப் பற்றிய அறிவே மோக்ஷம்" என்று கூறும் வைசேஷிகன் போன்று அல்லாமல் ஆத்மாவை உள்ளது உள்ளபடி அறிந்துகொண்டு. அதாவது – ஆத்மா தானே ப்ரகாசிப்பவன், நித்தியமானவன், ஞானம் என்பதைக் குணமாகக் கொண்டவன், அணு அளவான ரூபம் கொண்டவன், ஈச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டவன், ஈச்வரனின் அடியார்களுக்கு வசப்பட்டவன் என்று அறிவதாகும்.

வ்யாக்யானம் – (ஆம்பரிசறிந்து கொண்டு) – ப்ரக்ருதி ப்ராக்ருதங்கள் த்யாஜ்யம் என்று அறிந்து, ஆத்மாவை உள்ளபடி உணர்ந்தால் பின்னை, ஆம்பரிசாவது கைங்கர்யமேயாய்த்து. ஆம்பரிசு – வர்த்திக்கும்படி அறிந்து. ஆத்மாபிமாநாநு ரூபமாகவாய்த்து வ்ருத்தி ஹேதுக்கள்தான் இருப்பது. தன்னைத் திர்யக்காக அபிமாநித்தபோது த்ருண ஸமூஹமாய்த்து வ்ருத்தி ஹேதுவாகக்கடவது; "மநுஷ்யோஹம்" என்று அபிமாநித்தபோது அந்நம் வ்ருத்தி ஹேதுவாகக்கடவது; "தேவோஹம்" என்றபோது அம்ருதம் வ்ருத்தி ஹேதுவாகக்கடவது; "தாஸோஹம்" என்றபோது கைங்கர்யமே வ்ருத்தி ஹேதுவாகக்கடவது; ப்ரக்ருதிப்ராக்ருதங்களில் ஸங்கோசம்போய் ஸ்வரூபத்தை உள்ளபடியறிந்தால் ஸஹஜ கைங்கர்யமேயிறே வ்ருத்தி ஹேதுவாவது. (அறிந்துகொண்டு) – "நிதியெடுத்துக்கொண்டு"

என்னுமாபோலே, ப்ரக்ருதி ப்ராக்ருதங்கள் த்யாஜ்யம் என்கிற ஜ்ஞாநமும், ஆத்மா பகவத்பரதந்த்ரமென்கிற ஜ்ஞாநமும், ப்ராப்யம் கைங்கர்யம் என்கிற ஜ்ஞாநமுமிறே சேதநனுக்கு வேண்டுவது; விடுவிக்கையும் பற்றுவிக்கையும் உபாயபூதனான ஈச்வரன் க்ருத்யமிறே. "மேம்பொருள், மெய்ம்மை, ஆம்பரிசு" என்கிற இவை அவ்வோ பதார்த்தங்களுக்கு வாசகமன்றிக்கேயிருக்க தத்தத் ஸ்வபாவவாசியான சப்தங்களாலே, மறைத்து அருளிச்செய்கிறார் அர்த்த கௌரவத்தாலே.

விளக்கம் - (ஆம்பரிசறிந்து கொண்டு) – ப்ரக்ருதி தொடர்பின் விளைவான சரீரமும், அதனுடன் சேர்ந்த அனைத்தும் கைவிடப்பட வேண்டியவை என்று அறிந்துகொண்டு, ஆத்மாவைப் பற்றி உள்ளது உள்ளபடி அறிந்துகொண்டு, அதன் பின்னர் உண்டாகும் ஆம்பரிசு என்பது ஈச்வரனுக்குச் செய்யும் கைங்கர்யங்களே ஆகும். தன்னுடைய ஆத்மாவை ஒருவன் எப்படி நினைக்கிறானோ அப்படியே அவனுக்கு வளர்ச்சிக்குக் காரணமான ஆம்பரிசு அமைகிறது. ஓர் ஆத்மா விலங்கின் சரீரத்தில் உள்ளதால், தான் அந்த விலங்கு என்று எண்ணும்போது, அந்த விலங்கிற்கு ஏற்ற உணவாக உள்ள ஏதோ ஒரு பொருளே ஆம்பரிசாகிறது. "நான் மனிதன்" என்று ஆத்மா எண்ணினால், சோறு முதலானவை வளர்ச்சிக்குக் காரணமான ஆம்பரிசாகின்றன. "நான் தேவன்" என்று எண்ணினால், அமிர்தம் என்பது வளர்ச்சிக்குக் காரணமான ஆம்பரிசாகிறது. "நான் எம்பெருமானின் தாஸன்" என்று எண்ணினால், கைங்கர்யம் என்பது வளர்ச்சிக்குக் காரணமான ஆம்பரிசாகிறது. ப்ரக்ருதி தொடர்பின் விளைவான சரீரம் மற்றும் அதனுடன் சேர்ந்த அனைத்துடனான தொடர்பு உள்ளதால் அறிவானது சுருங்கிய நிலையிலேயே உள்ளது. அந்தச் சுருக்கம் நீங்கி, ஆத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளது உள்ளபடி அறியும்போது, ஆத்மாவின் இயல்பாக உள்ள கைங்கர்யம் என்பதே வளர்ச்சிக்குக் காரணமான ஆம்பரிசாகிறது. (அறிந்துகொண்டு) – "புதையலை எடுத்துக் கொண்ட பின்னர்" என்று கூறுவது போன்று இந்த ஞானத்தின் மேன்மையைக் கூறுகிறார். சரீரம் போன்றவை கைவிடத்தக்கவை என்னும் ஞானம், ஆத்மாவானது எம்பெருமானுக்கு மட்டுமே வசப்பட்டது என்னும் ஞானம், தன்னுடைய ப்ராப்யம் என்பது கைங்கர்யம் என்னும் ஞானம் ஆகியவை மட்டுமே சேதனனுக்கு இருக்கவேண்டியது ஆகும். ஒரு சேதனனை பந்தங்களிலிருந்து விடுவிப்பதும், தன்னைப் பற்றும்படிச் செய்வதும் உபாயமாக உள்ள ஸர்வேச்வரனின் செயலே அல்லவோ? "மேம்பொருள்" என்பது சரீரம் என்பதையும், "மெய்ம்மை" என்பது ஆத்மா என்பதையும்,

“ஆம்பரிசு” என்பது கைங்கர்யம் என்பதையும் நேரடியாகக் குறிக்கவில்லை என்றாலும் அவற்றின் தன்மைகள் அந்தப் பதங்களில் உள்ளதை மறைமுகமாக உணர்த்துகிறார். இது ஏன் என்றால், இந்தப் பதங்களின் மூலம் உணர்த்தப்படும் அர்த்தங்களின் மேன்மை காரணமாக ஆகும்.

வ்யாக்யானம் – (ஐம்புலனகத்தடக்கி) – இந்த்ரியங்களைத் தன்னுள்ளேயாம்படி பண்ணி. அதாவது, தன் வசத்திலேயாம்படி பண்ணுகை. “மேம்பொருள் போகவிட்டு” என்கிற முதல் வார்த்தையிலே போயிருக்க, “ஐம்புலனகத்தடக்கி” என்கிறது கீழ்ச்சொன்ன கைங்கர்யத்திலே “மமேதம்” என்கிற புத்தியைத் தவிருகை. கைங்கர்யத்திலும் நியமிக்க வேண்டுவன சிலவுண்டு; அவற்றையாய்த்து இங்குச் சொல்லுகிறது. தனக்கு இனிதாகப் பண்ணும் கைங்கர்யமும் அபுருஷார்த்தம்; தனக்கும் அவனுக்கும் இனிதாகப் பண்ணும் கைங்கர்யமும் அபுருஷார்த்தம்; அவனுக்கே ப்ரயோஜநமாகப் பண்ணுமதுவே புருஷார்த்தம். “தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே” என்றும், “ரமமாணா வநே த்ரய:” என்றும் சொல்லக்கடவதிறே. ஆக இவ்வளவால், உத்தரகண்டார்த்தமான ப்ராப்யம் சொல்லிற்றாய்விட்டது. “மேம்பொருள் போகவிட்டு” என்றும், “ஐம்புலனகத்தடக்கி” என்றும் நமச்சப்தார்த்தம் சொல்லப்பட்டது. “மெய்ம்மையை மிகவுணர்ந்து” என்கிற இது, நாராயண பதத்தில் நாரசப்தார்த்தம் சொல்லிற்றாய், அந்த சேஷத்வத்துக்கு ப்ரதி ஸம்பந்தியையொழிய ஸ்திதியில்லாமையாலே சேஷித்வம் ஆர்த்தமாகச் சொல்லிற்றாய்த்து. “ஆம்பரிசறிந்து கொண்டு” என்று சதுர்த்தியிலர்த்தம் சொல்லிற்றாய்த்து. “உணர்ந்து” என்று கொண்டு ஜ்ஞாத்ருத்வபரமாகச் சொல்லுகையாலே ப்ரணவார்த்தம் சொல்லிற்றாய்த்து.

விளக்கம் - (ஐம்புலனகத்தடக்கி) – இந்த்ரியங்களைத் தன்னுள்ளேயே இருக்கும்படிச் செய்து. அதாவது, தன்னுடைய வசத்திலே அவை உள்ளதுபோல் செய்து. “மேம்பொருள் போகவிட்டு” என்கிற முதல் வார்த்தை மூலமாகவே சரீரத்துடன் இணைந்த இந்த்ரியங்களின் வசப்படுதலும் கூறியாகிவிட்டதே, இங்கு மீண்டும் ஏன் கூறவேண்டும்? ”ஐம்புலனகத்தடக்கி” என்பதன் மூலம் மேலே கூறப்பட்ட எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யங்களில் “இந்தக் கைங்கர்யம் மூலம் எனக்கு மகிழ்ச்சி உண்டாகிறது” என்ற சிந்தனையை நீக்குவது பற்றியே கூறப்படுகிறது. கைங்கர்யம் என்பதிலும் சில விதிமுறைகள் உள்ளன. அவற்றை இங்கு கூறுகிறார்.

தனக்கு இனிமையாக உள்ளது என்பதற்காகச் செய்யப்படும் கைங்கர்யம், தனக்கும் அவனுக்கும் இனிமையாக உள்ளது என்பதற்காகச் செய்யப்படும் கைங்கர்யம் ஆகிய இரண்டுமே புருஷார்த்தங்கள் ஆகாது. கைங்கர்யம் என்பது ஸர்வேச்வரனுக்கு மட்டுமே உகப்பை உண்டாக்கவேண்டும். அவனுடைய பயனுடையதாக இருப்பது மட்டுமே புருஷார்த்தமான கைங்கர்யமாகும். இதனைத் திருவாய்மொழியில் (2-9-4) - தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே – என்பதிலும், இராமாயணம் - ரமமாணா வநே த்ரய: - மூவரும் வனத்தில் இன்பத்துடன் வாழ்ந்தனர் – என்பதிலும் காண்க. ஆக இதுவரை த்வயத்தின் உத்தரகண்டத்தின் பொருளான ப்ராப்யம் கூறப்பட்டது. மேலும் இங்கு திருவஷ்டாக்ஷரம் கூறப்பட்டதையும் காண்போம். “மேம்பொருள் போகவிட்டு” என்றும், “ஐம்புலனகத்தடக்கி” என்றும் கூறியதன் மூலம் திருவஷ்டாக்ஷரத்தின் “நம:” என்பதன் பொருள் கூறப்பட்டது. “மெய்ம்மையை மிகவுணர்ந்து” என்பதன் மூலம் “நாராயண” என்பதில் உள்ள “நார” என்பதன் பொருள் கூறப்பட்டது. இத்தகைய அடிமைத்தனம் என்பது எம்பெருமானை முன்னிட்டே கைகூடுவதால், அவனுடைய எஜமானத்தன்மையும் இதில் உணர்த்தப்பட்டது. “ஆம்பரிசறிந்து கொண்டு” என்பதன் மூலம் ”ஆய” என்பதன் நான்காம் வேற்றுமையின் பொருள் உணர்த்தப்பட்டது. “உணர்ந்து” என்று அறிபவனாகிய ஜீவன் கூறப்படுவதால், ஜீவனையும் கூறுகின்ற ப்ரணவம் உணர்த்தப்பட்டது.

வ்யாக்யானம் – இப்பாட்டில் குறையும் பூர்வார்த்தத்தில் சொல்லுகிற ப்ராபகத்வத்தைச் சொல்லுகிறது. (காம்பறத் தலைசிரைத்து) – காம்பற = உபாயாந்தரங்களில் தனக்குண்டான தொற்றற, தலைசிரைத்து = தன் தலையிலுண்டான துரிதங்களைப் போக்கி. தன் தலையில் கிடந்த ஸாதநாந்தரங்களின் தொற்றை அறுத்து என்றபடி. தலைமயிராகிறதுதான் அபிமாநஹேதுவிறே. கோமுற்றவர் தண்டிக்குமிடத்தில் தலையைச் சிரைக்கிறது அபிமானத்தைப் போக்குகிறபடியாய்த்து. ஏகாந்தியாயும் ஸந்யாஸியாயும் வபநம் பண்ணுகிறது தன் அபிமாநத்தைத் தானே போக்குகிறபடியிறே. தண்டமுகத்தாலே பிறர் அபிமானத்தைப் போக்குவதும் இம்முகத்தாலே; ஸ்வாபிமானத்தைப் போக்குவதும் இம்முகத்தாலேயிறே. ஆக, அஹங்கார கர்ப்பமான உபாயாந்தர பரித்யாகத்தைச் சொன்னபடி. உபாயாந்தர பரித்யாக பூர்வகமாகவிறே ஸித்தோபாய பரிக்ரஹமிருப்பது. “காம்பறத் தலைசிரைத்து” என்றவிதும் அர்த்த கௌரவத்தாலே மறைத்து அருளிச்செய்கிறார். இவரேயன்று, அர்த்த கௌரவத்தாலே

ச்ருதியும் த்வா ஸுபர்ணா இத்யாதிகளிலே அர்த்தங்களை மறைத்துச் சொல்லும்; அந்த ச்ருதிச் சாயையாலே அருளிச்செய்கிறார்.

விளக்கம் – இனிவரும் இரண்டு வரிகள் மூலம் த்வயத்தின் பூர்வகண்டத்தில் உரைக்கப்பட்ட ப்ராபகம் கூறப்படுகிறது. (காம்பறத் தலைசிரைத்து) – காம்பற என்றால் "மற்ற உபாயங்களில் தான் கொண்டிருந்த அனைத்து தொடர்புகளும் நீங்கும்படியாக" என்று பொருள். தலைசிரைத்து என்றால் "தனது தலையில் பாரமாகக் கொண்டிருப்பவை. தனது தலையில் கொண்டுள்ள மற்ற ஸாதனங்கள் என்பவற்றின் அனைத்து தொடர்புகளும் நீங்கும்படியாக" என்று பொருள். தலைமுடி என்பது தன்னை உயர்ந்தவன் என்று காட்டிக்கொள்வதற்குக் காரணம் ஆகும். ஒருவனைத் தண்டிக்கும்போது அவனது தலைமுடியைச் சிரைத்தல் என்பது இந்த எண்ணத்தை அழிப்பதற்கே ஆகும். ஏகாந்திகளும், ஸந்ந்யாஸிகளும் தங்கள் தலைமுடியைச் சிரைத்துக் கொள்ளுதல் என்பது தங்களுக்கு இந்த எண்ணம் உண்டாகாமல் இருக்கவே ஆகும். ஆக இந்தச் செயலால் தன்னுடைய அபிமானமும், மற்றவர்களின் அபிமானமும் நீங்குவது காணலாம். ஆக, "நான் உபாயங்களைக் கைக்கொள்கிறேன்" என்ற அஹங்காரம் உண்டாவதற்குக் காரணமான மற்ற உபாயங்களைக் கைவிடுதல் பற்றி உரைத்தார். இப்படி மற்ற உபாயங்களை அடியுடன் கைவிட்ட பின்னர் அல்லவோ ஸித்தோபாயமான ஈச்வரனை உபாயமாகக் கைக்கொள்ளவேண்டும்? இந்த அர்த்தங்கள் மிகவும் உயர்ந்தவை என்பதால், இவற்றின் கம்பீரம் கருதி "காம்பறத் தலைசிரைத்து" என்று மறைமுகமாக இவற்றை உரைத்தார். இவர் மட்டும் இவ்விதம் மறைமுகமாக உரைப்பவர் இல்லை. உபநிஷத்தும் – த்வா ஸுபர்ணா – அழகான சிறகுகளைக் கொண்ட – என்பதன் மூலம் மறைவாகவே பொருளை உரைப்பதாக உள்ளது (இதனை திருமாலை வ்யாக்யான ப்ரவேசத்தில் காண்க). அந்த ச்ருதி போன்று இவரும் மறைமுகமாக இவற்றை உரைத்தார்.

வ்யாக்யானம் – (உன்கடைத்தலையிலிருந்து) – உன் தலைக்கடையென்றபடி. சரணௌ என்கிற ஸ்தாநத்திலே "கடைத்தலை" என்கிறார். ஸ்வநிகர்ஷத்தை அநுஸந்தித்துத் திருவடிகளிலே கிட்டமாட்டாமையாலும், ஸம்ஸாரத்தின் தண்மையை அநுஸந்தித்துப் புறம்பு போகமாட்டாமையாலும், திருவாசலைப் பற்றுகிறார். திருக்கண்ண மங்கையாண்டான், ஒரு ஸம்ஸாரி, தன் வாசலைப் பற்றிக் கிடந்ததொரு நாயை

நலிந்தவனை வெட்டித் தானும் குத்திக் கொண்டபடியைக் கண்டு, "ஒரு தேஹாத்மாபிமாநியளவு இதுவானால், பரம சேதனன் யமாதிகள் கையில் நம்மை விட்டுக்கொடான்" என்று திருவாசலைப் பற்றிக் கிடந்தானிறே. (இருந்து) – விஷயாந்தர ப்ராவண்யத்தாலே பரகுபரகென்று திரிந்தவன், மரக்கலத்துக்கு நங்கூரம் விழவிட்டாற் போலே அத ஸோபயங்கதோ பவதி என்று, அபய ஸ்தாநத்தைப் பற்றி நிர்ப்பயனாயிருந்தபடி. (வாழும்) – உபாயமும் ஈச்வரனேயானால் போகமிறே பின்புள்ளது. "இருந்து வாழும்" என்று அவ்விருப்புத்தானே வாழ்ச்சியான இருப்பு என்றுமாம். (சோம்பரை உகத்திபோலும்) – உன் பக்கலிலே ந்யஸ்தபரராய் ஸ்வஹிதத்தில் சோம்பினவர்களைக் கண்டால் உனக்குத் திருவுள்ளம் இங்ஙனே உகந்தாகாதே இருப்பது? "வாழும் சோம்பர்" என்று கெடும் சோம்பரை வ்யாவர்த்திக்கிறது என்றுமாம். அதாகிறது – சாஸ்த்ரத்தில் நாஸ்திகராய்க் கர்த்தவ்யங்களை விடுகையன்றிக்கே, ஆஸ்திக்யாதிரேகத்தாலே நிரபேக்ஷோபாயத்தை ஸ்வீகரித்து, பகவதநுபவமே யாத்ரையாய் ஸ்வஹிதத்தில் சோம்பியிருக்கை. (போலும்) – நித்யஸூரிகளை உகக்குமாபோலே சோம்பரை உகத்தி. (சூழ்புனலரங்கத்தானே) – இது நீர் அறிந்தபடி எங்ஙனேயென்னில், கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிற இதுதானே அறிவிக்கிறதில்லையோ? நீர் வாய்ப்பையும், நிழல் வாய்ப்பையும் பற்றக் கண்வளர்ந்தருளுகிறாரென்று பேராய், "ஒரு சோம்பரைக் கிடைக்குமோ?" என்னும் நசையாலேயிறே தேவரீர் சோம்பாதே கண்வளர்ந்தருளுகிறது. "காம்பறத் தலைசிரைத்து" என்றவிடம் உபாய ஸ்வீகாரத்துக்கு அங்கமான உபாயாந்தர பரித்யாகத்தைச் சொல்லுகிறது. "சூழ்புனலரங்கத்தானே – உன் கடைத்தலை" என்று நாராயண சப்தார்த்தமான சீலாதிகளை நினைக்கிறது.

விளக்கம் – (உன்கடைத்தலையிலிருந்து) – உன் தலைக்கடை என்று கொள்ளவேண்டும். த்வயத்தில் உள்ள சரணௌ என்ற பதம் திருவடிகளை உணர்த்துவதால், "தலைக்கடை" என்கிறார். தன்னுடைய இழிந்த நிலையை எண்ணி எம்பெருமானின் திருவடிகளின் அருகில் இவர் செல்லாமல் உள்ளதாலும், ஸம்ஸாரத்தின் தாழ்வைக் கண்டு இவர் அவனை விட்டு மற்ற விஷயங்களின்பால் செல்லாமல் உள்ளதாலும், அவனுடைய திருவாசலைப் பற்றுகிறார். திருக்கண்ணமங்கையாண்டான் ஒரு நிகழ்வைக் கண்டார். ஒரு நாயை வளர்த்து வரும் ஒருவன், தன்னுடைய நாயை துன்புறுத்திய மற்றொருவனை கொலை செய்துவிட்டு, தன்னைத் தானே குத்திக் கொண்டு இறந்ததைக் கண்டார். தனது

மனதில், “சரீரமே ஆத்மா என்று எண்ணும் ஒரு ஸம்ஸாரிக்கு மற்றொரு உயிரின் மீது இத்தனை ஈடுமாடு இருந்தால், பரமாத்மாவிற்கு எத்தனை பாசம் நம் மீது இருக்கும்? இப்படி உள்ளபோது நம்மை ஒருபோதும் யமன் உள்ளிட்டவர்களிடம் அவன் காட்டிக் கொடுக்க மாட்டான்”, என்று முடிவு செய்தார். உடனே தன்னுடையதான அனைத்தையும் விட்டு, ஸர்வேச்வரனின் கோயில் தலைவாசலிலே எப்போதும் கிடந்தார். (இருந்து) – உலக விஷயங்களில் உள்ள ஈடுபாடு காரணமாக பரபர என்று திரிந்த ஒருவன், கப்பல் ஒன்று நங்கூரம் வீசப்பட்டால் எவ்விதம் ஒரே இடத்தில் அசையாமல் நிற்குமோ அது போன்று, தைத்திரீயம் - அத ஸோபயங்கதோ பவதி – அவன் ஸம்ஸார பயம் நீங்கப் பெறுகிறான் – என்பதற்கு ஏற்ப, தனக்கு அபயம் அளிக்கும் இடமான எம்பெருமானைப் பற்றிய பின்னர் ஸம்ஸார பயம் நீங்கி நிற்பான். (வாழும்) – எம்பெருமானை அடைய உதவும் உபாயம் என்பதும் எம்பெருமானாகவே உள்ளபோது, வேறு ஏதும் முயற்சிக்காமல் அவனை அனுபவிப்பது மட்டுமே வாழ்க்கையாக இருக்கும் அல்லவோ? ”இருந்து வாழும்” என்பதன் மூலம் அவனை உபாயமாகக் கொள்வதே வாழ்க்கை என்றார். (சோம்பரை உகத்திபோலும்) – தங்களைக் காப்பாற்றும் முழுப்பொறுப்பையும் உன்னிடம் ஒப்படைத்துவிட்டு, தங்களது வாழ்க்கை என்பதைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல் சோம்பலுடன் உள்ளவர்களைக் காணும்போது உன்னுடைய திருவுள்ளம் இத்தனை மகிழ்வா அடையும்? “வாழும் சோம்பர்” என்றால் – தனக்காக வாழ்வதில் சோம்பலை உடையவர்கள் கெடும் சோம்பர்கள் ஆவர்; எம்பெருமானுக்காக மட்டுமே வாழ்ந்து, அதனால் தங்களைப் பற்றிக் கவலைப்படாமல் சோம்பலைக் கொண்டவர்கள் வாழும் சோம்பர் ஆவர். இவர்கள் சாஸ்த்ரங்களின் மீது நம்பிக்கை இல்லாமல் அவற்றில் விதிக்கப்பட்ட கர்மங்களை இயற்றாமல் இருப்பதில்லை; மாறாக, மிகவும் சிறந்த ஆஸ்திகர்களான இவர்கள் தங்களிடம் எதனையும் எதிர்பாராமல் உள்ள உபாயமான எம்பெருமானை மட்டுமே பற்றியவர்களாக, அவனை அனுபவிப்பது மட்டுமே தங்கள் கர்மமாக, தங்களது வாழ்வைப் பற்றிய கவலை சிறிதும் இல்லாத சோம்பேறிகளாக இருப்பார்கள். (போலும்) – நித்யஸூரிகளைக் கண்டால் எத்தனை மகிழ்வு கொள்வாயோ அது போன்று இந்தச் சோம்பேறிகளைக் கண்டால் மகிழ்வாய் போலும். (சூழ்புனலரங்கத்தானே) – இதனை நீ எப்படி உணர்த்துகிறாய் என்றால், திருவரங்கத்தில் கண்வளர்வது மூலமே அன்றோ? பெரியபெருமாள் சயனித்துள்ள விதத்தைக் காணும்போது, “இவன் இங்குள்ள காவேரி நீருக்காகவும், அடர்ந்த சோலையின் நிழலுக்காகவும் சயனித்துள்ளான் போலும்”,

என்றே எண்ணுவர். ஆனால் அவனோ தனது மனதில், “இது போன்று தன்னைப் பற்றிக் கவலைப்படாமல், நமக்காக வாழும் சோம்பேறி ஒருவனாவது சிக்கமாட்டானா?”, என்று எண்ணியபடி மிகுந்த ஆசையுடன் கண்வளர்கிறான். இப்படியாக ஒருவனைத் தன்னுடன் இணைப்பதில் இவன் சற்றும் சோம்பல் கொள்வதில்லை. ”காம்பறத் தலைசிரைத்து” என்பதன் மூலம் உபாயமான எம்பெருமானைப் பற்றுவதற்கு அங்கமாக உள்ள ”மற்ற உபாயங்களைக் கைவிடுதல்” என்பது கூறப்படுகிறது. “சூழ்புனலரங்கத்தானே – உன் கடைத்தலை” என்பதன் மூலம் நாராயண என்பதன் ஆழ்பொருளான ஸௌசீல்யம் போன்றவை உணர்த்தப்பட்டன.

வ்யாக்யானம் – பிராட்டி ஸ்வரூப நிரூபக தர்மமாகையாலும், நாராயண சப்தத்தில் அந்தர்பூதையாகையாலும், “உன்” என்கிற இதிலே லக்ஷ்மீஸம்பந்தம் அநுஸந்தேயம். “கடைத்தலை” என்றது “சரணௌ” என்றபடி. “இருந்து வாழும்” என்று க்ரியா பதத்திலே உபாயாத்யவஸாயத்தையும், அதுதானே போகரூபமாயிருக்கிறபடியும் சொல்லிற்று. “சோம்பரை” என்று ப்ரபத்யே என்கிற உத்தமனாலே ஆக்ஷிப்தனான அதிகாரியைச் சொல்லுகிறது.

விளக்கம் – பெரியபிராட்டியானவள் ஸ்வரூப நிரூபக தர்மமாக உள்ளதாலும், நாராயண என்ற பதத்தின் உள்ளே இருப்பவளாக உள்ளதாலும், “உன்” என்ற பதம் மூலம் மஹாலக்ஷ்மியின் ஸம்பந்தம் உணர்த்தப்பட்டது. ”கடைத்தலை” என்னும் பதம் மூலம் “சரணௌ” என்பது கூறப்பட்டது. “இருந்து வாழும்” என்பதன் மூலம் – ப்ரபத்யே என்ற பதம் மூலம் காண்பிக்கப்படும் ”எம்பெருமானே உபாயம்” என்னும் மன உறுதி மற்றும் அந்த உறுதியான நிலையே இன்பமாக உள்ள நிலையும் உணர்த்தப்பட்டது. ப்ரபத்யே என்பதன் மூலம் கூறப்படும் ப்ரபன்ன அதிகாரியின் தகுதியானது “சோம்பரை” என்பதன் மூலம் உணர்த்தப்பட்டது.

39. அடிமையில் குடிமை இல்லா அயல் சதுப்பேதிமாரில்
குடிமையில் கடைமை பட்ட குக்கரில் பிறப்பரேலும்
முடியினில் துளபம் வைத்தாய் மொய்கழற்கு அன்பு செய்யும்
அடியரை உகத்தி போலும் அரங்கமாநகருளானே.

பொருள் – ஸர்வேச்வரன் என்பதை உணர்த்தும்விதமாக திருமுடியில் திருத்துழாய் மாலை கொண்டவனே! திருவரங்கத்தில் கண்வளரும் அழகியமணவாளா! உன்னுடைய கைங்கர்யங்களில் சற்றும் ஈடுபாடு இல்லாமல், அடிமைத்தனம் என்பதற்கு மாறுபட்டு, நான்கு வேதங்களை மட்டும் ஓதியபடி சிலர் இருக்கக்கூடும். இப்படிப்பட்டவர்களைக் காட்டிலும், தங்களது பிறப்பினால் மிகவும் தாழ்ந்த சண்டாளர்களை விட தாழ்ந்த பிறவி கொண்டவர்கள் உன்னுடைய திருவடிகளில் ஆழ்ந்த ப்ரேமையுடன் செய்யும் கைங்கர்யங்களை ஏற்று, இவர்களைக் கண்டு அல்லவோ நீ மகிழ்கிறாய்!

அவதாரிகை – அடிமை தொடங்கி மேல் ஆறு பாட்டும் இந்த ஜ்ஞாநமுடையாருடைய ராஜகுலம் சொல்லுகிறது. இவருடைய பயிலுஞ்சுடரொளி நெடுமாற்கடிமை இருக்கிறபடி. ஜந்ம வ்ருத்த ஸ்வபாவங்களால் குறைய நின்றார்களேயாகிலும் அவர்கள் இந்த ஜ்ஞாநமுடையார்களாகில் உத்தேச்யர் என்கிறார். இப்பாட்டால் எத்தனையேனும் தண்ணிய ஜந்மங்களிலே பிறந்தவர்களேயாகிலும், இந்த ஜ்ஞாநத்திலே நிஷ்டையுடையார்களாகில் திருத்துழாயோபாதி ஈச்வரனுக்கு சிரஸாவஹிக்கப்படுவர் என்கிறார்.

விளக்கம் – "அடிமை" என்று தொடங்கும் இந்தப் பாசுரம் தொடக்கமாக உள்ள அடுத்த ஆறு பாசுரங்கள் மூலம், கடந்த பாசுரத்தில் விளக்கப்பட்ட ஞானம் அடைந்தவர்களின் ஏற்றத்தைக் கூறுகிறார். இவர்களைப் போன்ற அடியார்களின் மேன்மையை திருவாய்மொழியில் – பயிலுஞ்சுடரொளி, நெடுமாற்கடிமை முதலான பாசுரங்களில் ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்தார். இப்படிப்பட்டவர்கள் தங்களது பிறவி, ஒழுக்கம் முதலான பலவற்றில் தாழ்ந்தவர்கள் என்றாலும், மேலே கூறப்பட்ட பாசுரத்தில் உள்ள ஞானம் பெற்றார்களென்றால், அவர்களே நம்மால் அண்டத்தகுந்தவர்கள் என்கிறார். ஒருவன் எத்தனை தாழ்வான பிறவியில் பிறந்திருந்தாலும், கடந்த பாசுரத்தில் கூறப்பட்ட அறிவைப் பெற்றான் என்றால், அவன் திருத்துழாய் போன்று, ஸ்ரீரங்கநாதனால் தனது தலையில் வைத்துக் கொண்டாடப்படுவான் என்கிறார்.

வ்யாக்யானம் – (அடிமையில் குடிமையில்லா) – கைங்கர்யம் நமக்குக் கர்த்தவ்யம் என்றிருக்குமவர்களன்றிக்கேயிருக்கை. கைங்கர்யமாகிறது ஸஹஜம்; அதொழியச்

செல்லாதிருக்கையாய்த்து ப்ராப்தம்; அதின்றிக்கே இருக்குமவர்கள். (அயல் சதுப்பேதிமாரில்) – அடிமைக்கு அசலான சதுர்வேதிகளாயிருப்பாரிற்காட்டில். வேதாத்யயனம் பண்ணுகிறதுக்கு ப்ரயோஜநம் ஈச்வரனை உள்ளபடி அறிகையும், தன்னை உள்ளபடி அறிகையும், கைங்கர்யம் ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தமென்று அறிகையுமாய்த்து. அயலாகையாவது இந்த ஜ்ஞாநத்துக்குடலாக வேதாத்யயனம் பண்ணுகிறோமென்று அறியாதிருக்கை. அத்யயன பலம் அர்த்தஜ்ஞாநமென்று அறியாதவர்கள் சதுர்வேதிகளானாலும் நிஷ்ப்ரயோஜநம் என்கை. விஷ்ணுபக்தி விஹீநோ யஸ்ஸர்வசாஸ்த்ரார்த்த வேத்யபி ப்ராஹ்மண்யம் தஸ்ய ந பவேத் தஸ்யோத்பத்திர் நிரூப்யதாம் என்னக்கடவதிறே. ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி இத்யாதி.

விளக்கம் - (அடிமையில் குடிமையில்லா) – கைங்கர்யம் என்பது நமக்குச் செய்யத்தக்கதாக உள்ளது என்னும் சிந்தனை அற்றவர்கள். கைங்கர்யம் என்பது ஆத்மாவுக்கு இயல்பான ஒன்றாகும். இத்தகைய கைங்கர்யம் என்பது இல்லாமல் வாழ இயலாது என்ற சிந்தனை இருத்தல் வேண்டும். இந்தச் சிந்தனை இல்லாமல் உள்ளவர்கள். (அயல் சதுப்பேதிமாரில்) – "எம்பெருமானுக்கு அடிமை" என்பதிலிருந்து மாறுபட்ட சிந்தனை கொண்ட நான்கு வேதங்களை அறிந்தவர்களைவிட. வேத அத்யயனம் செய்வதன் பலன் என்னவென்றால் ஸர்வேச்வரனை உள்ளது உள்ளபடி அறிந்து கொள்ளுதல், தன்னை உள்ளது உள்ளபடி அறிந்து கொள்ளுதல், கைங்கர்யம் என்பது மட்டுமே ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்ற புருஷார்த்தம் என அறிந்து கொள்ளுதல் ஆகியவையே ஆகும். அயலாகை என்றால், இந்த ஞானம் பெறுவதற்காகவே நாம் வேத அத்யயனம் செய்கிறோம் என்று அறியாமல் இருப்பதாகும். வேத அத்யயனம் செய்வதன் பலன் வேதங்களால் உரைக்கப்படும் இத்தகைய ஆழ்பொருளை அறிவதே என்று அறியாமல் உள்ளவர்கள், நான்கு வேதங்களை அறிந்தவர்கள் என்றாலும், அவர்களால் எந்தவிதமான பயனும் யாருக்கும் இல்லை. பாத்மோத்தர ஸம்ஹிதை - விஷ்ணுபக்தி விஹீநோ யஸ்ஸர்வசாஸ்த்ரார்த்த வேத்யபி ப்ராஹ்மண்யம் தஸ்ய ந பவேத் தஸ்யோத்பத்திர் நிரூப்யதாம் – அனைத்து சாஸ்த்ரங்களை அவற்றின் பொருளுடன் ஒருவன் அறிந்திருந்தாலும், அவனுக்கு விஷ்ணுவிடம் பக்தி இல்லையெனில், அவனுக்கு அந்தணத்வம் இல்லை; அவனுடைய பிறப்பே சந்தேகத்திற்கு உரியது – என்றது காண்க. மேலும் ப்ரஹ்மாண்ட புராணம் - ய:

புத்ர: பிதரம் த்வேஷ்டி – யார் விஷ்ணுவைத் த்வேஷிக்கிறானோ அவன் சண்டாளனுக்குப் பிறந்தவன் – என்றது.

வ்யாக்யானம் – இனி, இவர்களிற்காட்டில் ஈச்வரனுக்கு உத்க்ருஷ்டரைச் சொல்லுகிறது மேல். (குடிமையில் கடைமை பட்ட குக்கரில் பிறப்பரேலும்) – வேதவிஹிதங்களை அநுஷ்டியாதும், நிஷித்தங்களை அநுஷ்டித்தும் போருகையாலே நிஹீந ஜந்மங்களிலே பிறந்தவர்களேயாகிலும், குக்கராகிறார்; சண்டாளரிலும் தண்ணியர் சிலர். "பிறப்பரேலும்" என்கிறது பகவத்ஜ்ஞாநத்துக்கு ஜன்மங்களுடைய உத்கர்ஷாபகர்ஷங்களில் நியதியில்லை. ஸர்வத்ர கலு த்ருச்யந்தே என்கிறபடியே, இந்த ஜ்ஞாநம் எல்லா ஜந்மங்களிலும் ஸம்பவிக்கும் என்கை. வேதோப ப்ரும்ஹணார்த்தமாக அவதரித்த ஸ்ரீராமாயணத்தில் காட்டிலே திரிவார் சில வேடரையும், வேடுவிச்சிகளையும், குரங்குகளையும், ராக்ஷஸரையும்; மஹாபாரதத்தில் விதுர தர்மவ்யாதாதிகளையும், பிசாசங்களையும், இடையரையும், இடைச்சிகளையும் கண்டோமிறே. "பாம்பணைமேல் பள்ளி கொண்டருளும் சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே" என்கிறபடியே, நித்யஸூரிகளிற்காட்டிலும் இங்கே வந்து ஈச்வரன் ஆர்ஜித்தவர்களாகையாலே இவர்கள் சீரியர் என்கை. அல்லாத பொன்னிற்காட்டில் வேதகப்பொன்னுக்கு ஏற்றமுண்டிறே.

விளக்கம் – அடுத்து, மேலே கூறப்பட்டவர்களைக் காட்டிலும் அழகியமணவாளனால் உயர்ந்தவர்கள் என்று கொண்டாடப்படுபவர்களைப் பற்றிக் கூறத் தொடங்குகிறார். (குடிமையில் கடைமை பட்ட குக்கரில் பிறப்பரேலும்) – வேதங்களில் விதிக்கப்படுபவற்றைக் கடைபிடிக்காமலும், வேதங்களால் தடுக்கப்பட்டவற்றைச் செய்தபடியும் இருக்கும் காரணத்தால் ஒரு சிலர் மிகவும் தாழ்வான பிறவிகளை அடைந்திருக்கக்கூடும். சண்டாளர்களைக் காட்டிலும் மிகவும் தாழ்வான பிறவி கொண்டவர்கள் குக்கர் எனப்படுகிறார்கள். "பிறப்பரேலும்" என்று ஏன் கூறினார்? கடந்த பாசுரத்தில் கூறப்பட்ட ஞானம் அடைவதற்கு ஒருவனது பிறப்பின் உயர்வு மற்றும் தாழ்வு அவசியம் இல்லை என்பதை உணர்த்தவே ஆகும். இராமாயணம் ஆரண்யகாண்டம் - ஸர்வத்ர கலு த்ருச்யந்தே – சரணம் அடையத்தக்கவர்கள் அனைத்துப் பிறவிகளிலும் காணப்படுகின்றனர் – என்று கூறுவது போன்று, இத்தகைய ஞானம் என்பது அனைத்துவிதமான பிறவிகளிலும் உண்டாகும். இராமாயணத்தில் –

காட்டில் திரிகின்ற வேடர்கள், வேடுவிச்சிகள், குரங்குகள், அரக்கர்கள் போன்ற பலரும் இந்த ஞானம் பெற்றவர்களாக இருந்ததைக் காணலாம். மஹாபாரதத்தில் – விதுரர், தர்மவ்யாதன், பல பிசாசுகள், இடையர்கள், இடைச்சிகள் போன்ற பலரும் இந்த ஞானம் பெற்றவர்களாக இருந்ததைக் காணலாம். திருவிருத்தம் (79) - பாம்பணைமேல் பள்ளி கொண்டருளும் சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே – என்று கூறுவது போன்று, அழகியமணவாளன் இங்கு வந்து இவர்களைத் திருத்தித் தன் பணியில் ஈடுபடுத்திக் கொண்டதால், இவர்கள் நித்யஸூரிகளைக் காட்டிலும் உயர்ந்தவர்களே என்கிறார். தன்னுடைய தொடுதல் மூலமே மற்றவற்றையும் பொன்னாக்கும் வேதகப்பொன் என்பது மற்ற பொன்னைக் காட்டிலும் சிறந்தது அல்லவோ?

வ்யாக்யானம் – (முடியினில் துளபம் வைத்தாய்) – திருத்துழாயோபாதி சிரஸாவஹிக்குமவர்களென்கை. திருத்துழாய்மாலை ஸர்வேச்வரத்துக்கு ஸஹசகமானாற் போலே இவர்களாலே உன்னுடைய ஸர்வேச்வரத்வம் நிறம் பெறும் என்னவுமாம். (மொய்கழற்கு அன்பு செய்யும்) – "ஐம்புலனகத்தடக்கி" என்கிறபடியே உன் உகப்புக்குப் புறம்பானவற்றைப் பொகட்டு "உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு" என்று திருவடிகளுக்குப் பரியுமதுவே யாத்ரையாய், அத்தையே ப்ராப்யமாக நினைத்திருக்குமவர்கள். (அடியரை) – கீழ் உபேத்யத்தைச் சொல்லிற்றாய், இத்தால் உபாயத்தைச் சொல்லுகிறது. "சோம்பர்" என்கிறபடியே ஸ்வரூபத்தை உள்ளபடி உணர்ந்து ஸ்வரக்ஷணத்தில் அந்வயமின்றிக்கே இருக்குமவர்கள். (அடியர்) – அடியிலுள்ளார். உகப்பதும் திருவடிகளேயாய், தாரகமும் திருவடிகளேயாயிருக்கை. "நிழலுமடிதாறுமானோம்" என்னக்கடவதிறே. (உகத்தி போலும்) – இப்படியிருக்குமவர்களை உகத்தி. இதுக்குப் புறம்பான சதுர்வேதிகளைக்காட்டில் இவர்களையேயிறே தேவரீர் உகந்திருப்பது. (அரங்கமாநகருளானே) – நிஹீன ஜந்மாக்களாய் உனக்கு நல்லராயிருப்பார்க்கு முகங்கொடுக்கைக்காகவன்றோ இங்கு வந்து கண்வளர்ந்தருளுகிறது. உத்க்ருஷ்டர்க்கு முகங்கொடுக்குமிடத்தில் பரமபதத்திலேயிருக்க அமையாதோ?

விளக்கம் - (முடியினில் துளபம் வைத்தாய்) – இப்படிப்பட்ட ஞானம் உள்ளவர்கள், அழகியமணவாளனால் தன்னுடைய தலையில், துளசியைப் போன்று வைத்துக் கொண்டாடத்தக்கவர்கள் என்று கருத்து. தலையில் துளசியை அணிந்திருப்பது என்பது

ஸர்வேச்வரத்துக்கு அடையாளம் ஆகும். இது போன்று இவர்கள் மூலமாக உனது ஸர்வேச்வரத்வம் மேலும் வலுப்பெறுகிறது. (மொய்கழற்கு அன்பு செய்யும்) – கடந்த பாசுரத்தில் "ஐம்புலனகத்தடக்கி" என்று கூறுவது போன்று உன்னுடைய மகிழ்ச்சிக்கு விரோதமாக உள்ள தங்களது இன்பங்கள் அனைத்தையும் விலக்கி; திருப்பல்லாண்டு (1) - உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு – என்று கூறுவது போன்று உனது திருவடிகளுக்குப் பல்லாண்டு கூறுவதே தங்கள் பொழுதுபோக்கு என்று கொண்டு; இத்தகைய வாழ்க்கையே தங்களது குறிக்கோள் என்று இருப்பவர்கள். (அடியரை) – இதுவரை உபேயத்தைக் கூறினார், இனி உபாயத்தைக் கூறுகிறார். கடந்த பாசுரத்தில் "சோம்பர்" என்று கூறுவதற்கு ஏற்ப, தங்களது ஆத்மாவின் ஸ்வரூபம் என்பது அழகியமணவாளனுக்கு மட்டுமே அடிமை என்பதை உள்ளது உள்ளபடி அறிந்து, தங்களைக் காப்பாற்ற அழகியமணவாளன் உள்ளான் என்ற சிந்தனையுடன், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தாங்களாகவே எந்தவிதமான முயற்சியும் எடுக்க எண்ணம் இல்லாமல் உள்ளவர்கள். (அடியர்) – அடியில் உள்ளவர்கள். இவர்கள் மகிழ்வது அழகியமணவாளனின் திருவடிகளைக் கண்டு மட்டுமே அல்லாமல், இவர்களது வாழ்வும் அவனது திருவடிகளாகவே உள்ளன. இதனை பெரியதிருவந்தாதி (31) - நிழலுமடிதாறுமானோம் – என்றது காண்க. (உகத்திபோலும்) – இப்படி உள்ளவர்களைக் கண்டு நீ மகிழ்கிறாய். இவ்விதமான அறிவில்லாதவர்கள் நான்கு வேதங்களை அறிந்தவர்களாக இருந்தாலும் அவர்களை ஒதுக்கி, தாழ்ந்தவர்களாக இவர்களிடம் அல்லவோ நீ அன்புடன் உள்ளாய்? (அரங்கமாநகருளானே) – தாழ்வான பிறவி எடுத்தபோதிலும், உன்னிடம் மிகுந்த அன்பும் பரிவும் கொண்டபடி உள்ளவர்களுக்கு உனது அழகைக் காண்பிக்க அல்லவோ நீ இந்தத் திருவரங்கத்தில் கண்வளர்கிறாய்? உயர்ந்தவர்களுக்கு மட்டுமே உனது அழகை நீ காண்பிப்பவன் என்றால் பரமபதத்திலேயே நீ இருந்திருக்கமாட்டாயோ?

40. திருமறு மார்வ நின்னைச் சிந்தையுள் திகழ வைத்து

மருவிய மனத்தராகில் மாநிலத்து உயிர்களெல்லாம்

வெருவு உறக் கொன்று சுட்டிட்டு ஈட்டிய வினையரேலும்

அருவினைப் பயன் அது துய்யார் அரங்கமா நகருளானே

பொருள் – ஸ்ரீரங்கநாச்சியாரையும், ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவையும் பரந்த திருமார்பில் கொண்டவனே! அழகியமணவாளா! பரந்த இந்த உலகில் உள்ள உயிர்கள் நடுங்கும்படியாகப் பலவற்றையும் கொன்றபடியும், தீயினால் கொளுத்தியபடியும் சிலர் இருக்கக்கூடும். இப்படியாகப் பாவங்கள் ஈட்டிய இவர்கள் உன்னைத் தங்கள் உள்ளத்தில் உபாயமாக வைத்து, நீயே உபேயமும் ஆவாய் என்னும் உறுதியுடன் இருந்தால், தாங்கள் ஈட்டிய பாவங்கள் காரணமாக உண்டாகும் பலன்களை அனுபவிக்கமாட்டனர்.

அவதாரிகை – ஜந்மத்தால் வந்த தண்மையன்றிக்கே எத்தனையேனும் தண்ணிய வ்ருத்தமுடையாரும், மேம்பொருளில் சொன்ன ஜ்ஞாநத்திலே நிஷ்டராகில், அவர்களுக்கு அந்தக் கர்மபலம் அநுபவிக்கவேண்டா என்கிறார்.

விளக்கம் – ஒருவனது பிறவி காரணமாக உண்டாகும் தாழ்வைக் கூறினார். அந்தத் தாழ்வு அல்லாமல், தங்களது செயல்கள் காரணமாகச் சிலர் தாழ்ந்து போகக்கூடும். அப்படிப்பட்டவர்களும் கடந்த பாசுரத்தில் உரைக்கப்பட்ட ஞானத்தப் பெற்றனர் என்றால், தங்களது தாழ்வான செயல்களால் உண்டாகும் பலன்களை அனுபவிக்க வேண்டாம் என்கிறார்.

வ்யாக்யானம் – (திருமறுமார்வ) – திருவையும் மறுவையும் மார்விலே உடையவனே! ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனே! ஸ்ரீவத்ஸவக்ஷா: என்கிற ஸர்வேச்வரத்வ சிஹ்நமிறே. பிராட்டி திருமார்பிலே எழுந்தருளியிருக்கிற இருப்பை அநுஸந்திக்கிறாரிறே வாத்ஸல்யம் தோற்றுகைக்காக. “அலர்மேல் மங்கையுறைமார்பா” என்றும், “நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும்” என்றுமிறே இவர்கள் வார்த்தை இருப்பது. இதுதான் மேம்பொருளில் மறைத்த லக்ஷ்மீஸம்பந்தத்தை அதில் நிஷ்டையுடையவர்களுடைய வைபவம் சொல்லுகிற இடத்தில் வெளியிடுகிறார். உபாயோபேயங்கள் இரண்டுக்கும் அவள் ஸம்பந்தமே வேணும் என்னுமிடம் தோற்றுகிறது.

விளக்கம் - (திருமறுமார்வ) – ஸ்ரீரங்கநாச்சியாரையும், ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவையும் பரந்த திருமார்பில் கொண்டவனே! ஸ்ரீரங்கநாச்சியாரைத் திருமார்பிலே கொண்ட அடையாளம் காரணமாக ஸர்வேச்வரன் நீயே என்பதை உணர்த்துபவனே! இராமாயணம் - ஸ்ரீவத்ஸவக்ஷா: - ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவை எப்போதும் கொண்டவன் – என்பதற்கு ஏற்ப இவையே இவன் ஸர்வேச்வரன் என்று உணர்த்தும் அடையாளங்கள் ஆகும். கொடுமையான பாவங்கள் செய்தவர்களையும் மன்னிக்கும் வாத்ஸல்யத்தை உணர்த்துவதற்காக ஸ்ரீரங்கநாச்சியாரின் இருப்பைக் கூறுகிறார். இவர் போன்ற ஆழ்வார்களின் சொற்கள் திருவாய்மொழி (6-10-10) - அலர்மேல் மங்கையுறைமார்பா, திருப்பல்லாண்டு (2) - நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் – என்பது அல்லவோ? கடந்த பாசுரத்தில் பிராட்டியின் தொடர்பு என்பது மறைவாக உள்ளது. அந்தப் பாசுரத்தின் ஆழ்பொருளில் எப்போதும் தங்களது மனதை வைத்திருப்பவர்களின் மேன்மையைக் கூறும் இந்தப் பாசுரத்தில், அந்த மறைபொருளை உணர்த்துகிறார். இதன் மூலம் உபாயம் மற்றும் உபேயம் ஆகிய இரண்டும் கைகூட ஸ்ரீரங்கநாச்சியாரின் தொடர்பு வேண்டும் என்பது வெளிப்படுகிறது.

வ்யாக்யானம் – (நின்னைச் சிந்தையுள் திகழ வைத்து) – ஸ்ரீய:பதியான உன்னை உபாயாந்தரங்கள் கலசாமே நெஞ்சிலே விளங்கும்படியாக அத்யவஸித்து. ஸமிதை பாதி ஸாவித்ரி பாதியாக இவன் தலையிலும் சிறிது ஸஹகாரமுண்டாகில், அவனுடைய உபாயபாவம் திகழாதே மழுங்குமென்கை. ரக்ஷிப்பிக்கைக்குப் பிராட்டியும், ரக்ஷிக்கைக்கு ஈச்வரனும், இப்படி அறிந்து துணிகைக்குத் தானும், அறிவிக்கைக்கு ஆசார்யனுமொழிய வேறொன்று வேண்டாதிருக்கை. “வைத்து” என்று இம்மிதுநத்தினுடைய பவ்யதையைச் சொல்லிற்றாகவுமாம்.

விளக்கம் - (நின்னைச் சிந்தையுள் திகழ வைத்து) – தங்களது மனதில் வேறு உபாயங்கள் எதனையும் கொள்ளாமல், ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான உன்னை மட்டுமே நிலையாக நிறுத்தி. ஹோமத்தின்போது ஸமித்து இடுதல், காயத்ரி என்று போற்றப்படும் ஸாவித்ரீ மந்த்ரம் உச்சரித்தல் ஆகிய இரண்டும் அவசியமாகும். ஆனால் இங்கு அது போன்று, அழகியமணவாளனுடன் வேறு உபாயங்களையும் கொண்டால், அவனது உபாயமாக உள்ள தன்மை வெளிப்படாமல், மழுங்கிவிடும். நம்மை அவன் காப்பாற்ற வேண்டும் என்று தூண்டுகின்ற ஸ்ரீரங்கநாச்சியார், அவளால் தூண்டப்பட்டு நம்மைக்

காக்கும் அழகியமணவாளன், இப்படியாக அவனே உபாயமும் உபேயமும் என்று அறிகின்ற தான் (ஆழ்வார்), இப்படியான ஆழ்பொருளைத் தனக்கு உபதேசித்த ஆசார்யன் ஆகியவை தவிர வேறு எதனையும் வேண்டாமல் இருப்பதைக் கூறுகிறார். "வைத்து" என்பதன் மூலம், "இப்படியாக நம்மை இவன் எப்போதும் நெஞ்சத்தில் கொண்டபடி உள்ளானே" என்பதை மட்டுமே காரணமாகக் கொண்டு, ஒருவனது உள்ளத்தில் எப்போதும் வீற்றுள்ள இந்தத் திருவரங்கத் திவ்யதம்பதியின் "அடியார்களுக்கு வசப்பட்ட" தன்மையைக் காட்டுகிறார்.

வ்யாக்யானம் – (மருவிய மனத்தராகில்) – இவ்வம்சம் உபேயாத்யவஸாயத்தைச் சொல்லுகிறது. ப்ரயோஜநாந்தரங்களை விட்டு ஸ்ரீய:பதியே பரமப்ரயோஜநமென்று அத்யவஸித்திருப்பாராகில்; "ஆகில்" என்ற இது ப்ராபக விஷயமாகவுமாம், ப்ராப்ய விஷயமாகவுமாம், இத்துணிவு ஒரு சேதநனுக்குக் கிட்டுவதொன்றன்று என்னுமிடம் தோற்றுகைக்காக.

விளக்கம் - (மருவிய மனத்தராகில்) – இந்தப் பதங்கள் உபேயமான அழகியமணவாளன் மீது கொண்ட உறுதியை உணர்த்துகிறது. மற்ற அனைத்து பயன்களையும் கைவிட்டு, ஸ்ரீரங்கநாசியாரின் நாயகனான அழகியமணவாளனை மட்டுமே தங்களது பயன் என்று சிலர் வாழக்கூடும். இப்படி உள்ளனர் என்றால்; "ஆகில்" என்பதன் மூலம் அழகியமணவாளனே உபாயம் என்ற உறுதி, அவனே உபாயம் என்ற உறுதி ஆகியவை ஒரு மனிதனுக்கு உண்டாவது மிகவும் கடினம் என்கிறார்.

வ்யாக்யானம் – (மாநிலத்து உயிர்களெல்லாம் வெருவு உறக்கொன்று) – ஒரு ஜந்துவை ஹிம்ஸிக்கும்போது, ஜகத்தடைய நடுங்கும்படியாகவாய்த்து நலிவது. இத்தால், இவனுக்கு ஹிம்ஸையிலுண்டான ருசி சொன்னபடி. (சுட்டிட்டு) – சஸ்த்ராதிகளால் நலியுமளவன்றிக்கே, ப்ராணனோடே தக்தமாக்கி. (ஈட்டிய வினையரேலும்) – இம்மஹாபாதகங்களை புருஷார்த்த ருசியுடையார் அவ்வோ புருஷார்த்தங்களை ஆதரிக்குமாபோலேயாய்த்து இவன் தான் ஏறிட்டுக்கொள்வது. ஜ்ஞாநம் பிறந்தவனுக்கு இது ஸம்பவியாமையாலே பூர்வவ்ருத்தத்தைச் சொல்லுகிறது. ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு, பஹூநாம் ஜந்மநாமந்தே, அநேகஜந்மஸம்ஸித்த: என்கையாலே

இவனால் இது முன்பு செய்யக்கூடாது; கூடிற்றேயாகிலும். (அருவினைப்பயனதுய்யார்) – தாங்கள் தேடிற்று ஜீவிக்கப்பெறார்கள். கடலுக்குத் தொடுத்த அம்பை மருகாந்தாரத்திலே விட்டாற்போலே அசல்பிளந்தேறிடுமத்தனை. த்விஷந்த: பாபக்ருத்யாம் என்னக்கடவதிறே. அங்ஙனன்றிக்கே, கர்ணன் விட்ட ஸர்ப்பசிரஸ்ஸுப்போலே கீசகத்தோடே போக்குமென்னுதல்; அங்ஙனன்றியே பகதத்தன் விட்ட சக்தியை மார்பிலே ஏற்றாப்போலே தான் அநுபவித்தல். பொறுத்தேன் என்னுதல் செய்யுமத்தனை. அவன் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்னா நிற்க, இவர்களுக்கு அநுபவிக்க விரகுண்டோ?

விளக்கம் – (மாநிலத்து உயிர்களெல்லாம் வெருவு உறக்கொன்று) –இவன் அனைத்து உயிர்களையும் கொல்லவில்லை; ஆனால் ஓர் உயிரைக் கொல்லும்போதே அதனைக் கண்டு உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் நடுங்கும்படியாக இவனது செயலின் கொடுமை உள்ளது என்று கருத்து. இதன் மூலம் இவனுக்கு உயிர்களை வதைப்பதில் உள்ள ருசி உணர்த்தப்படுகிறது. (சுட்டிட்டு) – இவன் கொல்வது எப்படியென்றால் ஓர் அம்பைத் தொடுத்து ஒரு நொடியில் கொன்று விடாமல், உயிருடன் எரித்து சித்ரவதை செய்து கொல்வதாகும். (ஈட்டிய வினையரேலும்) – ஓர் உயர்ந்த புருஷார்த்தத்தை அடைய விரும்புபவர்கள், அதனை அடைய எத்தனை ஈடுபாடு கொள்வார்களோ அது போன்று இவன் இந்த மஹாபாவங்களைச் சம்பாதிப்பதில் ருசி கொள்கிறான். கடந்த பாசுரத்தில் கூறப்பட்ட ஞானம் உண்டான பின்னர் இத்தகைய செயல்களும் எண்ணமும் உண்டாக வாய்ப்பில்லை என்பதால், அந்த ஞானம் உண்டாவதற்கு முன்பாக உள்ள நிலை கூறப்படுகிறது. லக்வத்ரிஸ்ம்ருதி – ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு – பல ஜன்மங்கள் கழிந்த பின்னரே க்ருஷ்ணன் மீது பக்தி உண்டாகும் – என்றும், கீதை (7-19) - பஹூநாம் ஜந்மநாமந்தே – பல புண்ணியமான பிறவிகள் எடுத்த பின்னர் என்னை உபாஸிக்கிறான் – என்றும், கீதை (6-54) - அநேகஜந்மஸம்ஸித்த: - பல பிறவிகளில் நழுவ விட்ட யோகம் கைகூடப்பெற்று – என்றும் கூறுவது போன்று, கடந்த பாசுரத்தில் கூறப்பட்ட ஞானம் என்பது இவனுக்கு முற்பிறவிகளில் உண்டாவதில்லை. இதனையும் கடந்த எம்பெருமானின் கருணை காரணமாக இந்த ஞானம் கூடினால், (அருவினைப்பயனதுய்யார்) – தாங்கள் மிகவும் துன்பப்பட்டு ஈட்டிய அந்த பாவங்களின் பலன்களை அனுபவிக்கமாட்டனர். கடல் மீது தொடுத்த அம்பை, கடலரசன் சரணம் அடைந்த காரணத்தினால், அவன் மீது தொடுக்காமல் அவனது விரோதிகள் மீது

இராமன் ஏவினான். அது போன்று, இவர்களது பாவப்பயன்களை இவர்களது விரோதிகளிடம் எம்பெருமான் தள்ளுகிறான். சாட்யாயநசாகை - த்விஷந்த: பாபக்ருத்யாம் – விரோதிகள் பாவங்களை அடைகின்றனர் – என்றது காண்க. இப்படிக் கொள்ளாமல் வேறு விதமாகவும் கூறலாம். அர்ஜுனன் மீது கர்ணன் ஏவிய நாகாஸ்த்ரத்தை அர்ஜுனனின் தலையைத் தாக்காமல் க்ரீட்த்தை மட்டுமே தாக்கும்படிச் செய்தது போன்று, இவர்களின் தலைக்கு வந்த ஆபத்துக்களைத் தலைப்பாகையுடன் செல்லும்படிச் செய்கிறான் எனலாம். இப்படியும் கொள்ளாமல் வேறு விதமாகவும் கூறலாம். அர்ஜுனன் மீது பகதத்தன் விட்ட சக்தியைத் தனது திருமார்பிலே தாங்கிக் கொண்டது போன்று, இவர்களின் பாவப்பயன்களைத் தானே ஏற்று அனுபவிக்கவும் செய்வான் என்று கொள்ளலாம். அவர்களின் பாவங்களைப் பொறுக்கிறான். இவன் கீதையில் (18-66) - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – உனது பாவங்களை – என்று கூறிய பின்னரும், இவர்களை அதனை அனுபவிப்பதற்கு ஏதேனும் வழி உண்டோ?

வ்யாக்யானம் – (அரங்கமாநகருளானே) – இவையெல்லாம் அவதார ஸமயங்களிலேயன்றோ என்னவொண்ணாதபடி அவதாரத்தில் பிற்பாடர்க்காகவன்றோ கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. இதுதான் ஈச்வரன் ஆசைப்பட்டேபோமத்தனையொழிய இவ்வதிகாரிகளுக்கு இது ஸம்பவியாது; ப்ராமாதிகமான புண்யத்தையும் "பாதகம்" என்றிருக்கிறவர்கள் பாபத்திலே இழிவார்களோ? மார்பிலேயிருந்து ந கச்சிந்நாபரத்யாதி என்னும் அவள்தானே குறை சொன்னாலும் "செய்தாரேல் நன்று செய்தார்" என்னும் அவனும் என்னா, பாபங்களிலே இழிவார்களோ? வாய்கரையர் நினைக்கவும் நிலமன்றென்கை.

விளக்கம் - (அரங்கமாநகருளானே) – இப்படியாக மேலே கூறப்பட்ட அனைத்தும் இராமனாகவும் க்ருஷ்ணனாகவும் அவதாரம் செய்தபோது மட்டுமே போலும் என்று கூற இயலாதபடி, அந்த அவதார காலங்களில் இல்லாத நம்மைப் போன்றவர்களும் அந்தச் செயல்களை உணரும்படிச் செய்வதற்காக அல்லவோ அழகியமணவாளன் திருவரங்கம் பெரியகோயிலில் கண்வளர்கிறான்? "இவர்களையும் காப்பாற்றினோம்" என்னும் பெருமை தனக்கு உண்டாகவேண்டும் என்று அழகியமணவாளன் விருப்பம் மட்டுமே கொள்ளலாம்; உண்மையில் இவன் வந்து காப்பாற்றும் அளவிற்கு, கடந்த பாசுரத்தில் கூறப்பட்ட ஞானம் பெற்றவர்களுக்கு உண்டாவதில்லை. கவனம் இல்லாமல் செய்யும்

புண்ணியங்களைக் கூட மோக்ஷத்தைத் தடுக்கவல்லது என்பதால் பாவம் என நினைப்பவர்கள், பாவங்களைத் தேடிச் சென்று செய்வார்களோ? இவனுடைய திருமார்பிலே உள்ள ஸ்ரீரங்கநாச்சியார் இராமாயணம் - ந கச்சிந்நாபரத்யாதி – தவறுகள் செய்யாதவர்கள் யாரும் இல்லை – என்று கூறுபவளாக இருந்தாலும், ஒரு சில நேரங்களில் அவள் யார் மீதேனும் குற்றம் கூறலாம். அவ்விதம் ஸ்ரீரங்கநாச்சியாரே குற்றம் கூறினாலும், பெரியாழ்வார் திருமொழி (4-9-2) – என் அடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் – என்று இவன் உரைப்பான். இப்படிக் கொண்டால், "எப்போதும் இவர்கள் பாவங்களையே செய்வார்களே" என்று ஒரு சிலர் கேலியாக உரைக்கக்கூடும். அப்படி எண்ணாமல், அவனுக்கு வசப்பட்டவர்கள் பாவங்கள் செய்யமாட்டனர் என்று கொள்ளவேண்டும்.

41. வான் உளார் அறியல் ஆகா வானவா என்பர் ஆகில்

தேன் உலாம் துளபமாலை சென்னியா என்பர் ஆகில்

ஊனம் ஆயினகள் செய்யும் ஊன காரகர்களேனும்

போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதம் அன்றே.

பொருள் – ஒரு சிலர் மிகவும் அற்பமான செயல்களைச் செய்பவர்களாக இருக்கலாம்; அல்லது மற்றவர்கள் மூலமாக இழிந்த செயல்களைச் செய்விப்பவர்களாக இருக்கலாம். இப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள், "விண்ணுலகில் உள்ள தேவர்களாலிம் அறிய இயலாதபடி உள்ளவனே!" என்றும், "தேன் பொழிகின்ற துளசி மாலையைத் திருமுடியில் கொண்டவனே!" என்றும் கூறுகிறார்கள் என வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்டவர்கள் தாங்கள் உண்ட பின்னர் அளிக்கும் ப்ரஸாதங்களை அளித்தால், அவை மிகவும் புனிதமானவை ஆகும்.

அவதாரிகை – இவர்களுக்கு ஜந்மவ்ருத்தங்களால் வரும் குறையில்லாமையேயன்று, தங்களோடு ஸம்பந்தித்த ஸம்ஸாரிகளும் தங்கள் அங்கீகாரத்தாலே பரிசுத்தராம்படியான உத்கர்ஷத்தை உடையவர்கள் என்கிறார்.

விளக்கம் – கடந்த இரு பாசுரங்கள் மூலமாக இப்படிப்பட்டவர்களுக்கு தங்களுடைய பிறவி அல்லது ஒழுக்கம் காரணமாகக் குறை ஏதும் உண்டாகாது என்றார். இந்தப் பாசுரம் மூலமாக, "குறை உண்டாகாமல் போவது மட்டும் அல்ல. தங்களுடன் சேர்ந்துள்ள மற்றவர்களும் தூய்மை பெறும்படியான மேன்மை கொண்டவர்கள்", என்று அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (வான் உளார் அறியல் ஆகா வானவா) – ப்ரஹ்மாதிகளால் துர்ஜ்ஞேயமான பரமபதத்தே நித்யவாஸம் பண்ணுமவனே! "ஆகா" என்கிறது சண்டாளன் அக்நிஹோத்ரத்திலே புகுரலாகாதென்னுமாபோலே நிஷேதத்தைச் சொல்லிற்றாகவுமாம். பரணிலே உயரவிருந்தாரென்னா பரமபத நிலயனை அறியலாமோ? மநுஷ்யர்களிற்காட்டில் வ்யாவ்ருத்தியுண்டென்னா அதுகொண்டு அங்கே செல்லலாமோ? அகிஞ்சந: அநந்யகதி: என்றிருப்பார் அறியுமத்தை, ஈச்வரோஹம் என்றிருப்பார்க்கறியலாமோ? ஆசற்றார் தங்கட்கல்லாலறியலாவானுமல்லன் என்னக் கடவதிறே. நீஞ்சவல்லவனோடு, நீஞ்சமாட்டாதவனோடு வாசியறக் கடலை நீஞ்சவொண்ணாதாப்போலே, சக்தனோடு அசக்தனோடு வாசியின்றிக்கே அஸாத்யமாயாய்த்து பகவத் விஷயமிருப்பது. அநந்யஸாத்யே என்னக்கடவதிறே. அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தனாய் சுத்தஸத்வமயமான விக்ரஹத்தையுடையனா யிருக்கிறவனுடைய பெருமையைப் பார்த்தாலும் அவனே உபாயமாகவேணும்; குணத்ரயவச்யனான இவன் சிறுமையைப் பார்த்தாலும் அவனே உபாயமாகவேணும்; ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வஸ்வரூபத்தை அநுஸந்தித்தாலும் அவனே உபாயமாகவேணும். (என்பராகில்) மந: பூர்வோ வாகுத்தர: என்கிறபடியே உள்வாயில் அநுஸந்தாநம் வழிந்து சொல்லும் சொல்லையுடையராகை. இத்தால் ப்ரார்த்தநாமாதி: சரணாகதி: என்கிறபடியே உபாய ப்ரார்த்தனையைச் சொல்லுகிறது. (ஆகில்) – ஸ்வஸாமர்த்யத்தை விடுகையிலுள்ள அருமை சொல்லுகிறது.

விளக்கம் - (வான் உளார் அறியல் ஆகா வானவா) – நான்முகன் உள்ளிட்ட தேவர்களாலும் அறிய இயலாத பரமபதத்தில் எப்போதும் வாழ்பவனே! "ஆகா" என்பதன் மூலம் கூறப்படுவது: அக்னிஹோத்ரம் செய்யும் இடங்களில் சண்டாளன் எவ்விதம் நுழையக்கூடாதோ அது போன்று, நான்முகன் உள்ளிட்ட தேவர்களும் புகுவது

கூடாது என்பதே ஆகும். தரையைக் காட்டிலும் சற்றே உயரமான பரணில் இருப்பதால் மட்டும் விண்ணில் உள்ள அனைத்தையும் எவ்விதம் காண இயலாதோ, அது போன்று இவர்கள் விண்ணில் இருந்தாலும் பரமபதத்தில் உள்ள அவனைக் காண இயலாது. மனிதர்களைக் காட்டிலும் சற்றே மேன்மை கொண்டவர்கள் என்றாலும், தேவர்களால் அந்த மேன்மை காரணாமாக மட்டுமே பரமபதம் செல்ல இயலாது. ஸ்தோத்ரரத்னம் - அகிஞ்சந: அநந்யகதி: - என்னைக் காப்பாற்றிக் கொள்ள என்னிடம் எந்தவிதமான ஒன்றும் இல்லை, உன்னை விட்டால் வேறு யாரும் என்னைக் காப்பாற்ற இல்லை – என்ற சிந்தனை கொண்டவர்கள் மட்டுமே பரமபதம் சென்று, அதனை அறியலாம். இதனை விடுத்து – ஈச்வரோஹம் – நானே ஈச்வரன் – என்று எண்ணுபவர்களால் காண இயலுமோ? நீச்சல் தெரிந்த ஒருவன், நீச்சல் தெரியாத ஒருவன் என்ற வேறுபாடு இல்லாமல், யாராலும் நீந்தியே கடலைக் கடக்க இயலாது. இதே போன்று சக்தி கொண்ட தேவர்கள் போன்றவர்கள், சக்தி ஏதும் இல்லாத மனிதர்கள் என்ற வேறுபாடு இல்லாமல், யாராலும் தங்களது முயற்சியால் மட்டுமே எம்பெருமானைக் காண இயலாதபடி அவன் உள்ளான். அநந்யஸாத்யே – வேறு எதனையும் நாடாமல் – என்று கூறுவது காண்க. ஸம்ஸாரத்தின் துர்நாற்றம் இல்லாதவனாக, சுத்தஸத்வமயமான திருமேனி கொண்டவனாக உள்ள அழகியமணவாளனின் பெருமைக் காணும்போது அவனே உபாயம் என்பதை உணரலாம். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களால் சிறைப்பட்டுள்ள நமது தாழ்வைக் காணும்போதும் அவனே உபாயம் என்பதை உணரலாம். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள திறன் இல்லாமல், நமது பாதுகாப்பிற்காக மற்றவர்களையே சார்ந்து நிற்கும் நம்முடைய ஸ்வரூபத்தைக் காணும்போதும் அவனே உபாயம் என்பதை உணரலாம். (என்பராகில்) – தைத்திரீயம் - மந: பூர்வோ வாகுத்தர: - முதலில் மனமும் பின்னர் வாக்கும் – என்பதற்கு ஏற்ப ஆழ்ந்த உள்ளத்தில் அவனையே உபாயம் என்று எண்ணினால் மட்டுமே அந்த எண்ணம் சொல்லாக வெளிவருகிறது. அஹிர்புத்ந்யஸம்ஹிதை - ப்ரார்த்தநாமாதி: சரணாகதி: - விண்ணப்பிக்கும் புத்தியே சரணாகதி – என்பதற்கு ஏற்ப, அவனையே உபாயமாகக் கொண்டவர்கள் இவர்கள் என்பது தெளிவாகிறது. (ஆகில்) – தன்னுடைய திறமையால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இயலும் என்னும் எண்ணத்தைக் கைவிடுதல் மிகவும் கடினமானது என்கிறார்.

வ்யாக்யானம் – (தேன் உலாம் துளபமாலை சென்னியா) – கீழ் உபாயாம்சம் சொல்லிற்றாய், இங்கு உபேயாம்சத்தைச் சொல்லுகிறது. மதுப்ரசுரமான திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதமான திருமுடியையுடையவனே! ஸர்வாதிகனாய், நிரதிசய போக்யனாய் அத ஏவ பரமப்ராப்யனென்கை. (என்பராகில்) – இத்தாலும் ப்ராப்ய ப்ரார்த்தனையைச் சொல்லுகிறது. (ஆகில்) – ப்ரயோஜநமென்று நினைக்கையிலுள்ள அருமை சொல்லுகிறது. ஸ மஹாத்மா ஸுதுர்லப: என்னக்கடவதிறே.

விளக்கம் - (தேன் உலாம் துளபமாலை சென்னியா) – கடந்த பத்தியில் இவனே உபாயம் என்பதைக் கொண்டவர்கள் என உணர்த்தினார். இந்தப் பத்தியில் இவனது உஏயமாக இருக்கும் தன்மையை உணர்ந்தவர்கள் என்கிறார். தேன் நிறைந்த துளசி மாலையால் அலங்கரிக்கப்பட்ட திருமுடியைக் கொண்ட அழகியமணவாளா! அனைவருக்கும் எஜமானனாக, அனைவருக்கும் இனிமையானவனாக, மிகவும் உயர்ந்த இலக்காக உள்ளவனாக இருப்பவன் என்றார். (என்பராகில்) – இதன் மூலம் அடையப்படும் இலக்கு குறித்த விண்ணப்பத்தினைக் கூறுகிறார். (ஆகில்) – மற்ற விஷயங்களைக் கைவிட்டு அழகியமணவாளன் மட்டுமே அடையத்தக்க பலன் என்று இருப்பது மிகவும் கடினம் என்கிறார். கீதையில் - ஸ மஹாத்மா ஸுதுர்லப: - இப்படிப்பட்ட மஹாத்மா கிடைப்பது மிகவும் கடினம் – என்று தானே கூறினான் அல்லவோ?

வ்யாக்யானம் – (ஊனமாயினகள் செய்யும்) – வயிறு வளர்க்கைக்காகப் பரஹிம்ஸை பண்ணுமவர்கள்; மத்யராத்ரியில் மாம்ஸார்த்திகளாய் வருவாருண்டாகில், ஹிம்ஸ்ய பதார்த்தத்தை ப்ராணன் போகாமல் பந்தித்து மாம்ஸத்தை அறுத்துக் கொடுக்குமவர்கள், ஆந்ருசம்ஸ்யப்ரதாநர் பிறர்க்காகத் தங்களுடைய மாம்ஸத்தை அறுத்துக் கொடுப்பார்கள்; அதுக்கு எதிர்த்தட்டு இது. (ஊனகாரகர்கள்) – தாங்கள் கொல்லுமளவன்றிக்கே பிறரை இடுவித்துக் கொல்லுவிக்குமவர்கள், ஜ்ஞாநம் பிறப்பதற்கு முன்புத்தை வ்ருத்தாந்தம் சொல்லுகிறது. (ஏலும்) – முன்பு செய்யிலும் இந்த ஜ்ஞாநம் பிறந்த பின்பு ஸம்பவியாது; பிறருடைய ஆர்த்திகாணில் மோஹிக்கில் மோஹிக்குமத்தனை. ஸர்ப்பாஸ்யத்திலே அகப்பட்ட மண்டூகத்தினுடைய ஆர்த்தியைக்கேட்டு, “இது ஆரறிந்து விடுவிக்கக் கூப்பிடுகிறது?”, என்று ஆழ்வான் மோஹித்தான்; இப்படிப்பட்ட இவன் பரஹிம்ஸையிலே இழிந்தானாகில் ஈச்வரன் பண்ணுகிற ஹிம்ஸையோபாதி ஹிதரூபமாயாய்த்து இருப்பது. (போனகம்) – பகவத்

விஷயத்தில் சொல்லுமோ பாதியாகிலும் சொல்லவேணுமே; அதிலும் குறையச் சொல்லவொண்ணாதே (செய்த சேடம்) – த்வதீய புக்தோஜ்ஜிதசேஷபோஜிநா என்றும், "கலத்ததுண்டு" என்றும் சொல்லுகிறபடியே அமுதுசெய்து கைவாங்கின கலத்தில் ப்ரஸாதம். (தருவரேல்) – பகவத்ப்ரஸாதம்போலே ப்ரயோஜநாந்தரபரர்க்கும் பொதுவாயிருக்குமதன்றே இது; அலப்யலாபம் கிட்டிற்றாகில். ஒருநாள் பட்டர் ப்ரஸந்நராய் ஜீயருக்கு இட்ட ப்ரஸாதத்தை நினைப்பது. (புனிதமன்றே) – தேசாந்தரே காலாந்தரே தேஹாந்தரேயன்றியே ஸ்பர்சவேதியாய் இரும்பு பொன்னாமாபோலே அப்போதே பரிசுத்தம். ததுச்சிஷ்டம் ஸுபாவநம் பகவத் ப்ரஸாதம் பாவநம்; இது ஸுபாவநம்.

விளக்கம் - (ஊனமாயினகள் செய்யும்) – தங்களது வயிற்றை வளர்ப்பதற்காக மற்ற உயிர்களை வதைப்பவர்கள். நடு இரவில் மாமிஸம் வேண்டும் என்றும் தங்களை நாடி வருபவர்களுக்காக, ஆடு முதலானவைகளை உயிர் போகாமல் கட்டி வைத்து, அவற்றைச் சிறிதுசிறிதாக அறுத்துக் கொடுப்பவர்கள். மிகவும் இரக்கம் கொண்டவர்கள் மற்றவர்களுக்காகத் தங்களது உடலையே அறுத்துக் கொடுப்பார்கள்; இவர்கள் அவர்களுக்கு முரணாக உள்ளவர்கள் ஆவர். (ஊனகாரகர்கள்) – தாங்கள் மட்டும் இது போன்ற கொடிய செயல்களைச் செய்யாமல், மற்றவர்களையும் இது போன்று செய்ய வைப்பவர்கள். ஸர்வேச்வரனைப் பற்றிய ஞானம் பிறப்பதற்கு முன்பாக இருக்கும் நிலையை இங்கு கூறினார். (ஏலும்) – இது போன்ற செயல்களை ஞானம் பிறப்பதற்கு முன்பு செய்தார்கள் என்றாலும், ஞானம் பிறந்த பின்னர் செய்யமாட்டார்கள். மற்றவர்களின் துன்பத்தைக் கண்டால், தாங்கள் துன்பம் கொள்வார்கள். நாகம் ஒன்றின் வாயில் அகப்பட்ட தவளை ஒன்று அலறுவது கண்ட கூரத்தாழ்வான், "யார் தன்னை விடுவிப்பார்கள் என்று எண்ணி இது அலறுகிறதோ?", என்று வருத்தம் கொண்டு மயக்கம் அடைந்ததை இங்கு எண்ணவேண்டும். இப்படிப்பட்டவர்கள் ஏதேனும் ஜீவனுக்கு ஹிம்ஸை செய்தாலும், ஈச்வரன் செய்யும் ஜீவஹிம்ஸை நன்மைக்காகவே என்பது போன்று, இவர்கள் செய்யும் ஹிம்ஸையும் நன்மையிலேயே முடியும். (போனகம்) – எம்பெருமானை விட இவர்கள் சிறந்தவர்கள் என்பதால், அவனுக்கும் "அமுது" என்று சொல்வது போன்று இவர்களுக்கு "போனகம்" என்றார். (செய்த சேடம்) – ஸ்தோத்ர ரத்னம் - த்வதீய புக்தோஜ்ஜிதசேஷபோஜிநா – உனது உண்டு மீந்த ப்ரஸாதத்தை உண்பவர் – என்றும், திருப்பல்லாண்டு – கலத்ததுண்டு – என்றும்

கூறுவதற்கு ஏற்ப, தாங்கள் உண்ட பின்னர் இலையில் மீதம் உள்ள ப்ரஸாதம். (தருவரேல்) – மற்ற பலன்களை விரும்புபவர்களுக்கும் பகவத்ப்ரஸாதம் கிட்டிவிடும்; ஆனால் அது போன்றதல்ல இது. இது கிட்டுவது மிகவும் அரிதாகும். ஒருநாள் ஸ்வாமி பராசரபட்டர் தான் உண்ட மீதத்தை நஞ்சீயருக்கு அளித்தமை எண்ணவேண்டும். (புனிதமன்றே) – குறிப்பிட்ட இடத்திலோ, காலத்திலோ, பிறப்பிலோ தூய்மை அளிக்கின்ற நிலை இல்லாமல், இரும்பைத் தங்கமாக்கும் ஸ்பர்சவேதி என்னும் குளிகை போன்று, இந்த மீதத்தை உண்டவுடன் தூய்மையாக்கவல்லது. ததுச்சிஷ்டம் ஸுபாவநம் – நாராயணனிடம் பக்தி கொண்டவன் உண்டு மீந்த உணவு தூய்மையானது – என்றது காண்க. ஈச்வரனின் ப்ரஸாதம் தூய்மையானது, அவனது அடியார்களின் ப்ரஸாதம் மிகவும் தூய்மையானது.

42. பழுது இலா ஒழுகல் ஆற்றுப் பல சதுப்பேதிமார்கள்

இழிகுலத்தவர்களேலும் எம் அடியார்களாகில்

தொழுமினீர் கொடுமின் கொண்மின் என்று நின்னொடும் ஒக்க

வழிபட அருளினாய்போல் மதிள் திருவரங்கத்தானே.

பொருள் – அழகியமணவாளா! "நான்முகன் தொடக்கமாக உங்கள் வரை தொடர்ந்து வருகின்ற பரம்பரையில் எந்தவிதமான தோஷங்களும் இல்லாத நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்கின்றவர்களே! எமக்கு அடிமைத்தனம் செய்கின்றவர்கள் மிகவும் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் நீங்கள் அவர்களை வணங்கவேண்டும். உங்களது ஞானத்தை அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். அவர்களிடம் நீங்கள் பல விசேஷங்களைக் கேட்டு அறியலாம்", என்று அருளிச்செய்தாய். மேலும், அவர்களை உனக்குச் சமமாக ஆராதிக்கும்படிக் கூறினாய் அல்லவோ?

அவதாரிகை – ஜந்ம வ்ருத்தாதிகளில் குறையநின்ற இந்த ஜ்ஞாநமுடையவர்கள், இந்த ஜ்ஞானவிதுரராய் ஜன்மவ்ருத்தாதிகளால் உயர்ந்தவர்களுக்கு ஸர்வேச்வரனோபாதி பூஜ்யராய் ஜ்ஞாந தான ப்ரதிக்ரஹ ஸம்வ்யவஹாரங்களுக்கும் அர்ஹராவர் என்கிறார்.

விளக்கம் – தங்களது பிறப்பு மற்றும் நடத்தை ஆகியவற்றால் தாழ்ந்தவர்களாக இருந்தாலும் பாசுரம் 38-இல் கூறப்பட்ட ஆழ்பொருளை அறிந்தவர்கள், இத்தகைய ஞானம் இல்லாமல் உயர்ந்த பிறவி மற்றும் நடத்தை கொண்டவர்களால் ஸர்வேச்வரனுக்கு நிகராக வைத்து பூஜிக்கப்பட வேண்டியவர்கள் என்கிறார். மேலும் தங்களிடம் ஞானத்தை அளிப்பது, தங்களிடமிருந்து ஞானத்தைப் பெறுவது போன்ற செயல்களுக்கும் தகுதியானவர்கள் என்கிறார்.

வ்யாக்யானம் – (பழுதிலா ஒழுகலாற்று) – ப்ரஹ்மா தொடங்கித் தங்களளவும் வர நெடுகிப்போருகிற வம்சப்ரவாஹத்திலே ஒரு தோஷமின்றிக்கேயிருக்குமவர்கள். அதாகிறது, உத்பத்திகளிலேயாதல், ஆசாராதிகளிலேயாதல், ஒருவகையாலும் ப்ராஹ்மண்ய ப்ரச்யுதியின்றிக்கேயிருக்கை. (பலசதுப்பேதிமார்கள்) – இவ்வம்சத்தில் சதுர்வேதிகளாயிருப்பார் அநேகரென்கை. சதுர்வேதா ருஷய: என்கிறபடியே ரிஷி ஸமராயிருக்கை. "சதுப்பேதிமார்கள்" என்று ஸம்போதநை. ஒழுகல் – நெடுமை, ஆறு – வழி. (இழிகுலத்தவர்களேலும்) – இதில் கீழ்ப்பட்டதில்லையென்னும் நிஹீந குலத்தில் பிறந்தவர்களேயாகிலும். (ஏலும்) – பஹூநாம் ஜந்மநாமந்தே என்கிறபடியே அநேக புண்ய ஜந்மங்களினுடைய அவஸாநத்திலே ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்குமென்று சொல்லுகையாலே ஜ்ஞாநாதிகராயிருப்பார்க்கு நிஹீந ஜந்மம் கூடாது; விதுர தர்ம வ்யாதாதிகளைப்போலே கூடிற்றேயாகிலும். (எம்மடியார்களாகில்) – என்னோட்டை அஸாதாரண பந்தத்தை அறிந்து, ஜ்ஞாநாநுகூலமான ஸ்வாசாரத்தை உடையராகில். கைங்கர்யமே எல்லா நன்மைகளுமாக நினைத்திருக்குமவர்களாய், ஈச்வரனும் "இவர்கள் திறத்தில் நாமே இவர்களுக்கு உபாயோபேயங்களும் எல்லாவுறவும்" என்று நினைத்திருக்கப்படுமவர்கள்.

விளக்கம் - (பழுதிலா ஒழுகலாற்று) – நான்முகன் தொடக்கமாகத் தங்கள் வரையுள்ள நீண்ட பரம்பரையில் ஒருவர்கூட தோஷம் உள்ளவர்கள் என்று கூற இயலாதபடி உள்ளவர்கள். அதாவது பிறப்பு, ஒழுக்கம் போன்ற எந்த ஒன்றிலும் ப்ராஹ்மண்யம் விலகாமல் உள்ளவர்கள். (பலசதுப்பேதிமார்கள்) – இப்படியாக உள்ள பரம்பரையில் நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்பவர்கள் பலர் உள்ளனர் என்று கருத்து. சதுர்வேதா ருஷய: - ரிஷிகள் நான்கு வேதங்களும் அத்யயனம் செய்பவர்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப இவர்கள் ரிஷிகளுக்கு சமமாக உள்ளவர்கள். ஒழுகல் என்றால்

நெடுமை, ஆறு என்றால் மார்க்கம் என்று பொருள். (இழிகுலத்தவர்களேலும்) – ஒரு சிலர் "இதனைக் காட்டிலும் தாழ்ந்த பிறவியே இருக்கமுடியாது" என்று கூறும்படியான தாழ்ந்த பிறவியில் பிறந்தாலும். (ஏலும்) – கீதை (7-19) - பஹூநாம் ஜந்மநாமந்தே – பல பிறவிகளுக்குப் பின்னரே – என்று கூறுவதற்கு ஏற்ப புண்ணியம் நிறைந்த பல பிறவிகள் எடுத்த பின்னர் மட்டுமே ஒருவனுக்குத் தனது ஸ்வரூப ஞானம் பிறக்கும். ஆகவே பாசுரம் 38-இல் கூறப்பட்ட ஞானம் கொண்டவர்களுக்குத் தாழ்ந்த பிறவி அமையாது. ஆயினும் ஒரு சிலருக்கு விதுரன், தர்மவ்யாதன் போன்றவர்கள் போன்று தாழ்ந்த பிறவி அமைந்துவிட்டாலும். (எம்மடியார்களாகில்) – என்னுடனான உறவுமுறையை அறிந்து கொண்டு, அத்தகைய ஞானத்திற்கு ஏற்றபடி வாழ்ந்து, எனக்குச் செய்யும் கைங்கர்யம் மட்டுமே தங்களது வாழ்வின் அனைத்து நன்மை என்று எண்ணியபடி இருக்கக்கூடும். இவர்கள் விஷயத்தில் அழகியமணவாளன், "இவர்களைப் பொறுத்தவரை நாமே இவர்களுக்கு உபாயமாகவும், உபேயமாகவும் இருப்போம்", என்று எண்ணும்படியாக உள்ளவர்கள்.

வ்யாக்யானம் – (தொழுமின் நீர்) – நீங்கள் தொழுங்கள். ஏத ஏவ ஸதாம் தம: என்கிறபடியே உங்களுடைய வித்யாவ்ருத்தங்களும், ஜந்மோத்கர்ஷங்களும், மத ஹேதுவாகையன்றியே தம ஹேதுவென்றிருக்கும் நீங்கள் அவர்கள் காலிலே விழுங்கோள். காலேஷ்வபி ச ஸர்வேஷு இத்யாதிகளில் சொல்லுகிறபடியே பகவத் ப்ரஸாதமொழிந்த ஸாதநாந்தரங்கள் பயஸ்தாநமென்றிருக்கும் நீங்கள் அவர்களை ஆராதியுங்கோள். பரஸ்பர நீசபாவை: என்கிறபடியே ஸ்வரூப ப்ராப்தமான நீசபாவமானது அவர்களுக்கு ஸ்வரூப ஸித்தம்; உங்களுக்கு துர்மாநத்தாலே துஷ்கரம்; அவர்களைத் தொழவே உங்கள் ஸம்ஸார பீஜமான துர்மானம் போம்; நிஹீந ஜந்மத்திலே பிறந்தவன் ப்ராஹ்மணனுக்கு ரக்ஷகனாக எங்கே கண்டோமென்னில் கைசிக ஸம்பந்தம் ப்ராஹ்மண்ய ப்ரச்யுதியாலே வந்த ப்ரஹ்மராக்ஷஸத்வத்தை ப்ராஹ்மணனுக்குப் போக்கிக் கொடுக்கக் கண்டோமிறே. (கொடுமின் கொண்மின்) – அவர்கள் உங்கள் பக்கல் ஒரு ஜ்ஞாநாபேக்ஷை பண்ணில், நீங்கள் ஆதரித்துச் சொல்லுங்கோள்; அவர்கள் பகவத் ஜ்ஞாநத்தை உங்களுக்கு ப்ரஸாதிக்கில் கேட்டு க்ருதார்த்தராகுங்கோள். ஜாதி நிபந்தநமான ஸம்பந்தம் போலேயாதல், குண நிபந்தநமான ஸம்பந்தம் போலேயாதல்; நீர் மேலெழுத்தான ஸம்பந்தமின்றிறே இவர்களோடு பண்ணும் ஸம்பந்தம்; இது யாவதாத்மபாவியான ஸம்பந்தமிறே.

விளக்கம் - (தொழுமின் நீர்) – நீங்கள் தொழுவீர்களாக. ஏத ஏவ ஸதாம் தம: - அடக்கமாக உள்ளதற்குக் காரணம் – என்று கூறுவது போன்று, உங்களது கல்வி, பிறப்பு மற்றும் ஒழுக்கம் மூலமாக வரும் மேன்மை போன்றவை உங்களது கர்வத்திற்குக் காரணமாகிவிடக் கூடாது; இவை உங்களது அடக்கத்திற்குக் காரணமாக வேண்டுமென்றால் நீங்கள் எமது அடியார்களின் கால்களில் விழுவீர்களாக. ஜிதந்தே ஸ்தோத்ரம் - காலேஷ்வபி ச ஸர்வேஷு – அனைத்து காலங்களிலும் – என்று கூறும் வரிகளின்படி, அழகியமணவாளனின் க்ருபை மட்டுமே அபயம் அளிப்பதாகும்; மற்ற அனைத்து உபாயங்களும் அச்சத்தையே விளைவிக்கும் என்று அறிந்து நீங்கள் அவர்களை ஆராதிப்பீர்களாக. ஸ்ரீவைகுண்டஸ்தவம் - பரஸ்பர நீசபாவை: - ஒருவருக்கொருவர் அடிமைகளாக இருப்பதை விரும்புபவர்கள் – என்று கூறுவது போன்று, ஆத்மஸ்வரூபத்திற்கு இயல்பான அடிமைத்தனம் என்பது அவர்களுக்கு இயல்பாகவே உள்ளது; ஆனால் உங்களுக்கு உங்கள் பிறவி முதலானவற்றின் காரணமாக அத்தகைய அடிமைத்தனம் பற்றிய சிந்தனை கூட உண்டாவது கடினமே ஆகும். நீங்கள் அவர்களைச் சென்று தொழுதால், உங்களது பிறப்பிலே உண்டாகின்ற கர்வம் உள்ளிட்டவை விலகிவிடும். தாழ்ந்த பிறவியில் பிறந்த ஒருவன் அந்தணனனுக்கு பாதுகாப்பு அளிப்பவனாக உள்ள நிலையை எங்கே காணலாம் என்னும் கேள்வி எழக்கூடும். கைசிகபுராணத்தில் காணலாம். அந்தணன் ஒருவனின் அந்தணத்தன்மை விலகியதால் உண்டான ப்ரஹ்மரக்ஷஸ் என்னும் தன்மை, நம்பாடுவான் என்னும் தாழ்ந்த பிறவி கொண்டவனால் நீங்கியதைக் காணலாம். (கொடுமின் கொண்மின்) – அப்படிப்பட்டவர்கள் உங்களிடமிருந்து ஞானம் பெறவேண்டும் என்று வந்தால் அவர்களுக்கு ஞானம் அளிப்பீர்களாக. அவர்கள் உங்களுக்கு எம்பெருமானைப் பற்றிக் கூற வந்தால், அதனைக் கேட்டு பேறு பெறுங்கள். ஒத்த பிறப்பு மூலம் மட்டுமே ஒருவருக்கொருவர் ஞானம் போன்றவற்றைப் பரிமாறுதல், ஒத்த குணங்கள் மூலம் மட்டுமே ஒருவருக்கொருவர் ஞானம் போன்றவற்றைப் பரிமாறுதல் ஆகியவை நீர் மீது எழுதிய எழுத்துக்கள் போன்று நிலையற்றவை ஆகும். பாசுரம் 38-இல் கூறப்பட்ட ஞானம் கொண்டவர்களுடன் கொள்ளும் தொடர்பு என்பது இது போன்றதல்ல, இந்த சரீரம் விழுந்த பின்னரும் தொடருவதாக அமையும்.

வ்யாக்யானம் – (என்று நின்னோடுமொக்க வழிபட அருளினாய்போல்) – இப்பசுரம் பலப்ரதரான தேவரீரே அருளிச்செய்த பின்பு இதிலொரு ஸம்சயமுண்டோ? (என்று நின்னோடுமொக்க வழிபட) – எனக்கு மேல் பூஜ்யரில்லாமையாலே என்மாத்ரமாகிலும் அவர்களை ஆராதித்து நல்வழி போங்கோள். (அருளினாய்) – பக்திரஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்ச அபி வர்த்ததே ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித: தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹி அஹம் என்கிறபடியே. (அருளினாய்) – இந்த ரஹஸ்யம் தேவரீர் க்ருபையாலே அருளிச்செய்தவித்தனையிறே. "பூசித்து நல்கியுரைப்பர் தம் தேவியர்க்கே" என்று பகவத் ஸம்பந்த யுக்தருடைய பாவநத்வம் நித்யஸூரிகளும் தந்தாமுடைய அபிமத விஷயங்களுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணினார்களாய் உபதேசிக்குமத்தனையிறே. (போல்) – அதுபோலே, திருமுகப்பாசுரம் வராஹ நாயனாரது; படியெடுத்தார் இவ்வாழ்வார். திருமுகப்பாசுரம் கேட்டருளி அத்தை அர்த்த க்ரியாகாரியாக்கினார் பெரியபெருமாள். கேட்டருளுகையாவது அகஸ்த்யனைக் கொண்டு பெருமாள் ஸ்ரீராமாயணம் கேட்டருளினாற்போலே. (மதிள் திருவரங்கத்தானே) – உபதேசமாத்ரமேயாய்ப் போகாமே, கோயிலிலே வந்து லோகஸாரங்க மஹாமுனிகள் தலையிலே திருப்பாணாழ்வாரை வைத்து இவ்வர்த்தத்தை வ்யாபரித்துக் காட்டிற்றிலீரோ? (மதிள் திருவரங்கத்தானே) – கோயிலில் மதிளைக் கடக்கிலன்றோ தேவரீர் காட்டின இம்மர்யாதைடைக் கடக்கலாவது.

விளக்கம் - (என்று நின்னோடுமொக்க வழிபட அருளினாய்போல்) – அழகியமணவாளா! மோக்ஷத்தை அளிக்கவல்ல நீயே இந்தப் பாசுரத்தின் பொருளை இதுவரை அருளிச் செய்த பின்னர் வேறு என்ன ஐயம் உள்ளது? (என்று நின்னோடுமொக்க வழிபட) – எனக்கு மேல் வழிபடத்தக்கவர் யாரும் இல்லை. ஆகவே என்னை வணங்குவதாகவே எண்ணி அவர்களை ஆராதனை செய்து, நல்வழியில் செல்லுங்கள். (அருளினாய்) – கருடபுராணத்தில் - பக்திரஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்ச அபி வர்த்ததே ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித: தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹி அஹம் – என்னிடம் எட்டுவிதமான பக்தி யாரிடம் உள்ளதோ அவன் மிலேச்சனாக இருந்தாலும் அந்தணர்களைக் காட்டிலும் உயர்ந்தவன், முனிவன், செல்வம் படைத்தவன், பண்டிதன்; அவனிடமிருந்து ஞானம் பெற இயலும்; என்னைப் போன்றே அவனும் வணங்கத்தக்கவன் – என்றது காண்க. (அருளினாய்) –

இப்படிப்பட்ட உயர்ந்த ரஹஸ்யத்தை உனது கருணையால் நீ எங்களுக்கு அருளிச்செய்தாய் அல்லவோ? திருவாய்மொழி (7-10-11) - பூசித்து நல்கியுரைப்பர் தம் தேவியர்க்கே – என்னும்படி அழகியமணவாளனின் அடியார்கள் குறித்து நித்யஸூரிகள் தங்களது துணைவிகளுக்கு மிகவும் அரிதான உபதேசம் போன்று உரைப்பர். (போல்) – இந்தப் பொருளை முதலில் அருளிச்செய்தவன் வராஹன்; அதனைத் தனது பாசுரம் மூலம் இவ்வாழ்வார் அருளிச்செய்தார்; இந்தப் பாசுரத்தைத் தன் திருமுன்பே ஆழ்வார் விண்ணப்பிக்க, இதனைப் பெரியபெருமாள் நடத்திக் காட்டினான். அகஸ்த்யன் மூலம் இராமன் இராமாயணம் கேட்டது போன்று, இங்கு தான் உரைத்தவற்றை ஆழ்வார் முலமாக அழகியமணவாளன் கேட்டு உகந்தான். (மதிள் திருவரங்கத்தானே) – தான் கூறியதை வெறும் உபதேசம் என்று யாரும் எண்ணிவிடக்கூடாது என்று, திருவரங்கம் பெரியகோயிலில் உயர்ந்த முனிவரான லோகசாரங்கன் என்பவரைத் திருப்பாணாழ்வாரைத் தோளிலே தூக்கி வரச்செய்து, செய்கையாலும் உணர்த்தினான். (மதிள் திருவரங்கத்தானே) – உனது திருக்கோயிலின் மதிளைத் தாண்ட இயன்றால் அல்லவோ, நீ உரைத்த இந்த உபதேசத்தை மீற இயலும்?

43. அமர ஓர் அங்கம் ஆறும் வேதம் ஓர் நான்கும் ஓதித்

தமர்களில் தலைவராய சாதி அந்தணர்களேலும்

நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோர் அளவில் ஆங்கே

அவர்கள்தாம் புலையர்போலும் அரங்கமா நகருளானே

பொருள் – திருவரங்கத்தில் கண்வளரும் அழகியமணவாளா! நிகரில்லாத ஆறு வேத அங்கங்கள் (சீக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம் மற்றும் கல்பம்) , நான்கு வேதங்கள் ஆகியவை நன்றாக மனதில் நிலை நிற்கும்படியாக அத்யயனம் செய்தவர்களாக, உனது அடியார்களில் முன்னிலையாக இருக்கக்கூடிய அந்தணர்களாக சிலர் இருக்கக்கூடும். ஆயினும் உனது அடியார்களை அவர்களைத் தூஷித்தார்கள் என்றால், அந்த நொடியிலேயே அவர்கள் சண்டாளர்களாகி விடுகின்றனர்.

அவதாரிகை – கீழ்ச் சொன்ன ஐந்மவ்ருத்தாதிகளுக்கு மேலே ஜ்ஞாநாதிகருமான இவர்கள், ஐந்மவ்ருத்தாதிகளின்றிக்கே இந்த ஜ்ஞாநமுடையரானவர்களை, பகவத்

ப்ரஸாதத்தாலே வந்த வைலக்ஷண்யத்தை புத்திபண்ணாதே, கர்ம நிபந்தநமான ஜந்மாத்யபகர்ஷத்தையே புத்தி பண்ணித் தாழ நினைத்தார்களாகில் அந்த க்ஷணத்திலே அவர்கள்தான் சண்டாளர் என்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் கூறப்பட்ட பிறவி மற்றும் ஒழுக்கம் காரணமாக மட்டும் அல்லாமல் ஒரு சிலருக்கு அவர்களின் ஞானம் காரணமாகவும் மேன்மை உண்டாகலாம். இப்படிப்பட்டவர்கள் - பிறவி மற்றும் ஒழுக்கம் காரணமாக உண்டான மேன்மை இன்றி ஞானத்தால் மேன்மை பெற்ற அரங்கன் அடியார்களை, அரங்கனின் கடாக்ஷம் காரணமாக அவர்களுக்கு உண்டான மேன்மையை உணராமல், கர்மம் காரணமாக அவர்களுக்கு உண்டான பிறவி முதலானவற்றைக் காரணம் காட்டி, அவர்களைத் தாழ்ந்தவர்கள் என்று ஒதுக்கினால் – அந்த நொடியிலேயே சண்டாளர்கள் ஆகின்றனர் என்கிறார்.

வ்யாக்யானம் – (அமரவோரங்கமாறும்) – அத்விதீயமான ஷடகங்களையும், அழகிதாகப் பாடங்களையும் தரித்து, அர்த்தத்தையும் தரிக்குமவர்களாகை. அங்கங்களுக்கு அத்விதீயமாவது – ஓரங்கத்திலே ஜ்ஞாநம் குறைவற உண்டானால், லோகத்தார் அவனை ஸர்வஜ்ஞனென்று சொல்லும்படியிருக்கை. சீஷாயாம் வர்ணசிக்ஷா இத்யாதி. (வேதமோர் நான்கும்) – வேதங்களுக்கு அத்விதீயத்வம் – பௌருஷேய சப்தங்களிற்காட்டில் வ்யாவ்ருத்தியாதல்; தனித்தனியே விநியோக பேதத்தால் வந்த வ்யாவ்ருத்தியாதல். (ஓதி) – அங்கங்களோடு வேதங்களோடு வாசியற ஆசார்யோச்சாரணாநுச்சாரண முகத்தாலே க்ரஹிக்கை. இப்படிகளாலே எம்பெருமானை உள்ளபடி அறியுமவர்களாகை. (தமர்களில் தலைவராய) – ஜ்ஞாநாநுகூலமாக பகவத் விஷயத்தில் ஸம்பந்தமுடையாரில் அக்ரேஸரராயிருக்கை. (சாதியந்தணர்கள்) – கீழ்ச்சொன்னவை க்ஷத்ரிய வைச்யர்களுக்கும் பொதுவிறே; அவ்வளவன்றிக்கே ஜாத்யாப்ராஹ்மணராயிருக்கை.

விளக்கம் - (அமரவோரங்கமாறும்) – இரண்டாவது என்று ஏதும் இல்லாமல் உள்ள ஆறு வேத அங்கங்களை அவற்றின் பொருளுடன் மனதில் நிலைநிறுத்தவல்லவர்கள். இவற்றின் ஒப்பற்ற தன்மை, இரண்டாவது ஏதும் இல்லை என்று கொண்டாடும்

மேன்மை என்றால் என்ன? இந்த ஆறு அங்கங்களில் ஏதேனும் ஒன்றில் ஒருவனுக்கு முழுமையான ஞானம் இருந்தால்கூட அவன் அனைத்தும் அறிந்தவன் என்று உலகினர் அவனைக் கொண்டாடும்படியாக உள்ள நிலைமை. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (2-18) - சீஷாயாம் வர்ணசிக்ஷா – சீசைக்ஷ உள்ளிட்ட ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்கள் உன்னையே தேடுகின்றன – என்று ஸ்வாமி பராசரபட்டர் அருளியது காண்க. (வேதமோர் நான்கும்) – வேதங்களுக்கு "இவை போன்று இரண்டாவது ஏதும் இல்லை" என்று கொண்டாடும் மேன்மை என்றால் என்ன? மனிதனால் இயற்றப்படும் நூல்களில் பொதுவாகவே காணப்படும் சொற்பிழை, பொருள் பிழை முதலான தோஷங்கள் இல்லாமல் உள்ள தன்மையாகும். அல்லது வேத மந்த்ரங்கள் விதிவாக்யம், மந்த்ரவாக்யம் என்று தனித்தனியே பிரித்துக் கூறப்பட்டதையும் கொள்ளலாம். (ஓதி) – ஆறு அங்கங்களுடன் கூடிய நான்கு வேதங்களையும் ஆசார்யன் கூறக்கூற அதனை மீண்டும் மீண்டும் ஒப்புவித்து, மனதில் நிலை நிறுத்துதல். இதன் மூலமாக எம்பெருமானை உள்ளது உள்ளபடி அறிபவர்கள். (தமர்களில் தலைவராய) – இப்படியாகக் கிட்டிய ஞானத்தின் பலனாக எம்பெருமானை உள்ளது உள்ளபடி அறிந்து, அவனது அடியார்களில் முதன்மையானவர்களாக இருப்பவர்கள். (சாதியந்தணர்கள்) – வேதம் ஓதுதல், அடியார்களில் முதன்மையாக இருத்தல் போன்ற பெருமைகள் அந்தணர்களுக்கு மட்டும் அல்ல, க்ஷத்ரியர்கள் மற்றும் வைசியர்கள் ஆகிய இருவருக்கும் பொதுவானது. ஆகவே இவை மட்டும் அல்லாமல், பிறப்பாலும் பெருமை பெற்ற அந்தணர் என்கிறார்.

வ்யாக்யானம் – (ஏலும்) – கீழ்ச்சொன்னவை ஒருவர்க்கும் ஸித்திக்குமதல்ல; ஸித்திக்குமேயாகிலும் வைஷ்ணவ நிந்தையில் வந்தால், இவையெல்லாம் அஸத்ஸமமென்கை. துர்மாநோபஹதர்க்கு அபசார ஹேதுவுமாய், இவையில்லாதார் தலைமேல் காலிட்டுத் திரிகைக்குடலாமித்தனையிறே.

விளக்கம் – (ஏலும்) – மேலே கூறப்பட்ட மேன்மைகள் அனைத்தும் ஒருவரிடம் ஒன்றாகப் பொதுவாகக் கூடியிருக்காது. அப்படியே யாரிடமாவது கூடியிருந்தால், அவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களை நிந்தித்தால், அந்தப் பெருமைகள் அனைத்தும் அகன்றுவிடும் என்கிறார். தங்களைப் பற்றியே உயர்வாக எண்ணுபவர்களிடம் இந்தப் பெருமைகள் இருந்தால், அவர்கள் செய்கின்ற பாகவத அபசாரத்திற்கு இப்பெருமைகளே

காரணமாகி விடுகின்றன. இந்தப் பெருமைகள் இல்லாதவர்கள், தாங்கள் அந்தணர்கள் என்று கர்வத்துடன் தங்கள் தலை மேல் காலை வைத்துக் கொண்டு நடப்பதற்குக் காரணமாகின்றன.

வ்யாக்யானம் – (நுமர்களை) – தமர்களில் தலைவரான நுமர்களை; தமர்கள் – நித்யஸூரிகள். "விண்ணுளாரிலும் சீரியரே", "உண்ணாட்டுத் தேசன்றே", மண்ணாட்டில் தேசு. உண்ணாடு – பரமபதம். (நுமர்களை) – தேவரீரபிமாநத்துக்குள்ளே அடங்கி ப்ராப்ய ப்ராபகங்கள் தேவரீரேயென்று அத்யவஸித்து, "உடையவனே உடைமைக்கு நிர்வாஹகன், உடைமையை விநியோகம் கொள்ளுவானும் அவனே" என்றிருக்குமவர்களை. (பழிப்பராகில்) – பகவத்ப்ரபாவத்தை அஹங்காரத்தாலே விஸ்மரித்து, அவர்களுடைய ஜந்மமாத்ரத்தையே புத்தி பண்ணித் தங்களிற்காட்டில் குறைய நினைப்பராகில். பழிப்பாகிறது – குற்றம். அதாகிறது – பகவதபசாரங்களில் தலையான அபசாரம். உகந்தருளின நிலங்களில் த்ரவ்யமாத்ரத்தையே புத்தி பண்ணிக் குறைய நினைக்குமாபோலே, வைஷ்ணவர்கள் ஜந்மமாத்ரத்தையே புத்தி பண்ணிக் குறைய நினைக்கை. (பழிப்பராகில்) – கொண்டாடுகையேயாய்த்து ப்ராப்தம். அஹங்காரமாகிற முசலகனேறி ப்ரமித்தபோதிறே அவர்களைக் குறைய நினைப்பது. இப்படி கூடிற்றாகில்.

விளக்கம் - (நுமர்களை) – நித்யஸூரிகளுக்கும் தலைவர்களாக விளங்கும் உனது அடியார்களை. திருவிருத்தம் (79) - விண்ணுளாரிலும் சீரியரே, பெரியதிருவந்தாதி (79) - உண்ணாட்டுத் தேசன்றே – என்று கூறும்படியாக நித்யஸூரிகளைவிட உயர்ந்தவர்கள் என்று கொண்டாடப்படும் அரங்கனின் அடியார்கள். உண்ணாடு என்றால் பரமபதம். அங்குள்ள நித்யஸூரிகளைக் காட்டிலும் இந்தப் பூமியில் உள்ள அரங்கனின் அடியார்களுக்கு தேஜஸ் அதிகம் என்று கருத்து. (நுமர்களை) – அழகியமணவாளா! உன்னால், "இவர்கள் என்னுடையவர்கள்" என்று கொண்டாடப்படுபவர்கள்; "நமக்கு உபாயமும், பேறும் அரங்கன் மட்டுமே" என்ற சிந்தனையுடன் உள்ளவர்கள்; "நம்மை உடைமையாகக் கொண்டுள்ளவன் அரங்கனே ஆவான். நம்மை ஆள்வது அரங்கனே அவான். நம்மைக் காப்பாற்றும் பொறுப்பை நமக்கு இல்லை, அரங்கனுக்கே உள்ளது", என்று எண்ணியபடி உள்ளவர்கள். (பழிப்பராகில்) – இவர்களுக்கு உன்னால் உண்டான மேன்மையைத் தங்களது அஹங்காரம் காரணமாக சிலர் தள்ளக்கூடும். அவர்களது

பிறப்பு, ஒழுக்கம் ஆகியவை காரணமாக, அவர்களைத் தங்களைக் காட்டிலும் தாழ்வாக எண்ணக்கூடும். பழிப்பு என்றால் குற்றம். இவர்கள் செய்யும் இந்த பாகவத அபசாரம் என்பது எம்பெருமானுக்கு எதிராக இயற்றும் குற்றங்களில் மிகவும் கொடியதாகும். வைஷ்ணவர்களின் பிறப்பை மட்டுமே வைத்துக்கொண்டு அவர்களைத் தாழ்வாக நினைத்தல் என்பது, எம்பெருமான் மகிழ்வுடன் எழுந்தருளியுள்ள திவ்யதேசத்தில் காணப்படும் அர்ச்சா ரூபங்களை, "இவை வெறும் உலோகமே" என்று எண்ணுவதற்கு ஒப்பாகும் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன (எம்பெருமானின் அர்ச்சையை உலோகமா என்று ஆராய்வதும் தாயின் யோனியை ஆராய்வதும் ஒன்றே எனவும் சாஸ்த்ரங்கள் ஓதுகின்றன). (பழிப்பராகில்) – அரங்கனின் அடியார்களைத் தலைமேல் ஏற்றிக் கொண்டாடுவதே ஏற்ற செயலாகும். முசலகன் என்றால் ஒரு பேயைக் குறிக்கும். ஆக அடியார்களைக் கொண்டாடாமல், அஹங்காரம் என்னும் பேய் பிடித்து மயக்கம் கொள்ளும்போது அல்லவோ தாழ்வாகத் தள்ளக்கூடும்? இப்படித் தள்ளினார்கள் என்றால்...

வ்யாக்யானம் – (நொடிப்பதோரளவிலாங்கே) – காலாந்தரே தேசாந்தரே தேஹாந்தரே அன்று. அந்த க்ஷணத்திலே அவ்விடத்திலே. "புனிதமன்றே" என்ற நன்மைபோலே தீமை வருமிடத்திலும் விளம்பமில்லை. (அவர்கள் தாம் புலையர் போலும்) – அத்தேஹத்தோடே சண்டாளராவர்கள். த்ரிசங்குவுக்கு ப்ராஹ்மண சாபத்தாலே கழுத்தில் வீரசங்கிலி தானே வாரானாற்போலே, இவனுக்கும் மார்விலிட்ட பூணூல்தானே வாராய்விடும். (தாம் புலையர்) – கீழ்ச்சொன்ன ஜந்மாதிகளில் உத்கர்ஷங்கள் அபிமானஹேதுவாகையாலே அவைதானே இவர்களுக்கு அநர்த்தஹேதுவாய்விட்டது. ஜாதிசண்டாளனுக்கு ஒரு காலத்திலே வைஷ்ணவனாகைக்கு அதிகாரமுண்டு. இவன் உயர ஏறித் தகர விழுந்தவனாகையாலும், பாகவதாபசாரமாகிற மஹாபாபத்தைப் பண்ணினவனா கையாலும், அவனிலும் தண்ணிய கர்மசண்டாளனிறே. பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆத்மஹிதம் சொன்ன ஸமநந்தரத்திலே ஆழ்வான் பணித்த வார்த்தையை ஸ்மரிப்பது.

விளக்கம் - (நொடிப்பதோரளவிலாங்கே) – அப்படிப் பழிப்பவர்கள் சற்று காலம் பின்னரோ, வேறு ஓர் இடத்திலேயோ அல்லது வேறு ஓர் உடல் எடுத்த பின்னரோ இதற்கான பலனை அனுபவிப்பதில்லை. பின்னர் எப்போது அனுபவிப்பர்? பழித்த

நொடியிலேயே அனுபவிப்பர், அந்த இடத்திலேயே அனுபவிப்பர். திருமாலை (41) – புனிதமன்றே – என்பதில் கூறியபடி அரங்கன் அடியார்களிடம் பழகுவதால் நன்மை எத்தனை விரைவாக ஓடிவருமோ, அதே வேகத்தில் அவர்களை பழிப்பதால் தீமையும் ஓடிவரும். (அவர்கள் தாம் புலையர் போலும்) – அவர்கள் தாங்கள் உள்ள அந்தப் பிறவியிலேயே சண்டாளர்கள் ஆகிவிடுகின்றனர். திரிசங்குவிற்கு ரிஷி புத்திரர்களின் சாபம் காரணமாக எவ்விதம் கழுத்தில் அணிந்த வீரசங்கிலியே விலங்கு போன்று ஆனதோ, அப்படியே இவர்களுக்கு அவர்களுடைய பூணூலே விலங்காகிவிடும். (தாம் புலையர்) – கீழே கூறியபடி பிறவி, ஒழுக்கம், ஞானம் முதலானவற்றால் எத்தனை பெருமை பெற்றவர்களாக உள்ளபோதிலும், அந்தப் பெருமைகளே அவர்களது அஹங்காரத்திற்குக் காரணமாகி, அவையே இவர்களுக்கு மிகுந்த தீமையை உண்டாக்கக் காரணமாகின்றன. பிறப்பால் ஒருவன் சண்டாளனாக இருந்தாலும், அரங்கனின் கடாக்ஷம் காரணமாக அவன் ஒரு காலத்தில் வைஷ்ணவனாக மாறுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் அரங்கனின் அடியார்களைப் பழிப்பவன் தனது பெருமைகளால் உயர்ந்தாலும் ஒரு நொடியில் அதளபாதாளத்தில் விழுவதாலும், பாகவத அபசாரம் என்னும் மஹாபாவத்தைச் செய்ததாலும், பிறவி காரணமாக வரும் சண்டாளப் பிறவியைக் காட்டிலும் தாழ்ந்த கர்ம சண்டாளன் ஆகிறான்.

குறிப்பு – வ்யாக்யானத்தில் உள்ள பிள்ளைப்பிள்ளையாழ்வான் நிகழ்வு: பிள்ளைப்பிள்ளையாழ்வான் தனது பெருமைகள் காரணமாக மற்றவர்களைத் தாழ்வாக எண்ணி பாகவத அபசாரம் செய்வதைக் கூரத்தாழ்வான் கண்ணுற்றார். அவரிடம், "நீவிர் இனி பாகவத அபசாரம் செய்வதில்லை எனக் கையில் அடித்துச் சத்தியம் செய்யவேண்டும்", என்று சத்தியம் வாங்கிக் கொண்டார். பின்னர் ஒருநாள் பிள்ளைப்பிள்ளையாழ்வான் தனது பழக்கம் காரணமாக ஒரு பாகவத அபசாரம் செய்துவிட்டார். உடனே அதனை உணர்ந்து, கூரத்தாழ்வானைக் காண வெட்கம் கொண்டு, அவரிடம் செல்லாமல் இருந்தார். ஆழ்வான் இவரது வீட்டிற்கு வந்து காரணம் அறிந்த பின்னர் அவரிடம், "மனதால் செய்த அபசாரத்தை உணர்ந்தவுடனேயே அரங்கன் மன்னிப்பான். அபசாரம் செய்தால் தண்டனை உண்டாகும் என உடலால் நீவிர் அபசாரம் செய்யமாட்டீர். உமது சொற்களை மட்டும் பத்திரமாகப் பாதுகாத்து அதனால் அபசாரம் புரியாமல் இருப்பீர்களாக", என்றார்.

வ்யாக்யானம் – (அரங்கமாநகருளானே) – ந க்ஷமாமி கதாசந என்ற தேவரீர்க்கிறே பாகவதாபசாரத்தின் தண்மை தெரிவது. கர்மயோகாத்யுபாய நிஷ்டர்க்கு ஸ்வகதமான உபாயாந்தரங்களில் ந்யூநாதிரேகங்களைப் பற்றி இருக்கலாம்; பகவத் ஸம்பந்தங்கொண்டு பெறவிருக்கிற ப்ரபந்நனுக்கு பாகவதாபசாரமாகிறது பகவத் ஸம்பந்தத்தை அறுக்குமதாகையாலே பெறவிரகில்லை. பெறுகைக்கு அவர்கள் ஸம்பந்தமே அமைகிறாப்போலே இழக்கைக்கும் அபசாரமே அமையும்; ஆகையாலே, ப்ரபந்நனுக்கு பயப்பட்டு நோக்கவேண்டுவது தேவதாந்தர ஸ்பர்சமும், பாகவதாபசாரமும். பகவத் விஷயத்தில் ஓர் ஆநுகூல்யம் பண்ணவேண்டுவதில்லை. இவையின்றியே ஒழிந்தவனுக்கு ஈச்வரன் ஸுலபனாம்.

விளக்கம் - (அரங்கமாநகருளானே) – வராஹபுராணத்தில் - ந க்ஷமாமி கதாசந – எனது அடியார்களை நிந்திப்பவர்களை நான் ஒருபோதும் பொறுக்கமாட்டேன் – என்று கூறிய உனக்கு அல்லவோ பாகவத அபசாரத்தின் தாழ்வு என்ன என்பது விளங்கும்? கர்மயோகம் போன்ற மற்ற உபாயங்களைக் கைக்கொண்டு எம்பெருமானை அடைய முயல்பவர்கள் அந்த யோகத்திலிருந்து தவறக்கூடும், ஆயினும் தகுந்த ப்ராயச்சித்தம் மூலம் அவற்றை மீண்டும் தொடரலாம். ஆனால் பாகவத அபசாரம் செய்தவனுக்கு அந்த அபசாரம் என்பது எம்பெருமானின் தொடர்பையே அறுத்துவிடும் என்பதால், மீண்டும் அவன் எம்பெருமானை அடைய வழியே இல்லாமல் போய்விடும். அரங்கனை அடைவதற்கு அவனது அடியார்களின் தொடர்பே வழிவகுப்பது போன்று, அவர்களை நிந்திப்பதன் மூலமே அவனது தொடர்பு இல்லாமல் போய்விடும். ஆகவே அரங்கனிடம் சரணம் என்று புகுந்த ஒருவன் செய்யவேண்டியது – மற்ற தெய்வங்களில் தொடர்பு இல்லாமல் இருத்தல், அரங்கன் அடியார்களை அவமதிக்காமல் இருத்தல் – என்பதே ஆகும். ஒருவன் அரங்கனுக்காக வேறு எதுவும் செய்யாமல் இருப்பினும், இந்த இரண்டு குற்றங்களைச் செய்யாமல் இருந்தாலே போதுமானது, அவர்களிடம் அரங்கன் எளிதாக வசப்படுவான் என்று கருத்து.

44. பெண் உலாம் சடையினானும் பிரமனும் உன்னைக் காண்பான்

எண்ணிலா ஊழி ஊழி தவஞ்செய்தார் வெள்கி நிற்ப

விண்ணுளார் வியப்ப வந்து ஆனைக்கு அன்று அருளை ஈந்த

கண்ணுறா உன்னை என்னோ களைகணாக் கருதுமாறே.

பொருள் – அழகியமணவாளா! கங்கையைத் தனது தலையில் கொண்டுள்ள சடை முடி உடைய சிவனும், நான்முகனும் உன்னைக் காண்பதற்காக எல்லையற்ற காலங்கள் தவம் செய்தபடி இருந்தனர். ஆயினும் உன்னைக் காண இயலவில்லை என்பதால் வெட்கம் கொண்டு தலை சாய்த்து நின்றனர். இப்படி உள்ளபோது நீ செய்த செயல் என்ன? முதலையின் வாயில் அகப்பட்ட கஜேந்த்ரனைக் காப்பதற்காக, நித்யஸூரிகள் உள்ளிட்டவர்களும் வியந்து நிற்கும்படியாக, ஓடி வந்து அந்த யானைக்கு உனது கருணையை அளித்தாய். கண்கள் இல்லாத நீ அனைவருக்கும் தஞ்சம் அளிப்பவன் என்று கூறுவது எப்படி?

அவதாரிகை – கீழ் ப்ரதிபாதித்த அர்த்தங்கள் ஸம்பவிக்குமென்னுமிடம், ப்ரஹ்மாதிகளுக்கும் துர்லபமான பேற்றை திர்யக் ஜாதியிலே பிறந்தானொருவன் பெற்ற பின்பு சொல்லவேணுமோ என்று அந்யாபதேசத்தாலே ஸ்வலாபத்தைச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

விளக்கம் – பாகவதர்களைப் பற்றி இதுவரை கூறப்பட்ட அனைத்தும் பொருத்தமே என்பதை ஓர் உதாரணம் மூலம் கூறுகிறார். நான்முகன் உள்ளிட்டவர்கள் கூட பெறுவதற்கு மிகவும் அரிதாக உள்ள பேற்றை, விலங்காகப் பிறந்த பாகவதனான கஜேந்த்ரன் பெற்றான் என்பதன் மூலம் உணர்த்தினார். இப்படியாகத் தான் பெற்ற பேற்றையும் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (பெண்ணுலாம் சடையினாலும்) – கங்கையானவள் உள்ளே ஸஞ்சரிக்கும்படியான ஜடையையுடையவன். “கங்கையை ஜடை மேலே அடக்கினேன்” என்னும் பிடாரைக் கொண்டு ஸர்வேச்வரனைக் காணலாமோ? “ஆறுசடைக் கரந்தான்” இத்யாதி. (பிரமனும்) – அவனுக்குங்கூட ஜநகனாய். ப்ரஹ்மா ப்ரஹ்மவிதாம் வர: என்கிறபடியே இப்பாலுள்ளார்க்குப் பள்ளி உபாத்யாயராங்காட்டில் இவ்வறிவு கொண்டு எம்பெருமானை அறியப்போமோ? தன்னாலே ஸ்ருஷ்டரானவர்களைத் தான் பரிச்சேதிக்குமத்தனையொழிய அபரிச்சிந்தனானவனைப் பரிச்சேதிக்கப்போமோ?

கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணனடிக் கமலந்தன்னை அயன் என்னக் கடவதிறே. (உன்னைக்காண்பான்) – யதோ வாசோ நிவர்த்தந்தே என்கிறபடியே உன் குணங்களிலே ஒன்றை அவதி காணமாட்டாத உன்னைக் காண்கைக்காக. நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணா நின்றாலும் எல்லை காணமாட்டாத உன்னை. நிரவத்ய: பர: ப்ராப்தே: என்னக்கடவதிறே. பிறரால் அறியவொண்ணாத அளவேயன்றியே, உன்னாலும் உன்னை எல்லை காணவொண்ணாத உன்னை. தனக்கும் தன் தன்மை அறிவரியான் என்னக்கடவதிறே. (காண்பான்) – காணப்பெற்றால் பின்னையன்றோ ப்ரயோஜநத்தினருகு செல்லுவது. தானே தன்னைக் கண்ணுக்கு விஷயமாக்கிக் காட்டுமன்றிறே காணலாவது. அல்லது ஸ்வஸாமர்த்யத்தாலே காணும் விஷயமன்றே. ந சக்ஷுஷா பச்யதி கச்சநைநம் என்றும், ந மாம்ஸ சக்ஷுரபி வீக்ஷதே தம் என்றும், ந மாம்ஸ சக்ஷுஷா த்ரஷ்டும் ப்ரஹ்ம பூதஸ்ஸ சக்யதே என்றும் சொல்லக்கடவதிறே.

விளக்கம் - (பெண்ணுலாம் சடையினாலும்) – கங்கை என்னும் பெண் தனது ஜடையின் உள்ளே ஸஞ்சாரம் செய்யும்படியான பரந்த ஜடையைக் கொண்ட சிவன். “கங்கையையே எனது ஜடைக்குள்ளே அடக்கிவிட்டேன்”, என்னும் பெருமை ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு ஸர்வேச்வரனை எளிதாகக் காண இயலுமோ? நான்முகன் திருவந்தாதி (4) - ஆறுசடைக் கரந்தான் – என்றது காண்க. (பிரமனும்) – இப்படிப்பட்ட சிவனுக்குத் தந்தையான நான்முகனும். இராமாயணம் யுத்தகாண்டம் - ப்ரஹ்மா ப்ரஹ்மவிதாம் வர: - ப்ரஹ்மத்தை அறிந்த ஞானிகளில் சிறந்தவனான நான்முகன் – என்று கூறும்படியாக இந்த உலகில் உள்ள அனைவருக்கும் ஆசிரியர் போன்று அறிவு புகட்டும் நிலையில் நான்முகன் இருந்தாலும், அந்த அறிவு கொண்டு மட்டுமே எம்பெருமானை அறிய இயலுமோ? தன்னால் படைக்கப்பட்ட உயிர்களை அறிந்து கொள்ளலாமே அன்றி, அளவிட இயலாத எம்பெருமானை அறிய இயலுமோ? முதல் திருவந்தாதி (56) - கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணனடிக் கமலந்தன்னை அயன் – என்றது காண்க. (உன்னைக்காண்பான்) – யதோ வாசோ நிவர்த்தந்தே – அவனைக் காண இயலாமல் வாக்கும் மனமும் திரும்புகின்றன – என்று வேதங்கள் ஓதின அல்லவோ? ஆக வேதங்களால் கூட உனது ஒரு குணத்தையாவது முழுமையாக அறிந்து கொள்ள இயலாது. இப்படிப்பட்ட பெருமை கொண்ட உன்னைக் காண்பதற்காக. உன்னை எப்போதும் நித்யஸூரிகள் அனுபவித்தபடி இருந்தாலும், உனது எல்லை

என்பதை அறிய இயலாதபடி உள்ள உன்னை. விஷ்ணுபுராணம் - நிரவத்ய: பர: ப்ராப்தே: - தோஷம் அற்றவன், உயர்ந்தவன், அடைய அரியவன் – என்றது அல்லவோ? மற்றவர்கள் உனது முழுமையான தன்மையை அறிவது இருக்கட்டும், உன்னாலேயே உனது எல்லை காண இயலாதபடி அல்லவோ நீ உள்ளாய்? திருவாய்மொழி (8-4-6) - தனக்கும் தன் தன்மை அறிவரியான் – என்றது காண்க. (காண்பான்) – இவனைக் கண்ட பின்னர் அல்லவோ இவனிடம் ஏதோ ஒன்றைக் கேட்டுப் பெற இயலும்? தானாகவே திருவுள்ளம் கொண்டு, "என்னை இவனுக்கு உணர்த்துவோம்" என்று அழகியமணவாளன் முடிவு செய்தால் மட்டுமே அவனைக் காண இயலும், நமது முயற்சியால் இயலாது. கீழே உள்ள வரிகள் காண்க:

- தைத்திரீயம் - ந சக்ஷுஷா பச்யதி கச்சனைநம் – யாரும் இவனைக் கண்ணால் காண்பதில்லை.
- ந மாம்ஸ சக்ஷுரபி வீக்ஷதே தம் – மாமிசத்தால் ஆன இந்தக் கண் அவனைக் காண இயலாது.
- விஷ்ணுதர்மம் - ந மாம்ஸ சக்ஷுஷா த்ரஷ்டும் ப்ரஹ்ம பூதஸ்ஸ சக்யதே – ப்ரஹ்மம் எனப்படும் அவன் மாமிசத்தால் ஆன இந்தக் கண் கொண்டு காண முடியாதவன்

வ்யாக்யானம் – (எண்ணிலாவூழியூழி தவஞ்செய்தார் வெள்கி நிற்ப) – நெடுங்காலம் தபஸ்ஸு பண்ணி "நாம் ஆரறியத் தபஸ்ஸு பண்ணுகிறோம்" என்று லஜ்ஜித்துக் கைவாங்கி நிற்க. பிறர் தங்களைக் குறித்துப் பண்ணும் தபஸ்ஸுக்குப் பலம் கொடுக்குமவர்களிறே இவனை நோக்கித் தபஸ்ஸு பண்ணுகிறார்கள். யுக கோடி ஸஹஸ்ராணி என்னக்கடவதிறே. (வெள்கி நிற்ப) – "முதலையின் வாயிலே விழாதே தபஸ்ஸிலே இழிந்து என்ன காரியம் செய்தோம்?" என்று லஜ்ஜித்து நிற்கை. பரமாபதமாபந்தோ மநஸா அசிந்தயத் ஹரிம் என்கிறபடியே ஆபத்தை முன்னிடாதே தபஸ்ஸிலே இழிந்து என்ன காரியம் செய்தோமென்று லஜ்ஜித்து நிற்க.

விளக்கம் - (எண்ணிலாவூழியூழி தவஞ்செய்தார் வெள்கி நிற்ப) – பல காலங்கள் தவம் புரிந்து நின்று, பின்னர் ஒருநாள், "நாம் யாரைக் குறித்து தவம் இயற்றுகிறோம்?", என்று

வெட்கம் கொண்டு தவத்தைக் கைவிட்டு நிற்க. சாதாரண மனிதர்கள் யாரைக் குறித்துத் தவம் இயற்றுகின்றனரோ அந்த நான்முகன் உள்ளிட்டவர்கள், அந்தத் தவங்களுக்கான பலன் அளிக்கும் பொருட்டு, அந்தப் பலன் அளிக்கும் திறனைத் தாங்கள் பெறும் பொருட்டு எம்பெருமானை நோக்கி அல்லவோ தவம் செய்கின்றனர்? மஹாபாரதம் சபாபர்வம் - யுக கோடி ஸஹஸ்ராணி – கோடி யுகங்கள் நான்முகன் நாராயணனை நோக்கித் தவம் புரிந்தான் – என்றது. (வெள்கி நிற்ப) – எம்பெருமான் முதலையின் பிடியில் சிக்கிய யானைக்காக ஓடிவந்தது கண்ட இவர்கள், "நாமும் முதலையின் வாயில் சிக்கியிருந்தால் இவனைக் கண்டிருக்கலாமே, வீணாகத் தவம் புரிந்து காலத்தை வீணாக்கினோமே", என்று வெட்கப்பட்டனர். விஷ்ணுதர்மம் - பரமாபதமாபந்தோ மநஸா அசிந்தயத் ஹரிம் – அந்த கஜேந்த்ரன் தனது மனதால் ஸ்ரீஹரியை த்யானித்தான் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஆபத்தை எதிர்நோக்கி அவனிடம் சரணம் என்று புகாமல், வீணாகத் தவம் புரிந்து என்ன சாதித்தோம் என்று வெட்கப்பட்டனர்.

வ்யாக்யானம் – (விண்ணுளார் வியப்ப வந்து) – நித்யஸூரிகள், "ப்ரஹ்மாதிகள் இப்படிப் படாநிற்க, அவர்களையும் எங்களையும் அநாதரித்து ஒரு திர்யக்கின் காற்கடையிலே அரைகுலையத் தலைகுலைய வந்து விழுவதே! எத்திறம்! எத்திறம்!" என்று விஸ்மயப்பட. (வந்து) – அவன் இடர்ப்பட்ட மடுவின் கரையிலே வந்து. "சென்று" என்னாதே "வந்து" என்றது, ஆனைக்குதவினது தம் பேறாயிருக்கிறபடி. (ஆனைக்கு) – ப்ரஹ்மாதிகளுடைய ஜந்மோத்கர்ஷத்தையாதல், இவனுடைய ஜந்மாபகர்ஷத்தையாதல், இவற்றையொன்றையும் பாராதே ஆபத்தைப் பார்த்து ரக்ஷித்தபடி. (அன்று) – ஸ்வபலமற்றவன்று. கஜ ஆகர்ஷதே தீரே என்று சென்ற காலத்தில் இவனோடு ப்ரஹ்மாதிகளோடு வாசியில்லை. அன்று ஒரு முதலையின் கையிலே அகப்பட்ட ஆனைக்கு அருளை ஈந்தாய்; இன்று அஞ்சு முதலையின் கையிலே அகப்பட்ட எனக்கு அருளாய். ஆனை ஆயிரம் ஸம்வத்ஸரம் நோவுபட்டது; நான் அநாதிகாலம் நோவுபட்டேன். அவன் அகப்பட்டது மடுவிலே; நான் அகப்பட்டது ஸம்ஸாரார்ணவத்திலேயிறே.

விளக்கம் - (விண்ணுளார் வியப்ப வந்து) – இவன் ஓடிவந்தது கண்ட நித்யஸூரிகள், "நான்முகன் முதலானோர் இவனைக் காண இத்தனை பாடுபடும்போது, அவர்களையும் எங்களையும் இவன் பொருட்படுத்தாமல் விலக்கி, ஒரு விலங்கின் காலிலே தலைமுடி பறக்க இடுப்பில் உள்ள பீதாம்பரம் நழுவ இத்தனை வேகமாக ஓடி விழுகிறானே!

இவனது தன்மை எத்தகையது! இவனது எளிமை எத்தகையது!", என்று வியந்து நிற்க. (வந்து) – கஜேந்த்ரன் முதலையின் பிடியில் சிக்கித் துன்பம் அடைந்த மடுவின் கரைக்கு வந்து. இங்கு "சென்று" என்று கூறாமல் "வந்து" என்று ஏன் கூறவேண்டும்? அந்த யானைக்கு உதவி செய்ததை தான் பெற்ற பேறாக எம்பெருமான் எண்ணியதால் ஆகும். (ஆனைக்கு) – நான்முகன் உள்ளிட்டவர்களின் உயர்பிறப்பை நோக்கவில்லை, கஜேந்த்ரனின் விலக்குப் பிறவியை நோக்கவில்லை; இவற்றை ஆராயாமல் "தனது அடியார் ஒருவருக்கு ஆபத்து காலம்" என்ற ஒன்றை மட்டுமே இவன் கண்ணுற்று வந்து காப்பாற்றினான். (அன்று) – தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தன்னிடம் போதிய பலம் இல்லாமல் கஜேந்த்ரன் நின்ற அன்று. விஷ்ணுதர்மம் - கஜ ஆகர்ஷதே தீரே – கஜேந்த்ரன் கரைக்கு இழுக்க – என்னும்படி அந்த யானை தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முயன்ற செயலுக்கும், தனக்கு நன்மையைப் பெறுவதற்காக தவம் புரிந்த நான்முகன் போன்றவர்களுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. அழகியமணவாளா! முன்பு ஒரு முதலையின் வாயில் அகப்பட்ட யானைக்கு நீ கருணை புரிந்தாய்; ஐந்து புலன்கள் என்னும் ஐந்து முதலைகளின் வாயில் சிக்கித் தவிக்கும் எனக்குக் கருணை புரிவாயாக. அந்த யானை ஆயிரம் ஆண்டுகள் மட்டுமே முதலையின் வாயில் சிக்கித் தவித்தது; நான் எல்லையற்ற காலம் இவற்றின் பிடியில் துன்பத்துடன் உள்ளேன்; அந்த யானை ஒரு சிறிய குளத்தில் மட்டுமே அகப்பட்டது; நானோ மிகப்பெரிய ஸம்ஸாரம் என்னும் கடலில் சிக்கிக்கொண்டேன்.

வ்யாக்யானம் – (அருளையீந்த) – அருளுகையாவது முதலையின் வாயினின்றும் மீட்டு, அவனுடைய நொந்த காலைத் திருக்கைகளாலே தடவியருளி ஆச்வஸிப்பித்து, அவன் கையில் பூவைத் தன் திருவடிகளிலே இடுவித்துக்கொள்ளுகை; அப்படி என்னையும் விஷயாந்தரங்களினின்றும் மீட்டு இழந்த காலத்துக்கும் ஸாந்த்வநம் பண்ணியிறே அடிமையிலே மூட்டுவது. (கண்ணுறா) – அவன் உபகரித்த தசையிலே, "கண்ணுறா" என்கிறது ப்ரீதி தலைமண்டையிட்டுச் சொல்லுவது வார்த்தை. ஸ்வலாபத்தில் ஸ்வயத்நத்தால் லபிக்க இழிவாரைப் பாராதே, அகிஞ்சநர் பக்கலிலே முழு நோக்காயிருக்கிற இது என்ன சுனையுடைமை! என்ன பும்ஸ்த்வம்! ஸ்வஸாமர்த்யத்தைப் பொகட்டுத் தங்கள் வெறுமையை முன்னிட்டு உன்னைக் காலிலே விழவிட்டுக் கொள்ளமாட்டாதே ஜகத்து இழப்பதே! (உன்னையென்னோ களைகணாக் கருதுமாறே) – ஆச்ரித பக்ஷபாதியான உன்னை ஜகத்துக்குப் பொதுவான

ரக்ஷகனென்று சொல்லுமவர்கள் மதிகேடர் என்கிறார். தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதி தைவைதம் என்கிற ஸம்பந்தம் கிடக்கச் சிலர்க்காகச் சிலரை அழிக்கிற இவனை ஸர்வ ரக்ஷகனென்று நினைக்கலாமோ?

விளக்கம் - (அருளையீந்த) – இங்கு அருளுதல் என்றால் என்ன? கஜேந்த்ரனை முதலையின் வாயிலிருந்து காப்பாற்றியதுடன் இவன் நிற்கவில்லை; அவனுடைய துன்பம் அடைந்த காலைத் தனது திருவடிகளால் மெல்ல வருடினான், அவனுக்கு ஆறுதல் அளித்தான், அவன் தனது துதிக்கையில் விடாமல் வைத்திருந்த மலரைத் தனது திருவடிகளிலே சேர்த்துக் கொண்டான். இப்படியாக இவன் என்னையும் உலக விஷயங்களில் இருந்து மீட்கப்போகிறான்; இவனை அடையாமல் இருந்த காலத்தை எண்ணி நான் சோகம் கொள்ளும்போது, எனக்கு ஆறுதல் அளித்து, என்னைத் தனது கைங்கர்யத்திலே ஈடுபடுத்த உள்ளான். (கண்ணுறா) – அவன் நமக்கு இப்படி உதவும்போதும், "கண்கள் இல்லாதவன்" என்று ஏன் கூறவேண்டும்? அவன் செய்த நன்மை காரணமாக மகிழ்ச்சி தலைக்கு ஏறி, சொற்கள் தாறுமாறாக வந்தன. தங்களது நன்மைக்காகத் தாங்களே முயல்பவர்களை ஒதுக்கி, தங்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடாமல் நிற்பவர்களை ஆதரிப்பது என்ன தன்மையோ? இது உனது ஆண்மையை அல்லவோ காட்டுகிறது? தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடாமல், உன்னைச் சரணம் அடைந்தால், நீ அவர்கள் காலிலே விழுவாய் என்பதை இந்த உலகம் அறியாமல் உன்னை எளிதாக இழக்கிறதே! (உன்னையென்னோ களைகணாக் கருதுமாறே) – உன்னைச் சரணம் என்று புகுந்தவர்களை மட்டுமே காப்பாற்றும் உன்னை, "இந்த உலகிற்கு இவனே பொதுவான ரக்ஷகன்" என்று கூறுபவர்கள் அறிவற்றவர்களே ஆவர். ஜிதந்தே ஸ்தோத்ரம் - தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதி தைவைதம் – விஷ்ணு பக்தி கொண்டவர்களுக்கும், பக்தி அற்றவர்களுக்கும் ஒரே போன்று பற்றிக் கொள்ளும்படியாக உள்ள திருவடி – என்பதற்கு ஏற்ப அனைவருக்கும் இவன் ஸம்பந்தம் என்பது பொதுவானது அல்லவோ? இப்படி உள்ளபோது, கஜேந்த்ரன் போன்றவர்களுக்காக மற்றவர்களை அழிக்கும் இவனை "அனைத்தையும் காப்பவன்" என்று கூறலாமோ?

45. வளவெழும் தவள மாட மதுரைமா நகரம் தன்னுள்

கவளமால் யானை கொன்ற கண்ணனை அரங்கமாலைத்

துளவத் தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி சொல்

இளைய புன் கவிதையேலும் எம்பிராற்கினியவாறே.

பொருள் – அழகுள்ளதும், வெண்மையான நிறம் கொண்டதும் ஆகிய மாடங்கள் கொண்டதும் பெருமை நிறைந்ததும் ஆகிய வடமதுரா நகரத்தில் மதம் ஊட்டவல்ல உணவைக் கொண்டதான மிகப்பெரிய யானையாகிய குவலயாபீடம் என்ற யானை கண்ணனாய் வந்த திருவரங்கன் அழித்தான். அத்தகைய அழகியமணவாளனைக் குறித்து, திருத்துழாய் கைங்கர்யம் செய்துவரும் தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய இந்தப் பாசுரங்கள் சொற்சுவை மற்றும் பொருட்சுவை ஆகியவற்றில் தோஷங்களுடன் கூடியிருந்தாலும், என்னுடைய நம்பெருமாளுக்கு இனிமையாக எவ்விதம் உள்ளதோ?

அவதாரிகை – நிகமத்தில் குவலயாபீடத்தைப் போக்கினாற்போல, தம்முடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கினபடியைச் சொல்லிப் பெரியபெருமாளுடைய ப்ரீதியே தமக்கு ப்ரயோஜநமென்று முடிக்கிறார்.

விளக்கம் – இறுதியாக, அழகியமணவாளன் எவ்விதம் குவல்லாபீடம் என்னும் யானையை அழித்தானோ அதுபோன்று, தான் (ஆழ்வார்) அவனை அடைவதற்குத் தடையாக இருந்த பாவங்களையும் அழித்தான் என்று கூறி, அந்த அழகியமணவாளனின் மகிழ்ச்சியே தனக்குப் பலன் என்று கூறி முடிக்கிறார்.

வ்யாக்யானம் – (வளவெழும் தவளமாட) – அழகு மிக்கிருப்பதாய், வெள்ளியாலே செய்தாற்போலே அதிதவளமான மாடங்களையுடைத்தாயிருக்கை. திருவவதரித்தவன்று கோடிக்கப்பெறாத இழவு தீருகிறார். வில்விழவுக்காகக் கம்ஸன் கோடித்தபடியைச் சொல்லிற்றாகவுமாம். வளம் – அழகு, எழுச்சி – மிகுதி. (மதுரைமாநகரந்தன்னுள்) – ப்ரதமத்தில் வாமநாச்ரமமாய், பின்பு ஸ்ரீசத்ருக்நாழ்வான் படைவீடுசெய்து, பின்பு க்ருஷ்ணன் திருவவதாரம் பண்ணுகையாலுண்டான பெருமையைச் சொல்லுகிறது. இப்படி பகவத்ஸம்பந்தம் மாறாத தேசமாகை; வைகுந்தமாநகரிற் காட்டில் இது வ்யாவ்ருத்தம். (கவளமால் யானை கொன்ற கண்ணனை) – கவளம் கொண்டிருப்பதாய்ப்

பெருத்திருந்துள்ள ஆனையைக் கொன்ற க்ருஷ்ணனை. “களபமால்” என்று பாடமானபோது, “களபம்” என்று ஒரு பருவத்தில் பெருத்த ஆனையென்றபடி. கீழே “ஆனைக்கன்றருளையீந்த” என்றார்; இங்கே “யானை கொன்ற” என்கிறார்; இத்தால் தேவாநாம் தாநவாநாஞ்ச என்றது அழித்தது; அங்குள்ளார் விரோதிகளைப் போக்கித் தன்னை அனுபவிப்பித்தாற்போல, இவர் தம்முடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கித் தம்மை அநுபவிப்பித்தபடி. (கண்ணனை) – திருவவதரித்தவன்று ஒளித்துப்போன ஊரிலே கண்காண வந்து விரோதியை அழியச்செய்த ஏற்றத்தை அநுபவிக்கிறார். (அரங்கமாலை) – அவதாரத்துக்குப் பிற்பாடரான தம்முடைய விரோதியைப் போக்கிற்று கோயிலிலே வந்தாய்த்து. (மாலை) – ஆச்ரிதவிஷயத்தில் பெரும் பித்தரானவரை. விரோதி நிரஸநமும் தத்பூர்வகமான ஸ்வாநுபவமும் தன்பேறாயிருக்கை.

விளக்கம் - (வளவெழும் தவளமாட) – அழகு மிகுந்துள்ளதாய். வெள்ளியால் செய்யப்பட்டதோ என்று ஐயம் கொள்ளும்படியாக வெண்மையான மாட மாளிகைகளுடன் இருத்தல். க்ருஷ்ணன் அவதரித்தபோது மதுரா நகரம் அலங்கரிக்கப்படவில்லை; அந்தக் குறை தீரும்படியாக இங்கு இவர் தனது சொற்களால் அலங்கரிக்கிறார். அல்லது வில்விழாவின் பொருட்டு கம்ஸன் அந்த நகரத்தை அலங்கரித்தமை கூறினார் என்றும் கொள்ளலாம். வளம் = அழகு, எழுச்சி = மிகுந்து. (மதுரைமாநகரந்தன்னுள்) – மதுரா நகரத்தில் எம்பெருமான் வாமனனாக முதலில் நின்றான்; பின்னர் இது சத்ருக்னனின் தலைநகராக விளங்கியது; அடுத்து இங்கு க்ருஷ்ணன் அவதரித்தான்; இப்படியாக பெருமை பெற்ற நகரம் ஆகும். இப்படியாக பகவத்ஸம்பந்தம் விடாமல் தொடரும் நகரம் மதுரா ஆகும். இது வைகுந்தத்தைக் காட்டிலும் ஏற்றம் கொண்டது ஆகும். (கவளமால் யானை கொன்ற கண்ணனை) – கவளம் என்னும்படியான மதம் ஊட்டவல்ல உணவைக் கொண்டுள்ளதும், பெருத்துள்ளதும் ஆகிய யானைக் கொன்ற க்ருஷ்ணனை. “களபமால்” என்று சேர்த்துப் படித்தால், “களபம்” என்னும் ஒரு பருவத்தில் பெருத்த யானை என்று கொள்ளலாம். கடந்த பாசுரத்தில் – ஆனைக்கன்றருளையீந்த – என்றார்; இங்கு – யானை கொன்ற – என்கிறார்; இதன் மூலம் - தேவாநாம் தாநவாநாஞ்ச – தேவர்கள், அசுரர்கள் ஆகியவர்களுக்குப் பொதுவானவன் – என்ற கருத்துக்கு சில விதிவிலக்கு உண்டு என்பது கூறப்பட்டது. மதுராவில் உள்ளவர்கள் தன்னை அடையும்படியாக அவர்களுடைய விரோதிகளை அழித்தது போன்று, அவனை அடையத் தடையாக

உள்ள தனது பாவங்களை அழகியமணவாளன் விலக்கி, தன்னை அனுபவிக்கும்படிச் செய்தான் என்கிறார். (கண்ணனை) – அவதரித்த காலத்தில், ஒரே இரவில் யாருடைய கண்களிலும் சிக்காமல் ஒளிந்து சென்றவன், மீண்டும் தனது நகரத்திற்குத் திரும்பும்போது, அனைவரும் காணும்படியாக வந்து, விரோதியை அழித்தான் என்று பெருமையாகக் கூறுகிறார். (அரங்கமாலை) – அந்த அவதார காலத்திற்குப் பின்னர் பிறந்த தனது விரோதிகளைத் திருவரங்கம் பெரியகோயிலில் அரங்கனாகக் கண்வளர்ந்தருளி நின்று போக்கினான். (மாலை) – தனது அடியார்கள் விஷயத்தில் பித்துப் பிடித்தவன் போன்று உள்ள அழகியமணவாளனை. தனது அடியார்களின் விரோதிகளை விலக்குதலும், அவர்களை தன்னை அனுபவிக்கும்படியாகச் செய்தலும் தன்னுடைய பேறு என்றே எண்ணுபவன்.

வ்யாக்யானம் – (துளபத்தொண்டாய) திருத்துழாயாழ்வார்க்கு அடிமை செய்யுமவர்; புருஷார்த்தத்தின் சரமாவதியிலே நின்றவர். இதுதான் வைஷ்ணவர்களுக்கெல்லாம் திரள அடிமை செய்தபடியாய்த்து. "துளபத்தொண்டாய" என்கையாலே அபசாரம் தட்டாத கைங்கர்யமென்கை. "தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்னக்கடவதிறே. (தொல்சீர்) – ஸ்வாபாவிகமான பகவச்சேஷத்வத்தின் ஸீமையிலே நின்றவர். உன் கைங்கர்யத்தினுடைய மேலெல்லை ஸ்ரீவைஷ்ணவ கைங்கர்யமிறே. (தொண்டரடிப்பொடி சொல்) – இத்தால் "தொண்டரடிப்பொடி" என்று பேரையுடையவர். இவருக்கு ஜ்ஞாநாநந்தங்களன்று காணும் நிரூபகம். "அடிப்பொடி" என்கையாலே, "தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்" என்றாற்போல இருக்கிறதாய்த்து. (இளைய புன் கவிதையேலும்) – சப்தத்தில் இளமையும், கவித்வத்தில் குற்றமுமுண்டேயாகிலும்; இளசாய், புல்லிய கவியேயாகிலும்.

விளக்கம் - (துளபத்தொண்டாய) - திருத்துழாயாழ்வார்க்கு அடிமை செய்பவர். புருஷார்த்தத்தின் கரையாகிய பாகவத கைங்கர்யத்தில் நிற்பவர். இதன் மூலம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு எல்லாம் அடிமைத்தனம் செய்த நிலை கிட்டுகிறது. "துளபத்தொண்டாய" என்பதன் மூலம் அபசாரம் நேர்ந்துவிட இயலாத துளசி கைங்கர்யம் என்றபடி. திருப்பள்ளியெழுச்சியில் - தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி – என்று இவரே அருளிச்செய்தார்

அல்லவா? (தொல்சீர்) – தனது ஆத்மாவிற்கு இயல்பாக உள்ளதான பகவத் கைங்கர்யத்தின் எல்லையான பாகவத கைங்கர்யத்தில் நின்றவர். இவனுடைய கைங்கர்யத்தின் எல்லை என்பது ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் செய்யும் கைங்கர்யம் ஆகும். (தொண்டரடிப்பொடி சொல்) – இந்தக் கைங்கர்யம் காரணமாகவே "தொண்டரடிப்பொடி" என்னும் திருநாமம் கொண்டவர். இதன் மூலம் இவருக்கு ஞானமும் ஆனந்தமும் இயல்பானது அல்ல, பாகவத கைங்கர்யமே இயல்பானது என்றாகிறது. "அடிப்பொடி" என்பதன் மூலம், திருவாய்மொழி (7-1-11) - தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன் – கூறியது போன்றதாகிறது. (இளைய புன் கவிதையேலும்) – சொற்களின் அனுபவம் என்பது சற்றும் இல்லாத இளமைத்தனம், கவிதைகளில் தோஷங்கள் என்று இந்தப் பாசுரங்களில் பல உள்ளபோதிலும்; இப்படி இல்லையென்றாலும் தன்னைத் தாழ்த்துகிறார்.

வ்யாக்யானம் – (எம்பிராற்கினியவாறே) எம்பிரானுக்கு இனிதாயிருக்குமிறே. கிம் ம்ருஷ்டம் ஸுதநவசநம் என்கிறபடியே பெரியபெருமாள் இத்தை உகந்தபடியென் என்கிறார். ப்ரஜைகளுடைய மழலைச்சொல்லு தமப்பனார்க்கு இனிதாயிருக்குமிறே. ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாத ஜீவித: என்கிறபடியே இவ்வுகப்புத்தானே புருஷார்த்தம். இவன் ஸத்தை பெறுகையாவது அவன் ப்ரீதிக்குக் கைதொடுமானமாகை. இப்ரபந்தம் கற்றார்க்குப் பலம் சொல்லாதொழிந்தது – இவ்வுகப்புத்தானே அவர்களுக்குப் பலமாகையாலே. இவ்வாழ்வாரை உகந்தாற்போலே இப்ரபந்தம் கற்றாரையும் பெரியபெருமாள் உகந்தருளுவரென்கை. ப்ரீயதே ஸததம் ராம: என்று ஸ்ரீராமாயணம் கற்றாருடைய பலம்போலேயாய்த்து இப்ரபந்தம் கற்றாருடைய பலமும்.

விளக்கம் - (எம்பிராற்கினியவாறே) – அழகியமணவாளனுக்கு மிகவும் இனிமையாக இருக்கும். கிம் ம்ருஷ்டம் ஸுதநவசநம் – எந்தச் சொற்கள் மிகவும் இனிமையாக இருக்கும், குழந்தைகளின் மழலைச்சொல்லே – என்பதற்கு ஏற்ப, இந்தப் பாசுரங்கள் அழகியமணவாளனுக்கு இனிமையாக இருந்ததில் என்ன வியப்பு உள்ளது? தனது குழந்தையின் மழலைச்சொல் ஒரு தந்தைக்கு இனிமையாக இருக்கும் அல்லவோ? ஸ்தோத்ரரத்னம் - ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாத ஜீவித: - நித்யமான உனது கைங்கர்யம் மூலம் உன்னை மகிழும்படிச் செய்து – என்று கூறுவது போன்று, அழகியமணவாளனின் மகிழ்வு அல்லவோ உயர்ந்த புருஷார்த்தம்? அவனுடைய மகிழ்ச்சிக்குக் காரணமாக

இருப்பதன் மூலம் அல்லவோ சேதனன் தனது வாழ்க்கையை அடைகிறான்? மற்ற பிரபந்தகளில் உள்ளது போன்று, இறுதியில் இந்தப் பிரபந்தம் கற்றதன் பலன் ஏன் கூறப்படவில்லை என்று கேட்கலாம். இந்தப் பிரபந்தம் மூலம் அழகியமணவாளன் அடையும் மகிழ்ச்சியே இந்தப் பிரபந்தம் கற்றதன் பலன் என்கிறார். இந்த ஆழ்வாரைக் கண்டவுடன் திருவரங்கனுக்கு எத்தனை மகிழ்ச்சி உண்டாகுமோ அத்தனை மகிழ்ச்சி, இந்தப் பிரபந்தம் கற்றாரைக் காணும்போது திருவரங்கனுக்கு உண்டாகும். இராமாயணம் - ப்ரீயதே ஸததம் ராம: - இராமாயணம் கற்றவர்களிடம் இராமன் ப்ரியமாக உள்ளான் – என்று இராமாயணம் கற்றவர்களுக்கு உண்டாகும் பலன் கூறுவது போன்று, இந்தத் திருமாலையைக் கற்றவர்களிடம் அழகியமணவாளனாகிய பெரியபெருமாள் ப்ரியமாக உள்ளான் என்பதே பலனாகும்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருமாலை ஸம்பூர்ணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த திருமாலை வ்யாக்யானம் ஸம்பூர்ணம்

தன்னைத் தவிர மற்ற எவரையும் பாடாமல் நின்ற
தொண்டரடிப்பொடியாழ்வாரை இறுகப் பற்றிய திருவரங்கன் திருவடிகளே சரணம்

அழகியமணவாளனைத் தவிர யாரையும் காணேன் என்றிருந்த
தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்